புனைகடல்

கலைஞர் மு. கருணாநிதி, எம். எல். ஏ.

அன்புப் பதிப்பகம்

பொறையார் :: தஞ்சை மாவட்டம்.

பேராசிரியர். தி.வ. மெய்கண்டார் அவர்களின்

அன்பளிப்பு

புனைகதைகள்

7.4.62

கலைஞர் மு. கருணாநிதி, எம். எல். ஏ.

அன்புப் பதிப்பகம்

பொறையார் :: தஞ்சை மாவட்டம்.

சாதாரணப் பதிப்பு ரூ. 5/-

நூல்நிலையப் பதிப்பு ரூ 6/-

முதற் பதிப்பு: செப்டம்பர், 1961.

பதிப்புரை

கலைஞர் மு. கருணாநிதி, எம்.எ.ஏ. அவர்களின் சிறந்த இலக்கியப் படைப்பான "புதையல்" அன்புப் பதிப்பகத்தின் முன்றுவது வெளியீடாக வெளி வருகின்றது.

தமிழர்கள் ஆதரிக்க வேண்டுகின்றோம்.

பதிப்பகத்தார்

அறிமுகம்:

சரித்திரத்தின் அடிச்சுவடுகள் தெளிவின்றி மறைந்து விட்டது போன்ற சூழ்நிலைகள். பழமையின் கதையைப் பரிதாபத்தோடு சொல்லிக் கொண்டிருக்கும் பாழ் மண்ட பங்கள். கதிர் மறைக்க கிளைக் கரம் நீட்டும் தரு நிழல்கள். வான் தொடுவதற்கென்று வளைந்து நிமிர்ந்து பனங்காய்த் தலையைத் தொங்கப் போட்டு, தம் தோல்வியை சொல் லாமற் சொல்லும் பனை மரக்காடுகள். இவைகளுக் கிடையே வீழ்ச்சியிலும் கலங்காத வீர நெப்போலியனைப் போல உயர்ந்து நிற்கும் அந்த ஏழடுக்கு எழில் மாடம்; அந்த மாடத்தின் மடியிலே தவழ்ந்தாடத் துள்ளி வரும் கடலரசி. இரவு நேரத்து விண் பிறைக்குப் போட்டியென பகல் நேரத்தில் நீலக்கடல் ராணி தன்பால் மிதக்கவிட்டுக் காட்டும் பாய் கட்டிப் படகுகள்.

சாளுவ நாயக்கன் பட்டினம் அந்த ஊரின் பெயர். தஞ்சை மாவட்டத்திலே வாழ்பவருக்கே அது புதுமை யான இடம். அதிராம்பட்டினத்திலிருந்து கடல் வழியே செல்லலாம். பேராவூரணியிலிருந்து நாடியம் என்னும் சிற்றூர் வழியாக தரை மார்க்கமாகவும் செல்லலாம். தமிழகத்தின் கடற்கரையில் அமைந்துள்ள சிற்றூர், பேரூர்கள் அனைத்திற்கும் பெரும்பாலும் "பட்டினம்" எனும் சிறப்புப் பெயர் வழங்குதலுண்டு. அதிராமபட்டினத் திற்கும் சாளுவ நாயக்கன் பட்டினத்திற்கும் இடையே புதுப்பட்டினம் என்ற சிங்காரச் சிற்றூரும் இருக்கிறது. புதுப்பட்டினத்திலே பெருமளவுக்கு கடலை நம்பி வாழும் மனிதர்களே வாழ்கிறார்கள். எந்த நேரத்திலும் அந்த சிற்றூரின் தெருக்களிலே வலைகள் காய்ந்து கொண்டிருக் கும், அல்லது பழுதான வலைகள் புதுமையாக்கப்படும் வேலைகள் நடந்து கொண்டிருக்கும். காய்ந்த மீனின் வாசம்

'கம கம' வென்று வந்துகொண்டிருக்கும். கட்டு மரங்கள்– படகுச் சாமான்கள்—தெருவெல்லாம் இரைந்து கிடக்கும். அவைகளில் சிறுர்கள் அமர்ந்து விளையாடிக் கொண்டிருப் பார்கள். நாலைந்து தெருக்களே உள்ள அந்தப் புதுப் பட்டினம் பார்வைக்கு அழகாகவும் ஒய்வு பெறுகிறவருக்கு உல்லாசமளிப்பதாகவும் இருப்பதற்கு காரணமே அந்தக் கடல்தான் என்று கூறிவிடலாம். முஸ்லீம் மக்களும் அந்த சிற்றூரில் வாழ்கிறுர்கள் என்பதை எடுத்துக்காட்ட ஒரு சிறு மசூதி. அதன் எதிரிலே கட்டிவிடப்பட்டிருக்கும் துண்டுத் திண்ணைகள்தான் அந்த ஊர்க்காரர்களுக்கு கடற்காற்று வாங்கும் இடம். புதுப்பட்டினத்திற்கும், சாளுவ நாயக்கன் பட்டினத்திற்கும் அதிக தொலைவில்லா விடினும் கடல்வழியாகப் போவதுதான் சுலபமான பயணம். சாளுவ நாயக்கன் பட்டினம் என்ற பெயர் அந்தப் பகுதி மக்களிடையே அதிகமாக அடிபடுவதில்லை. காரணம், பட்டினத்திற்குரிய அமைப்புகளோ – வீடு வாசல்களோ– தெருக்களோ – எதுவுமே அங்கு கிடையாது. அங்கே நிற் கும் அந்த எழுதுக்கு மாடத்தின் பெயராலேயே அந்த இடத்தை அழைப்பது வழக்கமாகிவிட்டது.

மனோரா! ஆம், சாளுவ நாயக்கன் பட்டினத்தைக் குறிக்கும் செல்லப் பெயர் அதுதான், அந்த எழில் மாடத் தின் பெயர் தான் மனோரா! "மினர்" என்ற சொல், நாளடைவில் மனோரா என்று மாறியிருக்கவேண்டும். தஞ்சை மாவட்டத்தில் உள்ள நாகூர், முஸ்லீம்கள் வாழும் பிரதேசம். அங்குள்ள தர்க்காவில் எழுந்து நிற்கும் மாடங் களை மனோரா என்றே அழைப்பார்கள். அதே முறையில் இந்த மாடத்திற்கும் பெயர் சூட்டிவிட்டார்கள் போலும்! மனோரா–தஞ்சையை ஆண்ட சரபோஜி மன்னனல் கட்டப் பட்டது. நெப்போலியன் ஆங்கிலேயரால் தோற்கடிக்கப் பட்டான் என்ற வெற்றிச் செய்தியை அறிவிக்கும் அடை

யாளமாக இந்த நினைவுச் சின்னம் எழுப்பப்பட்டது என்று தான் செதுக்கப்பட்டுள்ள எழுத்துக்கள் தெரிவிக்கின்றன.

ஆங்கிலேயரின் ஆதிபத்யம் ஆணிவேர் விடுவது கண்டு அஞ்சிய தஞ்சை மன்னன், அவர்களை எதிர்த்தொழிக்க ஒரு பாசறைக் கோட்டை — ஆம், போர்க் கோட்டை கட்டினன் என்றும், அந்தக் கோட்டையிலே அவன் நினைத்தபடி ஏற்பாடுகள் நடப்பதற்கு முன்பே, செய்தி, ஆங்கிலேயருக்குப் பரவிவிட்டதென்றும் — விரு எழுப்பிய வெள்ளையரிடமிருந்து தப்புவதற்காகவே — இது வெற்றியின் சின்னம் — என சரபோஜி மன்னர் விடையளித்தார் என்றும் ஒரு தேய்ந்து போன செய்தி உலவுகிறது. எதிர்ப்பு முகாமோ — அல்லது எதிரியின் வெற்றியைப் புகழ்ந்திடும் மண்டபமோ — தெரியாது; ஆனல் மனோராவின் அமைப்பு கண்ணைக் கவருவதாக மட்டுமல்ல, படை வீரர்கள் தங்கக் கூடிய கோட்டையைப் போலவும் இருக்கிறது. முழுதும் மர உத்திரங்களும், பக்குவப்படுத்தப்பட்ட சுண்ணும்பும், அழுத்தமான செங்கல்லும் கொண்டு கட்டப்பட்ட கட்டிடம் அந்த மனோரா. மர உத்திரங்கள் கால வெள்ளத்தில் உளுத்துவிடக் கூடும் என்பதற்காக — அவைகளில் கயிறுகளை சுற்றி அதன் மீது கல் அடுக்கி சுண்ணும்பு பூசியிருக்கிறார்கள் என்பது மனோராவில் பழுது அடைந்துள்ள பகுதிகளைக் காணும்போது தெளிவாகும். சுண்ணும்பு உதிர்ந்து விட்டிருக்கிறது. கல் உடைந்து போயிருக்கிறது. மரத்தில் சுற்றப்பட்ட கயிறு மட்டும் இன்றைய தினம் திரிக்கப்பட்ட கயிறுபோலத் தெரிகிறது. மனோராவிலே ஒரு பாதாளக் குகையிருந்து மூடப்பட்டு விட்டதாக — அந்தக் குகையிருந்த அடையாளத்தையும் உத்தேசமாகக் காட்டுவார்கள். அந்தக் குகையில் நுழைந்தால் அருகே உள்ள **மருங்கப்பள்ளம்** என்ற ஊருக்கு போக முடியுமாம்.

'மருந்துப் பள்ளம்' தான் மருங்கப் பள்ளமாகி விட்டது என்று ஆதாரப் பூர்வமாக நிரூபித்துக் காட்டுகிறவர்கள் அந்தப் பகுதியிலே பலர் இருக்கிறார்கள்.

பொன் குட்டம் எனப்படும் கல் அங்கே ஏராளமாகக் கிடைக்கிறது. பொற்கொல்லர்கள் பொன்னை உருக்குவதற்காக உபயோகப்படுத்தும் ஒருவித மணலில் தங்கப் பொடிகள் உருகி, சிந்தி, கெட்டிப் பட்டுப் போய் அது கற்கள் போல மாறிவிடுகிறதாம். அந்தக் கல் மருங்கப் பள்ளம் கிராமத்திலே எங்கு நோக்கினும் கிடக்கிறது. அந்தப் பொன் குட்டக் கல்லை எடுத்து அதிலே மருந்து செய்து, பித்தம் — சோகை — பாண்டு—முதலிய நோய்களுக்குக் கொடுத்து குணப்படுத்துகிறார்கள். அதன் காரணமாக அந்த மருங்கப் பள்ளம் மருந்துப் பள்ளம் என அழைக்கப் படுதலே சிறந்தது எனக் கூறுவர் அங்குள்ளோர்.

மற்றொரு ஆராய்ச்சியும் அங்கே நடைபெற்று, இன்னும் முடிவு காணுமல் கிடக்கிறது. எத்தனையோ லட்சம் பெறுமானமுள்ள பொன் அந்த ஊரில் எங்கேயோ ஒரு மூலையில் புதைந்து கிடக்கிறதாம். அது எங்கே தோண்டினுல் கிடைக்கும் என்று திட்டவட்டமாகத் தெரியாமல் பெரியதோர் திகைப்பே ஏற்பட்டிருக்கிறதாம்.

பொன் குட்டம் இவ்வளவு அதிகமாகக் கிடைப்பதற்குக் காரணம் என்ன? பொற்கொல்லர்கள் பலர் பொன் கட்டிகளை அந்த இடத்திலே உருக்கியிருக்க வேண்டும். அப்போது உருகி உருவான பொன் குட்டங்கள் தான் மருங்கப் பள்ளம் முழுமையும் சிதறிக் காணப்படுகின்றன, என்று தங்களது சிந்தனையின் விளைவைக் கூறிக்கொண்டிருப்போருமுண்டு. "செவத்தான் மகள் கருப்பாயி, எலுமிச்சம்பழம் நிறத்துக்கு இருக்கிருள்ளு ஊரெல்லாம் வர்ணிச்சுகிட்டு கிடந்தது; கடைசியிலே பாக்கப்போனு

அவளுக்குப் பாண்டு ரோகம், அதனல்தான் அப்படி வெளுத்துப் போய் இருக்கிருன்னு வைத்தியர் சொன்னுரு —கொடுக்காத மருந்து பாக்கியில்லே—கடைசியிலே பொன் குட்டத்திலே ஒரு மருந்து தயார் பண்ணி சாப்பிட்டுகிட்டே வந்தது—இப்ப கருப்பாயி கட்ட பொம்மன் சம்சாரம் மாறி ஆயிட்டா—கல்யாணம் ஆகி புள்ளையும் பெத்துட்டா—" என்ற உரையாடல் மருங்கப்பள்ளத்து திண்ணைப் பேச்சுக் களின்போது எப்போதாவது ஒரு முறை நடைபெற்றுக் கொண்டுதானிருக்கும். சாலையிலே நடந்து செல்கிறவர்கள் காலிலே தட்டுப்படும் கல், பொன் குட்டக்கல்லாக இருக்கக் கண்டுவிட்டால், அதன் பெருமையைப் பற்றி ஆளுக்கொரு கதை கூறிக் கொண்டு தங்கள் வழிப் பயணத்தை சிரமம் இல்லாமல் முடித்துக் கொள்வார்கள்.

இப்படி யெல்லாம் அந்தப் பொன் குட்டக்கல், அபரிமிதமான பொன் குவியல்கள் அந்த இடத்து மண் ணிலே புதைந்து கிடக்கின்றன என்ற அந்தரங்கத்தை அறிவித்துக் கொண்டிருக்கிறது என்பது மட்டு மல்லாமல் அந்த ஊரின் வயல் வெளிகளுக்கிடையே அமைந்த சிவன் கோவிலில் உள்ள சில வரிகள் பொன் புதைந்து கிடக்கும் செய்தியை இன்னும் அழுத்தமாக ஊர்ஜிதப்படுத்துவதாக வும் பேசிக்கொள்கிறார்கள்.

"எழுவானுக்கும் தொழுவானுக்கும் இடையிலே
காக்கை மூக்கு நிழலிலே.....
கண்டாலும் 'கம்மாளர்' கண்ணிலே"

என்பதுதான் அந்த வரிகள். எழுவான் என்றுல் யார்? தொழுவான் என்றுல் யார்? காக்கை மூக்கு நிழல் என்பதற்குப் பொருள் என்ன? "கம்மாளர்" என்பது பொற்கொல்லரை மட்டும்தான் குறிக்குமா? இதுபோன்ற கேள்விகள் லட்சக் கணக்கான பொன்களைப்பற்றிக் கனவு

காண்பவர்களின் உள்ளத்தில் எழுத்தானே செய்யும்! அப்படி எழுந்த நினைவு அலைகள் எப்படியும் அந்தப் பொற்குவியல்களுக்கு, தான்—ஏகச் சக்ராதிபதியாகிவிட வேண்டுமென்ற பச்சை சுய நலத்தை ஒரு சில மனிதர்களுக்கு பெருக்கிடும் தன்மை வாய்ந்தவை என்பதை யார் மறுத்துக் கூற முடியும்?

இரவு நேரங்களிலே—நிலவைக் காணமுடியாத இருள் வேளைகளிலே—கையிலே மண்வெட்டி கொண்டு எத்தனை எத்தனை ஆசைக்காரர்கள் தாங்கள் பூவைத்துப் பார்த்து உத்தேசமாக உறுதிப் படுத்திக்கொண்ட பகுதியிலே தோண்டிப் பார்த்து—பொன் குடங்களை காணுமல் ஏமாந்திருக்கிறார்களோ—யார் கண்டது!

இப்படிப் பலருக்கு ஆசை காட்டியும்—பலரை ஏமாற்றியும்—பலரால் சிறப்பிக்கப்பட்டும் — சிரமத்தை சுமந்து தோற்றுவிட்ட சிலரால் சபிக்கப்பட்டும்— தனித் தன்மை பெற்றுவிட்ட அந்த மருங்கப் பள்ளம் காண்பதற்கு அழகான ஊர். சிறியதோர் சாலை–அதன் ஓரத்திலே வயலுக்கு உயிர் வழங்கும் வாய்க்கால். அந்த வாய்க்காலின் கரைகளிலே புறுக்கூடு போன்ற ஓலைக் குடிசைகள். பச்சைப் பட்டாடை விரித்து இயற்கையன்னை எழில் கொட்டி மகிழ் ஊட்டும் பூமி அந்த மருங்கப்பள்ளம் — பிரச்சினைக்குரிய பிரதேசம்.

அதிராம்பட்டினம் — புதுப்பட்டினம் — சாளுவ நாயக்கன் பட்டினம்—மனோரா—மருங்கப் பள்ளம்—பேராவூரணி — நாடியம் — ஆகிய ஊர்களையும், பகுதிகளையும் நாம், இப்போது அறிமுகப்படுத்திக் கொண்டிருக்கிறோம். இந்த இடங்களில் சுற்றிச் சுழன்று—கடல் தாண்டி, இலங்கைக் கரையில் மோதித் திரும்பும் ஒரு சில மனித ஜீவன்களின் கதைக்கு நாம் அறிமுகப் படுத்திக்கொண்ட இந்த இடங்கள் பெரிதும் உதவும்.

புனைதயல்

1

வெள்ளியம்பலம், தன் தோட்டத்துக்குள்ளே உலவியபடியிருந்தார். அவருடைய கண்கள் சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டேயிருந்தன. அப்போதுதான் இரவு உணவை முடித்துக் கொண்டிருக்கிறார் என்பதை அடிக்கடி வெளியான பலமான ஏப்பங்கள் அறிவித்துக் கொண்டிருந்தன. தோட்டத்தின் திறந்த வாசலிலே யாரையோ எதிர்பார்த்து அவர் கண்கள் அலைவது நன்றுகப் புரிந்தது. கறுத்த மேனியும், கம்பீரமான தோற்றமும், பயங்கரமான மீசைகளும் உடைய வெள்ளியம்பலம், கையிலே யும் ஒரு அழுத்தமான தடியை வைத்திருந்தார் என்றுல் கேட்கவேண்டுமோ? அவருடைய கழுத்திலே யிருந்த மெல்லிய தங்கச் சங்கிலியும், அதிலே தொங்கிக் கொண்டிருந்த தாயத்தும் நிலவின் மங்கலான ஒளியிலே மின்னிக் கொண்டிருந்தன. அடிக்கடி கனைத்துக்கொண்டு வேங்கை போல தலையை நிமிர்த்தி கண்களையும் சுழற்றிக் கொண்டு அலைந்த வெள்ளியம்பலம் மருங்கப்பள்ளம் வட்டாரத்திலே ஒரு பெரிய புள்ளி. பண வசதியிலே என்று கூறிவிட முடியாது; படை வசதியிலேதான்! அம்பலம் வருகிறார் என்றுலே போதும்; அந்த வட்டாரத்து மக்கள் அச்சத்தை அணைத்துக்கொண்டு, ஆளுக்கொரு மூலைக்கு போய் விடுவர் ஊரிலே நடைபெறும் நல்லது கெட்டது அனைவற்றிலும் அம்பலம் இல்லாமல் இருக்க மாட்டார். யார் வீட்டிலாவது விசேஷ மென்றுல், இவரே அந்த விசேஷக் காரணுக மாறி காரியங்களை கவனிப்பார். அவன் மீதுள்ள

அன்பால் இதைதச் செய்கிறாரா—அல்லது ஜனங்கள் மன திலே தன்னுடைய உருவமும் பெயரும் பதிந்து கிடக்க வேண்டும் என்ற எண்ணத்தில் செய்கிறாரா — அல்லது அந்த விசேஷங்களில் எவ்வளவு வேண்டுமானலும் பணத்தை சுருட்டலாம்; கேட்பதற்கு ஆளில்லை — என்ற தைரியத்தில் செய்கிறாரா-என்பதெல்லாம் அப்பகுதியின் மக்களால் பேசப்பட்டு, அப்படிப் பேசுவதே உயிருக்கு ஆபத்து தரும் வேலை என்று அவர்களாலேயே தீர்மானித் துக் கொள்ளப்பட்டு கைவிடப்பட்ட விஷயங்கள். தெரு விலே அவர் போகும் போது யாராவது கொஞ்சம் நிமிர்ந்து பார்த்து விட்டால்—உடனே அம்பலம் அவன் மீது சீறி விழுந்து ஒரு அடியும் கொடுத்து விட்டுத்தான் போவார். காட்டு ராஜா தர்பார் என்று நினைப்பதற்குக் கூட பயப் படுகிற ஜீவன்கள் வாழுகிற பகுதியிலே அம்பலம் வைத் தது தானே சட்டம். ஆனல் அம்பலத்தின் மனதிலே மட்டும் ஒரு பயம் கருத்தரிக்க ஆரம்பித்தது, என்னமோ உண்மைதான். எவ்வளவு நாளைக்கு எல்லோரையும் மிரட்டி வாழ முடியும்—ஒரு நாளைக்கு எல்லோரும் ஒன்று சேர்ந்துகொண்டு எதிர்க்க ஆரம்பித்துவிட்டால் என்ன செய்வது—என்பது போன்ற சந்தேகங்கள் வளர ஆரம் பித்தன. இந்தப் பயமும் சந்தேகமும் வெள்ளியம்பலத் திற்கு சிறிது நேர சிந்தனையை அளித்தனவே தவிர, அவரது காரியங்கள் எதற்கும் தடையாக நிற்கவில்லை, அப்படித் தடையாக நிற்காத காரணத்தால்தான் மருங்கப் பள்ளத்தின் சிவன் கோயிலைச் சுற்றி பூமியைத் தோண்டிப் பார்த்து அந்தப் பொன் குவியல்களை எப்படியும் எடுத்து விட வேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டார். அவர் அந்த வேலையை நடத்துவதற்காக குறிக்கப்பட்ட நாள் தான் அவர் உலவிக்கொண்டிருக்கும் அந்த நாள். குறிக் கப்பட்ட நாள் என்றால், அவரே குறித்துக்கொண்ட நாள்

அல்ல; ஜோசியர் குறித்த நாள். அம்பலத்திற்கு ஆரூடம் ஜோசியம் முதலியவற்றில் அளவற்ற நம்பிக்கை யுண்டு. அதனல்தான் ரகசியமாக செய்ய வேண்டிய இந்த வேலைக் குக் கூட பஞ்சாங்கத்தைப் புரட்டும்படி கூறினர். பஞ்சாங் கம் பார்த்த அய்யர், அம்பலத்தின் குணங்களை நன்கு தெரிந்தவர். தேடிப் போகும் காரியத்தில் வெற்றி ஏற்படும் என்று சொல்லி பிறகு ஏற்படாவிட்டால் தன உயிருக்கே மோசம் வந்து விடும் என்று அவருக்குப் புரியுமாதலால்— சுக்கிர திசையும் இருக்கிறது—அதோடு சனி பார்வையும் லேசாக இருக்கிறது—அதனல் ஜெயத்தை மதில் மேல் பூனை போலத்தான் சொல்லவேண்டும். ஒருவேளை ஜெய மும் கிடைத்துவிடலாம்—என்று மிகத் தெளிவாக ஜோசி யம் கூறி நாள் பார்த்துக் கொடுத்துவிட்டார்.

ஏக காலத்தில் பல இடங்களில் தோண்டிப் பார்த்து பொற்குவியல் இருக்குமிடத்தை எப்படியும் கண்டுபிடித்து விட வேண்டுமென்பதற்காக ஐம்பது ஆட்களுக்கு மேல் ஏற்பாடு செய்திருந்தார். அவர்களுடைய வரவை எதிர் பார்த்துத்தான் தோட்டத்து வாசலிலும் காத்திருந்தார். அவர்களும் வந்து விட்டார்கள்.

"ஏண்டா இவ்வளவு நாழி?"

அவர்கள் மௌனமாய் நின்றூர்கள். நாழிகையான தற்கு சரியான காரணமிருந்தாலும், அதைச் சொன்னல் எதிர்த்துப் பேசியதாக ஆகிவிடும் என்ற பயம் அவர்களை மௌனமாக்கியது.

"டேய் சாம்பான்—சக்கிலி—முனியா—எல்லா பயலும் ஜாக்கிரதையா இன்னைக்கு வேலையை கவனிக்கணும். இல் லேன்னு தோலே உரிச்சிடுவேன். ஆமாம்."

என்று சொல்லிக்கொண்டே வெள்ளியம்பலம் முன்னே நடந்தார். மற்றவர்கள் பின்னே நடந்தார்கள். அவர்கள்

ஒவ்வொருவரிடமும், மண்வெட்டி, கடப்பாறை முதலிய ஆயுதங்கள் இருந்தன. தோட்டத்துக்குப் பின்புறமுள்ள வாய்க்காலைக் கடந்து அங்குள்ள ஒற்றையடி வரப்பின் மீது அம்பலம் முன் செல்ல மற்றவர்களும் பின் தொடர்ந்து சென்ற காட்சி ஊர் மக்கள் யாருக்கும் தெரியாது. இரவு 8-மணி ஆகிவிட்டாலே கிராமங்கள் அடங்கி விட்டதாகத் தானே அர்த்தம். இரவு நேரத்துப் பறவைகளின் வரட்டு சங்கீதமும், நீர் தேங்கிய குழிகளின் மேலே அமர்ந்து தவளைகள் பாடும் கொர கொர சுரகமும் வெள்ளியம்பலத்தின் அந்த அணிவகுப்புக்கென தயாரிக்கப்பட்ட இசை யமைப்பு போல இருந்தன. பல வயல்களைக் கடந்து அவர்கள், கடைசியாக அந்த சிவன் கோயில் பக்கம் வந்துவிட்டார்கள். நிலவு மேகத்தில் மறைந்து கொண்டு, வெளிவருவதற்குத் திண்டாடிய காரணத்தால் தெளிவாக வழி தெரிவதற்கு அம்பலத்தின் கையிலிருந்த பழைய 'டார்ச் லைட்' பயன்பட்டது. கோயிலுக்கு வெளியிலே ஆட்களை நிறுத்தி வைத்துவிட்டு, அம்பலம் மட்டும் கோயிலுக்குள்ளே நுழைந்தார். அங்குள்ள கல்லிலே செதுக்கப்பட்டிருந்த எழுத்துக்களை அவர் எத்தனையோ முறை துருவித் துருவிப் படித்திருந்தாலும் — இப்போது ஒருமுறை படிக்க விரும்பினர். டார்ச் லைட்டை அந்த எழுத்துக்களின் மீது அடித்தார்.

"எழுவானுக்கும் தொழுவானுக்கும் இடையிலே,
காக்கை மூக்கு நிழலிலே, கண்டாலும் கம்மாளர் கண்
ணிலே....."

அம்பலம் இன்னும் படித்தார் – தேய்ந்து மறைந்து போகும் நிலையிலுள்ள அந்த கடைசி வரியையும படித்தார்.

"எழுபது கோடி பசும் பொன்" என்ற அந்த கடைசி வரி அம்பலத்தின் நெஞ்சிலே எவ்வளவு படபடப்பை

உண்டாக்கியது தெரியுமா? டார்ச் லைட் ஒளிபட்டு மின்னும் அந்த எழுத்துக்கள் எல்லாம் அம்பலத்தின் கண்ணுக்கு வைர மழை கொட்டுவதுபோலத் தோன்றின. தனக்குத் தானே ஒரு முறை பொருள் கூறிக்கொண்டார்.

"எழுவான் என்றல் சூரியன்–தொழுவான் என்றல்–இந்தக் கோயிலில் இருக்கிற ஆண்டவன் – சூரியனுக்கும் இந்த ஆண்டவனுக்கு மிடையிலே — அப்படியானால் சூரியன் உதயத்திலிருந்து சாளுவ நாயக்கன் பட்டினம் வரையிலே வியாபித்திருக்கிற கடலிலே பசும் பொன் இருக்க முடியாது – அதனால் சாளுவ நாயக்கன் பட்டினத் திற்கும் இந்தக் கோயிலுக்கும் இடையிலே தான் அந்தப் புதையல் இருந்து தீரவேண்டும் – காக்கை மூக்கு நிழலிலே என்பதையும் தான் காலையிலே ஆராய்ந்து விட்டோம்— அதோ இருக்கிற ஒதிய மரத்தின் மேல் காலையில் அமர்ந்த காக்கையின் மூக்கு நிழலை நான் அப்போதே குறித்துக் கொண்டேனே; அந்தக் குறிப்பு சரியாகத் தான் இருந்து தீர வேண்டும் — என்னமோ — எல்லாம் சிவன் செயல்— கடவுளே! மருங்கப் பள்ளத்து மகேஸ்வரா, தேடும் பசும் பொன் கிடைத்து விட்டால், தங்கக் கட்டிகள் அகப்பட்டு விட்டால், உனக்கு ஒரு வெள்ளி ரிஷப வாகனம் செய்து வைக்கிறேன்"—

இப்படியெல்லாம் ஆசைக் கனவு கண்டவாறு கோயி லுக்குள்ளிருந்து வெளிவரத் திரும்பினர். திரும்பிய அவர் கவனத்தை ஏதோ ஒரு ஒலி இழுத்தது. அப்படியே அசையாமல் நின்று கவனித்தார்.

இச்—இச்—என்ற ஒலி! அது என்ன ஒலியென்பதை அவர் புரிந்துகொண்டார். மீண்டும் கவனித்தார்.

போதை நிறைந்த வார்த்தைகள் அவர் காதுகளில் மோதின.

"அத்தான்!"

"கண்ணே!"

"ராஜா!"

"என்னடி ராஜாத்தி!"

வெள்ளியம்பலத்துக்கு ஒன்றுமே புரியவில்லை. அந்த ஒலிக்கு உரியவர்கள் யார் என்பதைப் பார்த்துவிட வேண்டுமென்று ஆசை துடித்தது. அதோடு தன் காரியத்திற்கும் அவர்கள் ஏதாவது இடையூறாக வந்து விடுவார்களோ என்றும் பயந்தார். யார் அவர்கள்? அவரை யறியாமல் அவர் தடித்த உதடுகள் அசைந்தன இப்படி!

"ஒருவேளை—பார்வதி பரமேஸ்வராளாகவே யிருக்குமோ—சேச்சே! கைலாசத்தில் இடமில்லாமலா—இங்கே வந்து .....ஏன் வந்தால் என்ன.....வரமாட்டார்களா என்ன.....அப்படி அவர்களாக இருந்தாலும்—ராஜா, ராஜாத்தி என்று கூப்பிட்டுக் கொள்ள மாட்டார்களே.....

சந்தேகத்தின் ஏகப் பிரதிநிதியாக வெள்ளியம்பலம் நின்று கொண்டிருந்தார், பெருமூச்சையும் கஷ்டப்பட்டு அடக்கிக்கொண்டு!

மறைந்திருந்து அவர்கள் யார் என்று பார்த்து விடலாம்—சேச்சே!—இந்த நிலையில் போய் கூடாது! கூடாது!

தனக்குத்தானே புத்தி சொல்லிக்கொண்டார். தங்கம் தேட வந்தவர் இன்பம் தேடும் கிள்ளைகளின் தென்றல் மொழியிலே மனதைப் பறிகொடுத்தார்.

மீண்டும் யாழ் அதிர்ந்தது.

'மறக்க மாட்டீர்களே கண்ணு!' பதில் வரவில்லை—'இச்' என்ற, ஒலி மட்டும் காற்றில் மிதந்து அவர் காதில் புகுந்தது.

வெள்ளியம்பலத்திற்கு நிலைகொள்ளவில்லை. இந்தப் பிரச்சினைக்கு சீக்கிரம் ஒரு முடிவு கட்டினால் தான் தன்னுடைய பொன் தோண்டும் காரியம் விரைவில் நடைபெற முடியும் என்ற தீர்மானத்திற்கு வந்தார். ஆட்கள் அனைவரையும் அழைத்து கூச்சலிடச் செய்து, அவர்களை விரட்டி விடலாம் என்று முடிவு செய்தார். ஆட்களை அழைப்பதற்காக ஒரு அடி எடுத்து வைத்தார். பட பட வென ஒரு சிறு சப்தம்—அம்பலம் திடுக்கிட்டுப் பார்த்தார். ஒன்றுமில்லை. தலைகீழாகத் தொங்கிக் கொண்டிருந்த ஒரு வௌவாலிடம் இன்னொரு வௌவால் நெருங்கியதால் வந்த வினை; அவ்வளவு தான் துடித்துக் கொண்டிருக்கும் இருதயத்தை அழுத்தியவாறு மீண்டும் நடக்க ஆரம்பித்தார்.

சற்று பலமாகவே பேச்சுக் குரல் கேட்டது. அம்பலம் தொடர்ந்து நடக்காமல் நின்று விட்டார்.

"அத்தான்—நடந்ததை யெல்லாம் மறந்து விடுங்கள்—இனிமேலாவது....."

அவ்வளவு தான் அவர் காதில் விழுந்தது—அதற்குமேல் பேசியது சரியாகக் கேட்கவில்லை. இனி ஆட்களை இழுத்து வந்து கலாட்டா செய்ய வேண்டியது தான் என்று எண்ணியபடி வேகமாக வெளியேறினர் அம்பலம். ஆட்களை அழைத்து வந்து கலவரம் செய்தால் அதனால் ஏதாவது விபரீதம் ஏற்பட்டு ஊர் கூடிவிட்டால்—பிறகு, தான் நினைத்தபடி தங்கம் வெட்டியெடுக்கும் காரியம் நடக்காமல் போய் விடுமே, ஜோசியர் கூறிய நாளைத் தவற விட்டு விட்டால், மறுபடியும் இப்படி ஒரு நாள் கிடைக்காதே—என்றும் யோசிக்கத் தொடங்கினர். சரி—தானே போய் அவர்களை மிரட்டி விரட்டுவது—என்றும் முடிவு செய்து கொண்டு மறுபடியும் கோயிலுக்குள் திரும்பினர்.

'இச்' சப்தம் மாறி மாறி ஒலித்துக் கொண்டிருந்தது—அம்பலம் சிறிது தயங்கி நின்றார். ஆண்குரல் கேட்டது.

"பரிமளம்! அதோ இருக்கிறது பார், அந்த மாமரம்—அந்த மரத்தடி தான் தங்கம் புதைக்கப்பட்ட இடம்."

இந்த வார்த்தைகள் வெள்ளியம்பலத்தின் காதில் விழுந்ததோ இல்லையோ உடனே எந்தவித தயக்கமுமின்றி உள்ளே பாய்ந்தார். கோயிலின் பின்புறப் பக்கமாக உள்ள ஒரு சிறு சுவற்றின் மறைவில் தான் அவர்கள் இருந்தார்கள் போலும்—அம்பலம் அங்கு பாய்ந்தாரோ இல்லையோ அவர்கள் இருவரும் நடு நடுங்கி விட்டார்கள். "அத்தான்" எனக் கட்டித் தழுவிப் பின்னிக் கொண்டாள் அந்தப் பெண்ணழகி. அப்படித் தழுவியது இமைப் பொழுது தான்—அதற்குள் அம்பலம்,

"எந்த மாமரத்தடியிலடா தங்கம் புதைந்திருக்கிறது—சொல்லடா!" என்று கூவிக் கொண்டே அங்கு பாய்ந்ததைக் கண்டு, இரு புறுக்களும் ஓட ஆரம்பித்தன—வெள்ளியம்பலம் ஒரே தாவாகத் தாவி அவனைப் பிடித்து விட எண்ணினார். அப்படித் தாவிய நேரத்தில் கல் இடறிக் கீழே விழுந்து காலிலே சரியான அடிபட்டு விட்டதால் உடனே அவர் ஆட்களை அழைக்க ஆரம்பித்தார்—ஆட்கள் ஓடி வரவே, அவர்களிடம், "டேய் சக்கிலி, சாம்பான்! இரண்டு பேர் இப்படி ஓடுகிறார்கள்—ஆம்பளையும், பொம்பளையும்—விடாதீங்க, பிடியுங்க—ஓடுங்க!" என்று கத்தினார். ஆட்கள் ஓட ஆரம்பித்தனர். "டேய் முனியா! நீயும் சில ஆளுகளும்—நம்ப ஊரு ரோட்டிலேயும், வயல் வரப்புலேயும் நில்லுங்க—அந்தப் பயலும்

சிறுக்கியும் ஊருக்குள்ளே நுழைஞ்சு தான் தீரணும்— எப்படியும் புடிச்சுடலாம்!" என்று முனியனுக்கு உத்திரவு போட்டார். மற்றவர்கள் எல்லாம் கிழக்கு நோக்கி ஓடினர்கள்.

காதல் புறுக்களும் கிழக்கு நோக்கித்தான் பறந்தன— கிராமத்திலே எத்தனையோ பாதைகள். எத்தனையோ வயல் வெளிகள். எத்தனையோ வரப்புகள்—அவைகளில் எந்த வழியாக ஓடினர்கள் என்று எப்படிக் கண்டு பிடிக்க முடியும்? முழங்காலில் நல்ல அடிபட்டு விட்டதால் நொண்டியபடி வெள்ளியம்பலம் எழுந்தார். கையிலிருந்த டார்ச் லைட் விழுந்த வேகத்தில் கண்ணாடி உடைந்து போயிருந்தது. ஆனாலும் வெளிச்சம் காட்ட சிறிது உதவியது. அதன் துணையோடு சுற்று முற்றும் பார்த்தார். அந்தப் பெண்ணின் மேலங்கி கீழே கிடந்தது. ஒரு நல்ல செருப்பும் கிடந்தது. இரண்டு செருப்புகளில் ஒன்றைப் போட்டு விட்டு ஓடியிருக்கிறான், அவசரத்தில் என்று அம்பலம் தனக்குள் சொல்லிக் கொண்டார். லைட்டை கொஞ்ச தூரத்தில் அடித்து தேடிப் பார்த்தார். மற்றொரு செருப்பு காணப்படவில்லை. மேலங்கியையும், செருப்பையும் கையில் எடுத்துக் கொண்டு, நொண்டியபடி நடந்தார்.

"மாமரத்தடியில் தான் தங்கம் புதைக்கப்பட்டது" என்று கூறினானே — அது எந்த மாமரத்தடி? எத்தனையோ மாமரங்களில் எந்த மரத்தைத் கண்டு பிடிப்பது? உம்!—காக்கை மூக்கு நிழல் விழுந்ததோ — ஒதிய மரத்தடி! இவன் மாமரத்தடி என்கிறான்—எனக்கு ஒன்றும் புரியவில்லையே—கடவுளே!" என்று உளறிக் கொண்டே நகர்ந்தார் அம்பலம். அவரது ஆட்களோ வேட்டை நாய்களைப்போல மோப்பம் பிடித்தவாறு, கிழக்கு நோக்கிப் பறந்த அந்த காதல் ஜீவன்களை தேடி அலைந்தார்கள்.

வாய்க்காலின் உட்புறமாக மறைந்தும், புதர்களில் பதுங்கிப் பதுங்கிப் பார்த்தும், கால்களிலும் உடலிலும் குத்திக் குருதி வழியச்செய்யும் முட்களை சமாளித்துக் கொண்டும், அந்த இருவரும் லட்சியமற்ற ஒரு திசையை நோக்கி ஓடிக்கொண் டிருந்தார்கள். ஓடியவர்கள் பின்னல் திரும்பிப் பார்த் தார்கள். பத்து பேர் தங்கள் பாதையிலே வந்து கொண் டிருப்பது தெரிந்தது. வரப்பிலே மறைந்தபடி எதிரே பார்த்தார்கள். எதிரேயும் நாலைந்து பேர் வருவது தெரிந்தது.

"சரி அகப்பட்டுக் கொண்டோம் அத்தான்" என்று நடுங்கும் கரத்தால் இறுக அணைத்துக் கொண்டாள் அவள். "பயப்படாதே பரிமளம்!" என அவள் நெளி யும் கூந்தலை தடவிக் கொடுத்தான் அவன்.

2

பயப்படும் பரிமளத்தை அவன் அணைத்துக் கொண் டான். அணை நாணயத்தின் விளிம்பு போல நெளிந்து கிடக்கும் அவள் அழகுக் கூந்தலை தடவிக் கொடுத்த படியே வரப்பின் மறைவிலே தன்னை மறைத்துக் கொண் டான். அவளையும் யாரும் பார்த்து விடாதபடி தன்னோடு ஒளித்துக் கொண்டான், அங்குள்ள சிறிய மதகு ஒன்றை நோக்கி இருவரும் உடலால் ஊர்ந்து சென்றார்கள். அவள் நெஞ்சு பட பட வென அடித்துக் கொண்டது. அவன் கை அவள் மீது படும் போது கூட அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது. ஒரு வேளை அவர்கள் தான் தன்னைப் பிடித்து விட்டார்களோ என்று பயந்து துடித்தாள்.

மெதுவாக மதகின் உள்ளே நுழைந்து கொண்டார்கள். இருபுறங்களிலும் வந்து கொண்டிருந்த ஆட்களும் வந்து சேர்ந்தார்கள்.

"என்னப்பா — கிடைக்கலியா?"

"இல்லியே — எங்கேயோ பறந்துட்டாங்களே!"

"அவங்களை — இன்னைக்கு பிடிக்காமலா விடுறது?"

"அவரு வேற கோவக்கார மனுஷன் — நம்மைக் கொண்ணுபிடுவாரு!"

காதலர்கள் ஒளிந்திருந்த அந்த மதகின் மேலேயே அவர்கள் நின்று பேசிக்கொண்டிருந்தார்கள். மதகின் உள்ளேயிருந்தவர்களுக்கு மூச்சு விடவும் பயமாயிருந்தது. அவன் உடலோடு தன் உடலை ஒட்டியபடி நடுங்கிக்கொண்டிருந்த பரிமளம் தன் பார்வையை வேறு பக்கம் திருப்பிருள். அய்யோ! பாம்பொன்று படமெடுத்தபடி நின்று கொண்டிருந்தது. நல்ல வேளையாக அதே சமயம் அந்தப் பக்கம் திரும்பிய அவன் பாம்பைக் கண்டதும் எங்கே அவள் கத்திவிடப் போகிறாளோ எனக்கருதி அவளது வாயை உடனடியாக மூடிவிட்டான். அவசரத்தில் அதை தைரியமாகச் செய்தானுயினும் பாம்பின் மீதே அவன் கண் இருந்தது. மதகின் மேலே நின்று தங்களைப் பற்றி பேசிக்கொண்டிருக்கும் முரடர்களின் பேச்சு கூட இப்போது அவர்கள் காதில் அவ்வளவாக விழுவில்லை. காரணம், அவர்கள் கவனமெல்லாம் அந்தப் பாம்பின் மீதே இருந்தது. அசைந்தாலே அபாயம்—அது தீண்டிவிடும் என்ற அளவுக்கு அச்சம் பிறந்துவிட்டது அவர்களுக்கு!

"வேறு பக்கம் போய் பார்க்கலாம் வாங்க — ஆனை ஒண்ணு; ஆளுங்க ரெண்டு பேரும் மருங்கப்பள்ளத்து ஆளாய்த்தான் இருக்கணும்— அதனல் மருங்கப்பள்ளம் போற பாதை முழுதும் கவனமாயிருங்க! நானும் சக்கிலியும்

இந்தப் பக்கம் போரும் — நீங்க அந்தப் பக்கம் போங்க!" மதகின் மேலேயிருந்த ஆட்கள் இப்படி பேசிக் கொண்டு அதை விட்டுப் போய் விட்டார்கள் என்பது அவர்களுக்கு சிறு ஆறுதலை அளித்தது. ஆனாலும் எதிரேயிருக்கும் பாம்பு? அதனிடமிருந்து தப்புவதற்காக இருவரும் பின்னோக்கி நகர்ந்தார்கள். காற்று வீச ஆரம்பித்தது. மதகிற்குள்ளே அடைபட்டது போல கிடந்தவர்களுக்கு அந்தக் காற்று சற்று ஆறுதலை அளித்தது. ஜிலு ஜிலு வென்று வீசிக்கொண்டிருந்த காற்று சற்று பலமாக வீசியது. அவர்கள் பின்புறமாக ஊர்ந்துகொண்டே பாம்பை பார்த்தார்கள். என்ன ஆச்சரியம்—பாம்பின் தலை மட்டும் அவர்களை நோக்கி பாய்ந்து வந்தது. வந்த தலை பரிமளத்தின் முகத்தில் பட்டுக் கீழே விழுந்தது. அவள் ஓவென அலறிவிட்டாள்.

அவன் அந்தத் தலையை உற்றுப் பார்த்தான். படமெடுத்தபடி பாய்ந்து வந்த தலை, பாம்பின் தலை அல்ல; காற்றிலே பறந்து வந்த பூவரசின் இலை என்பது அப்போது தான் அவனுக்குத் தெரிந்தது. பிரண்டைக் கொடியொன்றிலே சிக்கிக் கொண்டிருந்த பூவரசம் இலைதான் படமெடுக்கும் பாம்பு போல காட்சியளித்தது என்ற உண்மை, அந்த வேதனையான நேரத்திலே அவர்களுக்கோர் வேடிக்கைத் துணுக்காக அமைந்தது.

சுற்றுமுற்றும் பார்த்தார்கள். மருங்கப்பள்ளம் பாதையிலே முரடர்கள் போய்க் கொண்டிருப்பது தெரிந்தது.

"எப்படியத்தான் ஊருக்குத் திரும்புவது? பாதையெல்லாம் அவர்கள் இருக்கிறார்களே!"

"இப்போது ஊருக்குள் போகக் கூடாது, பரிமளம்—வா! இன்னும் சிறிது தொலைவு நடந்தால் கடற்கரை வந்து

விடும். சாளுவநாயக்கன் பட்டினத்தில் அந்த மனோரா பக்கத்தில் போய் ஒளிந்துகொண்டால் நம்மை யாரும் பார்க்க முடியாது. இன்றிரவை எப்படியும் கழித்து விட்டால் காலையில் நீ வீட்டுக்குப் போய்விடலாம்.”

“காலையிலா? அய்யோ—அப்பா, அம்மாவுக்கு நான் என்ன பதில் சொல்வது?”

“உன் அப்பா அம்மா என்ன படித்தவர்களா?”

“ இல்லை—அதற்காக?”

“ அவர்கள் மூட நம்பிக்கையை நாம் பயன் படுத்திக் கொள்ள வேண்டும்.”

“ புரியும்படி சொல்லுங்கள், துரை!”

“சொல்லுகிறேன்—இரவு வீட்டிலே படுத்து நீ தூங்கிக் கொண்டிருந்ததாகவும்—கனவில் ஒரு தேவதை வந்து எதோ மருந்தென்றை மூக்கிலே காட்டியதாகவும்—கனவு கலைந்து விழிப்பதற்காக எவ்வளவோ முயன்றும் முடியாமற் போனதாகவும், சப்தம் போடக்கூட இயலாமற் போனதாகவும், அதன் பிறகு பிரக்ஞையற்றுப்போய் நடந்தது எதுவும் தெரியாதென்றும், விடியற்காலையில் விழித்துப் பார்த்தால் ஒரு மதகின் பக்கம் படுத்திருப்பதை உணர்ந்ததாகவும்—உடனே எழுந்து ஓடி வந்ததாகவும் சொல்லி விடு; உன் அப்பா அம்மா நம்பி விடுவார்கள்!”

“வாழ்க மூட நம்பிக்கை!” என்று அவன் கன்னத்தில் தன் கன்னத்தை உரசியபடி சிரித்தாள் அந்த சிங்காரி.

“சரி பரிமளம்—வா! வா! அவர்கள் கண்கள் இந்தப் பக்கம் திரும்புவதற்குள்ளாகவே போய்விடுவோம்—”

:"துரை! காதல் பாதை கரடு முரடானது என்பது உண்மை தான்!"

"எல்லாப் பாதையும் அப்படித்தான்! பாதை என்பதே உபாதையிலிருந்து வந்தது தானே!"

துரையும் பரிமளமும் ஒளிந்து ஒளிந்து நடக்கத் தொடங்கினர்கள். இரவின் அமைதி, தவளை சப்தத்தால் இடை இடையே கலைந்தது. நிலவின் ஒளியும் மேகத்தின் தழுவுதலால் மங்கி மங்கி வீசியது. சாரூவ நாயக்கன் பட்டினத்துக் கடற்கரைப் பக்கம் வந்து விட்டார்கள். குளிர் காற்று வீசிய காரணத்தால் பரிமளம், துரையின் தோள்களில் சாய்ந்தவாறு நடந்தாள். குளிரைச் சிறிது தடுத்துக் கொள்ள அவளுக்கு மேலங்கியும் கிடையாது. துரை தன்னுடைய துண்டை எடுத்து அவளுக்குப் போர்த்தி விட்டான். அவளும் நாணங்கலந்த ஒரு சிரிப்பை அவனுக்குப் பரிசாகத் தந்துவிட்டு பின் தொடர்ந்தாள்.

மனோராவின் கம்பீரத்தையும் தன் காதலன் கம்பீரத்தையும் ஒப்பிட்டுப் பார்ப்பது போல அவளது அழகிய கண்கள் மனோராவையும் அவனையும் மாறி மாறிப் பார்த்தன. ஆனல் அவனே எதையோ ஒன்றை மிக கூர்மையாக கவனித்தான். அவனது நடையிலே வேகம் குறைந்தது. நின்று விட்டான்.

"என்ன அத்தான்?"

"ஒன்றுமில்லை—அதோ பார்!"

இருவரும் பார்த்தார்கள். ஒரு உருவம் மனோராவின் பக்கமுள்ள ஒரு பெரிய மேட்டில் நின்று கொண்டிருந்தது. அந்த உருவத்தின் அமைப்பு பூரணமாக விளங்குவதற்கு

உதவியாக நிலவு, மேகத்திலிருந்து விடுபட்டது. வழுக்கைத் தலையும், வளர்ந்த தாடியும் கொண்ட அந்த வயோதிக மனிதர், மேட்டில் நின்றபடி ஆகாயத்தை நோக்கி கையை உயர்த்தினர். அந்த தளர்ந்த மேனிப் பெரியவர் தன் அதிரும் கரத்தை ஆகாயம் நோக்கி நீட்டிய காட்சி— அதுவும் அந்த இரவில்—ஏதோ ஒரு புனிதத்தன்மை படிந்த காட்சியாகவே திகழ்ந்தது.

துரையும் பரிமளமும் வைத்த கண் வாங்காமல் நின்றனர்.

"யார் அத்தான் அது?"

"வயதான ஒரு மனிதர்!"

"மனிதர்தானு? அல்லது பூவரசு இலைப் பாம்பு போலத்தானு?"

"இரு! கவனிப்போம்—"

பெரியவர் ஆகாயத்திலிருந்த பார்வையைத் திருப்பாமல் ஏதோ பேசினர். பேச்சல்ல அது — பிரார்த்தனை போலிருந்தது.

"ஓ! ஆகாயத்தில் மேயும் மேக மந்தைகளே! உங்கள் வாழ்நாள் சதமென்று எண்ணியிருக்கிறீர்களா? குளிர்ந்த காற்றுத்தான் உங்கள் எமன் என்பதை மறந்து விடாதீர்கள்! மேகங்களே! உங்கள் சாவுக் கண்ணீர் மாநிலத்தை வாழவைக்கவும் உதவுகிறது. சில சமயம் அழிக்கவும் உதவுகிறது! ஆனலும் உங்கள் சாவுக் கண்ணீர் வாழ்க! அதுபோல என் சாவுக் கண்ணீர் யாரையும் வாழவைக்காதா என்று ஏங்குகிறேன். மேகப் பிராணிகளே உங்கள் சாவுக் கண்ணீரின் சக்தியை இந்த ஏழை மனிதனின் சாவுக் கண்ணீருக்கு தாருங்கள்— உம்—சீக்கிரம்! அந்த குளிர்காற்று வீசுவதற்குள்! உடனே! உடனே!"

பெரியவரின் வார்த்தைகளைக் கேட்ட பரிமளம், துரையிடம் பேசினாள்.

"என்ன அத்தான் புலம்புகிறார்? சாவுக் கண்ணீர் என்றால் என்ன?"

"சாவுக் கண்ணீர்! மேகத்தின் சாவுக் கண்ணீர் மழைதான்! பரிமளம் இரு இரு—இன்னும் கவனிப்போம்!"

குழந்தை சீப்பித் தின்ற மாம்பழத்தின் நார்க்கொத்து போன்ற தாடியுடைய அந்தப் பெரியவர் தன் பிரார்த்தனையை முடித்து விட்டு மேட்டிலிருந்து கீழே இறங்கினர். துரை, பரிமளத்தை அங்கேயே இருக்கச் சொல்லிவிட்டு, கிழவரின் பின்னே தொடர்ந்தான். கிழவர் மலைராவிற்குள் நுழைந்தார்—பாழடைந்துபோன படிகளின் வழியாக மலைராவின் முதல் மாடியை அடைந்தார். துரை, சந்தடியின்றிப் பின் தொடர்ந்தான். முதல் மாடியிலிருந்து அடுத்த மாடியில் ஏறுவதற்கு பனை மரத்தால் ஆன ஏணி ஒன்று இருந்தது. அந்த ஏணி சரியாகத் தெரியவில்லை. மாடியின் உட்பகுதியில் நிலவின் ஒளி தலை நீட்டிக் கொண்டிருந்தது. ஆகா அந்த ஒளியிலே மூத்தவரின் முகம் எவ்வளவு துல்யமாகத் தெரிகிறது. பருவக் கழுகு அவர் முகமெல்லாம் தன் கூரிய நகங்களால் பிராண்டியிருந்தது. சுருக்கம் நிறைந்த முகம், அதில் சுடர் விழி கொண்ட பெரியவர். அவரை ரசித்தான் துரை. கிழவர் ஏணி வழியாக மேலே ஏறினர். துரையும் ஒரு மூலையில் ஒளிந்து கொண்டு அவர் ஏறிச் செல்வதைக் கவனித்தான். அவன முதுகில் யாரோ கை வைத்து அழுத்தினர்கள். திடுக்கிட்டான். யாருமில்லை, பரிமளம் தான்.

"என்னத்தான்" என்று ஈனஸ்வரத்தில் அவள் கேட்டாள்.

"பரிமளம்—நீ இங்கேயே இரு—நான் மேலே போய் பார்த்துவிட்டு வருகிறேன்."

என்று கூறிவிட்டு துரை மேலே ஏறினான். பரிமளம் எதுவும் புரியாமல் கடலையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அலைகடல் போலவே அவள் உள்ளமும் ஆகியிருந்தது. துரை கிழவரைத் தொடர்ந்து கொண்டே போனான். ஒன்று இரண்டு—மூன்று! ஏழாவது உப்பரிகையிலே கிழவர் ஏறிவிட்டார். துரை ஆறும் உப்பரிகையிலே நின்று கொண்டு மேலே கவனித்தான். ஒரே நிசப்தம். எதுவும் நடைபெறுவதாகத் தெரியவில்லை. உப்பரிகைப் பலகணி வழியாக கடற்கரையை அவன் பார்க்க முடிந்தது. கடற் கரையைப் பார்த்தான், ஆம்—உள்ளபடியே அவன் நடுங்கி விட்டான். அவர்களைத் தொடர்ந்த அந்த முரடர்கள் மனோராவின் பக்கம் வந்து கொண்டிருந்தார்கள். ஆம்—அவர்களேதான் — நிச்சயமாகத் தெரிந்து கொண்டான். ஆனால் பரிமளமோ வேறு திசையில் நின்று — மனோராவின் முதல் தளத்திலிருந்தபடி கடலை பார்த்துக் கொண்டிருந்தாள். துரைக்கு எதுவுமே புரியவில்லை.

உச்சியிலே கிழவர்! உப்பரிகையின் அடித் தளத்திலே குமரி! ஆம்—காதல் குமரி. அவளை அவன் காப்பாற்றித் தீர வேண்டும். உச்சிக்குப் போன கிழவர் அதற்கு மேல் எங்கும் போக முடியாது. அவரை எப்படியும் பிறகு பார்த்து விடலாம்—முதலில் பரிமளத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்துடன் துரை கீழே திரும்பினான். அப்போது மேலே ஒரு சப்தம் கேட்டது.

"சாவுக் கண்ணீர்!

சாவுக் கண்ணீர்!"

என்ற ஒலிதான் அது! துரை ஆச்சரியத்தோடு மேல் நோக்கினான்.

கிழவரின் குரல் நடுக்கமின்றி ஒலித்தது! ஓ, ஆகாயத்தில் மேயும் மேக மந்தைகளே! உங்கள் வாழ்நாள் சதமென்று எண்ணியிருக்கிறீர்களா? குளிர்ந்த காற்றுத்தான் உங்கள் எமன் என்பதை மறந்து விடாதீர்கள்!

பழைய பிரார்த்தனையில் பாதி வாசகங்களைக் கேட்டான் துரை—

அதற்குள் "அத்தான்" என்ற அபயக்குரல் இரவின் அமைதியைக் கிழித்துக் கொண்டு அடித்தளத்திலிருந்து புறப்பட்டது—துரை திடுக்கிட்டுத் திரும்பினான்.

3

அடித்தளத்திலிருந்து வந்த அபயக்குரல் பரிமளத்தினுடையது என்பதை உணர்ந்த துரை மிகவும் நடுங்கிப் போனான். எதைப் பற்றியும் கவலைப்படாமல் தன் மீது கொண்ட தணியாத காதலால் பரிமளம் அந்த இரவில் தன்னை சந்தித்து—இவ்வளவு இடையூறுக்கும் ஆளாகி விட்டாளே; அதற்கு நாமும் காரணமாகி விட்டோமே—என்ற கவலையும் ஒருக்கணம் மின்னி மறைந்தது துரையின் நெஞ்சத்தில்! ஆனாலும் சமாளித்துக் கொண்டு, கீழ் நோக்கி இறங்கினான்.

ஒரு உப்பரிகையின் படிகளை அவன் கடப்பதற்குள்ளாகவே இன்னொரு சப்தம் "அத்தான்" என்று அவன் எதிரே கேட்டது. அவள் அவனிடம் ஓடிவந்து கொண்டிருந்தாள்.

"என்ன பரிமளம்?" என்று நடுங்கும் தொனியில் கேட்டான் துரை.

"அந்த முரடர்களைப் போலவே யிருக்கிறது — பின் தொடருகிறார்கள்" என்று அவள் சொல்லி வாய் மூடுவ தற்குள் உப்பரிகையின் மேல் பகுதியிலிருந்து துரையின் தலையில் ஒரு அடி பலமாக விழுந்தது. ஆம்; அந்தக் கிழவர்தான் தன பலங்கொண்ட மட்டும் ஒரு கட்டை யால் துரையைத் தாக்கி விட்டார். திடீரென ஏற்பட்ட அதிர்ச்சியில் துரை மூர்ச்சை யடைந்தான் துரையின் மீது பரிமளம் பாய்ந்து வாரி அணைத்துக் கொண்டாள். "அத்தான்" என்று இப்போது அவள் கூறியபோது அடடா! அந்த முறைச் சொல்லிலே தான் எவ்வளவு ஜீவன் இருந்தது. அழகான பெண்களின் சோக மயமான முகம் ஒரு புதிய பொலிவோடு விளங்கும். அந்தப் பொலி வுப் பதுமையாள் சிந்தும் சோகச் சொல்லிலே கூட ஒரு தனித்த சுவை யிருக்கத்தான் செய்கிறது. பரிமளம், "அத்தான்" என்று அவனைத்தழுவிக் கொண்டு, அவ னது முகத்தை தனது காந்தள் விரல்களால் வருடிய போது காதல் வீணையின் சோகஸ்தாயியை கலையரசி ஒருத்தி எழுப்புவது போலவேயிருந்தது! பாச மலரின் இதழ்கள் எவ்வளவு மென்மையானவை. அந்த மலர் கூடான கண்ணீர்த் துளிகளால் நனையும் போது எவ்வள வு குளிர்ச்சி பெறுகிறது, அத்தகைய ஒரு அன்பு மலராகத் தான் காட்சி தந்தாள் பரிமளம். அந்தக் காட்சி அந்த இடத்திலே அதிக நேரம் அனுமதிக்கப்படவில்லை. நின்று கொண்டிருந்த கிழவர் பரிமளத்தின் கையைப் பிடித்துப் பர பரவென இழுத்து, அவள் திமிறி ஓட முயன்றும் — விடாமல் அவளது கண்களை இறுகக் கட்டி விட்டார், தன் மேலிருந்த துண்டு வேட்டியினல்! கண்ணைக் கட்டியது போக மிச்சமிருந்த துண்டைக் கிழித்துக் கொண்டார்.

பரிமளம், "அய்யோ! எங்களை விட்டுவிடு! பாவி! பாவி!" என்று கத்தினாள். மிச்சத் துணியால் கிழவர் பரிமளத்தின் கைகளையும் பின்புறமாக வைத்து கட்டி விட்டார். பரிமளம் அலறினாள், துடித்தாள், துவண்டாள். "சப்தம் செய்தால் செத்துவிடுவாய்!" என்று கிழவர் பயங்கரமாக அதட்டினார். சற்று முன்பு, சாந்த சொரூபியாகத் தெரிந்த அந்தக் கிழவரா இவர்? உலகத்தைப் படித்தவர் போல ஆகாயத்தை நோக்கிப் பிரார்த்தனை புரிந்த அந்தக் கிழவர் தானா இவர்? பரிமளத்திற்கு எதுவுமே புரியவில்லை, வருவது வரட்டும் என்று எண்ணிக் கொண்டாள். துரையைப் பார்க்க முடியாமல் தன் கண்கள் மூடப்பட்டு விட்டதை நினைத்து அழுதாள். அந்த அழுகை, அவள் கண்ணை மூடியிருக்கும் துணியை நனைக்கத்தான் பயன்பட்டது போலும்—கிழவரின் இருதயத்தை நனைத்திடப் பயன் படவில்லை. "அத்தான்! அத்தான்!" என்று மட்டும் மெதுவாக முணகினாள். கண்ணைத் திறக்க முடியாமல் மெய் மறந்து கிடக்கும் காதலன், அவனைப் பார்க்க முடியாமல் கட்டுண்டு தவிக்கும் காதலி அந்த இருவரிடையே கிழவனார். அவருடைய முகத்திலே நிலவொளி லேசாகப் படர்ந்திருந்தது. சுருக்கம் விழுந்த அவர் கன்னங்களில் கண்ணீர்த் துளிகள் உருண்டு திரண்டு நின்றன.

சாந்தமும்—அமைதியும்—அடக்கமும்—கலந்த வார்த்தைகளை ஆகாயத்திலே மேயும் மேகக் குழுவை நோக்கி அனுப்பியவர்—திடீரென பயங்கர மனிதனாக மாறி—அந்த மாற்றமும்—உடனே அகன்று அவரால் பாதிக்கப்பட்டுக் கிடக்கும் அந்த இருவரிடையே நின்றுகொண்டு கண்ணீர் விடுகிறார்! ஏன்? சுருங்கிய கன்னத்திலே உள்ள கோடுகளில் பாதரசம் போல உருண்டோடும் நீர்த் துளிகள் அவரது தும்பைப் பூ தாடியிலே படியும் போது காலைத்

தளிரில் தூங்குகின்ற பனித் துளியை ஞாபகப் படுத்து கின்றன. நீண்ட மூக்கும், ஆழத்திலே இருக்கும் விழி களும், அமைதியான அசைவும் படைத்த அந்தக் கிழவர், திடீரென கோர சுபாவம் கொள்வானேன் — அடுத்த விநாடியே அதே இடத்தில் நின்றுகொண்டு அழுவா னேன். இந்தக் கேள்விகளுக்குப் பதில் அவருக்கே தெரிய வில்லே போலும். அதைத்தான் அவருடைய முகம் விளக்கு கிறது. வழியும் கண்ணீரைத் துடைக்காமலே அவர்களே கிழவர் நோக்கினர். அங்கவஸ்திரத்தை எடுத்து பரிமளத்தின் கைகளையும், கண்ணையும் கட்டிவிட்டாராகை யால் அவருடைய மேலுடம்பை குளிர் காற்று நேரடியாகத் தாக்கியது. எண்ணி விடக்கூடிய அளவுக்கு எலும்புகள் விலாப் புறங்களிலே! இடுப்பில் கட்டியிருந்த வேட்டியின் மேல் முனையிலே ஏதோ ஒரு முடிச்சு இருந்தது. அதை யும் இடுப்பில் பத்திரமாக சொருகிக் கொண்டிருந்தார். ஒரு அழுத்தமான தாள் உரை (கவர்) யும் இடுப்பில் வேட்டிக்கு வெளியே சற்று தலே நீட்டிக் கொண்டிருந்தது. கிழவர் அவைகளே நன்றாக சரி செய்து கொண்டார். கட்டுண்டு கிடக்கும் பரிமளத்தையும் மயக்கமுற்றுக் கிடக்கும் துரை யையும் குனிந்து பார்த்தார். அப்படிக் குனியும்போது அவரது கண்களிலேயிருந்து சொட்டிய கண்ணீர், பரிமளத் தின் காலிலே விழுந்தது. பரிமளம் துடிப்போடு துடிப் பாக காலே நகர்த்திக் கொண்டாள்.

"யார்?"

"தன் காலிலே ஏது நீர்த் துளி:"

"எங்கிருந்து விழுந்தது?"

இந்தக் கேள்விகளே யெல்லாம் உள்ளடக்கிய ஒரே ஒரு சொல்லே—ஆம்—அத்தான் என்ற சொல்லே உதிர்த் தாள். பதில் இல்லே. கிழக் குரல் விம்மி யெழுந்தது.

"எந்தக் குற்றமும் எனக்குச் செய்யாத செல்வங்களே! மழலைகளே! பழம் பேசுகிறது கேளுங்கள்!

பரிதாபத்திற்குரிய கிழம் கூச்சலிடுகிறது; செவியைத் திருப்புங்கள்!

கண் திறக்க முடியாமல் இருக்கின்ற கண்மணி! உன் அன்பன் மயக்கம் தெளிந்ததும் அவனிடமும் நான் சொன்னதைச் சொல்... என்னுடைய சாவுக் கண்ணீர் நன்மைத் தருவை செழித்து வளரச் செய்யப் பயன்படாதா என்று எத்தனையோ முறை எங்கியிருக்கிறேன். ஆனால்; இதோ என் வாழ்வின் கண்ணீர் உங்களை வாட்டி வதைத்து விட்டதை நான் உணருகிறேன். என்னை மன்னித்து விடுங்கள். உங்கள் அப்பனை மன்னிப்பது போல என்னை மன்னித்து விடுங்கள்!

நன்மை யொன்றை—யாரும் செய்ய முடியாத விதத் திலே செய்ய வேண்டும் என்று எத்தனையோ நாளாய்த் தவித்து நிற்கிறேன். சுயநலமும் வஞ்சகமும் — சூதும் பொறுமையும் வேலிகளாய் அமைந்துவிட்ட மனிதனின் வாழ்க்கைத் தோட்டத்திலே—நன்மை மலர்களே மலரக் கூடாதாமே! அப்படி ஒரு கடும் சட்டம் கடவுள் எனப் படுவோன் விதித்து விட்டானாமே! ஆகவே, நான் செய்ய வேண்டுமென்று எண்ணியிருக்கிற நன்மையை சுருட்டிக் கொண்டு, கடல் கடந்து போகிறேன். அது என்ன நன்மை என்று என்னைக் கேட்டு விடாதீர்கள். நீங்கள் யாரோ எவரோ—நான் எப்படி உங்களிடம் தைரியமாகச் சொல்ல முடியும். நீங்கள் என்னைப் பார்ப்பதே கூடாது— அது மிகப் பயங்கரமானது என நினைக்கிறேன் நான்! ஆகவே நான் அந்த நன்மையைப் பற்றிய உண்மையைச் சொல்ல மாட்டேன். அந்த உண்மை யாருக்குமே தெரியா மல் அழிந்து விடத்தான் போகிறது போலும்! அந்த

உண்மை அழிந்தாலும் கவலையில்லை—நான் வீணாக அழிக்கப்பட்டு, அந்த உண்மை, உலுத்தர்கள் கையிலே சிக்கி விட நான் அனுமதிக்க மாட்டேன். அதற்குத்தான் இந்த நாட்டை விட்டே வேறு நாடு ஓடுகிறேன். யாராவது என் மனம்போல ஒரு மனிதன் கிடைப்பானேயானால்—அவனிடம் அந்த உண்மையை ஒப்படைத்துவிட்டு, சாவை கட்டிப் பிடித்துக் கொள்வேன். என் சாவுக் கண்ணீரை நன்மையின் மீது அபிஷேகிப்பேன்! நான் எடுத்துக் கொண்ட பெரிய முயற்சியில் நீங்கள் எப்படியோ குறுக்கே வந்து விட்டீர்கள். வேண்டுமென்று வரவில்லை — அது தெரிகிறது! ஆனாலும் என் தற்காப்புக்காக உங்கள் எதிரியாகிவிட்டேன் நான். சென்று வருகிறேன், என்னை மன்னித்து விடுங்கள்! தயவுசெய்து இங்கு நடந்த இந்த சம்பவத்தை மறந்து விடுங்கள். யாரோ ஒரு கிழப்பயல்—பொக்கை வாய் திறந்து பொய்யும் புளுகுமாக உளறினான் என்று நினைத்துக்கொண்டு—உங்கள் காதல் காரியத்தில் ஈடுபடுங்கள்! அதோ — அந்த வாலிபன் அழகானவன் தான்—நல்லவனுயுமிருக்கிறான். ஆனல் அவன் காதல் வலையில் சிக்கியவனையிற்றே—காதலர்களை எனக்குப் பிடிக்கவே பிடிக்காதே! அவர்களை நம்பி நான் எப்படி இந்தப் பெரிய காரியத்தை ஒப்படைப்பது! கூடாது கூடாது! நான் வருகிறேன்—வாழப்பிறந்த காதலர்களே! உங்களுக்காகத்தான் சரபோஜி மகாராஜன் இந்த சல்லாப மண்டபத்தை கட்டிவைத்திருக்கிறான் என்று எண்ணிக்கொண்டு கேளிக்கை நடத்துங்கள்! அவன் ஏன் இதைக் கட்டினான் என்று உங்களுக்குத் தெரிய வேண்டிய அவசியமென்ன இருக்கிறது.

கிழவர் இப்படி தன் மனம் போன போக்கில் ஏதேதோ பேசிக்கொண்டிருக்கும் போது பேச்சின்

பாதியிலேயே துரை விழித்துக் கொண்டான்; என்ருலும், முழுவதையும் கேட்டுவிட வேண்டுமென்ற ஆவலில் மயக்க முற்றவன் போலவே கிடந்தான். ஆனல்; கிழவர் — "சரபோஜி, இதை என் கட்டினன் தெரியுமா?" என்று ஆரம்பித்த போது, "என்?" என்று கேட்டுவிட இதழ் அசைத்து விட்டான். உடனே அந்த வார்த்தையை அடக்கிக்கொண்டு, சமாளிப்பதற்காக சிறிது முணகினன். அவ்வளவு தான்; கிழவர் இனி அங்கு நிற்கக்கூடாது என்ற முடிவுடன், அவசர அவசரமாக, கீழே இறங்கினர். அவர் கீழே இறங்கி விட்டார் என்பதைத் தெரிந்து கொண்ட துரை, உடனே எழுந்து, தலையை சரி செய்து கொண்டு, பரிமளத்தின் கட்டுக்களை அவிழ்க்க ஆரம்பித் தான். அதுவரையில் அதிசயத்தோடு கிழவரின் வார்த் தைகளைக் கேட்டுக் கொண்டிருந்த பரிமளமும், தன் அத் தானின் கரம்பட்டு புத்துணர்ச்சி பெற்ருள். இறந்து போய் மீண்டும் புது ஜென்மம் என்ற கற்பனை உண்மை யாகவே நிகழ்வது போல இருந்தது அவர்களுக்கு! பரிமளத்தின் கட்டப்பட்ட கரங்களை அவிழ்த்து விட்டு, அந்தக் கரத்தை எடுத்து முத்தம் கொடுத்தான் துரை. சுவைத்தளித்த அந்த முத்தத்தை பரிமள சுந்தரியும் தேனில் துவைத்தெடுத்த பலாச்சுளை எனக் கருதி பெற் றுக் கொண்டாள். கட்டுண்டு கிடந்த அவள் கண்களுக் கெல்லாம் முத்தம் கிடைத்தது. பரிமளம் கண்ணைக் கட் டிய அந்தக் கிழவரை வாழ்த்தினுள்.

முத்தத்திலேயே முடிந்து விடவில்லை — அந்த நேரம், துரை துள்ளி எழுந்து மனேராவின் பலகணி வழியாகக் கீழே பார்த்தான். பரிமளமும் பார்த்தாள். கிழவர் கடலோ ரத்தில் சென்று நின்ருர். முதலிலே மனேராவை நோக்கி வந்த மனிதர்கள் அவரிடம் வந்து சுற்றி நின்ருர்கள்.

"இவர்கள் நம்மைத் துரத்திய மூடர்கள் அல்ல!" என்ருன் பெருமூச்சுடன் துரை!

"கிழவர் பேசியதை யெல்லாம் — கேட்டீர்களா அத்தான்?"

"பாதிக்குமேல் கேட்டேன். புரிந்தும் — புரியாமலும் கேட்டேன்."

"முழுதும் கேட்ட எனக்கும் அப்படித்தான்!"

"இரு இரு! அதை கவனிப்போம்."

கடலோரத்தில் நின்ற கிழவர், வந்த ஆட்களுடன் ஏதோ பேசிக்கொண்டிருந்தார். கரையிலிருந்து சுமார் இரண்டு மைல் தூரத்தில் ஒரு சிறு வெளிச்சம் தோன்றி மறைந்தது—நெருப்புக்குச்சியை கிழித்து யாரோ மேலே எறிந்தது போலிருந்தது அந்த வெளிச்சம்! ஆமாம், அப்படித்தான்!

கரையில் நின்றவர்களில் ஒருவனும் அதேபோல நெருப்புக்குச்சியைக் கிழித்துத்தான் மேலே எறிந்தான்.

"என்ன இது?" என்றாள் பரிமளம்.

"இதுதான் கள்ளத்தோணி என்பது! நெருப்புக் குச்சி வெளிச்ச அடையாளத்தில், அந்தத் தோணி கரைக்கு வரும் பாரேன்!" என்றான் துரை.

இருவரும், தோணியைப் பார்த்தபடியே நின்றார்கள். கிழவர் அங்குமிங்கும் உலவிக் கொண்டேயிருந்தார்.

"பொழுது விடியும் நேரமும் நெருங்கி விட்டது போலிருக்கிறதே அத்தான்; நான் எப்படி வீட்டுக்குப் போவது?"

"கொஞ்சம் பொறு! இதைப் பார்ப்போம், இப்போது நாம் கீழே இறங்கினால், கடலிலேயே தூக்கிப் போட்டு விடுவான் அந்தக் கிழவன்!"

பரிமளம் துரையின் தோளில் முகத்தை அழுத்திய படியே கரையைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

தோணி கரைக்கு அருகே வந்து நின்றது. ஆட்கள் எல்லாம் தோணியிடம் ஓடினர்கள். கிழவர் நெருப்புக் குச்சியைக் கிழித்து, தன் இடுப்பில் உள்ள தாளை ஒரு முறை எடுத்துப் படித்துக் கொண்டார். தாள் உறையிலே முகப்பில் — புதையல் — என்ற தேய்ந்த எழுத்துக்கள் தெரிந்தன. தீக்குச்சியை கீழே எறிந்துவிட்டு, உறையை நன்றுகச் சொருகிக் கொண்டு, வேட்டியின் முனையிலிருந்த சிறு முடிச்சையும் சரி பார்த்துக்கொண்டு, அவர் தோணியிடம் போனர். படகோட்டி, அவரை மெதுவாகத் தோணியில் ஏற்றி விட்டான், ஏறிக்கொண்டார். மற்ற ஆட்கள் ஏதோ பல மூட்டைகளை படகில் அவசர அவசரமாக ஏற்றினர்கள். படகிலிருந்தும் சில மூட்டைகள் துரிதமாக கரைக்கு இறக்கப்பட்டன. பின்னர் படகு நகர்ந்தது — மீண்டும் கடலை நோக்கி பயணம் ஆரம்பமாயிற்று அந்தத் தோணிக்கு!

பரிமளமும், துரையும் அந்த காட்சியைப் பார்த்துக் கொண்டே நின்றார்கள்.

சாது போலத் தோன்றினர். பின்னர் மிரண்டார். அதன் பின் நன்மை செய்யப் பூண்ட கோலம் இது என்றார். கடைசியில் கள்ளத் தோணியிலும் ஏறி விட்டார். யார் இவர்?

இந்த நினைவுகள் காதலரை சிறிது நேரம் மௌன மாக்கியிருந்தன. படகு சிறிது தூரம் நகர்ந்து இருட்டில் மறைந்துகொள்ளத் துவங்கியதும், பரிமளம் மறுபடியும் வீட்டுக்குப் போகும் பிரச்சினையில் ஈடுபட்டாள்.

"நல்ல இரவு இது. கோயிலுக்குச் சென்றோம். அங்கே கொம்பேறி மூக்கன் பாம்பு போல ஒருவன் வந்தான். கோபுரத்துக்கு வந்தோம் — விசித்திர மனிதனைக் கண் டோம். நினைக்காத இடையூறுகள் அல்லவா — யாரும்

எதிர்பாராமலே வருகின்றன!"

என்று துரை பரிமளத்தின் விரல்களைத் தன் விரல்களால் கோர்த்துக்கொண்டு, கொஞ்சினான்.

"வாருங்களத்தான் போவோம்!" என்று அவசரத்தைதக் காட்டினாள் அவள்.

"நான் இப்போது வரக்கூடாது பரிமளா! நாம் இருவரும் சென்றால்—அந்தக் கோயிலடி ஆள் இருக்கிறானே அவன் நம்மை அடையாளம் கண்டுபிடித்து விடுவான்; அதனால் நீ மட்டும் புறப்படு! பயப்படாமல் புறப்படு—பொழுதும் விடியப் போகிறது!"

"அதுதானே பயமாயிருக்கிறது—பொழுது விடிந்து விட்டால் நான் எப்படி ஊருக்குள் நுழைவது? வீட்டில் என்ன நடக்குமோ?"

"அதெல்லாம் வீட்டில் ஒன்றும் நடக்காது பரிமளம்! ஏதாவது பெற்றோர்கள் சீறினால் — நான் சொல்லிக் கொடுத்த அந்தக் கதையை முழு சாமர்த்தியத்தோடு சொல்லிவிடு! அதையும் மிஞ்சி, அப்பா அம்மா—ஆத்திரத்தைதக் கொட்டினால், விஷயம் வெளிச்சமாகி விட்டால்—உடனே நீ ஆரம்பித்து விடு! காதலனைத்தேடி நான் சென்றதிலே என்னப்பா தப்பு? இதோ மாட்டியிருக்கிறீர்களே—வள்ளி மணவாளன் படம்—அந்த வள்ளி தினைப் புனத்தில் தேடிக்கொண்ட காதலன் தானே அந்த முருகன்? இப்படிக் கேள் அவர்களிடம். சங்க இலக்கியத்திலே இருக்கிற காதல் நிகழ்ச்சிகளை யெல்லாம் உதாரணம் காட்ட ஆரம்பித்து விடாதே! சங்க இலக்கியம் என்றால் உன் பெற்றோர்கள்—ஏதோ ஒரு ஊர் என்று எண்ணிக் கொண்டிருப்பார்கள்."

"சரி! சரி! வருவது வரட்டும்—நான் புறப்படுகிறேன்—எப்போது சந்திப்பது?"

"சந்திப்போம் கண் ணே — கோயிலடியாயினும்— கோபுரமேறியும்—அந்த இருவர் கண்ணிலும் படாத இடத்திலே அல்லவா இனி சந்திக்க வேண்டும்!"

"சொல்லுங்கள். நேரமாகிறது!"

"அதே கோயிலில்—அதே நேரத்தில்—வரும் வெள்ளிக்கிழமை சந்திப்போம்—வா போவோம்!"

4

கிழவர் ஏறிக்கொண்ட தோணி கடலைக் கிழித்தபடி போய்க் கொண்டிருந்தது. பொழுது விடிய இன்னும் சில மணி நேரமே இருந்த காரணத்தால் வாடைக் காற்றின் கொடுமை அதிகமாகவே யிருந்தது. படகில் அடுக்கப் பட்டிருந்த மூட்டைகளின் இடையே அவர் கோழி போல் உடலைச் சுருட்டிக் கொண்டிருந்தார். படகில் இன்னும் சிலரும் இருந்தார்கள். ஒரு பயங்கர முகம் படைத்த கிழவன், ஒரு காலத்தில் கட்டுமஸ்தாக இருந்தது இந்த தேகம், என்று எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தது அவனது உடலமைப்பு. அவன் பேசும்போது கேட்கச் சகிக்கவில்லை. அவ்வளவு கரகரப்பு. தாடிக்காக வளர்ந்திருக்கும் ரோமத்தையும் மீசையோடு இணைத்திருந்தான். பெரிய மீசைகள் இரண்டும் தோள்பட்டையில் உள்ள ஆழமான குழிகளை தொடுவதற்கு முயற்சிப்பது போல தொங்கிக் கொண்டிருந்தன. படகில் அந்தப் பயங்கரக் கிழவனுடைய சப்தம்தான் பெரும் சப்தமாயிருந்தது. மற்றும் சில வாலிபர்கள் தங்கள் வேலைகளில் அக்கறை காட்டிக் கொண்டிருந்தார்கள். படகின் பாயை காற்றுத் திசைக்கு

ஏற்ரூற்போல திருப்பிவிட்டு பாதையை சரி செய்து கொள் வதிலே அந்த வாலிபர்கள் அதிக சிரமம் எடுத்துக் கொண்டார்கள்.

"டேய்! இருளப்பா — ஜாக்கிரதைடா! ஜாக்கி ரதை!—படகைக் கவிழ்த்துடாதே —சோம்பேறித்தனமா நின்னு—கோட்டை விட்டீன்னு.....அவ்வளவுதான்..... நம்ப நீஞ்சி வந்துடலாம்னு நினைச்சுக்காதே! உடமைக் காரன் நம்மைக் கொன்று விடுவான்! ஆமாம்....."

பயங்கரக் கிழவன் திருப்பித் திருப்பி அதையே சொல்லி விகாரக் குரலெடுத்து கத்திக் கொண்டிருந்தான். கோட்டான், எருமையின் தொனியைக் கற்றுக்கொண்டு, கூவிப் பார்ப்பதுபோல் இருந்தது அந்தக் கிழவனின் பேச்சு. அவ்வளவு கோரமான தொண்டையை அவன் திறக்காமலாவது இருந்தானே? அதுதான் இல்லை. அந்த வயதில் எவ்வளவு சுறுசுறுப்பாக அந்தப் படகிற் குள்ளே ஓடியாடி வேலை செய்தானே; அவ்வளவு சுறு சுறுப்பாக பேசிக் கொண்டுமிருந்தான். கடலில் கூட பெரிய அலைகள் அடுத்தடுத்து வர சிறிது நேரமாகும். ஆனல் அவனது உரத்த குரலோ, நிற்காமலே ஒலித்துக் கொண்டிருந்தது.

"ஏய் — இருளப்பா!"

"டேய்! கொம்பேறி — தூங்கிடாதே!"

"ஏண்டா — பட்டாணி! — எதுக்குடா நீ வந்தே? மடையா! வேலையிலே கவனமாயிருடா, விதியத்தவனே!"

அவனது இந்த அதிகாரக் குரலிலே சிந்தனையை செலுத்தியவாறு பயணம் நடத்திக் கொண்டிருந்தார் கிழவர். அவருடைய பொறுமையையும் சோதிக்கிற அள வுக்கு அவன் கத்திக்கொண்டே யிருந்தான்.

"எப்பா! ஐயப்பா! கொஞ்சம் பேசாமத்தான் இரேன்!" கிழவர் சற்று வெறுப்புடன் கூறினர். உடனே அந்த விகார ரூபக் கிழவன்; ஆம் — ஐயப்பன் — கிழவரைப் பார்த்து ஒரு சிரிப்பை வெளியிட்டான். அந்த சிரிப்பிலே வரட்டுத்தனம் பளிச்சிட்டதே தவிர வேறெந்த அர்த்தமும் காணப்படவில்லை.

மூட்டையடியில் முடங்கிக் கொண்டிருந்த கிழவரை நோக்கி வந்தபடியே ஐயப்பன், "ஓய் வேதாந்தி! என்ன கூச்சல் போடுறே? என்னய்யா சேதி? ஆங்?"

என்று குறும்பாகக் கேட்பதாக நினைத்துக் கொண்டு அசட்டுத்தனமாகக் கத்தினன்.

"வேதாந்தியல்லப்பா என் பெயர்! மாயாண்டி..... என் பெயர்."

"கிழக் குறும்பு மட்டும் உமக்கு விடாதய்யா!" என்று சிரித்தபடி அருகே ஒரு மூட்டையில் அமர்ந்தான் ஐயப்பன்.

"நீ நல்ல வாலிபன் என்பது உனது நினைப்பு போலிருக்கிறது" என மெதுவாகச் சொல்லிக்கொண்டு, கிழவர் அசதியை உதறிக் கொண்டார். சிறிது நிமிர்ந்து உட்கார்ந்தார்.

"இப்போதே இப்படி தவிக்கிறீரே அய்யா! — பாக்கி தூரம் எப்படிப் போய்ச் சேருகிறது. செத்துடுவீரா வழியிலேயே?"

ஐயப்பனின் இந்தக் கிண்டலிலே—கிழவனின் சிந்தனை சிறிது நேரம் மிதந்தது.

"செத்து விட்டால் என்ன; நல்லதுதான்! கடலில் செத்தால் மீன்களுக்காவது இந்த உடல் ஆகாரமாகக் கிடைக்கும் —"

"கடல் மீன் எல்லாம்—ஆகாரமில்லாமல் தவிக்குது! இவருதான் உடலைத் தருமம் பண்ணப் போறாராம்! மீனு உன் பிணத்தை எப்படி அய்யா சாப்பிடும்? மீனுகளுக்கு எலும்பு கடிக்கத் தெரியாதே; நாய் மாதிரி" (மாயாண்டி சிரித்துக் கொண்டார்).

"உன் உடம்பிலே ஒட்டிக் கொண்டிருக்கிற சதைத் திமிரிலே இப்படிப் பேசுகிறாய் கிழவா நீ! எலும்பு மனிதனா நான்? இருக்கட்டும்! இருக்கட்டும்! இந்த எலும்பின் மதிப்பு உனக்குத் தெரியாது!"

"யானைத் தந்தமாக்கும்; இறந்தாலும் ஆயிரம் பொன் பெற!"

"ஆயிரமென்ன; இந்த எலும்பு மட்டும் சாகும்போது ஒழுங்காகச் செத்தால் எத்தனையோ லட்சம் பசும்பொன் பெறும்!"

"ஒழுங்காகச் சாவதென்றால் என்னய்யா?" மாயாண்டிக் கிழவர் பேச்சை வேறுபக்கம் திருப்பிவிட முயன்றார்.

"அதாவது ஐயப்பா! கஷ்டப்படாமல் சாகவேண்டும் நிம்மதியாக—என்கிறேன்."

"உம்—அப்பேற்பட்ட மகான் ரமணரிஷிக்கே புத்து நோய் வந்து கஷ்டப்பட்டு செத்தாரு! நீயும் நானும் எப்படி சாகப் போகிறோமோ? ஆமாம்—மாயாண்டி! அப்படியே கஷ்டப்படாம சாகிறதா வச்சுக்க; அதுக்கும் லட்சக் கணக்கான பசும்பொன்னுக்கும் என்ன சம்பந்தம்?"

"சும்மா—விளையாட்டுக்குச் சொன்னேன். நான் தான் ஒரு பைத்தியக்காரன் என்று அடிக்கடி சொல்வாயே—"

"ஓய் ஓய்! பெரிய மனுஷா! பொய்! பொய்! ஜாக்ரதை—உண்மையைச் சொல்லி விடும்—இல்லே—கடல்!—ஞாபகம் வைத்துக் கொள்ளும்—!"

"ஏ ஏ! என்ன செய்வாய்?"

"படகோட கவிழ்த்து விடுவேன் ஆளை! ஆமாம்! கேள்விப்பட்டிருப்பீரே; இந்த எடத்தில் தானே—மருங்கப் பள்ளத்து கொல்லர் குடும்பத்தையே கடல்லே கவிழ்த் தாங்களாம்;"

"அட அதுகூட தெரியுமா உனக்கு! நீ தான் பாத்தியா?"

"நான் எப்படி பார்க்க முடியும்—நான் தசரத மகா ராஜனு? அறுபதாயிரம் வருஷம் உயிரோட இருந்து அறுநூறு தலைமுறைக் கதையை நேரிலே பார்க்க? மருங்கப்பள்ளத்து கொல்லர் கதை நடந்தே ஐநூறு வருஷம் இருக்கும் என்று சொல்றுங்க!"

"ஆமாம்—ஆமாம்! அப்படித்தான் நானும் கேள்விப் பட்டேன்."

"என்—மாயாண்டி! மருங்கப்பள்ளத்து புதையலைப் பற்றிப் பலரும் பலவிதமாச் சொல்றுங்களே — உண்மை தான் என்ன?"

"உண்மை என்ன இருக்கு? கடல் நீல நிறமா இருக் கிறது உண்மை—அந்த உண்மையை வைத்துக்கொண்டு அதற்குப் பல புனை கதைகளை உண்டுபண்ணுகிறார்கள்! சூரிய சந்திர கிரகணங்கள் உண்டாவது உண்மை! அந்த உணமையை அடிப்படையாக வைத்து, அதறகுப பல புராணக் கதைகள் எழுதியிருக்கிறார்கள்! இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையிலே மலைப்பாறைகள் தொடர்ச்சி யாக இருப்பது உண்மை. அந்த உண்மையை மூலமாக வைத்து, வானரங்கள் கட்டிய பாலமென்று கதை கட்டு கிறார்கள்! காக்கை ஒரு கண்ணால் பார்ப்பது உண்மை! அந்த உண்மை யென்னும் திரையிலே கற்பனை வர்ணத் தைக் குழைத்து, தெய்வீக தூரிகை கொண்டு—இந்திரன்

மகன் சயந்தன் காக்கை உருவமெடுத்து, சீதையின் அங்கத்தை சுவைத்துப் பார்த்தான்; அதனால் கோபங் கொண்ட ராமர், அருகம்புல்லை அம்பாக்கி—சயந்தனின் கண்ணைக் குத்தினர்—அது முதல் காக்கை குலத்திற்கே ஒரு கண் இல்லை என்று புனைந்துரை ஓவியம் தீட்டி விட்டார்கள்!

அணிலின் முதுகிலே வெளுத்துப்போன வானவில் லைப்போல கோடுகள் இருக்கின்றன என்பது உண்மை!

அந்த உண்மைக்கு உரைக்க வந்த விளக்கம் தான்; ராமர் அணிலைத் தடவிக் கொடுத்தபோது விழுந்த விரலின் அடையாளங்கள் என்ற கட்டுக்கதை! அனுமார்களோடு சேர்ந்து கொண்டு அணிலும் பாலம் கட்டியதாம்—அதனால் அதை ராமர் பாராட்டினராம்! இப்படியெல்லாம்; கண்ணுக்குத் தெரிந்த உண்மைகளை வைத்துக் கொண்டும்—கண்ணுக்குத் தெரியாத கற்பனைகளை வைத்துக் கொண்டும்—யூகங்களை அடிப்படையாக அமைத்துக் கொண்டும்—எழுந்த கதைகள் ஏராளம்! ஏராளம்! அதிலும் கேட்பதற்கு உன்னைப்போல எமாளிகள் இருந்தால் பிறகு சொல்லவா வேண்டும்—ஏமாற்றுகிறவனுக்கு வேட்டைதான்!"

"அப்படின்னு—கதை சொல்றவன் எல்லாம்—ஏமாத்துறவனா?"

"எல்லோரும் அல்ல; கதைக்காக கதை சொல்லுகிறவர்களும் இருக்கிறார்கள். ஏமாற்றுவதற்காகவே கதை சொல்கிறவர்களும் இருக்கிறார்கள்.—ஆனால், மருங்கப்பள்ளத்துக் கதையிருக்கிறதே; அதை நம்பி பலர் ஏமாந்திருக்கலாமே தவிர, ஏமாற்ற வேண்டுமென்பதற்காக யாரும் இயற்றிய கதையாக இருக்க முடியாது! ஆழ்ந்து

பார்க்கப் போனால், அப்படி ஒரு கதை நடந்திருக்கலாம் என்றும் நம்ப இடமிருக்கிறது!"

"மாயாண்டி!.....அந்தக் கதையைச் சொல்லுமே இப்போது — நானும் பலரிடம் கேட்டிருக்கேன் அந்தக் கதையை—உமது வாயாலும் கேட்கிறேன்."

"என் வாயால் கேட்க முடியாது! உன் காதாலேயே கேளப்பா!"

ஐயப்பன் அசட்டுத்தனமாக சிரித்துவிட்டு பக்கத்திலிருந்த மூட்டையை அவிழ்த்து அதிலிருந்து ஒரு வெங்காயத்தை எடுத்துக் கடித்துக் கொண்டான்.

"எல்லா மூட்டைகளும், வெங்காயம் தானே?" என்று கேட்டார் கிழவர்.

"ஆமாம்—கதையைச் சொல்லும் அய்யா!" என்று சலித்துக் கொண்டான்—ஐயப்பன்.

"சொல்கிறேன்—உம்!.....வெங்காயத்துக்கு பதில் என்ன கொண்டுவரப் போகிறீர்கள்?"

"வெங்காயத்து பண்டமாத்து — தேங்காய் எண்ணை கொண்டு வருவோம்! ஓய், கிழவா! பேச்சை மாத்தாமல் கதையைச் சொல்லும்!"

"சொல்லுகிறேன்" என்று கனைத்துக் கொண்டார் மாயாண்டி!

"டேய்! பசங்களா! எல்லாரும் ஒழுங்கா கவனிச்சுப் போங்க—கவிழ்த்து விட்டுடாதிங்க!" என்று ஆட்களை ஒருமுறை அதட்டிவிட்டு, ஐயப்பன் கதை கேட்கத் தயாரானான். கிழவரும் ஆரம்பித்தார்.

* * * *

நானூறு ஐநூறு வருடங்களுக்கு முன்பு, மருங்கப் பள்ளம் பிரதேசம் எல்லாம் காட்டுப் பகுதியாகவே இருக்கு மாம். ஒரு ஆட்டிடையர், காட்டுப் பகுதியிலே தன் ஆடு களை ஓட்டிக்கொண்டு சென்று வழக்கமாக தழை வெட்டிப் போடுவாராம். ஒருநாள் மரத்திலேறி ஆடுகளுக்கு தழை வெட்டிப் போடும்போது அவரது அரிவாள் கூர் மழுங்கி யிருந்ததை உணர்ந்தார். கிளைகளையோ, தழைகளையோ சுலபமாக வெட்ட முடியாதபடி மழுங்கி யிருந்ததால், அந்த அரிவாளை நன்கு கூராக்கிக் கொள்வதற்காக, மரத்தடியில் கிடந்த ஒரு கல்லில் தீட்டினர். தீட்டத் தீட்ட அரி வாள், கூர்மை பெறுவதற்குப் பதிலாக மழுங்கிக் கொண்டே வந்ததாம். இடையருக்கு ஒன்றும் புரிய வில்லை. அரிவாளை எடுத்துக்கொண்டு அந்த ஊரிலே உள்ள கொல்லர் வீட்டுக்குப் போனர். "தீட்டத் தீட்ட கூர் மழுங்குகிறது இந்த அரிவாள்!" என்று சங்கடப் பட்டுக் கொண்டார்!

"ஆமாம்—சிலருக்கு படிக்கப் படிக்க புத்தி மழுங்குவ துண்டு" என்று அந்தக் கொல்லர் பதில் சொன்னாரோ என்னமோ தெரியாது. அரிவாளை வாங்கி, உலையில் வைத்து பழுக்கக் காய்ச்ச ஆரம்பித்தார். காய்ச்சும் பொழுது, அரிவாளின் ஓரமெல்லாம் தங்க நிறமாக காட்சி யளிப்பதைக் கண்டார். அரிவாளில் தங்கம் ஏறியிருக் கிறது என்பதை உணர்ந்து கொண்டார், அந்த யூகமுள்ள கொல்லர்! ஆகவே தந்திரமாக இடையரை மறுநாள் வரும்படி சொல்லி அனுப்பி விட்டார். இடையர் போன தும், அரிவாளை பக்குவமாகக் காய்ச்சிடவே அது முழுவ தும் தங்கமாக மாறிவிட்டது. கொல்லருக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. அதை எடுத்து ஒளித்து வைத்துவிட்டு, வேறு ஒரு அரிவாள் அதேபோல செய்து, மறுநாள் வந்த இடையரிடம் கொடுத்தார். இடையரும் அதை சந்தோஷ

மாக வாங்கிக் கொண்டார். சந்தோஷத்தில் இருக்கும் இடையரிடம், கொல்லர் மெதுவாகப் பேச்சை ஆரம்பித்து, நேற்றைய தினம் இடையர் எந்தக் கல்லில் அரிவாளைத் தீட்டினர் என்பதைக் கேட்டார்.

இடையரும், கொல்லருக்கு அந்தக் கல்லைக் காட்டுவ தாக அழைத்துப் போனர். கொஞ்சம் கஷ்டப்பட்டுத் தேடி அந்தக் கல்லையும் அவருக்குக் காட்டினர். கொல்லர் அந்தக் கல்லை, அலட்சியமாகப் பார்த்துவிட்டு வீடு திரும் பினர். திரும்பியவருக்கு வீட்டிலே இருப்பு கொள்ள வில்லை. அன்றிரவே அந்தக் காட்டுப் பகுதிக்குள் நுழைந்து இடையர் காட்டிய அந்தக் கல்லை யாருக்கும் தெரியாமல் தன் வீட்டுக்குள்ளே கொண்டு வந்து சேர்த்தார்.

மறுநாள் காலையிலிருந்து கொல்லருக்கு இரும்பு பொறுக்கும் வேலைதான்! பொறுக்கிய இரும்புகளை அந் தக் கல்லிலே வைத்துத் தேய்ப்பதும் — பிறகு அவை களைப் பழுக்கக் காய்ச்சிப் பசும்பொன் ஆக்குவதும் அவ ரது அன்றாடத் தொழிலாகி விட்டது. இப்படியாக லட்சக் கணக்கிலே பொன்னைக் குவிக்க ஆரம்பித்தார். கொல்ல ருக்குப் பொன் குவியும் ரகசியம் யாருக்கும் தெரியவில்லை. பொன் செய்யும் கொல்லருக்கு, அழகிய பெண்ணொன்றும் உண்டு. ஐஸ்வரியச் சீமாட்டி கொல்லர் மாறியதும் அவர், தனது மகளை காரை வேளாளர் என்னும் உயர் ஜாதியில் திருமணம் செய்து கொடுத்து அந்த வகுப்போடு சம்பந் தம் வைத்துக்கொள்ள விரும்பினர். காரை வேளாளர் களுக்கு, கொல்லரிடமிருந்து பொன்னை வசப்படுத்த வேண்டுமென்பதில் ஆசைதான். ஆனால், அதற்காக அவரது பெண்ணை திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்ற நிபந்தனையை வெறுத்தார்கள். வெறுப்பு விபரீத எண்ணத்திற்கு வித்திடலாயிற்று. கொல்லரை எப்படி

யாவது சதி செய்து கொன்றுவிட்டு, அவரிடமுள்ள பொன் குவியல்களையும் கைப்பற்றிவிட வேண்டுமென்று தீர்மானித்தார்கள். உயர்ந்த ஜாதிக்காரர்களாகிய தம்மிடம், சாதாரணமான ஒரு கொல்லர்—சம்பந்தம் வைத்துக் கொள்ள எண்ணியது மகா பாபம்—பெரிய குறும்புத்தனம்—என்றெல்லாம் அந்த வேளாளர் மரபினர் ஆத்திரப்பட்டு துடித்தனர். எப்படியோ சதி உருவாகி விட்டது. கொல்லரிடம் சென்று, அவரது பெண்ணை தங்கள் மணமகனுக்குத் திருமணம் செய்ய சம்மதமென்றும், ஆனால்—தங்கள் ஜாதி வழக்கப்படி—கடலிலே தான் திருமணம் நடக்க வேண்டுமென்றும் கூறினர்கள். சதியை உணராத அந்தக் கொல்லரும் அதற்கு சம்மதித்தார். இரண்டு மூன்று படகுகளில் மாப்பிள்ளை வீட்டாரும், பெண் வீட்டாரும் புறப்பட்டனர். ஒரு படகில் கொல்லர்—அவர் பெற்ற பைங்கொடி — அவரது மகன் — இன்னும் சில உறவினர்கள்; மற்றொரு படகில், மாப்பிள்ளை, அவரது வீட்டார்; இன்னொரு படகில் சதித் திட்டத்தை நிறைவேற்ற ஏற்பாடு செய்யப்பட்ட ஆட்கள். இப்படி மூன்று படகுகளும், கடலிலே பிரயாணம் நடத்துகின்றன. ஜாதி ஆசாரப்படி கடலிலே திருமணம் நடக்கப் போகிறது என எண்ணியிருக்கிறார்கள் பெண் வீட்டார்கள். படகுகள் மூன்றும் நின்றன. வேளாளர் வீட்டார் ஒருவர் உரத்த குரலில் சொன்னார்—

"உம்! கல்யாணத்தை ஆரம்பிக்கலாம்!" என்று!

அவர் சொல்லி வாய் மூடுவதற்குள், மூன்றுவது படகில் இருந்தவர்கள் பெண் வீட்டாரின் படகில் பாய்ந்து குதித்து அந்தப் படகை அப்படியே கடலில் கவிழ்த்து விட்டார்கள்.

அந்தோ பரிதாபம்! எதிர்காலத்தை எண்ணி ஆனந்தப் பட்டிருந்த அந்த அழகியும், அவள் அப்பனும்,

அண்ணனும் ஆழ்கடலில் மிதந்து விட்டார்கள்—மணக் கோலம் காண வந்தவர்கள் பிணக்கோலம் பெற்றனர். சதி வேலையை வெற்றிகரமாக முடித்துவிட்ட வேளாளப் பெருமக்கள், மருங்கப்பள்ளம் திரும்பி வந்து, கொல்லருடைய வீட்டை சோதனை போட்டார்கள். பொன் குவியல்களை அபகரிக்க துடித்து நின்றார்கள்! ஆனால் ஒரு சிறு துண்டு கூட கிடைக்கவில்லை. கொல்லர், முன் ஜாக்கிரதையாகவே; அவைகளை எல்லாம் தனக்கு மட்டும் தெரிந்த இடத்திலே புதைத்து விட்டார். பொன்னை மட்டுமல்ல! பொன் செய்யும் அந்தக் கல்லையும் புதைத்து விட்டார். குளிசக் கல் என்று கூறுகிறார்களே; அந்தக் கல்லுக்கு இடப்பட்ட பெயர்தான் அது! கொல்லர் குடும்பத்தை அழித்துவிட்டு, பொன்னும் கிடைக்காமல் ஏமாந்த காரணத்தால், அந்த முயற்சியில் ஈடுபட்ட வேளாளர்கள் இலங்கையில், யாழ்ப்பாணத்திலிருக்கும், காரை என்னும் தீவில் போய் குடியேறி விட்டார்கள்”

கிழவர் கதையைச் சொல்லி முடித்துவிட்டு, இப்படிக் கதை சொல்கிறார்கள்; என்றார்.

“ஆமாம்—அந்தக் கல்லைப் பற்றிக்கூட எந்தத் தகவலும் கிடைக்காதா?” என்று ஆவலோடு கேட்டான் ஐயப்பன்.

“என்? கிடைத்தால் நீ எடுத்து, பொன்னுருக்கலாம் என்று பார்க்கிறாயா?”

“கதை மட்டும் நிஜமா இருந்து, அந்த பொன்னெல்லாம் எனக்கிட்ட கிடைச்சா; ஆகா!”

“என்ன செய்வே; சிதம்பரம் நடராசருக்குப் போட்டது மாதிரி; திருவாரூர் தியாகராசருக்கு தங்க ஓடு போடுவாயாக்கும்?”

"தங்க ஓடா? சேச்சே! போடமாட்டேன்! தங்கத் தேரே செய்து வைப்பேன்!"

"நல்ல வேளை! ஏ—ஏராளமான பொன் குவியல்களே! இது மாதிரி புத்திசாலிகள் இருக்கும் வரையில் நீங்கள் யார் கண்ணிலும் அகப்பட வேண்டாம்!"

கிழவர், ஆகாயத்தை நோக்கி இப்படிப் பிரார்த்தனை செய்தார். பிறகு, ஐயப்பனைப் பார்த்து, "ஆனால் ஒன்று ஐயப்பா!—அந்தக் கொல்லர், கடலிலே கவிழும்போது—தன் மடியிலே ஒரு சிறு கல்லும், புதைத்து வைத்த பொன் இருக்கும் இடத்தைப் பற்றிய குறிப்பும் வைத்திருந்தாராம்.

சிறிய செப்பு ஏட்டிலே அந்தக் குறிப்பு இருந்ததாம். அந்தச் சிறு கல்லைக் கொண்டு போய், செப்பேட்டில் குறிக்கப்பட்ட இடத்தில் வைத்தால் குளிசக்கல் புதைக்கப்பட்ட இடத்துக்கு அந்த சிறுகல் காந்தத்தால் இழுக்கப்பட்டது போல ஓடுமாம். அதைக் கொண்டு, குளிசக் கல்லையும், குவிந்திருக்கும் பொன்னையும் எடுக்கலாமாம். இந்த ரகசியத்தை, கொல்லருடைய இளைய மகன் ஊரில் சொல்லிக் கொண்டிருந்தானும். அவன் திருமண விழாவுக்குப் போகாதவன் போலும். அப்பா எப்போதுமே, செப்பேட்டையும், சிறுகல்லையும் மடியிலேயே வைத்திருப்பார்; அது கடலிலே போய்விட்டது — இனி என் செய்வது என்று அவன் அடிக்கடி கண்ணீர் விடுவானும்—இது எவ்வளவு தூரம் உண்மையோ யார் கண்டது?" என்று முடித்தார் கிழவர்.

"ஐயோ! அந்தச் செப்பேடும், சின்னக் கல்லுமாவது எனக்கிட்ட கிடைக்கக் கூடாதா?" என்று, கரகரப்பான தொனியிலே கத்தினன் ஐயப்பக் கிழவன்.

மாயாண்டிக் கிழவர், தன் மடியிலேயிருந்த சிறு முடிச்சையும் தாள் உறையையும் தடவிப் பார்த்துக் கொண்டார்.

அப்படி அவர் தடவிப் பார்த்ததை ஐயப்பன் கவனித்து விட்டான்.

"இன்னும் பொழுது விடியவில்லையே —" என்று மாயாண்டி ஆகாயத்தை நோக்கினர்.

5

பொழுது இன்னும் சரியாக விடிந்து விடவில்லை; தெளிவற்று இருந்தது உலகம், புராணிகர் உள்ளம் போல!

சரியாக விடிந்து வெளிச்சம் பரவுவதற்குள் வீட்டுக்குப் போய்விட வேண்டும் என்ற துடிதுடிப்பில் பரிமளம் நடந்து கொண்டிருந்தாள். யாராவது தன்னை அந்த நிலையில் பார்த்துவிடப் போகிறார்கள் என்ற அச்சம், அவள் கண்களில் மின்னிக் கொண்டிருந்தது. மேலங்கிக்குப் பதிலாக ஒரு துண்டைப் போர்த்திக்கொண்டு வரும் அவளைப் பற்றி யார்தான் சந்தேகப்படமாட்டார்கள். அவளது கால்கள் கல், முள் என்று கூடப் பாராமல் வீடு நோக்கிப் பறந்து கொண்டிருந்தன. நன்றுகப் பொழுது விடிவதற்கும் அவள் தன் வீட்டுக்குள் நுழைவதற்கும் சரியாக இருந்தது.

நடுத்தரமான ஓட்டுவில்லை வீடு. பல இடங்களில் ஓடுகள் பிரிந்துபோய் பழுது பார்க்கப்படாமலே இருந்தது. மூங்கி முள்ளால் ஆன வேலிகள் அமைத்த கொல்லை அந்த

வீட்டிற்கு அழகு தந்து கிராமீய மெருகைப் பூரணமாக அளித்தது. கொல்லையின் கடைசியிலே உயர்ந்த வைக் கோற் போர். அதைத் தொடர்ந்து சிறு சிறு மிளகாய்ப் பாத்திகள்—கொத்தமல்லி தெளித்திருந்த காரணத்தால் கொல்லை முழுதும் 'கம்' என்ற வாசனை எழுந்து கொண் டிருந்தது. மல்லிகை முல்லைக்கொடிகள், கொம்புகளிலே பின்னிக் கொண்டு கிடந்தன. வீட்டை ஒட்டினாற்போல மாட்டுத் தொழுவம்.

செவலைப் பசு ஒன்றும், ஒரு நோஞ்சான் கன்றுக் குட்டியும் அந்தத் தொழுவத்திலே யிருந்தன. அதி லிருந்து, பரிமளாவின் வீட்டில் பால் வியாபாரம் செய் கிறார்கள் என்று புரிந்தது.

பரிமளா, மெதுவாக நடந்து வந்து, மாட்டுத் தொழு வத்திலே புகுந்தாள். அப்போதுதான், கரந்தது போக மீதமிருந்த பாலை கன்றுக்குத் தந்துவிட்டு நின்ற செவலைப் பசு, பரிமளாவை ஆவலோடு பார்த்து "அம்மா!" என்று கதறியது. பரிமளாவுக்கு தூக்கிவாரிப் போட்டது. செவலைப் பசு கத்தும்போது எத்தனையோ முறை அவள் அதைத் தடவிக் கொடுத்து அன்பு காட்டியிருக்கிறாள். அதன் கன்றுக்காக, தன் பெற்றோர்களிடம் வாதாடியிருக் கிறாள், பால் நிறையவிட வேண்டுமென்று!

ஆனால் இப்போது அவளால் பசுவையோ, கன்றையோ கவனிக்க இயலவில்லை. ஏதோ ஒரு பீதி அவளை ஆட்டிப் படைத்தது. இரவு முழுதும் பீதிக்கிடையே காதலனோடு இருந்த — போதும் அப்போது அதுபற்றி கவலை தெரிய வில்லை அவளுக்கு. அப்போது அவளால் அந்த பயத்தை சுமக்க முடியவில்லை. பெற்றோர்கள் ராத்திரியெல்லாம் தன்னை தேடியிருப்பார்களே, அவர்களிடம் என்ன சமாதா னம் கூறித் தப்புவது—எதைச் சொன்னால் நம்புவார்கள்—

துரை சொன்னது போலவே சொல்லி விடலாமா? நம்பு வார்களா?—ஒருவேளை நம்பி விட்டால்? இப்படியெல்லாம் குழப்பிக் கொண்டாள். மாட்டுத் தொழுவத்திலிருந்த படியே வாயிற்புரத்தை எட்டிப் பார்த்தாள். அவள் உடம்பு அவளையறியாமலே குலுங்கியது. அவள் தகப்பனார் தாண்டவன், வாயிற்புறத்திலே வந்து நின்றார். அவரது முகம் இரவெல்லாம் கண் விழித்தது போல சோம்பிப் போயிருந்தது. எங்கெங்கே போய்த் தன்னைத் தேடினாரோ என்று தனக்குத்தானே எண்ணிக் கொண்டு, பரிமளம் கண் கலங்கினாள். தாண்டவன் மெதுவாக நடந்து சென்று வீட்டுக் கதிரேயுள்ள வேப்ப மரத்தில் குச்சி ஒடித்துக்கொண்டு பல் துலக்கியவாறு அதை விட்டு நகர்ந்தார்.

"எங்க போறீங்க?" என்று ஒரு குரல் வேதனை கலந்து ஒலித்தது. தாண்டவன் திரும்பினார்.

பரிமளாவின் தாயின் குரல் அது.

"போம்போதே கேட்கிறீயா? வாழ்ந்தாப்புலதான்! போறது தெரியலே—பல்லு விளக்கத்தான் போறேன்?"

"சரிதான் — காலங்காத்தால உங்க காரியம் சரியா நடந்துட வேண்டியது — அவ்வளவுதான்! என பெத்த வயிறு பத்தி எரியுது; அதைப்பத்தி உங்களுக்கென்ன கவலை!"

"ஏண்டி பெத்த வயிறு பத்தி எரியுது? கொஞ்சம் குளிச்சியா பழைய சாப்பிட்டு, நீராகாரத்தைதக் குடியேண்டி!"

"அப்ப, என் பெண்ணு போனது, போனதுதானு?"

"ஏதுடி எழவு! ஜோஸ்யக்காரனை கேக்ராப்ல என்னை கேக்கிறே? நானுந்தான் ராத்திரியே புடிச்சு, அலையாத எடமெல்லாம் அலையிறேன்—ஏ, அஞ்சலை! போயி

யைப்பாரு! இதா பல்லு விளக்கிட்டு வந்துடறேன் — பழையத்தை பினஞ்சு வையி! வயிற்றுக்கு கொஞ்சம் போட்டுக் கிட்டாத்தான் வாடி வளஞ்சு ஒம் பொண்ணை தேட முடியும்!"

சொல்லிக் கொண்டே, தாண்டவன் அதைவிட்டு அகன்றார். நாட்டுப்புறத்தின் அசல் பதிப்புத்தான் தாண்டவனின் உருவம். அவருக்கு கொஞ்சமும் குறைந்தவளல்ல, **அஞ்சலை.** அவர்கள் இருவருக்கும் பிறந்த பரிமளா — நாகரீகத்தின் சிகரத்திலே நின்று நர்த்தனம் புரியாவிட்டாலும், பட்டிக்காட்டுப் பெண் என்று கூற முடியாத அளவுக்குப் படிப்பறிவு வாய்ந்தவள்.

தந்தை வீட்டைவிட்டு அகன்றதும், பரிமளத்திற்கு ஒரு சிறு துணிச்சல் ஏற்பட்டது. அவர் வருவதற்குள், தாயாரிடம் ஓடிப்போய் அவளை சமாதானம் செய்து விட்டால், பிறகு அம்மாவையும் துணைக்கு வைத்துக்கொண்டு, அப்பாவின் கோபத்தை தணித்து விடலாம் என்ற நம்பிக்கை அவள் உள்ளத்திலே ஒளி விடத்துவங்கியது.

மாட்டுத் தொழுவத்திலிருந்தபடியே, நகர்ந்து, கொல்லைப்பக்கமாக வந்து, முள்வேலியின் படலைத் திறந்து கொண்டு வீட்டுக்குள் நுழைந்து விட்டாள் பரிமளம்.

உள்ளே நுழைந்த பரிமளம், தாய் அஞ்சலை எங்கேயென்று தேடினாள். அஞ்சலை, கன்னத்தில் கைவைத்தபடியே ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தாள். அவள் அருகே போய், 'அம்மா!" என்று பரிமளம் கூப்பிட்டாள். அவ்வளவுதான், இருவரும் ஏக காலத்தில் ஒருவரையொருவர் கட்டித் தழுவிக் கொண்டார்கள். பிள்ளைகள் எந்தவிதமான தவறு செய்துவிட்டு வெளியேறியிருந்தாலும்—

அவர்கள் திரும்பி வரும்போது அந்தத் தவறுகள் மறைந்து போய், காணுமற்போன செல்வத்தைக் கண் டேனே என்கிற ஆனந்தமும், பாச உணர்ச்சியும்—தாய் ஒருத்திக்குத்தான் ஏற்படும்—என்பதை அஞ்சலை—பரிமளம் தழுவல் காட்சி உணர்த்தியது.

"என் கண்ணு—எங்கம்மா போய்விட்டாய்! பெத்த வயிற்றிலே பால் வார்த்தவளே! என் பத்தரை மாற்றுத் தங்கமே! என் கண்ணட்டி! ஏண்டி என்னை இப்படி தவிக்க விட்டே!" ஒப்பாரிவைக்கவே ஆரம்பித்து விட் டாள் அஞ்சலை. பரிமளாவும் தாய்ப் பாசத்தின் எல்லை மீறிய உணர்ச்சிக்கு அடிமைப்பட்டு அஞ்சலையின் மடியிலே தலையைக் கவிழ்த்தவாறு அழ ஆரம்பித்து விட்டாள்.

"எங்கே போனம்மா? சொல்லும்மா! உங்க அப்பா—ரௌத்ரகாரமா இருக்காரு! படிக்கவைக்கக் கூடாதுன்னு அப்பவே சொன்னேனே கேட்டியான்னு என்னைப் போட்டு ராத்திரி கொன்னுட்டாரும்மா!"

பரிமளம், தடுமாறித் தடுமாறி தன் காதலன் சொல் லிக்கொடுத்த பொய்க் கதையை அம்மாவிடம் கூற ஆரம் பித்தாள்.

"அம்மா! என்மேல் ஒரு குற்றமும் இல்லம்மா! நான் தூங்கிக்கொண்டிருந்தேனே; அப்போது யாரோ வந்து என்னை எழுப்பினது மாதிரி கனவு கண்டேன்—கண்ணை விழித்துப் பார்த்தேன்—ஆனால் இமைகளைத் திறக்க முடியவில்லை. யாரோ என்னைத் தூக்கிக் கொண்டு போனது மாதிரி இருந்தது; அவ்வளவுதான்; எனக்கு ஒரே மயக்கமாய் இருந்தது—பிறகு எங்கேயோ ஒரு இடத்தில் என்னை உட்காரவைத்து, என்னைச் சுற்றி ஒரு அழகான

பெண் நின்றுகொண்டு சிறிது நேரம் சிரித்தாள்—பிறகு பாடினாள்! கல்யாணம்—கல்யாணம்—என்று கத்தினாள்—அதன் பிறகு அவள் ஆட ஆரம்பித்தாள்—அருமையான நடனம்—ஆடிமுடிந்ததும், கல்யாணம்—கல்யாணம் என்று கூச்சலிட்டாள்! அய்யோ, கடலிலே தள்ளுகிறார்களே—என்று பயங்கரமாகக் கூவினாள். திடீரென அவள் மறைந்து விட்டாள். விழித்துப் பார்த்தேன். பொழுது விடியும் வேளை. ஒரு மதகு அடியில் நான் படுத்திருந்தேன், என்னுடைய மேலங்கியை காணேம். அதற்குப் பதிலாக இந்தத் துண்டு கிடந்தது. எதுவுமே புரியாமல் பயந்துபோய், எங்கேயோ அழுது கொண்டு ஓடினேன். நல்லவேளையாக என்னை அறியாமலேயே நம் வீட்டுக்கே வந்து விட்டேன், இது தானம்மா நடந்தது" என்று பரிமளம் கூறினாள். அவள் கண்களில் நீர் துளிர்த்தது. ஏமாற்றும் தந்திரத்தைக் கையாளும் பெண்கள் விடுவார்களே; நீலிக்கண்ணீர்—அந்தக் கண்ணீர் அல்ல அது! பொய் சொல்லித் தாயை ஏமாற்ற வேண்டிய நிலைமை ஏற்பட்டதே என்பதற்காக வருந்தி உதிர்த்த நீர்த்துளிகள் அவைகள்! தானும் தன் காதல் துரையும், கூடி வாழ்ந்திட முடியாமல், தடுக்கப் போகும் முட்டுக் கட்டைகளை இந்தக் கண்ணீரால் கரைத்துவிட முடியுமா? என்ற கலக்கம் பரிமளாவின் நெஞ்சத்தை ரம்பம் போட்டு அறுத்தது. அப்படி அறுபடும் இருதயத்திலேயிருந்து பீறிடும் ரத்தத் துளிகளே, அவளது அழகுக் கண்களில் எட்டிப் பார்த்து, கன்னத்தைத் தொட்டுப் பார்த்துக் கொண்டு ஓடின என்று கூறலாம்.

துரையும் தானும் காதலர்கள்; இருவரும் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்ட இடத்திலே சந்தித்தோம்; நாங்கள் வாழ்வுப் பாதையிலே கை கோர்த்து நடைபோட ஆசைப்

படுகிறோம், என்று துணிந்து கூற முடியாத அந்தத் தோகை மயிலாள். பெற்றோரின் கோபத்திலிருந்து தப்புவதற்கு காதலன் கூறிய கற்பனைக் கதையைத் தன் கண்ணீரோடு குழைத்துத் தந்தாள் தாயிடம்!

காட்டாமணி செடிகளின் அசைவிலே, காட்டேரியையும், ஒதிய மரத்துக் கிளையின் மீது பேச்சி, பேய்களையும், கண்டதாக கதை கட்டும் வட்டாரத்திலே வாழ்ந்திடும் அஞ்சலை, தன் மகளின் கதையை அப்படியே நம்பி விட்டாள். நம்பியது மட்டுமல்ல அந்தக் கதைக்குப் பூரணத்துவமும் அளித்தாள்.

"அடி என் கண்ணு! உன்னை அழைச்சிகிட்டுப் போனது யாருன்னு நான் தெரிஞ்சுகிட்டேன் — அந்தப் பத்தரு மகள் தான்!"

"யாரும்மா? எந்தப் பத்தரு மகள்?"

"அதான் — கொல்லர் வீட்டுப் பெண்ணு! — உனக்குத் தான் சொல்லியிருக்கேனே கண்ணு! கல்யாணத்துக்குன்னு போயி, கடல்ல கவிழ்த்து விட்டாங்களே; அந்தப் பெண்ணுதான்!"

"இருக்கும்மா — இருக்கும்! அந்தப் பெண் கழுத்திலே கூட மாலை இருந்தது!"

"அதே தான்! அந்தப் பெண்ணு, கன்னி கழியாமல் செத்ததிலேலே, மோகினிப் பிசாசு சுத்திகிட்டு இருக்குதாம்! அது தான் உன்னைத் தூக்கிகிட்டுப் போயி, விளையாடியிருக்கு!"

"ஏம்மா — அந்தக் கொல்லர் வீட்டுப் பெண்ணு, செத்துப் போயி, எத்தனையோ நூறு வருஷம் ஆயிற்று என்கிறார்களே; நான் பார்த்த பெண்ணு இளமை மாறுமல் இருந்ததே!"

"இருக்கும் — இருக்கும். அப்படித்தான் இருக்கும். சாகிற வரையிலேதான் மனுஷாளுக்கு வயசு ஏறி ஏறி, கிழமாப் போவாங்க—செத்து விட்டா, அப்புறம், செத்தப்ப என்ன வயசு இருந்ததோ; அந்த வயசுதான் இருக்கும்."

பரிமளத்திற்கு சிரிப்பு வேறு வந்து விட்டது. கஷ்டப் பட்டு அடக்கிக் கொண்டாள். அஞ்சலையால் அதை கவனிக்க முடியவில்லை. மகள் திரும்பி வந்த மகிழ்ச்சியில் இருந்தாள் அவள்.

"எப்படியோ அம்மா! கொல்லர் வீட்டு மோகினிப் பெண்ணு உன்னை எனக்கு திருப்பிக் கொடுத்தது! யார் செஞ்ச புண்யமோ; என் வயிறு குளிர்ந்தது—"

என்று அஞ்சலை, தன் மகளின் நெளி பாய்ந்த கூந்தலை வருடினாள். அப்போது, தாண்டவன் "அஞ்சலை" என்று கூப்பிட்டபடியே உள்ளே வந்தார்.

"கேட்டீங்களா நல்ல சேதி! நம்ப கண்ணு வந்துட் டுது—இதோ பாருங்க!" என்று அஞ்சலை சந்தோஷத்தில் கத்தினாள்.

தாண்டவன், தன் மகளை ஏற இறங்கப் பார்த்தார். அப்பா, ஆத்திரத்தில் ஏதோ செய்துவிடப் போகிறார் என்று மட்டும் பரிமளா புரிந்து கொண்டாள்.

"நீங்க ஒண்ணும் மீசையை முறுக்காதிங்க! பரிமளத்தை மோகினி பெண்ணு தூக்கிட்டுப் போயி." அஞ்சலை வாய் மூடவில்லை. அதற்குள் தாண்டவன் ஆத்திரமாக, அவளை ஓங்கி அறைந்து கீழே தள்ளிவிட்டு, "சி, பேசாதே நாயே! பெண்ணு வளர்க்கிற லக்ஷணம் நல்லா இருக்கு! மோகினி யாம்—ராகினியாம்!" என்று கூச்சல் போட்டார் தாண்ட வன்.

"அப்பா!" என்று கூவி, ஏதோ சொல்ல முயன்றாள் பரிமளா!

"பேசாதே! அப்பாவாவது—ஆட்டுக் குட்டியாவது! உன்னை துண்டு துண்டா வெட்டி போடுறேன் இரு! — மானங்கெட்ட கழுதை!"

என்று கூறியபடி தாவிப் பாய்ந்து, ஒரு பெரிய அரிவாளைக் கையிலே தூக்கிக்கொண்டார் தாண்டவன். பரிமளா, தந்தையின் சுபாவம் அறிந்தவள். ஆகவே, தன் வாழ்வு முடிந்து விட்டது என்பதை புரிந்து கொண்டாள்.

"அப்பா!" என்று அலறினாள்! தாண்டவன் பேசவில்லை;

அரிவாளை ஓங்கியபடி மகள் மீது பாய்ந்தார். அதற்குள் "டேய் நில்லு!" என்ற சப்தம் கேட்டு தாண்டவன் திரும்பினார் — பரிமளா மீது விழ இருந்த அரிவாளை ஒரு கை தடுத்தது.

6

பரிமளா மீது விழ இருந்த அரிவாள் வெட்டைத் தடுத்து நிறுத்தியது வெள்ளியம்பலத்தின் கைதான். தெருவோடு நடந்து கொண்டிருந்த அம்பலத்தின் காதிலே பரிமளா வீட்டு சப்தம் கேட்கவே அவர் வேகமாக உள்ளே நுழைந்தார். அவர் நுழைந்ததற்கும்—பரிமளா ஆபத்திலிருந்து விடுபடுவதற்கும் நேரம் மிகச் சரியாயிருந்தது. எங்கே சண்டை சச்சரவுகள் நடைபெற்றாலும், சந்தோஷ, துக்க சமாச்சாரங்கள் நடைபெற்றாலும் அங்கே தனக்கே தலைமை ஸ்தானம் கிடைக்க வேண்டும் என்று ஆசைப்படும் பெரிய — மனிதராயிற்றே வெள்ளியம்பலம், ஆகையால் அவர் தாண்டவன் கையைத் தடுத்து நிறுத்தியதில் ஆச்சரியமில்லை.

சில சமயங்களில் கெட்டவர்கள் செய்யும் காரியங்கள் கூட நன்மையாகவே முடிந்து விடுகிறது. நமக்கென்ன என்று வெள்ளியம்பலம் போயிருந்தால், பரிமளாவின் உயிர் போயிருக்குமல்லவா? இன்னொன்று—கெட்டவர்களின் செய்கை நன்மையை மின்னல் போலத் தோன்றச் செய்து, அந்த மின்னலில் இருந்தே, இடி — மழை — புயல்—பூகம்பம்—வரையிலே தீமைகளைப் பொழிந்து விடவும் கூடும்.

அதே போன்ற ஒரு தீய சூழ்நிலைக்கு அஸ்திவாரக் கல் நாட்டுவது போலத்தான் அமைந்தது, பரிமளாவுக்கு வெள்ளியம்பலம் செய்த உதவி.

"என்ன தாண்டவம்—எனய்யா — கத்தியைத் தூக்கிக் கொண்டு பாய்கிறீர்?"

என்று அதட்டலாகக் கேட்டார் அம்பலம். தாண்டவன் கோபாவேசத்திலும் கூட அம்பலத்திற்குக் காட்ட வேண்டிய மரியாதையைக் காட்டி மௌனமாக நின்றார்.

"ஆறுவது சினமய்யா—ஆறுவது சினம்! நீர் அரிவாளால் காரியத்தை முடிச்சுட்டு நாளைக்கு உம்மை ஜாமீனில் எடுக்கிறத்துக்கு, நானல்லவாய்யா போய் அழணும்! ஏது ஊர்ல கொஞ்சங்கூட மனுஷனை நிம்மதியா இருக்க விட மாட்டீங்க போலிருக்கே! இப்ப என்னய்யா நடந்தது? ஏன் இப்படி புலி போலப் பாய்ந்தீர்?"

தாண்டவன் பதில் சொல்லாமல் கீழே உட்கார்ந்தார்.

"என்னய்யா—ஒரு மனுஷன் கேட்கிறேன்; பதில் சொல்லாமல் வாயடைத்துப் போய்விட்டீர்!"

கணவன் பதில் சொல்லாததால் அம்பலத்திற்குக் கோபம் வந்துவிடக் கூடும் என்று பயந்த அஞ்சலி, "நான் சொல்லுகிறேனுங்க!" என்று ஆரம்பித்தாள்.

"சொல்லு! சொல்லு!" என்று அம்பலமும் ஆவலாகக் கேட்டார்.

"ராத்திரி தூங்கிக்கிட்டு இருந்த என் பெண்ணை மோகினிப்பிசாசு, தூக்கிக் கொண்டு போய்ட்டுதுங்க— மகள் காலையிலேதான் திரும்பி வந்தா — அதை அவரு நம்பாம இப்படி துள்ளிக் குதிக்கிறாரு!"

"மோகினிப் பிசாசு!"

"ஆமாங்க—அதான் அந்த கொல்லர் வீட்டுப் பெண்ணு, கன்னி கழியாமல் மோகினியா சுத்திக்கிட்டு நிக்குதே—அது தான்!"

"ஓகோ—அது ஏன், இந்தப் பெண்ணை தூக்கிக்கிட்டுப்போச்சு—ஆச்சரியமா இருக்கே"

"இந்தப் பெண்ணுதானே பட்டுக்கோட்டை பெரிய பள்ளிக்கூடத்திலே படிக்கிற பெண்ணு?"

"ஆமாங்—இதுதான்! வேற எதுங்க; ஒண்ணே ஒண்ணுதான் கண்ணே கண்ணுன்னு! அதுக்கும் இப்படி ஆபத்து வரப்பாத்துச்சு!"

அம்பலத்திற்கு குழப்பம் ஆரம்பமாகி விட்டது. மோகினிப் பிசாசு மருங்கப் பள்ளத்துப் பக்கத்திலே சுற்றிக் கொண்டிருக்கிறது என்பதை அவர் நிறையக் கேள்விப் பட்டிருந்தாலும் கூட, அந்தப் பிசாசு வந்து, இந்தப் பெண்ணை எப்படித் தூக்கிக் கொண்டு போயிருக்க முடியும் என்கிற சந்தேகம் அவருக்கு எழுந்தது.

அவர் பரிமளத்தைப் பார்த்து, உன் பெயர் என்னம்மா—என்று கேட்டார்—அவளும், கலங்கிய கண்களைத் துடைத்தபடி பரிமளம் என்று கூறினாள்—

"அழாதே அம்மா! மோகினிப் பிசாசு உன்னைத் தூக்கிக்கொண்டு போகும் போது எத்தனை மணியிருக்கும்?"

"அதற்குத்தான் ஆறுமாதமாக அழுது கொண்டிருக்கிறேன்—அப்பா, ஒரு ரிஷ்ட்வாட்ச் வாங்கித் தரமாட்டேன் என்று கூறிவிட்டார். இப்போது எவ்வளவு சரியாக மணியைச் சொல்லியிருப்பேன்."

பரிமளாவுக்கு வெள்ளியம்பலம் என்றுலே எப்போதும் ஒரு வெறுப்பு உண்டு. அதுவும் இப்போது மோகினிப் பிசாசு பற்றிய விளக்கம் கேட்க ஆரம்பித்தது அவளுக்குப் பிடிக்கவேயில்லை. ஆகவே அம்பலத்தின் கேள்விகளுக்கு தாறுமாறுக பதில் சொல்வதென்று தீர்மானித்துக் கொண்டாள். அம்பலம், தன்னை அப்பாவின் கையிலிருந்து விடுவித்ததின் மூலம், இன்னும் ஏதாவது புதிய ஆபத்து அவரிடமிருந்தே ஏற்படக்கூடும் என்று பரிமளா பயந்தாள். அம்பலமும் கேள்விகளை அடுக்கினர்.

"மோகினிப் பிசாசு பார்வைக்கு எப்படியிருந்தது?"

"பிசாசு மாதிரியே இருந்தது. ஆனல் மிகவும் நல்ல அழகு—"

"வயது என்ன இருக்கும் அதற்கு?"

"நான் அதைக் கேட்டேன்—ஜாதகக் குறிப்பு அதன் அப்பா பெட்டியிலே இருக்கிறது — பார்த்துச் சொல்லுகிறேன் என்றது."

"ஓ—நீயும் அதோடு பேசினையா?"

"ஆமாம் — பேசினேன்!"

"அந்த பிசாசு என்ன பாஷை பேசுகிறது!"

"பிசாசு பாஷை தெரியாதா? சமஸ்கிருதம்தான் பேசியது!"

"சமஸ்கிருதமா? உனக்குப் புரிந்ததா?"

"ஓ! அது பேசப்பேச பக்கத்திலே யாரோ மறைந் திருந்து தமிழிலே மொழி பெயர்த்துக் கொண்டிருந் தார்கள்—?"

"அது யார்? ஆணு பெண்ணு?"

"அதுதான் கண்ணுக்குத் தெரியவில்லையே—பேசிய திலிருந்து பெண் என்றும், குரலிலிருந்து ஆண் என்றும் தீர்மானித்துக் கொண்டேன்!"

"ஆமாம், பிசாசு உன்னை ஏன் தூக்கிக் கொண்டு போனதாம்?"

"இதுமாதிரி எல்லாம் நடக்கத்தான்!"

"குறும்புக்காரிதான் நீ! ஆமாம்—கொல்லர் வீட்டுப் பெண்தானே அந்த மோகினி! அதுக்கிட்ட நீ கேட்டிருக் கலாமே; அவுங்க அப்பா தங்கத்தை எல்லாம் எங்கே புதைத்து வச்சார் என்று!"

"அதையும் கேட்டேன்—பதிலும் சொல்லிற்று!"

"என்ன சொன்னது? என்ன சொன்னது?"

"அவளுடைய அப்பா புதைத்த தங்கம் இருக்கு மிடத்தை அவள் சொல்லும்போது, ஆச்சரியகரமாக என் காதுகள் அடைத்துப் போய்விட்டன. உடனே விழித்துக் கொண்டேன். எனக்குப் பிரக்ஞை வந்துவிட்டது!"

"அடா அடா! அதையல்லவா நீ கேட்டிருக்க வேண்டும்—அது சரி — அந்தப் பிசாசு உன்னை தூக்கிக் கொண்டு போன இடம் எதம்மா?"

"மலேராவிற்குப் போகிற பாதையிலே இருக்கிறதே பெரிய மதகு, அங்கேதான் நான் இருப்பதாக உணர்ந் தேன் கண்விழித்துப் பார்த்தபோது!"

வெள்ளியம்பலத்திற்குப் பரிமளாவின் பேச்சிலே சிறிது நம்பிக்கை ஏற்பட்டு விட்டது. மோகினிப் பிசாசு

இப்படி யெல்லாம் செய்யக்கூடும் என்றும், அத்தகைய பிசாசு மருங்கப்பள்ளத்து வட்டாரங்களிலே அலைந்து கொண்டிருக்கிறது என்றும் நம்புகிறவர்களுக்கு பரிமளாவின் பொய், உண்மையாகத் தானே தெரியும். ஆகவே அம்பலம், தாண்டவனை சமாதானப் படுத்தினர்.

"நீர் ஒன்றும் மகளைப்பத்தி தப்பாக நினைக்காதீர் அய்யா! மோகினிப் பிசாசு அலைகிற விஷயம்தான் நாம் கேள்விப்பட்டிருக்கிறோமே; தீர விசாரிக்காமெ கத்தியைத் தீட்டிப் பாய்வதிலே என்னய்யா புண்ணியம்?" என்று கொஞ்சம் காரசாரமாகவே சொன்னர் அம்பலம்.

"எனக்கு என்னமோ பேபாங்க; நம்பிக்கையில்லை! படித்த பெண்ணு அது—எதாவது சொல்லி தப்பிச்சுக்கப் பாக்குது!—அதனுடைய நடை உடை பாவனைகளை நான் சில நாளாப் பாத்துக்கிட்டுத்தான் வர்றேன்—எனக்கென்னமோ சந்தேகந்தான்!"

"அட முட்டாள் மனுஷா அப்படியே சந்தேகமிருந்தாலும் அதை வெளியில் சொல்லக் கூடாதய்யா! சந்தேக நிவர்த்தியே ஆகாமல் சண்டமாருதமா கிளம்பினீர்ன்னு, ஊர் காரித் துப்புமய்யா! நான் ஊருக்குப் பெரிய மனுஷன்—நானே நம்புகிறேன், உமது மகள் பேச்சை! நீர் என்னமோ நெருப்பு மாதிரி கொதிக்கிறீரே!"

"மோகினிப் பிசாசு, பெரிய மதகடிக்குத் தூக்கிட்டுப் போச்சுன்னு சொல்லுதே; ஒரு கேள்வி கேட்கிறேன்! பதில் சொல்லுமா?"

"என்ன கேட்கிறீர், கேளும்?"

"பெரிய மதகடியில் இருக்கிற ஒரு முக்கியமான செடி கொடியின் பெயரைச் சொல்லட்டும்—நான் போய் சரி பார்த்து, இதன் பேச்சை நம்புகிறேன்" என்று முடித்தார் தாண்டவன்.

"ஏன் பரிமளம்! உங்க அப்பா கேட்கிறது நியாயம் தானே, மதகடியில் தானே பிசாசு உன்னை தூங்கவைத்தது — அங்கேயுள்ள ஒரு முக்கியமான செடி கொடியைச் சொல்லேன்—அப்பாவின் சந்தேகம் தீரட்டும்!" என்றார் அம்பலம்.

"அந்த ஆபத்தான நேரத்தில் நான் அதையெல்லாம் பார்த்து ஞாபகமா வைத்திருக்கிறேன்" என்று அவள் சொல்லிக்கொண்டிருக்கும் போதே, திடீரென அவளுக்கு ஒரு நினைவு வந்தது. அதுதான் அந்த மதகடியில் பாம்புபோல் வந்து அவர்களை பயமுறுத்திய **பிரண்டைக் கொடி!** பரிமளத்திற்கு புதிய தெம்பு ஏற்பட்டது.

"சொல்லுகிறேன்—ஞாபகம் வந்து விட்டது—அங்கே பிரண்டைக்கொடி நிறைய இருக்கிறது" என்றாள். தாண்டவனுக்கு சிறிது தயக்கம் பிறந்தது; பேசுவதற்கு!

"என்னய்யா—இனி என்ன சந்தேகம்?" என்றார் கேலியாக அம்பலம்.

"பிரண்டைக்கொடி—சரி; நீங்கதான் சாட்சி—வாங்க தயவு செய்து என்னோட—உங்களுக்கு நேராகவே பார்க்கிறேன், பிரண்டைக்கொடி இருக்கிறதா என்று! அப்படி இல்லாவிட்டால் மகள் என்றும் பார்க்காமல் பிணமாக்கி விடுறேன்—நீங்க சாட்சி! வாங்க!!" என்று துடித்துக் கிளம்பினார் தாண்டவன். வெள்ளியம்பலமும், தாண்டவனுடன் புறப்பட்டார்.

பரிமளாவுக்கு பயமெல்லாம் போய்விட்டது. அப்பா, அங்கு போய் பிரண்டைக்கொடியைக் கட்டாயம் பார்ப்பார்—தான் சொன்ன பொய்யை எல்லாம் நம்பி விடுவார்—என்று தற்காலிகமாக ஆறுதலடைந்து, பாம்புபோல் வந்து பயமுறுத்திய அந்தப் பூவரசு இலைக்கும், பிரண்டைக்கொடிக்கும் வாழ்த்து சொல்லிக் கொண்டாள் தனக்குள்ளாகவே!

தாண்டவனும், வெள்ளியம்பலமும், பரிமளம் குறிப்பிட்ட மதகு நோக்கி நடந்தார்கள். பரிமளத்தின் விஷயத்திலே வெள்ளியம்பலத்திற்கு ஏன் இவ்வளவு அக்கரை பிறந்தது என்று அவருக்கே தெரியவில்லை. பரிமளா கூறும் மோகினிப்பிசாசு—தாண்டவன் கூறும் கள்ளக் காதலன்—இந்த இரண்டில் எது சரி? என்று தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆசை மட்டும் அம்பலத்தின் மனதிலே அலைமோதிக் கிளம்பியது—மோகினிப் பிசாசு உண்மையாயிருக்கும் பட்சத்தில் யாராவது மந்திரவாதிகளைக் கொண்டு அதைக்கட்டி, அதன் மூலம் தங்கம் புதைக்கப்பட்ட இடத்தை தெரிந்து கொள்ளலாம் என்ற நம்பிக்கை பிறந்தது அவருக்கு! அல்லது, பரிமளத்திற்கு யாரோ ஒரு கள்ளக் காதலன் இருப்பது உண்மையானால், அந்தக் காதலன் முதல் நாள் இரவு தான் கோயிலிலே சந்தித்து ஓட்டம் பிடித்த காதலனாயிருந்தால், அவன் மூலமும் தங்கம் இருக்கும் இடத்தை அறிந்து கொள்ளலாம் — **"அதோ அந்த மாமரத்தடியில்தான் தங்கத்தைப் புதைத்தது"** என்ற வாசகத்தைக் கூறியது அவர் சந்தித்த அந்தக் காதலன் தானே! ஒருவேளை அவனே பரிமளாவின் கள்ளக் காதலனாக இருந்தால்? இப்படி எல்லாம் யோசனை செய்துகொண்டு, அம்பலம் தாண்டவனுடன் மதகுப் பக்கம் வந்தார்—தாண்டவன் மதகடியை ஆவலாகப் பார்த்தார்—பரிமளா குறிப்பிட்ட பிரண்டைக் கொடி அங்கேயிருந்தது.

"பார்த்தீரா? பரிமளம் சொன்னது உண்மைதான்!" என்று கூச்சலிட்டார் வெள்ளியம்பலம்.

பிரண்டைக் கொடிக்கும் பக்கத்திலே கொஞ்ச தூரத்தில் ஒரு செருப்பு மட்டும் கிடந்தது. இருவரின் கண்களும் அந்த செருப்பின் மீது பாய்ந்தன. அம்பலம் அந்த செருப்பை உற்றுப் பார்த்தார். அவருக்கு ஒரு சரியான உண்மை கிடைத்து விட்டது. அவர் அந்த உண்மையை

தாண்டவனிடம் வெளியிடவில்லை. மதகடியில் கிடந்த செருப்பும், முதல் இரவு, கோயிலடியில் கிடந்த செருப்பும் ஒரு ஜோடி! இரண்டும் ஒருவனுடையது! அம்பலம் துரத்தும் போது ஓடிய வேகத்தில் துரை விட்டுச் சென்ற செருப்பைத்தான் முதல் நாள் இரவு அம்பலம் எடுத்து வைத்துக் கொண்டார். இப்போது அதனுடைய ஜோடி கிடைத்தது! ஆம்—பரிமளாவின் காதலன் தான் அவன்—பரிமளாவைப் பிடித்தால் அவனைப் பிடித்து விடலாம்—அவன் மூலம் தங்கம் புதைக்கப்பட்ட இடத்தை கண்டு பிடித்து விடலாம் என்று முடிவு கட்டிக்கொண்டு மௌன மாக நின்றார் அம்பலம். எப்படியாவது பரிமளாவை தன் வீட்டிற்கு தூக்கி வந்து ரகசியத்தை அறிய வேண்டு மென்ற தீர்மானத்துடன் நடக்க ஆரம்பித்தார்—தாண்ட வன் உள்ளமும் போர்க்களமாகி விட்டது. யாரோ ஒரு ஆடவனுடன் தான் தன் மகள் அந்த இரவைக் கழித் திருக்க வேண்டுமென்று முடிவு கட்டிக் கொண்டார். அனைதயாகக் கிடந்த அந்த செருப்பைக் கையிலே எடுத் துக் கொண்டார்.

"என்னய்யா — பரதன் மாதிரி புறப்பட்டு விட்டீர், பாதுகையைத் தூக்கிக் கொண்டு!" என்று கிண்டல் செய்தார் அம்பலம். கேலியை ரசிக்கும் நிலையில் தாண்ட வன் இல்லை. அம்பலந்தான் என்ன; கேலி செய்தாரே தவிர—அவர் எண்ணமெல்லாம், பரிமளாவிடம், அந்த ரகசியத்தை எப்படி விசாரிக்கலாம் என்பதிலேயே மூழ்கி யிருந்தது. முதல் நாள் இரவு கோயிலில் கண்ட காட்சி கள் அனைத்தும் அவர் மனக் கண்ணில் நிழலாட்டம் போட்டன. இருவரும், ஊர்ப் பக்கம் திரும்பினர்கள்; ஒவ் வொருவரும் தங்களுக்குள்ளாகவே ஒவ்வொரு பயங்கர முடிவை செய்து கொண்டு!

7

கள்ளத் தோணிகள் இலங்கைக் கரையை அடைய வேண்டுமென்றால் அதற்கு நல்ல நேரம் இரவு தான். மன்னாவிலிருந்து இலங்கைக் கரையோரம் ஏறத்தாழ நாற்பது மைல்கள் இருக்கலாம். காற்று சாதகமாக வீசினால் இரண்டு மணி நேரத்தில் கரை போய்ச் சேர்ந்துவிட முடியும். இல்லையேல் காற்றை அனுசரித்து தாமதமாகத் தான் போய்ச் சேரமுடியும். மாயாண்டிக் கிழவர் பிரயாணம் செய்த கள்ளத் தோணிக்கு காற்றின் உதவி கிடைக்க வில்லை. பொழுது விடிவதற்குள் எப்படியும் கரை போய்ச் சேர்ந்துவிடவேண்டும் என்று ஐயப்பன் மிகவும் கஷ்டப் பட்டான். படகிலுள்ள ஆட்கள் மீதெல்லாம் பாய்ந்து விழுந்தான். இயற்கையான பயங்கரக் குரலில் கத்தினான். எவ்வளவுதான் அவன் அலட்டிக்கொண்டும் கூட தோணி வேகமாகச் செல்ல முடியவில்லை. கிழக்கு நோக்கிச் செல்ல வேண்டிய தோணி காற்றை எதிர்த்து கடலைக் கிழித்து வேகமாகப் போவதென்றால் சாமான்யமா?

இருட்டோடு இலங்கைக் கரையை அடைய முடியாதென்று ஐயப்பன் முடிவு கட்டிவிட்டான். உடனே ஆட்களிடம் அவசர உத்திரவு போட்டான்.

"டேய்—பசங்களா! இனிமே உங்க ஜம்பம், சாயாது! மரியாதையா இங்கேயே தோணியை நிறுத்திப் போடுங்க—இருட்டினவுடனே புறப்படலாம்—"

என்று கத்தினான். ஐயப்பனின் சொற்படியே தோணி நிறுத்தப்பட்டது.

"இங்கிருந்து எத்தனை மைலப்பா இருக்கும்?" என்று மாயாண்டிக் கிழவர் கேட்டார்.

"பத்து மைல் இருக்கும் — என்? நீஞ்சிப் போகலா மென்று பார்க்கிறீரா?" என்று சிரித்தான் ஐயப்பன்.

"நீந்திப்போக என் உடலிலே வலுவேது? நீ வேண்டு மென்றால் நீந்தியும் போவாய் — தாண்டியும் போவாய்? என்னால் முடியுமா?

"குறும்புக்காரக் கிழவா! இந்தா—இதைச் சாப்பிடும்—" என்று ஒரு மூட்டையைப் பிரித்தான் ஐயப்பன். அதில் கட்டுச் சோறும், வறுத்த கருவாடும் இருந்தது.

"அருமையான கருவாடு! பார்த்தீரா ஐம்முன்னு வாசிக்குது! வாசனையை புடிச்சிக்கிட்டே இந்த சோத்தை கொஞ்சம் வயத்திலே தள்ளும்—உம்!" என்று கிழவரிடம் நீட்டினான்.

பசியோடிருந்த கிழவரும், சாப்பிடத் துவங்கினர். தோணியிலிருந்த ஆட்களும் தங்கள் வயிற்றை நிரப்பும் கடமையில் துரிதமாக ஈடுபட்டார்கள். தோணி நடுக் கடலில் நிறுத்தப்பட்டு, கடல் அலைகளின் மோதுதலால் ஊஞ்சல் போல ஆடிக் கொண்டிருந்தது. ஐயப்பன் வயிறு புடைக்க சாப்பிட்டுவிட்டு ஒரு பெரிய ஏப்பம் விட்டான்.

அந்த ஏப்பம் வெளிப்படும்போது கூட அவனது கூரிய பார்வை மாயாண்டிக் கிழவரின் மடியிலேயே இருந்தது. கொல்லர் வீட்டுப் பெண் கடலிலே கவிழ்ந்த கதையைச் சொல்லும்போது, மாயாண்டிக் கிழவர் அவரையுமறியாமல் தன் மடியைத் தடவிப் பார்த்துக்கொண்டார். அதை கவனித்துவிட்ட ஐயப்பன், எப்படியும் கிழவரின் மடியிலுள்ளது என்ன என்பதை தெரிந்துகொள்ளவேண்டுமென்று துடித்தான். ஏதோ ஒரு ஆவல் அவனைத் தூண்டியபடியிருந்தது. அந்தப் பொருளின் மீது அவனுக்கு சந்தேகம் ஏற்பட்டுவிட்ட காரணத்தால் "என்னையா மடியிலே?" என்று திடீரெனக் கேட்பதற்கு அவன்

மிகவும் தயங்கினான். ஒருவாறு தன்னை சமாளித்துக் கொண்டு, தந்திரமாகப் பேச்சுக் கொடுத்தான். அப்போதும் அவனையறியாமல் அவன் முகத்தில் அவனைக் காட்டிக் கொடுக்கும் அசடு வழிந்தது.

"மாயாண்டி — வெத்திலே பாக்கு கொடுமய்யா!"

"என்னிடம் ஏது, வெற்றிலே பாக்கு!"

"மடியிலே வைத்திருக்கிறீரே?"

"அது வெற்றிலே பாக்கு அல்ல!"

"பிறகென்னவாம்? எங்கே பார்ப்போம்!"

என்று மடியைத் தொடப் போனான் ஐயப்பன், அதற்குள் கிழவர் சமாளித்துக்கொண்டு "ஐயப்பா! அதெல்லாம் — கை நீட்டுகிற வேலை வைத்துக் கொள்ளாதே — உனக்கு வேண்டியது வெற்றிலே பாக்குத்தானே — அது என்னிடமில்லை — அதோடு விட்டு விடு!"

"ஏன் உம்மிடம் கை நீட்டக் கூடாதா?"

"ஐயப்பா—உன்னுடு நான் சமமாகப் பழகுவதை நீ தப்பாக எடுத்துக்கொண்டால் எனக்கு கோபம் வரும், அவ்வளவுதான் சொல்வேன்."

"அட பெரிமனுஷா? என்னை சமமாகப் பழகினதாலே என்னய்யா வந்துட்டுது உமக்கு! கை நீட்டித் தொடக் கூடாதாமே இவரை! செத்து சமுத்திரத்திலே விழுந்தீர்னு அப்பயாரய்யா—உம்மைத் தொட்டுத் தூக்குவாங்க? உறவு முறை ஜாதி சொந்தம், பிள்ளே குட்டி ஏராளமில்லே இவருக்கு!"

"பிள்ளே குட்டி — உறவு முறை இல்லாவிட்டால் என்ன? சாகும்போது அழுவதற்காக ஜாதி, சொந்தம்; பிள்ளைக்குட்டிகள் எல்லாம் வேண்டுமா என்ன? உலகம் தோன்றிய நாளாய், மனிதர்கள் ஒருவர்பின் ஒருவராக அழுதுகொண்டேதான் போய்க் கொண்டிருக்கிறார்கள் —

என்னுடைய சாவில் இந்த சம்பிரதாயமும் இல்லாமல் ஒழியட்டுமே"

"ஓய்! வேதாந்தி—பேச்சை ஏன் நீட்டுகிறீர்? மடியிலே என்னய்யா கனம்? சொல்லும் என்றுல்.....".

"சொல்லத் தேவையுமில்லை — நீ கேட்க வேண்டிய அவசியமுமில்லை—"

"வெட்டு ஒண்ணு—துண்டு ரெண்டா பேசுகிறீரே!"

"அதுபோல அவசியம் ஏற்படுகிறது! பேசுகிறேன்!"

ஐயப்பன், அதற்கு மேலும் கிழவரிடம் கிளறிக் கேட்க விரும்பவில்லை. ஆனல் ஏதோ ஒரு முக்கியமான பொருள் மட்டும், அவர் மடியில் இருக்கிறது என்பதை அவன் புரிந்து கொண்டான். மாயாண்டி தன் மீது சந்தேகப் பட்டுவிடக் கூடாதே என்பதற்காக பேச்சையும் மாற்றினன்.

"உம்—ராத்திரி பத்து மணி வரையிலே இங்கேயே கிடக்க வேண்டியது தான்!"

"அய்யோ — அவ்வளவு நேரமா?" என்றூர் கிழவர்.

"ஆமாம் — நடு ஜாமத்திலே கரைக்குப் போனுத் தானே; யார் கண்ணிலும் படாம இறங்க முடியும்—"

என்று சொல்லிக்கொண்டே வெங்காய மூட்டையின் மீது சாய்ந்துகொண்டான் ஐயப்பன். மாயாண்டிக் கிழவரும் சிந்தனையில் ஆழ்ந்தார். கதிரவனின் வெம்மை அவரைக் கஷ்டப்படுத்திய போதிலும், அவர் அதைப் பொருட் படுத்தாதது போல காட்டிக்கொண்டார். தோணியிலுள்ள மற்ற ஆட்களும் மூட்டைகளில் சாய்ந்து கொண்டார்கள்—எல்லோரும் களைப்பாறத் துவங்கியதைக் கண்ட ஐயப்பன் ஆத்திரத்தோடு,

"டே டே! எல்லாரும் சுருண்டு போய்ட்டா என்னடா ஆகிறது! சுற்றியும் முத்தியும் பாக்கிறத்துக்கு ஒருத்தனுவது எழுந்திரிச்சு உட்காருங்கடா!" என்று கத்தினன்,

"நான் பார்த்துக் கொள்கிறேன் — நான் படுக்கமாட்டேன் — பயப்படாதே ஐயப்பா!" என்று கிழவர் கூறினர். ஐயப்பன் மீண்டும் மூட்டையில் சாய்ந்து கொண்டான். அவனுடைய சிந்தனையெல்லாம் மாயாண்டிக் கிழவரின் மடியிலேயுள்ள பொருளைப் பற்றியே சுழன்று கொண்டிருந்தது.

மாயாண்டிக் கிழவரின் எண்ணமோ, முதல் நாள் இரவு தான் சந்தித்த அந்தக் காதலர்களின் மீது வட்டமிட்டது.

குறிக்கோளற்ற தனது பயணத்தின் குறுக்கே சந்திக்க நேரிட்ட அந்தக் காதல் புருக்களுக்கு இடையூறு விளைவிக்க வேண்டிய நெருக்கடி ஏற்பட்டதை நினைத்து நினைத்து கிழவர் பெருமூச்சு விட்டுக் கொண்டார். அன்றைய பகல் பொழுது முழுதும்— நடுக் கடலிலே, சிந்தனையிலும் பெருமூச்சிலுமாகக் கழிந்தது அவருக்கு!

இரவு வந்தது—மருங்கப்பள்ளம் கிராமம் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தது. அந்த அமைதி நிறைந்த இரவில் தன் கண்கள் மட்டுமே மூடாமல் கிடக்கின்றன என்று பரிமளா நினைத்துப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தாள். அவள் விஷயமாக அன்றிரவு, டல கண்கள் மருங்கப்பள்ளத்தில் விழித்திருந்தன என்பது அவளுக்கு அப்போது தெரியாது. அவள் வீட்டிலேயே இரண்டு கண்கள் அவளையறியாமல் பயங்கரமாக மின்னிக் கொண்டிருந்தன. பரிமளா. தன்னுடைய எதிர்காலம் எப்படி எப்படி சிக்கல் நிறைந்ததாக மாறுமோ என்று தனக்குத்தானே கேட்டுக் கொண்டாள். அவளுடைய எதிர் காலத்தைப் பற்றி ஒரு நல்ல முடிவு செய்து விட்டதாக உறுமிக் கொண்டிருந்தார் தாண்டவன். 'பரிமளாவின் தாய் அஞ்சலை, நன்றுகத்

தூங்கிக் கொண்டிருந்தாள். தாண்டவனுக்கு நிச்சயமாகப் புரிந்து விட்டது, தன் மகள் கெட்டு விட்டாள் என்று! யாரோ ஒரு பயலுடன் தன் குமாரி, சகவாசம் வைத்துக் கொண்டு, குடும்பத்து மானத்தைப் போக்கி விட்டாள்; இதை வளர விடாமல் தடுக்க, அவளைக் கொன்றுவிடுவது தான் நல்லது என்று தீர்மானித்தார் தாண்டவன். பக்கத்திலே கிடக்கிறது பளபளப்பான கத்தி! அதைக் கையிலே எடுத்துக் கொண்டார். பளிங்குச் சிலை போன்ற பரிமளாவை கண்ட துண்டமாக்கிவிட எழுந்தார். தந்தை–மகள் — என்ற அந்த ரத்தபாசம், எங்குதான் போய் மறைந்து கொண்டதோ தெரியவில்லை. ரத்த பாசத்தை விட சிறந்த பாசமில்லை என்பர்—அது தாண்டவன் விஷயத்தில் பொய்யாகவே போய்விட்டதா? ஆம் — அப்படித் தான்! அதைத்தான் அந்தக் கத்தியின் பளபளப்பு சொல்லிக் காட்டியது.

பரிமளா படுத்திருக்கும் அறைக்கு அருகே தாண்டவன் கத்தியுடன் வந்துவிட்டார் — ஒரு விநாடி; பரிமளாவின் அழகான உடல் துண்டாடப்பட்டுவிடும்!

தாண்டவனின் உடல் வியர்வைக் குளமாகிவிட்டது. கத்தியை சரியாகக் கையிலே பிடித்துக்கொண்டார்.

பரிமளா படுத்திருக்கும் அறைக்குள்ளே காலடி எடுத்து வைத்தார். உள்ளே நுழைய வேண்டும்—ஒரே வெட்டு—கொலை—மனம் நிம்மதியாகிவிடும், இது தான் தாண்டவனின் முடிவு! — ஓங்கிய கத்தியுடன் உள்ளே நுழைந்தார் தாண்டவன்—ஆனால் அவர் அங்கே என்ன கண்டார்?

பரிமளாவை யாரோ சிலர் கட்டித் தூக்கிக்கொண்டிருந்தார்கள். தாண்டவன் உள்ளே நுழைந்ததைப் பார்த்த அவர்கள், அவர் மீது ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து, அவர் வாயையும், கால் கைகளையும் கட்டிப் போட்டு விட்டார்கள் —பரிமளாவுக்கும் பேச முடியாதபடி வாயிலே கட்டு! ஒரு

முரட்டுக் கிழவன், பரிமளாவை தன் தோளிலே தூக்கிக் கொண்டு ஓடினான்—இந்த சந்தடியில் விழித்துக் கொண்ட அஞ்சலை அலறி அடித்து எழுந்து வருவதற்குள், பரிமளாவுடன் முரடர்கள் ஓடிவிட்டார்கள்—அஞ்சலை, அவசர அவசரமாக, கணவனை அவிழ்த்து விட்டாள். தாண்டவனுக்கு ஒன்றுமே புரியவில்லை.

"என்னுங்க இது! எங்கே பரிமளம்?"

தாண்டவன் பதில் பேசவில்லை.

"மறுபடியும் மோகினிப் பிசாசு தூக்கிட்டுப் போயிட்டுதா?" என்று அலறினாள் அஞ்சலை!

"சீ! சும்மாகிட—" என்று அதட்டினார் தாண்டவன்.

8

பரிமளாவைத் தூக்கிக்கொண்டு போன அதே நேரத்தில்—நடுக்கடலிலே பயணம் நடத்தும் மாயாண்டிக் கிழவரின் படகிற்கும் புதிய ஆபத்து பிறந்தது. இருட்டிப்போய் சிறிது நேரத்திற்கெல்லாம் ஐயப்பனின் உத்திரவுப்படி தோணியை கரை நோக்கி செலுத்த ஆட்கள் விரைந்தனர். ஆனால் அன்றைய தினமும் காற்று அவர்கட்கு சாதகமாக வீசவில்லை. ஆட்கள் தங்கள் உடலை வளைத்து வியர்வை கொட்டக் கொட்ட உழைத்து படகு செலுத்தும் வேலையில் ஈடுபட்டனர். ஐயப்பன் மட்டும் தைரியமாக, "இன்னும் பத்துமைல் தூரம்தான்! ஊராத்துரை லேட்

ஹவுஸ் தெரிஞ்சுட்டா அப்பறம் ஓடுற ஓட்டம்—வல்வெட்டித்துறையிலே போயி, டகார்னு இறங்கிடலாம்—உம்—வேகமா விடுங்கடா!" என்று கத்தினான்.

"காற்று சாதகமாக இல்லேயே" என்றார் மாயாண்டி!

"சாதகம் இல்லேன்னு பாதகம் பண்ண வேண்டியது தான்" என்று ஐயப்பன் கிண்டல் செய்தான்.

"என்னப்பா அர்த்தமில்லாமல் பேசுகிறாய்?"

"அர்த்தமில்லாதவன் தான் இந்த ஐயப்பன்!"

"ஆமாம், ஆமாம்—அது உண்மைதான்!"

"எது உண்மை! ஏ கிழவா! என் சேதி தெரியுமில்லே உனக்கு?"

மாயாண்டிக் கிழவருக்கு சந்தேகமும் திகிலும் பிறந்து விட்டது. தன்னிடம் மரியாதையாகவும், பரிவோடும் நடந்து கொள்ளும் ஐயப்பன் திடீரென்று மாறியிருப்பதற்குக் காரணத்தை அவர் புரிந்து கொண்டார். தன் மடியிலே பத்திரமாக இருக்கும் அந்தத் தாள் உரைக்கும், சிறு முடிச்சுக்கும் ஐயப்பன் அடிபோட்டு விட்டான்—என்பதையும் அவர் தெரிந்து கொண்டார்.

அநாவசியமாக ஐயப்பனிடம் கொல்லர் வீட்டுப் பழைய கதையை ஏன் பேசினேம்; பேசியதோடு விடவில்லை; முழு விபரங்களும் இந்த முரடனிடம் ஏன் கூறினேம்; என்றெல்லாம் அவர் தனக்குத் தானே நொந்து கொண்டார். இலங்கை போய் சேரும் வரையில் எப்படியும் அவனிடமிருந்து தன் ரகசியத்தைக் காப்பாற்றிக் கொண்டால், அதன் பிறகு கவலையில்லையென்று முதலில் நினைத்திருந்தார். இப்போது ஐயப்பனின் நடவடிக்கையையும், பேச்சுத் தோரணைகளையும் பார்த்தால் இலங்கை போன

பிறகும் அவன் தன்னை விடமாட்டான் போலிருக்கிறது என்று அஞ்சினர்.

காற்றில் தடுமாறும் தோணியைக் கூட கஷ்டப்பட்டு, செல்ல வேண்டிய திசைக்குத் திருப்பிக் கொண்டிருந்தார்கள். ஆனல் மாயாண்டிக் கிழவர் தன் மன அலைகளை அடக்க முடியாமல் திணறிக் கொண்டிருந்தார். அவரது முக மாற்றங்களை நிலவு வெளிச்சத்தில் கொஞ்சம், கொஞ்சம் பார்க்க முடிந்த ஐயப்பன், தன் உதட்டை கடித்துக் கொண்டு ஏதோ ஒரு பெரிய காரியம் செய்வதற்குத் தன்னைத் தயார்படுத்திக் கொண்டான். ஆட்கள் எல்லாம் மிகப் பரப்பரப்புடன் தங்கள் கடமையில் ஈடுபட்டிருந்தனர். ஐயப்பன் மட்டும் தோணியின் நடுவேயுள்ள பாய்மரத்தின் மீது சாய்ந்து நின்று கொண்டு, மாயாண்டிக் கிழவரையே பார்த்துக் கொண்டிருந்தான். தன்னிடமுள்ள ஒரு பொருளைப் பறிக்க எதிரே ஒருவன் நிற்கிறான் என்ற எண்ணம் வந்துவிட்ட போது நம்மையறியாமலே நம் கை அந்தப் பொருளைத் தொட்டுப் பார்த்து அதை ஜாக்கிரதைப் படுத்துவது இயற்கைதான். அதேபோல மாயாண்டிக் கிழவரும் தன் மடியை தொட்டுத் தொட்டுப் பார்த்துக் கொண்டார்.

"ஓய் மாயாண்டி!" என்று பயங்கரமாக கூச்சலிட்டான் ஐயப்பன்.

கிழவர், அமைதியாக அவனிடம் பேசினர். "ஐயப்பா! ஏனிப்படி திடீரென மாறி நிற்கிறாய்? நாமெல்லாம் எப்படி பழகியிருக்கிறோம்–இப்போதென்ன உனக்கு வந்தது?"

"பழகியவனைத்தானய்யா நீ ஏமாத்துறீர்? போனப் போகுதுன்னு உம்மை தோணியிலே ஏத்தி வந்தா, நீரு நமக்கிட்டேயே உம்ம ஏமாத்து வேலையை காட்டுறீயே!"

"என்னப்பா ஏமாற்றினேன்?"

"மடியிலேயிருக்கிறது என்னன்னு சொன்னு, உன் தலையா வெடிச்சு போய்டும்! அதைச் சொன்னு என்ன?"

"அது உனக்குத் தேவையில்லாத சங்கதி; அதனல் சொல்லவில்லை!"

"சீ! பொய்க்குளி கிழவா! புடிடா இவனை!" என்று கிழவர் மீது பாய்ந்தான் ஐயப்பன். கிழவருக்குப் பின்னே இருந்த இன்னொரு ஆளும் ஐயப்பன் சொற்படி கிழவர் மீது பாய்ந்து, அவர் கைகளைப் பின் புறமாகக் கட்டிக் கொண்டான். கிழவர் திமிறினர், நடுக் கடலிலே அந்த தள்ளாத கிழவர் அத்தனை பேரை எப்படி எதிர்க்க முடியும்! இருந்தாலும் ஆவேசமும், முரட்டுத் தைரியமும் தலையெடுத்த காரணத்தால் கிழவர் தன் காலின் பலங்கொண்ட மட்டும் ஐயப்பனை உதைத்தார். அவன் கீழே விழுந்து விடாமல் சமாளித்துக்கொண்டு நின்றான். பினனல் கைகளைப் பிடித்துக் கட்டிக் கொண்டவனிடமிருந்து விடுபட்டு தோணியின் வேறு பக்கம் பாய்ந்தார். "ஏய் விடாதே!" என்று ஐயப்பன் பயங்கரமாகக் கத்தினன். எதிர்த்த மூலையில் வேலை செய்துகொண்டிருந்த ஆட்களும் கிழவரை மடக்கிக் கொண்டனர். ஆட்கள் அங்குமிங்கும் ஓடியதாலும் கிழவர் ஆவேசமாகத் துள்ளிக் கொண்டிருந்ததாலும் படகு வேகமாக ஆட ஆரம்பித்தது. கவிழ்ந்து விடுமோ என்று நினைக்கிற அளவுக்கு அந்தத் தோணி கடலிலே தத்தளித்தது. கிழவரோ இனி எதுவும் செய்ய முடியாது என்ற முடிவுக்கு வந்து விட்டார். கடலில் விழுந்தால் மட்டுமே தன் எண்ணம் நிறைவேறும்; இல்லையேல் பல நாளாய்ப் பாதுகாத்து வரும் அந்தப் பொருள்கள் இந்தப் பாதகர் வசம் சிக்கிவிடும் என்று தீர்மானம் செய்துகொண்டார் ஆகவே; எதிரே ஆட்கள் மடக்கியதும் ஒரே பாய்ச்சலாக கடல் நோக்கிப் பாய்ந்தார். ஆனல் அவர் கடலில் விழுந்து

விட ஐயப்பன் விடவில்லை. தடுத்துப் பிடித்துக்கொண் டான். எல்லோரும் சூழ்ந்துவிடவே கிழவர், வசமாக சிக்கிக் கொண்டு விழித்தார். ஐயப்பன் அவரது மடியை அவிழ்த்து தாள் உரையை எடுத்துக்கொண்டு, வேட்டி யில் முடிந்திருந்த முடிச்சையும் அவிழ்த்துப் பார்த்தான். அதில் ஒரு சிறிய கல் இருந்தது, அதையும் எடுத்துக் கொண்டான். தாள் உரையிலே இருப்பது என்ன என்று பார்ப்பதற்காக பக்கத்திலிருந்தவனே தீக்குச்சியை கொளுத்தச் சொன்னான். தீக்குச்சியின் வெளிச்சத்திலே, மாயாண்டிக் கிழவர் கண்ணீர் விடுவது நன்றாகத் தெரிந் தது! கொளுத்திய குச்சி முழுவதையும் அவர் முகத்தைப் பார்த்து ரசிப்பதற்கே செலவிட்டான் ஐயப்பன்.

"ஒரு தாள் உரை—ஒரு கல்லு! இதை இழப்பதற்கு இந்தக் கிழவன் இப்படி அழுவானேன்?" என்ற கேள்வி ஐயப்பனை அதிக குழப்பத்திற்கு ஆளாக்கியது—மீண்டும் ஒரு குச்சியைக் கிழிக்கச் சொல்லி, அந்த ஒளியில் தாள் உரையைப் பிரித்துப் பார்த்தான் — அதில் குறுக்கும் நெடுக்குமாக கோடுகள் போட்ட ஒரு செப்பேடு சிறிய அள வில் இருந்தது. கிணறு போல ஒரு வட்டம்—மரம் போல ஒரு குறிப்பு—இன்னும் ஏதோ உருவங்கள் — அந்த செப் பேட்டில் எழுதப்பட்டிருந்தன. ஐயப்பனுக்கு கிழவர் சொன்ன கதையில் காணுமற்போன செப்பேடும், சிறிய கல்லும் ஞாபகத்திற்கு வந்தன. செப்பேட்டில், காணப் படும் இடத்தில் அந்த சிறு கல்லைக் கொண்டுபோய் வைத் தால், அந்தக் கல், புதையல் இருக்குமிடத்தைக் காட்டி விடும் என்று கிழவர் சொன்ன கதையின் முடிவுரை ஐயப்பனை இப்போது மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. அந்த மகிழ்ச்சி மின்னிய அந்த இமைப் போதில் ஐயப்பன் கண்ட கனவு எவ்வளவு மகத்தானது! செப்பேட்டுக் குறிப்பின்படி கல்லைக் கொண்டுபோய் தரையில் வைக்கிறான். அந்தக்

க்கல் காந்தம் போல் இழுக்கப்பட்டு ஓடுகிறது. அது நிற்கிற இடத்தில் தோண்டிப் பார்க்கிறான். இரும்பைத் தங்கமாக்கும் குளிசக் கல்லும், குடங் குடமாக தங்கத் துகள்களும் கிடைக்கின்றன — பிறகு? வைர மிழைத்த கட்டிலிலே ஐயப்பன் வைப்பாட்டியார் புடை சூழ சயனித்திருக்கிறான். 'ஐயப்பா' என்ற பெயரால் பல கப்பல்கள் பிரயாணிகளை ஏற்றிக்கொண்டும், ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்களை ஏற்றிக்கொண்டும் உலகெலாம் வியாபித்திருக்கும் சமுத்திரத்திலே பயணம் நடத்துகின்றன.

இப்படி ஆனந்தமான கனவு ஒருக்கணம் தோன்றி மறைந்தது ஐயப்பனுக்கு! அந்த செப்பேட்டையும், சிறிய கல்லையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது தோணியிலேயிருந்த ஆட்களில் ஒருவன் "அய்யோ அய்யோ ஆபத்து!" என்று கத்தினன். அனைவரும் திடுக்கிட்டுத் திரும்பினர்கள். 'பளீச்' என்று ஒரு ஒளிக் கதிர் அந்த தோணியிலே பட்டது! ஐயப்பன், "அட கடவுளே!" என்று அலறி விட்டான். அந்த வெளிச்சம் ஐயப்பன் கண்ணிலே பட்ட காரணத்தால் சில விநாடிகள் அவனால் சரியாக எதையும் பார்க்க முடியவில்லை.

"போலீஸ்தான்! போலீஸ்தான்!!" என்று கத்தினன் ஒருவன்.

"போச்சு! போச்சு!!" என்று அலறினன் இன்னொருவன்.

"தோணியைத் திருப்பி காற்றுவாக்கிலே வேகமா விடுங்கடா, தடிப்பசங்களா!" என்று விகாரக் குரலில் கூச்சலிட்டான் ஐயப்பன்.

"கிட்ட வந்துவிட்டார்கள்" என்றன் ஒரு தொடை நடுங்கி.

"சீ! முட்டக்கூட வருவார்கள் — முழு முட்டாளே! தள்ளுங்கடா சீக்கிரம் — உம், பாயை மாத்தி கட்டுடா;

பரதேசிப் பயலே! சோத்து நாய்களுக்கு சுறு சுறுப்பே கிடையாது!" என்று குலத்தான் ஐயப்பன். தோணி, காற்று வாக்கில் திருப்பப்பட்டு வேகமாக ஓடியது—வெங் காய மூட்டைகள் எல்லாம் ஒவ்வொன்றுக கடலிலே வீசி யெறியப்பட்டன. ஆனலும் முழுவதும் கடலுக்குள் போய்ச் சேர முடியவில்லை. ஒவ்வொரு மூட்டையையும் நிதானமாக எடுத்து கடலுக்குள்ளே வீசுவதென்றல் சாதாரணமாக இருக்கிறதா? ஐயப்பனின் தேகம் பதறியது. மாயாண்டிக் கிழவருக்கு உலகமே சுற்றுவது போல் தெரிந்தது. அவர் எதுவும் பேசவில்லை. வெங்காய மூட்டைகள் கடலுக் குள்ளே போய் யாருக்கும் பயனில்லாது போவது போலவே தன்னுடைய ரகசியப் பொருள்களும் யாருக்கும் பயனில்லா மல் போகப் போகிறது என்று எண்ணிக் கண்ணீர் வடித் தார் அவர். ஏறத்தாழ படகு காலி செய்யப்பட்டு விட்டது. இனிமேல், "மீன் பிடிக்க வந்தோம்" என்று கூறி தப்பித் துக்கொள்ள ஒரு சாக்கு இருக்கிறது என நினைத்து ஆறுத லாக ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டான். எவ்வளவு தான் ஐயப்பனின் படகு வேகமாகப் போனலும் பின்னே துரத்தும் போலீஸ்காரர் படகிடமிருந்து தப்பிவிட முடிய வில்லை. "பட், பட்" என்று துப்பாக்கி ஒலியும் கேட்க ஆரம்பித்தது! ஐயப்பன் ஆட்கள் நடுங்கிப் போய் அசை வற்று நின்று விட்டனர். படகு மட்டும் காற்று வாக்கிலே —அதாவது மீண்டும் "மன்னார" இருக்கும் திக்கு நோக்கி போய்க் கொண்டிருந்தது. ஆட்களின் துரிதமில்லாமல் படகு எவ்வளவு நேரம் காற்றின் உதவியால் மட்டும் செல்ல முடியும்! போலீஸ்காரர்கள் வந்த தோணி மிகவும் அருகே வந்துவிட்டது. ஆட்கள் எல்லாம் நடுங்கிக் கொண்டிருந் தார்கள். அவர்களைப் பார்த்து ஐயப்பன், தன் பயத்தை வெளியில் காட்டிக் கொள்ளாமல் "பயப்படாதிங்க, போலீஸ் காரனுகிட்ட உளராதிங்க — எல்லாரும் ஒண்ணு போல, மீன் பிடிக்க வந்ததா சொல்லுங்க!" என்று கூறினன்.

அப்போது மாயாண்டிக் கிழவர், 'ஐயப்பா! ஜாக்கிரதை, கள்ளத்தோணி வியாபாரம் செய்யத்தான் வந்தோம் என்று நான் சொல்லப் போகிறேன்' என்று கர்ச்சித்தார்.

"என்னடா கிழவா?"

"ஆமாம் — மரியாதையாக அந்த செப்பேட்டையும், கல்லையும் கொடுத்துவிடு — இல்லாவிட்டால் எல்லோரையும் நானே காட்டிக் கொடுத்துவிடுவேன்" என்று உறுமினர் மாயாண்டி.

"என்ன சொன்னாய் — காட்டிக் கொடுப்பியா? கிழ நாயே! — உன்னை உயிரோட கடல்லே மிதக்க விடுறேன் பாரு!—" என்று சபதமிட்டு கொண்டே, ஐயப்பன் கிழவனைத் தூக்கி கடலில் வீசப் போனான். அந்த நேரத்தில் போலீஸ்காரர்கள் அடித்த வெளிச்சம் ஐயப்பனின் கண்ணில் மின்னல் போலப்பட்டு, கண்களைத் திறக்க முடியாமல் செய்துவிட்டது. அதே சமயத்தில் பல குண்டுகள் பட படவென வெடித்தன.

அதிர்ச்சி அடைந்த ஐயப்பன் தோணிக்குள்ளேயே கிழவனைப் போட்டுவிட்டு, தன்னிடமிருந்த செப்பேட்டையும், கல்லையும் கிழவனிடமே கொடுத்து "கிழவா! கிழவா! எங்களைக் காட்டிக் கொடுத்துவிடாதே!" என்று கெஞ்சினான்.

மாயாண்டி சிறு கல்லையும் செப்பேட்டையும், உள்மடியிலே வைத்து பத்திரப்படுத்திக் கொண்டு, தோணியிலிருந்தபடியே திடீரெனக் கடலில் குதித்துவிட்டார்.

போலீஸ்காரர் சோதனைக்கு ஆளாகி அந்தக் கல்லும் செப்பேடும் பறி போவதைவிட தானும் அந்தப் பொருள்களும் கடலிலே மறைந்து அழிந்து விடலாம் என்ற முடிவிலே அவர் விழுந்து விட்டார். அவர் கடலிலே விழுந்ததற்கும், போலீஸ்காரர்கள் ஐயப்பன் படகை ஆக்ரமிப்ப

தற்கும் சரியாக இருந்தது. போலீஸ் அதிகாரிகளில் கம்பீரமான ஒரு உத்தியோகஸ்தர், அழகான இளந்தாடி உடையவர்—மாயாண்டிக் கிழவர் கடலிலே குதித்ததைக் கண்டு, அவரைத் தொடர்ந்து தானும் குதித்துவிட்டார். கொந்தளித்துக் குமுறும் அலைகளினுடனே அந்த இளந் தாடி உத்தியோகஸ்தர் மிகவும் சிரமப்பட்டு நீந்தினர். சிறிது நேரம் அவர்கள் இருவரும் குதித்த இடத்திலே அமைதி நிலவியது. இனி இருவருமே திரும்பி வர மாட்டார்கள் என்ற முடிவு கட்டிக் கொள்ளவேண்டிய நிலை பிறந்தது. ஐயப்பன் உட்பட அனைவருக்கும் போலீஸ்காரர்கள் கைகளிலே விலங்கு பூட்டிவிட்டார்கள். அது வரையிலே கடலில் விழுந்த இருவரையும் காணவில்லை. போலீஸ் படகிலிருந்து பெரிய டார்ச் லைட் கடல் நோக்கி அடிக்கப் பட்டது. அந்த வட்டவடிவ வெளிச்சத்திலே, ஒரு கொத்து தாடி மட்டும் மிதந்தது. அதை ஐயப்பன் கோஷ்டியார் யாரும் பார்க்கவில்லை. போலீசார் மட்டுமே பார்த்தார்கள். உடனே வெளிச்சத்தை வேறுபக்கம் திருப்பினர்கள். கிழவரின் உடலைத் தூக்கிக் கொண்டு, போலீஸ் உத்தியோகஸ்தர் படகிடம் வந்து கொண்டிருந்தார். எல்லா போலீசாரும் உதட்டைப் பிதுக்கினர்கள். கிழவர் தீர்ந்துவிட்டார் என்று அவர்களுடைய கண்கள் செய்தி தெரிவித்தன. போலீஸ் உத்தியோகஸ்தர் கிழவரின் உடலை படகிலே வைத்தார். தன்னுடைய இளந்தாடி கடலிலே போய்விட்டதை அந்த உத்தியோகஸ்தர் உணர்ந்தார். கிழவர் கண் விழிக்கவில்லை. அவர் மட்டும் கண் விழித்துப் பார்த்திருந்தால், அந்தப் போலீஸ் உத்தியோகஸ்தர், முதல் நாள் இரவு தான் சந்தித்த துரைதான் என்பதைத் தெரிந்து கொண்டிருப்பார்.

9

மாயாண்டிக் கிழவர் பிரயாணம் செய்த கள்ளத் தோணி போலீசாரிடம் சிக்கிய அதே நேரத்திலே தான்— முரடர்களின் கையிலே சிக்கிய பரிமளாவும் பிரக்ஞையற்ற நிலையில் தூக்கி வரப்பட்டாள். அந்த எழில் முல்லைக் கொடி எங்கு கொண்டுபோகப் படுகிறாள்? பறித்துவிட்ட அல்லித் தண்டுபோல் துவண்டு கிடக்கும் அந்தத் தோகை மயிலை — தொட்டாலே இனிக்கும் சுவைப் பேழையை — தொடுத்தெடுத்த மலர்க் குழுவை — தோளிலே சுமந்து ஓட்டமும் நடையுமாக விரைந்து கொண்டிருந்தார்கள், அந்தக் கொழுத்த மனிதர்கள். சுமை தாங்கும் கழுதைக்கு முதுகிலே அடுக்கியிருக்கும் பட்டுத் துணியின் அருமை பெருமை தெரியுமா? பரிமளாவைத் தூக்கிச் செல்லும் துஷ்டர்களும், கழுதையைப்போல எஜமான விசுவாசத்தை மட்டும் கடமையாகக் கொண்டு காரியமாற்றினர்கள். அதனால் பரிமளா—மந்தி கை சிக்கிய மாலையாகாமல் — காப்பாற்றப்பட்டாள்!

அந்தக் காட்டான்களின் மந்தை கடற்கரை நோக்கித் தான் போகிறது என்பது விரைவிலே தெரிந்துவிட்டது. "வேகமா! வேகமா!" என்று ஒருவன் மெதுவாக சப்தம் போட்டுக்கொண்டே போனான். அவனைத் தொடர்ந்து மற்றவர்கள் ஓடிக் கொண்டிருந்தார்கள். பின்னல் யாராவது தொடர்கிறார்களா என்று சிலர் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டார்கள். அவர்களது வேகமான நடையிலே, அவர்களது பார்வைக்கு ஆகாயத்திலே நிலவும் வேகமாக ஓடுவதுபோல் தெரிந்தது. ஓடும் நிலவின் பிம்பத்தை தண்ணீரில்தான் காணமுடியும்; இதோ தரையிலும் காணமுடிகிறதே என்பதுபோல் பரிமளாவின் முகம் காட்சியளித்தது. ஆம்; தெளிவற்று வாடிக்கிடந்தது

அவள் வதனம். கடற்காற்று 'ஜில்' என்று வீச ஆரம் பித்தது. கரையின் அருகாமையிலே வந்து விட்டோம் என்ற உற்சாகம் பிறந்தது அந்த முரட்டுக் கூட்டத்திற்கு! கடல் அலைகள் கரையிலே மோதிக் கிளம்பும் ஓசையும் காதிலே விழுந்தது—இன்னும் அருகே வந்து விட்டார்கள் —துஷ்டனின் தோளிலே கிடந்த பரிமளா மயக்கம் தெளிந் தாள். இதயம் நொறுங்கிச் சிதறிவிடும் போன்ற உணர்ச்சி யால் பீடிக்கப்பட்டாள் — கண்களை மெதுவாகத் திறந்து பார்த்தாள். சிறுவயதிலே அவளுடைய பாட்டி சொல்லு வாள்; சாவு என்றால் என்ன என்று!

"யமலோகத்திலே யிருக்கிற எருமையேறும் தரும ராஜன், தன்னுடைய ஆட்களிடம் பாசக்கயிறு கொடுத்து உயிர்களைப் பிடித்து வரச் சொல்லுவான். அந்த ஆட்க ளுக்கு யம கிங்கிலியர் என்று பெயர். அவர்கள் உயிர்களைப் பிடித்துக் கொண்டு போய் யமனிடம் சேர்ப்பார்கள். போகும் வழியெல்லாம் பயங்கரமாயிருக்கும். நெருப்பாறு ஓடும்—அதில் மயிர்ப்பாலம் இருக்கும் — கல்லும் முள்ளும், தேளும் பாம்பும், முதலைகளும், புலிகளும், யானைகளும் நிறைந்த காடுகளைக் கடக்கவேண்டும். உயிர், யமலோகம் போவது என்றால் அதுதான்!"

இதுபோலப் பாட்டி பலமுறை சொல்லியிருக்கிறாள்; ஒருமுறை யமலோகம் போய்ப் பார்த்துவிட்டுத் திரும்பிய வள் போல! அந்தக் கிழவி சொன்ன கதைகளை அப்போ தெல்லாம் பரிமளா கிண்டல் செய்திருக்கிறாள் — ஆனால், இப்போது யமலோகம்—யம கிங்கிலியர்—என்பதெல்லாம் பொய் யென்றாலுங் கூட, தான் தூக்கிச் செல்லப்படும் அந்தக் காட்சியும், தூக்கிச் செல்லுகிற ஆட்களின் தோற் றமும், பாட்டி சொன்ன பழைய கதைகளை பரிமளாவுக்கு ஞாபகப்படுத்தத் தவறவில்லை. தான் இறந்துபோய் விட்ட தாகவும், தன்னுடைய உயிரை யாரோ தூக்கிக்கொண்டு

போவது போலவும் மட்டுமே அவளால் நினைக்க முடிந்தது. ஒரு சமயம்; தான் காண்பது கனவா என்று கருதினாள். அய்யோ இது கனவாகவே இருந்துவிடக்கூடாதா என்று வேண்டிக்கொண்டாள். தூங்கிக் கொண்டிருப்பது போலவும், சீக்கிரம் விழித்துக்கொள்ள முடியாமல் அவஸ்தைப் படுவது போலவும் நெளிந்தாள்.

குழப்பத்தின் கொடியநகங்களால் கீறப்பட்டுத் தவித்த அவளுக்கு புதியதோர் சக்தியையும்—ஆறுதலையும் மின்னல் போல அளித்து மறைந்தது, எதிரே காணப்பட்ட அந்த எழுதுக்கு எழிற் கோபுரம்! மனோரா! அதைப் பார்த்த பரிமளாவுக்கு சிறு மனச் சாந்தி ஏற்பட்டது என்றாலும் அந்த சாந்தி நீடிக்கவில்லை. ஊருக்குப் பக்கத்திலேதான் இருக்கிறோம் என்ற நிம்மதி—அதோடு, தன் காதலனோடு தனித்திருந்த மாளிகை என்ற எண்ணம் இப்போதும் தன் காதலன் அங்கிருந்து தன்னைக் காண்கிறான் என்பது போன்ற உணர்வு — இத்தனையும் பரிமளாவின் உள்ளத்திலே 'பளிச்' 'பளிச்' என மின்னி பழையபடி வேதனையிலே அவளை வீழ்த்தி விட்டன. கண்களை மூடிக்கொள்வது சிறிது ஆறுதலாக இருந்தது அவளுக்கு. கனவுலகத்தில் மரண யாத்திரை நடத்துவது பயமூட்டக் கூடியது என்றாலும், விழித்துக் கொண்டால் கனவு கலைந்துவிடும் என்ற ஒரு திடமான எண்ணம், எங்கோ ஒரு மூலையிலிருந்து எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருக்குமல்லவா? அந்த எண்ணத்தை மட்டுமே துணையாகக் கொண்டு, பரிமளா துவண்டு கிடந்தாள்.

அந்த மனிதக் கூட்டம், அவளுடன் மனோராவில் நுழைந்தது. உப்பரிகையின் படிகளில் ஏறி ஏறி ஒவ்வொரு ஆளாகப் பின்னுக்குத் தங்கிவிட்டார்கள். இரண்டொருவர் மட்டுமே பரிமளாவைத் தூக்கிக் கொண்டுபோய்

மனோராவின் முதல் தளத்தில் வைத்தார்கள். பரிமளா, கண் விழித்துப் பார்த்தால் எதிரே என்ன கோர நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்குமோ — அதையேன் பார்க்க வேண்டும் — என்று கருதி, கண்களை இறுக்கி மூடிக் கொண்டிருந்தாள். மேல் தளத்துப் படிகளிலேயிருந்து யாரோ கீழ்நோக்கி இறங்கிவரும் செருப்பு சப்தம் கேட்டது. ஆட்கள் மேலே ஆவலாகப் பார்த்தார்கள். ஒருவன் அந்தப்படியின் பக்கம் மேலே ஏறிப் பார்த்துவிட்டு அவசரமாக கீழ்நோக்கி ஓடிவந்து மற்றவர்களிடம், "ஏ, வாங்க— வாங்க—அவர் வந்துட்டார்—அவர் தான்!" என்று கூறினான். பரிமளாவிடம் நின்ற இரண்டொருவரும் அதை விட்டுப் போய்விட்டார்கள். பரிமளா தனியாக அந்த உப்பரிகைத் தளத்திலே கிடந்தாள்.

பகல் நேரங்களிலே அந்தப் பக்கம் மேய்வதற்கு வரும் ஆடு மாடுகள் தாங்கள் சுலபமாக ஏறி இளைப்பாரக் கூடிய இடமாகத் தேர்ந்தெடுத்திருந்தது அந்த அடித்தளம் தான். அவைகள் இளைப்பாறியிருந்தால் அந்தத் தளம் எப்படியிருந்திருக்கும்! கண்மூடிக் கிடக்கும் பரிமளாவின் மூக்கைத் துளைத்தது நாற்றம் — அதோடு படிகளில் இறங்கிவரும் செருப்பின் சப்தமும் அவள் காதுகளில் பயங்கரமாக எதிரொலித்துக் கொண்டிருந்தது. அந்த ஒலி அருகே வந்துவிட்டது. யாரோ, ஒரு ஆள்—அவன் தன்னிடம் வருகிறான். உலகத்தில் ஒரு பெண், தன்னையே நம்பி — தன் பலத்தையும் மனோதிடத்தையும் உபயோகித்துக் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய அந்த உயரிய பொருளைக் கொள்ளையிட வந்துவிட்டான்; உயிரிழந்தும் கூட உலகத்திலே வாழுகிறார்கள்; புகழுடலிலே புகுந்து கொண்டு! ஆனால் மானத்தை இழந்தால் சொந்த உடலில் உயிர் இருக்கும்போது கூட வாழ முடியாதே — அதை வாழ்க்கை என்று கூறமுடியாதே! இந்த நினைவுச் சுருள்

கள் அவள் நெஞ்சத்திலே விரிந்து பரந்தன. இதயத்தின் விளிம்புகளைத் தொட்டுக்கொண்டு நின்றன. புயலும், இடியும் போட்டி போட்டுக்கொண்டு முழங்குவதுபோல அவள் நெஞ்சில் குமுறல் எழுந்தது. திடீரென அமைதி, செருப்பு சப்தம் நின்றது. அவள் உள்ளத்திலும் ஒரு விநாடி சூடு காட்டு அமைதி சூழ்ந்தது.

"பரிமளா! பரிமளா! — ஏ, பெண்ணே! டே — குட்டி! எழுந்திரு!"

இந்தக் குரல் அவள் காதை முட்டியது; பரிமளா விஞல் இப்போது எதையும் நினைக்கவும் முடியவில்லை. அப்படியே பிணமாகிவிடக் கூடாதா என்று ஆசைப் பட்டாள்.

"கண்ணைத்திற--அட!—திறக்கிறியா இல்லியா?"

ஒரு சிறு கம்பால் பரிமளாவின் மேனி தீண்டப்பட்டது. அது அவளுக்கு பாம்பு ஊர்ந்தது போலிருந்தது தோலில்!

"டே—பயப்படாதே குட்டி! எழுந்திரு—இல்லேன்ன ....."

குரலிலே அதிகாரம், முரட்டுத் தனம் இருந்தே தவிர கனிவு இல்லை.

"எழுந்திரு! இல்லேன்ன....." என்ற வார்த்தை வந்ததுதான் தாமதம்; பரிமளா. அலறிக்கொண்டு அவளையு மறியாமல் எழுந்து நின்றுவிட்டாள். எதிரே பார்த்தாள். கண்களை அகலத் திறந்து விழித்தாள். டக் டக் என்று இமைகளைத் திறந்து திறந்து மூடினாள். தெளிவாகத்தான் பார்க்கிறோமா என்ற ஐயமும் அச்சமும் சேர்ந்து எழுந்தது. சிறிது தைரியத்தை வரவழைத்துக் கொண்டு எதிரே நின்று பேசுகிறவரை உற்று நோக்கினாள். எதிரே வெள்ளியம்பலம் நின்று கொண்டிருந்தார்.

"துடிக்காதே பெண்ணே — உனக்கு ஒரு ஆபத்தும் வராது—"

"இப்போது வந்திருப்பதற்குப் பெயர் என்ன?"

"இதை ஆபத்துன்னு நினைக்கிறியா?"

"அகராதியைப் புரட்டிப் பார்க்கிறேன்; வேறு வார்த்தை இருக்கிறதா என்று!"

"நீயே பெரிய அகராதி தானே—"

"அய்யா—ஊருக்குப் பெரிய மனிதரே; என்னை ஏன் இங்கு தூக்கிக் கொண்டு வந்தீர்? அதைச் சொல்லும்"

"பரிமளா! நான் ஊருக்குப் பெரிய மனுஷன் மாத்திரம் இல்லே...நான் நினைச்சேன்னு, நூறு கொலே..."

"தேங்காய் வெட்டுவீர்னு எனக்குத் தெரியும்—தேவையான விஷயத்தைச் சொல்லும்"

"பெண்ணே! நீ நினைக்கிற மாதிரி — எதுவும் இங்க நடக்காது—நான் உன்னை இங்க கொண்டாந்திருக்கிறது; உன்னைக் காப்பாத்தவேதான்—உன்மேலே உங்கப்பனுக்கு ஒரே சந்தேகம் — உன்னைக் கொல்லவே திட்டம் போட்டு, எனக்கிட்ட காலேயிலே கோபமா சொல்லிட்டுப் போனான்—அதிலேயிருந்து உன்னைப் பாதுகாக்கத்தான் முதல்லே நான் கவலைப்பட்டேன்"

"ஆகா—ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுததாம்"

"அட முட்டாளே — இதைக் கேளு; உனக்கு ஒரு ஜோடியிருக்கிறுன்னு நானும் தெரிஞ்சுகிட்டேன்—உங்கப்பனும் தெரிஞ்சுகிட்டான் — உங்கப்பன் கையிலேயிருந்து இப்ப நான் உன்னை மீட்டுவிட்டேன்—எனக்கு நீ ஒரே ஒரு உபகாரம் செய்—போதும்!"

"நீர் என்ன பேசுகிறீர் என்றே எனக்குப் புரியவில்லே அய்யா!"

"நீ மறுபடியும் வீட்டுக்குப் போயிபாரு! அப்பத் தெரியும்; இந்த அம்பலம் சொன்னது நிஜமா? பொய்யா? என்று! தாண்டவன் என்கிட்ட தாண்டிக் குதிச்சதும், ஒரே வெட்டாக வெட்டி உன்னைப் புதைத்துவிடப் போகிறேன் என்று கூச்சல் போட்டதும் எனக்கல்லவா தெரியும்—"

"நான் அப்படி செத்திருந்தாலும் பரவாயில்லை போல் இருக்கிறதய்யா — இங்கு வந்து இந்த இருட்டில் இப்படி நிற்பதைவிட..."

"அய்யோ அய்யோ — நீ சாவதா? சீ சீ!—பைத்யக்காரப் பெண்ணை — என் ஆசையெல்லாம், நீயும் சாகக் கூடாது...அதோட; அந்த ஒரு விஷயத்தை மட்டும் எனக்கிட்ட சொல்லிடணும்!"

"என்ன விஷயம்"

"அதுதான்—உன் ஆசைக் காதலன் இருக்கானே; அவன் யார் என்று!"

பரிமளா பேசாமல் நின்றாள். தன் காதலன் பெயரை விசாரிப்பதற்கு இவ்வளவு சிரமம் எடுத்துக்கொள்வானேன், இந்தப் பெரிய மனிதன்—என்று சிந்தித்தாள்.

"என்ன மௌனமாகிவிட்டே—சொல்லும்மா—அவன் யாரு? எங்கே யிருக்கான்?—அதெல்லாம் மறைக்காதே—உனக்கு ஒருத்தன் உண்டுன்னு எனக்குத் தெரியும்; இதபாரு; உன் ஆசை செருப்பை!" என்று கூறியபடி அம்பலம் படிக்கட்டுப் பக்கம் போட்டிருந்த ஒரு செருப்பை எடுத்து அவளிடம் காட்டிச் சிரித்தார். அந்த செருப்பு, தன் காதலன் துரையினுடையது என்பதைத் தெரிந்துகொண்டாள் அவள். காதலன் அணியும் பொருள் அது என்பதிலேயும் அதைக் காண்பதிலேயும், அவள் ஒரு மகிழ்ச்சியடைந்தாள்.

"என்ன கண்டு பிடிச்சேனு? பாரு என் சாமர்த்தியத்தை — பரிமளம் — சொல்லிடு, அந்த ஆசாமி யாருன்னு?"

"அவரைப்பற்றி நீர் என் தெரிந்துகொள்ளவேண்டும்?"

"ஆளத் தேடிப் பிடித்து உனக்குக் கல்யாணமே செய்து வைப்பேன்—உனக்குத்தான் தெரியுமே; ஊரிலே நடக்கிற நல்லது கெட்டது எல்லாம் என்னைத்தானே நடக்கிறது!"

"கல்யாணம் செய்துவைக்கும் சிரமம் எல்லாம் உங்களுக்கு வேண்டாம்."

"பரிமளம்—வீணுகப் பேசாதே—அவன் யார் என்று எனக்குச் சொல்லிவிடு! இல்லாவிட்டால் உன்னை விடமாட்டேன்—அவனை என்னிடம் சொல்லிட்டா, நீயும் உங்கப்பன் கோபம் தணியிற வரையிலும் என் வீட்டிலேயே இருக்கலாம்—என் வீட்டிலே இருந்தா உங்கப்பனும் ஒண்ணும் செய்ய முடியாது!"

"எனக்கு யார் வீடும் தேவையில்லை—என்னை விட்டு விடுமய்யா!"

"முடியாது—பரிமளம்—என் கோபத்தைக் கிளராதே—என்னைப்பற்றி உனக்குத் தெரியும்—சந்து வீட்டு சந்தான கிருஷ்ணன் தலைபோன இடம் இன்னும் தெரியிலே! புதுப்பட்டினத்திலே உடம்பும், சேதுபாவா சத்திரத்திலே காலும், நாடியத்திலே கையும், நடுக் கடலிலே தலையும் மிதந்துதே—நாராயணப் பெருமாள் சாவு ரகசியத்தைத் தான் சொல்றேன்; அதையெல்லாம் மனசிலே வச்சுக்கிட்டு என்கிட்ட பேசு!"

பரிமளம் பதில் பேசவில்லை; நின்றுள்.

"சொல்றியா இல்லையா?" என்று அருகே நெருங்கினர் அம்பலம். அப்போது திடுதிடுவென்று அவரது

ஆட்கள் சிலர் மேலே ஓடிவந்து, "எஜமான் எஜமான்!" என்றனர். "என்னடா?" என்று அதட்டினார் அம்பலம்—

"இரண்டு தோணிகள் கரை நோக்கி வருதுங்க!"

"ஆங்—சரி—நீங்க போயி கவனிங்க; இதோ வந்துட்டேன்"—முரடர்கள் ஓடிவிட்டார்கள்.

"முடியுமா, முடியாதா பரிமளம்?" என்று மறுபடியும் அருகே நெருங்கி கூச்சலிட்டார் அம்பலம். அவருக்கு இப்போது அவசரம் வேறு; தோணிகளிலே வருகிறவர்கள் கண்களிலே சிக்கிவிடக் கூடாதே என்று! அந்தத் தோணியிலேதான் தன்னுடைய துரை வருகிறான் என்று பரிமளாவுக்குத் தெரியாது. அலகைக் கிழித்துக்கொண்டு தோணிகள் கரை நோக்கி வருவதை சாளரத்தின் வழியாக அம்பலமும் ஒரு முறை பார்த்தார்.

"உம்— இப்போது சொல்லப் போகிறாயா? இல்லை—கஷ்டப்படப் போகிறாயா?" என்று பயங்கரமாகக் கத்திக் குதித்தார் அம்பலம்.

பரிமளாவின் முகக்குறி, அவள் ஏதோ ஒரு பொய் சொல்லப் போகிறாள் என்பதை உணர்த்தியது. கனைத்துக் கொண்டாள்.

"உம்—நல்ல பெண்ணல்ல சொல்லு!" என வாய் பிளந்து நின்றார் அம்பலம். அவன் பெயர் தெரிந்துவிட்டால், அவனைப் பிடித்து — அவன் மூலம் "தங்கத்தைத் புதைத்த இடம் எது" எனத் தெரிந்துகொள்ளலாம் என துடித்தார். தங்கத்தைத் தோண்ட எண்ணிய ஐயப்பன் கடலிலே கைதியாக வந்துகொண்டிருக்கிறான். இங்கே அம்பலம் ஆலாய்ப் பறக்கிறார்!

"சொல்லும்மா!"

"சொல்லுகிறேன்"

"சொல்லு"

"சொன்னல் அவருக்கு ஒன்றும் ஆபத்து வராதே!"

"வரவே வராது!" என்று கூறிக்கொண்டே அம்பலம் கடலை ஒருமுறை பார்த்துக்கொண்டார். தோணிகள் வேகமாக வந்துகொண்டிருந்தன.

10

பரிமளா, தன் காதலனின் பெயரை சொல்லிவிடப் போகிறுள் என்ற மகிழ்ச்சியில் அம்பலம் ஆவலாக நின்று கொண்டிருந்தார்; என்றுலும் அவரது கண்கள் சாளரத் தின் வழியாக சமுத்திரத்தை நோக்கத் தவறவில்லை. தோணிகள் மிக வேகமாக வந்து கொண்டிருந்தன. அம்பலம் துடித்தார்—'சொல்லிவிடு! சொல்லிவிடு!' என்று உரக்கக் கத்தினர்.

"சத்தியமாக அவருக்கு ஒரு ஆபத்தும் வராது என்று சொல்லுங்கள்" இது பரிமளம்.

"சமுத்திர ராஜன் ஆணையாச் சொல்றேன் — ஒரு ஆபத்தும் வராது—அட சனியனே; சீக்கிரம் சொல்லித் தொலையேன்.....?"

"சொல்லுகிறேன்—ஹே! சமுத்திர ராஜா! உன் மீது சத்தியம் செய்திருக்கிறார் இந்தப் பெரிய மனிதர் — இவர் ஆணையை மீறினுல், என் காதலருக்கு ஏதாவது ஆபத்து வந்தால்—பிறகு உன்னைத்தான் கேட்பேன்."

"அட சீக்கிரம் சொல்லு!"

"அவசரப்படாதீர்கள்—அவர் பெயர்!"

"ம்—அவர் பெயர்?—என்ன.....?"

"அவர்.....அட.....அய்யய்யோ.....மறந்து விட்டேனே; ஆமாம் கணவன் பெயரைச் சொல்லலாமா?"

"அட ஆபத்துக்குப் பாபமில்லே!"

"இப்போது எனக்கு என்ன ஆபத்து வந்து விட்டது?" சோகத்திலும் அவள் கிண்டல் செய்யத் தவறவில்லை.

"உனக்கு ஒன்றும் ஆபத்து இல்லே—எனக்குத்தான் ஆபத்து வருது!" என்று கூறியபடி சாளரத்தின் வழியாக கடலைப் பார்த்தார். தோணிகள் இன்னும் சில நிமிடங்களில் கரையை அடைந்துவிடும் எனக் கண்டார். பரிமளாவிடம் திரும்பி "சொல்லும்மா சீக்கிரம்! கல்யாணம் ஆகாததற்கு முன்பு சொன்னால் பாபமேயில்லே"

"ஓகோ, அப்படியொரு விதிவிலக்கு இருக்கா—அப்படியானால் என் காதல் துரையின் பெயரை சொல்லித் தான் தீரவேண்டுமா?"

"ஆமாம்—ஆமாம்—ஆமாம்—" என்று தன் தலையிலேயே அடித்துக் கொண்டார் அம்பலம். பரிமளாவுக்கு சோகத்தினிடையேயும் சிரிப்பை உண்டாக்கியது அந்த விகழ்ச்சி.

"சொல்லப் போகிறாயா? இல்லே சாகிறாயா?" என்று சிறிக் கிளம்பினர் அவர்.

"சொல்லுகிறேன் — கோபிக்காதீர்கள். அவர்... அவர்...அவர் பெயர்...முதலெழுத்து— ..."து!"...

"உம்—அடுத்த எழுத்து...?"

"அவர் பெயர்...து...து...து...து..."

"துப்பினது போதும்—சொல்லு!"

"துக்காராம் அவர் பெயர்!!"

"துக்காராம்—ஜை ஜை விட்டல்!"

அம்பலத்திற்கு மகிழ்ச்சி தாங்கவில்லை.

"சரி!—அவன் விலாசம் என்ன?"

"விலாசமா? துக்காராம்—சைக்கிள் கம்பெனி—சக்கர வர்த்தி தெரு — பட்டுக்கோட்டை. இதுதான் அவர் விலாசம்."

அம்பலம் அந்த விலாசத்தை தனக்குள்ளாகவே இரண்டு மூன்று தடவைகள் முணகிக் கொண்டார், மறந்து விடாமல் இருப்பதற்காக!

"சரி—பரிமளா! — இனிமேல் உனக்கு எந்தக் கஷ்டமும் இல்லை — நீ நல்ல பெண்ணு... நான் சொல்றதைக் கேளு! உனக்கு உயிருக்கு ஆபத்து வராம இருக்கணும் என்றுல், கொஞ்ச நாளைக்கு என் வீட்டிலாவது வந்து தங்கியிரு — உண்மையாச் சொல்றேன்; உங்கப்பன் கத்தியை தீட்டி வச்சுகிட்டு தயாராயிருக்கிறுன், உன் தலையை வெட்ட! ஆமாம்—ஜாக்ரதை!"

"முடியாது! நான் எங்கும் வரவில்லை"

"முட்டாள் — பிடிவாதம் பிடிக்காதே! உன் காதலனையே அங்கு அழைச்சு கிட்டு வர்ரேன்—"

"வேண்டாம்; என்னை விட்டு விடுங்கள்!"

"சொல்வதைக் கேளு — வீணு சாகாதே!"

அம்பலத்தின் பேச்சினிடையே அவரது ஆட்கள் தடதடவென்று மேலே ஓடி வந்தார்கள். "என்ன என்ன" வென்று அவர் பதறினர்.

"தோணியில் வருகிறவர்கள் போலீசார்" என்ற செய்தியைச் சொல்லி அவர்களும் நடுங்கினர்கள்.

"ஆ—போலீசாரா?"

"ஆமாம்—எங்களைக் கூடப் பார்த்து விட்டார்கள்—"

"அய்யோ—நீங்க, மேலெ ஏறிவந்ததையும் பாத்திருப் பாங்களா!"

"பாத்திருப்பாங்க! கண்டிப்பா பாத்திருப்பாங்க!"

"சரி—சரி—வாங்க—ஓடி விடலாம்!" எனக் கூறிய படி சாளரத்தின் வழியே அம்பலம் பார்த்துக் கொண்டார் —தோணிகள் கரையோரத்திலே மெதுவாக அசைந்து கொண்டிருந்தன. ஒரு தோணிக்கும் மறு தோணிக்கும் இடையே சிறிது தூரம் இருந்தாலும் கூட இரண்டும் ஏக காலத்தில் கரை சேர்ந்துவிட்டன. அம்பலமும் ஆட்களும் கீழிறங்கி ஓடுவதற்குத் தயாராஞர்கள். பரிமளாவையும் தங்களுடன் ஓடி வரும்படி அம்பலம் அவசரப்படுத்தினர். அவளும் அவர்களுடன் ஓடுவதற்குத் தயாராஞர்கள். கீழிறங்கி விட்டார்கள் வேகமாக — மிகவும் களைத்துப் போயிருந்த பரிமளாவினால் வேகமாக ஓட முடியவில்லை— அந்தச் சமயத்தில் திடீர் என்ற துப்பாக்கி சப்தமும் கேட் டது — அம்பலமும் மற்றவர்களும் வேகமாக ஓடி, மர மடர்ந்த பகுதிகளின் பின்னே மறைந்து செல்ல ஆரம்பித் தனர். துப்பாக்கி ஒலியால் அதிர்ச்சியடைந்த பரிமளம், ஒரு கல்லில் கால் இடறவே, அலறிக்கொண்டு கீழே விழுந்தாள். அவளால் எழுந்து நிற்க முடியவில்லை. அதற் குள் அம்பலம் கூட்டத்தார் வெகுதூரம் போய்விட்டார்கள் —கரையில் இறங்கிய 'போலீசார்' பரிமளம் விழுந்து கிடக் கும் இடம் நோக்கி ஓடிவந்தார்கள். கீழே கிடப்பது யார் என்று துரைக்குத் தெரிந்துவிட்டது—"பரிமளா!" என்று கத்திவிட்டான். அவளோ திகைத்துப் போனாள். திசை காணமுடியாத இருட்டுப் பாதையில் அதுவும் அமாவாசை தினத்தன்று திடீரென நிலவு தோன்றி வெளிச்சம் தர முன்வந்தால்கூட அவள் ஆச்சரியப்பட்டிருக்கமாட்டாள்; இப்போது ஆச்சரியத்திலேயே முழுகிவிட்டாள்; அவளால் பேச முடியவில்லை. துரையை அணைத்துக் கொண்டு,

பொங்கி வரும் கண்ணீரை அவன் கன்னத்திலே பொழிந்து விடவேண்டுமென்று துடித்தாள். பக்கத்திலே மற்றவர்கள் இருக்கிறார்கள் — ஆகையால் அசைவற்றுப் போனாள். துரை, தன் தோழர்களைக் கூப்பிட்டு "நீங்கள் தோணிக்குப் போய், அந்தக் கிழவரைத் தூக்கிச் சென்று, மேலைரவுக்குள் வையுங்கள்!" என்றான். அவர்கள் தலையசைத்தபடியே, "ஆமாம்— அந்த ஐயப்பன் கோஷ்டியை என்ன செய்வது?" என்றனர்.

"அவர்களை மிரட்டி வெகு தூரத்திற்கு துரத்தி விடுங்கள்" எனக் கூறிவிட்டு, பரிமளாவின் பக்கம் திரும்பினான். அவனது அவசரத்தையும், அவன் போட்ட திட்டங்கள் அனைத்தும் பரிமளாவைக் கண்டதும் மாறிவிட்டதையும் நினைத்துக்கொண்டு அவனது தோழர்கள் மனத்திற்குள் சிரித்தவாறு அனுதவிட்டுப் போய் விட்டார்கள். அவர்கள் போனதுதான் தாமதம், பரிமளாவும் துரையும் அந்த வெள்ளி மணல் படுக்கையிலே தழுவிக்கொண்டு சிலவினாடிகள் அசைவற்றுப் போயினர். "நீ மாத்திரம் கோபிக்காமலிருந்தால், உன் கன்னங்களை என் விரல்களால் தடவிக் கொண்டே உலகத்தை மறந்து, உயிர் போமளவும் இருப்பேன்" என்று பலமுறை துரை அவளிடம் சொல்லியிருக்கிறான். அவ்வளவு அழகு வாய்ந்த கன்னங்கள். ஒளி சிந்தும் மாம்பழக் கதுப்புகள். அந்த அழகு சிங்காரியின் மடியிலே இருப்பது அவனுக்கு வர்ணிக்கவொண்ணாத பெருமை. சந்திர மண்டலத்துக்குப் போகவேண்டுமென்று யார் யாரோ எப்படியெல்லாம் கஷ்டப்படுகிறார்கள்; ஆனால் நானே சந்திர மண்டலத்திலேயே வாழ்கிறேன்— என்று அவள் முகத்தைப் பார்த்துக்கொண்டே துரை எத்தனையோ முறை சொல்லி, அதற்கு தண்டனையாக, அவன் உதடுகளை அவள் எச்சில்படுத்தியிருக்கிறாள்.

அந்த ஒரு விநாடி அணைப்பிலே, அந்த விருந்து நிகழ்ச்சிகள் எல்லாம் வந்து வந்து போயின. அவர்கட்கு வலிமை சேர்த்தன. தெவிட்டுதற்கு முன்பே அந்தத் தெவிட்டாத தெள்ளமுது, தன் தேகத்தை அவனிடமிருந்து பிரித்துக் கொண்டு,

"அத்தான்!" என்றாள்.

"அமுதே!" என அவன் அழைத்துக்கொண்டான் மனதிற்குள்ளாகவே! அப்படி அழைப்பதை அந்த மென்மையான முத்தத்தின் மூலமாகக் காட்டிக் கொண்டான். "நீங்கள் எப்படியத்தான் இங்கு வந்தீர்கள்?"

இந்தக் கேள்விக்குப் பிறகே, துரை தன்னையுணர்ந்தான். இதே கேள்வியை அவன், பரிமளாவைக் கேட்டிருக்க வேண்டும் — ஆனல் கேட்காமல் இதுவரையில் இருந்துவிட்டான்.

மலரைக் கண்டதும் மங்கை சூடத்தான் எண்ணுகிறாள், எப்படி இங்கே வந்தது என்று கேட்பது பிறகுதான்!

கனியைக் கண்டதும் வாய் ஊறுகிறது! எப்படிக் கிடைத்தது எனக் கேட்கும் யந்திரம் தாமதமாகத்தான் வேலை செய்கிறது, மனித உடலில்!

அதுபோலத்தான் — பரிமளாவைக் கண்ட துரை, சொக்கிவிட்டான் — சுவைத்தான் — பிறகு நினைத்தான் எப்படி வந்தாள்?' என்று கேட்க! கேட்டும் வைத்தான்.

"நேற்றைய நிகழ்ச்சியின் தொடர்ச்சி" என்றாள் அவள்.

"எனக்கும் அப்படித்தான் — இதுவும் நேற்றைய நிகழ்ச்சியின் தொடர்ச்சிதான்!" என்றான் துரை.

* * * *

துரையின் தோழர்கள், ஐயப்பன் கோஷ்டியாரிடம் "இனிமேல் இதுமாதிரி கள்ளத்தோணி காரியங்களில் ஈடு பட்டால் அவ்வளவுதான்! இப்போது தலைதப்பியது பெரிய காரியம் என்று ஓடிவிடுங்கள்" என்று மிரட்டவே, ஐயப்ப னும், அவர்கள் காலிலே விழுந்து, "சாமீ! உங்களுக்கு கோடி புண்யமுண்டு! நாங்க வர்ரோம்—இனிமே இந்தக் காரியம் செய்யமாட்டோம்—அந்தக் கிழவரையும் எடுத்துக் கொண்டு போகிறோம்—தயவு செய்து கொடுங்கள்" என்று பணிவாகக் கேட்டான். ஐயப்பனுக்கு அந்தக் கிழவரைக் கொண்டு போவது, மருங்கப்பள்ளத்துப் புதையல் முழு வதையும் கொண்டு போவது போல! ஆனல் அத்தகு அனுமதி கிடைக்கவில்லை. கிழவரைத் தர முடியாது என்று துரையின் தோழர்கள் கூறிவிட்டார்கள். போலீசா ரிடம் அதிகமாக பேச்சு வைத்துக்கொள்ளக் கூடாது என பயந்த ஐயப்பன், தன் ஆட்களுடன் நடையைக் கட்டினன். துரையின் தோழர்கள், மயக்கம் தெளியாமல் இருக்கும் கிழவரை மெதுவாகத் தூக்கிக்கொண்டு மனோராவிற்குள் நுழைந்தனர்.

* * * *

துரையும், பரிமளாவும் கடற்கரை மணற் பரப்பிலே தோளோடு தோள் சாய்ந்தவாறு மனோராவை நோக்கி நடந்தனர்.

"அப்படியானல் அந்த அம்பலத்திடம் என்னுடைய பெயரைச் சொல்லி விட்டாயா?"

"சொல்வேன் என்று நினைக்கிறீர்கள்!—ஆனல் நான் சொன்னதாக அவர் நம்பியிருக்கிறார் — நான் யாருடைய பெயரைச் சொன்னேன் தெரியுமா?"

"யார் பெயர்?"

"நான் பள்ளிக்கூடம் போகும்போதெல்லாம் — என் பின்னாலே ஒரு கோஷ்டியைச் சேர்த்துக்கொண்டு, கும்மாளம் போடுவானே ஒருவன்"

"யார் அது?"

"அதற்குள் மறந்து போய்விட்டதா? — ஒருநாள் தெருவில் என் பக்கமாக வந்து சைக்கிளில் இருந்து வேண்டுமென்றே விழுந்தான் — அதற்காக என் கையில் இருந்த ஸ்கேலால் அவன் கன்னத்தைத் தப்பார்த்து ஒரு அடி கொடுத்தேன்; அப்படி அடி கொடுத்த கைக்குப் போடுவதற்காக நீங்கள் வளையல் வாங்கி வந்தீர்கள் — அந்த வளையலை நான் போட்டுக்கொள்ள மறுத்து, அதற்காக நீங்கள் ஊடல் புரிந்தீர்கள் — உடனே நான் ஊடலைப் பற்றிய திருக்குறள் ஒன்றைச் சொல்லி, உங்களை சிரிக்க வைத்தேன் —"

"ஆமாம் — ஆமாம்" என்று தலையசைத்தான் துரை.

"இப்போது ஞாபகம் வருகிறதா — அவன் பெயர் என்னவென்று?"

"துக்காராம்! சைக்கிள் கடைக்காரன் —"

"ஆமாம் — அவன் பெயரைத்தான் சொல்லியிருக்கிறேன் — வெள்ளியம்பலம் அவனைத் தேடிப் பிடித்து — தங்கத்தைப் புதைத்த இடத்தைக் கேட்கப் போகிறார் — அவன் விழிக்கப் போகிறான் — நன்றாக உதை வாங்கப் போகிறான் — பெண்களைக் கண்டால் பல் இளிக்கும் வாலிபர்களுக்கு இப்படித்தான் பாடம் கற்பிக்கவேண்டும் —"

"நல்ல வேலை செய்தாய் பரிமளம்! —"

"அதிருக்கட்டும் — நீங்கள் உங்கள் கதையைச் சொல்லுங்கள் அத்தான்!"

"உன்னிடமிருந்து பிரிந்து போனேனே; அது முதல் எனக்கு ஒரே சிந்தனை; அந்தக் கிழவர் யார் என்று கண்டுபிடித்துவிட வேண்டுமென்று! அதற்காக என் தோழர்

களைத் திரட்டினேன்—போலிப் போலிஸ் வேடம் போட்டுக் கொண்டோம்,' கள்ளத் தோணியைப் பிடிப்பது போல நடித்தோம். கள்ள வியாபாரி ஐயப்பன் முதலியோர் பிடிப் பட்டனர். கிழவர் கடலில் குதித்து விட்டார். நானும் குதித்து அவரைக் காப்பாற்றினேன். இன்னும் அவ ருக்கு மயக்கம் தெளியவில்லை. ஐயப்பனிடம் விசாரித் தோம் அந்தக் கிழவர் யாரென்று! சரியான விபரம் கிடைக்கவில்லை. "ஊரிலே திரிந்து கொண்டு வேதாந்தம் பேசும் கிழவர்" என்று கூறுகிறார்களே தவிர — யாரும் சரியாகச் சொல்லவில்லை. பரிமளம்! எனக்கு என்னமோ —அவரைப் பற்றி நன்ருக விசாரிக்கவேண்டும் என்ற ஒரு ஆவல் எழுந்து விட்டது. — அதைத் தெரிந்துகொள்ளா மல் நான் எதுவும் செய்யப் போவதில்லை!" என்ருன் துரை.

"அப்படியா?" என்று அவன் பக்கம் கன்னத்தைத் திருப்பினுள் பரிமளம்—.

"இது தான் விதி விலக்காயிற்றே!" என்று 'இச்' ஒலி முழக்கினுன் அந்தக் கிண்டற்காரன். அதற்குள், துரையின் தோழன் அவர்களிடம் ஓடி வந்து, "கிழவர் கண் விழித்துவிட்டார்" என்று கூறினுன்...

துரையும் பரிமளமும் மனேரா நோக்கி ஓடினர்கள். கிழவர் மிகவும் களைப்புற்ற நிலையில் கண்ணைத் திறந்து பார்த்துக் கொண்டிருந்தார். துரையும், பரிமளாவும் எதிரே போய் நின்ருர்கள்.

அவர்கள் மீது கிழவரின் கண் பாய்ந்தது — மங்கிய நிலா வெளிச்சத்திலும் அவரால் அவர்களைக் காண முடிந்தது.

11

முதல் நாளிரவு சந்தித்த அந்தக் காதலர்களை கிழவர் காணும்போது, அவர் கண்களையே அவரால் நம்ப முடிய வில்லை. தன்னைச்சுற்றி போலீசார் சூழ்ந்திருப்பதையும், அந்த இருவரும் தன்னை அன்போடு நோக்குவதையும் கிழ வர், பெரியதோர் புதிராகக் கருதினர். தன் மடியை ஒரு முறை தொட்டுச் சரிபார்த்துக் கொள்ள வேண்டுமென்ற ஆசை, அளவு மீறி எழுந்தாலுங்கூட, அவர் அந்த முயற்சி யில் ஈடுபடவில்லை. ஏனெனில், கடல் பயணத்தின்போது இப்படித் தொட்டுப் பார்த்ததின் விளைவாக ஐயப்பன் விரோதத்தை சம்பாதித்துக்கொள்ள நேரிட்டது. மடியி லுள்ள பொருளும் பறிபோய்விடக் கூடிய நிலைமை பிறந் தது. ஆகவே கிழவர் உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டு அந்தக் காதலர்களைப் பார்த்து ஒரு வரட்டுச் சிரிப்பு சிரித் தார். அந்தச் சிரிப்பைத் தொடர்ந்து துரை பேச ஆரம் பித்தான். அவர் பக்கம் நெருங்கி அமர்ந்து, "எப்படி யிருக்கிறது உடம்பு?" என்று அன்பு சிந்தினன்.

"நன்றுயிருக்கிறது — ஏன்; போலீஸ்டேஷனுக்கு தூக்கிக்கொண்டு போகவேண்டுமோ என யோசிக்கிறீர் களா — பயப்படாதீர்கள். இன்னும் சில விநாடிகளில் எழுந்து மெல்ல மெல்ல நடக்க முடியும் என்னால்!"

என்று கூறிக்கொண்டே துரையின் தோளில் கையை வைத்து அழுத்தியவாறு எழுந்து உட்கார்ந்துகொண்டார் மாயாண்டி.

"நீங்கள் எங்கும் நடக்க வேண்டாம் — போலீஸ்டே ஷனுக்கு போக வேண்டியவர்கள் எல்லாம் போய்விட்டார் கள்." என்றான் துரை.

"ஐயப்பனுக்கு, காப்புப் போட்டுவிட்டார்களாக்கும்!" இது கிழவர்.

"இல்லே, அவனே மன்னித்து அனுப்பிவிட்டோம்!"

"மன்னித்து விட்டீர்களா; அப்படியானால் நீங்கள் எல்லாம் போலிஸ்காரர்கள் இல்லே போலும்!"

துரை மெதுவாக சிரித்தான். எனினும், காட்டிக் கொள்ளாமல், "நாங்கள் போலீசார் தான்! ஐயப்பன் கோஷ்டி, கெஞ்சினர்கள். இனிமேல் இதுபோல் செய்ய வில்லையென்று காலில் விழுந்தார்கள், அதனல் விட்டு விட்டோம்" என்ருன்.

"ஓகோ! அப்படியானல் என்னே விடமாட்டீர்கள், என் என்ருல் நான் கெஞ்சப்போவதில்லே!" என்று கிழவர் கம்பீரமாகப் பேச ஆரம்பித்தார். அவர்கள் மட்டும் உண்மை யான போலீசாயிருந்தால் கிழவருக்கு சரியான பரிசு கிடைத் திருக்கும் அந்த வார்த்தைகள் வெளிவந்தவுடனேயே! இவர்கள் ஒருவருக்கொருவர் பார்த்துக் கொண்டு, தங்க ளுக்குள்ளாகவே, கிழவரின் தைரியத்தைப் புகழ்ந்து கொண்டார்கள். சிறிது நேரம் அமைதி நிலவியது. தன் எதிரே நிற்கும் அந்தப் பெண்ணே உட்காரச் சொல்ல வேண்டும்போலிருந்தது கிழவருக்கு.

"ஏனம்மா நிற்கிருய்?" என்ருர்.

"பரவாயில்லே" என தழுதழுத்த குரலில் பதில் சொன்னுள் பரிமளம். "உட்காரம்மா!" என்று கிழவர் ஒரே வார்த்தையில் பிடிவாதத்தை உணர்த்தினர். பரிமள மும் அவர் அருகே உட்கார்ந்தாள். கிழவருக்கு இப்போது என்ன பேசுவதென்றே தெரியவில்லே.

முதல் இரவு, இதே மனேராவின் மேலடுக்கிலே, தன் னல் தாக்கப்பட்டு, அவஸ்தைப்பட்ட அந்தக் காதலர் களின் முகத்தைக்காண கிழவர் மிகவும் கஷ்டப்பட்டார்.

அந்த நிகழ்ச்சியை மீண்டும் நினைவூட்ட வேண்டும் போலவும் இருக்கிறது, நினைவூட்டுவதற்கு சங்கடமாகவும் இருக்கிறது. அந்த எண்ண அலைகளால் ஏற்படும் வேதனையிருக்கிறதே; அதை கிழவரின் முகத்திலே நன்றாகக் காண முடிந்தது. துரை — பரிமளம் — இருவராலும்! பேச்சை மாற்றலாம் என்று கருதிய துரை, கிழவரிடம், "ஆமாம்—அந்த ஐயப்பன் யார்? உங்களுக்கு நெடு நாள் பழக்கமா?" என்று கேட்டான்.

"போலீஸ் விசாரணையை இங்கே ஆரம்பித்து விட்டீர்களா?" கிழவர் சிரித்தார்.

"இல்லை—தொந்திரவாக இருந்தால் ஒன்றும் பேச வேண்டாம். ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்!"

"ஓய்வு! இந்தப் பழங்கட்டைக்கு இனிமேல்தான் ஓய்வு, ஓய்வுபெற்று, உடலை வளர்த்து, உலகத்தை ரக்ஷிக்கப் போகிறேனுக்கும்!"

"உங்களுடைய ஒவ்வொரு பேச்சிலும் உலகத்தைப் பற்றிய சலிப்பு பின்னியிருக்கிறதே! காரணம் என்ன?"

"காரணம் என் கேட்க வேண்டும்; மண்ணை நோக்கி தொங்கிக் கொண்டிருக்கும் சருகுகள், காற்றிலே காம்பொடியும் வரையிலே மரத்தின் வாழ்வைப்பற்றி சலிப்பாகத்தானே பேசிக் கொண்டிருக்கும்."

"கிழவர்களின் சலிப்புக்கும் — உங்கள் சலிப்புக்கும் வித்யாசமிருப்பதாக உணருகிறேன்."

"என்னைப்போல ஒரு கிழவனை இப்போதுதான் பார்க்கிறாய், அதனால் அப்படி சொல்கிறாய், நீ இதுவரை பார்த்த கிழவர்கள் எல்லாம் பேரன் பேத்திகளோடு விளையாடிக் கொண்டிருப்பவர்கள் — அல்லது பேரன் பேத்தி இல்லையே என்று கவலைப்பட்டுக் கொண்டிருப்பவர்கள் — செத்து சுடுகாடு போகும்போது, நெய்ப்பந்தம் பிடிப்பதற்கு

ஆள் இல்லையே என்று ஏங்குகிறவர்கள்—எண்பது தொன்னூறு ஆண்டுகள் வாழ்ந்து அலுத்துப்போய்—இனியும் வாழ வேண்டுமானால் இளமை திரும்ப வேண்டும் என்று கனவு கண்டு கொண்டிருப்பவர்கள், அப்படிப்பட்ட கிழவர் களைத்தான் நீ பார்த்திருக்கமுடியும். நான் அத்தகைய கிழவனல்ல! — நான் ஒரு பைத்தியக்காரக் கிழவன். கிண்ணரக் கிழவன் என்பார்களே; அது யாருமல்ல — நானே தான்!"

துரைக்கு, இன்னும் பேச வேண்டும்போல ஆசையா யிருந்தது — இங்கேயே நேரம் கடந்துவிட்டால் பிறகு பொழுது விடிந்து விடும், போலீஸ் வேடம் வெளிச்சமாகி விடும். பரிமளா வேறு இருக்கிறாள். ஆகவே, அதை விட்டு உடனே புறப்பட வேண்டுமென்று தீர்மானித்தான்.

கிழவரிடம், "சரி வாருங்கள் போகலாம்" என்று கூறினான். "எங்கே போவது?" என ஆவலாகக் கேட் டார் அவர். "எங்குமில்லை — நீங்கள் நினைப்பது போல போலீஸ் ஸ்டேஷனுக்குப் போகத் தேவையில்லை, இங் கிருந்து பக்கத்திலே புதுப்பட்டினத்தில் எங்கள் வீடு இருக்கிறது. அங்கு போய் இளைப்பாறலாம்."

"ஊஹூம்—நான் எங்கும் வர விரும்பவில்லை."

"இப்படிக் கண்டிப்பாகப் பேசக்கூடாது — நீங்கள் எங்களுடன் புறப்படுவது தான் நல்லது!"

"என்னய்யா வம்பு — சாகப் போனவனை கொண்டு வந்து வைத்துக்கொண்டு, உயிரை வாங்குகிறீர்கள்?"

"நாங்கள் போலீசுகள்—எங்கள் கடமையைச் செய்ய வேண்டும்!"

கிழவரும் கண்டிப்பாகவே பேசினார். துரையும் அவ ரைப் போலவே பேசினான் — அப்படிப் பேசா விட்டால் கிழவரை, தான் நினைக்கிறபடி அழைத்துக் கொண்டு

போக முடியாது என்பதை அவன் புரிந்து கொண்டான். பரிமளாவுக்கு கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருந்தது, வயதான காலத்தில் அவரைப்போய் தொந்திரவு செய்வது!

"எழுங்கள் சிக்கிரம்!" என்றான் அதிகாரமாக துரை.

"நான் மட்டும்தான் இளிச்சவாயனா; மற்றவர்களையெல்லாம் ஏன் விட்டீர்கள்—என்னை மட்டும் பிடித்துக் கொண்டு?"

"உங்களிடம்தானே காரியம் இருக்கிறது."

இந்தப் பதில் கிழவரைத் தினற அடித்துவிட்டது. துரை நினைத்துக்கொண்டு சொன்னது வேறுயிருந்தாலும் கிழவர் கலங்கிப் போய்விட்டார். இந்தக் கலக்கத்தில் அவரையுமறியாமல், அவரது கை மடியைத் தடவிப் பார்த்துக் கொண்டது.

"உம்—நான் வரத்தான் வேண்டுமா?"

"ஆமாம்—போலீஸ் உத்திரவுக்கு கீழ்ப்படிவது தானே நல்லது!"

"இது ஒரு புதிய போதனையா?—'போலீஸ் உத்திரவுக்கு கீழ்ப்படி'—என்று புதிய ஆத்திச்சூடியே எழுதலாம் போலிருக்கிறதே!"

கிழவர் நிற்பதற்கு முயற்சி செய்தார். அதற்குத் துரையும் துணை புரிந்தான்—"சிறிது தூரம் நடந்து—அந்தத் தோணிக்கு வந்துவிட முடியுமா?"

"ஓ—மறுபடியும் கடற் பயணமா?—ம்—நானே நடக்கிறேன்."

"கடற் பயணம், அதிக தூரமில்லை—புதுப்பட்டினம் வரையில் தான்!"

"என்னமோ போங்க, கள்ளத் தோணியை பிடித்தீர்கள்—ஐயப்பனை அடித்து விரட்டினீர்கள்—என்னை இழுத்

துப் போகிறீர்கள் — அதுவும் போலீஸ் ஸ்டேஷனுக்கா என்ருல் இல்லே! புதுப்பட்டினத்திற்கு!''

''தலையொன்றும் போய்விடாது வாருங்கள்!''

''தலை மட்டும் போகக்கூடாது அப்பனே! —உயிரோடு என்னை எங்கு தள்ளிப் புதைத்தாலும் எரித்தாலும் கவலை யில்லே'' என்று கூவினர் கிழவர்.

''சரிசரி வாருங்கள்!'' என்று துரை அவரை அழைத் துக்கொண்டு தோணியிருந்த இடத்தை நோக்கி நடந் தான். பரிமளாவும் மற்றவர்களும் அவர்கள் பின்னே நடந் தனர். தோணியில், முதலில் கிழவரை ஏற்றிவிட்டான்— தோழர்கள் அனைவரும் ஏறிக்கொண்டனர். பரிமளா கரை யில் நின்ருள்.

''உம்—நீயுந்தான்!'' என்று கூப்பிட்டான் துரை. அருகே வந்தாள். அவளையும் தோணியில் தூக்கி தொப் பென்று போட்டான் அவன். துரை ஒரே குதூகலமாயிருந் தான் என்பதை அந்த செயல் எடுத்துக் காட்டிற்று. தோணி, புதுப்பட்டினத்தை நோக்கி, கரையோரமாகவே செல்ல ஆரம்பித்தது.

*　　*　　*　　*

மறுநாள் காலை பட்டுக்கோட்டையின் கடைத் தெரு விலே வருவோர் போவோரையெல்லாம் பார்த்து ஒரு குரல், ''சக்கரவர்த்தி தெரு எங்கேயிருக்கிறது?'' என்று கேட்டுக்கொண்டேயிருந்தது. அது யாருடைய குரலா யிருக்க முடியும்? தங்கப் புதையலைத் தேடும வெள்ளி யம்பலத்தின் குரல் தான் அது!

யாரோ ஒரு கடைக்காரர் அம்பலத்திடம், மிகவும் விபரமாக சக்கரவர்த்தி தெரு இருக்குமிடத்தை சொல்லி யனுப்பினர். அம்பலம் அந்த ஊர் முழுதும் சுற்றி, கடைசி

யாக சக்கரவர்த்தி தெருவைக் கண்டுபிடித்துவிட்டார். பள்ளிக்கூடத்திற்குச் செல்லும் வழி அதுதான்! அந்தத் தெருவிலே ஒரு வீட்டில் சென்று, "துக்காராம் சைக்கிள் கடை எங்கேயிருக்கிறது?" என்று விசாரித்தார். வீட்டுக் காரர்கள், தெருக்கோடியிலே அந்தக் கடை இருப்பதாக அறிவிக்கவே, வெள்ளியம்பலம் வேகமாக கடையைத் தேடிப் புறப்பட்டார்.

சிகப்பு, பச்சை, மஞ்சள், கருப்பு, வெள்ளை முதலிய பல வித வர்ணங்களிலே அமைந்த பத்து பதினைந்து சைக்கிள்கள் வரிசையாக வெளியே நிறுத்தப்பட்டிருந்தன. அவைகளில் சிலவற்றுக்கு 'பிரேக்' இல்லை — ஒரு சில சக்கரத்தை இழந்தும் நின்றுகொண்டிருந்தன. வெளியில் பார்ப்பதற்கு பகட்டான கடை. "துக்காராம் சைக்கிள் கம்பெனி" என்ற பெரிய எழுத்துப் போர்டு, அந்தக் கடை எல்லையையும் தாண்டி வெளியேயும் நீட்டிக்கொண் டிருந்தது.

உள்ளே போடப்பட்டிருந்த இரண்டு மூன்று நாற்காலி களில் சில நண்பர்களை உட்கார வைத்துப் பேசிக்கொண் டிருந்தான் துக்காராம்.

நல்ல உயரமும், கெச்சலான வடிவமும், அசடு வடியும் முகமும், துக்காராமின் அடையாளங்கள். தன்னைப் படா டோபமாக அழகுபடுத்திக் கொண்டிருப்பதாக நினைத்து, அவன் ஒரு மஸ்லீன் ஜிப்பா போட்டிருப்பான். அந்த ஜிப்பா, அவன் உள்ளே போட்டிருக்கும் கருப்பு முண்டா பனியனை வெளியிலே காட்டிக் கொண்டிருக்கும். மெல்லிய நூல் போன்ற ஒரு தங்கச் சங்கிலியும் அவனது நெட்டைக் கழுத்தை அலங்கரித்தது. கையிலே ஒரு நாய்க்குட்டி யுடன் கொஞ்சிக்கொண்டு நண்பர்களுடன் பேசிக்கொண் டிருந்தான்.

"என்னு பிரதர்! ஒரே டல்லா இருக்கு லேப்!"—இது துக்காராம்.

"ஆமாம்ப்பா — அவ ஊருக்குப் போன பிறகு, துக்காராம், துக்காராமாக மாறிவிட்டாய்!" — இது ஒரு நண்பன்.

"பரிமளா, இந்தத் தெருவிலே நடக்காம இந்தத் தெருவே பாழாய்ப்போன மாதிரி தெரியுது — பாலைவன மாகக் காட்சி அளிக்குது!"

"கூடியசீக்கிரம் உனக்கு பரிமளா பைத்தியம் பிடித்தே விடும்!"

"பைத்தியம் பிடிக்காவிட்டாலும், பரிமளா, பரிமளா என்று கத்திக்கொண்டிருந்தால் திருப்தியாயிருக்கும் போலிருக்குப்பா!"

"அல்லி, அல்லி என்று அர்ச்சுனன் ஒரு கல்லைப் போட்டுத் தேய்த்தாணுமே; அதுபோல நீயும் எதையாவது தேய்த்துக் கொண்டிரேன்!"

"இப்படித்தான் யோசனை சொல்வீங்கடா நீங்க! அர்ச்சுனன் தேச்சது மாதிரி தேயின்னு சொல்றீங்களே தவிர, யாராவது ஒருத்தன் — அந்த அர்ச்சுனனுக்கு உதவி பண்ணின கிருஷ்ணன் மாதிரி எனக்கு உதவிசெய்ய வாரீங்களா?"

"அது சரியப்பா! என்னமோ எங்களால் முடிந்தது அவள் ஊரைத்தான் விசாரித்துச் சொன்னேம். அவ ளிடமே உன்னை அழைத்துப் போகமுடியுமா, அல்லியிடம் அர்ச்சுனனை அழைத்துப்போன மாதிரி!"

"என் அழைத்துப் போனால் என்னவாம் — திறமை யில்லேன்னு சொல்லுங்கடா!"

"அழைத்துப் போகிறேரும் — ஆனல் நீ, அர்ச்சுனன் மாதிரி, பாம்பாக மாறவேண்டுமே!"

"போங்கடா — போக்கற்றவனுங்களா! — சரி—சரி— நான் கொஞ்சம் கடைத்தெரு மட்டும் போய்ட்டு வர்ரேன்— டே பையா! கடையைப் பார்த்துக்க — அலோ! கையா லாகாத நண்பர்களே! நான் வருகிறேன் சாயங்காலம் பார்ப்போம்—" என்று கூறியபடி துக்காராம், தன் நாய்க் குட்டியுடன் சைக்கிளில் ஏறிப் புறப்பட்டான். சைக்கிள் சிறிது தூரம் நகர்ந்தது. எதிரே, அம்பலம் ஒரு பையனிடம் துக்காராம் கடையை விசாரிக்க, அந்தப் பையன் "அதோ அவரே சைக்கிளில் வருகிறார்!" என்று துக்காராமைக் காட்டிவிட்டுப் போய்விட்டான்.

அம்பலம் விரைவாக வந்து, துக்காராமை நிற்கும்படி கையை உயர்த்திக் காட்டினர் — துக்காராம் சைக்கிளில் இருந்து இறங்கி, "யார், என்ன வேண்டும்" என்று ஆவலாகக் கேட்டான்.

12

துக்காராம் சைக்கிளைப் பிடித்துக்கொண்டே நிற்க, அவனருகே அம்பலம் நெருங்கிச் சென்று "உங்களிடம் ஒரு முக்கிய சமாச்சாரம் பேச வேண்டும்!" என்று குழைவாகச் சொன்னர். "என்னிடம், முக்கிய சமாசாரமா? அடேடே என் வாழ்க்கையிலேயே இப்பதான் இப்படி ஒரு ஆளைப் பார்க்கிறேன். என்னையா முக்கிய சமாசாரம்?" என்று இளித்துக்கொண்டே கேட்டான் துக்காராம்.

"தெருவிலே நின்றுகொண்டா பேசுவது? வாங்க ளேன் கடைக்குப் போவோம்!"

"மணிக்கணக்கா பேச வேண்டிய சமாச்சாரமோ? எனக்கு அவசரமா வேலையிருக்குதே!"

"அப்படி யொன்னும் பெரிய விஷயம் இல்லே! கடையிலே போய் உட்கார்ந்து பேசலாமென்று நினைச்சேன்— அவ்வளவுதான்!"

"அது சரி; நீங்க எந்த ஊரு?"

"நான் இருக்கிறது மருங்கப்பள்ளம்!"

"என்ன மருங்கப்பள்ளமா?"

துக்காராமின் உள்ளத்தில் புதிய உற்சாகம் கரை புரண்டது. தன் நெஞ்சங் கவர்ந்த பரிமளாவின் சொந்த ஊரும் மருங்கப்பள்ளம்தான் என்று அவன் முன்பே அறிவான். அம்பலமும் அவள் ஊர்தான் என்றதும் அவளைப் பற்றிய நிறைய விபரங்களை சேகரிக்கலாம் என்று மனக் கோட்டை கட்டினான். ஒரு சமயம் பரிமளாவே மனம் உருகி, இறுதியாக இந்த ஆளை அனுப்பிவைத்திருக்கிறாள் போலும் தூதாக — என்றும் கற்பனை செய்து கொண்டு களிப்படைந்தான். இந்த ஆசாமி பரிமளாவின் தகப்பனாராக இருந்து விட்டால் என்ன செய்வது; தான் பரிமளாவிடம் நடந்து கொண்ட குறும்புத்தனமான நடவடிக்கைகளுக்கு தண்டனை தருவதற்காக அவரே நேரில் வந்திருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லையே என்றும் சிறிது அஞ்சினான். இந்த எண்ண அலைகள் அவனை சிறிது நேரம் மௌனத்திலாழ்த்தியது.

"என்ன தம்பி பேசாம நிற்கிறீங்க?" என்று கேட்டார் அம்பலம்.

"ஒன்றுமில்லை — வாருங்கள் கடைக்கே போகலாம்" என்று அம்பலத்தை அழைத்துக்கொண்டு துக்காராம் கடைக்குப் புறப்பட்டான். அம்பலம் வாயிலிருந்து எத்த

கைய வார்த்தைகள் உதிரப் போகின்றனவோ என்று ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டே உட்கார்ந்தான் துக்காராம். அவனுடைய நண்பர்கள் எல்லாம் முன்பே போய்விட்டது அவனுக்கு இப்போது மகிழ்ச்சியாக இருந்தது.

"டே பையா! இரண்டு கிளாஸ் டீ வாங்கிட்டு வாடா!"

"வேண்டாம் தம்பீ—நான் டீ சாப்பிடுற பழக்கமே இல்லே!" என்றார் அம்பலம்.

"காப்பி சாப்பிடுங்க—ஏ, காப்பி வாங்கிட்டு வாடா!"

"ஐயோ—காப்பியா? ஊஹூம்!"

"சரி! சோடா!—பையா—போடா!"

"சோடாவே தொடமாட்டேன்!"

"கிரஷ்—?"

"என் அனுவசியமா செலவு—எனக்கு அந்த சினித் தண்ணிகளே புடிக்காது—காசு போற தெண்டம்!"

"பாதாம்கீர் சாப்பிடுங்களேன்—"

"அடாடா—விடமாட்டீங்க போலிருக்கு—சரி—உங்க ஆசையைக் கெடுப்பானே?"

"பாதாம் கீர் வாங்கிட்டு வாடா பையா!" என்று கூறியபடி துக்காராம் மணிப்பர்சை திறந்தான் காசு எடுப்பதற்காக! பர்ஸில் ஒரு அணுவோ இரண்டு அணுவோ தான் இருந்தது. அதை வெளியில் காட்டிக்கொள்ளாமல்—"ஓகோ!—நூறுரூபா தாளா இருக்குதே தா—சரி—சரி இந்தா! போயி சில்லறை மாத்தி பாதாம் கீர் வாங்கிட்டு வா!" என்று பர்சை பையனிடம் மூடியபடி விட்டெறிந்தான். எஜமானனுடைய தந்திரத்தைப் புரிந்துகொண்ட பையனும் பர்சுடன் ஓட்டமாக ஓடிவிட்டான். அவனுக்கு

ஊர் சுற்றிப் பார்க்க சில மணி நேர ஓய்வு கிடைத்ததே என்ற சந்தோஷம்.

பையன் போன பிறகு துக்காராம், அம்பலத்தைப் பார்த்து சமாச்சாரத்தை அறிந்து கொள்ளும் ஆவலை தன் முகக்குறிப்பின் மூலம் வெளியிட்டான்.

"மருங்கப்பள்ளத்திலே உங்களுக்கு யாரையாவது தெரியுமா?" அம்பலத்தின் இந்தக் கேள்விக்கு உடனடியாக பதில் சொல்ல துக்காராம் தயங்கி, பிறகு தன்னைத் தானே சமாளித்துக்கொண்டு, "ஆமாம் — தெரியும்!" என்றான்.

"தெரிந்த ஆள் — ஆணை, பெண்ணை?"

"இது என் இந்த புதிய கேள்வியைக் கேட்கிறீங்க — யாராயிருக்கணும் என்று நினைக்கிறீங்க — நீங்க?"

"பதினாறு முழம் என்றுதான் நினைக்கிறேன் —"

"இல்லே — தப்பு! பன்னிரண்டு முழம்தான் இப்போதெல்லாம்!" என்று கூறிவிட்டு சிரித்தான் துக்காராம்.

"குறும்புக்காரத் தம்பிதான் — அதான் அந்தப் பெண்ணை சொக்கிப்போயி கிடக்கு!"

துக்காராம் வெட்கத்தால் தலை குனிந்து கொண்டான். பரிமளாவிடமிருந்து தித்திப்பான சேதியொன்று வந்திருப்பதாக யூகித்துக் கொண்ட துக்காராமினால் மகிழ்ச்சியைத் தாங்க முடியவில்லை.

"பரிமளா ஏதாவது சேதி சொல்லி அனுப்பியதா?" என்று அவசரமாகக் கேட்டே விட்டான் அவன்.

"அடிசக்கை! பேரையே சொல்லிட்டீங்களே தம்பீ! — உம்; காதலுக்கு கண்ணு ஏது? யாராயிருந்தாலும் — அவுங்க யாரு என்னுண்ணு பாக்காம — பேசிடறதுதான்

காதல் லக்ஷணம்ன்னு சொல்லக் கேட்டிருக்கேன். எங்க காலத்திலே எல்லாம் காதலாவது கத்தரிக்காயாவது— இப்பத்தான் அதையெல்லாம் கேள்விப்படுறோம்!" என்றார் அம்பலம்.

"என்ன அப்படி சொல்லிட்டீங்க! உங்க காலத்திலே காதல் இல்லியா? உங்க முப்பாட்டன் காலத்துக்கு முன்னேயே காதல் இருந்திருக்கு!—நேத்திகூட வள்ளித் திருமணம் நாடகம் பார்த்தேன்—வள்ளியும் முருகனும் காதலே அள்ளி அள்ளிப் பருகினாங்களே—அடா அடா! அதிலே ஒரு காதல் பாட்டு வருகிறது கேளுங்கள்!" என்று ஆனந்த மிகுதியால் துக்காராம் பாட ஆரம்பித்து விட்டான்.

"காயாத கானகத்தே!" என்ற பாட்டை ஆரம்பித்து, "மேயாத மான்! புள்ளி மேவாத மான்! எந்தன் மேயாத மான்!" என்று பிர்க்காக்களை உருட்ட ஆரமபித்தான்.

"சரிதான்; காதலிலே அரைப் பயித்தியமாயிருக்கிறதாக்கும்!" என்று நினைத்துக் கொண்ட அம்பலம் அவனது பாட்டை அருமையாக ரசித்தார்.

"தம்பி; காதல் ரொம்ப காலமா உலகத்தை ஆட்டி வைக்குது — ஆண்களை பைத்தியமாக்குது — பெண்களை பித்துக்குளி ஆக்குது — என்பதை ஒரு பாட்டாலேயே விளக்கிட்டீங்க!"

"பாட்டு மாத்திரமா? இதோ வசனம் கேளுங்க! "ஏ—குறவள்ளியே! கொண்ட காதலே கண்ட துண்டமாக்காதே! தினைப்புனத்திலே ஆலோலம் பாடிக் கொண்டிருக்கும் உன்னை தாலேலோ பாடும் தாயாக மாற்ற இந்த வேடன் விரும்பி விட்டான்! காதல் நிலவே! ஆசை நட்சத்திரமே! இன்ப சூரியனே! நேச வானமே! பாச விளக்கே! மோசம் பண்ணாதே! மோடி செய்யாதே!"

"போதும் தம்பீ போதும்! காதலிப்பற்றி ஒரு கால க்ஷேபமே பண்ணி விடுவீர் போலிருக்கு!"

"அதில் என்ன ஆக்ஷேபனை! இதோ கேளுங்க காலக்ஷேபத்தையும்! — சந்திரனுகப்பட்டவன் தாரையின் முகார விந்தத்திலே மயங்கியவனுய் அவள் தன்னுடைய குரு பத்தினி என்பதையும் மறந்து அவளோடு கூடுவ தற்கு புறப்பட்டான். அதைப் போலவே அந்த தாரை யாகப்பட்டவள், சந்திரனுகப்பட்டவன் தன் மாணவன் என்பதை மறந்து அவனேடு கூடுவதற்கு உடன்பட் டாள். தாரையின் ரூபலாவண்யமோ ரதியையும் மிஞ்சக் கூடியது! சந்திரனின் ரூபலாவண்யமோ மன்மதனையும் மிஞ்சக்கூடியது! இருவரும் இன்பமாக இருந்தபோது தாராதேவியாகப்பட்டவள் அளித்த முத்தங்களின் வடுக் கள் தான் இன்றைக்கும் சந்திரனின் முகத்திலே கருப் பாகத் தெரிகிறது. அதைக் களங்கமென்று புகல்வார்கள் காதல் மகத்துவம் புரியாதவர்கள். தாரையினுடைய கணவனுக்கு வேண்டுமானுல் சந்திரனின் முகத்திலே யிருக்கிற கருப்பு களங்கமாயிருக்கலாம் என்று கூறலாம். இப்படியாகத்தானே சந்திரனும் தாரையும் பாபச் செய லிலே ஈடுபட்டு, குருவின் சாபத்திற்கு ஆளானுர்கள்."

"பலே தம்பி—பலே! காதலிப்பத்தி ஒரு ராமாயணமே எழுதுவீங்க போலிருக்கு!"

"அதுவும் எழுதியிருக்கிறேன்—இதோ!" என்று அங் குள்ள பெட்டியைத் திறந்து ஒரு பெரிய நோட்டுப் புத்த கத்தை எடுத்து அம்பலத்திற்கு முன்பு விரித்துக் காட்டினன்.

"இந்தக் கதைக்குப் பெயர்; 'இன்பலோகம் அல்லது இரண்டு ஜோடிப் புருக்கள்'. இதை எழுதி முடித்து ஒரு

வாரமாகிறது. இதில் வரும் கதாநாயகிக்குப் பெயர் பரிமள காந்தி என்பது.”

“ஓகோ — அந்தப் பெயரையே.....”

“ஆமாம் — ஞாபகார்த்தமாக! — இந்தக் கதையில் வரும் சம்பவங்கள் எல்லாம் ஒரே பயங்கரம்! ஒரே காதல்! ஒரே மர்மம்! ஒரே திடுக்கிடல்! ஒரே மகிழ்ச்சி! ஒரே மோகம்! ஒரே சோகம்! ஒரே வேகம்!”

“ஒரே தாகம்!”

“உம்—அதுவுமிருக்கு!”

“ஓகோ! இதோ தர்ரேன் — அடேடே, பாதாம் கீர் வாங்கப் போனவன் ஆளையே காணுமே—” என்று தண்ணீரை கொடுத்துவிட்டு மீண்டும் நோட்டை விரித்தபடி; “இந்த இன்பலோகக் கதையிலே ஒரு விசேஷம் என்னவென்றால்; காதலர்கள் ரெண்டுபேரும் செத்துப்போயி கூட அவர்களை ஆசிரியர் விடவில்லை. அதாவது நான் தான் ஆசிரியர்! என்ன செய்திருக்கிறேன்னு, செத்த காதலர்கள் இருவரும்—மேல் உலகத்திலே போயி ஜாலியா இருக்கிறாங்க!—அங்கேயும் ஒரு வில்லன் வர்ரான்—அங்கேயும் சண்டை சச்சரவு—இப்படி வச்சுட்டேன்—கடைசியாக பரமசிவன் தலையிட்டு, அந்த வில்லனை நரகலோகத்துக்கு அனுப்பிவிட்டு, காதலர்கள் இருவரையும் சேர்த்து வைக்கிறார் என்று கதை முடிகிறது.”

“நல்ல முடிவு தம்பீ!”

“இந்தக் கதையை என் கினேகிதர் ஒருவர் படித்து விட்டு இதை இங்கிலீஷிலே மொழி பெயர்க்கலாம் என்று துடியாய்த் துடிக்கிறார்—முதல்லே, தமிழிலே வெளியிடுறதா—இங்கிலீஷிலே வெளியிடுறதா—அப்படிங்கிற சந்தேகத்திலே கதையை அச்சுக்குக் கொடுக்க தயங்கி கிட்டு இருக்கேன்.”

"ஆண்டவன் புண்யத்திலே அச்சாகி வரட்டும்"

"இதிலே ஒரு இடம்—படிக்கிறேன் கேட்கிறீங்களா?"

"அப்புறம் சாவகாசமாக படிக்கலாம் தம்பீ—இப்ப வந்த விஷயத்தைப் பேசி விடுகிறேன்."

"என்ன விஷயம்?—அதைச் சொல்லுங்க"—

"நீங்க—என்னுடை நம்ப ஊருக்கு வரணும்?"

"மருங்கப்பள்ளத்துக்கா?"

"ஆமாம்!"

"ஏன்—எதற்காக?"

"பரிமளாவுக்கும் உங்களுக்கும் ஒரு மாதிரி இருக்கிற விஷயம், அவுங்க அப்பாவுக்கு தெரிஞ்சு போச்சு!"

"அய்யோ!"

"பயப்படாதிங்க — அந்தப் பெண்ணு உங்கமேலே உயிரை வச்சிருக்கு—"

"ஆகா—அதிலென்ன சந்தேகம்!"

"நான் ஒரு மாதிரி அவுங்க அப்பனே சமாதானம் பண்ணி வச்சிருக்கேன். அவன் உங்களே பாத்துட்டான்னு சின்னு சொல்லிடுவான் — நான் வந்து பரிமளாவுக்கு மாமன் முறை வேணும்—எனக்கு அந்தப் பெண்ணு மேல உயிருதான்! அது இஷ்டத்துக்கு விரோதமா என்னாலே கடக்க முடியாது—நீங்க ஊருக்கு வந்தா கல்யாணத்தை ஒரு தினுசா முடிவு பண்ணி விடலாம்—"

"பரிமளா என்ன சொன்னது?"

"உங்களே அழைத்து வரும்படி அதுதானே விலாசமெல்லாம் கொடுத்தது!"

துக்காராமிடம் சந்தோஷத்தை வெளிக் காட்டிக் கொள்ளாமலிருக்க முடியவில்லை. அவருடன் மருங்கப் பள்ளம் புறப்படுவதற்குத் தயாரானான்.

* * * *

துக்காராமும், அம்பலமும் மருங்கப்பள்ளம் கிராமத்தின் எல்லையை அடைந்து விட்டார்கள்.

"கிராமம் மிகவும் அழகாயிருக்கு" என்றான் துக்காராம்.

"கிராமம் என் அழகாயிருக்காது! கிளியல்லவா இருக்கிறது இங்கே!" என்று கிண்டல் செய்தார் அம்பலம். துக்காராம் பெண் போல நாணிக்கொண்டான். மருங்கப் பள்ளத்து சிவன் கோயிலுக்கு கொஞ்ச தூரத்தில் இருவரும் வந்து கொண்டிருந்தார்கள். அப்போது அம்பலத்திற்கு துக்காராமிடம் ஏதாவது குறிப்பறிய வேண்டும் என்ற அவசர புத்தி உதயமாயிற்று ஆசைக்காரரல்லவா அவர். ஆகையால் அவர் துக்காராமைப் பார்த்து, "அதோ அந்த கோயிலை நீங்க பார்த்திருக்கீங்களா தம்பி?" என்று கேட்டார். எந்தவித முகமாற்றமும் காட்டாமல் துக்காராம், "இதுமாதிரி எத்தனையோ கோயில் பார்த்திருக்கேன்" என்று பதில் கூறினான். அதற்கு மேல் அவனை குறுக்கு விசாரணை செய்து தன் குறிக்கோளை கெடுத்து விடக்கூடாது என்று எண்ணிய அம்பலம், துக்காராமை அழைத்துக் கொண்டு தன் வீடு நோக்கி நடந்தார்.

13

துக்காராமும் அம்பலமும் வாய்க்காலின் ஓரமாக வுள்ள ஒரு கூரை வீட்டை அடைந்தனர். தோட்டம் சூழ்ந்த அந்த வீட்டை சுற்றிச் சுற்றிப் பார்த்தான் துக்கா ராம். அவனுக்கு எண்ணம், ஒருவேளை இதுதான் பரிமளா வின் வீடோ என்று! முதலில் அம்பலம் வீட்டுக்குள்ளே நுழைந்தார். "டேய் ராமா!" என்று சப்தம் கொடுத்தார். பதறி அடித்துக்கொண்டு ஓடி வந்தான் ஒரு அசடு வழி யும் வேலைக்காரப் பையன். அவன் வந்த வேகத்தில் அம்பலத்தின்மீது முட்டிக்கொள்வான் போலிருந்தது. குள்ளமான உருவமும், இளித்துக்கொண்டேயிருக்கும் வாயும், ஆடிக்கொண்டேயிருக்கும் தலையும் அந்த வேலைக் கார ராமனின் தனி லக்ஷணங்கள். உத்திரவுக்காக காத்து நின்ற அவனிடம், அம்பலம் — "என்னடா விசேஷம்?" என்று கேட்டார். "விசேஷம் என்னங்க.....நீங்கதான் சொல்லணும்" என்று ராமன் இளித்தான். "அடக் கழுதை! என்னையே திருப்பிக் கேக்கிறியா? டேய்—இந்த பாரு—இந்த அய்யா வெளியூருக்காரரு!"

"பாத்தாலே தெரியுதுங்க எஜமான்!"

"நம்ப வீட்டு விருந்தாளியா வந்திருக்காரு—அவரை ஒழுங்கா கவனிச்சுக்க! அவருக்கு என்னென்ன வேணுமோ....."

"சரிங்க..." என்று ராமன் இளித்தான். அம்பலம் துக்காராமை உபசரித்து, உள்ளேயுள்ள பலகையில் உட் கார வைத்து, தானும் கொட்டாவி விட்டபடி அங்குள்ள சாய்வு நாற்காலியில் சாய்ந்தார்.

"என்ன, வீட்டில் நீங்க மாத்திரம்தான் தனியா?" என்று ஏதோ கேட்க ஆரம்பித்த துக்காராமிடம் அம்பலம்,

"இல்லே இல்லே! வீடெல்லாம் ஊருக்குள்ளேயிருக்கிறது. இது நமக்கு தனி பங்களா மாதிரி—இங்கேயிருந்து எனக்கு வயல் வெளி தோட்டம் துரவு கவனிக்க ரொம்ப சௌகரியம். அதனல் — இங்கே ஒண்ணு கட்டிப்போட்டேன்" என்று பதில் கூறினர்.

"அவுங்க வீடெல்லாம் ரொம்ப எட்டியாக்கும்!"

"ஓ—தம்பிக்கு அவசரம் போல இருக்கு!—அவுங்க வீடு கொஞ்சம் எட்டித்தான் இருக்கு.....தம்பீ!—அவசரப் பட்டு அந்தப் பக்கம் போய்ட வேண்டாம் — என்னை; அவுங்க அப்பன் கொஞ்சம் முரடன். இந்தக் காதல், கிதல் எல்லாம் அவனுக்கு ஒரு மண்ணுங்கட்டியும் புரியாது!"

"பார்த்தீங்களா! உலகத்திலே காதல் சரியாக பரவாததினல் எவ்வளவு சங்கடம் வருகிறது? அதனல்தான் என்னுடைய புஸ்தகத்திலே எழுதியிருக்கிறேன்; கடலில் உள்ள மீனுக்கும், காட்டில் உள்ள மானுக்கும், தேன் குடிக்கும் வண்டுக்கும், வயல் நண்டுக்கும் காதல் வழங்கிய கடவுளே! மனித ஜாதிக்கு அதை வழங்காமல் அதற்குள் உன் கடையை ஏன் மூடிவிட்டாய்? எப்படி என் கருத்து என்று நினைக்கிறீங்க!"

"நல்லாயிருக்கு தம்பீ! நீங்க சொந்தமாகவே இதை எழுதுனீங்களா! இல்லே....."

"பல ஆராய்ச்சி செய்து எழுதியிருக்கிறேனுக்கும். பழைய காலத்து கல்வெட்டுன்னு கேள்விப்பட்டதில்லியா? சாக்ரடீஸ் என்றே ஒரு மனிதர் இந்தியாவுக்கு வந்து அகத்தியரோடு பேசிக்கொண்டிருக்கும்போது, அகத்தியர் காதலைப்பற்றி இப்படிச் சொல்லியிருக்கிறார். அந்த வார்த்தைகளை கல்லிலே செதுக்கி வச்சிருக்காங்க! — அதுவும் அராபி பாஷையிலே! — அதைத் தேடிப் பிடிச்சு கொண்டாந்து, நம்ப கதையிலே சேத்தேன்!"

துக்காராமின் பேச்சினிடையே, ராமன் குறுக்கிட்டு—"என்னங்க, நண்டும் வண்டும் தேடிப்பிடிக்க அகத்தியூரு வரையிலும் போய் அலைந்திருக்கிங்க—எனக்கிட்ட சொன்னு கூட, நமப வயக்காட்டிலே பிடிச்சாந்து தருவேனே!"

"அய்யோ—இது காதல் நண்டப்பா?"

"கிராமத்திலே கிடைக்காதாக்கும்!"

"ஏன் கிடைக்காது! காதலுக்கு கிராமம், நகரம் என்ற பேதம் ஏது?—காதல் என்பது ஒரு ரோடு ரோலர்! மேட்டையும் பள்ளத்தையும் சமப்படுத்தும் சமதர்ம தத்துவம் தான் காதல்—அதற்கு கிராமம், நகரம் என்ற வித்தியாசமே கிடையாது!"

"ஓ! அப்படீங்களா?"

"பாவம் உனக்கு இதெல்லாம் தெரியவில்லே. உனக்கு மட்டுமா? உலகத்துக்கே இந்த அரிய விஷயங்கள் தெரிய வேண்டுமானால், என்னுடைய புத்தகம் அச்சு வாகனம் ஏறவேண்டும்—"

என்று தனக்குள்ளாகவே மிகுந்த கவலைப்பட்டுக் கொண்டான் துக்காராம். ராமனும், துக்காராமும் பேசிக் கொண்டிருக்கும் போது எங்கேயோ நீண்ட சிந்தனையில் இருந்த அம்பலம், திடீரென எழுந்து—"ஏ, ராமா! போடா வெளியே!" என்றார். ராமன், வெளியே மாயமாய்ப் பறந்து விட்டான். துக்காராமுக்கு ஒன்றும் புரியவில்லை. விழித்தான். அவனைப் பார்த்து அம்பலம்:

"தம்பீ! கொஞ்சம் இருங்க — நான் போய் பரிமளாவிடம் நீங்க வந்திருக்கிற விஷயத்தை சொல்லிவிட்டு வந்துடுறேன்—" என்றார்.

வேண்டாமென்று கூறுவானா துக்காராம்! 'சரி சரி' என்று ஆமோதித்துக்கொண்டே எழுந்தான். 'ராமன் இருப்பான் இங்கே.....கொஞ்ச நேரத்திலே வந்து விடு

றேன்" என்று அம்பலம் அதை விட்டுப் புறப்பட்டார். போகும்பொழுது அவர் ராமனைத் தனியாகக் கூப்பிட்டு, "ஏ பயலே! அவரை ஜாக்கிரதையா கவனிச்சுக்க—எங்கயும் அவர் போகாம பாத்துக்க—" என்று உஷார் படுத்திவிட்டு கிளம்பினர். ராமனும் துக்காராமுக்கு பேச்சுத் துணையாக வந்து சேர்ந்தான்.

*　　*　　*　　*

அம்பலம், நேராக பரிமளாவின் வீட்டுக்கு நடந்தார். நடக்கும்போதே பலவித எண்ணக் குழப்பங்கள் அவரைப் படாதபாடு படுத்தின. எப்படியும், துக்காராமின் மூலமாக தங்கம் புதைக்கப்பட்ட இடத்தை தெரிந்துகொள்ளவேண்டும் என்ற உறுதியான முடிவு மாத்திரம் அவருக்கு உற்சாகமூட்டிக்கொண்டேயிருந்தது—பரிமளாவைப் பார்த்து அவளிடம் அவளது காதலன் வந்திருக்கிறான் என்று சொன்னால் அவள் என்ன நினைப்பாள்? தன் வார்த்தையை நம்பி, அவள் தன் வீட்டுக்கு வருவாளா? அப்படியே வந்தால்தான் துக்காராமிடமிருந்து தான் ரகசியத்தைப் பெறுவதற்கு அவள் எப்படி துணை செய்ய முடியும்? அவள் வராவிட்டால் துக்காராம் தன்னை நம்பாமல் போய்விடக் கூடுமே! பரிமளாவுக்காகத்தான் அவனை அழைத்து வந்திருக்கிறேன் என்று என் மீது அவன் நல்ல அபிப்பிராயம் வைக்க வழி என்ன? என்றெல்லாம் யோசித்துக்கொண்டே போனார் அம்பலம்.

அவருடைய இந்த யோசனைகளையெல்லாம் தரைமட்டமாக்குவதுபோல செய்தி கிடைத்தது, அவர் பரிமளாவின் வீட்டில் நுழைந்ததும்!

தாண்டவன் கோபாவேசமாக நின்று கொண்டிருந்தார். அங்கே அம்பலம் விஷயத்தை விசாரித்தார். அன்றிரவு தூக்கிச் செல்லப்பட்ட பரிமளா, திரும்ப வீட்டுக்கே வரவில்லை என்பதைப் புரிந்துகொண்டார்.

"யார் தான் தூக்கிப் போயிருக்க முடியும்?" என்று தெரியாதவர் போல கேட்டார்.

"வேறு யார்? எல்லாம் அவளுடைய கள்ள புருஷனுய்த் தானிருக்கும். இங்கேயிருந்தால் செத்துவிடுவோம், என்று பயந்து அவனோடு ஓடிவிட்டாள் மானங் கெட்ட பெண்! அன்னைக்கு மாத்திரம்; நான் மட்டும், ஒரு நிமிஷம் முந்தியிருந்தா — அவளைத் துண்டு துண்டா வெட்டிப் போட்டிருப்பேன்?" என்று பற்களைக் கடித்துக்கொண்டார் தாண்டவன்.

"காரியத்தை இவ்வளவு தூரம் வளர்த்துட்டிங்களே— இப்ப, பரிமளாவைத் தேட வேண்டாமா?" என்று அம்பலம் கேட்டார்.

"போலீசிலே ரிப்போர்ட்டு பண்ணி தேடுவேன்னு நினைக்கவேண்டாம் — அதுதான் இந்த தாண்டவங்கிட்ட நடக்காது! நானே தேடுவேன்—நானே கண்டுபிடிப்பேன் — நானே அவங்களை கண்ட துண்டமா நறுக்குவேன் — வந்த அவமானம் வந்தாச்சு! இனிமே என்ன ஆனா என்ன?"

அம்பலத்தின் மூளை வேலை செய்தது—பரிமளா காணாமற் போய்விட்ட சேதி ஊரில் பாவினால், அது துக்காராமுக்குத் தெரிந்து, அவனும் ஓடிவிடுவானே என்று பயந்தார். அதனால் அவர் தாண்டவனிடம் தந்திரமாகப் பேசினார்.

"பரிமளா காணுமற்போன சேதி யாருக்கும் தெரியவேண்டாம். அவள் பட்டுக்கோட்டையில் இருப்பதாகவே ஊரில் கூறிவிடுவோம்—அவளை தேடுகிற வேலையை ரகசியமாகவே செய்வோம்—இல்லாவிட்டால் ஊரில் கேவலமாகப் பேசுவார்கள்."

தாண்டவனும் அம்பலத்தின் பேச்சுக்கு தலையசைத்தார். ஆனாலும், அவரது ஆத்திரம் நிலைகொள்ளாததாயிருந்தது. தன்னுடைய பரம்பரையிலேயே இல்லாத பயங்கரமான களங்கம் இப்போது தன்னை சுற்றிக்கொண்டதாக எண்ணிக் குமுறினர். அம்பலமோ, "பரிமளா எங்குதான் போயிருப்பாள்?" என்ற சிந்தனையுடன் திரும்பினர். ஒருவேளை அந்தப் போலீஸ்காரர்கள் கையில் சிக்கியிருப்பாளோ — அப்படி சிக்கியிருந்தாலும், போலீஸ்காரர்கள் அந்தச் செய்தியை உடனே வெளியிட்டிருப்பார்களே— இது என்ன; ஒரே மாயமாயிருக்கிறது—என்று தன்னைத் தானே கேட்டுக்கொண்டார். இப்போது துக்காராமுக்கு என்ன பதில் சொல்வது? அது வேறு பிரச்சினை!

துக்காராம் பார்வைக்கு அசடு போலத்தான் தெரிகிறான். ஆனாலும், தங்கம இருக்கும் இடத்தை அவ்வளவு சுலபமாக சொல்லிவிடுவானா? அடக் கடவுளே! இந்த அசடனிடம் போய், அவ்வளவு பெரிய அந்தரங்கம் சிக்கிக் கொண்டிருக்கிறதே! என்றெல்லாம் நொந்துகொண்டார் அம்பலம். அவனைச் சந்தோஷப்படுத்தியே காரியத்தை சாதிக்கவேண்டும் என்று மாத்திரம் அவர் முடிவு கட்டிக் கொண்டார். கடைசி காலத்தில் வேண்டுமானால் — கத்தியைக் காட்டி, காரியத்தை சாதிக்கலாம் என்றும் தீர்மானித்துக்கொண்டார். சந்தோஷமாக காரியத்தை சாதிக்க பரிமளா ஊரில் இருந்தால் பரவாயில்லை— அவளோ காணப்படவில்லை — இப்போது பரிமளா ஊரில் இருந்தால்தான் துக்காராமை, இரண்டு நாள் தங்கவைக்க முடியும்— இந்தக் குழப்பத்தின் இறுதியில் அம்பலம் ஒரு நல்ல தீர்மானத்திற்கு வந்தவர் போல, பரபரப்பாக நடந்தார்—வீட்டுக்குள் நுழையாமல் வெளியே வாசலில் நின்றபடியே 'ராமா!' என்று கூப்பிட்டார். அவனும் ஓடி வந்தான். அவன் பின்னே, துக்காராமும் வந்து எட்டிப் பார்த்தான். அம்பலம்

அவனிடம்; "தம்பீ! பழம் தான்!—கொஞ்சம் இருங்க—இதோ வந்து விடுகிறேன்" என்று கூறி ராமனை அழைத்துக்கொண்டு வயல் பக்கமாகப் போகத் தொடங்கினர்.

ராமன், என்றைக்குமில்லாமல் எஜமான் தன்னை தனியாக அழைத்துப் போகக் காரணம் புரியாமல், கைகட்டிய படி பின்னே சென்றான். அம்பலம் ராமனிடம் பேச ஆரம்பித்தார்.

"ராமா! நீ ஒரு காரியம் செய்யவேண்டும்!"

"சரிங்க!"

"கெட்டிக்காரத்தனமா செய்வாயா?"

"ஏங்க செய்யமாட்டேன் — என்னமோ; அன்னைக்கு ஒரு நாளு, தவறிப்போயி; நம்ப வீட்டுக்கு வந்த அய்யரு சாமியைப் பார்த்து, தண்ணி சாப்பிடுறீங்களான்னு கேட்கிறத்துக்கு பதிலா தண்ணி, போடுறீங்களான்னு கேட்டுட்டேன்—அவ்வளவு தானுங்களே!"

"ஏய்—அதெல்லாம் போகட்டும் — பட்டுக்கோட்டை ஆள் வந்திருக்குதே!"

"ஆமாம்—என் பக்தன்!"

"என்னது?"

"ஆமாங்க—ராமபக்தன் தானே துக்காராம்!"

"போடா கழுதை!—நான் சொல்றதைக் கேளுடா!—அந்த துக்காராம் இருக்கானே, அவனுக்கு நம்ப தாண்டவன் மகள் பரிமளா மேலே காதல்!"

"சரிங்க—நடக்கட்டும்!"

"என்னடா நடக்கட்டும்?"

"காதல்!"

"அது ஒண்ணும் நடக்கலே!"

"ஓடுதுங்களா?"

"ஓடிட்டுது! — ஏ, கழுதை! அந்தப் பரிமளா எங்கேயோ ஓடிவிட்டாள். நான், இவனை ஒரு முக்கியமான காரியத்துக்காக அழைச்சிகிட்டு வந்திருக்கேன்—என்ன தெரியுமா?—பரிமளாவும் துக்காராமும்....."

"அய்யய்யய்யே!—உங்களுக்கு என் எஜமான் இந்த வேலை எல்லாம்—அவுங்க எப்படியோ போறுங்க—"

"சீ!—அவுங்களை ஒண்ணும் நான் ஜோடி சேர்க்கப் போவதில்லேடா?—பரிமளா இங்க இருக்கிறதா சொல்லி இவனை அழைச்சுட்டு வந்துட்டேன்—அவள் இங்க இல்லே! அதனால் நீ என்ன செய்யணும்னு?....."

"சொல்லுங்க செய்றேன்!"

"பரிமளா, வீட்ல இருக்கிற மாதிரியும், நீ அவளுகிட்ட இருந்து தூது வர்ற மாதிரியும் இந்த துக்காராமுகிட்ட நடந்துக்கணும்!"

"சரிங்க!"

"இப்ப, நான் அவனுக்கு நேரா, உன்னை பரிமளா வீட்டுக்கு போய்விட்டு வான்னு அனுப்புவேன். நீ போற மாதிரி போயி, கொஞ்ச நேரம் கழித்து திரும்பி வந்து, பரிமளா சேதி சொன்னது மாதிரி சொல்லணும்—"

"ஆகட்டுங்க!"

"என்ன சொன்னாள் என்று சொல்லுவே?"

"காதலரே!—பிராண நாதா!—பிரிய புருஷா!—உங்களைக் காணுமல் என் கண்கள் கெடிகாரத்தின் பெண்டுலம் போல இங்கும் அங்கும் ஆடுகிறதே!"

"டே டே — சபாஷ்!—இதெல்லாம் எங்க படிச்சே?"

"படிக்கணுங்களா? — அல்லி அர்ஜுனு தெருக்கூத்து பாத்தா போறுதுங்களா? —அதோட, துக்காராம் வேற இத்தனை நாழி இதானை பேசிகிட்டு இருந்தாரு!"

"சரி—சரி—வா! பரிமளா, சொன்னதாகச் சொல்லு அவனிடம்; வீட்ல அப்பா, அம்மா உத்திரவு பயங்கரமாயிருப்பதால, நேரா சந்திக்கிறது கஷ்டமாயிருக்குன்னு அவள் சொன்னதாகச் சொல்லு!"

"சரிங்க—இனிமே எல்லாம் நான் பாத்துக்கிறேன்."

அம்பலம், ராமனின் முதுகில் தட்டிக்கொடுத்தபடி வீட்டுக்குத் திரும்பினர்.

துக்காராம் வாசலில் நின்றபடியே அம்பலத்தின் வருகையை எதிர்பார்த்து இருந்தான்.

"தம்பீ! பரிமளா, வீட்லதான் இருக்குது!—அவுங்க அப்பனேட கட்டுப்பாடு ரொம்ப அதிகம்! அதலை நான் ஜாஸ்தி பேச முடியிலே—நீங்க வந்திருக்கிற விஷயத்தை மட்டும் ஜாடையாச் சொன்னேன்—நீங்க ஏதாவது சேதி சொல்லி அனுப்பவேண்டுமானல், இதோ ராமனே ஏற்பாடு பண்ணியிருக்கேன்—அவனிடம் சேதி அனுப்புங்கள்"

என்று அம்பலம் கூறிவிட்டு வீட்டுக்குள்ளே போய் விட்டார்.

துக்காராம், ராமனே பரிவோடும், புதிய பாசத்தோடும் பார்த்துக்கொண்டே அவனிடம் நெருங்கினன்.

"என்ன ராமா! போய் வருகிறுயா?"

"உத்திரவு கொடுங்கள்—இந்த ராமன் அனுமாரைப் போல தூது போய் வருவான்" என்று மண்டியிட்டு அமர்ந்துகொண்டான் ராமன்.

துக்காராம், தன் காதலிக்கு சேதி அனுப்பினன்.

"இதை அவளிடம் சொல் ராமா!—அவளைப் பிரிந்தது முதல் அன்ன ஆகாரமின்றிக் கிடக்கிறேன் என்று சொல்!"

"ஊஹும்—நான் பொய் சொல்லமாட்டேன்—இப்பத் தானே; இரண்டு சட்டி சோறு என் கையாலேயே போட்டேன் உங்களுக்கு!"

"ராமா!—அவளை எப்போது பார்க்கலாம்? — எங்கே பார்க்கலாம்? — என்று கேள் — பார்க்க முடியாவிட்டால்; அவளிடம் ஒரு முத்தமாவது வாங்கி வா!"

"செய்கிறேன் — செய்கிறேன்" என்று கூறிவிட்டு ராமன் ஓட்டம் பிடித்தான்.

14

புதுப்பட்டினம் போய்ச் சேர்ந்த பின்னர் கிழவர் மாயாண்டியும் நன்றாக எழுந்து நடமாடக்கூடிய அளவுக்கு பலம் பெற்றார். பரிமளாவுடனும், துரையுடனும் கலகலப்பாகவே பேச ஆரம்பித்தார். துரை, போலீஸ் அதிகாரி இல்லை என்றும்—ஏதோ ஒரு காரணத்திற்காகவே அவன் போலீஸ் வேஷம் போட்டுக்கொண்டு வந்திருக்கிறான் என்றும் கிழவர் புரிந்துகொண்டார். ஆனால் என்ன காரணம் என்பது மட்டும் அவருக்குப் புரியவில்லை. கேட்டுத் தெரிந்துகொள்ள விரும்பினர். அதற்கு நேரம் எப்போது ஒய்வாகக் கிடைக்கும் என்று எதிர்பார்த்தார்.

துரையும், கிழவர் — தனது போலீஸ் வேடத்தைப் பற்றி ஏதாவது கேட்டுவிடுவார் என்பதற்காகவே தனது தோழர்களை தன்னோடு வைத்துப் பேசிக்கொண்டே இருந்தான். அந்த வீட்டிலேயிருந்த கோரம் போர்டுக்கு நல்ல வேலை கிடைத்தது. நான்கு பேராக உட்கார்ந்துகொண்டு ஒரே குதூகலத்துடன் கோரம் ஆடுவதும், பரிமளாவும், கிழவரும் பக்கத்திலேயிருந்து அனுதாபிப்பதுமாகவே பல

மணி நேரங்கள் கழிந்தன. குழியிலே விழப்போகும் கோரம் காய் குதித்து வெளியே வந்து குழியோரத்திலே உட் கார்ந்து கொள்ளுமல்லவா — அப்போதெல்லாம் கிழவர் தன்னை நினைத்து சிரித்துக்கொள்வார். தானும் கடலிலே விழுந்து மீண்டும் கரைக்கு வந்த நிகழ்ச்சி அவருக்கு ஞாப கம் வந்துவிடும் போலும்.

துரை, கோரம் ஆட்டத்திலேயே ஈடுபட்டிருப்பதும் அவனது தோழர்கள் அவனை விட்டு அகலாதிருப்பதும் அவருக்கு மிகத் தொல்லையாக இருந்தது. கடைசியாக ஒரு முடிவுக்கு வந்து தைரியமாகவும் வெளிப்படையாகவும் தான் நினைத்ததை சொல்லியே விட்டார்.

"நீங்கள் எல்லாம், உங்கள் நண்பர் துரையை, என் னோடு சிறிது நேரம் தனியாகப் பேசவிடவேண்டும்" என்று அவர் கூறியதும், நண்பர்கள் எழ ஆரம்பித்துவிட்டனர். துரையும் அதைத் தடுக்க முடியாதல்லவா! கிழவர் என் னென்ன கேட்பாரோ, எப்படியெப்படி பதில் சொல்லவேண் டுமோ என்றெல்லாம் முன்கூட்டியே துரை யோசித்து வைத்திருந்தாலும்—இப்போது சிறிது அச்சமடைந்தான். நண்பர்கள் துரையிடம் விடைபெற்று ஒதுங்கிச் சென்றார் கள். துரை கிழவரின் இதழசைவை ஆவலோடு எதிர்பார்த் திருந்தான். பரிமளாவும், கிழவரின் பேச்சு எதைப் பொருத் ததாயிருக்கும் என்று தெரியாமல் விழித்தாள் — கிழவர் அங்குமிங்கும் மெதுவாக உலவிக்கொண்டேயிருந்தார். 'என்ன ரகசியம் பேசவேண்டும்' என்று துரை தானுகக் கேட்க விரும்பவில்லை. கிழவரும் சிக்கிரத்தில் பேச்சை ஆரம்பிக்கவில்லை. உலவிக்கொண்டேயிருந்தார், கிழட்டுப் புலி போல! கிழவரின் வாயை தானே திறப்பது என்று முடிவு கட்டிக்கொண்ட துரை, "பரிமளாவும் இங்கு இருக் கக் கூடாதோ?" என்று உண்மையாக கேட்பதுபோலவே கேட்டான்.

"பரவாயில்லை—இருக்கட்டும், துரை! அப்படியொன்றும் அச்சத்திற்குரிய ரகசியம் எதுவும் பேசப்போவதில்லை. நீ போலீஸ் அதிகாரி என்பது உண்மைதானு—தெளிவுபெறவேண்டும் நான்! தயங்காமல் உடன் பதில் கூறு!" என்று கிழவர் கண்டிப்பான குரலில் கேட்டார். சந்தேகத்துடனே — கேட்கலாமா கூடாதா என்ற ஐயத்துடனே — தயவான குரலில் கேட்ட கேள்வியாக அது இல்லாததால் துரையும் உண்மையான பதிலே சொல்லிவிட எண்ணினான்.

"நான் போலீஸ் அதிகாரி அல்ல!"

"அப்படியானால் வேஷம் போடவேண்டிய அவசியம்?"

"அவசியமில்லாமலா போடுவேன்!"

"எவனுவது கள்ளத் தோணியில் சரக்கு ஏற்றிப் போனல் அவனே மிரட்டி, அந்த சரக்குகளே கஷ்டப்படாமல் பயன்படுத்திக்கொள்வதாக்கும்—நல்ல பிழைப்பு! நரி, புலி வேஷம் போட்டுக்கொண்டு கழுதை வேட்டையாடிய கதையாக இருக்கிறது."

இந்த வார்த்தைகள் துரைக்கு சிறிது ஆத்திரத்தை அளித்தனவாயினும், அவன் கிழவர்மீது வைத்திருக்கும் மதிப்பு காரணமாக மௌனமாக இருந்தான்.

"மௌனமாக இருப்பதால் நீ ஒத்துக்கொண்டதாக நான் கருதமாட்டேன் — கள்ளத் தோணியை வேட்டையாடத்தான் வந்தீர்களா—அல்லது வேறு நோக்கமா?" என்று கிழவர் தொடர்ந்து பேசினர்.

"ஒரு மர்ம மனிதரைக் கண்டுபிடிக்கும் நோக்கத்துடன் தான் அந்த முயற்சி எடுத்தேன்."

"யார் அந்த மர்ம மனிதர்?"

"நீங்களேதான்—உங்களுடைய பேச்சும் செயலும், எனக்குப் பெரியதோர் குழப்பத்தை உண்டுபண்ணிவிட்டது — எப்படியாவது தங்களைக் கண்டுபிடித்து, உங்களுடைய அந்த நடவடிக்கைகளுக்குக் காரணம் என்ன, என்று தெரிந்துகொள்ளவே விரும்பினேன்."

கிழவருக்கு ஆச்சரியம் மேலிட்டது.

"நான் மர்ம மனிதனா? இல்லை — தப்பு! தப்பு!!" என்று பெரிய குரலில் சொன்னார்.

"மர்ம மனிதர் இல்லாவிட்டால், ஆகாயத்தைப் பார்த்து அவ்வண்ணம் பிரார்த்திப்பானேன்? எங்கள் இருவரையும் திடீரெனத் தாக்கிக் கீழே தள்ளுவானேன்? கள்ளத் தோணியிலே ஏறிச் செல்வானேன்? கடலிலே விழுந்து உயிர்விட முயற்சிப்பானேன்?"

"இதெல்லாம் மர்ம மனிதனுக்கு அடையாளமா? மண்டை குழம்பியவனுக்கு அடையாளமப்பா இதெல்லாம்! நான் ஒரு பைத்தியக்காரன்! இதை நிச்சயமாகத் தெரிந்து கொள்!"

"நிச்சயமாகத் தெரிகிறது—நீங்கள் பைத்தியக்காரர் இல்லை!"

"எப்படித் தெரிகிறது?"

"பைத்தியக்காரன், தன்னை பைத்தியக்காரன் என்று ஒத்துக்கொண்டதே இல்லை!"

"இது முற்றிய பைத்தியம்—அதையும் ஒத்துக்கொள்கிறது!"

"ஆனால் அதை ஒத்துக்கொள்ள — நான் அரைப் பைத்தியமாக இருக்க வேண்டுமே!"

கிழவருக்கு துரையின் பேச்சைக் கேட்க சிரிப்பு வந்து விட்டது. சிரித்துக்கொண்டே பேசினார்.

"என்னைப் பற்றி எந்தத் தகவலும் தெரிந்துகொள்ள விரும்பவேண்டாம். போகப்போக நான் யாரென்று தானே தெரியும்—ஆனால் ஒன்று; நான் கானகத்தில் காயும் நிலவு! தற்பெருமை பேசுகிறேன் என்று எண்ணுதே!

நிலவோடு என்னை ஒப்பிட்டுக் கொள்கிறேனே யென்றும் சிரிக்காதே! உண்மையாகவே சொல்லுகிறேன்; நான் கானகத்தில் காயும் நிலவு" என்று கிழவர் அழுத்தந் திருத்தமாகப் பேசிவிட்டு, சற்று வேகமாக அடியெடுத்து வைத்து உலவ ஆரம்பித்தார்.

துரை, பரிமளாவைப் பார்த்துக்கொண்டு நின்றான்—பரிமளா, கிழவரின் நடையை ரசித்துக்கொண்டு நின்றாள். சிறிது நடந்தவர், திரும்பிவந்து துரையிடம் நின்று;

"எல்லாம் சரி — வயதான என்னைத் தொல்லை கொடுத்து, 'நீ யார்?', 'நீ யார்?' என்று உயிரை வாங்குகிறாயே; நீங்கள் இருவரும் யாராம்? அதைச் சொல்லேன்!" என்று குறும்பாகக் கேட்டார். துரை பேசாமல் நின்றான்.

"எனக்குத் தெரியாதென்று நினைக்கிறாயா? ஒன்று நிச்சயமாகத் தெரியும்—நீங்கள் இருவரும் கள்ளக் காதலர்கள். நேற்று இரவு, நீங்கள் இருவரும் அந்த அறையில் பேசிக்கொண்டிருந்தது என் காதில் விழாமல் போகவில்லை. கிழம் தூங்கியிருக்கும் என்று எண்ணிக்கொண்டு பேசியிருக்கிறீர்கள். கதவுகளைக் கூட வெளிப்பக்கமாக பூட்டிப் போட்டாய்—நான் போய்விடுவேன் என்று பயந்து! உம்—கதவுகளைப் பூட்டினீர்கள்! என் காதுகளைப் பூட்ட முடியுமா? — பரிமளாவும், நீயும் எங்கே போய் ஒளிந்து கொண்டு வாழ்வது என்று யோசித்தீர்கள் அல்லவா?"

துரையும், பரிமளாவும் சிரித்துக் கொண்டார்கள்.

"அய்யோ—உலகம் தெரியாத பிள்ளைகளே! இந்தக் கண்மூடி ஜகத்திலே காதலாவது புடலங்காயாவது!

எனக்குக் காதலர்களைக் கண்டாலே பிடிப்பதில்லை—அவர்கள் மீது ஒரு அனுதாபம் ஏற்படுகிறது — ஆனால் அவர்களைப் பாராட்ட வேண்டும் என்ற ஆசை எழுவதே கிடையாது!"

"வயதானவர்களுக்கே அப்படித்தான்"—

இந்தப் பதிலே பரிமளா சொன்னாள்.

"என்ன என்ன" என்று கேட்டார் கிழவர் அவசரமாக!

"அந்தி வானத்து சூரியனுக்கு அல்லி மலர் மீது வெறுப்புத்தானே வரும்"—பரிமளா இதுபோலக்கூறினாள்.

"ஏன் அப்படி?" என்றார் கிழவர்.

"அந்திச் சூரியன் உலகை விட்டு விடை பெறுகிறவன். அவன் போன பிறகு, நிலவும் அல்லியும் சந்திப்பார்கள் என்பது அவனுக்குத் தெரியும் — அதனால் தான், தனக்கு கிடைக்காத அல்லி, நிலவுக்குக் கிடைக்கிறதே என்று எண்ணி, அல்லி மலரை வெறுக்கிறான் சூரியன்!"

"அது போல.....?"

"அல்லி மலர் போன்ற காதல் வாழ்வை, அந்தி வானத்து சூரியன் போன்ற கிழவர்கள் வெறுக்கிறார்கள்."

"ஆமாம்! அது உண்மை தான்" என்றான், துரை. அதற்கு விளக்கமும் கொடுத்தான்.

"வாலிபர்கள், வயோதிகப் பருவத்து நடவடிக்கைகளை வெறுக்கிறார்கள்."

கிழவருக்கு கொஞ்சம் கோபங்கூட வந்துவிட்டது.

"வயோதிகர், அனுபவித்துப் பார்த்ததை வெறுக்கிறார்கள். உங்களைப் போன்ற வாலிபர்கள், அனுபவித்திராத வயோதிகத்தையல்லவா வெறுக்கிறீர்கள்?"

உடனே பரிமளா கேட்டாள்;

"அப்படியானால், தாத்தாவுக்கு காதல் அனுபவம் உண்டு போலும்?"

"நிச்சயமாக, அந்த மோசமான அனுபவம் இல்லை."

"அப்படியானால், நீங்கள் — அனுபவித்துப் பார்க்காததை வெறுக்கலாமா?"

பரிமளாவின் இந்த திடீர்க் கேள்விக்கு, கிழவர், பதில் சொல்ல முடியாமல் திணறிவிட்டார். அங்குமிங்கும் உலவினர். பிறகு துரையிடம்,

"தம்பீ! சரியான பொருத்தம்—நல்ல திறமைசாலி! உனக்கேற்றவள்—உன்னுடைய வாழ்க்கை முழுதும் ஒரே விளையாட்டாகவும்—வேடிக்கையாகவும்—இன்பப் பொழுது போக்காகவும் அமையும். அதற்கேற்ற அரசி இவள்!"

"இன்பப் பொழுது போக்காக மட்டுமல்ல; இலட்சியக் கனவாகவும் இருக்கும்" என்று உறுதியோடு சொன்னான் துரை.

"இலட்சியமா? ஆமாம் தம்பீ—அது உனக்குக் கனவாகத்தான் போய் விடும்! உன் காதலியைப் பற்றித் தவறுகக் கூறுகிறேன் என்று கருதாதே! காதல் மாயையில் சிக்கியோர் யாரும் கடமையை நிறைவேற்றியதாக நான் படித்ததில்லை.

பரிமளாவுக்கு கோபமே வந்துவிட்டது.

"சரி பெரியவரே! காதல் மாயையில் சிக்கியோர் கடமையை நிறைவேற்றவில்லை — ஒத்துக்கொள்கிறேன் உங்களுக்காக! — ஆனல் கடமை வீரர்கள் பலர் காதல் மாயையில் சிக்கியிருக்கிறார்கள் என்பதையாவது ஏற்றுக் கொள்வீர்களா?" உடனே, துரை இடைமறித்து—

"அவ்வளவு என் பரிமளா; நாம் காதலில் சிக்கியிருக்கிறோமே தவிர, காதல் மாயையில் சிக்கவில்லையே—" என்றான். உடனே கிழவர்;

"காதலோ—மாயையோ—எப்படியோ—எதிலோ—சிக்கியிருக்கிறீர்கள் — அது வரையில் ஒத்துக்கொள்ளுங்கள்" என்றார்.

"சிக்கலில் அவிழ்க்க முடிந்த சிக்கலும் இருக்கிறதே!" —இது துரை.

"வார்த்தைக்கு வார்த்தை வளர்த்துக்கொண்டே போவானேன்—துரை! இப்போது நீங்கள் இருவரும் என்ன தீர்மானம் செய்திருக்கிறீர்கள்?" என்று பேச்சை மாற்றினர் கிழவர்.

பேச்சு சுவாரஸ்யத்தில் ஈடுபட்டிருந்த பரிமளா, கொல்லைப் பக்கமாக ஏதோ சப்தம் கேட்கவே அங்கு விளக்குடன் சென்று பார்த்தாள். இருட்டிலே ஒரு பூனை ஓடியது தான் தெரிந்தது. மறுபடியும் விளக்குடன் கிழவரும் துரையும் இருக்குமிடத்திற்கு வந்துவிட்டாள். ஆனால், கொல்லைப் புறத்திலே ஒரு மனித உருவம், மறைந்துகொண்டு நின்றதை பரிமளா கவனிக்காமலே வந்துவிட்டாள்.

அந்த உருவம், விளக்கு வெளிச்சம் தன் மீது பட்டு விடாதபடி அங்குள்ள ஒரு மரத்தோடு மரமாக ஒட்டிக் கொண்டு நின்றது. அதன் கையிலே ஒரு பளபளப்பான கத்தியுமிருந்தது. பரிமளா, வீட்டுக்குள் திரும்பியவுடன் அந்த உருவம் கொல்லைப் புறத்து வாசல் பக்கம் வந்து நின்று கொண்டது.

அந்தப் பக்கம் கவனத்தை செலுத்தாத துரையும் பரிமளாவும் கிழவரின் பேச்சிலே முழு கவனத்தை செலுத்தினர். "அடுத்த ஏற்பாடு என்ன?" என்று கேட்ட கிழவருக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் துரை நின்றான்.

"உம்—காதலிக்க மட்டும் தெரிகிறது! காப்பாற்றத் தெரியவேண்டாமா? இந்தப் பக்கத்திலே எங்கேயிருந்தாலும் உங்களைப் பிடித்துவிடுவார்கள் — நீங்கள் பேசிக் கொண்டதிலிருந்து, பரிமளாவின் அப்பன் பெரிய முரடனாகத் தெரிகிறது — அது மட்டுமல்ல; என்னைப் போல காதல் எதிரியாகவும் காணப்படுகிறான். ஆகவே, வெளி தேசங்களுக்கு ஓடி விடுங்கள். ஓடுவதுதானே காதல் புத்தகத்தின் மூன்றுவது அத்தியாயம். முதல் அத்தியாயம் கலகத்தோடு முடியும்—இரண்டாவது அத்தியாயம் எதிர்ப்பு சக்திகளின் ஆர்ப்பாட்டத்தோடு முடியும்—மூன்றுவது அத்தியாயம் ஓட்டத்தோடு ஆரம்பமாகும்.!"

"காதலைப் பற்றி ஒரு புத்தகமே எழுதுவீர்கள் போலிருக்கிறதே" என்று கேலி செய்தான் துரை.

"அது என்ன பெரிய காரியம்! உங்களோடு இருந்து தினம் தினம் 'டைரி' எழுதினால், அதுவே ஒரு காதல் புத்தகமாகிவிடுகிறது!"

பரிமளா சிரித்துவிட்டாள்—துரையும் கிழவரின் பேச்சு சாதுர்யத்தைத் தனக்குள்ளாக வியந்துகொண்டான்.

"நான் சொல்வதைதப் பேசாமல் கேளுங்கள்!—இங்கிருந்தால் உங்களுக்கு ஆபத்து! இலங்கைக்கு ஓடி விடுங்கள்" என்றார் கிழவர்.

"இலங்கைக்கா? வேண்டாம், வேண்டாம்!" என்று துரை உரக்கக் கத்திவிட்டான்.

"என்—இலங்கையிலே பிழைப்பு கிடைக்காது என்று? அல்லது அனுமதி வாங்க முடியாது என்று? கவலைப் படாதே! இருக்கவே இருக்கிறது, கள்ளத் தோணி — அங்கு சென்றால் நீங்கள் நிம்மதியாக வாழ நான் இடம் தருகிறேன்."

"போவதற்கு வழியோ — அல்லது அங்கு சென்று வாழ்வதற்கு மார்க்கமோ இல்லாமல் அல்ல, நான் இதைச் சொல்லுவது!—இலங்கையில் நான் இனி அடியெடுத்து வைக்கமாட்டேன்."

"ஏன், இலங்கையை இப்படி வெறுக்கிறாய்? அது வேற்றூர் பூமி என்று?"

"இல்லை — இல்லை! இலங்கைதான் நான் பிறந்த தரணி—"

"என்ன — இலங்கையில் பிறந்தாயா?"

பரிமளாவும் திகைத்துவிட்டாள் — துரை, பரிமளாவைப் பார்த்துக்கொண்டே,

"ஆமாம் — இலங்கையில்தான் பிறந்தேன். இந்த விஷயம், என் பரிமளாவுக்குக் கூடத் தெரியாது — என் முழுக்கதையையும் சொல்லவேண்டிய அவசியம் இதுவரை ஏற்படவேயில்லை. என் வாழ்வின் சில பகுதிகளை மட்டுமே, பரிமளா தெரிந்திருக்கமுடியும்."

"இலங்கையில் பிறந்த காரணத்தால், அங்கு மறு படியும் செல்லக்கூடாது என்பது எனக்கு விளங்கவில்லை தம்பீ!"

"என் கதை, மிக விசித்திரமானது — மிக வேதனையானது! பெரியவரே! என் வாழ்க்கை ஏட்டின் இளமைப் பகுதி—முழுவதும் கண்ணீர்! கண்ணீர்!! கண்ணீர்!!!"

"சொல்லேன் கேட்போம்—"

"சொல்லத்தான் போகிறேன்—

"காதல் தேவையற்றது—எனக்குப் பிடிப்பதில்லை—என்றெல்லாம் சொன்னீர்களே; அந்தக் காதல் மட்டும் எனக்கு கிடைத்திராவிட்டால் நான் புழுதி மண்ணைகப் போயிருப்பேன்—இந்தப் பரிமளாதான், என் சோக வாழ்

விலே, ஒரு சுந்தரத் திருப்பத்தை உண்டாக்கினுள் — ஆமாம்— அவ்வளவு வேதனை நிறைந்த வெள்ளக்காடு என் வாழ்வு! எந்த இளைஞனும் என்னைப்போல இவ்வளவு பெரிய சோகச் சுமையை தூக்கிக்கொண்டு நடந்திருக்கவே முடியாது!—"

"கதைக்கு முன்னுரையை அதிகமாக எழுதாதே!— எங்கே உன் கதையைச் சொல்லு!"

"இதோ சொல்லுகிறேன்" என்று கனைத்துக் கொண்டான். பரிமளா, அத்தானின் அழகு வழியும் முகத்தையே பார்த்தாள். கிழவரும் துரையின் கதை கேட்கத் தயாரானார். கொல்லை வாயிலில் நின்ற பயங்கர உருவமும், சுவர் பக்கம் நெருங்கி வந்து நின்று காதை உள்ளே நீட்டிக்கொண்டு கதையை எதிர் பார்த்தது.

15

துரை தன் கதையைச் சொல்ல ஆரம்பித்தான். "தோட்டத் தொழிலாளி என் அப்பா—!" என்று கதையைத் துவக்கியதுமே, மாயாண்டிக் கிழவர் குறுக்கிட்டு "அப்படியானால், இங்கிருந்து குடியேறிய தமிழர்தான் என்று சொல்லு!" எனக் கேட்டார். 'ஆமாம்', என்று தலையசைத்துக்கொண்டே, துரை தொடர்ந்தான்.

"தமிழகத்திலே பிறந்தவர்தான் என் தந்தை. தாயகத்தில் பிழைத்திட வழியில்லாத காரணத்தால் விழியிலே நீர் பெருக்கி, வெளிநாட்டுக் கரையோரங்களிலே மோதிச் சீரழியும் லட்சோபலட்சம் தமிழ்ப் பெருமக்களிலே ஒருவர்தான் அவரும்! என் தந்தையின் தந்தை—என் தாத்தா, தமிழ் நாட்டிலே பெரிய சீமானாக வாழ்ந்தவர். இப்போது அவர் வாழ்ந்த இடத்திலே புல் முளைத்துப் போய்விட்டது.

தாத்தாவின் தமிழ்நாட்டு வாழ்க்கை மிகமிக ஆடம்பர மானது. அவரது வீடு பெரிய மாளிகையாம்! இப்போது குட்டிச்சுவரைக் காணமுடியாது அங்கே—மாபெரும் கோயி லொன்று கட்டி, அதிலும் மரம் செடி முளைத்துப் போயி ருக்கிறது—ஆண்டுக்கொரு பெரும் விழா நடத்துவாராம் தாத்தா! அதிலே ஆயிரம் பிராமணர்களுக்கு சொர்ண தானம் செய்வாராம். இடையிலே மாதம் ஒருமுறை பிரா மணர்களுக்கு சமாராதனே! தானதர்மங்கள்! இப்படி, அவர் வீட்டில் விழா இல்லாத நாளே கிடையாது! வேட்டை! வேட்டை!! என் தாத்தா சேகரித்த பண மேட்டை கரைத்துக் கொண்டிருந்தனர், தானம், தருமம், பிராமண போஜனம் என்ற பெயரால்! தாத்தா, தன் மக னுக்கு—அதாவது என் அப்பாவுக்கு நடத்திய திருமணத் திற்குக்கூட பெரும் தொகை கடன் வாங்க வேண்டியிருந்த தாம்—கடன் முற்றியது, சொத்து அழிந்தது!

சொர்ணதானங்களும், அன்னதானங்களும்—இறந்த காலத்து நிகழ்ச்சிகளாக தாத்தாவின் மனக்கண் முன் தோன்றி புண்ணை அதிகப்படுத்தின. போஜனத்திற்கு வந் தோர், தானம் பெற கானம் பாடியோர் யாருமே இப்போது வரவில்லை. அற்ற குளத்தில் பறவைபோல் ஆயினர் சுற் றத்தார், சூழ்ந்திருக்கும் சொந்தக்காரர் அனைவரும்! தாத்தா, மனமுடைந்தார். வீடு, வாசல், மாடு, மனை—அனைத்துமே கடனுக்குக் காட்டப்பட்ட அடமானப் பொரு ளாக ஆகிவிட்ட பிறகு — அவையனைத்தும் கடன்காரர் களைச் சேர வேண்டிய நிலைமை ஏற்பட்ட பிறகு, இனி கௌரவத்தோடு எப்படி வீதியில் உலவ முடியும் என்ற வேதனை அவரைக் குடைய ஆரம்பித்து விட்டது! ஒரு காலத்தில் 'ஓகோ!' என்று வாழ்ந்தோம்—இன்று தெரு விலே நிற்கிறோம்—சிந்துவாரற்றுப் போய்விட்டோம்!— என்ற நிலை பிறந்து விட்ட உச்சக் கட்டத்தில் தாத்தா, தன் மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ள, அப்பாவையும்,

அம்மாவையும் தனியே விட்டுவிட்டு, தற்கொலை செய்து கொண்டார். அப்பாவும் அம்மாவும் வாலிப வயதினர். தாத்தாவின் முடிவு அவர்களைத் தத்தளிக்கச் செய்தது. அம்மாவின் குடும்பம் மிக மிக ஏழ்மைக் குடும்பம்—அதுவும் நாதியற்ற குடும்பம். தாத்தா, தன் மகனுக்கு ஒரு ஏழைப் பெண்ணையே திருமணம் செய்ய வேண்டுமென்று அந்தப் பெண்ணை திருமணம் செய்து வைத்தாராம், பல பிரமுகர்களின் எதிர்ப்புக்கிடையே! பாட்டி, அப்பா, அம்மா மூவரும் தமிழ் நாட்டில் வாழ வழியின்றித் தவித்தார்களாம்.

சீமான் வீட்டு செல்லப்பிள்ளையாக வளர்ந்த காரணத்தால், அப்பாவுக்கு எந்தத் தொழிலும் செய்ய இயலவில்லை, பழக்கமுமில்லை. விவசாயத் தொழிலில் ஈடுபடலாம் என்று முடிவு கட்டி அந்த ஊர் அய்யர் ஒருவரிடம் அப்பா சென்றாராம். அந்த அய்யர், என் தாத்தாவிடம் பல ஏக்கரா நிலங்களை புரோகிதத் தொழிலுக்காக சன்மானமாகப் பெற்றவர். அப்பா, அவரிடம் சென்று நிலத்தை சாகுபடி செய்யும் பொறுப்பை தனக்குத் தருமாறு கேட்டாராம். அய்யரோ, மறுத்து விட்டார். தாத்தா, தானமளித்த நிலம்—அதை உழுது பயிரிட்டு தானியத்தை அளக்கும் குத்தகைக்காரன் வேலையாவது கொடுங்கள் என்று கெஞ்சியிருக்கிறார் அப்பா. அந்த வஞ்சகனே, 'உழவு மாடு வாங்க உன்னிடமேது பணம்?' என்று உரத்தக் குரலில் கேட்டு விட்டு, கதவைத் தாளிட்டுக் கொண்டானாம். அப்பா, பாட்டியிடம் விஷயத்தைச் சொல்லி அழுதிருக்கிறார். பாட்டிக்கு என்ன தெரியும்; அவர்களும் புலம்பி யிருப்பார்கள்—தமிழ் நாட்டில் வாழ முடியாது என்ற முடிவு ஏற்பட்டு விட்டது! கையில் ஒடேந்தி, 'காசு தாரீர் அய்யா!' என்று வீதியிலே கிளம்புவதற்கு முன்பு ஏதாவது ஒரு வழி தேட வேண்டுமென்று யோசித்தார்கள்! 'திருப்பதி வெங்கடாஜலபதியே! வழி காட்டாயோ, இந்த திக்கற்றவருக்கு!' என்று பாட்டி

அழுதார்கள்—வழி காட்டவில்லை வெங்கடேசர்—தாத்தா செய்து போட்ட வைரமாலை தான் ஒளி காட்டியது!

'தில்லை நடராசா! தொல்லை தீராயோ!' என அழுதார்கள் பாட்டியம்மாள்! தங்க வீடு சிரித்தது! தணல் அணைக்க தயாபரர் தயவு புரியவில்லை! இந்தக் கொடுமையான நோத்திலே தான் இலங்கைத் தீவு, தன்னை வசப்படுத்திக் கொள்ள உழைப்பாளர்களைக் கூவி அழைத்தது! இலங்கையின் காடு மேடுகளை அழித்து கவினுறு சோலையாக்க, கப்பலிலே ஏறினர்கள் ஆயிரமாயிரம் தமிழர்கள். அவர்களோடு எங்கள் ஏழைக் குடும்பமும் சேர்ந்து கொண்டது! அப்பா, அம்மா, பாட்டி மூவரும் இலங்கையிலே தோட்ட வேலை பார்க்கத் தொடங்கி விட்டார்கள். 'குளிர் கொட்டும் வேளையிலே எங்கள் குடும்பம் வேலைக்குப் புறப்படும்—நானும் மனைவியுமாவது வாலிப வயதினர். என் அன்னைக்கோ கிழப்பருவம். தளர்ந்த உடல். தசையெல்லாம் நடுங்கும். நடக்க முடியாமல் நடப்பார்கள். தேஜஸ் குறையாது என் தந்தை பாதுகாத்த அந்த தேகம் தேயிலை பறித்து தேய்ந்தே விட்டது!' என்பதாக, என் அப்பா, பாட்டியைப்பற்றி தன் டைரியிலே எழுதி வைத்திருந்தார்," என்று கூறிவிட்டு துரை பெருமூச்சு விட்டான். அவன் கண்களிலே கலக்கம் படர்ந்தது—மாயாண்டிக் கிழவரும் அசைவற்ற நிலையிலே கதையை ஆவலோடு கேட்டுக்கொண்டிருந்தார். கதை கூறும் போது இயற்கையாகப் பெண்களின் முகத்தில் ஏற்படும் பிரதிபலிப்புகள் பரிமளாவின் முகத்திலும் மின்னி மின்னி மறைந்துகொண்டிருந்தன.

"டைரியிலே, அப்பா, இன்னும் ஒன்று எழுதியிருக்கிறார்—அதையும் படித்து விட்டு, என் பாட்டியின் திரு முகத்தையும் ஒருமுறை நினைத்தால், இப்போதுகூட என் இருதயம் வெடித்து விடும் போலிருக்கிறது!—பாட்டி, பழ

மாகப் போய்த்தான் செத்தார்கள்—ஆனல் அவர்கள் மண்ணேடு கலப்பதற்கு முன், உலகத்தில் சந்திக்க வேண்டிய துன்பங்கள் எல்லாவற்றையும் தொகை தொகையாகச் சேர்த்து சந்தித்து விட்டார்கள்.

'என் அருமைத் தாயார் இலங்கை வந்த பிறகுகூட சேர்ந்தாற்போல நான்கு நாட்கள் பட்டினி கிடந்தார்கள்—எனக்கு மகன் பிறந்தான்—அந்தப் பிரசவச் செலவுக்குப் பணமில்லே. அதற்காக, என் தாயார், தன் உணவுக்கு ஏற்பட்ட தானியத்தை யாருக்கும் தெரியாமல் ரகசியமாக விற்று, ஒரு நாள் இரண்டு நாள் பிரசவச் செலவை செய்திருக்கிருர்கள். எனக்கு மகன் பிறந்தான். என் தாய் பட்டினி கிடக்கிருர்கள். அய்யோ, நான் அவர்களுக்கு மகனுகப் பிறந்தேனே—பாவி!'

என்று என் தந்தை எழுதியிருக்கிருர் டைரியிலே! அதை இப்போது நினைத்தாலும் என் மனம் துடிக்கிறது—என் தந்தையின் மனம் என்ன பாடுபட்டிருக்குமோ—யாருக்குத் தெரியும்! அய்யா பெரியவரே! நீங்களும் உங்கள் நீண்டநாள் அனுபவத்தில் எத்தனையோ மனிதர்களே சந்தித்திருப்பீர்கள்—ஆனல் யாரும், என்னேப்போல, இளமையிலே இவ்வளவு வேதனைக் கணைகளுக்கு ஆளாகியிருக்கவே முடியாது—இளமையிலேயே தந்தையை இழந்தேன், தாயை இழந்தேன்—பழுத்த இலே என் பாட்டி, அவர்களது நிழலிலே வளர்ந்தேன்—நான் மட்டுமல்ல பெரியவரே! என் தங்கையும் அந்த நிழலிலே என்னேடு வளர வேண்டியவளாகி விட்டாள்!

என் பாட்டி, தன் ஆருயிர்க் கணவர் தற்கொலை செய்து கொண்ட சேதியையும் தாங்கிக் கொண்டார்கள், மகனும் மருமகளும் தன் நிழலிலே வாழ வேண்டும் என்பதற்காக! மஞ்சம், மாலிகை என்றெல்லாம் மந்தகாசமாய்

வாழ்ந்த அவர்கள்—பஞ்சம், பட்டினி பிடித்தாட்டிய நேரத்திலும் சமாளித்துக் கொண்டார்கள்; மகனும் மருமகளும் குடும்ப விளக்கை பிரகாசிக்கச் செய்ய வேண்டும் என்பதற்காக! பிறகு, மகனையும் மருமகளையும் விட்டு பரிதாபகரமாகப் பிரிந்தார்கள்—அப்போதும் சோகத்தை சுமந்து கொண்டு தள்ளாடி நடந்தார்கள்; பேரப் பிஞ்சுகளான என்னையும் என் தங்கத்தையும் குலக்கனிகளாக்க வேண்டுமென்ற ஆசையுடன்! பெருந்தகையீர்! என்னைப்போல கஷ்டப்பட்டவர்கள் யாருமிருக்க முடியாது! தந்தையின் பிரிவு எதிர்பாராத பயங்கரம்! தாயின் முடிவோ சொல்லத் தரமன்று!

சாக வேண்டிய வயது கிடையாது என் தாய்க்கு! என் பாட்டி அதைத்தான் சொல்லிச் சொல்லி அழுவார்கள்;

'அடப் பொல்லாத யமனே! என்னை விட்டு விட்டு, அவளைக் கொண்டுபோய் விட்டாயே!' என்று! அப்போது நானும் என் தங்கையும் பாட்டியைக் கட்டிக் கொண்டு அழுவோம். எனக்கு பத்து வயது இருக்கும். தங்கைக்கு ஐந்து வயது இருக்கும். அந்த வயதில் எங்களைக் கண்போலக் காத்த தாய் தந்தை இருவரையும் ஏக காலத்தில் பிரிந்து விட்டு, வாழ்வதென்றால் சாமான்யமா?

காட்டில் வாழ் குஞ்சுகள், இரை தேடி வரப்போகிறது தாய்ப் பறவை என்று சின்னஞ்சிறு அலகுகளைப் பிளந்து கொண்டு ஆகாயத்தை நோக்கி அமர்ந்திருக்கும்போது, தாய்ப் பறவையின் பிணம் அவைகளின் மீது விழுந்தால் எப்படியிருக்கும்?

அதே நிலைதான் எங்களுக்கும்! முல்லை மொட்டுக்கள் நாங்கள். செடியின் வேரிலே வெந்நீர் ஊற்றப்பட்டு விட்டது!—

நாங்கள் விளையாடித் திரிந்த திரிகோணமலையின் தெருக்கள், எங்களுக்கு பயங்கரமான குகைபோலக் காட்சி தந்தன. பள்ளிக்கூடத்திற்குப் போயிருந்தேன்—பிற்பகல் உணவுக்காகக் குதித்தோடி வந்தேன். வழக்கமாக வீட்டு வாசலில் நின்று என்னை கைதட்டி வரவேற்கும் அன்புத் தங்கையைக் காணவில்லை. அடுத்த வீட்டுக்காரர்கள் என்னை அழைத்து அணைத்துக் கொண்டார்கள். எனக்கு ஒன்றும் புரிய வில்லை. வீட்டுக்குள் நுழைய முடியாமல், அடுத்த வீட்டுக்காரர்கள் தடுப்பானேன்—அதுவும் அன்போடும், பரிவோடும் தடுப்பானேன்—அப்படித் தடுப்போரின் முகமெல்லாம் வெளுத்தும் போயிருப்பானேன்—திகைத்தேன். 'அப்பா கண்ணு! அழக்கூடாது—அம்மா செத்துப் போயிட்டுது' என்று அவர்கள் ஆறுதல் சொன்னார்கள்.

என் அம்மா செத்து விட்டார்கள்—இல்லை—இல்லை!—என் தாய் கொலை செய்யப்பட்டு விட்டார்கள்—ஆமாம்—கயிற்றுக் கட்டிலிலே ரத்த வெள்ளத்திலே என் தாய் மிதந்தார்கள்—அவர்களது விலாவிலும், முதுகிலும் கத்திக் குத்துக்கள்! தாயைக் கொலை செய்து விட்டார்கள். கொலை செய்தது யார் தெரியுமா?—பெரியவரே! பேசவே நடுங்குகிறது—நீங்களோ என் கதையை பொறுமையாகவும் நிதானமாகவும் கேட்கிறீர்கள்—என் உள்ளம் கொதிக்கும் கொப்பரையாகி யிருக்கிறது முதியவரே! என் தாயைக் குத்திக் கொலை செய்தது என் தந்தையாம்!—தாய் பிணமாகி விட்டார்கள்!—தந்தை கைதியாகி விட்டார்—காலையிலே என்னைப் பள்ளிக்கூடம் அனுப்பி வைத்ததால் நான் திரும்பி வரும்போது, 'மகனே!' என்று அழைக்காமல் மௌனமாகி விட்டார்கள். அவர்களை ஊமையாக்கியது, என் தந்தை. 'வள்ளி! வள்ளி!' என்று வாயிலே தேனூறுக அழைப்பார் அப்பா, அம்மாவை! அந்த

அப்பா, தன் ஆசைக்குரிய ஒரு ஜீவனை அரை நொடியிலே அழித்து விட்டார் என்ற கொடுமையான செய்திக்கு நான் அந்தப் பசலைப் பருவத்திலே இறையானேன்.

துடித்தேன் — துவண்டேன் — அழுதேன் — புரண்டேன் — அம்மாவின் பிணத்தையும் ஆஸ்பத்திரியில் கூறு போட்டு சோதனை செய்து, துண்டம் துண்டமாக ஒட்டித் தைத்து எங்களிடம் ஒப்புவித்தார்கள். பாட்டியின் நிலையைச் சொல்லவும் வேண்டுமோ? அவர்கள் அந்தத் தள்ளாத காலத்திலே, மருமகளின் கூறுபோட்ட பிணத்தை அள்ளிக்கொண்டு, சுடுகாட்டுக்குப் போனார்கள். மகனே சிறையிலே அடைபட்டுக் கிடக்கிறான். அம்மா, அப்பா என்று அழுதுகொண்டே துடிக்கும் நாங்கள் இருவர். பாட்டி இந்தக் காட்சிகளையெல்லாம் கண்டாள். சுருக்கம் விழுந்த அவளது கன்னங்களிலே, கண்ணீர்த் துளிகள் பெருகி, வாய்க்கால்கள் போல ஓடின.

அடப்பாவி, கொலைகாரனே அந்தக் குமாரவடிவு என்று திரிகோணமலையே திட்டித் தீர்த்தது. என் அப்பாவின் பெயர்தான் குமாரவடிவு — குமாரவடிவு வள்ளியம்மாளைக் கொன்று விட்டார்—ஆம், என் தந்தை, என் தாயைக் கொலை செய்து விட்டார்.

பத்து வயது சிறுவனையிற்றே நீ; இவ்வளவு விபரமும் அப்போது எப்படித் தெரியும் என்று எண்ணுகிறீர்களா? எனக்குப் பத்து வயதுதான் என்றாலும், அப்பா எழுதி வைத்த டைரியும், இந்தப் பயங்கர நிகழ்ச்சிக்குப் பிறகு, உயிரோடு சில வருடங்கள் இருந்த பாட்டி சொன்ன உண்மைகளும்தான் நான் சொல்லும் கதைக்கு ஆதாரங்கள்— பரிமளாவுக்கு கதையைக் கேட்கும்போதே கண்ணீர் பெருகுகிறது—கதையிலே வரும் இந்தக் குழந்தைப் பாத்திரம் எவ்வளவு குழுறியிருக்கும் என்று நீங்களே நினைத்துப் பாருங்கள்.

தாய் கொலை — தந்தை கைது — தங்கை தவிப்பு — பாட்டி ஒப்பாரி — இடையே நான், இளம் தளிராக! — எப்படி ஆரம்பமாகியிருக்கிறது பார்த்தீர்களா, என் வாழ்க்கை? இன்னும் பல வேதனைச் சுருள்கள் அடுக்கடுக்காக இருக்கின்றன — தாயை என் தந்தை கொலை செய்தார் என்பது உலகம் கூறும் செய்தி — நீதி தந்த தீர்ப்பு! ஆனால் உண்மை அதற்கு நேர்மாறானது!"

16

"பாட்டியம்மா விபரம் சொல்லும் வரையில் நானும், அம்மாவைக் கொலை செய்தது அப்பாதான் என்று எண்ணியிருந்தேன். பிறகுதான் தெரிந்தது — அம்மா கொலை செய்யப்படக் காரணமாயிருந்த சூழ்நிலைகள் எவை என்பதும், ஏன் கொலை செய்யப்பட்டார்கள் என்பதும்!

அம்மா, அப்பா, பாட்டி முதலியோர் கூலி வேலை செய்து பிழைத்த தேயிலைத் தோட்டம் ஒரு வெள்ளைக்கார முதலாளிக்குச் சொந்தமானது — அந்த முதலாளியின் பெயர் **காக்துரை** — ஆனால் அந்த வட்டாரத்துத் தொழிலாளர்கள் அவனை **டாக்துரை** என்றுதான் தங்களுக்குள் அழைத்துக் கொள்வார்கள். குணத்தைக்கொண்டு அவனுக்கு அந்தப் பெயர் அமைந்தது என்பார்கள். ஆனால் என் பாட்டி அதற்கு சொன்ன விளக்கமே வேறு! பெண் மோப்பம் பிடிப்பதிலே அவன் கைதேர்ந்தவன். மோப்பம் பிடிக்கும் அந்தப் பண்புதான் அவனுக்கு டாக்துரை என்ற பட்டத்தை வழங்க மிகப் பொருத்தமான காரணமாயிருக்கும் என்பது பாட்டியின் வாதம். அது என்னவோ — முழுக்க முழுக்க உண்மை என்பது, தேயிலைத் தோட்டத்திலே நடைபெற்ற அக்கிரமச் செயல்களைப் பாட்டி விளக்கியபோது உறுதியாகி விட்டது எனக்கு!

அதிகாலையிலே எழுந்து, குளிரால் நடுங்கியபடி, தேயிலைக் கூடைகளை முதுகிலே சுமந்து, தேயிலைக் கொழுந்து பறிக்கும் வேலையிலே ஈடுபடும் எண்ணிறந்த பெண்கள் வெள்ளை முதலாளிகளின் கண் சுழற்சியிலே யிருந்தும், அவர் தம் கட்டளையை நிறைவேற்றக் காத்து நிற்கும் கங்காணிகள் சிலரது துரோக புத்தியிலேயிருந்தும் தங்களைக் காத்துக் கொள்வது என்பது அன்றுடம் நடைபெறும் பயங்கர நிகழ்ச்சியாகவும், சமாளித்துத் தீரவேண்டிய வாழ்க்கைப் பிரச்சினையாகவும் ஆகிவிட்டது என்று பாட்டி வருத்தத்தோடு கூறுவார்கள். முதலாளிகள், மேஸ்திரிகள், கங்காணிகள் இவர்களது பசி தீர்க்கும் பொருளாக மாறி, பின்னர் தங்கள் வயிற்றுப் பசியைத் தீர்த்துக் கொள்ள வழி தேடிக்கொள்ளும் பரிதாபத்துக்குரிய பாவைக்கள் சிந்தும் ரத்தக்கண்ணீரிலே முளைக்கும் தேயிலைக் கொழுந்துகள்தான் நாம் சுவையோடு, நாக்கைத் தட்டிக் கொண்டு சூடு ஆறிவிடாமல் அருந்துகிற தேநீர் என்று எண்ணுகிறபோது, நெஞ்சு நெகிழத்தான் செய்கிறது!— இப்போதெல்லாம், தேயிலைத் தோட்டங்களிலே, மிருக வெறியின் கோரதாண்டவம் அவ்வளவாக இருக்க முடியாது!—முதலாளிகளும், மேஸ்திரி, கங்காணிகளும் மனிதத் தன்மை பெற்றவர்களாக மாறி வருகிறார்கள்—மாறித்தான் தீர வேண்டும் என்கிற அளவுக்கு தொழிலாள வர்க்கத்தின் மான உணர்ச்சிப் போராட்டம் தலைதூக்கியிருக்கிறது. ஒரு சாண் வயிறைவிட, ஒரு சாண் கயிறு மேலப்பா—இந்த எண்சாண் உடம்பை எலும்பு தெரியத் தேய்த்து உழைப்பது போதாதென்று மானத்தையும் தானம் செய்ய வேண்டுமென்று எண்ணுகிற மமதைக்கு இடங்கொடோம்—என்ற உணர்ச்சி முழக்கம், ஏழையர் முகாமிலேயிருந்து எழும்பி விட்ட காரணத்தால், எதையும் எப்போதும் செய்யலாம், ஏன் என்று கேட்க ஆளில்லை என்று இறுமாந்திருந்த இழி தகையோர் இப்போது கொஞ்சம் அடங்கித்தான் போய்

விட்டார்கள். இந்த நல்லறிவு இயல்பாகவே பெற்றவர் களும் — முதலாளிகளாக — மேஸ்திரிகளாக — கங்காணிக ளாக — ஸ்டோர்கீப்பர்களாக அப்போதும் இருந்தார்கள் — ஆனால், அவர்கள் தொகையிலே மிகமிகக் குறைவு! — புதுமைப்பித்தன் எழுதிய துன்பக்கேணி என்ற கதையை நீங்கள் படித்திருக்கிறீர்களோ இல்லையோ; பரிமளா படித் திருக்கலாம் — அந்தக் கதையிலே வரும் சோகச் சுருள்கள் உண்மையிலேயே நடைபெற்றிருக்குமா? அவ்வளவு பெரிய வேதனைக் காடாகத் தேயிலைத் தோட்டம்? என்றெல் லாம் சிந்திக்கத் தோன்றும்! வெள்ளையம்மாள் என்ற ஆதி திராவிடப் பெண், தன் கணவனை தமிழகத்து சிறையிலே அடைத்து விட்ட காரணத்தால், பிழைக்க வழியின்றி தவித்த நேரத்திலே கங்காணி ஒருவன் மூலமாக இலங்கைக்கு செல்கிறாள் — கணவன் தந்த அன்புச் சின் னம் பெண் குழந்தையாக வயிற்றிலே வளருகிறது — அந் நேரத்திலே, தேயிலை பறிக்கும் வேளையில் இலங்கை பூமி யில் "வாட்டர் பாலம்" தேயிலைத் தோட்டத்தில் நடை போட்ட அந்தப் பெண்மணி, பரங்கித் துரைமாரின் கண் களுக்கிரையாகி, கற்பை வாடகைக்கு விடும் நிலைபெறு கிறாள் — கணவனளித்த செல்வம் பிறக்கிறது — அதுவும் வளர்கிறது — அதையாவது ஒழுங்காகப் பாதுகாக்க வேண்டுமென்று உறுதி எடுத்துக்கொள்கிறாள்; ஆனால் அவளது மகளும், கற்பழிக்கப்படுகிறாள் — யாரால்? — தாயை யார் சூறையாடினரோ; அவனே மகளையும் சூறை யாடினான் — இதுதான் துன்பக்கேணியின் கதைச் சுருக் கம். இதையும் படித்துவிட்டு தேயிலைத் தோட்டத்துக் கொடுமைகளையும் அனுபவித்துப் பார்த்தால் அது — துன் பக்கேணியாக மட்டுமல்ல; துன்பக் கடலாகவே இருக் கிறது என்ற முடிவுக்கே யாரும் வருவார்கள். நான் ஏதோ சொல்ல வந்த கதையை சுருக்கமாகச் சொல்வதை விட்டு விட்டு சுற்றி வளைக்கிறேன் என்று நீங்கள் கருதுவீர்கள் —

பெரியவரே! என்னை மன்னிக்க வேண்டும் — அம்மாவின் கொலை ஒரு மர்மச் சுழல்— அதை யார் செய்தது என்று நிரூபிப்பதற்கும், என் அப்பா குற்றவாளியல்ல என்பதை நீங்கள் ஒப்புக்கொண்டேயாக வேண்டும் என்பதற்கும், நான் விளக்கும் தேயிலைத் தோட்டத்து சம்பவங்கள் துணை புரியும் என்று நம்புகிறேன். என்னுடைய இந்தக் கதையைக் கேட்கும் உங்களது முகத்திலே எந்தவிதமான பிரதிபலிப்புகளும் காணவில்லை என்பதிலிருந்தே, உங்களுக்கு இந்தக் கதை பிடிக்கவில்லை என்று நான் நிச்சயிக்க முடியாது!— கதையிலே நீங்கள் ஒன்றிப் போயிருக்கிறீர்கள் என்றே நான் முடிவு செய்கிறேன்—ஒருவேளை இந்த முடிவு தவறுக்கூட இருக்கலாம்"—என்று துரை பேச்சை நிறுத்தி சற்று தயங்கியபடி, கோரம் போர்டில் உள்ள ஒரு காயை குழியில் தள்ளும் முயற்சியில் ஈடுபட்டான்— அப்போது, மாயாண்டிக் கிழவர்—"நீ சொல்வது முற்றிலும் உண்மை— நீ சொல்லும் கதையிலே நான் மெய் மறந்துதான் போயிருக்கிறேன்—மிச்சத்தையும் சொல்லு! எனக்கு, உன் காதலியைப்போல முக நடிப்புகளைக் காட்டி, கதையை ரசிக்கத் தெரியாது என்பது உண்மைதான்! ஆனால், நீ கூறும் ஒவ்வொரு எழுத்தையும் விடாமல் மனதில் பதிய வைத்துக்கொண்டு, உன் கதையைத் தொடர்ந்து வருகிறேன் நான் — மிக சோகக் கதை! மிக மிக சோகக் கதை! சொல்லு தம்பீ சொல்லு! உன் அப்பா கொலைகாரரல்ல என்று நீ எப்படி நிரூபிக்கப் போகிறாய் என்பதை அறிய நான் அவசரப்படவில்லை. இலங்கையின் தேயிலைத் தோட்டத்துக் கொடுமைகளை, உன்னைப் போன்ற இளைஞர்கள் எந்த அளவுக்குத் தெரிந்து வைத்திருக்கிறீர்கள் என்பதை அறியவே ஆசைப்படுகிறேன் — இலங்கையிலே சென்று தமிழர்கள் சுரண்டுகிறார்கள் என எண்ணிக்கிடக்கும் பலரிலே நானும் ஒருவன்; இப்போதல்லவா தெரி

கிறது; இலங்கை இவர்களைச் சுரண்டுகிறதே தவிர, இவர்கள் இலங்கையைச் சுரண்டவில்லை என்கிற உண்மை!

அப்பனே! எனக்கு அலுப்புத்தட்டுமோ என்று நினைத்து, உன் கதையில் வரும் எந்த சம்பவத்தையும் குறைக்காதே — நான் இதை அணு அணுவாக ரசிக்கிறேன்—பரிமளாவுக்காக வேண்டுமானால், இடை இடையே சில காதல் நிகழ்ச்சிகளையும் உன் கதையிலே இணைத்துக் கொள்" என்று புன்முறுவலுடன் கூறினர்.

கிழவரின் பேச்சு துரைக்கு ஊக்கமூட்டியது. அவன் மீண்டும் தொடர்ந்தான்.

"நான் சொல்வதெல்லாம்—என் பாட்டி மூலமாகவும், தெருவிலே உள்ளோர் மூலமாகவும், அப்பா விட்டுச் சென்ற டைரியில் உள்ள குறிப்புகள் மூலமாகவும் கிடைத்த சம்பவங்கள் என்பதை நீங்கள் மறந்து விடக்கூடாது—நீங்கள் சொன்னது போலவே, பரிமளா தெரிந்துகொள்ள வேண்டிய காதல் சம்பவங்களும் சில இருக்கின்றன.

அந்தக் காதல் அத்தியாயங்கள் அனைத்தும் கரைபட்டுப்போன அத்தியாயங்களேதான்! ஒன்று அவமானக் கரை—அல்லது ரத்தக்கரை—இப்படி ஏதாவது ஒரு கரை பட்டு முடிந்து விட்ட சோக சித்திரங்கள்தான் நான் அறிந்த காதல் சம்பவங்கள்—வெள்ளை முதலாளிகளின் கொடுமையும், கங்காணிகளின் அற்பப் புத்தியும், காட்டிக் கொடுத்து காசு பறிக்கும் வெறிச் செயலும் எந்த அளவுக்கு ஓங்கியிருந்தது என்பதற்கு ஒரு உதாரணம் கூறுகிறேன்—காதல் சம்பவம் தான்!—இந்த சம்பவத்திற்கு அப்பா, அவரது டைரியிலே எழுதியிருக்கிற குறிப்பும், அவரது சொந்தக் கருத்தும், மிக நீளமானவை. அதை சுருக்கமாகவே கூறுகிறேன்" என்று துரை சொன்னதும் "கேள் பரிமளா நன்றாக! இந்தக் கதை உனக்காகத்

தான்!" என்று மாயாண்டிக் கிழவர் பரிமளாவைப் பார்த்தார்—பரிமளா புன்னகை புரிந்துவிட்டு, "நீங்கள் வேண்டுமானால் காதை அடைத்துக் கொள்ளுங்களேன்; காதல் கதையென்றால் கசப்பாக இருக்கும்" — என்று கேலி பேசினாள்.

"பரிமளா! இப்படி, இடையிலே குறுக்கிடக்கூடாது—டென்ட் சினிமாக்களில் ஏழெட்டு 'இன்டர்வெல்' வருகிறமாதிரியல்லவா நீங்களும் என் கதைக்கு இன்டர்வெல் போடுகிறீர்கள்" என்றான் சிரித்துக்கொண்டே துரை!

"சரி! சோடா கலர் பீடா!—ம்! படக் காட்சி ஆரம்பமாகட்டும்!" என்றாள் பரிமளா!

துரை துவங்கினான். "குப்பன்—சீதா இருவரும் எங்கள் தெருவிலே பிரசித்திபெற்ற காதல் ஜோடி—ஒருயிரும் ஈருடலும் என்றே வாழ்ந்தார்கள்—தெருவாரின் எதிர்ப்பு, சொந்தக்காரர்களின் கண்டனம், பெற்றோர்களின் எரிச்சல், அடக்குமுறை — எதையுமே லட்சியம் செய்யாமல் அவர்களது காதல் வளர்ந்தது—குப்பனைத் தவிர வேறு யாரையும் மணம் புரிந்துகொள்ள மாட்டேன் என்று சீதை கண்டிப்பாகக் கூறிவிட்டாள். குப்பனும் அதைத்தான் கொஞ்சம் உரத்த குரலிலே கூறினான்—அதனல் அவர்கள் இருவரின் திருமணம் தடைபட்டுக் கிடந்தது—குப்பனை எப்படியாவது கொன்று தொலைத்துவிட வேண்டும் என்று சீதையின் குடும்பத்தார்கள் முடிவு செய்தார்கள்—அந்த ஆவேசம் தணியும் வரையில் வெளியூரில் போய் வாழலாமென்று குப்பன் தீர்மானித்து அதன்படியே வேற்றூர் சென்று சில நாட்கள் வாழ்ந்தான். குப்பன், சீதா—காதல் காவியம், தெருவிலே பரவி, தேயிலைத் தோட்டத்திலே பரவி, முதலாளிகள் வீடு வரையிலே பரவிற்று!—டாக் துரை அந்த சிட்டைப் பிடிக்கத் திட்டம் வகுத்தார்—கங்காணி காளிமுத்து என்ற வலையை உபயோகித்தார். அந்

தத் துரோகி காளிமுத்து சீதையை எப்படியோ ஏமாற்றி டாக்துரையின் பசியைத் தணித்து விட்டான். சீதையின் கற்பு தூளாக்கப்பட்ட சேதி, அவளது பெற்ரோருக்குத் தெரிந்தது — துடித்தனர் — விஷயத்தை வெளியிலே சொல்ல அஞ்சினர்—மகளின் எதிர்காலம் இருளாகிவிடுமே எனக் கலங்கினர். செய்தி, காட்டுத் தீயாக மாறுவதற்குள் சீதா கல்யாணத்தை நடத்திவிட வேண்டுமென்று அவசரப்பட்டனர்.

வெளியூர் சென்றிருந்த குப்பனும் வந்து சேர்ந்தான்—சீதாவின் தாய் தந்தையர் கண்ணில் பட்டுவிடாமல் பதுங்கிப் பதுங்கி நடந்தான். ஒரு நாள், சீதையின் தகப்பனர், தெருவிலே சென்ற குப்பனை கூப்பிட்டார்—குரல் கேட்ட குப்பன் திடுக்கிட்டான்—திகைத்தான்—ஓட வழியில்லை—'உயிர் போயிற்று' என எண்ணியவாறு நின்றான்—'சீதை உனக்குத்தான்!" என்ற வார்த்தைகள் அவனது காதுகளில் விழுந்தன. அவனையே அவனால் நம்ப முடியவில்லை. அடிபட்டு சாகத்தான் போகிறோம் என்று அஞ்சி நடுங்கிய அவனுக்கு இந்த இன்பச்சேதி எப்படி யிருந்திருக்கும் என்பதை, காதலால் தவித்திடும் மாந்தரே அறிய முடியும்"—என்று கூறியபடி துரை, பரிமளாவை கடைக்கண்ணால் பார்த்தான். அவள் இவனைப் பார்த்தாள். இருவரையும் கிழவர் பார்த்தார் — சிரித்தார் — தனக்குள்ளாகவே "உம் இடைவேளை தேவையில்லை"—இது கிழவர் கிண்டல்!—துரையின் கதை எழுந்தது—

"குப்பனுக்கும் சீதைக்கும் திருமணம்—நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன — மணமகள் மேடைக்கு வந்துவிட்டாள் — அவள் உள்ளமெல்லாம் எப்படி யிருந்திருக்குமோ—ஆனால் முகம் மட்டும் வெளிறிப்போயிருந்தது. இது என் அப்பாவின் டைரிக் குறிப்பிலே உள்ள வாசகம்! தான் காதலனிடம் சொல்லாமலே தப்பித்துக் கொண்

டோம் என்கிற முடிவான துணிச்சல் அவளுக்கு ஏற்பட வில்லை—தாலி கட்டப்போகும் நேரம் — மாப்பிள்ளையைக் கூப்பிட்டார்கள். குப்பனே, எனக்கு இந்தத் திருமணம் வேண்டாம் என்று கூறிவிட்டு, மணப்பந்தலி விட்டு வெளி யேற ஆரம்பித்தான்.

'கற்பிழந்தவளை என் தலையி லே கட்டும் நாடகம் இது!' என்று கத்தினன் — காட்டுமிராண்டி போலக் கூத்தாடினன் — எல்லோரும் ஓடிப்போய் அவனை சமா தானம் செய்து பார்த்தார்கள். அவனை நெருப்பில் கால் வைத்தவனைப் போல ஆடினன்—யாரோ, குடும்பங் கலைக் கும் கோணங்கிகள் சிதையின் சேதியை அவனிடம் கூறி விட்டார்கள் போலும்! அதனலேயே அந்த திடீர் மாறு தல் விளைந்தது. வெளியேறும் குப்பனது கால்களைப் பிடித்துக்கொண்டு, சிதை அலறினள்! — 'அத்தான்! அத்தான் — என்னை மன்னித்து விடுங்கள்! எதிர்பாரா மல்—என் இஷ்டத்துக்கு விரோதமாக நடைபெற்றுவிட்ட காரியம்! உங்களைத் தவிர வேறு யாரையத்தான் என் மனம் நாடும்? என்னைக் கைவிடாதீர்கள்' என்று சிதை அழுதாள். புதுமணம் பெறலாம்—புது வாழ்வு துவங்க லாம்—என்ற பூரிப்புடன், பூமாலை தாங்கும் மார்பினளாய் காட்சி தந்த அந்த பரிதாபத்திற்குரிய சிறுமி, பதறி அழுதாள்!

'பாதகிதான் நான்—பாவ காரியத்திற்கு இந்த மேனி யைத் தந்தவள்தான்—பசிகார மிருகமொன்றுக்கு இரை யானவள் தான்—இருந்தாலும் என்னை நீங்கள் மன்னிக்க வேண்டும் அத்தான்! எச்சிற்பண்டம் குப்பையிலே என் பீர்கள். ஆனல், பண்டத்திற்கும் இந்தப் பாவைக்கும் அதிக வித்தியாசமிருக்கிறது அத்தான் — திருடப்பட்ட தங்கமாலையை மீண்டும் பெற்றல், கழுத்திலே அணிவது கிடையாதா அதன் சொந்தக்காரர்? அதுபோல நான் திரு

டப்பட்ட தங்கமாலை!' என்று கதறினாள். அவன் காலை விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டாள்—என் அப்பா—குமாரவடிவுதான் அங்கே சமாதானத் தூதர்—அவரும் எவ்வளவோ காரணங்களை எடுத்துச்சொல்லி சிதாவுக்காக வாதாடியிருக்கிறார்—அந்தக் காரணங்கள் எல்லாம் அவரது டைரியிலே அழகாகவும்—கட்டுரைகள் போலவும் குறிக்கப்பட்டிருக்கின்றன. அப்பாவின் பேச்சையும் குப்பன் மறந்து விட்டான்.

'குப்பா! உன் மீதுள்ள ஆசையில் உன்னையே அடைய வேண்டுமென்ற ஒரே நோக்கத்தில்தான்—சிதை, தனக்கேற்பட்ட இழிவை உன்னிடம் கூறுது மறைத்திருக்கிறாள்—வேண்டுமென்று அவள் விரும்பிச் செய்த காரியமல்ல இது! அவள், திருடப்பட்ட தங்கமாலைதான்—அணிந்துகொள் அவளை!' என்று ஆயிரமாயிரம் ஆதாரங்கள் காட்டி சமாதான முயற்சியில் ஈடுபட்டார்—அப்பாவின் பேச்சு குப்பன் காதில் ஏறவில்லை—சிதையின் ஒப்பாரியும் அவன் கருத்தை மாற்றவில்லை! திருமணம் நடைபெறவில்லை—குப்பன் வேறு பெண்ணை மணந்து கொண்டான்—சிதையும், குப்பனுக்குப் போட்டியாக—கங்காணி காளிமுத்துவுக்கு வைப்பாட்டியாகப் போய்ச் சேர்ந்தாள்—வெள்ளை முதலாளி விரும்புகிற நேரத்தில் அவரது அந்தப்புரத்தையும் அலங்கரித்தாள்.

அப்பா, தனது டைரியில்—இந்த இருகாதலைப் பற்றியும் முடிவுரை எழுதியிருக்கிறார்—இருவருமே இருதயம் இல்லாதவர்கள் என்பது அப்பாவின் அழிக்க முடியாத அபிப்பிராயமாக அந்தக் குறிப்பில் ஏறியிருக்கிறது—இந்தக் கதைக்கும், அம்மாவின் கொலைக்கும் என்ன சம்பந்தமென்கிறீர்களா? நிறைய சம்பந்தமிருக்கிறது—அம்மாவின் கொலை—அப்பாவின் மனமாற்றங்கள்—எல்லாமே—இது போன்ற சில சம்பவங்களினால்தான் பின்னிக் கிடக்கின்றன."

17

"டாக்துரை, கூலிக்காரப் பெண்களைத் தன் வெறி தீர்க்கும் கருவிகளாகவே கருதி வந்தான். முதலாளியின் தயவு கிடைத்தால் வாழ்க்கையில் முன்னேறலாம் என்ற தப்புக் கணக்குப் போட்டுக்கொண்ட ஒரு சில அப்பாவிப் பெண்களும் அவனது ஆட்டத்திற்கு அடிபணிந்தார்கள். பாட்டிக்கு உள்ளூர பயம் பிடித்துக் கொண்டது. அந்தப் படுபாவி முதலாளியின் பார்வை அடிக்கடி என் அம்மாவின் மீதும் விழ ஆரம்பித்ததாம். பாட்டி, அம்மாவிடம் 'வள்ளீ! எச்சரிக்கையாயிருக்க வேண்டுமடி! டாக்துரையின் நடவடிக்கை எனக்கு அச்சத்தை உண்டாக்குகிறது—ஜாக்ரதை' என்று சொல்லிக் கொண்டிருப்பார்களாம். அம்மா—துணிவு மிக்கவர்கள். நியாயத்திற்கு புறம்பாக யார் எதைச் செய்தாலும் அதை தீவிரமாகக் கண்டிக்கக் கூடிய சுபாவம் உள்ளவர்கள். டாக்துரை, அம்மாவின் பக்கம் வந்து, 'வாட்—வல்லீ' என்று இளிக்கும்போதெல்லாம், அம்மா, சடக்கென்று 'வாட்டாவது பூட்டாவது—போய்யா' என்று முகத்தைத் திருப்பிக்கொண்டு ஆத்திரத்தோடு பேசுவார்களாம். டாக்துரை, பாச்சா பலிக்காது என்று தெரிந்து கொண்டு, திரும்புவானும். ஆனலும் அவன் ஒரு அரிய சந்தர்ப்பத்தை எதிர்பார்த்தே யிருந்தான் என்பது அவனது நடவடிக்கைகளால் நன்கு புலனாகி விட்டது, அம்மாவுக்கும் பாட்டிக்கும்.

தேயிலைத் தோட்டத்து வேலைகள் முடிந்து, துரையின் வீட்டு வேலைகளையும் கவனித்தால் அதிகமாக சம்பளம் கிடைக்கும் என்ற எண்ணத்தின்மீது, மாலை நேரங்களில் அப்பாவும் அம்மாவும் டாக்துரை வீட்டில் சில மணி நேரங்கள் பணி புரிவதுண்டு. அப்பா கூடத்தானே யிருக்கிறார் என்ற தைரியத்தில் அம்மாவும் அந்த வேலையை ஒப்புக்கொண்டார்கள். இல்லாவிட்டால்,

மூன்று நான்கு உறுப்பினர்கள் உள்ள எங்கள் குடும்பம் கஷ்டமில்லாமல் வாழ முடியாதே—நான் சிறுவன்—பள்ளிக்கூடம் போக வேண்டும்—இரண்டொரு மாதங்களில் எனக்கு ஒரு தம்பியோ தங்கையோ பிறக்கப் போகிறது என்று பாட்டி சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்—அதுவும் பிறந்து விட்டால், வீட்டிலே ஐந்து உறுப்பினர்களாகி விடுவோம். அதையெல்லாம் சமாளிக்க, எப்படியோ கஷ்டப்பட்டு சம்பாதித்தால் தானே முடியும் — பெருவாழ்வு வாழ்ந்தோமே என்று பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தால் போதுமா? இறந்த காலத்தை எண்ணி, நிகழ் காலத்தை கண்ணீர் வடிக்கவே உபயோகித்துக் கொண்டால் எதிர்காலமும் இருட்டாகத்தானே போய்விடும்.

ஆகையால், நடந்தவைகளை மறந்து—தோட்டக் கூலியாக மட்டுமின்றி, டாக்துரை வீட்டு வேலைக்காரர்களாகவும் என் பெற்றோர்கள் வியர்வை வடித்தார்கள். எட்டு மாதக்கர்ப்பவதி என் அம்மா—அப்போது தான் அந்த வேலையை அம்மா அங்கு ஒப்புக்கொண்டது—என் ஆருயிர்த் தங்கை தங்கம் அம்மாவின் வயிற்றிலே வளர்ந்து கொண்டிருந்த நேரம். அம்மா, ஓடியாடி உழைத்து சம்பாதிக்கிறார்கள்—அம்மாவின் சிரமத்தைப் பார்த்து, பாட்டி சொல்லுவார்களாம் 'அடி வள்ளீ! கர்ப்பவதிகள் நிறைய வேலைகள் செய்தால்தான் சுகப் பிரசவம் ஆகும்' என்று!

இதே பாட்டி, ஏழையாகப் போன பிறகு இப்படிச் சொன்னார்கள் — பணக்காரப் பாட்டியாகவே இருந்திருந்தால், 'வள்ளீ உடம்பு கெட்டு விடும். ஓய்வு எடுத்துக் கொள்—கர்ப்பவதி கஷ்டப்படக்கூடாது!' என்றும் கூறியிருப்பார்கள்.

எப்படியோ, அம்மா—அளவுக்கு மீறி சிரமங்களை ஏற்று குடும்பத்தைக் கவனித்தார்கள். குழந்தைகளாவது சந்தோஷமாயிருக்கட்டுமே என்று அம்மா அடிக்கடி

சொல்லிக்கொண்டே கண்ணீர் சிந்துவார்களாம்—அப்ப டிப்பட்ட அருமை அம்மாவைத்தான் நான் சிறுவயதி லேயே இழந்தேன்—ரத்த வெள்ளத்திலே — என்னைப் பெற்ற தாய் மிதந்து கிடந்த கோரக் காட்சியை இந்தக் கண்ணாலே கண்டேன்—அய்யோ, அவ்வளவு தொல்லை களையும் தாங்கிக்கொண்டு உழைத்த அந்த உத்தமியின் எண்ணமாவது ஈடேறிற்று என்றால் அதுவும் இல்லை. குழந்தைகளாவது நன்றாயிருக்கட்டும் என்று உழைத்தார் கள். அதையும் பார்க்காமலே அவர்கள் போய்விட் டார்கள்.

டாக்டரையின் பங்களாவிலே வேலை பார்த்துவிட்டு அப்பாவும் அம்மாவும் வீட்டுக்கு வரும் வரையில் நான் வீட்டு வாசலிலேயே நின்று கொண்டிருப்பேன். அம்மா என்னைத் தூக்கி முத்தமிடுவாள். அப்பா, என் கன்னத் தைக் கிள்ளிக் கொஞ்சுவார். அந்தக் குழந்தைப் பருவத்து நிகழ்ச்சி யெல்லாம் இப்போதுகூட எனக்குக் கனவுபோல் இருக்கிறது.

'அம்மா!—பாப்பா எப்போ பிறக்கும்?' என்று நான் மழலைத் தமிழிலே கேட்பேனாம்—பாட்டி, என்னை வாரி அணைத்துக்கொண்டு பரிகாசம் செய்வார்களாம். இதை யெல்லாம் பாட்டி என்னிடம் அழுதுகொண்டே சொல்லி யிருக்கிறார்கள். இப்படி சுமுகமான சூழ்நிலையிலே யிருந்த ஒரு குடும்பத்திலே கொலை நிகழுமளவுக்கு ஏற்பட்ட குழப் பந்தான் என்ன என்று கேட்கத்தான் தோன்றும். குழப் பம் அப்படியொன்றும் முக்கியமானதல்ல. ஆனால் அந்தக் குழப்பம் கொலைக்குக் காரணமா என்றால் அதுவுமில்லை. கொலைக்கு, அந்தக் குழப்பம் முழுவதுமே காரணமில்லையே தவிர கொலைக்கான சூழ்நிலைகளை உண்டுபண்ணித் தருவ

தற்கு அந்தக் குழப்பம் ஒரு வகையில் காரணமாகத்தானிருந்திருக்கிறது. 'என்ன உளருகிறாய்?' என்று கேட்பது போலிருக்கிறதே; பெரியவரே உங்கள் பார்வை!

குழப்பத்தைப்பற்றி விளக்குவதால் ஏற்படுகிற குழப்பம் இது! அவ்வளவுதான்! அம்மாவுக்கும் அப்பாவுக்கும் தகராறுகள் ஏற்பட்டு, அது முற்றிப்போய் ஒருவரோடு ஒருவர், பேசாமலேயே சில வருடங்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதெல்லாம் உண்மை. என் தங்கை பிறந்த பிறகு. இருவரும் இரு துருவங்களாகி விட்டனர். கணவன், மனைவி என்பது, கடமையளவுக்குப் போய்விட்டதே தவிர, பாசம், நேசம் எல்லாம் பாழாகி விட்டது. என் தந்தை ஒரு தத்துவஞானி போல, வாழ்வு—சாவு—காதல்—இவைகளைப்பற்றி யெல்லாம் பேச ஆரம்பித்து விட்டார். துறவிகளுக்கு உலகத்தைப்பற்றி எழும் வெறுப்பைப்போல, என் தந்தைக்கும் வெறுப்பு எழுந்து விட்டது. இந்த வெறுப்பு ஏன் எழுந்தது? அப்பா சந்தித்த பல சம்பவங்கள் தான் இத்தகைய வெறுப்புக்குக் காரணம் என்பதை அவர் எழுதியுள்ள டைரிக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. குப்பன், சீதா—காதல் குழப்பம் அப்பாவின் உள்ளத்திலும் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது! — காதலுக்கு, ஒரு ஆண்மகன் தரும் முக்கியத்துவம் எவ்வளவு மட்டமானது என்பதை குப்பனுடைய போக்கிலிருந்து அவர் கணக்குப் போட்டு விட்டார்—அதுபோலவே காதலுக்கு பெண்கள் தரும் மதிப்பு எத்தகையது என்பதற்கு மற்றொரு உண்மைச் சம்பவத்தை அவர் தனது டைரியில் விபரமாக எழுதியிருக்கிறார். இந்த சம்பவந்தான், அப்பா அம்மா தகராறுக்கு மூலகாரணம். டைரியில் அவர் எழுதியுள்ள சுவையான பகுதிகளையும் சம்பவத்தையும் சுருக்கி நினைவு இருக்கும் வரையில் கூற விரும்புகிறேன். டாக்

துரைக்கு ஒரு மகள் உண்டு— அவளுடைய பெயர் மேரி. அவள் இலங்கையிலே பிறந்து வளர்ந்தவள். ஆங்கிலமும், கூடியவரை சிங்களமும், தமிழும் பேசக்கூடிய திறமை வாய்ந்தவள். வெள்ளைக்கார வீட்டுப்பெண் என்றால், நவநாகரீகத்துக்குக் கேட்க வேண்டுமா? அதிலும் மேரி புதிய நாகரீகங்களைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று ஆசைப்படுகிற ஒரு யுவதி. ஏற்கனவே உடுத்தியிருக்கிற அரை ஆடைகளையும் கால் ஆடைகளாகக் குறைத்து அணிந்து கொள்வது பற்றி பெரிய பெரிய ஆராய்ச்சிகள் நடத்துவாள். நாகரீகத்தின் தீவிரமான வேகம், நிதானமின்றி அலைமோதுகிற காரணத்தால், ஆடையின்றி வாழ்ந்த காட்டுமிராண்டி காலத்துக்கு மக்களை இழுத்துப் போகிறது என்பதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாக, அந்தப் பகுதியிலே மேரி விளங்கினாள். அவளுக்கு ஜோசப் என்ற ஒரு காதலன் உண்டு. உறவினன் கூட! அவனும் அவளும் நடுவீதியிலே கைகோர்த்துக் கொண்டு ஆடுகிற ஆட்டங்களும், கேளிக்கை விநோதங்களும் — பார்ப்பதற்கு ஆபாசமாயிருக்கும். அத்தகைய காதலின் உச்சக் கட்டத்திலே அவர்கள் அலைந்து கொண்டிருந்தார்கள். விரைவிலே அவர்களுக்குத் திருமணம் செய்யப் போவதாகவும் டாக்துரை சொல்லிக் கொண்டிருந்தார். திடீரென்று அந்த ஜோசப்புக்கு சென்னையிலே வேலை கிடைத்து விட்டது. சென்னையிலே உள்ள அவனது பெற்றோர்கள், 'நல்ல வேலை இது! நழுவ விடக்கூடாது! உடனே வா!' என்று அவசரக் கடிதம் போட்டுவிட்டார்கள். ஜோசப் தன் காதலி மேரியிடம் பிரியா விடை பெற்றுக்கொண்டு, விரைவில் திரும்பி வந்து விவாகத்தை முடித்துக் கொள்கிறேன் என்று கூறிவிட்டு, சென்னை போய்ச் சேர்ந்தான். ஜோசப் சென்னைக்குச் செல்லும் அந்த சமயத்தில் எல்லாம் என் பெற்றோர்கள் டாக்துரையின் வீட்டில்தான் வேலை செய்து கொண்டிருந்திருக்கிறார்கள். அம்மா, கர்ப்பவதியாக

கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள் என்றேனே; அது அப்போதுதான்! காதலன் சென்னைக்குச் சென்றுவிட்ட நாலைந்து நாளைக்கெல்லாம், எங்கள் குடும்பத்திலே புயல் வீசச் செய்த சம்பவத்திற்கு, மேரி கதாநாயகியாளுள்.

மேரி, தன்னையே உயிராகப் பாவிக்கிறாள் என்று எண்ணிப் பெருமூச்சு விட்டுக்கொண்டு, சென்னையிலே இருக்கிறான் ஜோசப்.

ஆனால், இவளோ — இங்கு தன் தகப்பனைப்போல காம வேட்டைக்கு கணை தொடுக்கப் புறப்பட்டு விட்டாள். அப்பாவைப் போலவே பெண்ணும் என்ற பெயரை எடுக்க வேண்டுமென்பதிலே அவளுக்கு அவ்வளவு ஆசை! அவள் ஆசையின் விளைவு, எங்கள் குடும்பத்திலே எத்துணை கொந்தளிப்பை உண்டுபண்ணி விடும் என்பதை கண்டாளா?—ஒரு நாள் மாலை தேயிலைத் தோட்டத்து வேலை முடிந்து, பாட்டி வீட்டுக்கு வந்து விட்டார்கள் என்னைப் பராமரிக்க; அப்பாவும், அம்மாவும் துரையின் வீட்டு வேலைகளைக் கவனிக்கச் சென்றிருக்கிறார்கள். அப்பா, நந்தவனத்திலேயுள்ள மலர் செடிகளை சீர்படுத்திக் கொண்டிருந்திருக்கிறார். அம்மா பாத்திரங்களைத் துலக்கிக் கொண்டிருந்திருக்கிறார்கள். அப்போது மேரி, என் தந்தையின் பக்கம் வந்திருக்கிறாள். அப்பா, 'என்னம்மா செளக்யமா?' என்று வழக்கம்போல் கேட்டிருக்கிறார். உளறிக் குளறித் தமிழைப் பேசும் அவளும் 'செளக்கந்தான்' என்று கூறிவிட்டு 'குமாரவடிவு—என் பெட்ரூமிலேயிருக்கிற லைட்டை ஏற்றிக்குடு!—எனக்கு லைட்டை ஏற்றத் தெரியிலே' என்று கூப்பிட்டிருக்கிறாள். அப்பாவும் சாதாரணமாக நினைத்து, அவளது படுக்கையறைக்குப் போய் அங்குள்ள விளக்கை எடுத்து ஏற்ற முயற்சி செய்திருக்கிறார். திடீரென்று மேரி, அந்த அறையின் திரைச் சீலையை இழுத்து விட்டு, அப்பாவிடம் நெருங்கியிருக்

கிறுள். அப்பாவுக்கு ஒன்றும் புரியவில்லை. 'என்னம்மா—' என்று கேட்டபடி அசைவற்று நின்று விட்டார் அவர்.

'ஒண்ணுமில்லே—ஒன்மேல எனக்கு ரொம்ப லவ்வு!—'

'என்னது — லவ்வா?'

'ஆமா — லவ்வுன்னு தெரியாது — காதல் — காதல்' என்று அவள் விளக்கமும் கொடுத்து நின்றுள்.

'காதலா? அட கர்மமே—என் மீதா—நான் பிள்ளை குட்டிக்காரன் அம்மா!'

'பிள்ளையிருந்தா என்னே—உனக்கு நாப்பது வயிசு இருக்கும் — இருந்தாலும் 'யங்'காத்தானே இருக்கே—எனக்கு ரொம்ப லவ்வு உன்மேல!'

'அடடா—வேலைக்காரன் கிட்டே.....'

'அது எனக்கு ஒரு டேஸ்ட்!'

'டேஸ்டாவது — மண்ணாங்கட்டியாவது — அம்மா — மேரியம்மா — சொல்வதைத் கேளுங்க — உங்க காதலன் ஜோசப்புக்கு துரோகம் பண்ணதிங்க—அது பாவம்!'

'துரோகமா—ஜோசப் மேலயும் எனக்கு லவ்தான்—உன் மேலயும் எனக்கு லவ்தான்! ஒரு நாளைக்கி, ஹோட்டல் சாப்பாடு சாப்பிட்டா, வீட்டு சாப்பாட்டுக்கு துரோகமா? வீட்டு சாப்பாடு இல்லேன்னு, ஹோட்டல் சாப்பாடு சாப்பிடக்கூடாதா? வாட் ஈஸ் திஸ்! நான்சன்ஸ்!'

இந்த உரையாடல்களை அப்பா, தன் டைரியிலே அப்படியே எழுதியிருக்கிறார்—பொழுது போகாத நேரங்களில் நான் இந்தக் கட்டத்தைப் படித்துப் படித்து மனப்பாடமே செய்து விட்டேன்—பிறகு கதையைக் கேளுங்கள்.

அப்பா, மேரிக்கு எவ்வளவோ புத்திமதிகளை எடுத்துச் சொல்லியும் அவள் கேட்பதாயில்லை. அவளது காமப் பசியின் முன்னே கற்பைப்பற்றிய உபதேசங்கள் எம் மாத்திரம்?

'அம்மா மேரி! சொல்வதைக்கேள்—காதல் என்பது ஒரு ஜீவனுள்ள எழுத்துக் கோர்வை. அதை இப்படிப் புழுதியில் எறியாதே! உங்கள் ஆங்கிலத்து நூல்களிலே அரும்பெரும் காதல் இலக்கியங்கள் உண்டாம்—ரோமியோ ஜூலியட் என்ற காதல் மகா காவியத்தை கேள்விப்பட்டிருக்கிறேன்—அப்படி நடந்திருக்குமா ஒரு கதை என்று சந்தேகமும் பட்டிருக்கிறேன். அவ்வளவு புனிதமான கதை நிகழ்ந்திருக்க முடியாதுஎன்பதற்கு, நீ ஒரு எடுத்துக் காட்டாய் இருக்கிறாய்!' என்று மேரியிடம் சொன்னேன். அதற்கு மேரி, 'அப்படியா—ரோமியோ ஜூலியட் கதை தெரியுமா? தெரிந்தும் என்னை ஏமாத்துறியே — எங்கே ஒரு முத்தம் கொடு!—கமான்! மை டியர்! ரோமியோ ஜூலியட் எல்லாம் நடக்க முடியாத ஸ்டோரிகள்! கிளியோ பாட்ரா கேள்விப்பட்டியா நீ? சீசர், ஆண்டனி என்ற இரண்டு லவ்வர்கள் அவளுக்கு!—அவளைப் போலத்தான் எனக்கும்! ஜோசப்—சீசர்! நீ ஆண்டனி!' என்று புலம்பினாள் அந்த வெள்ளைப் பெண்.

இவள் கிளியோபாட்ராவையும் மிஞ்சக்கூடிய பாஞ்சாலியாக இருப்பாள் போலிருக்கிறதே என்று அஞ்சியவாறு, அந்த அறையை விட்டு வெளியே நகர ஆரம்பித்தேன்.

'ஊஹூம்—போகாதே மேன்! போறை, எங்க பாதரிடம் சொல்லி, நீ என்னை லவ் பண்ணினதா சொல்லி, வேலைக்கு சீட்டு கிழிச்சுடுவேன்!' என்று கோபித்தாள் அவள்.

நான் மீண்டும் புத்தி சொல்ல அவளைப் பார்த்தேன்—அவள் அதற்கு வாய்ப்பு தராமலே என் மீது தாவிப் பாய்ந்து என்னைக் கட்டிக்கொண்டாள். அவளிடமிருந்து என்னால் விடுபடவே முடியவில்லை. வெறிநாய் போல என் கன்னத்தைப் புண்ணாக்கி விட்டாள்—ஓங்கி அடித்து அவளைத் தரையிலே தள்ளிவிடத் தீர்மானித்து அதற்காக

முயன்றேன் — ஆனால் அந்த சமயத்திலேதான் என் மனைவி வள்ளியம்மாள் அறைக்குள்ளே நுழைந்தாள்— இல்லை—என் வாழ்விலே புயல் நுழைந்தாள்.'

இது போலத்தான் அப்பா, அந்த சம்பவத்தை வர்ணித்திருக்கிறார். அம்மா, உள்ளே வந்ததும் — மேரி, அப்பாவை விட்டு விட்டு வெளியே ஓடிவிட்டாள். அப்பா, அம்மாவைப் பார்த்து 'வள்ளீ!' என்று அழைப்பதற்குள், அம்மா கோபத்தோடு—'போதும் — நம் உறவு இன்றோடு முடிந்தது!' என்று சொல்லிக்கொண்டே அதை விட்டு வெளியேறி விட்டார்கள்.

இந்த சம்பவமும் அம்மாவின் கொலைக்கான சூழ்நிலைகளுக்கு ஒரு அடிப்படையாக அமைந்தது.

அப்பா கொலைகாரர் அல்ல என்று நிரூபிக்க எங்கெங்கோ சுற்றி வளைக்கிறேயே; சுருக்கமாகச் சொல்லி விடேன் என்று கேட்கிறீர்களா?—அல்லது தொடர்கதை எழுதும் ஆசிரியர்களைப்போல, சம்பவங்களை முக்கிய இடத்தில் நிறுத்தி ஆவலைக் கிளப்புகிறேனே; என்று கிண்டல் செய்கிறீர்களா?—பெரியவரே! அப்படியெல்லாம் தவறுக நினைக்காதீர்கள்.

என் கதையையும்—என் குடும்பக் கதையையும் விளக்கமாகச் சொன்னால்தான் என்னைப்பற்றி நீங்கள் கொண்டிருக்கிற அலட்சியம் நீங்கும் — என் மீது அனுதாபம் பிறக்கும் தங்களுக்கு! அதனால் பொறுமையோடு என் கதையை நீங்கள் கேட்டுத்தான் தீர வேண்டும்."

18

"மேரியின் அடாத செயலைப் புரிந்து கொள்ளாத அம்மா, என் தந்தை மீது தவறான எண்ணங்கொண்டு விட்டார்கள். தன் கணவர் தனக்கு சகிக்க வொண்ணாத

கொடுமை புரிந்துவிட்டதாகவே கருதினர்கள். அன்பு மழை பொழிந்து அல்லும் பகலும் காப்பாற்றிய தாம்பத்ய உறவுக்கே மீளாப் பழி தேடிக் கொடுத்து விட்டார் தன் துணைவர் என்று மனம் வெதும்பினர்கள். அவர் உள்ளத் தைதக் கொள்ளைகொண்டாள் அந்த வெள்ளைக்காரி என்று முடிவுகட்டிக்கொண்ட பிறகு, எவ்வளவு தான் சமாதானம் செய்தாலும் அவர்களை மாற்ற முடியாது என்று அப்பாவும் தீர்மானித்து விட்டார். உயிரையே அவர் மீது பதித் திருக்கிறோம்; அவர் இப்படி ஏமாற்றி விட்டாரே என்ற ஏக்கம், அம்மாவுக்கு!

இருதயத்தில் தனி அரசு செலுத்த அவளுக்கு மட் டுமே உரிமையளித்திருக்கிறோம்; அவள் இப்படி தன்மீது அவசரப்பட்டு சந்தேகப்பட்டு விட்டாளே, என்ற ஆத்தி ரம் அப்பாவுக்கு!

அதனால், அம்மாவும் அப்பாவிடம் சமாதானத்துக்கு வரவில்லை. அப்பாவும், அம்மாவை சமாதானப் படுத்த விரும்பவில்லை. பாட்டிக்கோ இந்த விபரங்கள் எதுவும் புரியாது. மகனுக்கும் மருமகளுக்கும் பேச்சு வார்த்தை யில்லை என்பது மட்டும் தெரியும். கணவன் மனைவி, ஊடல் என்று கருதியிருந்தார்கள். போகப்போக பாட்டிக்கும் சந்தேகம் பிறந்து காரணமறிய முயற்சித்தார்கள். இரு வரும் காரணம் தெரிவிக்கவில்லை.

'கர்ப்பவதியடா அவள்! அவள் மனங்கலங்க விடக் கூடாது!' என்று அப்பாவிடம் பாட்டி கூறிய அறிவுரை கள் எல்லாம், பயனற்றுப் போய்விட்டன.

தங்கத்தை வயிற்றிலே சுமந்திருந்த அம்மாவுக்கு, நான் மட்டுமே ஒரு ஆறுதலாயிருந்தேன். என்னை தூக்கி வைத்துக்கொண்டு, அ ம் ம ா, எங்கேயோ சிந்தனையை செலுத்தியபடி நிற்பார்களாம். பாட்டி, பக்கத்திலே வந்து, 'வள்ளீ' என்று கூப்பிட்ட பிறகே, சிந்தனை கலைந்து

திடுக்கிட்டுத் திரும்புவார்களாம். வேறு எதைச் சிந்தித் திருக்கப் போகிறார்கள்; அன்று டாக்துரை பங்களாவில் கண்ட காட்சியைத்தான் சிந்தித்துக் கொண்டிருந்திருப் பார்கள்.

இந்த நிலையில் எனக்குத் தங்கையும் பிறந்தது. வறு மையின் வாடை — அப்பா அம்மா மன வேற்றுமை — பாட்டியின் சஞ்சலம்—இவைகளினூடே, எதைப்பற்றியும் கவலைப்படாத நானும், என் தங்கையும் வளர்ந்தோம். ஆண்டுகள், ஒன்றிரண்டென உருண்டன. அப்பா, அம்மா உறவு ஏற்படவில்லை. ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளாமலிருந்தவர்கள், இப்போது ஜாடைமாடையாகப் பேசிக் கொண்டார்கள். ஆனல் அந்தப் பேச்சு, இருவ ரிடையே பிளவை அதிகமாக்கத்தான் பயன்பட்டதே ஒழிய மீண்டும் சுமுகமான நிலையை உண்டாக்கவில்லை. இன்னும் சொல்லப் போனல், ஒருவரையொருவர் மனம் புண்படச் செய்வதற்காகவே அந்தப் பேச்சுக்கள் ஆரம்பமாயின என்று கூறலாம். பாட்டிக்கோ, இன்னது செய்வது என்று புரியவில்லை. குடும்பம், குழப்பச் சேற்றிலே சிக்கி தத்தளித்தது!

நளாயினி கதையிலே படித்திருக்கிறோம், அவள் தன் நாயகனை — தாசியின் இல்லத்திற்கு தூக்கிக்கொண்டு போனள் என்று!

ஆனல் என் அம்மாவோ, தீர விசாரிக்காமலே, அப் பாவின் மீது ஐயமுற்று புயலுக்குக் காரணமாகி விட் டார்கள்.

அப்பாவின் வாழ்க்கையிலே எதிர்ப்பட்ட அந்த மூன்று சம்பவங்களும் புதிய கொள்கைகளை அவருக்கு தந்திடக் காரணமாயின. குப்பன்—சிதா, இருவரின்

காதல் — இதயமற்றவர்களின் போலி நாடகம் என்று அவர் முடிவு கட்டினர்.

மேரி—ஜோசப்—காதல், உடல்வெறி தீர்த்துக் கொள்ளும் இன்பக் கூத்து எனக் கண்டார்.

கடைசியாக, தனது குடும்பத்திலே ஏற்பட்ட கணவன் மனைவி தகராறை வைத்து, அவசரக்காரர்கள் பெண்கள், உண்மைக்கு மதிப்பளிக்காத சந்தேக ஜீவன்கள் என்றும் முடிவு கட்டிக் கொண்டார். இந்த மூன்று நிகழ்ச்சிகளையே மையமாக வைத்து, புதிய இலக்கணங்கள் எழுதினர். டைரி எழுதும் பழக்கமுடைய அவர், குறிப்பிட்ட மாதம், தேதிகளிலே — நடைபெற வேண்டியது, அல்லது நடந்தது போன்ற செய்திகளுக்கு இடமளிப்பதை விட, தான் கண்ட புதிய தத்துவங்களைப்பற்றி விளக்கம் எழுதவே அதிகமாக அந்த டைரிகளில் இடமளித்தார்.

'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பது பழமொழி — பானைச் சோற்றைப் பொருத்த வரையிலே அந்தப் பழமொழி சரியானதுதான்—அதற்காக, எல்லாப் பானைகளிலும் உள்ள சோற்றுக்கும் இந்த ஒரு பானையிலுள்ள ஒரு சோறுதான் பதம் என்று கூறலாமா? பெரியவரே! தாங்களும், என் தந்தையைப் போலவே காதலைப் பற்றிய எண்ணங் கொண்டிருப்பதால், இதுபோன்ற கேள்வியைக் கேட்க விரும்புகிறேன் — தயவுசெய்து தவறுக எண்ணுதீர்கள். தங்கச் சுரங்கத்திலே அகப்படுவது எல்லாமே தங்கப் பாளமாகவோ, அல்லது வெறுங் கல்லாகவோ இருக்காதே! இரண்டும் கலந்துதானே இருக்கும். ஒரு குடும்பத்திலே ஒருவன் நல்லவன்—இன்னொருவன் பொல்லாதவன்—அந்த நல்லவன் என்ற ஒரு சொற்றைப் பதம் பார்த்து, அந்தக் குடும்பத்தார் அனைவருமே நல்லவர்கள் என்று கூறிவிட முடியுமா? அல்லது பொல்லாத

வனைக் கொண்டு, அந்தக் குடும்பம் முழுதும் கொடியோர் நிறைந்த கூடாரம் என்றுதான் முடிவு கட்ட முடியுமா?

இம்மாதிரி சிந்தனைகளுக்கெல்லாம் சிறிதும் வேலை தராமல், இரண்டு மூன்று நிகழ்ச்சிகளை அடிப்படையாக வைத்து, அகிலத்தின் ஆண் பெண் உறவுக்கே அப்பா அவசர வியாக்யானம் செய்து விட்டார். அந்த வியாக்யானங்கள் அவர் எழுதிக் குவித்த டைரிகளிலே அருமையான் சொற்கோர்வைகளுடன் இருந்தாலும், தேவையான அறிவுரைகளாக அமையவில்லை. ஆனல் ஒன்று, அப்பாவின் அந்த விளக்கங்கள் அவருக்கு மனச்சாந்திக்காக எழுதப்பட்டவை என்று விட்டு விடலாம். ஆனல் தங்களைப்போல, மற்றவருக்கும் அந்தக் கருத்துக்களை உபதேசிப்பது எனக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. பெரியீர்! என் கதையை விட்டு எங்கேயோ போகிறேனே என்று வருத்தப்படாதீர்கள் — இதோ, கதைக்கு வந்து விட்டேன்—ஒவ்வொரு ஆண்டும் அப்பா எழுதிய டைரிகள் குப்பையில் போய்ச் சேராமல், அவராலேயே பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டன. அம்மா பார்த்து விடக்கூடாது என்பதற்காக, அவர் அந்தப் புழைய டைரிகளை எல்லாம் மூட்டை கட்டி, பரணை மீது ஒளித்து வைத்திருந்தார்— அம்மா கொல்லப்பட்டு, அப்பா கைது செய்யப்பட்டபோது அகப்பட்ட டைரிகள் இரண்டே இரண்டுதான் ஒரு டைரி, முழுதும் எழுதப்பட்டிருந்தது. இன்னொரு டைரி, அப்போது தான் வாங்கப்பட்டுப் புதிதாக இருந்தது.

முழுதும் எழுதப்பட்ட டைரி, எனது ஒன்பதாவது வயதிலே பூர்த்தி செய்யப்பட்ட டைரியாகும். அந்த டைரியிலே இருந்த வாசகங்களும், அதில் அவர் கடைசிப் பக்கத்தில் எழுதியிருந்த, முதல் தேதி செய்ய வேண்டிய காரியம் பற்றிய தகவலும்தான் அவரைப் போலீசார் கையில் சிக்க வைத்தது.

* * * *

அம்மா, அப்பா இடையே தகராறுகள் பெருகிக் கொண்டிருந்த போதும்—அவர்களது தேயிலைத் தோட்டத்து வேலையிலே எந்தவிதமான குறைபாடும் ஏற்பட வில்லை. என்னைப் பள்ளிக்கூடம் அனுப்பிவிட்டு அம்மா, அப்பா, பாட்டி மூவரும், தங்கை தங்கத்தையும் தூக்கிக் கொண்டு, தேயிலைக் காட்டுக்குச் செல்வார்கள். வழக்கம் போல் உழைப்பார்கள். வீடு திரும்புவார்கள். டாக்துரை வீட்டு வேலைக்கு, முதலில் அப்பா போவதில்லை — பிறகு அந்த மேரிக்கும் ஜோசப்புக்கும் கல்யாணமாகி, அவள் அவ ரைடு போய்விட்ட பிறகு அப்பா, துரையின் பங்களாவிலும் வேலைகளைச் செய்து வந்தார். அம்மாவும் மன வேதனையை அடக்கிக்கொண்டு, டாக்துரை பங்களாவில் ஊழியம் செய் தார்கள். டாக்துரைக்கு அம்மாவின்மீது ஏற்பட்ட அந் தக் கொடிய எண்ணம் மாறவே இல்லை. அவனுக்கு எத் தனையோ, பெண்கள்—கங்காணி காளிமுத்து மூலமாகவும், அவனது வெள்ளாட்டி, சிதை மூலமாகவும் தவக்கமின்றிக் கிடைத்துக் கொண்டிருந்த போதிலும், தான் அடைய முடியாதது ஒன்று உலகத்தில் இருக்கக்கூடாது என்ற மனப்பான்மை ஆணிவேர் விட்டுக் கிளம்பியது.

கேவலம், தன் தோட்டத்துக் கூலி, அவளைத் தன் இஷ்டத்துக்கு உட்படுத்த முடியவில்லை என்ற ஆத்திரம் விழுது விட்டது. கையிலே யிருக்கும் கனியை ஒரு கடி கடித்து விட்டெறிந்து விட்டு வானத்திலிருக்கும் சந்திர னைப் பிடித்துக்கொடு என்று குழந்தை அடம் பிடிக் கிறதே; அதுபோல அல்ல—ஆட்டையும், மாட்டையும் வேட்டையாடிக் கொன்றது போதாமல் ஆயிரமாயிரம் ஈக் கள் சூழ்ந்து நின்று எதிர்த்தாலும் அஞ்சாது, தேன் கூட்டை நெருங்குகிறதே கரடி—அதுபோல, அவன் வெறி பிடித்து அலைந்தான். குதித்து குதித்துப் பார்த்து கடை சியில் திராட்சைக்குலை புளிக்குமென்று குள்ளநரி நடை போட்டதென்று கதை தான் கேட்டிருக்கிறோம்—ஆனால்

இந்த வெள்ளை நரி, 'கிட்டாதாயின் வெட்டென மற' என்ற மொழியை மறந்து, 'முயற்சி திருவினையாக்கும்' என்ற அறிவுரையை இந்த மூர்க்கமான நடவடிக்கைக்கு அனுசரணையாகக் கொண்டான். எப்படியும், என் அன்னையை மடக்கிவிடக் கங்கணம் கட்டிக் கொண்டான்.

ஒரு நாள்—ஆம், அந்த நாள்தான் எங்கள் குடும்பம் அடியோடு பாழ்பட ஆரம்பித்த நாள்; அந்த துன்ப நாளிலே, தோட்ட வேலைக்கு அப்பாவும், பாட்டியும் சென்று விட்டார்கள். அம்மாவுக்கு உடல் நலமில்லை. தங்கமும், அம்மாவும் வீட்டிலே யிருந்தார்கள். நான் பள்ளிக்கூடம் போயிருந்தேன் — தேயிலைக்காட்டை சுற்றிப் பார்க்க, டாக்துரை போயிருக்கிறான் — அங்கே அம்மா இல்லை—கங்காணி காளிமுத்து மூலமாக அம்மா வீட்டிலிருப்பதை அறிந்து கொண்டான். அங்கிருந்து டாக்துரை, வீடு நோக்கிப் புறப்பட்டிருக்கிறான், கங்காணி காளிமுத்துவுடன்!—ஆம், அந்த வெறிகொண்ட மிருகம், தனது கோரைப் பற்களுக்கு இரை தேட, எங்கள் குடிசையை நோக்கிப் புறப்பட்டு விட்டது—தன்னிடம் கூலி பெற்று பிழைக்கும் ஒரு பெண், மானத்தை இழக்கவும் தயாராயிருக்க வேண்டுமென்பது, அந்தக் காட்டு ராஜாவின் தோட்டத்திலே, சட்டமாக அல்லவா இருக்கிறது!—அதற்கு எதிர்ப்புக் குரல் கொடுக்க, ஒரு ஏழையின் மனைவிக்கு ஏது அதிகாரம்? இந்த அகம்பாவம் நிறைந்த கேள்விக்குறி நெஞ்சத்திலே தாண்டவமாட என் அன்னையை நோக்கி அந்தப் பாதகன் சென்றான்—டாக்துரையும், காளிமுத்துவும் பேசிக்கொண்டிருந்ததை கவனித்த என் அப்பா, ஏதோ சந்தேகமுற்றவராய், பாட்டியிடம் வந்து, 'அம்மா! தோட்டத்துக்கு சென்று கிழங்கு வெட்டி விட்டு, அரைமணி நேரத்தில் வருகிறேன்' என்று கூறி விட்டு, அப்பா அதைவிட்டுக் கிளம்பினர்.

அப்பா, குத்தகைக்கு எடுத்து கிழங்கு பயிரிட்டு வந்த தோட்டம் ஒன்று உண்டு. அங்குதான் போகிறார் என்று பாட்டி எண்ணியிருந்தார்கள். அப்பாவோ, வீடு நோக்கி விரைந்தார்.

அதற்குள் டாக்துரை, அம்மாவிடம் வந்து விட்டான். அப்பா, வேகமாக ஓடிவந்து வீட்டுக்குள் நுழைந்தார். அப்பா அங்கே என்ன கண்டார்? அம்மா, ரத்தக் குளத்திலே மிதந்து கொண்டிருப்பதைத்தான் கண்டார். அம்மாவின் உயிர் விளக்கு, சிறிது சிறிதாக அணைந்து கொண்டிருந்தது. விலாவிலும், முதுகிலும், நெஞ்சிலும், முகத்திலும் குத்துக் காயங்களும், குபுகுபுவெனப் பொங்கி வழியும் குருதியும் அம்மாவை மரண முகப்புக்கு வெகு வேகமாக இழுத்துச் சென்று கொண்டிருந்தன. ஐந்து வருட காலமாக, 'வள்ளி' என்று அன்பொழுக அழைக்காத அப்பா, அம்மாவை வாரி அணைத்து மடிமேல் கிடத்தியபடி 'வள்ளி! வள்ளி!' என்று கதறினர். அப்போதுங் கூட அம்மா அப்பாவிடம், கடின சித்தத்தோடு தான் நடந்து கொண்டிருக்கிறார்கள். அப்பாவிடம் நேரடியாகப் பேசாமல்—யாருக்கோ பதில் சொல்வது போல, 'டாக்துரை என்னை சூரையாட வந்தான். நெருங்காதே என்று எதிர்த்தேன். என் கையிலே இருந்த கத்தியைக் கண்டு, அவன் பயந்து பதுங்கினான். காளிமுத்து அவனுக்கு உதவியாக வந்து பாய்ந்தான். அவ்வளவு தான்! கத்தி அவர்கள் கைக்கு மாறியது! அதன் பிறகு..... ஆனல்.....வெள்ளைக்காரியிடம் மன உறுதியை தளர விட்ட ஆணைப்போல இல்லாமல், இந்தப்பெண், வெள்ளை நாயிடமிருந்து தன் மானத்தைக் காப்பாற்றிக்கொண்ட பெருமையைப் பெற்று விட்டாள். நான் சாகப்போவது நிச்சயமாகி விட்டது. அத்தையிடம் என் கடைசி வணக்கத்தை சொல்ல வேண்டும். அதற்குள் அவர்கள் வரமாட்டார்கள். அதனல்.....

அவர்களிடம்—என் குழந்தைகளை பத்திரமாகப் பார்த்துக் கொள்ளும்படி சொன்னால் நல்லது.....'

இந்த வார்த்தைகள் தேய்ந்த நிலையிலே வெளிப் பட்டன. அம்மா கண்களை இறுதியாக மூடிவிட்டார்கள். குழந்தை தங்கம் அம்மாவின் மேலே விழுந்து புரண்டு கதற, அம்மா என் அருமைத் தங்கத்தை தொட்டுக்கூடப் பார்க்க முடியாமல், அசைவற்றுக் கிடக்க—அங்கே அப்பா வும் செயலற்று நின்றார்.

அந்த சமயத்திலே போலீஸ் படை உள்ளே புகுந் தது—அது டாக்குரையின் ஏற்பாடு. — கங்காணி காளி முத்து வாயிலாக செய்யப்பட்ட கைங்கர்யம். போலீசார், வீட்டை சோதனையிட்டனர். அவர்கள் கையிலே அப்பா வின் பழைய டைரிகள் சிக்கவில்லை. ஆனால், அப்பாவை சிக்கவைக்கும் இரண்டு டைரிகள் மட்டும் கிடைத்து விட் டன, அவர்களிடம்!

ஓட்டைப் பீரோவிலே இருந்த அந்த டைரிகள் தான் அப்பாவைக் காட்டிக் கொடுக்க துணை புரிந்தன.

ஒரு டைரியிலே இருந்த வாசகம்—'ஒன்று வள்ளி சாக வேண்டும்; அல்லது நானுவது சாக வேண்டும்— அப்போது தான் இந்தக் குடும்பத்தில் நிம்மதியா யிருக்கும்!'

அதே டைரியின் கடைசிப் பக்கத்திலே உள்ள ஒரு வாசகம், சர்க்கார் தரப்பு வக்கீலுக்கு மிகவும் சாதக மாயிற்று.

'முதல் தேதி—வள்ளி வெட்டப்பட வேண்டும்.' இது வும் அப்பாவின் கையெழுத்து தான். போலீசாருக்கு ஆதாரம் போதாதா என்ன?"

19

"அப்பா, நீதிமன்றத்திலே நிறுத்தப்பட்டார். மனைவியைக் கொலை செய்த மாபாவி என்று தெருவார் திட்டித் தீர்த்தார்கள். பாட்டியின் முகத்தை ஊரில் உள்ளோர் பரிதாபமாகப் பார்ப்பது, பாட்டியை உயிரோடு வைத்து சித்ரவதை செய்வது போலிருக்குமாம். அய்யோ பாவம், தள்ளாத காலத்திலே இந்தக் கிழவி, மருமகளையும் சாகக் கொடுத்து, மகனையும் இழந்து தடுமாறுகிறாளே என்று ஊர் மக்கள் பேசுவது அவர்களுக்கு அழுகையையும் ஆத்திரத்தையும் உண்டாக்குமாம். பத்து வயதுப் பேரன் என்னையும், ஐந்து வயதுப் பேத்தி என் அருமைத் தங்கையையும் பார்த்துப் பார்த்து அழுது கொண்டிருந்த பாட்டி, வழக்கின் முறையையும் ஆவலோடு எதிர்பார்த்தார்கள். எப்படியாவது, தன் செல்வ மகனுக்கு தூக்குத் தண்டனை கிடைக்காமல் போய் ஆயுள் தண்டனை கிடைத்தாலும் போதும் என்று சொல்லிச் சொல்லி ஏங்கினார்கள். தான் ஒரு கிழம், பழுத்தப் பழமாக வீட்டிலே உட்கார்ந்திருக்கும் போது, தன் குடும்பத்தின் சுடர், தனக்கு முன்பாக பிணமாக சாய்வதை பாட்டி எப்படிப் பார்த்துக் கொண்டிருக்க முடியும்? நாங்களோ, அரும்புகள்! எங்களைப் பாதுகாக்கும் பொறுப்பை சுமக்கும் பாட்டியோ, பழுத்து விட்ட இலை! திடீரென்று தானும் மண்டையைப் போட்டு விட்டால், எங்கள் இருவரையும் யார் காப்பாற்றப் போகிறார்கள்—எங்கள் கதி என்ன—என்று பாட்டி பெருமூச்சு விடாமல் இருக்க முடியுமா?—அப்பாவின் வழக்கில் தீர்ப்புக் கூறும் நாளும் வந்து விட்டது—எங்கள் இருவரையும் அழைத்துக்கொண்டு, பாட்டி நீதி மன்றத்துக்குப் போனார்கள். அப்பா கூண்டிலே நின்றார். தங்கை தங்கம் அப்பாவிடம் போக வேண்டுமென்று துடித்தது. நான் கண்ணீர் விட்டபடி நின்றேன். பாட்டி சிலையாக இருந்தார்கள்.

அப்பா, எங்களை ஒருமுறை பார்த்தவர், பிறகு எங்கள் பக்கம் திரும்பவேயில்லை. தீர்ப்பு கூறப்பட்டது. அப்பாவுக்கு மரண தண்டனை இல்லை. ஆயுள் தண்டனைதான் தரப்பட்டது— அவரது வாழ்க்கையில் பதினைந்து வருடங்கள் சிறையிலே உருள வேண்டும் — அப்பா, எங்களைப் பார்க்காமலே நீதிமன்றத்திலிருந்து போலீசாருடன் வெளியேறினர்.

வள்ளி சாக வேண்டும், இல்லாவிட்டால் நான் சாக வேண்டும்—என்ற வார்த்தைகளும், வள்ளி முதல் தேதி வெட்டப்பட வேண்டும் என்ற வார்த்தைகளும், அப்பாவைக் குற்றவாளியாக்கப் பெரிதும் பயன்பட்டன. சிறையிலே அப்பாவை சந்தித்தபோது, பாட்டியிடம் அப்பா, நடந்த விஷயங்களைச் சொல்லிக் கண்ணீர் விட்டாராம். முதல் தேதி வள்ளி வெட்டப்பட வேண்டும் என்று— தான் எழுதி வைத்ததின் பொருளை அப்பா, விக்கி விக்கி அழுதுகொண்டே பாட்டியிடம் கூறினாராம். தேயிலைத் தோட்டத்து வேலையோடு, அப்பா ஒரு கிழங்குத் தோட்டத்தை குத்தகைக்கு எடுத்துப் பயிர் செய்தார் என்று முன்பே கூறியிருக்கிறேன்— அந்தத் தோட்டத்திலே முதல் தேதியன்று வள்ளிக் கிழங்குகளை வெட்டி எடுக்க வேண்டும் என்பதைத்தான் அவர் தனது டைரியிலே எழுதி வைத்திருக்கிறார். கொலை செய்யப் போகிற ஒரு மனிதன் தான் அகப்பட்டுக் கொள்வதுபோல, முன்கூட்டி எழுதி வைப்பாரா, என்கிற யோசனை கூட இல்லாமல், அந்த எழுத்துக்களையே ஒரு மனிதனின் வாழ்வைப் பாழாக்க உபயோகித்துக் கொண்டார்கள். வாதத்தின் திறமை, வழக்கறிஞனின் சாமர்த்தியம் என்கிற புகழ் மாலைகளைப் பெறுவதற்காக, ஒரு நிரபராதியின் வாழ்வில் பதினைந்து வருடங்கள் துண்டாக வெட்டப்பட்டன—வள்ளி வெட்டப்

பட வேண்டும், என்ற அந்த வாசகம் சர்க்கார் தரப்பு வக்கீலுக்கு சாதகமாயிற்று. அதேபோல, என் அப்பாவிடமும் பணமிருந்து, ஒரு நல்ல வழக்கறிஞர் கிடைத்திருந்தால் அதே வார்த்தைகளை அந்த வக்கீலும் சாமர்த்தியமாகப் பயன்படுத்திக் கொண்டிருப்பார்.

'வள்ளி வெட்டப்பட வேண்டும்' என்றுதான் எழுதியிருக்கிறது. ஆனால், இந்த வள்ளியம்மையோ குத்தப்பட்டு செத்திருக்கிறாள் — ஆகவே டைரிக் குறிப்புகள் குமாரவடிவை குற்றவாளியாக்கும் சாட்சியாக, இருக்க முடியாது!' என்பதுபோல அமைந்திருக்கும் அந்த வக்கீலின் வாதம். அதனால், அப்பா விடுதலை பெறவும் முடிந்திருக்கும். அப்படி ஒரு வழக்கறிஞரை வைத்து வழக்கு நடத்தும் வசதி அப்பாவுக்கு இல்லை. இதுபோல எத்தனையோ வழக்குகளில், எத்தனையோ நிரபராதிகளுக்கு என் தாத்தா பொன்னும் பொருளும் வாரிக்கொடுத்து, அவர்கள் உயிரைக் காப்பாற்றினாராம். இப்போது அவரது அருமைக்குரிய மகன் யாருமற்ற அனாதையாய் பதினைந்து வருடகாலம் கூண்டிலே கிடக்க வேண்டும் என்று தீர்ப்பு வழங்கப்பட்டு விட்டது. அப்பாவையும் சிறைக்குச் சிறை மாற்றிக்கொண்டே தொல்லைப்படுத்திக் கொண்டிருந்தார்கள். பாட்டி, எங்களை படாதபாடுபட்டு வளர்த்து வந்தார்கள். ஆண்டுகள் உருண்டன. எனக்கு சுமார், பதினைந்து வயதிருக்கலாம். தங்கையும் பத்து வயதை எட்டிப்பிடித்து வளர்ந்து வந்தது. பாட்டி, உடல் நலிவுற்று படுக்கையில் விழுந்தார்கள். பிறகு அவர்கள் எழுந்திருக்கவேயில்லை. சுமார் ஒரு மாத காலம் பாட்டி, இயற்கையோடு போராடினார்கள்.

எங்கள் இருவரையும் பாதுகாக்க, இன்னும் சிலகாலம் உயிரோடிருக்க அவர்கள் எவ்வளவோ ஆசைப்பட்டார்கள்.

யாருடைய கையிலாவது எங்கள் இருவரையும் ஒப்புவித்து விட்டு, நிம்மதியாக கண்ணை மூடலாம் என்று துடியாய்த் துடித்தார்கள். பழுத்து முதிர்ந்து, அனுபவத்தின் கீறல் கள் விழுந்த அந்தக் கிழ நெஞ்சத்திலே, எங்களைப்பற்றிய சிந்தனை அலைகள் கொந்தளித்துக் குமுறி எழுந்தன.

என்னையும் தங்கையையும் நடுங்கும் கரங்களால் கட்டிப் பிடித்துக்கொண்டு பாட்டி கதறிய காட்சிகள் இன்னும் என் மனதை விட்டகலவில்லை. எலும்புகளாகி விட்ட பாட்டியின் கரங்கள் என்மீது படும்போது, எனக்கு எவ்வளவோ ஆறுதலாக இருந்தது. அந்தக் கரம்தானே, எங்கள் இருவரையும் இத்தனை நாள் சீராட்டிப் பாராட்டி வளர்த்த கரம் என்று நினைத்துக் கொள்வேன்— தங்கத் தைத் தழுவிக்கொண்டு அழுவேன் — தங்கமும் கூக்குர லிடும். பாட்டி மரணவஸ்தையால் கஷ்டப்பட்ட அந்த நாட்களில் நானும் தங்கமும் சரியாக சாப்பிட்டதேயில்லை. பலநாள் பட்டினி கிடந்திருக்கிறோம். அடுத்த வீட்டுக் காரர்களின் உபசரிப்புகள் எங்களை உயிரோடு வாழவைத் தன. இறுதியாக பாட்டி கண்களை மூடும் அந்த நாளும் வந்துவிட்டது. அன்று காலையிலே பாட்டியின் முகத்தில் சாவுக் குறிகள் தோன்ற ஆரம்பித்துவிட்டன. உலகத் தின் இன்ப துன்பங்களை அனுபவித்து—வாழ்வின் இரு துருவங்களையும் சந்தித்து—வைரம் பாய்ந்துபோன அந்த குடும்பத்தரு அடியோடு சாயப்போகும் நேரம் நெருங்கிக் கொண்டேயிருந்தது. அன்று எங்களிருவரையும் பாட்டி அருகிலேயே வைத்துக்கொண்டு அணைத்துக்கொண்டார் கள். இருபுறத்திலும் நாங்கள் இருவரும் அமர்ந்து, பாட்டியின் ஸ்பரிச உணர்ச்சியால் ஆட்கொள்ளப்பட்டு மெய் மறந்து போயிருந்தோம். அம்மா, தான் புதை யுண்ட இடத்தில் மூக்கி மடித்துப்போய் — உடலை மண் ணோடு மண்ணாக்கிவிட்டு, எங்கள் பாட்டிக்காக பூமியைத்

தயார் செய்து வைத்திருக்கிறார்கள். அப்பா — எந்த சிறையிலே எந்த வார்டரிடம் அடி வாங்குகிறாரோ அல்லது எத்தகைய கஷ்டமான வேலையை செய்து வேதனை அனுபவிக்கிறாரோ — அல்லது இருக்கிறாரோ அவரும் செத்தாரோ தெரியாது. நாங்கள் இருவரும் எங்களுக்கிருந்த ஒரே ஒரு ஆதரவையும் இன்னும் சில மணி நேரங்களில் இழக்கப் போகிறோம் என்ற கலக்கத்தோடு உட்கார்ந்திருந்தோம். பாட்டி எதுவும் பேசாமல் எங்களிருவரையும் மாறி மாறிப் பார்ப்பதும், எங்கள் முகங்களைத் தன் முகத்தோடு சாய்த்துக்கொள்வதுமாக இருந்தார்கள். அவர்களது கண்களில் நீர் துளிர்த்தது. என்ன எண்ணினார்களோ—யார் கண்டது? வயதான கிழங்கள் சாகும் காலத்தில் விரும்புவதென்ன? மகன் கொள்ளி வைக்க வேண்டும்; பேரன் பேத்திகள் நெய் விளக்குகள் பிடிக்க வேண்டும் என்றுதானே ஆசைப்படுவார்கள். அந்தக் கடைசிக் கடமையைச் செய்ய முடியாமல், குற்றமற்ற தன் மகன் எங்கேயோ சிறையில் சித்திரவதைப் படுகிறான் என்பதை பாட்டியால் எப்படித்தான் தாங்கிக் கொள்ள இயலும்—மகனை நினைந்து வழிந்த கண்ணீரோ—அல்லது எங்கள் எதிர்காலத்தைப் பற்றிய ஏக்கமோ—பாட்டியின் இருதயத்தை சல்லடைக் கண்களாகத் துளைத்துவிட்டது. அந்த நினைவு எதுவோ தெரியாது; பாட்டி அழுதுகொண்டேயிருந்தார்கள். அண்டை அயலார் எல்லாம் வந்து கூடிவிட்டார்கள்; பாட்டியை வழி அனுப்பிவைக்க!

திடீரென்று பாட்டி பேச முடியாத நிலை பெற்றார்கள். இனிமேல் பாட்டி, பேச மாட்டார்கள் என்பதை நான் புரிந்து கொண்டேன். ஆனல் தங்கம் புரிந்து கொள்ளாமல், "பாட்டீ! பாட்டீ!" என்று கதறினாள். அவர்கள் பேச முடியவில்லை என்பதை கை ஜாடையால் உணர்த்திவிட்டு, எங்களை இறுகத் தழுவிக் கொண்டார்கள். "சிறிது

நேரத்தில் உயிர் போய்விடும்" என்று பக்கத்து வீட்டுக் காரர்கள் தாராளமாகப் பேசிக் கொண்டார்கள். எங்கள் அருமைப் பாட்டியின் காதுகளில் அந்த வார்த்தை விழுந் ததோ என்னமோ தெரியாது—அவர்கள் எங்களை அழுத்த மாகக் கட்டிக் கொண்டார்கள். எங்கள் முகங்கள், பாட்டி யின் முகத்திலே பதிந்து விட்டன.

பாட்டியின் கண்ணீரும், பசலைகளாகிய எங்களின் கண்ணீரும் ஒன்று சேர்ந்தது — வர வர பாட்டியின் அணைப்பு பலமாயிற்று — நாங்களும் அசைவற்று அவர் கள் மீது ஒட்டிக்கொண்டிருந்தோம்—பலமான பிடி சிறிது சிறிதாக தளர்ந்தது. கடைசியில் பாட்டியின் கைகள் எங்கள் மேனியை விட்டு அகன்றன. அய்யோ—பெற்ற தாயைவிட அருமையாக வளர்த்த எங்கள் ஆசைப் பாட்டியை சாவு கொத்திக் கொண்டுபோய் விட்டது.

"சாஞ்சாடு அம்மா சாஞ்சாடு!" என்று பொக்கை வாய் திறந்து பாடும் அந்தப் பாசமுள்ள பாட்டு இனி அந்தக் குடிசையிலே கேட்காது.

"அன்னிக் கொட்டு பொண்ணே அன்னிக்கொட்டு! அஞ்சாறு காசுக்கு அன்னிக் கொட்டு!" என்று என் தங்கைக்கு விளையாட்டுப் பாட்டுப் பாடிய, அந்த இதழ்கள் திறக்காமல் மூடிவிட்டன. அடுத்த வீட்டுக்காரர்கள், தாங்கள் செய்யவேண்டிய கடமைகளை அவசரமாக செய்து பாட்டியை மண்ணுக்கு இரையாக்கிவிட்டு அவரவர்கள் வீட்டுக்குப் போய்விட்டார்கள். நாங்கள் தனியாகி விட் டோம். எங்கள் வீடு இருளாகிவிட்டது. பதிறை பதி னைந்து வயது நிரம்பிய நானும், பத்து வயதுத் தங்கையும் ஒரு குடும்பத்தை நடத்துவதற்கு துரத்தப்பட்டோம். புயலும், இடியும் சீறிக் கிளம்பும் அந்தகார இருட்டிலே,

தளிர்களான நாங்கள் இருவரும் பயணம் நடத்துவதென் றால் முடியக்கூடிய காரியமா? யார் எங்களுக்கு நாதி? இந்தக் கேள்வியை நாங்களே கேட்டுக்கொண்டோம். உரக்க உரக்க கேட்டோம், பதில் கிடைக்கவில்லை. பெரும் பணக்கார வீட்டிலே இப்படி இரு இளம் சிட்டுகள் தனி யாக விடப்பட்டு, முக்கியஸ்தர் செத்துப் போயிருந்தால், மூலை முடுக்குகளில் உள்ள சொந்தக்காரர்கள் எல்லாம் முந்திக்கொண்டு ஓடி வருவார்கள் — யார் யார், எப்படி எப்படி பங்கு போட்டுக்கொள்ளலாம் என்று திட்டம் போட்டபடி சூழ்ந்துகொள்வார்கள். ஆனால் அனைத களான எங்களுக்கு யார் துணை? கேள்விக் குறிகள் பெரு கின. வீட்டின் தெருப் புறத்திலே உட்கார்ந்துகொண்டு, பாட்டியின் பிணம் போன திக்கைப் பார்த்துக்கொண்டே யிருந்தோம். அதுதான் எங்களின் உடைந்தஉள்ளத்திற்கு ஆறுதலாக இருந்தது. இரக்கப்பட்ட தெரு மக்கள் எங் களுக்கு சிறு சிறு உதவிகளைச் செய்தார்கள். அவர் களால்தான் என்ன செய்ய முடியும்! அவர்களும் அன்ற டம் காய்ச்சிகள்தானே!

இப்படி திக்குத் தெரியாமல் விழித்த எங்களுக்கு நல்ல திசை காட்டுவதாகக் கூறிக்கொண்டு, ஒரு மனிதன் வந்து சேர்ந்தான். காஷாய உடையும் "கடவுள் துணை" என்ற மந்திரமும் அவனைச் சாமியார் என்று பறையடித் தன. அந்தச் சாமியார், எங்களது நிலையைப் பார்த்துப் பரிதாபப்பட்டான். அவன் இலங்கை வாசியல்ல. இந்தி யாவிலேயிருந்து வந்தவன்தான். அவன் எங்களை அணுகி, இந்தியாவுக்குத் தன்னுடன் வருமாறும், அங்கே சுகமாக வாழ எங்கள் இருவருக்கும் வசதி செய்து தருவதாகவும் கூறினான். தெருமக்களும் சாமியாரைப்பற்றி வானளாவப் புகழ்ந்து, அவரோடு நாங்கள் இந்தியா செல்வது நல்லது என்று அறிவுரை கூறினார்கள். எனக்கும், என் தங்கை

தேயிலைக் காடுகளின் ஓரத்திலே வளர்வது பிடிக்கவில்லை. கொடிய விலங்குகள் வாழும் பகுதியில் என் தங்கையும் வாழ்வது என்பது சமாளித்துத் தீரவேண்டிய ஒரு பயங்கரப் பிரச்சினையாகிவிடும் என்று நான் முடிவு கட்டியிருந்தேன். இந்தியாவில் வந்து எப்படியாவது பிழைத்துக் கொள்ளலாம் என்று தைரியங் கொண்டேன். நமக்கு ஒரு நல்ல வேலை; தங்கைக்கு ஒரு நல்ல கணவன் — இது கிடைத்துவிட்டால் போதும் என்ற ஆசையோடு இலங்கையிலிருந்து புறப்பட்டேன்.....அப்போது தெரியாது; சாமியார் எங்களை கெட்ட எண்ணத்தோடு, அழைத்து வருகிறான் என்பது! மருங்கப்பள்ளத்திலேயிருக்கும் புதையலை எடுக்க, ஒரு நரபலி வேண்டுமாம்— அதுவும் சின்னஞ்சிறு பெண்ணாக இருக்கவேண்டுமாம், அந்தப் பெண்ணின் ரத்தத்தை பூமியில் தெளித்தால் தான் புதையல் இருக்கும் இடம் வெடித்துக் கிளம்புமாம், இப்படி ஒரு நம்பிக்கையோடு, என்னையும், என் அன்புத் தங்கையையும் அந்தப் பாதகன் அழைத்துப் போனான் என்பது பிறகுதான் தெரிந்தது."

20

"**சா**மியாரும் நாங்களும் கள்ளத்தோணி மூலமாகக் கடலைக் கடந்து தென்னாட்டுக் கரை வந்து சேர்ந்தோம். சாளுவநாயக்கன் பட்டிணத்திலே, கடற்கரையில் ஓங்கி நிற்கும் அந்த ஏழுடுக்கு உப்பரிகையை நானும் தங்கையும் கண்டு மகிழ்ந்தோம். தங்கைக்கு அந்த உப்பரிகையை விட்டு அகலவே மனம் வரவில்லை. அதிலே ஏறிப் பார்க்க வேண்டுமென்று நான் ஆசைப்பட்டேன். சாமியாரும் எங்களை பத்திரமாக பாதுகாத்து, உப்பரிகையின் மேல்

தளம் வரையிலே அழைத்துச் சென்றார். பெரியவரே! தங்களை முதன் முதலாக நாங்கள் சந்தித்த அந்த உப்பரி கையிலே நானும் தங்கையும் நின்றுகொண்டு கடலைக் கண்டோம். களிப்பால் குதித்தது தங்கம். சாமியார் எங்களிருவரையும் கிண்டல்கள் பல செய்து உற்சாகப் படுத்திக்கொண்டேயிருந்தார். கசாப்புக் கடைக்காரன் கூடத்தான், ஆடு மாடுகளுக்குத் தீனி போடுகிறான். மறு நாள் அவைகளை வெட்டி விற்பனை செய்யும் வரையில் அவை சாகாமல் இருக்க வேண்டுமே—அதுபோலத்தான் எங்களுக்கும் சாமியார் பல்வகை உபசாரங்கள் செய்தார். பிறகு, எங்களை மெதுவாக அழைத்துக்கொண்டு, நடந்தே புறப்பட்டார். நாங்களும் பின் தொடர்ந்தோம்.

அனைதயாக இலங்கைத்தீவிலே விடப்பட்ட எங்களை வாழ்விக்க வந்த மகான்—முன்னே போகிறார் என்ற நினைப் போடு, அவனை வாழ்த்திக்கொண்டே, தங்கையை ஒரு கையில் பிடித்துக்கொண்டு நடந்தேன். தங்கையோ சிறுமி—பத்து வயதுக் கொழுந்து—எங்களோடு போட்டி போட்டு நடக்க முடியுமா?.....தள்ளாடியது — அதைக் கண்ட அந்த சாமியார், பரிவோடும், பாசத்தோடும் என் தங்கையைத் தன் தோளில் தூக்கிவைத்துக் கொண்டான். ஆமாம், பெரியவரே, தங்கையைத் தோளில் வைத்துக் கொண்டார். அப்போது எனக்குத் தெரியாது அந்தப் பாவி, என் செல்வத்தைதக் கூரான வாளிலும் வைக்கப் போகிறான் என்று! — பச்சைக் கதிரசைக்கும் வயல்கள், பசுமைக் கரம் நீட்டும் இளமரங்கள், இடையிடையே மடை கோலிப் பாயும் சிறு வாய்க்கால்கள் இவைகளை யெல்லாம் ரசித்தபடி, நாங்கள் பயணம் நடத்திக் கொண்டிருந்தோம். அந்தச் சாமியார், சுற்று வட்டாரத்தில் உள்ள கிராமங் களைப் பற்றியும், அங்கேயுள்ள கோயில் குளங்களைப்பற்றி யும் கதை கதையாய்ச் சொன்னான்.

அருகேயுள்ள நாடியம் என்ற கிராமத்தில் ஒரு மடாலயம் இருப்பதாகவும், அந்த மடாலயம் வட நாட்டுக்காரர்களுக்குச் சொந்தமானதென்றும், வடநாட்டு மதத் தலைவர்கள் அங்கே பல தலைமுறைகளாக ஒருவர்பின் ஒருவராக மடாதிபதியாக இருந்து வருவதாகவும், அவர்கள் எல்லாம் தனக்குத் தெரிந்தவர்களே என்றும் அவன் கதையளந்தான். நாடியம் கிராமத்திலே மடம் இருப்பது உண்மை. அது வடநாட்டு மடாதிபதிகளின் ஆதிக்கத்தில் இருப்பதும் உண்மை. அந்த அதிபதி, தனக்கு நண்பர் என்று சொன்னானே; அது எவ்வளவு தூரம் உண்மையோ என்னக்குத் தெரியாது. பேசிக்கொண்டே மருங்கப்பள்ளம் கிராமம் வந்து சேர்ந்தோம் — அங்கேயிருக்கும் சிவன் கோயிலில் இன்றிரவு தங்கிவிட்டு, காலையிலே நாடியம் மடாலயத்துக்குச் சென்றுவிட்டு, பிறகு அந்த அதிபரின் சிபாரிசோடு, எனக்கு ஒரு நல்ல வேலை வாங்கித் தருவதாகவும், தங்கையை படிக்க வைப்பதற்கான வசதிகளைக் கவனிப்பதாகவும் அவன் சொன்னான்.

உலகத்தை வெறுத்துவிட்டு வெளிக் கிளம்பிய ஒரு துறவிக்கு நாங்கள் இருவரும் ஒரு பாரமாக வந்து சேர்ந்தோமே என்று நான் கவலைப்பட்டேன். "சுவாமீ! எங்களிடம் ஏன் இப்படி அக்கரை காட்டவேண்டும் — நாங்கள் யாரோ? தாங்கள் யாரோ?" என்று நான் வருத்தமுடன் கேட்டேன்.

"என்ன சொன்னாய் அப்பனே! நீ யார்? நான் யாரா? —நாம் எல்லோருமே ஆண்டவன்கள்! நாமே கடவுள்கள்! பல கூடுகளில் இருக்கும் ஒரே உயிர்! பல பாத்திரங்களில் ஊற்றப்பட்டுள்ள ஒரே பசுவின் பால்! ஒரு உயிருக்கு ஒரு இன்னல் என்றால், அந்த இன்னல் எல்லா உயிரையும் பாதிக்கும். இதை சாதுக்கள் மட்டுமே உணர்வார்கள். அப்

படி உணர்ந்த சாது நான்! அதனல்தான் உங்களை வாழ்விக்க முற்பட்டேன்" என்று சாமியார் சொற்பொழிவு நிகழ்த்தினன்.

பிறகு, மூவரும் அங்குள்ள சிவன் கோயிலுக்குச் சென்றோம். இருட்டாயிருந்த போதிலும் விளக்கு, 'மினுக்—மினுக்' என்று எரிந்து கொண்டிருந்தது. கோயில் வாயிலிலே நின்றபடி சாமியார் கூப்பிய கரமுடன் பஜனைப் பாடல்களைப் பாடினன். அவனுகவே ஆடினன். ஆண்டவனேடு ஐக்யமாகிவிட்டதாக நடித்தான். எங்களையும் பிரார்த்தனை செய்து கொள்ளும்படி கூறினன். தங்கை தங்கம், தனது பிஞ்சுக் கரங்களைக் குவித்தபடி ஆண்டவன் சன்னிதானத்தைப் பார்த்து, தேனைழுகும் மழலை மொழியால், "சாமி தாயே! எங்க பாட்டி, எங்க அம்மா, எங்க அப்பா—எல்லாரையும் எனக்கு திருப்பிக் கொடு!..." என்று கேட்டுக்கொண்டாது. தாமரை இதழிலே பனித் துளி பட்டு சிதறுவதுபோல, என் தங்கத்தின் கன்னச் சரிவுகளிலே கண்ணீர்த் துளிகள் விழுந்து சிதறியதை, அந்த மங்கலான வெளிச்சத்திலும் நான் கண்டேன். என்னை நானே தேற்றிக்கொண்டேன்.

சாமியார், மூட்டை கட்டி வைத்திருந்த ஆகாரத்தை ஆளுக்குக் கொஞ்சம் சாப்பிட்டோம். "மிச்சம் வைங்க—காலையிலே சாப்பிடவேணும்" என்று கேலியாகச் சொன்னது என் கிளி! அய்யோ; அந்தக் கிளி அப்போது சாப்பிடுவதுதான் கடைசிச் சாப்பாடு என்பதை உணரவில்லை. சாப்பிட்டு முடிந்ததும்—கோயிலுக்கெதிரே உள்ள மேடையில் நாங்கள் மூவரும் படுத்தோம். நடந்து வந்த களைப்பினுல் தூக்கமும் விரைவிலேயே வந்து எங்களை மயக்கத் துவங்கியது. சாமியார், தன் தோளிலே போட்டிருந்த நீண்ட பெரிய மூட்டையை கீழே இறக்கிவைத்துவிட்டு

எங்களுக்குப் பக்கத்தில் படுத்துக்கொண்டான். இரவு நேரத்திலே உலவக் கிளம்பும் தவளைகளின் சங்கீதமும், பறவைகளின் ஒலியும், வயற்பூச்சிகளின் ஒலியும் — பயங்கரமாகத்தானிருந்தன. நான் தங்கையை அணைத்தபடி படுத்துக்கொண்டேன். தங்கை பயப்படுகிறது என்பது மட்டும் எனக்குத் தெரிந்தது. "பயமா?" என்று கேட்டால் அதிகமாக பயப்படுமே என்று எண்ணி கேட்காமலே இருந்துவிட்டேன். 'பக்கத்திலே வேறு யாருடைய வீடாவது இருந்தால், அங்கு போய்ப் படுத்துத் தூங்கலாமே' என்று சாமியாரைக் கேட்டேன்.

"இந்த ஊர் பொல்லாத ஊரப்பா! — அங்கெல்லாம் போகவே கூடாது! — அதுவும் ராத்திரி நேரத்திலே மிக ஆபத்து" என்று சாமி பதில் சொன்னான். எவையெவைகளையோ எண்ணிக்கொண்டே தூங்கிவிட்டேன்.

நடுநிசியிருக்கும்—அப்போது திடுக்கென்று விழித்தேன். என் அணைப்பிலே தூங்கிக்கொண்டிருந்த தங்கையைக் காணவில்லை. அதிர்ச்சியடைந்து, தலையைத் தூக்கிப் பார்த்தேன். சாமியாரையும் காணவில்லை. எழுந்து உட்கார்ந்தேன். கூச்சலிடவேண்டும்போல் தோன்றியது. கூச்சலிட்டேன் — கூவினேன் — அலறினேன் — ஆனால் அந்தக் கூச்சலும், அலறலும் என் காதுக்கே கேட்கவில்லை. வாய் மட்டும் திறந்திருக்கிறதே தவிர, ஒலி எழும்பவில்லை என்று எனக்கே புரிந்தது. கண்களை இறுக மூடிக் கொண்டு என்னை நானே தைரியப்படுத்திக்கொண்டேன். பட படவென்று ஆடியது என் இளந் திரேகம். "டக் டக்!" என்று இருதயம் துடிப்பதை நான் நன்றாக கேட்க முடிந்தது. எழுந்துவிட்டேன். நின்றேனா, இல்லையா—என்று நிதானித்துக் கொண்டேன். ஒரு அடி எடுத்து வைத்தேன்; கண்களை அகல விரித்துப் பார்க்க முடிந்தது;

பார்த்தேன். ஒரு ஒலி கேட்டது; கவனித்தேன். "எழு வானுக்கும் தொழுவானுக்கும் இடையிலே—காக்கா மூக்கு நிழலிலே — பசும் பொன்! பசும் பொன்!! பசும் பொன்!!!" என்ற வார்த்தைகள் திரும்பத் திரும்ப ஒலித்துக்கொண் டிருந்தன.

அந்த அமைதியும், அதே நேரத்தில் பயங்கரமும் கலந்த இரவிலே, இதுபோன்ற ஒலியை, ஒரு இளைஞன் அனுதினமாக நின்றுகொண்டு, கேட்பதென்றால் முடிகிற காரியமா? மனதைத் தைரியப்படுத்திக்கொண்டேன். மெது வாக ஒலி வந்த பக்கம் போனேன்.

"தேவீ! உன் காணிக்கையை கொடுத்துவிட்டேன். இன்னுமா தாமதம்! நரபலி கொடுத்தும், இந்த நாயை சோதிக்கலாமா? — புதையல் வரட்டும்! புதையலைக் கொண்டுவந்து காட்டு! தாயே! தாயே!! எங்கே புதையல்? எங்கே புதையல்?" என்ற வார்த்தைகள் என்னைக் கலக் கின. கொஞ்சம் வேகமாக அடியெடுத்துவைத்தேன். ஒரு விளக்கு எரிந்தது. கூர்மையாகப் பார்த்தேன்." துரை, இப்போது கதையைத் தொடர முடியாமல் தத்தளித் தான். அவன் உதடுகள் நடுங்கின, கண்கள் குளமாயின. பரிமளாவின் மெல்லிய, பூப்போன்ற உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. அங்குமிங்கும் உலவியபடி துரையின் கதையினத்தையும் ஆழ்ந்த சிந்தனையுடன் கவனித்து வந்த மாயாண்டிக் கிழவர் அசைவற்று சிலைபோல நின் றார். துரை என்ன சொல்லப் போகிறான் என்பதை கிழ வரும், பரிமளாவும் ஆவலோடு, அதே நேரத்தில் அழு கின்ற நெஞ்சத்தோடும் எதிர்பார்த்தார்கள். துரை தொடர்ந்தான்.

"மங்கலான விளக்கு ஒளிக்குப் பக்கத்திலே சாமியார் உட்கார்ந்திருந்தான். அவன் கையிலே ஒரு ரத்தம்

தோய்ந்த அரிவாள் இருந்தது. அந்த அரிவாளைத்தான் அவன் அந்த பெரிய மூட்டையில் ஒளித்திருந்தான் போலும் — ஆனது ஆகிவிட்டது இனி என்ன? என்ற முடிவோடு, சாமியாரின் பின்னே சென்று இன்னும் கவனமாகப் பார்த்தேன். என் தங்கையின் உடல் இரண்டு துண்டுகளாகக் கிடந்தன. தங்கத்தின் தலை வேறு, முண்டம் வேறுக, ரத்தம் சொட்டியபடி கிடந்த காட்சியை நான் கண்டேன். அருமைமிகு தங்கையின் அழகோவியம் இப்படி அலங்கோலமாக்கப்பட்டுக் கிடப்பதை எந்த அண்ணனுல்தான் சகிக்க முடியும்? கத்தினேன் — முன்போலவே வாய் அடைத்துக்கொண்டது; கண்கள் மங்கிவிட்டன; ஒரு அடி கூட எடுத்துவைக்க முடியவில்லை.

அம்மா, சீவிச்சீவி சிங்காரிப்பார்களே; அந்தத் தலை வெட்டுண்டு கிடந்தது. பாட்டியின் முத்தங்களைப் பெற்றுப் பெற்று சிவந்துபோகும் அந்த ரோஜாக் கன்னங்கள், அழகு விழிகள், அது காட்டும் குறும்புப் பார்வை — எல்லாமே — ஆமாம் என் தங்கையே — என் செல்வப் பேழையே—நொறுக்கப்பட்டுவிட்டது. முன்னேக்கி நடப்பதாக எண்ணிக்கொண்டே, பின்னல் வெகுதூரம் வந்து ஒரு மரத்தில் மோதிக்கொண்டேன். அப்போதுதான் எனக்கு நினைவு வந்தது. நின்றபடி யோசித்தேன். இனி தங்கை பிழைக்க முடியாது — துண்டாகிவிட்டது — மேற்கொண்டு என்ன செய்யலாம்; இந்தத் துரோகியை எப்படித் தண்டிக்கலாம் என்று யோசித்துக்கொண்டேயிருந்தேன். "சரி! இவனையும் இதே இடத்தில் வெட்டிச் சாய்ப்பது!" என்ற முடிவோடு அவன் பக்கம் நடந்து வந்தேன். அப்போது அவன், அங்குள்ள ஒரு குழியில் தங்கையின் சிதைந்த உடல்களைப் போட்டு, மண்ணால் மூடிக்கொண்டிருந்தான்.

தங்கைக்கு இறுதிச் சடங்கு நடைபெறும் காட்சியை அண்ணன் பார்த்துக்கொண்டே நின்றேன். இனி என்ன; நான் மட்டுமே மிச்சம்!—அவனைத் தொலைக்கவேண்டும்—முடியாவிட்டால் அவனைத் தொலைக்கும் முயற்சியிலேயே சாக வேண்டும் என்ற முடிவோடு, அவனருகே பூனை போல நடந்துவந்தேன். அவன், தங்கையை நன்றாகப் புதைத்துவிட்டு, தன் எதிரிலே வைத்திருந்த ஒரு காளி சிலையோ, அல்லது வேறு ஒரு பயங்கரமான சிலையோ, சரியாகத் தெரியவில்லை — அதன் முகத்தில் காரித் துப்பினான் — "அடி சண்டாளி! உன்னை நம்பி, நீ புதையலைக் காட்டுவாய் என நம்பி, நரபலிக்கு அலைந்து திரிந்து, கொண்டுவந்தேனே — நீ ஏமாற்றி விட்டாயே!" என்று அந்த சிலையைக் கீழே போட்டு காலால் உதைத்தான். "புதையல், எங்கே புதையல்?" என்று கத்திக் கொண்டே சிலையைத் தூளாக்கினான். அவன் கவனமெல்லாம் சிலையின்மீது திரும்பியிருந்த அந்த நேரமாகப் பார்த்து நான் அவனிடம் ஓடி அங்கிருந்த கொடிய அரிவாளைத் தூக்கினேன். சாமியார் திடுக்கிட்டான். ஓடினான்; நான் துரத்தினேன். ஒரே வெட்டு! அவனைத் தொலைத்து விடலாமென்று துடித்தேன்!

ஓடிக்கொண்டிருந்த சாமியார், அய்யோ என்று அலறினான். அதற்குள் நான் அவனிடம் போய்விட்டேன். அவன் என் அரிவாளுக்குத் தப்பி, அங்குள்ள பாழும் கிணற்றில் கால் தவறி விழுந்துவிட்டான். கிணற்றுமேல் நின்றுகொண்டு, உற்று நோக்கினேன். சப்தம் வருகிறதா என்று கவனித்தேன். "ஐயோ! ஐயோ!" என்று முனகல் கேட்டது.

பிறகு, அதுவுமில்லை. வெளியே இருந்த பெரும் பெரும் கற்களைத் தூக்கி கிணற்றுக்குள்ளே போட்டேன்.

பிறகு, என் தங்கை புதைக்கப்பட்ட இடத்திற்கு வந்தேன். அழுதேன்—அந்த மண்ணை முத்தமிட்டேன். புதையுண்ட என் கண்மணியை மீண்டும் தோண்டி எடுக்க விரும்பவில்லை. அரிவாளில் ஒட்டிக்கொண்டிருந்த என் தங்கையின் ரத்தத்தை முத்தமிட்டேன். கண்களில் ஒத்திக் கொண்டேன். பிறகு அந்த அரிவாளையும், சாமியார் விழுந்து கிடந்த கிணற்றுக்குள் போட்டேன்.

அதன் பின் நான் அங்கே நிற்கவில்லை—கால் போன பக்கம் நடந்தேன்.”

21

“சாகக் கூடிய வயதல்ல — ஆனாலும் அம்மா சாகடிக்கப்பட்டார்கள் — சருகாக மாறியும் சலியாது உழைத்த பாட்டியை சாவு அழைத்துக்கொண்டது.

தந்தையோ சிறைச்சாலையில் வாடுகிறார் என்பது மட்டும் தெரியும் — எங்கே, எப்படி? அது தெரியாது. அன்புக்குத் துணை—ஒரே ஒரு அருமைத் தங்கை—அதையும் அந்த எருமை மனிதன், புதையலுக்கு எருவாகப் போட்டுவிட்டுப் போய்விட்டான். உலகம் மட்டுமல்ல, என்னுடைய எதிர்காலமே இருள் மூடிக் கிடப்பதாகத் தோன்றியது.

நடு நிசி — ‘எங்கே போகிறாய்?’ என்று என்னையே நான் கேட்டுக்கொண்டேன். கேட்கத்தான் முடிந்ததே தவிர, பதில் சொல்ல முடியவில்லை. மழை வரப்போவதை அறிவிக்க இருட்டிலே கத்திக்கொண்டிருந்த கிருட்டிகளுக்குக்கூட ஒரு லட்சியம் இருந்திருக்கும் — அதுகூட

இல்லே எனக்கு. வானம் வேறு உறுமி ஆரம்பித்தது. இருளின் கனம் அதிகமாகிக்கொண்டே வந்தது. லேசான மழைத் தூறல்கள் — ஆகா! அந்த சமயத்தில் எனக்கு எப்படியிருந்தது தெரியுமா? மழைத் துளிகள் என் முகத்திலே பட்டுத் தெறித்துச் சிதறுவதும் — என் ஆடைகள் மெல்ல மெல்ல ஈரமேறுவதும் — ஏதோ ஒரு விதமான விரக்தி மனப்பான்மையை அளித்தது.

நானும் தங்கையும் மழையைக் கண்டாலே மயில் போலக் குதிப்போம் முன்பெல்லாம். மழைத் துளிகளிலே நிற்பதைவிட ஆனந்தம் வேறு இல்லே என்று எண்ணுவோம். 'உடம்புக்கு ஆகாது; உள்ளே வாங்க' என்று பாட்டி அன்பாகக் கோபிக்கிற வரையிலே மழையிலே நனைந்துகொண்டு ஆடுவோம்; பாடுவோம். வீட்டுக்குள்ளே வந்துவிட்டால்கூட, திண்ணையிலே அமர்ந்து மழையை ரசிப்போம். தெருவிலே சிறு சிறு வாய்க்கால்கள் போல நெளிந்தோடும் மழைத் தண்ணீரிலே நாங்கள் மிதக்க விட்டிருக்கிற காகிதப் படகுகள் எவ்வளவு? கம்பீரமாக மிதந்து செல்லும் எங்கள் படகுகளின்மீது மழைத் துளிகள் படுவதும், பின்னர் அவை ஈரத்தால் கனத்து உருவிழந்து பழைய காகித உருவிலேயே நீரில் கரைவதும் — அதற்காக நானும் தங்கையும் 'உச்சு' கொட்டி அனுதாபம் தெரிவிப்பதும் — இன்றல்ல; என்றும் மறக்கமுடியாத நிகழ்ச்சிகள். அப்படியெல்லாம் மழையை ஒரு விருந்தாகக் கருதிய நான் தான், அந்த நடு நிசி வேளையிலே தூறல் கண்டு துடித்துப் போனேன்.

நானும் தங்கையும் அன்று பேபாட்டி போட்டுக் கொண்டு காகிதப் படகுகள் விட்டோம். என் படகு முதலில் கவிழ்ந்துவிட்டது — அப்போது தங்கை எப்படிக் கூத்தாடியது தெரியுமா? அது கூத்தாடிக்கொண்டிருக்கும்

போதே திடுக்கென நின்றுவிட்டது. நான் தெருவைப் பார்க்காமலே, தங்கையின் முகத்தைப் பார்த்து, அதன் படகும் கவிழ்ந்துவிட்டது என்று தெளிவாகச் சொன் னேன். இப்போது — காகிதப் படகல்ல — என் தங்கப் படகு, எனக்கு முன்பே கவிழ்ந்துவிட்டது. நான் நடந்து கொண்டிருக்கிறேன்; என் மீதும் மழைத் துளிகள் வேக மாக விழுகின்றன; இந்த அளைதப் படகு, எப்போது கவிழுமோ தெரியாது — எண்ண அலைகள் மோதி மோதி இருதயக் கரைகள் அனைத்தும் சிதைந்துபோய்விடுகிலையிலே கால் காட்டும் வழியிலே போய்க்கொண்டிருந்தேன். பயங் கரமான மின்னல்கள்—உள்ளத்தை உலுக்கும் இடி முழக் கங்கள் — பெருமழை — பேய்க் காற்று! ஒண்டுவதற்கு இடமில்லை. வெகுதூரம் வரையில் மரம் மட்டைகளும் கிடையாது — வயல் வெளி வரப்பின் மீது அசைவற்று நின்றுகொண்டிருந்தேன். இயற்கை அன்னை எனக்கு தலை முழுக்காட்டிக் கொண்டிருந்தாள். தங்கையின் சாவுக் குத் தலை முழுக வேண்டுமல்லவா? — அதை நிறைவேற் றிடுவதாக எண்ணிக்கொண்டே நின்றேன். நீர் வீழ்ச்சி யின் கீழே நிற்பதுபோல இருந்தது; அவ்வளவு கனத்த மழை! அந்த மழையை என்னோடு சேர்ந்து ரசிக்க என் தங்கையில்லை. அது மண்ணுக்கு அடியிலே ஆழ்ந்த உறக்கத்திலிருக்கிறது.

விடியற்காலை வரையிலே மழை நிற்கவில்லை. அதன் பிறகு கொஞ்சம் கருணை காட்டியது வானம் — கிழக்கு வெளுக்க ஆரம்பித்தது. கண்ணை அகல விழித்துப் பார்த்தேன். எனக்கு எதிரே சிறிது தூரத்திலே ஒரு கட்டிடம் தெரிந்தது — இரவெல்லாம் அதன் பக்கத்தி லேயே நின்றிருக்கிறேன்; ஆனல் அந்த இடம் என் கண் ணுக்குத் தெரியவில்லை. அவ்வளவு இருட்டு! அந்தப்

பாதகச் சாமியார் சொன்னானே; அந்த நாடியம் மடாலயம் தான் அந்தக் கட்டிடம். அது இருளிலே மூழ்கியிருந்த காரணத்தால் எனக்குத் தெரியவில்லை. மடங்களையே பொதுவாக இருள் கப்பிக்கொண்டிருப்பதால்தான் ஆதர வற்றோருக்கு அது ஒளி வழங்குவதில்லை என்று சொல் வது இயற்கையிலேயே என் விஷயத்தில் உண்மையாகத் தான் போய்விட்டது. மடத்தை நோக்கி நடந்தேன். மடத் தின் எதிரே பெரியதொரு அரச மரம் வானுற ஓங்கி நின் றது. அதன் உச்சியிலே பறந்துகொண்டிருந்த அன்ன தானக் காவிக் கொடி, மழையிலே நனைந்தும், கிழிந்தும், தலையைத் தொங்கப்போட்டுக்கொண்டு சுருண்டு கிடந் தது. மடத்து வாசலில் ஒதுங்கினேன். எனக்கு முன்னே, உள்ளூர் ஆடு மாடுகள் சில அங்கே ஒதுங்கியிருந்தன. முதுகெல்லாம் புண்ணுள்ள கழுதைகள் இரண்டு மூன்று அங்கே ஒதுங்கி நின்றன. சாணமும், ஆட்டுப் புழுக்கை களும் நிறைந்திருந்த அந்த இடத்திலே கைகளைக் கட்டிக் கொண்டு குளிரை அடக்கியபடி ஒண்டிக் கொண்டேன். காலைக் கதிரவனின் ஒளி அரும்பிற்று. இரவு முழுதும் பட்ட கஷ்டத்தில் "அப்பாடா" என்று பெருமூச்சு விட்ட படி, அப்படியே உட்கார்ந்த நிலையில் சிறிது கண்ணயர்ந் தேன். யாரோ என் முதுகில் தட்டி எழுப்பினார்கள். வாரிச் சுருட்டி எழுந்தேன். புரியாத பாஷையில் பேசினான் அவன். வடநாட்டு ஆள்போலத் தோன்றினான். நாடியத் திலுள்ள மடாலயம், வடநாட்டு சாமியார்களுக்குச் சொந்த மல்லவா; அதைச் சேர்ந்த ஆள்போலும் அவன்.

"அய்யா — உடம்பெல்லாம் நடுங்குது — கொஞ்சம் தூங்க விடு" என்றேன்.

முரட்டுத் தனமாக ஏதோ பதில் சொன்னான். என் தலையிலும் ஒரு குட்டு வைத்தான்.

அவன் பாஷை புரிய வேண்டிய அவசியமென்ன எனக்கு? இருதயம் புரிந்துவிட்டது. அது எத்தகைய பண்புடையது என்பதை என் தலையில் ஏற்பட்ட வேதனை எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தது. மடாலயத்திலிருந்து வெளியேறினேன். எதிரே மரத்தில் தொங்கும் அன்னதானக் கொடியைப் பார்த்தபடி — எனக்குள்ளாகவே சிரித்துக்கொண்டு நடந்தேன். பசியின் கொடுமையும் ஆரம்பமாகிவிட்டது. நாடியத்திலே உள்ள வீடுகளில் எல்லாம் சோறு கேட்டேன். வீட்டுக்குக் கொஞ்சம் கிடைத்தது. சாப்பிட்டேன். மிச்சங்கூட ஆகிவிட்டது. அதைக் கீழே எறியவில்லை. சட்டையைக் கழற்றி, அதிலே கொஞ்சம் பூவரசு இலைகளைப் பரப்பி, மீதிச் சோற்றைக் கொட்டி, நன்றாக முடிந்து வைத்துக் கொண்டேன், இரவுக்குத் தேவைப்படுமேயென்று!

மறுநாள் போராவூரணிப் பிரயாணம் — கிராமாந்திர மக்கள் அன்புள்ளங் கொண்டவர்கள் என்பதற்கு எடுத்துக்காட்டு போராவூரணி. சாப்பாட்டுக்கு சிறிது முன் போய்ப் பிச்சைக் கேட்டால், "இன்னும் சாப்பாடு ஆகவில்லை" என்பதும், சாப்பிட்ட பிறகு போய்க் கேட்டால், "சாப்பாடெல்லாம் ஆகிவிட்டது!" என்பதும், சாப்பிடுகிற நேரம் பார்த்துப் போனால், "சாப்பிடும்போது வந்திருக்கிறாயே—பிறகு வா!" என்பதும் பிச்சைக்காரர்களுக்காக வீட்டுக்காரர்கள் தயாரித்து வைத்திருக்கிற பல்லவியாகும். அந்தப் பல்லவியை நான் போராவூரணியிலே கேட்கவில்லை. "என்ன, பரம்பரைப் பரதேசி போலப் பேசுகிறாயே!" என்று கேட்கிறீர்களா? ஏறத்தாழ ஆறு மாத காலம் பிச்சைக்கார வாழ்க்கையை நடத்தியதில் ஏற்பட்ட அனுபவமாக்கும் இது! அடைக்கலமென்று வந்தவர்களை குழந்தை போலப் பாதுகாக்கும் அன்பு நெறி வளர்க்கும் போராவூரணியில் அதிக நாள் இருக்கவில்லை நான். "ஏதாவது வேலை

பாரப்பா — கூலி நிறைய கிடைக்கும்" என்று பரிவோடு பேசும் பலரை நான் அங்கு சந்திக்க வேண்டியதாயிற்று. வேலை பார்க்கக்கூடாது என்ற சோம்பேறித்தனமில்லை எனக்கு. எதிலுமே புத்தி செல்லவில்லை. ஒருவேளை, பைத்யமாகிவிட்டோமோ என்று நானே சந்தேகப்பட்டுக் கொள்வேன். வேலையை ஒழுங்காகச் செய்ய முடியும் என்ற நம்பிக்கை பிறக்கவில்லை. அதனல் போராவூரணியைவிட்டு இரவோடு இரவாகப் புறப்பட்டேன்.

'வேலை பாரேன்' என்ற அன்புத் தொல்லை ஒழிந்தது. மருங்கப்பள்ளம் வந்தேன். மாதங்கள் பல ஓடிவிட்டன, என் தங்கையின் கல்லறையைப் பார்த்து! அதிலே கண்ணீர் சிந்த ஆசை கொண்டேன். கோயில் பக்கம் சென்றேன் — தங்கை புதைக்கப்பட்ட இடத்திலே அமர்ந்து ஆசை தீர அழுதேன். தங்கையின் உடலுக்குப் போர்வையாக அமைந்த மண்ணைக் கண்ணீரால் நனைத்து முத்தமிட்டேன். மீண்டும் மழை வந்துவிட்டது. நான் எதிர் பார்த்ததுபோல் பெருமழை. என் கந்தல் சட்டையின் கிழிந்த பைகளிலே நிரப்பி வைத்திருந்த காகிதங்களை எடுத்துக் கப்பல் செய்தேன். என் பெயரில் ஒன்று — என் தங்கையின் பெயரில் ஒன்று — இரண்டு கப்பல்களையும் மழை நீரில் மிதக்க விட்டேன். கப்பல்கள் போவதைப் பார்த்துக் குதித்துக் கூத்தாடினேன்—சிரித்தேன்—அழுதேன். பிறகு, அந்த இடத்தை விட்டு ஊர்ப் பக்கம் ஓடினேன். ஒரு வீட்டுத் திண்ணையிலே படுத்தேன். வீட்டுக்காரர் ஒரு முரடர். முன்கோபக்காரர். என்னை விரட்டினர். "என்னய்யா — இந்தப் பக்கத்திலே நீர் ஒருத்தர்தான் மோசமானவராயிருக்கிறீர்" என்று எதிர்த்துப் பேசிவிட்டேன். அவ்வளவுதான் — ஒரே அடி — தடிக் கம்பினால் என் மண்டையிலே போட்டார். ரத்தம் வழிந்தோடியது. ஒரு தாழங் குடையை எடுத்துக்கொண்டு அவர் வெளியே

அலுவலாகப் போய்விட்டார். ஓடுவதுபோல வீட்டை விட்டு குதித்த நானும், ஓட முடியாமல் தத்தளித்தேன்— அப்போது அந்த முரடருடைய வீட்டிலேயிருந்து, ஒரு சின்னப் பெண்—எட்டு ஒன்பது வயதிருக்கும்—ஓடிவந்து என்னை வீட்டுக்கு அழைத்துப் போய், அதன் அம்மாவை வெட்டுக் காயத்திற்கு மருந்தெல்லாம் போடச் சொல்லி, சாப்பாடும் கொடுத்தது. சாப்பிட்டுக்கொண்டிருக்கும் போது அதன் அப்பா வந்துவிட்டார். அந்த அம்மாமீது பாய்ந்தார். "ஏன் இந்தப் பிச்சைக்காரப் பயலை உள்ளே விட்டாய்?" என்று!

"இல்லை—பாப்பா தான் அழைச்சிகிட்டு வந்தாள்!" என்று அந்த அம்மா பெண் குழந்தையின் மீது பழியைப் போட்டார்கள்.

"பெண்ணு அழைச்சிகிட்டு வந்ததோ; பெண்ணு! உனக்கு வீட்டுக்கு மருமகனு — மாப்பிள்ளையா — உள்ளே வச்சி, உபசாரத்தோட சோறு போடுகிறுயா?" என்று ஓங்கி அறைந்தார் மனைவியை. அந்தச் சின்னப் பெண்ணுக்கும் ஒரு அடி; முதுகில் 'பளார்' என்று விழுந்தது. "வீட்டுக்கு மருமகனு, மாப்பிள்ளையா?" என்று கேட்டாரே, அவர் வீட்டுக்கே நான் மருமகனாகி விடுவேன் என்று எனக்கு அப்போது தெரியாது—".

துரை, கதையில் சிறிது தொய்வை ஏற்படுத்திவிட்டு பரிமளத்தைப் பார்த்தான். அவள் முகத்தில் புதிய ஒளி வீசியது. ஆவலோடு, அவனையே பார்த்தாள் — கிழவர் பிணம்போல அசைவற்று இருந்தார்.

துரை துவங்கினான் மீண்டும்!

"இன்னும் பரிமளத்திடமே நான் சொல்லவில்லை அந்த ரகசியத்தை. எனக்கு ஆதரவு கொடுத்து—ஆகா

ரமும் அளித்து — அப்பாவிடம் அடியும் வாங்கிய, அந்தச் சிறுமிதான், பரிமளா!" என்றான் துரை.

பரிமளாவின் உள்ளம் பூரிப்பால் வீங்கியது. கிழவர் மட்டும் அங்கேயில்லாமல் இருந்திருந்தால், "அத்தான்" என்று முத்துதிர்த்து அவன் மீது தாவியிருப்பாள். அவள் விழிகள் ஆனந்தக் கண்ணீர் பெருக்கின.

"பாவம்; எட்டு வயது சிறுமி அப்போது! ஏழெட்டு வருடம் கழித்த பிறகே எங்களிடையே காதல் தோன்றியது. பரிமளாவினுல் அப்போது என்னை அடையாளங் கண்டுபிடிப்பது கஷ்டம்தானே! பரிமளாவின் தந்தையால் நான் விரட்டப்பட்டுங் கூட, மருங்கப்பள்ளத்தை விட்டு நான் உடனே போகவில்லை. என் தங்கையின் கல்லறையும், பரிமளாவின் சந்திப்பும், எனக்கு சிறிது ஆறுதலாயிருந்தன. திருட்டுத்தனமாக சோறு கொண்டு வந்து தருவாள் பரிமளா. அதைச் சாப்பிட்டபின் இருவருமாக விளையாடுவோம். இப்படி ஒரு மாதம் — பரிமளாவும் என்னை விட்டுப் பிரிய நேர்ந்தது. பட்டுக்கோட்டையிலே உறவினர் வீட்டுக்கு சென்று, அங்கிருந்தபடி படிப்பதற்கு அவள் அப்பா ஏற்பாடு செய்து விட்டார். பரிமளாவுக்கு அந்த நிகழ்ச்சிகள் எதுவும் இப்போது சரியாக ஞாபகமிருக்க முடியாது — சிறுமிதானே அப்போது!

எப்படியோ, அந்தச் சிறுமியின் பெரிய உள்ளத்தின் மீது, இந்தப் பிச்சைக்கார இளைஞனுக்கு ஆசை விழுந்து விட்டது. அந்தப் பிஞ்சு உள்ளத்திலே எத்துணை பெரிய அன்புக் கோயில் கட்டப்பட்டிருக்கிறது. அந்தக் கோயிலிலே அனைதயான எனக்கும் இடம் அமைக்கப்பட்டிருக்கிறது என்று எண்ணி ஆறுதல் பெறுவேன். "பரிமளா, என்னிடமிருந்து பிரிக்கப்பட்டதாக. உணர்ந்தேன். வாழ்வைப் பற்றிக் கவலைப்படாமல், வேலை வெட்டி வேண்டா

மென்று ஊதாரிச் சிறுவனுய் அலைந்து கொண்டிருந்த நான், எதிர்காலத்தைப் பற்றிக் கவலைப்பட ஆரம்பித்தேன். ஆம்; பரிமளாவை நினைத்துக்கொண்டுதான்!— அவள் தகப்பனுர் கேட்டாரே, "வீட்டுக்கு மருமகன்" என்று; அதைப் பூர்த்தி செய்யத்தான். பரிமளா பட்டுக் கோட்டை போய்விட்டாள். என் வாழ்வை நேர் படுத்திக் கொண்டு அதன் பிறகு அவளை சந்திப்பது என்று முடிவு கட்டினேன். அப்படித்தான் அவளை சந்தித்தேன்; ஏழெட்டு வருடங்களுக்குப் பிறகு!

அப்போது என்னைப் பரிமளா மறந்து விட்டாள். நானும் அவளிடம் புதியவனுகவே பழகினேன். "என்ன பரிமளா! சரிதானே?" என்றுன் துரை. பரிமளாவுக்கு ஒன்றுமே புரியவில்லை. "அத்தான்" என்று கத்தி விட்டாள்! கிழவர் இப்போதும் ஒன்றும் பேசவில்லை.

"பரிமளா, படிக்கச் சென்ற பிறகு வேலை தேடிப் புறப்பட்டேன். பழையபடி போாவூரணி போகலாமா என எண்ணினேன். அங்கு தரப்படும் வேலை பரிமளாவை சந்தித்து அவளுக்குக் கணவனுக ஆகக் கூடிய தகுதியை அளிக்காதா — எனக் கருதி வேறு ஊர்களில் அலைந்தேன். இந்தச் சமயத்திலேதான் நான் மிகவும் தொல்லைப் பட்டேன். பல நாள் பட்டினி — மயக்கம் — சோர்வு — இப்படி வாடி உலர்ந்தேன். ஏதோ ஒரு ஊர். அங்கே கோயிலில் திருவிழா. அந்த ஊரின் பெயர் ராஜாமடம் என்று நினைக்கிறேன். அன்று, பகல் முழுதும் அலைந்தேன். ஒரு பருக்கை சோறு கிடைக்கவில்லை. எல்லோரும் கோயிலுக்குச் சென்று திருவிழாவைக் காண்பதிலேயும் — ஆண்டவனைத் தொழுவதிலேயும் அக்கறை காட்டினர். பசி தாங்கவே முடியவில்லை. தெருவில் தள்ளாடி நடந்து கொண்டிருந்தேன். ஒரு பெருமாள் கோவில்

வாசல்—"கடவுளே! உனக்குக்கண்ணில்லையா?" என்று கதறினேன். கண்கள் சுழன்றன எனக்கு. அவ்வளவு தான்; விழுந்து விட்டேன். பிறகு எனக்கு எதுவுமே தெரியாது.

"பக்தா! எழுந்திரு!" என்ற குரல் கேட்டது—மெதுவாகக் கண்களை விழித்துப் பார்த்தேன்.

சிறிது தூரத்திலே ஒரு பச்சை நிற ஜோதி தெரிந்தது. "எழுந்திரு பக்தா!" என்ற குரல் மீண்டும் கேட்டது. மகாவிஷ்ணு சங்கு சக்கரங்களோடு நின்று கொண்டிருந்தார். திடுக்கிட்டு எழுந்தேன்—"பகவானே! கடவுளே! என்னைக் காப்பாற்று" என்று அவர் முன்பாக ஓடினேன்.

22

"என்ன, மகாவிஷ்ணு தோன்றினாரா? உண்மையாகவா?" என்று ஆவலோடு கேட்டாள் பரிமளா.

"உண்மையாகத்தான்—அவர் நின்று கொண்டிருந்த திசை நோக்கி ஓடினேன். நான் ஓட ஓட அவரும் தொலைவில் போவதாகத் தெரிந்தது—நான் விடவில்லை—எதிரேயிருக்கிறது என்ன, ஏது என்பதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் அவரிடமே ஓடிவிட்டேன்." பரிமளாவுக்கு சிரிப்பை அடக்க முடியவில்லை.

"புதிய புராணமாயிருக்கிறதே இது! பசியால் ஒரு இளைஞன் துடித்ததைக் கண்டு பகவான் ஓடோடியும் வந்தார் என்று இப்போதுதான் கேள்விப்படுகிறேன்."

"இது ஒன்றும் புதிதல்லவே, பரிமளா! சிற்றன்னைக் கொடுமையால் சீரழிந்த துருவனுக்கு சங்கு சக்கரத்தோடு காட்சி தந்தார் என்று படிக்கவில்லையா? பிரகலாதன் என்ற இளைஞன் விஷ்ணுவின் அருளால், பிராணபத்துக்கள் பலவற்றிலேயிருந்து மீண்டான் என்று கதை கேட்டதில்லையா? பதினாறு ஆண்டுடைய மார்க்கண்டேயன் திருக்கடவூரிலே தெய்வத்தின் அருளால் எமனை வென்றான் என்று புராணம் கூறுகிறதே!"

"புராணம் கூறும் கதை கேட்டிருக்கிறேன்; படித்திருக்கிறேரும். ஆனல் உங்களைப்போல துன்பத்தில் சிக்கிய உண்மைத் 'துருவன்'களுக்கு எதிரே என்னப்பன் தோன்றி கருணை மழை கொட்டினர் என்பதை கண்ணால் கண்டதுமில்லை; கண்டவர் சொல்லிக் கேட்டதுமில்லை."

"நான் கண்ணால் கண்டேன்; விஷ்ணுமூர்த்தி துருவனுக்கு அபயங் கொடுத்ததை நான் கண்ணால் கண்டேன். விஷ்ணுமூர்த்தி மட்டும் இல்லாவிட்டால் இந்தத் துரை இவ்வளவு நாள் உயிரோடிருந்திருக்க முடியுமா?"

"என்ன சொல்லுகிறீர்கள்?"

"கொஞ்சம் பொறுமையாகக் கேளேன் பரிமளம்! இதோ, பெரியவர் எவ்வளவு அமைதியாகவும் நிதானமாகவும் கதை கேட்கிறார். நீயும் அதைப் போலக் கேளேன்!"

"ம்; சொல்லுங்கள்."

"விஷ்ணுவிடம் ஓடினேனு? பசியால் ஏற்பட்டிருந்த மயக்கமும் களைப்பும் கூட மறந்து போய்விட்டது — அவ்வளவு வேகமாக ஓடினேன். விஷ்ணுவிடம் தாவிப் பாய்ந்தேன். சங்கு சக்ராயுதபாணியாக, நீலமேக சாமள வர்ணத்தோடு, மகாவிஷ்ணு நின்றார். அங்கே என்னைப்

போலவே ஒருவன் அவருக்கெதிரே நின்று கொண்டிருந் தான்.”

“அது யார்?”

“அவன் தான் துருவன்!”

“துருவனு?”

“பரிமளா! — நான் ஏதோ பசி மயக்கத்தில் தூங்கி, அந்தத் தூக்கத்தில் இப்படி ஒரு புராணக் கனவு கண்ட தாகச் சொல்லி உன்னை ஏமாற்றப் போகிறேன் என்று எண்ணுகிறாயா? இல்லை பரிமளா; இல்லை — இது நிச்சய மாகக் கனவு இல்லை — கண்ணெதிரே நடந்ததுதான்!”

“சரி — தொடருங்கள்”

“மகா விஷ்ணுவின் காலைப் பிடித்துக்கொண்டேன். உடனே பெரிய சப்தம்—”

“சப்தமா? என்ன சப்தம்?”

“ஜனங்கள் கூச்சல் போட்டார்கள்!”

“ஜனங்கள் ஏது? வைகுண்ட வாசிகளா?”

“கேள் பரிமளா! — சப்தம் கேட்டது — என் கண் களைக் கசக்கிக் கொண்டு, மனைசக் கொஞ்சம் நிதானப் படுத்திக் கொண்டேன்.”

“அதாவது விழித்துக் கொண்டீர்கள்!”

“இல்லை — ஒன்றும் புரியாமல் விழித்தேன் — “அய்யோ” என்று அலறிக் கொண்டு துருவன் ஓடிவிட் டான். விஷ்ணுவும் திகைத்துப்போய் நின்றான். ஜனங் கள் என் பக்கம் ஓடி வந்தார்கள். ஒரே ரகளை—குழப்பம்!”

“பிறகு?”

"பிறகென்ன? எனக்கும் ஜனங்களுக்குமிடையே ஒரு திரை விழுந்தது. மகா விஷ்ணு என்னை ஆத்திரத்தோடு பார்த்து, "யாரடா நீ?" என்று கேட்டார். "விஷயம் புரியாமல்..." என்று ஏதோ சொல்ல வாயெடுத்தேன்..... அதற்குள் அவர் என்னைப் பரபரவென்று இழுத்துக் கொண்டு ஓடினர்."

"எங்கே?..."

"மேக் அப் பண்ணுகிற இடத்துக்கு!"

"ஓகோ—நாடகமா?" — பரிமளா சிரித்தாள்.

"இல்லை பரிமளா! தெருக் கூத்து!" என்றான் துரை.

"ம் — அப்புறம் என்ன நடந்தது?"

"என்ன நடக்கும்? உண்மையான விஷ்ணுமூர்த்தியின் காலில் விழுந்தேன்."

"மறுபடியும் சிக்கல் உண்டாக்குகிறீர்களா?"

"இல்லை — உண்மையான விஷ்ணுமூர்த்தி என்பவர் அந்த நாடகக் கம்பெனியின் முதலாளி. அவரது துருவன் நாடகம், அந்த ஊர் திருவிழாவுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அன்றைய தினம் முன்னிரவில் பசியால் மெலிந்த நான், களைப்புற்று தெருக் கோடியிலே படுத்துத் தூங்கிவிட்டேன். விழித்தபோது நாடகம் நடந்து கொண்டிருக்கிறது — துருவனுக்கு மகா விஷ்ணு காட்சி கொடுக்கும் கட்டம் — அதிலே தான் நம்ப கலாட்டா! பாலப் பருவத்தின் அறியாமையும், பசியின் கொடுமை தந்த மயக்கமும் சேர்ந்து என்னைக் குழப்பிவிட்ட காரணத்தால், விஷ்ணு வேடத்தைக் கடவுள் தோற்றம் எனக் கருதி ஏமாந்து விட்டேன். கூடியிருந்த ஜனங்களை மிதித்துக் கொண்டு, மேடையிலே பாய்ந்து, துருவனை விரட்டி, விஷ்ணு வேடதாரியின் மனைதயும் துளைத்து, இவ்வளவு கலவரம் செய்த என்னை

சும்மா விடுவார்களா? முதலாளி விஷ்ணுமூர்த்தியிடம் கொண்டுபோய் விட்டார்கள். அவர் பெயர் தான் விஷ்ணு மூர்த்தியே தவிர, இரணியனைப் போல இருந்தார் முறுக்கிய மீசையோடு! வயதானவர் — வாலிபத்திலே அரிச்சந்திரா நாடகத்தில் சந்திரமதி வேஷம் போட்டுக்கொண்டு, மயான காண்ட சீனை நடித்தாரேயானால், ஊரே அழுமாம்! — நந்தனார் கதையிலே வேதியர் பாத்திரம் தாங்குவாராம்; "மாடு தின்னும் புலையா! உனக்கு மார்கழித் திருநாளா?" என்ற பாட்டை அபாரமாகப் பாடுவாராம். ஒரு நாள் கொஞ்சம் தண்ணீர் போட்டுக்கொண்டு, வேதியர் வேஷம் நடித்தாராம்; அதாவது ஒரு குடுக்கை பால் சாப்பிட்டாராம்—அவ்வளவு தான்; அன்று பாட்டு அபாரமாம்! "மாடு தின்னும் புலையா — உனக்கு மார்கழித் திருநாளா?" என்று பாட வேண்டிய வேதியர், "புல்லைத் தின்னும் மாடா! உனக்கு மார்திரு கழிநாளா?" என்று பாடினாராம். நல்ல வேளை, அந்தக் கிராமாந்திர ஜனங்களும் பாதிக்கு மேல் நீரில் மிதந்தவர்கள். அதனல் விஷ்ணுமூர்த்தி தப்பித்தாராம். இப்படியெல்லாம், அந்த முதலாளியைப் பற்றிய பல கதைகள் உண்டு.

அவரிடம் கொண்டு போய் என்னை நிறுத்தினர்கள். ஆள், பார்வைக்குப் பயங்கரமாக இருந்தாலும், இளகிய இருதயம் படைத்தவர். நான் என்னுடைய நிலைமையை அவரிடம் விளக்கிச் சொல்லி அவரது காலைப் பிடித்துக் கொண்டு அழுதேன். விஷ்ணு வேடம் போட்டவன் மட்டும், என்னை மன்னிக்கத் தயாராயில்லை. ஏனென்றால், அவனுக்கு அந்த நாடகத்தில் ஒரே ஒரு சீன் தான்! அதை நான் கலாட்டா செய்து கெடுத்து விட்டேனும்; அதனல்! முதலாளி விஷ்ணுமூர்த்தி என்னை மன்னித்ததோடு, அந்தக் கம்பெனியிலேயே வேலைக்கும் சேர்த்துக் கொண்டார். முதலில் நாடக மணி அடிக்கும் வேலை எனக்கு. பிறகு சீன்

இழுக்கும் வேலை கிடைத்தது. அந்த வேலையிலிருந்து நான் நடிகனாகவே ஆகும் ஒரு சந்தர்ப்பமும் வாய்த்தது. 'ஔவைப் பிராட்டி' நாடகம் நடக்கிறது எங்கள் கம்பெனியில்! — இப் போதெல்லாம் தெருக் கூத்துகளாக இல்லாமல், ஒரு ஊரில் போய் ஒரு மாதம் தங்கி தொடர்ந்து நாடகங்கள் நடத்துகிற அளவுக்கு எங்கள் கம்பெனி வளர்ந்திருந்தது. ஊரின் மத் தியிலே கொட்டகைப் பந்தல் போட்டு கட்டணம் வைத்து வசூல் செய்து நாடகங்கள் நடத்திடுவோம். அப்படி நடக்கும் போது தான் ஒரு நாள் நடிகனானேன். ஔவையார் நாடகம்; முதல் நாலைந்து காட்சிகள் முடிந்து விட்டன. ஔவையை ஏமாற்றுகிற முருகன், மாட்டுக்காரப் பையனை நாவப் பழ மரத்தில் உட்கார்ந்திருக்கும் காட்சி உண்டல்லவா? அதில் மாட்டுக்காரனை நடிக்கிறவன் ஏதோ தவறு செய்தான் என்று, மேக் அப் அறையில் — முதலாளியிடம் அடி வாங் கினேன். அழுதுகொண்டே நின்றேன். பிறகு, நாவப் பழ சீன் வந்தது. ஔவையாரும் மேடைக்கு வந்து விட்டாள், பாடிக்கொண்டே! மரத்தை அண்ணாந்து பார்த்தால், அங்கே யிருக்கவேண்டிய பையனைக் காணோம்.

என்ன செய்வாள் ஔவை? திகைத்தாள். இதைப் பார்த்த நான் உடனே ஒரு முடிவுக்கு வந்தேன். நாடக மேடை உட்புறமாகவே பரணில் ஏறி, மேலேயிருந்தபடியே மேடையில் உள்ள மரத்தில் இறங்கி, மாட்டுக்காரப் பைய னைப் போல் உட்கார்ந்து கொண்டேன். நான் சாதாரண மாக உடுத்தியிருந்த கந்தல் ஆடை அதற்கு மிகவும் உதவி செய்தது. இந்த விஷயம் முதலாளிக்குத் தெரிந்தது. மறு நாள் முதல் நானே மாட்டுக்காரப் பையனை வேடம் தரித் தேன். மாட்டுக்காரனிலிருந்து மார்க்கண்டேயர் வரையிலே பல பலவென்று பெரிய வேடங்கள் கிடைத்தன, எனக்கு!

துருவன் வேடம் என்னைப் போல யாரும் செய்ததில்லை என்று அப்போது ஊரிலே பெயர்! — பிரகலாதா நாடகத்

தில், நரசிம்மாவதாரம் தூணைப் பிளந்துகொண்டு இரணியனைக் கொன்று குடலைக் கிழித்து மாலை போட்டுக் கொள்ளும்போது ஒரு விருத்தம் பாடுவேன்; கொட்டகையே அதிரும் கைதட்டல்! மார்க்கண்டேயன் வேஷம் போட்ட போதுதான் — ஒரு சமயம் என் உயிருக்கும், சிவன் உயிருக்கும் ஆபத்து வந்து விட்டது. அதாவது; எமன் மார்க்கண்டேயனுகிய என்னைத் துரத்துகிறான். நான் ஓடிப் போய் சிவலிங்கத்தைக் கட்டிப் பிடித்துக் கொள்கிறேன். எமன் பாசக் கயிற்றை வீசுகிறான். உடனே சிலிவெடித்து சிவபெருமான் புறப்பட்டு எமனைக் குத்துவது போல ஈட்டியோடு பாயவேண்டும் — இது காட்சி!

எமன், என்னை வழக்கம் போலத் துரத்தினான். நான் ஓடிப் போய் சிவலிங்கத்தைப் பிடித்துக் கொண்டேன். எமன் பாசக் கயிறு வீசுவதற்குள் சிவலிங்கம் வெடித்து சிவன் புறப்பட்டு விட்டார். தாமதமாக வீசப்பட்ட பாசக் கயிறு, என் மீது விழுவதற்குப் பதிலாக, சிவனின் கழுத்திலே விழுந்து; அவர் கழுத்து இறுகி விட்டது. கழுத்து இறுகியதால், சிவன் எமன் மீது வீச வேண்டிய ஈட்டியை என் மார்பின் மீது ஓங்கி வீசினார் — 'மார்க்கண்டேயன்' — மயக்கமுற்று விழுந்து விட்டேன். சிவனும் உருண்டு விட்டார். எங்கள் இருவருக்கும் 'எமன்' உதவி செய்ய வேண்டியதாயிற்று. எமன் வேடதாரி நல்ல நாட்டு வைத்தியருங்கூட. அவருடைய சிகிச்சைக்குப் பிறகு உடல் நலம் பெற்றேன் நான். நல்லதங்காள் நாடகத்திலும் நான்தான் மூத்த பிள்ளை. கிணற்றங் கரையிலே கின்று கொண்டு நான் பாடும் பாட்டுக்கு — "ஒன்ஸ்மோர்" விழாத நாளே கிடையாது. நல்லதங்காள் வேஷம்கூட நான் போட்டிருக்கிறேன். நல்லதங்காள் நாடகத்தில் எங்கள் கம்பெனியில் நிறைய வேடிக்கைகள் நடந்திருக்கின்றன. ஒருநாள் நான் நல்லதங்கை வேஷம் போட்டேன். வாழைத்

தண்டை வைத்து அடுப்பெரிக்கும் கட்டத்தில் அன்று பெரிய தமாஷ் நடந்தது. வழக்கமாக, வாழைத் தண்டை மண்ணெண்ணெயில் நனைத்து வந்து வைத்திருப்பார்கள். நெருப்புப் பட்டதும், அது எரியும். ஜனங்களும் கை தட்டு வார்கள். அன்றைக்கு எண்ணெய் ஊற்றிவைக்க மறந்து விட்டார்கள் போலும். நல்லதங்காள், "நான் பத்தினி யானால் வாழைத் தண்டு எரியட்டும்!" என்று காளி போலக் கத்தியும், கதறியும் பயனில்லை!

விஷயம் விளங்கி விட்டது நல்லதங்காளுக்கு — என்ன செய்வதென்றே புரியவில்லை எனக்கு! — உள்ளே ஓடி வந்தேன். மண் எண்ணெயை ஒரு கண்ணாடிக் குவளையில் ஊற்றி எடுத்துக் கொண்டு, மேடைக்கு வந்தேன். இதுபோலப் பேசினேன்:

"அஷ்டதிக்குப் பாலகர்களே! இதுவரையிலே இந்த நல்லதங்காள் வெறும் வாழைத் தண்டை மட்டுமே எரித்தாள். இப்போ இவள் அசல் பத்தினி என்பதைக் காட்டுவதற்காக, இதோ கொஞ்சம் தண்ணீரையும் அடுப்பிலே ஊற்றி, வாழைத் தண்டைப் பற்ற வைக்கிறேன்"

— என்று புதிய வசனம் பேசிவிட்டு, எண்ணெயை அடுப்பிலே ஊற்றி, நெருப்பு வைத்தேன். என்றைக்கும் விட அன்றைக்கு அந்த சீன் பலே ஜோர்!—பிரமாதமான கரகோஷம்!

அரிச்சந்திரா நாடகத்திலே நான் லோகிதாசன் வேஷம் போடுவதுண்டு. லோகிதாசன் நாடக மேடையில் பாம்பு கடித்து இறக்கும் காட்சி தத்ரூபமாக இருக்கும். சந்திரமதியின் புலம்பலும் மிகக் கவர்ச்சியாக இருக்கும், மக்களுக்கு! — லோகிதாசனாகிய நான், பாம்பு கடித்து இறந்து கிடக்கிறேன். என்னை சந்திரமதி மயானத்தில் கொண்டுபோய்க் கிடத்தியிருக்கிறாள். அரிச்சந்திரன்,

சந்திரமதி தர்க்கம் முடிந்து சந்திரமதியை வெட்டப்போகி றான் அரிச்சந்திரன். நான் பிரேதம் போலவே, மூச்சு விடுவது ஜனங்களுக்குத் தெரியாமல் சிதை மேல் படுத் திருக்கிறேன். எனக்காக அடுக்கப்பட்ட வரட்டியிலே தேள் இருந்தது போலும். அதை யாரும் கவனிக்கவில்லை. அது நன்றாகக் கொட்டிவிட்டது என்னை. "அய்யோ! தேளு! தேளு!" என்று அலறியபடி எழுந்துவிட்டேன். சந்திர மதியை வெட்ட வாளெடுத்த அரிச்சந்திரன் திகைத்து விட்டான். வாள், சந்திரமதியின் கழுத்திலே மாலையாக விழுந்து, பிறகு பரமசிவன் வந்து, லோகிதாசனை உயிர் பிழைக்க வைக்க வேண்டும். வரட்டியிலே இருந்த தேள், கதையையே மாற்றி விட்டது! பாம்பு கடித்து இறந்த வனை தேள் எழுப்பி விட்டது. நல்ல காலம்; பரமசிவன் வேஷம் போட்டவன் கொஞ்சம் சமயோசித புத்திசாலி! — அவன் மேடைக்கு ஓடி வந்தான்!

"அகோ, வாரும் பிள்ளாய் அரிச்சந்திரா! உன் னுடைய சத்தியத்தை மெச்சினேனும். உன் மனைவியின் குரல் கேட்டு, உன் மகனைக் காப்பாற்ற கைலாயத்தி லிருந்து வேகமாக வந்தோம். வரும் வழியில் காளை மாட் டின் கால் முறிந்துவிட்டது. அதை 'ரிப்பேர்' செய்து கொண்டு வர நேரமாகுமே என்று யோசித்தோம். அதற் குள் லோகிதாசன் உயிர் எமலோகம் போய்விட்டால் திரும்ப 'வாபஸ்' பெற முடியாதே என்று, வழியிலே சந் தித்த வாயு பகவானை அனுப்பினேனும். அவர் தேளாக உருவெடுத்து, பாம்பு கடித்து மாண்ட பாலகனை எழுப்பி விட்டிருக்கிறார் — மங்களமுண்டாகட்டும் — சுபம்!"

என்று ஒரு புது பிரசங்கம் செய்தான். அதற்கும் ஜனங்கள் கை கொட்டினார்கள். எனக்கோ தேள் கொட் டிய வலி தாங்க முடியவில்லை. இப்படி கூத்துங் குதூகலமு

மாக வாழ்க்கை ஓடிக்கொண்டிருந்தது. நாலைந்து ஆண்டுகள் உருண்டன. என் சிந்தையில் அழியாத சித்திரமாக விளங்கிக் கொண்டிருந்த பரிமளாவை எப்போது சந்திப்போம் என்று ஏங்கிக்கொண்டேயிருந்தேன். கம்பெனி முதலாளி விஷ்ணுமூர்த்தியும் திடீரெனக் காலமானார். கம்பெனியின் முழுப் பொறுப்பும் என் தலையில் விழுந்தது. நடிக நண்பர்களின் ஒத்துழைப்போடு, புதிய நாடகங்கள் தயார் செய்தோம்.

வள்ளித் திருமணத்திற்கு பிரிவுபசாரம் வாசித்து விட்டு, "வாடிடும் ஏழை" என்ற நாடகம் நடித்தோம் — நல்லதங்காள், சாவித்திரி, அரிச்சந்திரா, பிரகலாதா எல்லாம் சீந்துவாரற்றுப் போயின. என் எண்ணங்கள் நாடகமாயின. புதிய புதிய கருத்துக்களை நாடக மூலம் சொன்னேம். எதிர்ப்பு அதிகம் — அது போலவே ஆதரவும் வளர்ந்தது. நினைத்தவைகளை மக்களிடம் சொல்ல முடிகிறதே என்ற மகிழ்ச்சியால் ஆறுதல் பெற்றேன் — ஆயினும் என் ஆருயிர் மோகினியை சந்திக்கத் துடித்தேன் —சந்தித்தேன்—இருவரும் ஒன்றுபட்டோம். பரிமளாவை நான் புரிந்து கொண்டேன். பட்டுக்கோட்டை பள்ளிக்கூடம் — மருங்கப்பள்ளம் கிராமம் — தாண்டவன் என்கின்ற அடையாளங்களால்!

ஆனல் அனுதையான என்னை அவள் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆயினும் காதலரானேம். பெரியவரே! உம்மையும் சந்தித்தோம். உமது புதிரைப் புரிந்து கொள்ளத்தான் போலீஸ் உடையிலே வந்தோம். போலீஸ் உடை எங்கள் நாடகக் கம்பெனி உடையாக்கும்; அவ்வளவுதான் — **எங்கே — பெரியவரே! என் கதை முடிந்தது; உமது கதையை ஆரம்பிக்கலாம்**" என்றுன் துரை. அவன் சொல்லி முடித்ததுதான் தாமதம்; மாயாண்டிக் கிழவர் மயக்கமுற்றுக் கீழே சாய்ந்தார்.

23

துரை சொன்ன கதை முழுவதையும் கூர்ந்து கவனித்து வந்த கிழவர், திடீரென்று மயக்கமுற்று சாய்ந்த காரணம் தெரியாமல் துரையும் பரிமளமும் திகைத்து விட்டார்கள். அவரைத் தூக்கி எடுத்து மயக்கம் தெளிவதற்கான சிகிச்சைகளை செய்யத் தொடங்கினர்கள். கிழவரின் உடல் முழுதும் வியர்வையால் நனைந்தது. சுருக்கம் விழுந்த அவரது நெற்றியிலே வியர்வைத் துளிகள் முத்து முத்தாய் உருண்டன. பரிமளா கொண்டுவந்த தண்ணீரில் துண்டை நனைத்து அதை அவரது முகத்திலே ஒத்திக்கொண்டேயிருந்தான் துரை. சிறிது நேரத்திற்கெல்லாம், கிழவர் அசைந்து படுத்தார். மெதுவாக விழிகளைத் திறந்தார்.

"பெரியவரே! பெரியவரே!" என்று துடிதுடிப்போடு துரை அவரைக் கூப்பிட்டுப் பார்த்தான். எழுந்து உட்கார்ந்து கொள்ள விரும்புவதாக அவர் ஜாடை காட்டினர். துரையும், பரிமளாவும் அவரைத் தூக்கி நாற்காலியிலே உட்கார வைத்தனர். நாற்காலியிலே சாய்ந்தபடி கிழவர் பெருமூச்சு விட்டார். "என் திடீரென்று மயக்கம் வந்தது? வழக்கமாக வருமா?" என்று கேட்டாள் பரிமளா. 'வராது' என்பதையுணர்த்த அவர் தலையை அசைத்துக் காட்டினர். "நான் சொன்ன கதையில் ஏதாவது வேதனை, உணர்ச்சி வசப்பட்டு விட்டீர்களோ?" என்று ஆவலாகக் கேட்டான் துரை.

'ஆமாம்' என்று மெதுவாக உதடுகளை அசைத்தார் — 'உம்' என்று முணகிக் கொண்டார்.

"இப்படித் தெரிந்தால் நான் சொல்லியிருக்க மாட்டேனே; இந்தக் கதையை" — என்று தனக்குத் தானே

வருத்தப்பட்டுக்கொண்டான் துரை. "சொன்னதால் தவறொன்றுமில்லை துரை" என்று கூறிவிட்டு, மீண்டும் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டுக் கொண்டார் அந்த மர்ம மனிதர் மாயாண்டி.

"ஏதோ ஒரு வேதனையை மூடி மறைக்கிறீர்கள்—அது என்ன என்பதை எங்களிடம் சொல்லக் கூடாதா?" — துரை கலக்கத்தோடு கேட்டான்.

"சொல்லுகிறேன் — சொல்லத்தான் போகிறேன்!"

"இப்போது வேண்டாம்—களைப்பாயிருந்தால், பிறகு சொல்லுங்கள்". — இது பரிமளம்.

"இல்லேயம்மா — இப்போதே நான் சொல்லித் தீர வேண்டும். அப்போதுதான். என் மனதிலுள்ள சுமை குறையும்."

அவரது உதடுகளையே உற்று நோக்கிய வண்ணமிருந்தனர் துரையும் பரிமளமும். கிழவர் கனைத்துக் கொண்டார். ஏதோ ஒரு பெரிய ரகசியத்தை வெளியிடப் போகிறார் என்பதற்கான பீடிகையாக இருந்தது அவரது அசைவு.

"துரை! தள்ளாத வயதுடைய தன் தாயாரையும், பத்து வயது பாலகன் உன்னையும், ஐந்து வயதுள்ள அரும்பு உன் தங்கையையும் தவிக்க விட்டு விட்டுச் சிறை கோட்டம் புகுந்தானே குமாரவடிவு; அவனுடைய வாழ்க்கை ஏட்டை கொஞ்சம் புரட்டிக் காட்டுகிறேன்; கவனமாகக் கேள்!"

"என்ன? என் தந்தையின் வாழ்க்கை ஏடா?"

"ஏடா அது? சோக மேடு! சுகம் நுழைய முடியாத காடு! வாழ்ந்து கெட்டவனை இலங்கைக்குச் சென்றான்

குமாரவடிவு — கொலைகாரனுக சிறைக்குள்ளே நுழைந்தான் — ஞானி போல வெளியே வந்தான்."

"என்ன சொல்லுகிறீர்கள்? அப்படியானல்.....தாங்கள்....." என்று ஆவல் நிறைந்த குரலில் இழுத்தாற் போலக் கேட்டான் துரை.

"குமாரவடிவு, மனைவியைக் கொலை செய்ததற்காக குற்றஞ் சாட்டப்பட்டான். வள்ளிக் கிழங்கை வெட்ட வேண்டுமென்று எழுதப்பட்டிருந்த டைரிக் குறிப்பு அவனைக் கைதியாக்கியது. அவனைப் பற்றி உனக்குத் தெரிந்த கதைகள் முழுவதையும் என்னிடம் சொல்லிவிட்டாய். அவன் சிறகொடிந்த பறவைபோல கூட்டுக்குள்ளே அடைபட்டுத் தவித்தபோது, பறவைக் குஞ்சுகள் வெளியிலே பாதகர்களால் வேட்டையாடப்பட்ட பயங்கரச் சம்பவங்கள் அவனுக்குத் தெரியாது. ஆயுள் தண்டனை அடைந்த கைதி குமாரவடிவு — உனக்குத் தெரியுமோ என்னவோ — சிறைச் சாலை விதிப்படி, ஆயுள் தண்டனை என்பது சாகும் வரையிலே சிறையிலே கிடப்பது என்பதல்ல என்ற விஷயம்! ஆமாம் துரை; சாகும் வரையிலே இருக்கவேண்டிய அவசியமில்லை. முழுவதும் சாவதற்கு முன்பு அந்தக் கைதிகளுக்கு நிச்சயம் விடுதலை உண்டு. கைதியின் நடத்தைக்குத் தக்கவாறு நாட் குறைப்பு — கடைசியாக 'போர்டு' என்று ஒன்று கூடி, அதிலே ஒரிரு வருடங்கள் தள்ளுபடி — ஆண்டு தோறும் உள்ள விடுமுறைக் கணக்கு — ஆகிய இந்த வகைகளிலே ஏழெட்டு ஆண்டுகள் தண்டனை குறைக்கப்பட்டு, ஆயுள் தண்டனை அடைந்த கைதிகள் பத்து பனிரெண்டு வருடங்களில் விடுதலை பெற இயலும். அது போலத்தான் குமாரவடிவும் விடுதலை பெற்றான். சிறைச்சாலையிலேயிருந்து அவன் வெளியிலே வரும்போது ஏறத்தாழ உனக்கு இருபது அல்லது இருபத்திரண்டு வயதாகியிருந்திருக்கலாம். வெளி

யிலே வந்த குமாரவடிவு உன்னையும், உன் தங்கையையும் தேடித் தேடி அலைந்தான். கொலைகாரனுக்கு யார் சரியான பதில் சொல்லப்போகிறார்கள்! சிறைச்சாலையிலே பித்தனைப் போல் அலைந்து கொண்டு, சிறை அதிகாரிகளிட்ட வேலைகளைச் செய்து கொண்டு, ஓய்வு நேரம் முழுவதையும் உங்களைப்பற்றி நினைப்பதிலேயே செலவிட்டுக் கொண்டிருந்த குமாரவடிவுக்கு—நீங்கள் போன இடம் தெரியவில்லை என்றால் எப்படியிருக்கும்! தான் பெற்ற செல்வங்களைக் கண்டு களிக்கலாம்; வளர்ந்திருப்பார்கள் — வனப்பு மிகுந்தவளாயிருப்பாள் தங்கம் — வாலிபக் காளையாகத் திகழ்வான் மகன் — வாரியணைத்து மகிழலாம் என்று இன்பக் கனவுகள் பல கண்டிருப்பானே அவன் — அந்தக் கனவுகளெல்லாம் — அவனது விடுதலையால் கலைந்து விட்டன என்கிறபோது எவ்வளவு வேதனைப் பட்டிருப்பான் அவன்? சிறையிலே எத்தனையோ வகைக் கைதிகள் இருப்பார்கள். பெரும்பாலும் மனைவியைக் கொலை செய்தவர்களின் கணக்கு அதிகமாகவேயிருந்தது, குமாரவடிவு இருந்த சிறைச் சாலையிலே! — கூடிப் பேசும் நேரங்களிலே அவர்கள் தங்களது சிறை புகு படலத்தைப் பற்றிய கதைகளை அவிழ்த்து விடாமல் இருக்க மாட்டார்கள்.

"சோர புருஷனோடு கூடிக் கிடந்தாள். சொரணையுள்ளவன் அதை அனுமதிக்க முடியுமா? தீர்த்துக் கட்டிவிட்டேன்; தீட்டிய அறிவாளால்!" என்று வீராப்பு பேசுவான் ஒரு கைதி!

"தாயார் வீட்டிலேயேதான் இருப்பேன். உனக்கு தாகமாக இருந்தால், இங்கு வந்துபோ — என்று சட்டம் பேசினாள் — தாலி கட்டியவனுக்குப் பொறுக்குமா? தரையோடு தலையை மோதி மோதிக் கொன்றேன்" என்று ஆத்திரத்தோடு கூறுவான், இன்னொரு கைதி.

"அய்யோ அத்தான்! உங்களை விட்டு எப்படிப் பிரிவேன் — என்று தேம்பி அழுது விடை கொடுத்தாள். ஊருக்குப் போவதாக போக்குக் காட்டி, இரவோடு இரவாகத் திரும்பி வீட்டுக்குப் போனேன். கள்ள புருஷனைக் கட்டிப் புரண்டாள் என்னுடைய கற்புக்கரசி; கண்டேன் அந்தக் காட்சியை! பிறகென்ன; கையேகத்தி! — அவ்வளவுதான் — காதலர் இருவரும் கூண்டோடு கைலாசம்" என்று பழி வாங்கிய கதையை உற்சாகத்தோடு உரைப்பான் இன்னொரு கைதி!

"ஆசை நாயகனும் அவளும் சேர்ந்து சொந்தப் புருஷனை என்னையே தீர்த்துக்கட்ட திட்டம் போட்டார்கள் — நடக்குமா என்னிடம்? ஒரு நாள் இரவு — என் மனைவியும் அவனும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தார்கள். இதுதான் சமயமென்று இருவர் தலையையும் வெட்டினேன். தலைகள் இரண்டையும் தேங்காய் போல முடிந்து ஒரு கம்பிலே தொங்க விட்டு, தோளிலே வைத்துக் கொண்டு, நேரே நீதி மன்றத்திலே நுழைந்தேன். நீதிபதி மயக்கம் போட்டு விழுந்தார் — போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் திடுக்கிட்டுப் போனார்கள் — அவர்களுக்கெல்லாம் நான் ஆறுதல் சொன்னேன். நான் செய்த நல்ல காரியத்துக்குத் தான் இந்தப் பரிசு" என்று கண்களிலே பொறி பறக்கக் கத்துவான் ஒரு கைதி!

"நான் ஒரு முட்டாள்! துரோகி! பாதகன்! வீணாக என் துணைவியின் மீது சந்தேகப்பட்டு, அவளைக் கொலை செய்தேன். அவள் உத்தமி — பதிவிரதை" — என்று கண்ணீர் வடிப்பான் ஒரு கைதி! இப்படிக் கொலை செய்ததை ஒத்துக்கொள்ளும் கைதிகளின் கூட்டத்திலே — குமாரவடிவு மட்டுமே பொய்யன் என்ற பட்டப் பெயரை வாங்கிக் கொண்டான். வள்ளியை வெட்ட வேண்டும் —

என்பது கிழங்கைத்தானய்யா; மனவியை அல்ல — என்று குமாரவடிவு உரக்க உரக்கச் சொல்லியும் கைதிகள் கேட்டார்களில்லை. "சும்மா — புளுகாதே" என்று கிண்டல் செய்து—அவன் நெஞ்சைத் துளைத்தார்கள். இதெல்லாம் சில மாதங்கள் தான்! — பிறகு குமாரவடிவு சாதாரண கைதி நிலையிலேயிருந்து மேஸ்திரி கைதியாக உயர்த்தப் பட்டான்.

அதன் பிறகு கைதி வார்டர் பதவியையும் ஏற்றுக் கொண்டான். கைதி வார்டர் என்றால் சிறைக்குள்ளேயே கொஞ்சம் கௌரவமான உத்தியோகம். அந்த உத்தியோகத்திற்கு சம்பளமே — தண்டனை நாள் குறைப்புத்தான்! ஆனால் அதிகமாகத் தூங்க முடியாது. நினைத்த சமயம் படுக்க முடியாது. இரவு பகல் எல்லா நேரத்திலும் வேலையிருக்கும். அந்த வேலையில் சிறு தடங்கலும் ஏற்படக் கூடாது. கஷ்டப் படுவதற்கேற்ற பயனிருக்கிறது. அதுதான் நாட் குறைப்பு என்றேனே; அது!

உலகத்தின் எங்கேயோ ஒரு மூலையிலே—குறிப்பிட்ட அளவு மட்டும் நடக்கலாம்; அந்த வேலியைத் தாண்ட முயன்றால் வேதனைக்காளாக நேரிடும் — என்ற உத்திரவுக்குப் பணிந்து நடைப்பிணம் போல வாழ்க்கையை நகர்த்தும் எண்ணற்ற மனிதர்கள்—அந்தப் பயங்கர நாட்களிலே ஒரு நாள் குறைந்தாலும் அதை மகிழ்ச்சியோடுதானே வரவேற்பார்கள்! அப்படித்தான் குமாரவடிவு நாட்களை எண்ணிக்கொண்டு வந்தான். விடுதலை பெற்ற பிறகுதான் அவனுக்குத் தோன்றியது, சிறையிலேயே ஆயுள் முழுவதையும் ஓட்டியிருக்கலாமே என்ற எண்ணம்! இனி என் செய்வது? வரமாட்டேன் என்றாலும் விடமாட்டார்கள் — ஒரு நாள் இருந்துவிட்டுப் போகிறேன் என்றாலும் அனுமதிக்க மாட்டார்கள்—அப்படிப்பட்ட இடமல்லவா சிறைச்சாலை!

சிறிய சிறையிலேயிருந்து, உலகமென்னும் பெரிய சிறைக்கு வந்த குமாரவடிவு, இலங்கைத் தீவிலே சில நாள் அலைந்தான். பிறகு, இந்தியாவுக்கு வந்து சேர்ந்தான். மகனும், மகளும் இனி அகப்பட மாட்டார்கள் என்ற தீர்மானத்துக்கு அவனே வரும் வரையில் அவர்களைத் தேடித் திரிந்தான். தமிழகத்து மண்ணை, குமாரவடிவு தனது கண்ணீரால் நனைக்கும் போதெல்லாம் — இதே மண்ணில் நீ நாடகமாடிக் கொண்டிருப்பதும் — உன் தங்கை நீண்ட துயில் கொண்டிருப்பதும், அவனுக்குத் தெரியாது. எப்படித் தெரிய முடியும்? தெரிந்துகொள்ளும் வாய்ப்புதான் ஏது?

குடும்பப் புத்தகத்தை செல்லரித்துவிட்டது — ஒரே ஒரு ஏடு குமாரவடிவு மட்டுமே காலக் காற்றிலே புழுதியோடு சேர்ந்து பறந்து கொண்டிருக்கிறான் — என்று தனக்குத் தானே அவன் சொல்லிக் கொள்வான்.

அப்படிப் பறந்து கொண்டிருந்தவன் — கிராமம் தோறும் பயணம் நடத்தி, புதிய தத்துவங்களை உபதேசம் செய்யும் ஞானியாக மாறினான் — ஆமாம், ஞானியென்று அவன் தன்னை எண்ணிக் கொண்டான்; யாரோ ஒருவைத் தியக்கார வேதாந்தி என்று ஊரார் அவனைப் பரிகாசம் செய்தனர். அவன் அதற்காகக் கவலைப்படவில்லை. தான் கண்டுபிடித்ததாகக் கருதும் கருத்துக்களை, யாரிடமாவது சொல்லித் தீரவேண்டும் என்று அவன் ஆசைப்பட்டான். அவனது உபதேசங்களை மக்கள் காது கொடுத்துக் கேட்டதற்குக் காரணமே வேறு! அவன் வைத்தியத் தொழிலிலே நிபுணன் என்று பெயர் வாங்கிவிட்டான். தேயிலை இலைகளைப் பறித்த குமாரவடிவு இப்போது மூலிகைகளைப் பறிக்கும் சித்த வைத்தியராக மாறினான்.

இந்தத் திறமையை அவன் சிறையிலே பெற்றான். மருத்துவத்திலே மகா நிபுணன் ஒரு கைதி — அவனிடம்

பெற்ற பாடம், குமாரவடிவின் வயிற்றுக்கு உதவி புரிந்தது. மருத்துவ குமாரவடிவின் பாதையிலே ஒரு புதிய திருப்பத்தை அளித்தது மருங்கப்பள்ளம் கிராமம் — ஆமாம் துரை! — உன்னுடைய தங்கை மண்ணோடு கலந்து கிடக்கிறாளே; அந்த மருங்கப்பள்ளம்தான் — உன் தந்தையின் பாட்டையையும் மாற்றியது என்கிறேன்! எழுபது கோடி பசும் பொன் மறைந்து கிடக்கிற இடம் மருங்கப்பள்ளம். எழுபது கோடி இல்லாவிட்டாலும்; ஏதோ கொஞ்சமாவது இருக்கத்தான் வேண்டும். அந்தப் புதையலைத் தேடி யார் யாரோ அலைகிறார்கள் என்பது உண்மைதான். குழந்தையை பலி கொடுத்து கொடுமை புரிகிற அளவுக்கு ஒரு சாமியாருக்குப் பொன்னை வளர்ந்திருக்கிறதென்றால்; மற்றவர்களைப் பற்றி கேட்கவா வேண்டும்? நடுக் கடலிலே எங்கள் தோணியை நீ வழி மறித்தாயே, அந்தத் தோணியிலிருந்த ஐயப்பன் என்ற முரட்டுப் படகோட்டிகூட அந்தப் புதையலுக்காக நாக்கைத் தட்டிக் கொண்டிருப்பவர்களிலே ஒருவனுவான்.

ஐயப்பனை போலவே பலர் அந்தப் புதையலை சாப்பிட பல் துலக்கிக் கொண்டிருக்கிறார்கள். அத்தகைய புதையலைப் பற்றிய ரகசியம் — அதை எடுக்கக் கூடிய வழி — அனைத்தும் அடங்கிய ஒரு செப்பேடும் — ஒரு சிறு கல்லும் — உன் தந்தையிடம் கிடைத்துவிட்டது.”

“கிடைத்து விட்டதா? புதையலைப் பற்றிய குறிப்பா? எப்படி?” என்று துடிப்போடு கேட்டான் துரை.

“பொறு — சொல்லுகிறேன்!” என்று கனைத்துக் கொண்டு பேச்சைத் தொடர்ந்தார் கிழவர்.

“புதையலை எடுக்கும் வழியும் வகையும் கிடைத்து விட்டது — அதை எடுத்து என்ன செய்வது? யாருக்காக

அதை எடுக்கவேண்டும்? — என்ற கேள்விகள் குடைய ஆரம்பித்தன குமாரவடிவை!"

கிழவர் பேச்சை முடிக்கவில்லை. அதுவரையிலே அவரது பேச்சை ஆவலோடு கேட்டு வந்த துரை, இப்போது சிறிது அவசரப்பட்டுவிட்டான்—மர்மக் கிழவர், மாயாண்டிதான் தன்னுடைய தந்தை என்று முடிவுகட்டி — அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அவரது உள்ளத்தில் உள்ளவை அனைத்தையும் தெரிந்துகொள்ள விரும்பியிருந்த அவன் ஏனோ திடீரென்று அவசரப்பட்டு — "புதையலை யாருக்காக எடுக்க வேண்டும்? எனக்காகத்தான் — உங்கள் மகனுக்காகத்தான்!" என்று கத்திவிட்டான். பரிமளாவும், திகைத்துப் போனாள்; கிழவர் மரம் போலிருந்தார்.

"அப்பா! அப்பா!" என்று அவரை அணைத்துக் கொண்டு அழுதான் துரை.

"நான் உன் தந்தை குமாரவடிவு அல்ல — அவன் இறந்துவிட்டான். உண்மைதான் — நான் சொல்வதை நம்பு — அவன் இறந்துவிட்டான்" — என்று கூவினார் கிழவர்.

"உண்மையாகவா? நீங்கள் என் தந்தையில்லையா?" — துரை துடித்தான்.

"இல்லை"

"பிறகு நீங்கள் யார்?"

"உன் தந்தை குமாரவடிவின் நண்பன் — சிறைச்சாலைத் தோழன் — விடுதலை அடைந்த பிறகு நானும் அவனுமே நண்பர்களாக வாழ்ந்தோம். குமாரவடிவு சாகும் வரையிலே நான் அவனைப் பிரியவேயில்லை!" என்று கூறி கண்ணீர் வடித்தார் மாயாண்டி.

———

24

"நான் உன்னுடைய தந்தைதான் — பல வருஷ காலம் உன்னைப் பிரிந்திருந்த தந்தை நான்தான் — நீயும் உன் காதலி பார்வதியும், நிலத் திரைக் கடலோரமுள்ள உப்பரிகையிலே நின்றிருக்கும்போது, திடீரெனத் தாக்கி திகிலுண்டாக்கியதானே, உன் தந்தையேதான்—உனக்கும் உன்னுடையவளுக்கும் ஒரு புரியாத புதிராக இருக்கும் இந்த மர்மக் கிழவன் உன் அப்பன்தானடா மகனே! டைரிகளை எழுதி எழுதிக் குவித்து, அதே டைரியிலேயே காட்டிக் கொடுக்கப்பட்ட உன் தகப்பன் நானேதான் — ஏராளமான திரவியம், எதிபிடி, ஆள், அம்பு இவைகளோடு இன்பமாக வாழ்ந்து, இறுதியில் இருக்கவும் இடமின்றி இலங்கைக்கு ஓடி, இளைஞர்கள் பலவற்றை வாழ்க்கையிலே சந்தித்த அபலைக் குடும்பத்தில் மிச்சமிருக்கும் தலைவன்—என் குலக் கொழுந்தாய் உன்னைப் பெற்றெடுத்த தகப்பன் — இதோ, ஆண்டிக் கோலத்திலிருக்கிறேனே நானேதான்!"

இப்படியெல்லாம் மாயாண்டிக் கிழவர், தன்னைத் தழுவிக் கொண்டு பேசியிருக்கக் கூடாதா என்று தாரை கவலைப்பட்டான்.

பொய்க்காகவாவது "நான் உன் தகப்பன்தான்" என்று அவர் கூறியிருந்தால் அந்த சமயம் தன் மனம் சிறிது நிம்மதி அடைந்திருக்குமே யென்று எண்ணி ஏங்கினான். ஏக்கத்தோடு ஏக்கமாக, "அப்படியானால் என் அப்பா எங்கே, எப்படி, எப்போது இறந்தார்? அதையாவது சொல்லுங்களேன்" என்று தழுதழுத்த குரலிலே அவன் கேட்டான். கிழவர், அவனைப் பரிவோடு பார்த்து —

"துரை! புண்ணுக்கு மருந்து கேள்; தருகிறேன். அதை வேலால் குத்தும்படிச் சொல்லாதே; என்னால் முடியாது!" என்றார்!

"என்ன பெரியவரே, சொல்கிறீர்கள்?"

"நீ என்னிடம் எழுதிக் காட்டிய உன் வாழ்க்கைச் சித்திரமே ஒரு சோகப் பெருவெள்ளம் — என் வேறு உன் அப்பன் செத்த கதையைச் சொல்லி, சோகத்தை இருமடங்காக்க வேண்டுமா? வேண்டாம் — உன் தந்தை குமாரவடிவு இறந்துவிட்டான்; அதோடு விடுவிடு!"

"இது என்ன பெரியவரே, போர்க்களத்திலேயிருந்து வீரனுடைய குடும்பத்திற்கு சாவுச் செய்தி வருமே — அதுபோல முடிவை மட்டும் ஒரு வரியில் கூறுகிறீர்களே!"

"ஆமாம் — குமாரவடிவின் வாழ்க்கையும் ஒரு போர்க்களந்தானே! ஆனால், அவன் வீரனாகநின்று சமர் புரியவில்லை; கோழைபோல உலகத்துக்குப் பயந்து, ஒதுங்கி ஒதுங்கி நடந்து, கடைசியில் மீண்டுமாகப் போனான்."

"தயவு செய்து என் தந்தை இறந்த விபரத்தைச் சொல்லுங்கள்! அப்பா மாண்டது, மகனுக்கும் தெரியாத ஒரு மர்மச் சுழலாகப் போய்விட வேண்டாம். நான் கவலைப்படுவேன் என்று எண்ணுகிறாகள். என் குடும்பத்திலே நிகழ்ந்த துன்பத் திரைச்சீலையின் ஒவ்வொரு அத்தியாயத்தையும் படித்துவந்தவன் நான். தாயார், பாட்டி, தங்கை மூவரையும் மீனாகப் பார்த்தவன் நான். அதனால் மனம் மரத்துப் போய்விட்டது. தந்தை இறந்த விபரத்தை நீங்கள் தைரியமாகச் சொல்லலாம்."

"கேட்க நீ தயார்! சொல்ல நான் தயாராகிக் கொள்வது கஷ்டமாயிற்றே! குமாரவடிவின் மகன் நீ. நான் அவனுக்கு நண்பன். சிறையிலும் வெளியிலும் அவனும் நானும்

சேர்த்து பழுகிறேன். அவன் இறந்தபோது நான் பக்கத் திலேதானிருந்தேன். 'ஏன் இறந்தான்' என்பதை வெளி யிட என்னால் இயலவில்லை. நினைக்கும்போதே நெஞ்சு குமுறுகிறது. சொல்லவும் ஆரம்பித்தால்.....அவ்வளவு தான் என் பாடு!"

"அடக்குவதற்குப் பதிலாக அதிகமாகத் தூண்டி விடுகிறீர்கள் ஆவலை! நீங்கள் அதை சொல்லித்தான் தீர வேண்டும்!"

"குமாரவடிவுக்கு கொடுத்த வாக்குறுதியை மீற மாட் டேன்; நண்பனுக இருந்த நான் துரோகியாக மாற மாட் டேன். சாவு அவனுடைய சொந்த விஷயம். வெளியிலே தெரியக் கூடாத பரம ரகசியம் அந்த சாவிலே அடங்கி யிருக்கிறது. அதை நான் வெளியிலே சொன்னால் நட்புக்கு வகுக்கப்பட்ட நல்ல இலக்கணத்தை நாசம் செய்தவர் களின் பட்டியல்களிலே இடம் பெறுவேன்."

"பெரியவரே — மகனிடம்தானே சொல்லப் போகிறீர் கள்; மாற்றுரிடம் அல்லவே?"

"இன்னுங் கூறப் போனால், சிறை மீண்ட பிறகு நானும் குமாரவடிவும் சேர்ந்து செய்த காரியங்கள் எத்த னையோ உண்டு. உலகத்திலே நடக்காதது எதையும் செய்துவிடவில்லை. அப்படி நடக்கும் காரியங்களின் அளவை விட எவ்வளவோ குறைவானதுதான் நாங்கள் செய்பட்ட காரியங்கள் — ஆனாலும், இப்போது அவன் இறந்துவிட்டான் என்பதற்காக அவைகளை வெளியே கூறி என் இருதயத்தில் விஷத்தை நிரப்பிக்கொள்ள மாட்டேன்."

"அவைகளையெல்லாம் சொல்ல வேண்டாம் அய்யா! — எனக்குத் தெரியும் என்னென்ன நடந்திருக்குமென்று."

"துரை! புண்ணுக்கு மருந்து கேள்; தருகிறேன். அதை வேலால் குத்தும்படிச் சொல்லாதே; சொன்னால் முடியாது!" என்றார்!

"என்ன பெரியவரே, சொல்கிறீர்கள்?"

"நீ என்னிடம் எழுதிக் காட்டிய உன் வாழ்க்கைச் சித்திரமே ஒரு சோகப் பெருவெள்ளம் — தான் வேறு உன் அப்பன் செத்த கதையைச் சொல்லி சோகத்தை இருமடங்காக்க வேண்டுமா? வேண்டாம்—உன் தந்தை குமாரவடிவு இறந்துவிட்டான்; அதோடு விட்டுவிடு!"

"இது என்ன பெரியவரே, போர்க்களத்திலேயிருந்து வீரனுடைய குடும்பத்திற்கு சாவுச் செய்தி வருமே — அது போல முடிவை மட்டும் ஒரு வரியில் கூறுகிறீர்களே!"

"ஆமாம் — குமாரவடிவின் வாழ்க்கையும் ஒரு போர்க்களந்தானே! ஆனால், அவன் வீரனாக நின்று சமர் புரியவில்லை; கோழை போல உலகத்துக்குப் பயந்து, ஒதுங்கி ஒதுங்கி நடந்து, கடைசியில் பிணமாகப் போனான்."

"தயவு செய்து என் தந்தை இறந்த விபரத்தைச் சொல்லுங்கள்! அப்பா மாண்டது, மகனுக்கும் தெரியாத ஒரு மர்மச் சுழலாகப் போய்விட வேண்டாம். நான் கவலைப் படுவேன் என்று எண்ணுகிறாகள். என் குடும்பத்திலே நிகழ்ந்த துன்பத் தொடர்கதையின் ஒவ்வொரு அத்தியாயத்தையும் படித்துவந்தான் நான். தாயார், பாட்டி, தங்கை மூவரையும் பிணமாகப் பார்த்தவன் நான். அதனால் மனம் மரத்துப் போயிவிட்டது. தந்தை இறந்த விபரத்தை நீங்கள் தைரியமாகச் சொல்லலாம்."

"கேட்க நீ தயார்! சொல்ல நான் தயாராகிக் கொள்வது கஷ்டமாயிற்றே! குமாரவடிவின் மகன் நீ. நான் அவனுக்கு நண்பன். சிறையிலும் வெளியிலும் அவனும் நானும்

சோர்ந்து படுகிறேன். அவன் இறந்தபோது நான் பக்கத்திலே தானிருந்தேன். 'என் இறந்தான்' என்பதை வெளிப்படை என்னால் இயலவில்லை. நினைக்கும்போதே நெஞ்சு குமுறுகிறது. சொல்லவும் ஆரம்பித்தால்.....அவ்வளவுதான் என் பாடு!"

"அடக்குவதற்குப் பதிலாக அதிகமாகத் தூண்டி விடுகிறீர்கள் ஆவலை! நீங்கள் அதை சொல்லித்தான் தீர வேண்டும்!"

"குமாரவடிவுக்கு கொடுத்த வாக்குறுதியை மீற மாட்டேன்; நண்பனுக இருந்த நான் துரோகியாக மாற மாட்டேன். சாவு அவனுடைய சொந்த விஷயம். வெளியிலே தெரியக் கூடாத பரம ரகசியம் அந்த சாவிலே அடங்கியிருக்கிறது. அதை நான் வெளியிலே சொன்னால் நட்புக்கு வகுக்கப்பட்ட நல்ல இலக்கணத்தை நாசம் செய்தவர்களின் பட்டியல்களிலே இடம் பெறுவேன்."

"பெரியவரே — மகனிடம்தானே சொல்லப் போகிறீர்கள்; மாற்றுரிடம் அல்லவே?"

"இன்னுங் கூறப் போனால், சிறை மீண்ட பிறகு நானும் குமாரவடிவும் சேர்ந்து செய்த காரியங்கள் எத்தனையோ உண்டு. உலகத்திலே நடக்காதது எதையும் செய்துவிடவில்லை. அப்படி நடக்கும் காரியங்களின் அளவை விட எவ்வளவோ குறைவானதுதான் நாங்கள் செய்பட்ட காரியங்கள் — ஆனாலும், இப்போது அவன் இறந்துவிட்டான் என்பதற்காக அவைகளை வெளியே கூறி என் இருதயத்தில் விஷத்தை நிரப்பிக்கொள்ள மாட்டேன்."

"அவைகளையெல்லாம் சொல்ல வேண்டாம் அய்யா! — எனக்குத் தெரியும் என்னென்ன நடந்திருக்குமென்று."

"என்ன நடந்திருக்கும்?—துரை! நீ கற்பனை பண்ணுவது எனக்கும் புரிகிறது. வள்ளியம்மா, வீணை தன்மீது சந்தேகப்பட்டதாலும், தொடர்ந்து பிடிவாதமாக போராடி விருந்ததாலும், ஒரு குடும்பத்தின் திசையே திரும்பி விடுமோ என்று எண்ணியிருப்பான் குமாரவடிவு! — அதனை விளைவாக சந்தேகப்பட்டதுதான் பட்டு விட்டாள்; இனி மேல் என்ன? அவளுந்தான் சந்தேக நிவர்த்தியின்றி செத்து விட்டாள்; ஆகையால் நாம் இஷ்டம்போல் அலையலாம் என்று கண்ட பெண்களையும் வட்டமிட்டிருப்பான் என்று எண்ணுகிறாயா? அதுதான் இல்லை! பிறகு எது? மன நிம்மதிக்கு மதுவாயிருக்குமோ, என்று யோசிக்கத் துவங்குகிறாயா? அதுவுமல்ல!"

"எதுவானாலும் எனக்குக் கவலையில்லை! என் தந்தை எப்படி இறந்தார் என்ற செய்தியை மட்டும் சொல்லுங்கள், போதும்!"

"பாம்பு கடித்து இறந்தான்! போதுமா?"

"பாம்பா?"

"என்ன பாம்பு என்று கேட்கிறாயா? அதையும் சொல்லுகிறேன்; நல்ல பாம்பு!"

"பாம்பு எப்படிக் கடித்தது?"

"பைத்யக்காரா, இது தெரியாது? படத்தை உயர்த்தி — பல்லை அழுத்தி — காலில் கடித்தது. பாம்பின் தலையிலேயுள்ள விஷம் பல்லின் ஓட்டை வழியாக காலில் இறங்கி, பிறகு தலைக்குப் போய்.....மயக்....."

"போதும் போதும் — அய்யா பெரியவரே! பாம்பு கடித்து அப்பா இறந்தார் என்பதில் என்ன ரகசியமிருக்கிறது? அதை ஏன் இவ்வளவு மறைக்கவேண்டும்?"

"ஏது — விடமாட்டாய் போலிருக்கிறதே —"

"விடமாட்டேன்; உண்மையைச் சொல்லி விடுங்கள். பாம்பு கடித்து அப்பா இறக்கவில்லை. ஏதோ சூது நடந்திருக்கிறது. என்னிடம் மறைக்காதீர்கள் — "

"பாம்பு தானப்பா—அதுவும் சிவன் கோயில் பாம்பு!"

"சிவன் கோயில் பாம்பு! பெரியவரே — என்னை ஏன் இப்படி சித்ரவதை செய்கிறீர்கள்? அப்பா இறந்த உண்மையைச் சொல்ல முடியாதென்றுல் சும்மா இருங்கள் — வீண் புதிர்கள் போடவேண்டாம்" — துரை கொஞ்சம் கடுமையாக, சோகங் கலந்த குரலில் பேசிவிட்டு அப்பால் நகர்ந்தான்.

"பார் பரிமளா—உன் அத்தானுக்கு மூக்கின் மேலிருக்கிறது கோபம்—உம்; எப்படித்தான் துரையோடு குடும்பம் நடத்தப் போகிறாயோ, நீ!" என்று பரிமளாவைப் பார்த்து கிழவர் சாவதானமாகக் கூறினர்.

புயலில் சிக்கிய நிலையிலேயிருந்த பரிமளாவும் கிழவரைப் பார்த்து, "உங்களுக்குத்தான் என்ன, வயதான காலத்திலே இவ்வளவு பிடிவாதம்?" என்றுள்.

"வாதம் — பிடிவாதம் எல்லாம் வயதான காலத்தில் தானே வரும் பரிமளா! சொல்லக் கூடிய சங்கதியாயிருந்தால் இன்னேரம் சொல்லியிருக்க மாட்டேன்?"

இதைக் கேட்ட துரை கோபத்தோடு, "ஆமாம் — சொல்லக் கூடாத சங்கதி; அவ்வளவு கேவலமான சங்கதி; இதைவிடக் கேவலமான சங்கதிகளையெல்லாம் புத்தகம் புத்தகமாக எழுதி வெளியிட்டிருக்கிறார்கள். நடக்காத விஷயங்களை எழுதி நாலு காசு தேடுவதற்கென்றே நாடோடி மனிதர்கள் சிலர் கையிலே பேனா பிடிக்கிறார்கள் —இவர் என்னடாவென்றால், நடந்த விஷயத்தைச் சொல்ல இவ்வளவு தூரம் அடம் பிடிக்கிறார்!"

"அப்படியானால் என்னையும் நீ குறிப்பிட்ட அந்த நடுத் தெருக் கும்பலோடு சேரச் சொல்லுகிறாயா, துரை?"

"என் அப்பாவைப் பற்றி உங்களை ராமாயணம் எழுதச் சொல்லவில்லையே நான்; தந்தையைப்பற்றி மகனிடம் கூறுவதிலே தவறொன்றுமில்லையே; அதுவும் முழுக் கதையுமா நான் கேட்கிறேன். முடிவு அத்தியாயத்தை மட்டும் சொன்னால் போதும் என்கிறேன்."

"வீடு விழுந்தது என்பதற்கும், வீடு எரிந்தது என்பதற்கும் வித்தியாசமிருக்கிறது. விழுந்தாலும், எரிந்தாலும்—வீடு வீழ்வது உண்மைதான். ஆனால், வீடு விழுந்தது என்கிறபோது, ஏதோ பழைய வீடு காற்றிலோ மழையிலோ விழுந்துவிட்டது என்று கூறி விடலாம்; வீடு எரிந்தது என்கிறபோது.....எப்படி எரிந்தது? என் எரிந்தது? வேண்டுமென்றே யாராவது கொளுத்தினர்களா? அல்லது அடுப்பிலேயிருந்த நெருப்பு காற்றில் பரவி விட்டதா? இரவிலே விளக்கின் சுடர் தெறித்து ஓலையிலே தீப் பிடித்து வீட்டை அழித்ததா — இப்படிப் பல கேள்விகள் பிறக்கும். விழுந்ததை விட, எரிந்ததற்கு கேள்விகள் அதிகம். தொடர்புடைய சம்பவங்களும் அதிகம். குமரவடிவின் சாவு எரிந்ததைப் போன்றது. தொடர்புடைய சம்பவங்கள் அதிகம் கொண்டது. அவைகளைச் சொல்லிவிட்டால் சாவின் விபரத்தை நீயும் அறிந்துகொள்ள முடியாது. அவைகளைச் சொல்லவும் எனக்குக் கஷ்டமாயிருக்கிறது!"

"கடைசியாகக் கேட்கிறேன்; சொல்லப் போகிறீர்களா, இல்லையா?"

"இது ஏது வம்பு! அதான் சொன்னேனே; பாம்பு கடித்து இறந்துவிட்டான் என்று!"

"சிவன் கோயில் பாம்பு என்றீர்களே; ...
லுக்கு அப்பா ஏன் போனார்?"

"சுவாமி தரிசனத்திற்காக!"

"அப்பா கோயிலுக்குச் சென்று ...
கிடையாதே; **உள்ளமே கோயில்** எ...
யில் எழுதி வைத்திருக்கிறாரே!"

"அவன் சாமி கும்பிட்டதை ...
சிறையிலிருந்து வந்த பிறகு தெய்வ...
டது அவனுக்கு!"

"ஆகியிருக்க முடியாது!
வரை சிறையிலே மூடும்போது
அந்தப் பாழுங் கடவுள் மீது
நியாயமில்லை!"

"பக்தி ஏற்படாமலா ...
ஓடினேன்....."

இதைச் சொல்லிவி...
னர். அவர் நாக் குழறி...

"என்ன! பாதி ...
லோடு கேட்டான். கி...
திடப்படுத்திக் கொ...
கூடச் சொல்லி வி...
அவருக்கு என்ட...
தெளிவாகத் தெ...

"துரை!
டேன் என்கி...
நீயும் பரிமள...
வெளியிடுகி...

மு. கருணாநிதி

மாகக் காப்பாற்றுவோம் பெரியவரே — நீங்
ம் அதைப் பற்றிக் கவலைப்படாமல் விபரத்
."

வு சிவன் கோயில் பாம்பு கடி-த்தது
அவன் அங்கேயே இறந்து விட்டதும்
ந்தச் சிவன் கோயிலில் தெரியுமா

ர?"

சிவன் கோயில் இருக்கிறதே;

கையின் சவம் தூங்குகிற அதே
ம் பிணமாக விழுந்தான். நடு
ரத்தில் இந்தக் கொடுமை
இருந்தேன்."

போன காரணம்?"

று, நான்கு வருஷங்க
ன்டி தேவதைகளின்
டைபெற்ற செய்தி?
ிய விக்கிரகங்கள்
பட்டிருக்கும் தங்
படும். விக்ரக்ங்
ன்ற நாணயங்
டை செய்வார்
நாணயங்கள்
ன் தொழில்

"அப்படியா?"

"ஆமாம்; அதிலென்ன தப்பு? கையிலே இல்லே; கடவுளைக் கேட்டோம். எடுத்துத் தர அவருக்குக் கை யில்லே — நாங்களே எடுத்துக்கொண்டோம்."

"ம் — பிறகு?"

"பிறகென்ன? எங்கள் வாழ்க்கைச் செலவுகளுக்குப் போக மீதியை வாடிடும் ஏழைகளுக்குத் தந்தோம். ஒரு நாள், குமாரவடிவு ஒரு திட்டம் போட்டான். அதுதான் மருங்கப்பள்ளம் சிவன் கோயில் விக்ரகத்தைப் புரட்டுவது என்பது! அதை நான் தடுத்தேன். அவன் கேட்கவில்லே. மாரி, காளி கோயில்களில் விக்ரகம் புரட்டினால் கொஞ்சம் தான் கிடைக்கிறது. மருங்கப்பள்ளம் கோயில், ராஜா காலத்தில் கட்டப்பட்டது; அதனால் அந்தச் சிலையின் கீழே அதிகமாக இருக்கும். புறப்படு, போவோம், என் றான். நான் எவ்வளவோ போராடினேன். வெற்றி பெற முடியவில்லே. 'அது சக்தியுள்ள கோயில்; விக்ரகத்தைத் தொட்டாலே வெந்து நீராகிவிட வேண்டும் — என்றெல் லாம் ஊரிலே பேசிக்கொள்கிறார்களப்பா' என்றேன். 'பார்ப்போம் அந்த சக்தியையும்' என்றான். புறப்பட் டான். நானும் கூடச் சென்றுதானே தீர வேண்டும். சென் றேன். சிவன் கோயிலுக்குள்ளே அவன் நுழைந்தான், பூட்டை உடைத்துவிட்டு! நான் வெளியிலே காவல் பார்த் துக் கொண்டிருந்தேன்.

திடீரென்று "அய்யய்யோ" என அலறினான் குமார வடிவு! உள்ளே போய்ப் பார்த்தேன். பாம்பு அவனைச் சுற்றிக்கொண்டிருந்தது. பாம்பை உதறிவிட்டு வெளியே ஓடி வந்தான்; 'மயக்கம் வருகிறது' என்று கத்தினான்; கீழே விழுந்தான்; இறந்தான்!

25

குமாரவடிவின் முடிவைச் சொல்லிவிட்டு, மாயாண்டிக் கிழவர் மௌனமாக இருந்தார். துரையின் முகமும் வெளிறிப்போய் இருந்தது. பரிமளா, அவனையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். துரையின் உள்ளத்திலே ஏதோ ஒரு குழப்பம் — அவன் எழுந்து அங்குமிங்கும் உலவினான். அவன் கண்களிலே கலக்கம் — பேசுவதற்கு சிறிது நேரம் எடுத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. பிறகு, கிழவரைப் பார்த்துக் கிண்டல் கலந்த ஆத்திரத் தொனியிலே கேட்டான்:

"ஊருக்கு உபதேசம் செய்யும் ஞானியாகவும், மருத்துவராகவும் இருந்து என் தந்தை வாழ்க்கையை நடத்தினர் என்று முதலில் கூறினீர்களே; அதற்கும் இப்போது சொல்கிற கதைக்கும் நிறைய முரண்பாடு இருக்கிறதே?"

"ஆமாம் — முதலில் அப்படித்தான் சொன்னேன். நீ தோண்டித் தோண்டி இப்படி கேள்விகளைப் போட்டு உண்மை விஷயத்தை கிரகித்துக் கொள்வாய் என்று எனக்கு அப்போது தெரியாது. —

ஞானியாகவும் — மருத்துவனாகவும் வாழ்க்கை நடத்தியது உண்மைதான்! ஆனால் அது குமாரவடிவு அல்ல — இந்த மாயாண்டிதான்! உன் தகப்பனின் தவறுகளை உன்னிடம் சொல்லக்கூடாது என்பதற்காகவே முதலில் மறைத்தேன். அவன் இறந்த பிறகு நான் மேற்கொண்ட மருத்துவத் தொழிலை அவன் செய்துவந்த தொழிலென்று உன்னிடம் பொய் சொன்னேன். நீ என்ன, என்னைப் பொய் சொல்ல விடுகிறாயா? உண்மைகளையெல்லாம் கக்க வைத்து விட்டாய்."

"மருங்கப்பள்ளம் கிராமம்தான் என் தந்தையின் வாழ்க்கைப் பாதையைத் திருப்பியது என்றீர்களே முன்பு — அது?"

"அதுவா?—அது தெரியவில்லையா உனக்கு! கொள்ளேக்கார குமாரவடிவை வாழ்க்கைப் பாதையிலிருந்து திருப்பி சாவுப் பாதைக்கு அழைத்துச் செல்ல அந்தக் கிராமம் காரணமாயிருந்தது என்பதையே அப்படிச் சொன்னேன்."

"அது போகட்டும் — ஏதோ புதையல் ரகசியம் அப்பாவிடம் கிடைத்தது — ஆனல் அதை யாருக்காக எடுக்க வேண்டும் என்று அப்பா கவலைப்பட்டார் — என்பதாகத் தெரிவித்தீர்களே; அதுவும் பொய்தானு?"

"கவலைப்பட்டது உண்மைதான் — புதையல் ரகசியம் கிடைத்ததும் உண்மைதான். குமாரவடிவு — தன் மரண முகப்பிலே அந்த ரகசியத்தை என்னிடம் ஒப்படைத்து விட்டுத்தான் கண்ணை மூடினன். அப்படி ஒப்படைக்கும் போதுதான் என்னிடம், அவன் அழுதுகொண்டே சொன்னன்: "மாயாண்டி — உண்மையிலேயே இந்தக் குறிப்பின் படி புதையல் கிடைத்தாலும், அதை யாருக்காக நான் எடுக்கவேண்டும்? இதோ, ஒரு நொடியில் சாகப் போகிறேன். இந்தா, இதை நீயே வைத்துக்கொள்; புதையலை எடுத்து ஏதாவது நல்ல காரியங்கள் செய்ய முடியுமானல் முயற்சித்துப் பார்; அப்படி முடியாவிட்டால் யாரிடமாவது சுயநலக்காரர்களிடம் அது சிக்கிவிடாமல் பார்த்துக்கொள்! மாயாண்டி! என் மகனையும், மகளையும் சந்திப்பாயானல் என்னுடைய கதையை அவர்களிடம் சொல்லி விடாதே!—

இந்த வார்த்தைகளோடு அவன் மூச்சும் அடங்கி விட்டது. புதையலைக் கண்டுபிடிக்கும் செப்பேடும், சிறு

கல்லும் என் கையிலே! அவைகளை வைத்துக் கொண்டு என்ன செய்வதென்றே எனக்குப் புரியவில்லை."

துரை குறுக்கிட்டுப் பேசினான்; "ஆமாம் — அந்த செப்பேடும் சிறுகல்லும் என் தந்தையிடம் எப்படிக் கிடைத்தன?"

"அதைத்தானே சொல்ல வருகிறேன். மருங்கப்பள்ளம் கோயிலில் விக்ரகத்தைப் பெயர்க்கப் போதேமே — அப்போது குமாரவடிவிடம் அந்த ரகசியம் கிடைத்தது. அவனைக் கோயிலுக்கு அனுப்பிவிட்டு நான் தூரத்தில் நின்றேன், காவலாக! கோயிலில் நுழைந்த அவன் வழி தெரிவதற்கோ, எதற்கோ தீக்குச்சியைக் கிழித்திருக்கிறான். அவன் கண்களிலே இந்த எழுத்துக்கள் பட்டிருக்கின்றன.

"எழுவானுக்கும் தொழுவானுக்கும் இடையிலே.....
காக்கை மூக்கு நிழலிலே.....
கள்வர் புகும் வழியிலே.....
கண்டாலும் கம்மாளர் கண்ணிலே.....
எழுபது கோடி பசும் பொன்!" —

என்பதுதான் அந்த வாசகம். குமாரவடிவு யோசித்திருக்கிறான். சுற்றுமுற்றும் பார்த்திருக்கிறான். வார்த்தைக்கு வார்த்தை பொருள் பிரித்திருக்கிறான். 'எழுவான்' என்பது உற்சவ விக்ரகம் — விழாக் காலங்களில் எழுந்தருளுகின்ற சிலை; 'தொழுவான்' என்பது மூல விக்ரகம். ஆகவே மூல விக்ரகத்துக்கும், உற்சவ விக்ரகத்துக்கும் இடையிலே — என்று பொருள் கொண்டான். 'காக்கை மூக்கு நிழலிலே' அதையும் யோசித்திருக்கிறான். அங்கே சனீஸ்வரனின் சிலையொன்று காக்கை வாகனத்தில் அமர்ந்திருக்கிறது. அந்தக் காக்கையின் மூக்கு நிழல் எங்கெங்கே படுகிறது என்று கையிலேயுள்ள தீக்குச்சியின் மூலம் கவனித்து, அதையும் குறித்துக் கொண்டிருக்கிறான். 'கள்வர் புகும்

வழியில்' — என்பதற்கு அர்த்தமே தேவையில்லை. அவன் புகுந்த வழியும், அர்ச்சகர்கள் புகுந்திடும் வழியும் ஒன்று தானே! ஆகவே கள்வர் புகும் வழியை சுலபமாகக் கண்டு பிடித்துவிட்டான். 'கண்டாலும் கம்மாளர் கண்ணிலே' — என்பதுதான் அவனைக் கொஞ்சம் குழப்பியிருக்கிறது. பிறகு அந்தக் குழப்பத்தையும் தீர்த்துக்கொண்டான். யாரோ ஜாதிப் பித்து பிடித்தவர்கள் கையிலே சிக்கியிருக் கிறது இந்த ரகசியம் என்று முடிவு கட்டிக்கொண்டு, கை யிலேயுள்ள கடப்பாறையால் தான் குறித்துக் கொண்ட இடத்தில் குத்தினான். 'டங்' என்று சப்தம் கேட்டது. மீண்டும் தோண்டிப் பார்த்தான். ஒரு சிறிய பெட்டி — மிகச் சிறிய பெட்டி — அதிலே ஒரு சிறு கல் — செப்பேடு! அந்தச் செப்பேட்டிலே புதையலைக் கண்டுபிடிக்கும் வழி கள் — அந்த இடத்திலே கொண்டுபோய் அந்தச் சிறு கல்லை வைத்தால், புதையல் இருக்குமிடத்திற்கு அந்தக் கல் இழுக்கப்படும் — அங்கே தோண்டினால் ஏராளமான பொன் கிடைக்கும் — அத்தகைய மகத்தான ரகசியம் அவனிடம் அகப்பட்டது. அதை எடுத்துக் கொண்டு திரும்பும்போதுதான் பாம்பு அவனைக் கடித்தது. சப்தம் போட்டான். உள்ளே ஓடினேன். பாம்பை உதறிவிட்டு வெளியே ஓடி வந்தான். விஷயத்தை விசாரித்தேன் — நடந்தவைகளைச் சொன்னான்."

பரிமளா இடைமறித்து "அவரைப் பாம்பு கடிக்கக் காரணம்?" என்று ஆவலாகக் கேட்டாள்.

"பகவானின் கோபத்தாலோ, புதையல் ரகசியத்தின் மகத்துவத்தாலோ பாம்பு கடித்தது என்று எண்ணு கிறாயா? — அது ஒன்றுமில்லை; அப்படியானால், அந்தப் பாம்பு என்னையும் கடித்திருக்க வேண்டுமே — குமாரவடிவு கொடுத்த ரகசியம் என்னிடம்தான் இருக்கிறது. இதுநாள் வரையில் எந்தப் பாம்பும் என்னைத் தீண்டவில்லையே!

கோயில்களில் விக்ரகங்களைப் புரட்டி காசு திருடினன் குமாரவடிவு என்பதற்காக பாம்பு கடித்திருக்குமென்றால், குமாரவடிவை விடப் பெரிய கொள்ளைக்காரர்கள் கோயில் தர்மகர்த்தாக்கள் என்ற பெயரிலே — அர்ச்சகர்கள், பூசாரிகள் என்ற பெயரிலே — கோயில் சொத்துக்களை சுருட்டிக் கொண்டிருக்கிறார்களே; அவர்களையெல்லாம் அங்கத்திற்கு ஒரு பாம்பு வீதம் கடித்திருக்க வேண்டுமே! பாம்பு கடித்ததற்கு பழைய நம்பிக்கைப்படி காரணம் எதுவுமில்லை பரிமளம்! பழமையான கோயில் — அதிகப் புழக்கமில்லாத இடம் — புதரும் மரங்களும் நிறைந்த பகுதி — பாம்புகள் தங்கள் வாசஸ்தலமாக அந்த ஆலயத்தை ஆக்கிக்கொண்டிருக்கின்றன. அவைகளிலே ஒன்றை, அவசரத்திலே குமாரவடிவு மிதித்திருக்கிறான்; கடித்து விட்டது. குற்றவாளிகளைத் தண்டிக்க கோயில் கொண்ட கடவுள் பாம்பு களை அனுப்புவதென்றால், தன் ஆலயத்துக்கு முன்பு பச்சைக் குழந்தையை ஒரு படுபாவி சாமியார் கொலை செய்தானே, அந்தக் கொடுமையைப் பார்த்துக் கொண்டிருப்பானேன்? —

குமாரவடிவு கோயிலில் நுழைந்ததற்கும் — பாம்பு கடித்ததற்கும் புதிய அல்லது பழைய காரணம் எதுவுமில்லை. இயற்கையாக — சந்தர்ப்ப வசத்தால் நடந்து விட்டது. அவ்வளவுதான்!"

துரையின் கண்களிலே நீர்த் துளிகள் தேங்கி நின்றன. தன் தந்தை, திருடித்தான் வாழ வேண்டும் என்கிற நிலை பெற்றதும், அப்படித் திருடும்போது தேடற்கரிய திரவியம் கிடைத்தும், அதை எடுத்து அனுபவிக்க முடியாமல் மாண்டு போக நேரிட்டதும், ஆகிய இந்தச் செய்திகள் அவனை அனலில் தள்ளி வாட்டின. 'அப்பா!' என்று ஈன சுரத்தில் முனகினன். அவன் இருதயத்திலே ஒப்பாரியும் புலம்பலும் ஆரம்பமாகி விட்டது என்பதை அவன் கண்

கள் தெரியப்படுத்திக் கொண்டிருந்தன. பரிமளாவுக்கும், தன் அத்தானின் நிலை சங்கடத்தைக் கொடுத்தது. மாயாண்டிக் கிழவர், அவனைப் பரிவோடு பார்த்து —

"பார்த்தாயா — இதற்குத்தான் நான் உண்மையைச் சொல்ல மாட்டேன் என்றேன். என்னிடம் எந்தக் கதையையும் கேட்காதே என்றேன் — விடமாட்டேன் என்றாய்— இப்போது விசனப் படுகிறாய்" என்று அங்கலாய்த்துக் கொண்டார்.

"பெரியவரே! — பாம்பின் விஷத்தை இறக்கி, அப்பாவைக் காப்பாற்ற முடியாமலே போய் விட்டதா?" — துரை கேட்டான் சோகத்தோடு!

"முடியாமல்தான் போய் விட்டது. எத்தனையோ மூலிகைகளைக் கொண்டு வந்து முயற்சித்துப் பார்த்தேன்; முடியவில்லை. அவனும், தான் இறந்து விடுவோம் என்பதைத் திண்ணமாகத் தெரிந்துகொண்டான். புதையல் ரகசியம் கிடைத்த விபரத்தை மயக்கத்தோடு சொன்னான். சொல்லி விட்டு என்னைப் பிரிந்தான் — 'கோயில் திருடன் ஒழிந்தான்' என்று ஊரிலே பேசிக் கொண்டார்கள். ஆனால் குமாரவடிவுதான் அந்தத் திருடன் என்பது யாருக்கும் தெரியாது —

கோயில்களிலே திருட்டு நின்றுவிட்டது. அதையொட்டி திருடன் ஒழிந்தான் என்று ஊரிலே கூறி விட்டார்கள். எனக்கு சரியான துணையில்லாத காரணத்தால் இரவில் கோயில் நுழையும் தொழிலை நிறுத்தி விட்டேன். தொழிலை நிறுத்தியதற்கு அது மட்டுமல்ல காரணம்; எனக்கு அந்தத் தொழிலை நீடித்து நடத்தப் பிரியமும் இல்லை. போலீசார் கையில் சிக்கிவிட்டால் என்னிடம் இருக்கிற புதையல் ரகசியமும் அல்லவா பறிபோய்விடும்—

நீ போலீஸ் உடையில் என்னைப் பிடித்தபோது கூட அதற்காகத்தானே நான் அதிகமாக பயப்பட்டேன். ஆகவே, பிழைப்பு நடத்த வேறு வழிகளை யோசித்தேன். உன் தகப்பன் செய்தான் என்று பொய் சொன்னேனே, அந்த மருத்துவத் தொழிலை மேற்கொண்டேன். வயிற்றைக் கழுவ மார்க்கம் ஏற்பட்டது. சித்தர் என்று என்னை நானே எண்ணிக்கொண்டு அதன்படி நடக்கலானேன் —

என் வாழ்க்கையில் ஏற்பட்ட திருப்பங்களும், உன் தந்தையின் வாழ்வில் ஏற்பட்ட திடுக்கிடும் சம்பவங்களும், எனக்குப் புதிய புதிய எண்ணங்களை வடித்துக் கொடுத்தன. அனுபவம் சிறந்த ஆசானல்லவா? அந்த அனுபவங்களைப் பின்னணியாக அமைத்து, என் மனதில் தோன்றிய கருத்துக்களை இசைத்தேன் —

தப்போ — சரியோ — எனக்கு சரியென்று பட்டவைகள், மற்றவருக்கும் சரியென்று படவேண்டுமென்ற பிடிவாதம் ஏற்பட்டது எனக்கு! இதெல்லாம் குமாரவடிவு இறந்த பிறகு — ஆம்; கொள்ளைக்காரன் இறந்த பிறகு — என் நிழல் — என் ஆருயிர் நண்பன் இறந்த பிறகு ஏற்பட்ட மாறுதல்கள் —

வெறும் மாயாண்டி, மாயாண்டி வைத்தியரானேன். பிறகு மாயாண்டிச் சாமியாராகவும் ஆனேன். பெரியதொரு பொக்கிஷத்தின் சாவி என்னிடம் இருக்கிறது. பொக்கிஷமும் இருக்கிறது. ஆனால், அதைத் திறந்து பொன்மலைகளை வெளியே எடுக்க எனக்குப் பயமாக இருக்கிறது.”

“மருங்கப்பள்ளம் புதையலைத்தானே குறிப்பிடுகிறீர்கள்” — துரை கேட்டான் இப்படி.

“ஆமாம்; அதைத்தான் குறிப்பிடுகிறேன். ஒண்டிக்கட்டையாக ஊர் சுற்றுவதிலே இருக்கிற ஆனந்தம், அந்தப் புதையலை எடுத்த பிறகு எனக்கு ஏற்படுமா என்பது

சந்தேகந்தான்! அதுவுமின்றி அதை எடுத்து விட்டேன் என்ற சேதி தெரிந்துவிட்டால், எத்தனைக் கத்திகள் என் முகத்தில் பாயுமோ — அதுவும் பயமாயிருக்கிறது! வேறு யாரிடமாவது இந்த ரகசியத்தைக் கொடுத்து விடுவோ மென்றுல், குமாரவடிவு சொன்னது போல, யாராவது சுய நலக்காரர்கள் கையிலே சிக்கி — அந்தப் புதையல் சிரழிந்து விடுமே என்கிற எண்ணம் குறுக்கிடுகிறது. என்னிடம் புதையலைப் பற்றிய ரகசியம் இருப்பது ஒரு சிலருக்குத் தெரிந்து விட்டது என்பதும் புரிந்து விட்டது. விஷயம் முற்றுவதற்குள் இந்த ஊரை விட்டே ஓடிவிடலாம் என்று தான் இலங்கைக்குப் புறப்பட்டேன். போகும் வழியில் தான் மனோராவில் உங்களை சந்தித்தேன். திரும்பி, உங்களோடு இப்படிக் கதை பேசவேண்டிய சந்தர்ப்பமும் ஏற்பட்டது. அதோடு என் நண்பனின் மகனைக் கண்ட சந்தோஷமும் ஏற்பட்டது. இனிமேல் எனக்குக் கவலையில்லை. இந்த சொத்துக்கு உரியவன் யாரோ, அவனிடமே இதைக் கொடுத்து விடலாம்.”

கிழவர் பெருமூச்சு விட்டார்.

“பெரியவரே! அந்த ரகசியம், கோயிலிலே புதைக்கப் பட்ட காரணம் என்ன?” என்றுன் துரை.

“மருங்கப்பள்ளத்திலே ஒரு கொல்லர் குடும்பத்தைப் பற்றி பெரிய கதை சொல்வார்கள். அந்தக் கொல்லர்தான் அந்தப் புதையலுக்கு உரியவராம். அவர் குடும்பம் முழுவதும் கடலில் அமிழ்ந்து அழிந்து விட்டது. எதிர்பாராமல் குடும்பம் அழியும் என்பதை அறியாத அவர், புதையல் ரகசியத்தை அந்தக் கோயிலில் மறைத்து வைத்திருப்பார் என்று யூகிக்கிறேன். கதை, உண்மையோ பொய்யோ — அங்கே புதையல் இருப்பது உண்மை — “எழுவானுக்கும் தொழுவானுக்கும்” என்ற பாடல் இருப்பது உண்மை — இந்தக் கல்லைக் கொண்டுபோய், செப்பேட்டில் குறித்த

இடத்தில் வைத்தால் புதையல் அகப்படுமென்றும் நம்புகிறேன்.”

“நீங்கள் முயற்சித்துப் பார்த்திர்களா?”

“நான் எப்படி முயற்சிப்பது? முயற்சிக்கும்போது, திடீரென்று மலை மலையாகப் பொன் மணிகள் வெடித்து வந்துவிட்டால் அவைகளை நான் எப்படிப் பாதுகாப்பது? நமது அரசாங்கம் நடந்தாலும், அவர்களிடம் கொண்டு போய் ரகசியத்தைக் காட்டி, புதையலைப் பொதுமக்களுக்குப் பயன்படுத்தச் சொல்வேன். சொன்னலும் நடக்கும். நடப்பதோ அன்னியர் ஆட்சி! இது முடிந்து நமது ஆட்சி வரும் வரையில் எனக்கு ஆயுள் நீளும் என்பது சந்தேகம் தான். அதனால்தான் எதுவும் புரியாமல் அலைகிறேன். யாரிடம் கொடுப்பது என்பது தெரியாமல் தவிக்கிறேன். துரை! இனிமேல் நான் அலைய வேண்டியதில்லை; ஆளைத் தேடவும் வேண்டியதில்லை; பொறுப்பான வாலிபன் நீ கிடைத்து விட்டாய். உன் தந்தை கண்டுபிடித்த சொத்து நீயே வைத்திரு பத்திரமாக! காலம் வரும்போது, இதன் உதவியைக் கொண்டு புதையலை எடு. அதைப் பொதுமக்களுக்குப் பயன்படுத்தும் நிலை வரும் வரையில் காத்திருப்போம். என் காலத்தில் நல்ல அரசு மலராவிட்டாலும், உன் காலத்தில் மலராமலா போகப் போகிறது! அப்போது அந்த அரசிடம், இதை ஒப்படைத்து — நாடு செழிக்க, வழி வகுத்திடு! இந்தா இதைப் பிடி!” என்று உணர்ச்சியோடு கூறிக்கொண்டு, மடியிலிருந்த செப்பேட்டையும் சிறு கல்லையும் எடுத்து துரையிடம் நீட்டினார் மாயாண்டி. துரை, அதை வாங்குவதற்காகக் கை நீட்டினான். திடீரென்று பயங்கரமான சப்தத்துடன், ஒரு முரட்டு மனிதன் கொல்லைப் புறமிருந்து உள்ளே பாய்ந்தான். இவ்வளவு நேரமும் ஜன்னல் வழியாக இவர்கள் பேச்சைக் கவனித்துக் கொண்டிருந்த கரிய உருவமே அது!

முரடனின் கரத்திலே ஒரு கத்தி இருந்தது. முகத்திலே கொலை வெறித் தன்மை இருந்தது!

"மாயாண்டி — மரியாதையாக அதை இங்கே கொடு" என்று கத்தினன் அந்த முரடன்.

"யார்? அடப் பாவி — ஐயப்பனே?" என்று அலறினாள் மாயாண்டி. பரிமளா கதறிக் கொண்டு ஓட ஆரம்பித்தாள்.

26

"அடப்பாவி ஐயப்பனே?" என்று கிழவர் அலறியதும், "ஆமாம்; ஐயப்பன்தான்! அடே கிழவா! எங்கே ஓடப் பார்க்கிறாய்? மரியாதையாக நில்!" என்று பயங்கரமாகக் கத்திக்கொண்டு உரக்கச் சிரிக்க ஆரம்பித்தான் ஐயப்பன். தடுமாறுகியபடி பரிமளா இங்குமங்கும் ஓடினாளே தவிர, இன்னது செய்வதென்று அவளுக்குப் புரியவில்லை. துரை கொஞ்சம் பின்வாங்கி நின்று கொண்டு, ஐயப்பனை எதிர்க்கத் தயாரானான். கிழவரும் தன் உடலை வளைத்து நிமிர்த்தி, ஐயப்பனின் முதல் தாக்குதலிலேயிருந்து சமாளித்துக் கொண்டு துரையுடன் சேர்ந்து கொண்டார்.

"கிழவா — நீ தப்பவே முடியாது! உயிர்மேல் ஆசையிருந்தால் கையில் உள்ளதை இப்படிக் கொடுத்து விடு!— ஏ, பொடியனே! நீயும் விலகிப் போய்விடு—வீணாக வம்பை விலைக்கு வாங்காதே!" என்று கர்ச்சனை புரிந்தான், கரகரத்த தொனியிலே ஐயப்பன்.

அவனது கொடூரமான பார்வையும், கையிலே பிடித்திருக்கும் பளபளப்பான கத்தியும், ஏதோ ஒரு திடுக்கிடும் முடிவை விரைவிலே உண்டாக்கும் அறிகுறிகளாக அமைந்

திருந்தன. துரை, பின்னேக்கியே நகர்ந்து நகர்ந்து, மெதுவாக பீரோவின் பக்கம் வந்துவிட்டான். ஐயப்பனும் அவர்களிருவரையும் தொடர்ந்தபடி மெதுவாக முன்னேக்கி, தன் தடித்த கால்களை ஊன்றிக்கொண்டே நகர்ந்தான். பீரோவிடம் வந்துவிட்ட துரை, சடக்கென பீரோவின் கதவைத் திறந்து, அதிலேயிருந்த கைத் துப்பாக்கியை எடுத்துக் கொண்டான். அதுகண்ட பரிமளாவுக்கு உயிர் வந்தது போலாயிற்று. மாயாண்டிக் கிழவரும் மனத் துணிவு பெற்றார்.

"ஐயப்பா! ஜாக்ரதை! நீ சொன்னதை இப்போது திருப்பிச் சொல்லுகிறேன். உயிர் வேண்டுமானால் — இப்போதே ஓடி விடு!" என்று கிழவர் அழுத்தந் திருத்தமாகவும் ஆத்திரத்தோடும் கத்தினர்.

"தெரியுமடா, அது நாடகத் துப்பாக்கி என்று!" — இதைக் கூறிக்கொண்டே நரி ஊளையிடுவது போல சிரித்துக் காட்டினன் ஐயப்பன்.

துரைக்கு ஆத்திரம் பொங்கியது. தன்னால் மன்னிக்கப்பட்டு விரட்டப்பட்டவன், தன்னையே மிரட்டிக்கொண்டு எதிரே நிற்கிறானேயென்று துரை கொதித்தான். துப்பாக்கியை அவனுக்கு நேராக நீட்டி, "போகிறாயா? இல்லையா?" என்று உறுமினன்.

ஐயப்பன் பதில் சொல்லவில்லை; சிரிக்கத் தொடங்கினன் மறுபடியும்.

"சுட்டுத் தள்ளிவிடுவேன் — ஜாக்ரதை!" என்று துரை மீண்டும் கத்தினன்.

"சுடுடா பார்ப்போம்! சூரப் புலி மகனே, சுடுடா!" என்றபடி ஐயப்பன் அருகே நெருங்க ஆரம்பித்தான். ஏறத்தாழ ஐயப்பனின் கையிலுள்ள கத்தி துரையின்

நெஞ்சுக்கு நேராக நின்றது. சமயம் பார்த்திருந்த துரை கத்தியைத் தட்டிவிட்டு, ஐயப்பனின் கையில் பலமாகத் தாக்கினன். கத்தி கீழே விழுந்தது கண்ட ஐயப்பன், அதை எடுக்க அவசரமாகக் குனியவே, ஏற்ற சந்தர்ப்பம் இதுவென எண்ணிய துரை, அவனது கழுத்தை கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். இருவரும் ஒருவரையொருவர் விடாமல் சண்டையிட ஆரம்பித்தார்கள். இருவர் முகத்திலும் மாறி மாறி குத்துகள் விழ ஆரம்பித்தன. ஐயப்பனின் முரட்டுத்தனமான தாக்குதலை துரையினால் சமாளிக்க இயலாது எனக் கண்ட மாயாண்டி, ஐயப்பனின் தலையிலும், மார்பிலும் இஷ்டம்போல் தாக்க ஆரம்பித்தார். மாயாண்டியின் குறுக்கீட்டை ஐயப்பன் வெகு சுலபமாக சமாளித்துக் கொண்டான். அவர் அருகே வரும்போதெல்லாம் தன் காலால் பலங்கொண்ட மட்டும் அவரை உதைத்து உருட்டினன். அதோடு துரையையும் தாக்கிக் கொண்டிருக்கத் தவறவில்லை.

அத்தான், அந்த முரடனை எதிர்ப்பதற்கு மிகவும் கஷ்டப்படுவதையும், துணைக்கு செல்ல முடியாதபடி கிழவர் தவிப்பதையும் கண்ட பரிமளாவுக்கு பயம் அதிகமாகியது. ஐயப்பனை, கிழவரைக் காலால் உதைத்துக் கொண்டே, துரையின் முகத்தில் தன் முரட்டு முகத்தால் மோத ஆரம்பித்தான். துரை அவனிடம் நன்றாக சிக்கிக் கொள்ளவே, அவனை நகர்த்திக்கொண்டே போய் கத்தியைக் கையில் எடுக்க முயற்சி செய்தான் ஐயப்பன். அதை உணர்ந்த கிழவர், கத்தியை அவனிடமிருந்து தள்ளி விடுவதற்காக ஓடும்போது, நாற்காலி தடுக்கி தலைகுப்புற கீழே விழுந்தார். அவரைத் தூக்கிவிட்டு, பரிமளா கத்தியிடம் ஓடினாள். ஆனால் அதற்குள் ஐயப்பனின் கையில் கத்தி அகப்பட்டுவிட்டது. கத்தி வைத்துள்ள அவனது கையை துரை பலமாகப் பிடித்துக் கொண்டான். அந்தப் பிடியி

லிருந்து துரை சிறிது தளருவானேயானாலும் தன் உயிரை இழக்க வேண்டியதுதான். இதைப் பார்க்கும் பரிமளாவுக்கு எப்படியிருக்கும்? ஐயப்பனை ஒழித்துக் கட்ட என்ன செய்யலாமென்று யோசித்தாள். சுற்று முற்றும் பார்த்தாள். இருட்டிலே ஒரு மூலையில் கைத் துப்பாக்கி கிடந்தது. அதை ஓடிப்போய் எடுத்தாள். ஐயப்பனிடமிருந்து அத்தானைக் காப்பாற்ற வேண்டுமானால், கொலை செய்வதைத் தவிர, வேறு வழியில்லையென்று கண்டாள்.

"ஏய்! அவரை விடுகிறாயா? — சுடட்டுமா?" என்று ஆவேசமாகக் கூச்சலிட்டாள். அவளது கூச்சலை அவன் காதில் வாங்கவேயில்லை. நிலைமை விபரீதமாகிவிடும் எனக் கண்ட பரிமளா, கைத்துப்பாக்கியின் விசையை அமுக்கினாள், ஐயப்பனுக்கு சரியாகக் குறி வைத்து! ஆனால், அதில் சப்தம்தான் கேட்டதே தவிர, ரவை வெளிப்படவில்லை. புகை கிளம்பியது. அது நாடகத் துப்பாக்கிதான் என்பதை பரிமளா புரிந்து கொண்டாள். ஐயப்பன் கொடூரமாகச் சிரித்தான் — பைத்தியங் கொண்ட நாய்போலக் குரைத்தான் — "அது நாடகத் துப்பாக்கி" என்பதை அந்தச் சிரிப்பு, குரைப்பு மூலமே விளக்கினான். கிழவரும் ஏமாற்றத்தோடு நின்றார்.

ஐயப்பனை நெருங்கவும் முடியவில்லை அவரால். அங்குள்ள நாற்காலி, பலகை, எல்லா சாமான்களையும் தூக்கி ஐயப்பன் மீது வீசிப் பார்த்துவிட்டார். சில குறி தவறி வேறு பக்கம் விழுந்தன. சில அவன் மேலே விழுந்து தோலில் சிறு காயத்தை ஏற்படுத்தியதோடு தங்கள் உருவத்தை வீணுக்கிக் கொண்டன.

நிலைமை மிஞ்சிவிட்டதை உணர்ந்த பரிமளா, வாயிற் புறத்துக் கதவைத் திறந்துகொண்டு வெளியே ஓடினாள்.

"பரிமளா! எங்கும் ஓடாதே இருட்டில்!" என்று கிழவர் கத்தினர்.

"இருங்கள்; இதோ வந்து விடுகிறேன்" என்று கூறிக்கொண்டே பரிமளா ஓட ஆரம்பித்தாள்.

தெருவிலே யாரையாவது துணைக்குக் கூப்பிடுவோம் என்ற முடிவுடன்தான் அவள் அவ்வளவு அவசரமாக ஓடி வந்தது! துரை வீட்டுக்கு மிக அருகாமையிலே வீடுகள் இல்லாததால், பரிமளா, உரத்த குரலெடுத்து "ஐயோ ஆபத்து — ஆபத்து — யாராவது வாங்களேன்!" என்று கூவினாள். அவளது சப்தம் மட்டும் எதிரொலித்ததே தவிர, ஆதரவுக் குரல் கொடுக்க யாரும் வரவில்லை. அந்த இருட்டிலே — அயர்ந்து தூங்குகிற நிசி வேளையிலே யார் தான் வருவார்கள்? பரிமளா இன்னும் சிறிது தூரம் ஓடிப் போய்க் கத்திப் பார்த்தாள். "ஐயோ.....ஓடி வாங்க..... ஆபத்து! ஆபத்து!" என்று!

அவள் ஓடிய திசையிலேயிருந்து அவளை நோக்கி ஒரு வெளிச்சம் வந்தது. வெளிச்சத்தைக் கண்டதும் பரிமளாவுக்கு அவளையறியாமல் ஒரு தைரியம் மூண்டது. ஒளி வந்த திக்கு நோக்கி ஓடினாள். நாலைந்து பேர் வேகமாக வருவதும் தெரிந்தது. பரிமளாவுக்கு இன்னும் துணிவு அதிகமாகியது.

அவர்களை நோக்கி வேகமாக ஓட ஆரம்பித்தாள். வருபவர்களை வெளிச்சத்தின் உதவியால் போலீஸ்காரர்கள் என்று அடையாளம் கண்டுகொண்டாள்.

"ஐயா! ஐயா! ஓடி வாங்க — பெரிய ஆபத்து! சீக்கிரம் — சீக்கிரம்" — என்று கதறியபடி அவர்களிடமே வந்துவிட்டாள் பரிமளா.

"இந்நேரம் என்ன ஆகியிருக்குமோ? தன் ஆசை அத்தானை அந்த அக்ரமக்கார மூரட்டுப் பயல் என்ன செய்

தானே? தான் போய்ப் பார்க்கும்போது அத்தானின் நிலைமை என்னவோ? உயிரோடு பார்க்க முடியுமோ இல்லையோ? 'பொன்னே! பூவே!' என்றெல்லாம் கன்னல் மொழி உதிர்த்து காதல் கீதம் பாடிய அத்தானின் இதழ்களில், தன் இதழ்களை இனியொரு முறை ஒற்றியெடுக்க முடியுமோ; முடியாதோ?" —

இப்படியெல்லாம் எண்ண அலைகள் குமுறியெழுந்திட, ஓட்டமும் நடையுமாக இருளிலே தவித்த பரிமளாவின் எதிரிலே நின்ற அந்த "ஆபத்பாந்தவர்கள்" யார்?

போலீஸ்காரர்கள் தான்! பரிமளாவுக்கும் பூரிப்பு ஏற்பட்டது. போலீசாரே உதவிக்கு வந்தது அவள் எதிர் பார்க்காத சம்பவமல்லவா!

கண்களிலே புதிய ஒளி பெற்று நின்றாள் பரிமளா. ஒரு போலீஸ்காரர் தன் கையிலேயுள்ள அரிக்கன் விளக்கைத் தூக்கி அவள் முகத்துக்கு நேராகப் பிடித்து, "யாரம்மா நீ?" என்று கேட்டார். அவர் கேட்டு முடிப்பதற்குள் "இவள்தான் பரிமளா!" என்ற ஒரு குரல் கேட்டது. அந்தக் குரலை எழுப்பியவர் போலீஸ்காரர் அல்ல; ஆனால் போலீஸ்காரரோடு வந்தவர்தான்.

"யார்?" என்று திகைத்தாள், தீ மிதித்தவள் போல பரிமளா!

"யாரா? நான்தான் உங்க அப்பன் தாண்டவன்" என்று பதில் வந்தது. ஆம், பரிமளாவின் தந்தை தாண்டவன்தான் போலீசாருடன் வந்தவர். பரிமளாவைப் போலீசார் சூழ்ந்து கொண்டார்கள். பரிமளாவின் மன நிலை கற்பனைக்கு எட்டக்கூடியதா என்ன? — கரையிலிட்ட மீன் போலானாள், அந்தக் கட்டழகி

27

சுற்றிலும் போலீசார் — அதோடு அனல் மொழி சிந்திடும் தகப்பன் தாண்டவன் — இவர்களுக்கிடையே சிக்கிக்கொண்ட பரிமளாவுக்கு எப்படித் தப்புவது என்றே புரியவில்லை. அங்கே, அத்தானின் கதி என்ன ஆயிற்றோ புரியவில்லை. கூர்மாவதாரம் போன்றவனின் கையிலே யிருந்த அந்தக் கூரிய கத்தி அத்தானின் நெஞ்சிலே பாய்ந்துவிட்டதோ என்னவோ — அதை நினைத்துக் கவலைப் படுவதா? அல்லது, தான் விடுபட முடியாதபடி சிக்கிக் கொண்டதை நினைத்து கவலைப்படுவதா?

மின்னற் பொழுதுதான்! அதற்குள் அந்தக் கன்னல் மொழிக்காரி ஒரு புது வழி கண்டுபிடித்து விட்டாள். தன் னையும் குற்றமற்றவளாக்கிக் கொள்ள — அதோடு தன் அத் தானையும் காப்பாற்றிட அந்த வழியே சிறந்ததென எண்ணினாள்; பதட்டத்தோடு பேசினாள்.

"என்னைத் தூக்கிக்கொண்டு வந்தவன், அதோ தா வீட்டில்தான் இருக்கிறான். வாருங்கள்! உடனே போய் அவனைப் பிடிக்கலாம்" என்று பரிமளா கூறியதும், போலீசார், "எங்கே? எந்த வீட்டில்?" என்று ஆவலாகக் கேட்டார்கள்.

"என்னோடு வந்தால் காட்டுகிறேன் — யாரோ ஒரு பயங்கரமான மனிதன் — பார்ப்பதற்கே விகாரமான சொரூ பம் — அவன்தான் என்னைத் தூக்கிவந்து கெடுக்க முனைந் தான். நல்ல வேளையாக தக்க சமயத்தில், ஒரு கிழவரும் ஒரு வாலிபரும் குறுக்கே புகுந்து என்னைக் காப்பாற்றி னார்கள். முரடனுக்கும் அந்த வாலிபருக்கும் சண்டை — இந்நேரம் கொலைகூட நடந்திருக்கலாம் — சமயம் பார்த்து நான் தப்பி வந்துவிட்டேன்" என்று பதட்டத்தோடு பேசினாள், பரிமளா!

"வாருங்கள் போகலாம்" என்று துடி துடிப்போடு போலீசார் புறப்பட்டார்கள். பரிமளா வழி காட்டிக் கொண்டே போனாள். தாண்டவனுக்கு எதுவுமே புரியவில்லை. மகள் கூறுவது உண்மையாகத்தானிருக்குமா? அவள் இஷ்டத்துக்கு விரோதமாக எவனே ஒருவன் அவளைத் தூக்கி வந்திருப்பானா? அல்லது அவளே அவளது கள்ளக் காதலனுடன் ஓடி வந்துவிட்டு, தப்பித்துக் கொள்வதற்குப் பொய் சொல்லுகிறாளா? என்று யோசித்தபடி நடந்தார். இருட்டிலே பரிமளா முன் செல்ல, போலீசார் பின் செல்ல—கடைசியாக "இதுதான் வீடு!" என்று பரிமளா நின்றாள். போலீசார் 'திபு திபு' என்று உள்ளே நுழைந்தார்கள். பரிமளாவும் ஆவல் தும்ப உள்ளே எட்டிப் பார்த்தாள். அவள் உட்பட அனைவருமே ஏமாந்து விட்டார்கள்!

ஐயப்பனே, மாயாண்டியோ, அல்லது துரையோ யாருமே அங்கு காணப்படவில்லை. சிதறிக் கிடந்த சாமான்களையும், உடைந்து கிடந்த கண்ணாடிக் குவளைகளையும் மாத்திரமே காண முடிந்தது. பரிமளா திடுக்கிட்டாள். அத்தானை எப்படிப் பார்க்கமுடியும் என்றுளைங்கினாள். அவனது முகத்தைப் பார்க்காமல் அவளால் ஒரு விநாடிகூட இருக்க முடியாது — தவித்தாள் — தணல் வீழ் மெழுகாக உருகினாள். போலீசாரும் விளக்கின் உதவி கொண்டு வீட்டை சோதனை போட்டனர். ஒரு துணி—ஆம்; ரத்தம் தோய்ந்த துணி கிடைத்தது. சந்தேகம் வலுத்தது. மீண்டும் வீடு முழுதும் தேடினர்கள். தோட்டத்துப் பக்கமும் சோதனையை நீட்டினர்கள். ஒரு மரக்கிளை ஒடிந்து கிடந்தது. ஒரு அழகான பூச்செடி மிதியுண்டு வளைந்து கிடந்தது. உற்றுக் கவனித்தார்கள். இரண்டு மூன்று பேரின் காலடிகள் பதிந்திருந்தன. அதிலிருந்து அவர்கள் ஓடியிருக்க வேண்டுமென்று யூகித்தார்கள்.

"சண்டை நடந்தது என்ருயே; நடந்து எவ்வளவு நேரம் இருக்கும்?" என்று போலீசார் பரிமளாவைக் கேட்டார்கள்.

"நான் உங்களை சந்திக்கும் போதெல்லாம் சண்டை நடந்துதானிருக்க வேண்டும். சில நிமிஷங்கள் கூட ஆக வில்லை. அதற்குள் எப்படி மறைந்தார்களோ; தெரிய வில்லை" என்று வியப்புக் குறி காட்டினாள் அவள்!

"சில நிமிஷங் கூட ஆகவில்லை என்ருல், பிறகு எங்கே போயிருப்பார்கள்? ஆச்சரியமாயிருக்கிறதே—" என்று மூக்கில் விரலை வைத்தபடி நின்ருர்கள், போலீசார்.

"அதோ! அதோ!!" என்று ஒரு போலீஸ்காரர் துள்ளிக் குதித்தார். "என்ன?" என்று அனைவரும் திடுக்கிட்டுத் திரும்பினர். ஒரு பெரிய வெட்டரிவாள் அங்கே புதரோரத்தில் கிடந்தது. அதை எடுத்துப் பார்த்தார்கள்; ரத்தம் தோய்ந்த அரிவாள்! ஆம்; சிறிது நேரத்துக்கு முன்புதான் ஏதோ நடந்திருக்கிறது; இல்லாவிட்டால் அந்த அரிவாளில் ரத்தம் சொட்டிக் கொண்டேயிருக்குமா? ரத்தம் படிந்த அந்த அரிவாளைப் பார்த்துக் கொண் டிருக்கும்போது, இன்னெரு போலீஸ் "அட, இதோ பார்த்தீர்களா?" என்று குதித்தார். அவர் குறிப்பிட்ட பொருளையும் கூர்ந்து கவனித்தார்கள். ஒரு கட்டாரி! ஐயப்பனின் கையிலேயிருந்த கட்டாரி போலத்தானிருந் தது! அதையும் சோதித்து எடுத்துக் கொண்டார்கள்— "இன்னும் ஏதாவது அகப்படும் — தேடுவோம்" என்ற ஆசையுடன் மீண்டும் சோதனை ஆரம்பமாயிற்று!

இரவு நேரம் — ஒழுங்கு படுத்தப்படாத கொல்லைப் பக்கம் — கல்லும் முள்ளும் நிறைந்த இடம் — அங்கே

அடர்ந்திருக்கும் புதர்களிலே போலீசாரின் கண்கள் வட்டமிட ஆரம்பித்தன.

"இதைப் பார்த்தீர்களா?" என்று ஒரு போலீஸ் காரர் வியப்பை வெளியிட்டார். "என்ன? என்ன?" என்று எல்லோரும் ஓடினர்கள். புதரை சற்று விலக்கி, "இதோ பாருங்கள்" என்று காட்டினர். கையிலுள்ள அரிக்கன் விளக்கினது உதவியால், அவர் காட்டியது என்ன என்று தெரிந்துகொள்ள மற்றவர்கள் முயன்றார்கள். **ஒரு கை** கீழே கிடந்தது! சிகப்பு வர்ணம் பூசப்பட்டதுபோல அந்தக் கை முழுதும் ரத்தத்தால் நனைந்திருந்தது. முழங்கையோடு வெட்டப்பட்டு புதரிடுக்கில் கிடந்த அந்தக் கை, யாருடையதாயிருக்கலாம் என்ற சந்தேகம் பலமாக எழுந்தது போலீசாருக்கு! அனைவரும் வெட்டப்பட்டுக் கிடக்கும் அந்தக் கையைச் சூழ்ந்து கொண்டு, தங்கள் தங்களுக்கு உதயமான யோசனைகளைச் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

"வாலிபமான மனிதனின் கையாகத் தெரியவில்லையே — சுருக்கங்கள் நிறைய இருக்கின்றனவே!" — இப்படி ஒருவர்!

"இல்லை — இல்லை; வயதான மனிதனின் கையாகத் தெரியவில்லை இது! வாலிபக் கையாகத்தான் தெரிகிறது." — இது இன்னொருவர்.

"ஏதாவது பச்சை குத்தியிருக்கிறதா, பாருங்கள்!"

"இல்லை — பச்சையும் குத்தவில்லை — சிகப்பும் குத்தவில்லை!"

"ரகளை நடந்திருக்கிறது. ரகளை முடிவில் இந்த வெட்டரிவாளால் கையை வெட்டிப் போட்டிருக்கிறார்கள். அதைத் தவிர நம்மால் வேறெதுவும் சொல்ல முடியாது."

"இந்தக்க்க, பரிமளாவைத் தூக்கிக் கொண்டு வந்தவனுடையதா? அல்லது அவளைக் காப்பாற்ற வந்த வாலிபனுடையதா? பரிமளா குறிப்பிட்ட அந்தக் கிழவனுடையதா?"

இப்படி ஒருவருக்கொருவர் யோசனையை வெளியிட்டு வீணுகக் குழப்பத்தில் ஆழ்ந்தார்கள். தாண்டவனுக்கு மனசு, பகீர் பகீர் என்றது. கொலை நடப்பதற்கான சூழ் நிலைகள் உருவாகியுள்ள இந்த இடத்திலே, பரிமளா தனியாக அகப்பட்டுக்கொண்டு என்ன கஷ்டப்பட்டாளோ என்ற அதிர்ச்சி தாண்டவனின் இருதயத்திலே தோன்றி மறைந்தது. அவள்மீது அவருக்கு முன்னரே ஏற்பட்டுள்ள சந்தேகம், அந்த அதிர்ச்சியை நீடிக்க விடவில்லை.

"இந்த வெட்டுண்ட கைக்கு உரியவன் யாரென்று எப்படிக் கண்டுபிடிப்பது?"

"அது என்ன பெரிய காரியம்? கை முடமாக யார் அலைகிறானே; அவனைப் பிடித்து விசாரிப்பது!"

"கை முடமாக ஒருவன் — ஆண்டவன் புண்ணியத்தில் அப்படி ஒன்பதாயிரம் பேர் உலவுகிறார்கள். அதில் யாரையப்பா கண்டுபிடிப்பது?"

"எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. கைதேர்ந்த ரேகை சாஸ்திரியிடம் இந்தக் கையைக் காட்டி, இது யாருடையது என்று கேட்டுத் தெரிந்து கொள்ளலாமே!"

"அப்படியெல்லாம் ரேகை சாஸ்திரி கிடைக்க மாட்டான். அப்படி ரேகை சாஸ்திரிகள் கிடைப்பதாயிருந்தால், போலீசுக்கு உதவியாக நாய்கள் தேவையில்லை — அந்த ஆரூடக்காரர்களே போதும்!"

"இவ்வளவு வம்பு ஏன்? — இப்போது நான் கண்டுபிடிக்கிறேன்; இது யாருடைய கை என்று! இருக்கவே

இருக்கிறாள் பரிமளா, அவள் சொல்லட்டும், இது யாருடைய கை என்று!"

"ஆமாம்; அதான் சரி. பரிமளாவுக்குத் தெரியலாம்; இது யாருடைய கை என்று. அவளால் சுலபமாக சொல்ல முடியும்" — இவ்விதம் ஒரு போலீஸ்காரர் ஆமோதிப்பு வழங்கினர்.

"பரிமளா! நீ தான் சொல்லேன்; இது யாருடைய கை?" என்று கேட்டுக்கொண்டே பரிமளாவின் பக்கம் போலீஸ் அதிகாரி திரும்பினர். என்ன ஆச்சரியம்! அங்கே நின்று கொண்டிருந்த பரிமளா, எப்படித்தான் அதை விட்டு நழுவி ஓடி விட்டாளோ தெரியவில்லை. வெட்டுண்ட கையைப் பார்த்து யோசனைகள் பரிமாறிக் கொண்டிருந்த வேளை — இதுதான் நல்ல தருணமென்று அவள் ஓடி விட்டாள். 'பரிமளா!' என்று ஆத்திரத்தோடு கத்தினான்.

போலீசாருக்கு வேதனையும் வெட்கமும் தாளவில்லை. கஷ்டப்பட்டு அலைந்து திரிந்து, கடைசியில் கையிலே கிடைத்தவளை விட்டு விட்டோமே என்று வருந்தினர். "எங்கே போயிருப்பாள்? இப்போதே அவளைத் தேடிப் பிடியுங்கள்!" என்று மற்றவருக்கு உத்திரவு போட்டு விட்டு, போலீஸ் அதிகாரி கன்னத்திலே கை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டார் சோர்வோடு!

* * * *

அந்த இருட்டிலே — திக்குத் தெரியாமல் நடந்து கொண்டிருந்தாள் பரிமளா. அத்தானும் கிழவரும் எங்கே போயிருப்பார்கள்? அவர்களை எப்படிக் கண்டுபிடிப்பது? கண்டுபிடிக்கும் வேலையில் ஈடுபடும்போது போலீஸ் கையில் சிக்கிவிட்டால்?

இப்படியெல்லாம் பரிமளாவின் இருதயம் குமுறிக் கொண்டேயிருந்தது. கால் போன பக்கமெல்லாம் சென்றாள் — ஓடினாள் — சிறிது நடந்தாள் — மீண்டும் ஓடினாள் — விடிவதற்குள் எங்கேயாவது போய் மறைந்துவிட வேண்டுமென்று திட்டம் போட்டபடி நடந்தாள். அப்படி நடந்து கொண்டிருப்பவளின் நெஞ்சத்தை எதிரொலிப்பதைப் போல், பெருக்கெடுத்தோடும் ஆற்றின் முழக்கம் கேட்டுக் கொண்டிருந்தது. ஊரை விட்டு வெகு தூரம் வந்துவிட்டாள். புதுப்பட்டினம் கிராமத்திற்கும் ராஜாமடம் என்ற ஊருக்கும் இடையிலே உள்ள ஆறுதான் அது! அந்த ஆற்றைக் கடந்துதான் பரிமளா செல்ல வேண்டும். என்ன செய்வது என்று யோசித்தாள். யோசித்துக்கொண்டிருக்கும் போதே, தொலைவிலே யாரோ வருவது தெரிந்தது. ஆம்; இரண்டு பேர்! அவர்கள் பரிமளாவை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். அவர்கள், தன் அத்தானும் — மாயாண்டிக் கிழவருமாக இருக்கக் கூடாதா என்று வருத்தமுற்றாள். அந்த உருவங்கள் பரிமளாவை அணுகின.

"அத்தானைப் போலத்தானிருக்கிறது சாயல்!" — என்று தனக்குத்தானே அவள் ஆறுதல் கூறிக் கொண்டாள். இரு உருவங்களும் இன்னும் அருகாமையிலே வந்துவிட்டன! பரிமளா, கண்கொட்டாமல் அந்த உருவங்களைப் பார்த்துக்கொண்டே நின்றாள்.

28

இங்கே ஆற்றங்கரையிலே அனுதையாக நின்று தவிக்கிறாள் பரிமளா. இந்தப் பரிமளாவைக் காண வேண்டுமென்று மருங்கப்பள்ளத்திலே துக்காராம் தவித்துக் கொண்டிருந்தான். தூதனுகச் சென்ற ராமன் இன்

னும் திரும்பி வரவில்லையே என்று வழிமேல் விழிவைத்துக் காத்துக் கிடந்தான். தன்னுடைய காதல் எதிர்பாராத முறையில் வெற்றி கண்டுவிட்டதே என்று தனக்குத்தானே எண்ணி மகிழ்ச்சி யடைந்தான். ஊரிலே பெரிய புள்ளி — வெள்ளியம்பலம் என்றாலே வெடவெடத்துப் போகிறார்கள் ஜனங்கள்—அப்பேற்பட்ட அசகாய சூரன் — கிராமீயப் பிரமுகர்—அவரே தன்னுடைய காதலியின் தலைமைத் தூதராக அமைந்திருக்கிறார் என்றால், தன்னுடைய அதிர்ஷ்டத்தையும், பெருமையையும் எப்படித்தான் வர்ணிப்பது என்று அவனுக்கே புரியவில்லை. பட்டுக்கோட்டைக்கு வந்து தேடிப் பிடித்து, வீட்டிலே உட்கார வைத்து சாப்பாடும் போட்டு, ராஜோபசாரம் செய்து, பரிமளாவிடமும் தூதுபோய் விஷயத்தைச் சொல்லிவிட்டு வந்திருக்கிறார் என்றால்—இதைவிட வேறு யார் தன் காதலுக்காக இவ்வளவு அக்கரை காட்டமுடியும் என்பதை நினைத்து நினைத்து சந்தோஷப் பெருமூச்சு விட்டுக்கொண்டான். பரிமளாவிடம் தூது போன ராமன் இன்னும் திரும்பி வரவில்லை.

"ராமன் அவளிடம் என்ன சொல்லியிருப்பான்? அதற்கு அவள் என்ன பதில் சொல்லியிருப்பாள்? —அவளைப் பிரிந்து, நான் அன்ன ஆகாரமின்றிக் கிடக்கிறேன் என்று சொல்லச் சொன்னேனே — அதைக் கேட்டதும் அவள் என்ன பாடுபடுவாள்? நான் பொய் சொல்லியனுப்பினேன் என்று புரிந்துகொள்வாளா?—உம்—யார் கண்டது? —அவள் என்னைக் காணுமல் எத்தனை நாளாகப் பட்டினி கிடக்கிறாளோ? — கை வளையல்கள் கழன்று விட்டனவோ என்னமோ? — இந்த ராமன் நான் சொன்னதையெல்லாம் என் பரிமளாவிடம் ஒழுங்காக சொல்லியிருப்பானு? — எங்கே பார்க்கலாம்? எப்போது பார்க்கலாம்? — என்று கேட்டு வரச் சொன்னேனே; அதற்கு என்ன பதில் தருகிறாளோ? — அட கடவுளே! — நிமாத்திரம் நினைத்த அவ

தாரம் எடுத்து நினைத்த இடத்துக்கெல்லாம் போயிருக்கி
ருயே! ஆண் மானும், பெண் மானுமாக—ஆண் யானையும்,
பெண் யானையுமாக வெல்லாம் உருவம் மாறி உலகத்தார்
கண்களை ஏமாற்றி உல்லாசம் அனுபவித்திருக்கிறீர்களே;
தெய்வங்களே! — அதுபோல நானும் பரிமளாவும் யானை
யாக மாருவிட்டாலும், பூனையாகவாவது மாறி ஒருவரை
யொருவர் சந்தித்து சந்தோஷமாயிருக்க சக்தி அளிக்கக்
கூடாதா எங்களுக்கு? — அப்படி மாறினால் ஊரார் கண்
ணில் மிளகாய்ப் பொடியைத் தூவி விட்டு, இருவரும்
இன்பமாக இருப்போமே — ஒரு நாளைக்காவது, ஒரு மணி
நேரமாவது, அந்த மாதிரி சக்தியைத் தரக் கூடாதா
சண்டாளக் கடவுளே! —

என்ன, இந்த ராமனையும் வரக் காணோம்? பரிமளா
சிக்கிரம் விட்டால்தானே அவன் வருவான்! பாவம் —
என்னைப் பற்றி அவள் என்னென்ன கேட்டுக் கொண்டிருக்
கிருளோ? காதலனுக்கு காதலியைப் பற்றிப் பிறர் சொல்
லக் கேட்பதிலும், காதலிக்கு காதலனைப் பற்றிப் பிறர்
சொல்லக் கேட்பதிலுந்தானே தனி ஆனந்தமையிருக்
கிறது! இந்த ராமன் செய்த புண்யங்கூட நான் செய்ய
வில்லையே! அவனுவது என் பரிமளாவின் அழகான
முகத்தை தரிசித்துவிட்டு வருவான்; அதுகூட முடிய
வில்லையே என்னால் — ராமன் வரட்டும்; அவன் கால்களைத்
தொட்டுக் கும்பிடுகிறேன். பரிமளா வீட்டை மிதித்த கால்
கள் என்ன, சாமான்யமா?"

இப்படியெல்லாம் தனியாகப் பிதற்றிக் கொண்டே
இங்குமங்கும் அலைந்து கொண்டிருந்தான் துக்காராம்.
பித்தம், முற்றுவதற்குள்ளாக, நல்ல வேளையாக ராமனும்
வந்து சேர்ந்தான். "ராமா! ராமா!!" என்று ஆவலோடு
கத்திக்கொண்டு அவனிடம் ஓடினான்.

"பார்த்தாயா பரிமளாவை? — கண்டாயா என் கற் கண்டை?"

"கண்டேன் பரிமளாவை!"

"என்ன சொன்னாள்?"

"அய்யா சோறு தண்ணியில்லாமல் கிடக்கிறாரு — வயிற்றுக்குள் ஆகாரம் இறங்குவதேயில்லை என்று சொன்னேன்."

"அதற்கு அவள் என்ன சொன்னாள்?"

"ஜீரணத்துக்கு மருந்து சாப்பிடச் சொன்னது!"

"ஆகா, எவ்வளவு கவலை என்னைப்பற்றி!—ஏ, சாமா! நீ சொல்வதுதானே; மருந்து வைத்தியனிடமில்லை, உன்னிடம்தான் இருக்கிறதென்று!"

"சொல்லாமல் இருப்பேனா? என்னிடம் மருந்து இருக்கிறது என்று சொன்னேன். அப்படின்னா அதையே அய்யாவுக்குக் கொடுன்னு சொன்னது."

"உன்னிடமா? அடபைத்தியம், என்னுடைய நோயைத் தீர்க்கக் கூடிய மருந்து பரிமளாவிடம்தான் இருக்கிறது என்று சொல்லியிருக்க வேண்டும்!"

"ஓகோ, அப்படியா? அந்தப் பெண்ணு டாக்டர் வேலைக்கு படிச்ச விஷயம் எனக்குத் தெரியாது. அடுத்த தடவை போகும்போது சொல்லி விடுகிறேன்."

"சாமா — பரிமளா எப்படி இருக்கிறாள்?"

"ரொம்ப அழகாக!"

"அதிருக்கட்டும், என்னைப்பற்றி என்ன சொன்னாள்? எங்கே, எப்போது சந்திக்கலாம் என்று சொன்னாள்?"

"உங்களை சந்திக்கணும்னு அந்தப் பெண்ணு துடிக்குது!"

"அப்படியா? ஆகா, என் ஆருயிரே! இன்பவல்லி! துடிக்கிறுயா? நான் என்ன செய்வேன்? உன்னை எப்படி சந்திப்பேன்?"

"சந்திக்க வழி சொல்லியிருக்கு!"

"சொன்னளா? வழி சொன்னளா? ராமா, சிக்கிரம் சொல்லு அந்த வழியை!"

"ராத்திரி, ஊரு அடங்கின பிறகு, இரண்டு பேரும் சந்திக்கிறதாம்!"

"பலே! பலே! எந்த இடத்தில் ராமா?"

"இந்த ஊரிலே ஒரு சிவன் கோயில் இருக்கே; தெரியுமா?"

"ஆமாம் — வரும்போது பார்த்தேன்."

"அந்தக் கோயில் பக்கம் உங்களை வரச் சொன்னது, இன்னைக்கு ராத்திரிக்கு!"

"ஆகா! ஆகா! ராமா, இந்த சேதி கொண்டு வந்த உனக்கு நான் என்ன கொடுக்கப் போகிறேன்? கவலைப் படாதே; நான் எழுதிய காதல் புஸ்தகங்கள் அச்சானதும், உனக்கு ஒரு ஐம்பது புஸ்தகம் இலவசமா அனுப்பி வைக்கிறேன்!"

"ஆமாம்; அனுப்புங்க. தலையணை இல்லாம ரொம்ப கஷ்டமாயிருக்கு எனக்கும்!"

"அப்படின்னா ராமா, இன்னைக்கு ராத்திரி ஊர் அடங்கினவுடனே சிவன் கோயில் பக்கம் போனா — அங்கே என்னுடைய காதலி வருவாள்!"

"ஆமாம்!"

"காதல் வாழ்க! — காதலர் வாழ்க!!"

* * * *

இரவு எப்போது வரும், எப்போது வரும் என்று ஏங்கிக் கொண்டிருந்தான் துக்காராம். மாலையிலே ராமன் போட்டுத் தந்த பனை வெல்லக் காபிகூட அவனுக்கு இனிப்பைத் தரவில்லை. இரவு அருமையான விரால் மீனும், வயல் நண்டும் போட்டு குழம்பு வைத்தான் ராமன். அதையெல்லாம் சுவைப்பதற்கு, துக்காராம் தயாராக இல்லை. அவனுடைய இருதயம் 'பட பட' வென்று அடித்துக் கொண்டிருந்தது. எத்தனையோ முறை நேரிலே கண்டிருந்தாலும், மனம் விட்டுப் பேசப் போகிற முதல் நாள் இதுதான் என்று எண்ணியபோது அவனுக்கு ஒரு இடத்தில் இருப்புக் கொடுக்கவில்லை. ஊர் அடங்கிவிட்டதா இல்லையா — என்று மிக உன்னிப்பாக கவனித்தபடியிருந்தான்.

சேரிச் சிறுவர்கள் தமுக்கு அடித்து விளையாடிக் கொண்டிருந்த சப்தம் அவன் காதைத் துளைத்தது. எங்கேயோ ஒரு மூலையில் சிலர் கூடிக்கொண்டு ரதி மன்மதன் லாவணி பாடிக்கொண்டு கூத்தடித்த ஒலியும் அவனுக்குக் கர்ண கடூரமாக இருந்தது.

சிறிது சிறிதாக அந்த ஒலிகள் குறைந்து, ஊரிலே அமைதி நிலவ ஆரம்பித்தது. துக்காராம் சிவன் கோயிலை நோக்கிப் புறப்பட்டான், தன் காதலியைக் காண்பதற்காக!

"நாம் போன பிறகுதான் வருவாளோ? அல்லது நமக்கு முன்பு காத்துக் கொண்டிருக்கிறாளோ — அய்யோ! அப்படிக் காத்துக்கொண்டிருந்தால் அவள் காலெல்லாம் வலியெடுத்திருக்குமே; நாம் போனதும் முதல் வேலை, அவள் காலை அமுக்கி வலியைத் தீர்ப்பதுதான் —

ஆகாகா — அவளைப் பார்த்ததும் என்ன பேசுவது? அவள்தான் என்ன பேசுவாள்?" —

இவ்வாறு சிந்தனை செய்தபடி அவன் கோயில் பக்கம் வந்து சேர்ந்தான். அவன் எதிர்பார்த்தபடி அங்கே பரிமளாவைக் காணவில்லை. நல்ல இருட்டு! கண்களை அகலத் திறந்து சுற்று முற்றும் பார்த்தான். யாருமில்லை. மெதுவாகக் கனைத்தான். "பரிமளா" என்று மெல்லிய குரலில் கூப்பிட்டுப் பார்த்தான் — பதில் இல்லை. மரங்களின் சலசலப்பும் — தவளையின் கத்தலும் — பூச்சிகளின் இரைச்சலும் — ஒரு பயங்கரமான சூழ்நிலையை அவனுக்கு நினைவு படுத்தின. மீண்டும் ஒரு முறை "பரிமளா" என்று கூப்பிட்டான். பதில் இல்லை. ஆனால், யாரோ கனைத்ததுபோல் தெரிந்தது — அவள்தான் என்று ஆவலோடு எதிர்பார்த்தான். யாரும் வரவில்லை — மறுபடியும் மெதுவாக — "பரிமளா!" என்று அழைத்தான். கலகலவென்று யாரோ சிரித்தார்கள். அந்தச் சிரிப்பிலே குளிர்ச்சி இல்லை. கொடுமை நிறைந்திருந்தது. மிகப் பயங்கரமான சிரிப்பு — துக்காராமுக்குத் தூக்கி வாரிப் போட்டது — இருதயத்தைக் கைகளால் அழுத்திக் கொண்டு அசைவற்று மரம் போல் நின்றான்.

"அகப்பட்டுக் கொண்டாயா?" என்று ஒரு கரகரப்பான குரல் கிளம்பியது.

"யார்? யார் அது?" என்று அழுதபடி அலறினான் பரிதாபத்துக்குரிய துக்காராம்.

"யாரா? நான்தான் பூதம்!"

"பூதமா? அய்யோ, பூதமா?" — கை கால்கள் தட்டி விட்ட வீணைத் தந்திகள் போல் அதிர்ந்தன அவனுக்கு.

"பூதம்தான்—புதையலைக் காக்கும் பூதம் நான்தான்!"

"பூதம் — பூதம்" என்று கத்திக்கொண்டே துக்காராம் ஓடினான்.

"ஓடாதே — நில்! பூதத்தின் உத்திரவை மீறினால் உன்னைப் பொடி செய்து சாப்பிட்டு விடுவேன்" என்று அதட்டியது அந்தக் குரல்.

துக்காராம் அப்படியே ஸ்தம்பித்து நின்று விட்டான் — உடலெங்கும் வியர்வை கொட்டிற்று — ஏதேதோ உளறினான், அவனையறியாமல்!

29

பூதம் தன்னை அப்படியே விழுங்கி ஏப்பம் விடப் போகிறது என்று கற்பனை செய்துகொண்டே, துக்காராம் "என்னை விட்டு விடு!" என்று கத்தினான்.

"உன்னை மட்டுமல்ல; இதோ உன் காதலி பரிமளாவையும் பிடித்து வைத்திருக்கிறேன். இப்போது உங்கள் இருவரையும் பஸ்பமாக்கிவிடப் போகிறேன்" என்று பயமுறுத்தியது அந்தக் குரல்.

"அய்யோ, என் கண்மணி பரிமளா! நீயும் அகப்பட்டுக் கொண்டாயா? பூதமே! உனக்குப் புண்யமுண்டு. என் காதலியை விட்டு விடு. நாங்கள் இருவரும் எங்கேயாவது ஓடி விடுகிறோம். இனிமேல் இந்த இடத்திற்கு வரவே மாட்டோம்" — இப்படிக் கெஞ்சினான் துக்காராம்.

"உங்களிருவரையும் விட்டு விடுகிறேன். ஆனால் ஒரு நிபந்தனை" என்ற முரட்டுக் குரல் பிறந்தது.

"என்ன நிபந்தனையானாலும் சரி — கேட்கிறேன். உம், என்ன நிபந்தனை விதிக்கப் போகிறாய் என்று எனக்குப் புரியும். நாங்களிருவரும் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் — இப்படியெல்லாம் கள்ளக் காதல் செய்யக் கூடாது — என்று நிபந்தனை போடுவாய் — போடு!" என்று துக்காராம் சிறிது தைரியமாகப் பேசினான்.

அவன் 'போடி' என்று சொல்லி முடிப்பதற்குள் அவன் முதுகில் 'படார்' என்று கம்பால் ஒரு அடி விழுந்தது.

'அய்யோ!' என்று அலறியபடி துக்காராம் துள்ளிக் குதித்தான். தப்பிவிடலாம் என்கின்ற நம்பிக்கை சிறிது உதயமாகி, அதுவும் கருவிலேயே சிதைந்து விட்டதாக உணர்ந்தான்.

"அடே, மனிதப் பூச்சியே! நிபந்தனையைக் கேளடா மடையனே!"

"கேட்கிறேன் சாமி, கேட்கிறேன். சொல்லு!"

"தங்கம் எங்கே கிடைக்கும்? அதை உடனே சொல்!"

"இது என்ன பூகோள பரிக்ஷையா? தங்கம் கோலாரில் கிடைக்கும்."

"யாரை ஏமாற்றுகிறாய்? வீணே சாகாதே! உண்மையைச் சொல்!"

"அய்யய்யோ! உண்மையா கோலாருதான்!"

"என்ன?"

துக்காராமின் முதுகில் மீண்டும் ஒரு பலமான அடி விழுந்தது.

"அம்மாடி! இது என்ன கோளாறு! இப்படி வந்து மாட்டிக்கிட்டேனே; அய்யா, பூதமே! என்னை விட்டுடு சாமி! வேணும்னு பரிமளாவை நீயே வச்சுக்க. எனக்கு உயிரைக் கொடுத்தா போதும். ஓடி விடுவேன்" — துக்காராம் கீழே விழுந்து தெண்டனிட்டபடி அழ ஆரம்பித்தான்.

"என்னை ஏய்க்க உன்னால் முடியாது. மரியாதையாகச் சொல்லி விடு: தங்கம் இந்த இடத்திலே இருக்கிறது — அது எனக்குத் தெரியும் — அது எந்த இடம் என்று எனக்குக் குறிப்பாகக் காட்டிவிடு!"

"தங்கமாவது, இரும்பாவது; எனக்கு ஒண்ணும் தெரியாது!"

"பொய்! பொய்!! தங்கம் புதைக்கப்பட்டிருக்கிற இடம், உனக்கு நன்றாகத் தெரியும் — அதைச் சொல்லி விடு! இல்லாவிட்டால் உன் முதுகுத் தோலை உரித்து செருப்புத் தைத்து விடுவேன்."

"ஓகோகோ! நீ சக்கிலிய பூதமா? சாமீ! சாமீ! உனக்கு செருப்பு வேணும்னு ஆயிரம் செருப்பு நான் வாங்கித் தர்றேன். வீணு என் தோலை உரிச்சுடாதே!"

"தோலை மட்டும் உரிக்க மாட்டேன்; காலையும் முறித்து விடுவேன். சூளை போல உன் கண்களைப் பிடுங்கி விடுவேன். பனங்காய் போல் தலையைத் திருகி விடுவேன்; என்ன சொல்லுகிறாய்? தங்கம் இருக்கிற இடத்தை காட்டுகிறாயா?"

"இது என்ன வீண் வம்பு! — தங்கம்னு என்ன? வளையல் செய்ற பொன்னு? அல்லது வளையல் போட்டுக்கிற பெண்ணு?"

"பொன்! பொன்!! அது இந்த மண்ணிலே ஒளிஞ்சுகிட்டு இருக்கு — அதைத்தான் நீ காட்டவேண்டுமென்று கட்டளையிடுகிறேன்."

"புரியுது—புரியுது. ஏதோ ஒரு சாக்குச் சொல்லி, என் மேல குற்றம் சாட்டி கொன்று சாப்பிட திட்டம் போட்டு விட்டாய்! இத பாரு! இப்படியெல்லாம் என்னை வம்புக்கு இழுக்காதே! நான் ஏதோ காதல் மயக்கத்திலே வழி தவறி வந்துட்டேன். எனக்கு விடை கொடு—முடிஞ்சா பரிமளாவையும் கொடு — இல்லேன்னு என்னை மட்டும் விடு!"

"சரி! உனக்கு நேரம் நெருங்கி விட்டது. உன்னை என் வயிற்றுக்குள் போட வேண்டியதுதான் —"

இந்த வார்த்தைகளைக் கேட்டதுதான் தாமதம்; என்ன வந்தாலும் சரியென்று துக்காராம் ஓட ஆரம்பித்தான்.

"எங்கேடா ஓடுகிறாய்?" என்ற கூச்சலுடன் அவன் தோள் பட்டையை ஒரு கை அழுத்தியது. அதையும் திமிறிக்கொண்டு அவன் ஓடப் பார்த்தான். தலையில் 'மளார்' என்று ஒரு அடி விழுந்தது. அதையும் தாங்கிக் கொண்டு அவன் ஓடினான். அவனது சட்டையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டது அந்த முரட்டுக் கை.

துக்காராம், செத்துவிட்டது போன்ற உணர்ச்சியோடு அசைவற்று நின்றான். தன் எதிரே நிற்கிறது அந்தப் பூதம் என்ற எண்ணத்தில் கண்களை இறுக்கி மூடிக் கொண்டான். "டேய் துக்காராம்! என்னைத் தெரிகிறதா உனக்கு? பார்! கண்ணைத் திறந்து பார்!" என்ற அந்தக் குரல் அவனை இன்னும் அஞ்சிட வைத்தது. சாவதுதான் சாகிறோம்; பூதத்தின் கையிலே சிக்கியிருக்கும் பரிமளாவை கடைசியாக ஒரு முறை பார்த்துவிட்டுச் சாவோமே—என்னும் முடிவுடன் துக்காராம் தன் கண்களை மெதுவாகத் திறந்தான். தன் எதிரே நிற்பது யார் என்ற சந்தேகத்தால் கண்களை சிமிட்டி சிமிட்டி ஊன்றிக் கவனித்தான். அவன் கற்பனை செய்திருந்த பூதமோ — சால் போன்ற வயிறும், குகை போன்ற வாயும், மரம் போன்ற கைகளுமுடைய ஒரு மாமிச பர்வதமாகும்.

ஆனால், இப்போது அவன் எதிரே பார்ப்பதோ நினைத்ததற்கு மாறான உருவம்! நன்றாகப் பார்த்தான். இருட்டிலே தோற்றமளிக்கும் அந்த பயங்கர சொரூபம் பூதமல்ல; வெள்ளியம்பலம்தான் என்ற தீர்மானத்திற்கு வந்துவிட்டான் என்பதை அவனது ஆழமான பெருமூச்சு எடுத்துக் காட்டியது. பூதம் என்ற சொல் கேட்டு அடைந்த திகிலைவிட அதிகமான திகில் அடைந்தான், வெள்ளியம்

பலம் எனக் கண்டபோது! வெள்ளியம்பலம் தன்னை இப் படி மிரட்டுவானேன் — தங்கம் இருக்கும் இடத்தைக் காட்டு என்று கத்துவானேன் — இவ்வளவு கொடுமை யாகத் தன்னை நடத்துவானேன் — என்று யோசித்தான். பரிமளா என்ற பெயரைச் சொல்லி, தன்னை யாரோ ஒரு கொலைகாரன் ஏமாற்றி விட்டான் என்ற உண்மையைப் புரிந்துகொண்ட பிறகுதான், தன்னை பரிமளா காதலிக்க வில்லையே என்ற பழைய நினைவுகளும் வரத் தலைப்பட் டன. "அப்போதே நினைத்தேன்; தனக்கும் பரிமளாவுக் கும் காதல் வளருவதற்கு இந்த மனிதர் இப்படி கஷ்டப் படுவானேன் என்று! இப்போதல்லவா புரிகிறது அது! அய்யோ, தெளிவு பிறக்கிற நேரம், உயிர் போகிற நேரமா யிருக்கிறதே!" — இதையெண்ணி மனதுக்குள் புலம்பித் துடித்தான், அந்தப் பரிதாபத்திற்குரிய வாலிபன். அவ னுடைய இரங்கத்தக்க நிலையை பரிமளாவே நேரில் பார்த் திருந்தால்கூட வருத்தப்பட்டிருப்பாள்; ஏன் பாவம் அநா வசியமாக அவனைக் காட்டிக் கொடுத்தோமென்று!

"ஐயா! என்னய்யா இதெல்லாம்: எனக்கு ஒண்ணுமே விளங்கலியே!" — கெஞ்சும் தோரணையில் கேட்டான், வெள்ளியம்பலத்தைப் பார்த்து!

"நான் பூதமென்றேனே, அது உண்மைதான்! இங்கே யிருக்கும் புதையலைக் காக்கும் பூதம் நானேதான்."

"அய்யய்யோ! இது என்ன மறுபடியும் அதிர்வேட்டு போடுறே சாமி! ராத்திரியிலே பூதம்; பகலிலே மனுஷனு?"

"கேளப்பா! பைத்தியக்காரனைப் போல் நடித்து என்னை இளிச்சவாயனாக்க முடியாது உன்னாலே! உயிர்மேல் உனக்கு ஆசையிருந்தா ஒழுங்கா உண்மையைக் கக்கி விடு!"

"வயிறே காலியாக இருக்கும்போது, எப்படி அய்யா கக்குவது? என்ன மோ எனக்கு உண்மையெல்லாம் அஜீர்ணமாகிக் கிடக்கிற மாதிரி பேசுறீங்களே!"

"டே, பேச்சாளி! கதையெல்லாம் அளக்காதே! தங்கம் புதைக்கப்பட்டிருக்கிற இடத்தை மறைக்காம சொல்லிவிடு!"

"அட கர்மமே; தங்கமாவது! மண்ணாங் கட்டியாவது! எனக்கு ஒன்றுமே விளங்க வில்லையே! அட கடவுளே! இது என்னப்பா சோதனை — என்னப்பா வேதனை!"

"இந்த பாரு—பயப்படாதே! நயமாவே கேட்கிறேன், சொல்லு! நம்ப ரெண்டு பேருமே கூட்டா சேர்ந்து புதையலை எடுப்போம்; யாருக்கும் தெரியாம அதை பாதுகாத்து பணக்காரனாவோம்! தம்பீ, துக்காராம்; உண்மை உன்னிடமிருக்கிறது; உழைப்பு என்னிடமிருக்கிறது! உண்மையையும், உழைப்பையும் ஒன்றுய்ப் பிசைந்து ஒற்றுமையாக காரியம் செய்தால், இந்த உலகத்திலேயே இரண்டே பணக்காரர்கள்தான் இருப்பார்கள். ஒன்று நீ! அடுத்தது நான்! என்ன சொல்லுகிறுய்?"

"அய்யா — நான் உண்மையைச் சொல்லட்டுமா?"

"சொல்லு தம்பீ சொல்லு! நல்ல பிள்ளையாண்டானல்லவா நீ — சொல்லுப்பா சொல்லு!"

"உண்மையாவே ஒரு உண்மையும் எனக்குத் தெரியாது பராபரமே!"

"பார்த்தாயா வாலாட்டுகிறுய்! ஏய் திமிர் பிடித்தவனே — கையிலே என்ன இருக்கிறது பார்!"

வெள்ளியம்பலம் ஒரு பாளை சீவும் அரிவாளை எடுத்து உயர்த்திக் காட்டினர். அதைக் கண்ட துக்காராம் விழி பிதுங்கும் அளவுக்கு பயந்து போய் நின்றுன்.

"புதையல் ரகசியம் உன்னிடம்தான் இருக்கிறது. நீ சொல்லாவிட்டால் இப்போதே உன் தலையைத் துண்டாடு வேன். ம், சிக்கிரம் சொல்லு!"

துக்காராம், இனித் தான் மீள முடியாது என்பதை திண்ணமாக உணர்ந்து கொண்டான். தந்திரத்தை தந் திரத்தால் வெல்லலாம் என்ற ஒரு அணுவளவு யோசனை அவன் மூளையில் உதித்தது. அதையும் செய்து பார்த்து விடுவோம் என்ற முடிவோடு, துக்காராம் நடிக்க ஆரம்பித் தான்.

"ஐயாவே! கோபிக்காதீர்கள். உயிர் போய் விடு மென்ற பிறகு உண்மையைச் சொல்லாமல் இருப்பேனா? இதோ சொல்லி விடுகிறேன் — புதையல் ரகசியம் என்னி டந்தான் இருக்கிறது."

"சொல்லு! சொலலு! புத்தியுள்ள பயலே! இப்போதே சொல்லு!"

"அதைச் சொல்ல முடியாது!"

"ஆ!"

"கொடுக்க வேண்டும்!"

"அப்படின்னா?"

"ஆமாம்; அந்த ரகசியம் ஒரு சாமியாரிடத்திலே இருக்கின்றது. எனக்கும் அந்த சாமியாருக்குந்தான் அந்த ரகசியம் தெரியும்."

"ஏய்—ஏய்—பொய் சொல்லுகிறாய்? 'தங்கம் இந்த மாமரத்தடியில்தான் புதைக்கப்பட்டிருக்கிறது' என்று நீ உன் காதலியிடம் சொன்னதை நான் இந்தக் காதாரக் கேட்டேன்."

துக்காராமுக்கு ஒன்றும் புரியா விட்டாலும் சமாளித் துக் கொண்டான். யாரோ பேசியதை வெள்ளியம்பலம்

கேட்டு விட்டு, எப்படியோ தவருகத் தன்னை இழுத்து வந்து உயிரை வாங்குகிறார் என்றும், அந்த இடத்திலே யிருக்கும் புதையலுக்காகத்தான் அவர் இபபடிப் படாத பாடு படுகிறார் என்றும், விளங்கிக் கொண்ட அவனுக்கு அவரை ஏமாற்றுவது எளிதாகவே தோன்றியது.

"புதையல் இங்கேயிருப்பது உண்மைதான்—மாமரத் தடி என்றதும் சரிதான் — ஆனல் ஒன்று; அந்தப் புதை யல் வெளியே கிளம்ப வேண்டுமானல், அதற்கு ஒரு தகடு வைத்து மந்திரம் ஜெபிக்க வேண்டும். அந்த மந்திரத் தகடு இல்லாமல் புதையல் இருக்குமிடத்தைத் தோண்டி னல்; அவ்வளவுதான் — ஆள்பாடு ஆபத்து" — என்ப தாக துக்காராம் அளந்து கொட்டினன்.

"அந்த மந்திரத் தகடு எங்கேயிருக்கு தம்பீ?"

"அது அந்தச் சாமியாரிடம் இருக்கிறது!"

"அந்தச் சாமியார் எங்கேயிருக்கிறார்?"

"அதைச் சொன்னல் மந்திரம் பலிக்காது. என்னோடு வாங்க; அவரை உங்களுக்கு நேராவே காட்டுகிறேன்."

"சரி, இப்போதே போவோமா? உடனே அவரிடம் அந்தத் தகட்டை வாங்கலாமா?"

"ஓ — பேஷாக வாங்கலாம். இப்போதே போகலாம்; வாருங்கள் போகலாம்."

துக்காராமின் பேச்சைக் கேட்டு வெள்ளியம்பலம் அவனுடன் நடக்க ஆரம்பித்தார். துக்காராம் அந்த இருட் டில் கால் போன பக்கமெல்லாம் போய்க் கொண்டிருந் தான்.

இரவு முழுதும் அவரைத் தன் பின்னல் நடக்க வைத்து, எப்படியாவது இரவை ஓட்டிவிட்டால், விடிந்த

தும் தப்பித்துக் கொள்ளலாம் என்கிற ஒரே முடிவோடு தான் துக்காராம் இந்தத் தந்திரத்தைக் கையாண்டான்.

இதைப் புரிந்துகொள்ளாத வெள்ளியம்பலமும், புதையலை எடுக்கப் போகிறோம் என்ற பூரிப்போடு, கால் வலியையும் கவனிக்காமல் அவனைப் பின் தொடர்ந்தபடியிருந்தார். மருங்கப்பள்ளத்திலிருந்து, புதுப்பட்டினம் செல்லுகிற குறுக்குப் பாதையிலே, துக்காராம் நடந்தான்; அவரும் தொடர்ந்தார்; தனக்கு முன்னே ஒரு பலிக் கடா நடக்கிறது என்ற இறுமாப்பான எண்ணத்துடனேயே வெள்ளியம்பலம் அவனைத் தொடர்ந்தார். நடந்து, நடந்து புதுப்பட்டினத்தையும் கடந்து விட்டார்கள். இரவு, சீக்கிரம் தொலைய மாட்டேன் என்கிறதே எனும் முணுமுணுப்புடன் துக்காராம் முன்னேக்கி கால் வைத்துக் கொண்டிருந்தான். அவர்கள் எதிரே ஆறு குறுக்கிட்டது. ஆம், புதுப்பட்டினத்திற்கும் ராஜாமடத்திற்கும் இடையிலே உள்ள ஆறுதான் அது. ஆற்றங்கரையோரமாக வந்து கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு எதிரே தன்னந் தனியாக ஒரு உருவம் வருவதைக் கண்டார்கள். அதை நோக்கி அடியெடுத்து வைத்தார்கள். அது ஒரு பெண்ணின் உருவம்!

"பரிமளாவைப் போலிருக்கிறதே" என்று கூறினான், துக்காராம்!

"சரியாகத் தெரியவில்லை. அவளைப் போலத்தான் இருக்கிறது சாயல்" என்றார் வெள்ளியம்பலம்.

30

அத்தானும், கிழவருந்தான் வருகிறார்களோ என்று ஆவலோடு நோக்கிய பரிமளா, துக்காராமையும், வெள்ளியம்பலத்தையும் கண்டு நடுங்கினாள். துக்காராமுக்கோ,

ஆனந்தம் தாங்கவில்லை. வெள்ளியம்பலத்தின் கையிலே சிக்கி, எவ்வளவு பெரிய ஆபத்திலே அகப்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதையும் மறந்து, துக்காராம் குதித்தான். "பரிமளா! நீயா? இங்கே எப்படி வந்தாய், என் அன்பே!" என்று கத்தினன். அவனது சரச மொழிகளை மறுத்துப் பேசும் தைரியம் பரிமளாவுக்கு வரவில்லை. அன்றிரவு மனோராவிலே நடந்தவைகளை அவள் மறந்து விடவில்லை.

தூக்கத்திலேயிருந்த தன்னை தூக்கிக்கொண்டு வந்து மனோராவிலே வெள்ளியம்பலம் பயமுறுத்தியதும், காதலனின் பெயரைச் சொல் என்று கட்டளையிட்டதும், கனல் விழி காட்டியதும், காதலன் பெயர் 'துக்காராம்' என்று தான் தந்திரமாகப் பொய் கூறியதும், அவள் நினைவிலே அடுக்கடுக்காக வந்தன.

"காதலன் துக்காராம்" என்று வெள்ளியம்பலத்திடம் சொல்லி விட்டு, இப்போது துக்காராமைப் பார்த்து, "தூ, போடா தூர!" என்று துடுக்கு மொழி கூறினால், அம்பலத்திடம் கூறிய பொய் அம்பலமாகிவிடுமே என்று பயந்தாள். அதனல் துக்காராமை அவள் அன்போடு நோக்க வேண்டியதாயிற்று.

"நீங்கள் இந்நேரத்தில் எங்கேயிருந்து வருகிறீர்கள்?" என்று அவனைப் பார்த்துக் கேட்டாள். "நானா? நான்..... நான்....." என்று அவன் இழுத்தான். பற்களெல்லாம் வெளியே தெரியும்படி இளித்தான். வெள்ளியம்பலத்தின் நிலைமையும் இப்போது நெருக்கடியாகத்தான் போய் விட்டது. புதையலைக் கண்டுபிடிப்பதற்காகவே துக்காராமைப் பயன் படுத்துகிறோம் என்ற ரகசியம் பரிமளாவுக்குத் தெரிந்துவிடக் கூடாதே — தெரிந்தால் விஷயம் ஊரெங்கும் பரவி விடுமே என்று அஞ்சினர் அவர்!

பரிமளா அந்த நேரத்தில் அங்கு வரவேண்டிய காரணமும் அவருக்குப் புரியவில்லை. அதைத் தெரிந்து கொள்ள விரும்பி, "நீ எப்படி பரிமளா இங்கு வந்தாய், இந்நேரத்தில்?" என்று கேட்டார்.

"தெரியாதா உங்களுக்கு?—அன்றிரவு வீட்டிலிருந்து வந்தேனே....."

இதை அவள் சொல்லி முடிப்பதற்குள், "ஓகோ, சரி! சரி!" என்று உரக்கக் கூவி அவள் பேச்சை நிறுத்தினர் வெள்ளியம்பலம். எங்கே, அவள் விஷயம் முழுவதையும் துக்காராமிடம் கூறி விடுவாளோ என்ற அச்சம் அவருக்குப் பிறந்தது. அதனல் அதற்குமேல் அவளை அவர் பேச விடவில்லை.

துக்காராம் சும்மாயிருப்பானே?

"ஏன் பரிமளா, என்னை சிவன் கோயில் பக்கம் வரச் சொல்லி விட்டு, வராமல் இருந்துவிட்டாய்?" என்று ஆவலோடு கேட்டான். பரிமளாவுக்கு அந்தக் கேள்வி புரியவில்லை — விழித்தாள்!

"என்ன — தெரியாது மாதிரி விழிக்கிறே? இவரு வேலைக்காரன் ராமனிடம் சொல்லி அனுப்பினியா — இல்லையா?"

பரிமளா, இப்போது அதிகமாகவே திகைத்தாள். நிலைமை முற்றிவிடக் கூடாதே என்று எண்ணிய வெள்ளியம்பலம்,

"சரி — சரி — கதையெல்லாம் அப்புறம் பேசுவோம். முதல்ல நடக்கவேண்டிய காரியத்தை கவனிப்போம்!" என்று தீர்மானமாகப் பேசினர்.

"இருங்க! ரொம்ப நாளைக்குப் பிறகு, காதலர்கள் சந்தித்திருக்கிறோம். பேசக்கூட விடமாட்டேங்கிறீர்களே!"

துக்காராம் கோபித்துக் கொண்டான்.

"என்னுடைய காரியத்தை முடித்துவிட்டு, பிறகு வருஷக் கணக்கில் பேசுங்களேன். யார் வேண்டாமென்றது?"

"உங்க காரியத்தை காலையிலே முடிக்கலாமே!"

"அதெல்லாம் முடியாது தம்பீ! இப்போதே முடிக்க வேண்டும்."

"மாட்டேன் — என்ன செய்வீர்?" — துக்காராம், தனக்கு ஒரு துணையிருக்கிறது என்ற தைரியத்தில் இப்படிப் பேசினான். உள்ளபடியே பரிமளா அவனை நேசிப்பதாக இவ்வளவுக்குப் பிறகும் அவன் நம்பினான் — பாபம்! பட்டுக்கோட்டையிலே வெள்ளியம்பலம் தன்னை சந்தித்த போது, பரிமளா தன்னைக் காதலிப்பதாக எண்ணியதே பைத்தியக்காரத்தனம் — அதன் பிறகு மருங்கப்பள்ளம் கிராமத்திலே ராமதூதன் வந்து கூறியது கேட்டு கூத்தாடியது அதைவிட பைத்தியக்காரத்தனம் — புதையல் ரகசியம் அறிவதற்காக, பரிமளா பெயரை உபயோகப்படுத்தி, தன்னை ஏமாற்றி விட்டார் வெள்ளியம்பலம் என்ற முடிவுக்கு வந்தவன், இப்போது நேரே அவளைக் கண்டதும், அவளைத் தன் காதலியாகவே எண்ணிக் கொண்டது இணையில்லாத பைத்தியக்காரத்தனம். தனக்கும் அவளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை — எந்தவிதமான பேச்சுமில்லை — காதல் கடிதப் போக்குவரத்தும் ஏற்பட்டதில்லை — கண் ஜாடை கூட இருந்ததில்லை — அப்படியிருந்தும், ஆயுளுக்கே முடிவு தேடும் ஆபத்து அவள் பெயரால் வந்தும் — அவன் காதல் போதையிலே தடுமாறினான்.

பளபளப்பான கத்தி, வெள்ளியம்பலத்தின் இடுப்பிலே இருக்கிறது என்பதை மறந்து அவரை எதிர்த்துப் பேசினான் — 'மாட்டேன்! முடியாது!' என்றெல்லாம்!

வெள்ளியம்பலத்திற்கு ஆத்திரம் பொங்கியது. ஒரே குத்தாகக் குத்தி அவனைக் கொன்று விடக்கூட நினைத்தார். அந்த நினைப்பை 'புதையல்' தடுத்தது. ஆத்திரத்தை அடக்கிக் கொண்டார்.

"சரிதான் தம்பி — வா! நம்ப வேலையை முடிச்சுட்டா, அப்புறம் நிம்மதியா இருக்கலாம் பாரு!"

இவர்கள் எதைப்பற்றி பேசிக் கொள்கிறார்கள் என்று பரிமளாவுக்குப் புரியவில்லை. அவள் அத்தானையும், கிழவரையும் நினைத்து நினைத்து ஏங்கினாள். இடையிலே முரடனும், முட்டாளும் குறுக்கிட்டு விட்டார்களே என்று மனம் புழுங்கினாள். அவர்களிடமிருந்து எப்படித் தப்புவது என யோசித்தாள்.

"நீங்களிருவரும் போய் உங்கள் வேலையைக் கவனித்து விட்டு வாருங்களேன். நான் இங்கேயே இருக்கிறேன்" என்று கூறிப் பார்த்தாள்.

"அதுவே சரி! நீ இங்கேயே இரு. நாங்கள் இதோ வந்து விடுகிறோம்" என்று கிளம்பினர், வெள்ளியம்பலம். துக்காராமுக்கோ அதில் இஷ்டமில்லை. ஏனெனில் அவனுக்கு உயிர்விட இஷ்டமில்லை; அதனால்தான்! பரிமளாவிடம் விஷயத்தைக் கூறிவிட எண்ணினான்.

"பரிமளா! — வேலையொன்றும் பிரமாதமில்லை. புதையல் ரகசியம் ஒரு சாமியாரிடமிருக்கிறது....." என்று துவங்கினான். அதற்குள் வெள்ளியம்பலம் தாண்டிக் குதித்து, "சொல்லாதே — போதும் நிறுத்து!" என்று கத்தினார்.

"அட இருங்கய்யா! என் காதலியிடம் சொன்னால் தப்பு ஒன்றுமில்லை. புதையலை, ஆளுக்குப் பாதி எடுத்துக் கொள்ள முடிவு செய்திருக்கிறோம். அதில், என்

பாதியை நானும் என் காதலி பரிமளாவுந்தானே அனுபவிக்க வேண்டும்!"

"அதை வேண்டாமென்று நான் சொல்லவில்லையப்பா! பாதிப் புதையலே பரிமளாவும் நீயும் தாராளமாக அனுபவியுங்கள். அதற்காக அந்த ரகசியத்தை அவளிடம் சொல்ல வேண்டுமா என்ன?"

"என் காதலிக்குத் தெரியாத ரகசியமா?"

"புதையல் விஷயம் உன் காதலிக்குத் தெரியும் என்பது எனக்குத் தெரியும். நீ அவளிடம் சொன்னதை நான் கேட்டதால்தானே இவ்வளவு தூரம் நிலைமையே வளர்ந்திருக்கிறது!"

ஏதோ புதிய ரகசியம் தெளிவாகலாம் என எண்ணிய பரிமளா, ஒரு கேள்வி கேட்டு வைத்தாள் "எனக்கு அது எப்படித் தெரியும்?" என்று!

உடனே வெள்ளியம்பலம், "சும்மா இரு, பெண்ணு. சிவன் கோயிலிலே நீயும் துக்காராமும் பேசிக் கொண்டதை இந்தக் காதால கேட்டேன். "மாமரத்தடியிலேதான் தங்கம் புதைக்கப்பட்டது" என்று துக்காராம் சொன்னை, இல்லையா?" என்று கேட்டுவிட்டு அலட்சியமாக சிரித்தார்.

பரிமளாவுக்கு இப்போது எல்லாம் விளங்கி விட்டது. துரையின் தங்கை தங்கம் புதைக்கப்பட்ட சோகக்கதையை துரை தன்னிடம் சொன்னதை, வெள்ளியம்பலம் கேட்டு, இப்படி விபரீத அர்த்தம் செய்து கொண்டிருக்கிறார் என்று தெரிந்துகொண்டு, தனக்குள்ளாகவே சிரித்துக் கொண்டாள் — அந்தக் கவலை தோய்ந்த நேரத்திலுங்கூட.

"நானும் இவரும் அப்படியொன்றும் பேசிக் கொள்ளவில்லையே—ஒருவேளை கனவு கண்டீர்களோ, என்னமோ?"

என்று பரிமளா கூறிய பிறகுதான் துக்காராமுக்கு உயிரே வந்தது. இல்லாவிட்டால் தங்கம் பற்றிய சம்பாஷணையை, பரிமளா வேறு யாருடனே பேசியிருக்கிறாள் என்று எண்ணி, மனதைப் புண்ணாக்கிக் கொண்டு தவித்திருப்பான், அந்த அப்பாவி வாலிபன்!

"அதெல்லாம் போகட்டும் — ஆக வேண்டியதை கவனிக்கலாம். துக்காராம்! உம்.....புறப்படு!" என்றார் வெள்ளியம்பலம்.

"எங்கே?" என்றாள் பரிமளம்.

"அதை உனக்குச் சொல்லக் கூடாது. தங்கம் எடுக்கிற ரகசியத்தை வாங்குவதற்குப் போகிறோம்!" — இது வெள்ளியம்பலம்.

"தங்கம் இருக்கிற இடம் தெரியலாம்; எடுக்கிற ரகசியம் தெரியக் கூடாதா?" என்று சிணுங்குவது போல நடித்தாள் அவள்.

"உன்னிடம் சொல்லாமலா கண்ணே! இப்போதே சொல்கிறேன்!.....அதாவது.....ஒரு சாமியாரிடம்....." என்றான் துக்காராம்.

"சரி—சரி! புறப்படலாம்!" என்று கொஞ்சம் பலத்த குரலிலே கூறினர் வெள்ளியம்பலம். புறப்பட்டு என்ன செய்வது; பொழுது விடிய இன்னும் நேரமிருக்கிறதே! விடிந்தால் அல்லவா, வெள்ளியம்பலத்திடமிருந்து விடுபட முடியும் — என ஏங்கினான் அவன்.

துக்காராமின் பிடிவாதத்தைக் கண்ட வெள்ளியம்பலம் இடையிலே சொருகியிருந்த கத்தியைக் கையிலே எடுத்துக் கொண்டார்.

அதை கவனித்த துக்காராம் திடுக்கிட்டான். உயிரைப்பற்றிய ஆசை படையெடுத்தது அவன் உள்ளத்தில்!

"பரிமளாவும் என்னோடு வரவேண்டும்" என்று ஒரு நிபந்தனை போட்டான். அவளாவது வழியில் தன்னைக் காப்பாற்ற மாட்டாளா என்ற நம்பிக்கையில்தான் அவன் அந்த நிபந்தனை விதித்தான்.

"எல்லோருமே போகலாம். ம் — நீ முதலில் நட! பரிமளா — நீயும் புறப்படு!" என்று அதட்டினர் அந்தப் பொன்னுக்கு வீங்கி!

பரிமளாவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. போலீசாரிடமிருந்து தப்பி, இந்தப் புதையல் தேடியின் கையில் அகப்பட்டு விட்டோமே என்று கவலைப்பட்டாள். வாடினாள். வழி? எதுவுமில்லை! எதிரே ஆறு! அதிலும் ஆழமில்லை. அகலம்தான் அதிகம் — விழுந்தாலும் சாக முடியாது. எது வரினும் வரட்டும் என்ற உள்ள உரத் தோடு அவர்களுடன் புறப்பட்டாள். வெள்ளியம்பலமோ, புதையலை நாளைக்கு எடுத்து விடலாம் என்ற நம்பிக்கை யோடு நடை போட்டார். துக்காராமோ, தன் உயிர் மதில் மேல் பூனையாக இருக்கிறது என்ற முடிவோடு முன்னே நடந்தான்.

ஆற்றின் கரையோரமாகவே மூவரும் நடந்து கொண் டிருந்தார்கள்.

"அந்த எடந்தான் எது என்று குறிப்பிட்டு சொல் லேனப்பா — நாளைவது கண்டுபிடிக்கிறேன்" என்று கால் வலியோடு கேட்டார் வெள்ளியம்பலம்.

"அவர் இருக்குமிடத்தை பார்த்துத்தான் கண்டு பிடிக்க முடியும். சொல்ல முடியாது — சொல்லவும் தெரி யாது!" என்று கூறி நடந்தான் துக்காராம்.

ஆற்றங்கரை யோரத்திலே உள்ள புல் பூண்டுகளை மிதித்துக் கொண்டும், முட்களை சமாளித்துக் கொண்டும்,

பரிமளா, தீராத வேதனையைச் சுமந்தபடி அவர்களைத் தொடர்ந்தபடி யிருந்தாள்.

"சாமியாருமில்லை — மண்ணாங்கட்டியுமில்லை — அவரிடம் புதையல் ரகசியமுமில்லை — எல்லாம் பொய் — பொழுது விடியும் வரையில் இப்படித்தான் நடப்பேன்" என்ற உண்மையை பரிமளாவிடம் சொல்லிவிடலாம் என்று துக்காராம் துடித்தான். அருகிலே வெள்ளியம் பலம் வருவது அவனுக்கு அச்சமூட்டிற்று.

இருளின் கனம் கரையத் தலைப்பட்டது. லேசாக வெளுப்பு தோன்ற ஆரம்பித்தது. விடிவெள்ளி உதயமாக வேண்டிய நேரம்போல் தெரிந்தது. துக்காராமுக்கு மனதுக்குள்ளே மகிழ்ச்சி அரும்பியது. இன்னும் இரண்டொரு மணி நேரங்களில் தான் தப்பி விடலாம் என்று எதிர்பார்த்தான். இப்படி, ஆளுக்கொரு நினைவாக நடந்துகொண்டிருக்கும் அவர்கள் மூவரின் கவனத்தையும் ஒரு **பயங்கரமான முணகல் சப்தம்** கவர்ந்தது.

"ஆ! அய்யோ — அம்மா — அப்பா! அய்யோ — அய்யோ" என்ற வார்த்தைகள் கீழ் ஸ்தாயியில் ஒலித்துக் கொண்டிருந்தன.

ஒலி வந்த திக்கிலே மூவரும் திரும்பினர்கள். ஒரு புதரின் பக்கமிருந்து வந்தது அந்த ஒலி. புதரண்டை சென்று பார்த்தார்கள். புதரோரத்திலே ஒரு உருவம் நெளிந்து கொண்டிருந்தது. உற்று கவனித்தார்கள். **ஒரு கையில்லை.** கை, வெட்டப்பட்டு ரத்தம் பெருக்கெடுத்த படியிருந்தது. முகத்தை மண்ணிலே புதைத்துக்கொண்டு குப்புறக் கிடந்தபடியால், 'அது யார்?' என்று உடனே கண்டுபிடிக்க முடியவில்லை பரிமளாவினால்! அவள் துடித்துப் போனாள். 'தூக்குங்கள்!' என்று கத்தினாள்.

வெள்ளியம்பலமும், துக்காராமும் சேர்ந்து, அந்த மனிதனை மெதுவாகப் புரட்டினார்கள்.

31

கையிழந்த அந்த மனிதன் யார் என்று பரிமளா கண்டுபிடித்து விட்டாள். அவள் அஞ்சியபடி அத்தான் துரையுமல்ல; அந்தக் கிழவருமல்ல! ஐயப்பனின் உருவமே அது! ரத்தத்தால் ஐயப்பனின் மார்பகமெல்லாம் நனைந்து போயிருந்தது. வெட்டுண்ட கரத்திலேயிருந்து ரத்தம் கொட்டிக் கொண்டேயிருந்தது. துக்காராமுக்கு நடுக்கம் தாங்கவில்லை. தெருக் கோடிகளிலே தம்பட்டமடித்து மாயாஜாலக்காரன் வேடிக்கைக்காக காட்டுவானே ரத்தம் — அந்த ரத்தத்தைப் பார்த்தே மயக்கம் போடக் கூடிய வீராதி வீரன் துக்காராம்! உண்மையிலேயே எங்கேயோ ஒரு அனாதரவான இடத்தில் இதுபோன்ற ஒரு பயங்கர சம்பவத்தைக் காணுவதென்றால் எப்படியிருக்கும்? உடம்பெல்லாம் உதறலெடுத்தது அவனுக்கு! ஆனால் அந்த நடுக்கத்திலும், வெள்ளியம்பலத்தின் கையிலேயிருந்து தப்புவதற்கு ஒரு நல்ல யோசனை மின்னல் வேகத்திலே தோன்றியது. வெட்டுண்டு கிடக்கும் மனிதன் யாரென்று அவனுக்கும் தெரியவில்லை. வெள்ளியம்பலத்திற்கும் தெரியவில்லை. இதை துக்காராம் பயன்படுத்திக் கொண்டான். தன் அபூர்வ யோசனையை செயல் படுத்தவும் தொடங்கி விட்டான்.

"ஆகா! அய்யோ! இவரா? என்னய்யனே! உமக்கா இந்த கதி ஏற்பட்டு விட்டது? தாளேன்! தாளேன்!!" என்று தவித்தான். தை தகவெனக் குதித்துக் கத்தினான்.

அதைக் கண்ட வெள்ளியம்பலம், "யாரப்பா இது? உனக்குத் தெரியுமா?" என்று ஆவல் ததும்பக் கேட்டார்.

"யாரா? இவர் யாரா? அய்யோ! தாழி உடைந்து விட்டதய்யா, வெண்ணெய் திரளும் போது! இவர்தான் நாம் தேடி வந்தவர்! இவரிடமே உங்களை அழைத்து வந்தேன்!"—துக்காராம் பிரமாதமாக அழ ஆரம்பித்தான். அந்த சோக நாடகத்தை வெள்ளியம்பலம் நம்பிவிட்டார்.

யாரோ ஒருவன் வெட்டுப்பட்டுக் கிடக்கிறான் என்ற அலட்சிய எண்ணத்தோடு இருந்தவருக்கு, திடீரென அக்கரை வெள்ளம் அலை மோதிக்கொண்டு கிளம்பியது. சாகக் கூடாத வயதிலே சாகிற பாசமுள்ளவர்கள், கடைசி மூச்சோடு போராடிக் கொண்டிருக்கும் போது கூட, மனந் துணிந்து "கையெழுத்துப் போடு இந்த உயிலிலே!" என்று கோரிக்கை சமர்ப்பிக்கிற உலகம் — அந்த உலகத்திலும், உள்ளத்தை எடுத்து வைத்துவிட்டு உலவுகிற பிரமுகர்கள்—அத்தகைய பிரமுகர்களின் அணிவகுப்பிலே ஒருவரான வெள்ளியம்பலம்!

அவர் எப்படி ஐயப்பனின் உயிர் போக சம்மதிப்பார்; புதையல் ரகசியத்தைப் பெற்றுக் கொள்ளாமல்! ஆகவே ஓடினார் ஆற்றுக்கு! தன் மேல் துண்டை நனைத்து எடுத்துக்கொண்டு ஐயப்பனிடம் வந்தார்; அவனது முகத்திலே தண்ணீரைப் பிழிந்தார்; அவனது உடலை மெதுவாக அசைத்தார்; உயிர் கொஞ்ச நஞ்சம் ஒட்டிக் கொண்டிருக்கிறதா என்று கவனித்தார்; அவ்வளவு கவலை அவருக்கு அவன் மீது!

அவனுக்கு தப்பித் தவறி உயிர் வந்துவிடக் கூடாது; வந்தால் தன் பாடு ஆபத்து — என்று எண்ணிக் கொண்டிருந்த துக்காராம் திடுக்கிடும் வகையிலே ஐயப்பன் மெதுவாகக் கண்ணை விழித்துப் பார்த்தான். உடலிலேயிருந்த

ரத்தம் பெரும் பகுதி வெட்டுண்ட கரத்தின் வழியே வெளியேறிவிட்டதால், ஐயப்பன் அசையக்கூட சக்தியற்றிருந்தான்.

"கண்ணைத் திறந்து விட்டான். கொஞ்சம் வாயையும் திறந்து அந்த ரகசியத்தை சொல்லி விட்டால் போதும், கடவுளே!" என்று பிரார்த்தனை செய்தார் வெள்ளியம்பலம்.

ஐயப்பன் தன் வரண்டுபோன வாயைத் திறந்தான். உலர்ந்த உதடுகளை அசைத்தான். ஈரமற்ற நாக்கு அசைக்க முடியாதபடி ஒட்டிக் கொண்டிருந்தது.

அவன் தாகத்தால் கஷ்டப்படுகிறான் எனக் கருதிய வெள்ளியம்பலம், துண்டிலே நனைத்திருந்த தண்ணீரை அவன் வாயிலே பிழிந்தார். அழுக்குத் துணியோடு பிழியப்பட்ட அந்த நீரை ஆவலாகக் குடித்தான் ஐயப்பன்.

"அப்பாடா!" என்று சொல்வதுபோல அவன் கண்கள் பிரகாசம் பெற்றன. தலையை மட்டும் திருப்பி சுற்றுமுற்றும் பார்த்தான்.

"ஐயோ! என்ன இடி விழப் போகிறதோ?" என்று ஏங்கித் தவித்தான் துக்காராம். ஆனாலும் சமாளித்துக் கொண்டு, ஐயப்பனின் பக்கத்திலே கவலையோடு உட்கார்ந்து கொண்டான். அம்பலத்திற்கு அவசரம் தாங்க முடியவில்லை.

"அய்யா! அய்யா! அந்தப் புதையல் ரகசியம் எங்கேயிருக்கிறது?" என்று பதட்டத்தோடு கேட்டார். ஐயப்பன் கண்களை மிரள மிரள விழித்தான். தொண்டையிலே விக்கல் வேறு ஆரம்பமாயிற்று.

"அட பாவி! செத்து விடுவான் போலிருக்கிறதே!" என்று பதறிய அம்பலம், முயற்சியைக் கைவிடாமல் மறு

படியும் "புதையல் ரகசியம் எங்கேயிருக்கிறது?" என்ற கேள்விக் கணையைத் தொடுத்தார்.

"புதையல்! புதையல்!! புதையல் ரகசியம்!!!"— புலம்ப ஆரம்பித்தான் ஐயப்பன்.

"ஆமாம், புதையல் ரகசியந்தான்!" என்று வலியுறுத்தினர் வெள்ளியம்பலம். வீடு பற்றி எரியும்போது பீடிக்கு நெருப்பு கேட்டவனையும் மிஞ்சிவிட்டார் அவர். ஐயப்பனே மரணமுகப்பில் ஏதேதோ உளறிக் கொண்டிருந்தான். சிறிது பிரக்ஞை வரும். அப்போது கண்களை அகல விழிப்பான். ஏதோ சொல்ல நினைப்பான். நினைவு தடுமாறும். இப்படி மாறி மாறி அவன் அவஸ்தைப்பட்டான். அந்த மரணவஸ்தையையும் பொருட்படுத்தாமல் காரியத்தை சாதித்துக் கொள்ள துடியாய்த் துடித்தார் அம்பலம்.

"தயவு செய்து சொல்லுங்கள்! புதையல் ரகசியம் யாரிடம் இருக்கிறது?"

ஐயப்பன், கண்களை விழித்தான். சுற்றுமுற்றும் பார்த்தான். பரிமளா மீது அவன் பார்வைப் பட்டது! பல்லைக் கடித்துக் கொண்டு கத்தினன். "இவளுடைய காதலன் — ஆசை நாயகன் — அவனிடம்....." என்று அவன் முடிப்பதற்குள்,

"யாரிடம்? துக்காராமிடமா?" என்று அவன் தோள்களைக் குலுக்கினர் வெள்ளியம்பலம்.

"இல்லே! துரை! துரை! துரை! அவளோட ஆசைப் புருஷன் — அந்த நாடகக்கார துரை!"

"யார், துரையா? பரிமளாவோட புருஷன் துரையா? இல்லியே; இதோ இந்தத் துக்காராமல்லவா?" என்று கத்தினர் வெள்ளியம்பலம்.

"இல்லே; துரைதான்! அந்த துரையும், மாயாண்டிக் கிழவருந்தான்..... என்னே ..... என்னே ....." என்று ஏதோ உளறிக் கொண்டே கண்ணை மூடிக் கொண்டான் ஐயப்பன்.

அம்பலம் விடுவாரா? மிச்சமிருக்கிற உயிரையும் தேடித் தோண்டி இழுத்துவந்து அவன் நாக்கிலே நிறுத்திப் பேசவைக்க முயன்றார்.

"அதெல்லாம் இருக்கட்டும் —புதையல் ரகசியம் இப்ப எங்க இருக்கு?"

"இதோ, இவனைக் கேளுங்க — இவ சொல்லுவாள்! அந்த மாயாண்டி — துரை — ரெண்டு பேரையும் விடாதிங்க!"

ஐயப்பனுல் அதற்கு மேல் பேச முடியவில்லே. விக்கல் அதிகமாகிவிட்டது. துக்காராம் மெய்மறந்து சோகத்திலே அனைத்தையும் துறந்துவிட்டவன் போல அசைவற்று நின்றார். ஐயப்பனின் உடல் புழுப்போல் நெளிந்தது. வாயை இரண்டு முறைப் பிளந்தான். புது உண்மைகள் வருமா என்று எதிர்பார்த்தார் அம்பலம். ஐயப்பனே இறுதி மூச்சை விட்டுவிட்டு, வாயையும் கண்களையும் இறுக மூடிக் கொண்டான். தொட்டுப் பார்த்தார் — உதட்டைப் பிதுக்கினர். துக்காராம் 'ஓ'வென அலறி, "அய்யோ! நான் என்ன செய்வேன்?" என்ற ஒப்பாரியைத் தொடங்கினன். பரிமளாவுக்கு ஒன்றும் புரியவில்லே. ஐயப்பனின் வாக்கு மூலத்தால், வெள்ளியம்பலம், துரையையும், கிழவரையும் காட்டிக் கொடுத்து விடுவாரோ என்று கிலி கொண்டாள்.

வெள்ளியம்பலத்தின் மூளை பலமாக வேலே செய்தது!

"துக்காராம்தான் தன்னுடைய காதலன் என்கிறுள் பரிமளா! செத்துப்போனவனே அவள் காதலன் துரை

என்கிறான். செத்தவனிடம்தான் புதையல் ரகசியம் இருந்ததாகத் துக்காராம் சொல்கிறான். செத்தவனை, அந்த ரகசியம் — துரை, மாயாண்டிக் கிழவர் இருவரிடமும் இருக்கிறது என்கிறான். ஒருவேளை, அவர்கள் இவனைக் கொன்றுவிட்டு ரகசியத்தைக் கைப்பற்றியிருக்க வேண்டும். ரகசியம், துரையிடமும் — மாயாண்டியிடமும் தான் சிக்கியிருக்க வேண்டும்!..... அது சரி! பரிமளாவுக்கு, துரை காதலனா? துக்காராமா? ஒருவேளை இருவருமே காதலர்களாக இருந்தால்? அப்படித்தானிருக்க வேண்டும்! இவளுடைய இரண்டு காதலர்களுக்குமே, தங்கம் புதைந்து கிடக்கும் இடம் தெரிந்திருக்க வேண்டும்! நாம்தான் வீணாக் குழப்பிக் கொள்கிறோம். அப்படியானால், பரிமளா, துக்காராம் இருவரையும் சில நாளைக்குத் தன் பாதுகாப்பிலே வைத்திருக்க வேண்டும். அப்படி வைப்பதால், துக்காராமும் பரிமளாவும் காதலர்கள்தானா என்ற உண்மை தெரிந்துவிடும்! அதோடு, பரிமளா மூலமாகவே துரையையும் பிடித்துவிட வேண்டும்! அந்த நாடகக்கார துரையும், மாயாண்டிக் கிழவனும் அகப்பட்டுவிட்டால், பிறகு எந்தவிதக் குழப்பமுமில்லாமல் என் ஆசை நிறைவேறிவிடும்!"

—இப்படி யோசித்தார் வெள்ளியம்பலம். பிறகு ஒரு முடிவோடு பரிமளாவைப் பார்த்து, "பரிமளா உன்னைப் பற்றி நான் புரிந்து கொண்டேன் — உனக்கு இரண்டு காதலர்கள்! ஒருவன் துரை! இன்னொருவன் துக்காராம்!" என்றார்.

"இல்லை — இல்லை! துக்காராம் மட்டுந்தான் — துரையை எனக்குத் தெரியவே தெரியாது!" என்றாள் பரிமளா.

"அதிருக்கட்டும் — இப்போது அதற்கு சாட்சி வேண்டாம்! நான் இடுகிற கட்டளையை நீயும் துக்காராமும் நிறைவேற்ற வேண்டும்!"

"என்ன கட்டளை?"

"உங்கள் இருவரையும் என் வீட்டிற்கு அழைத்துப் போகிறேன், யாருக்கும் தெரியாமல்! அங்கே உங்கள் இரு வருக்கும் ரகசியமாக திருமணத்தை நடத்தப் போகிறேன்."

இதைக் கேட்டு துக்காராம் மகிழ்ச்சி அடையவில்லை. இதில் ஏதோ சூது இருக்கும் என்று பயந்தான்.

"பயப்படாதே, துக்காராம்! இனிமேல் உன்னை துன் புறுத்த மாட்டேன். புதையல் ரகசியம் அந்த துரையிடம் இருக்கிறது என்பது தெரிந்த பிறகு, உன்னை எதுக்காக கஷ்டப் படுத்தணும்! பயமில்லாமல் என்னோடு திரும்பிவா!" என்றார் வெள்ளியம்பலம்.

"மருங்கப்பள்ளத்திற்கு வந்தால் அப்பா பார்த்து விடுவார்" என்றாள் பரிமளா!

"அதெல்லாம் கவலைப் படாதே! ராத்திரிக்கு போக லாம் மருங்கப்பள்ளத்துக்கு! என்னுடைய பங்களாவிலே இரண்டு பேரும் யாதொரு கவலையுமில்லாமல் இருக்கலாம். நீங்கள் இதற்கு இணங்கித்தான் தீரணும்!"

இனிமேல் தனக்குத் தொந்திரவு இல்லை என்று நம்பிய துக்காராமும் 'சரி' என்று ஒப்புக் கொண்டான்.

துக்காராமை காதலன் என்று கூறிவிட்டு, பிறகு அவனை மணக்க மாட்டேன் என்றால் உண்மை வெளியாகி விடுமே என்று பயந்த பரிமளாவும், வேறு வழியின்றி வெள்ளியம்பலத்தின் யோசனைக்கு இணங்கினாள்.

பரிமளாவை எப்படியாவது அழைத்துக் கொண்டு போய்விட்டால், அவளைக் கொண்டு துரையைப் பிடித்து விடலாமென்று உறுதி கொண்டார் அம்பலம். துக்காராம் — பரிமளா திருமணம் நடத்துவதால் அவர்கள் உண்மை யான காதலர்கள்தானே என்பதையும் கண்டுபிடித்து விட

லாமென்று நம்பினர். 'சரி; வாருங்கள் புறப்படலாம்' என்று அழைத்தார்.

"ஐயப்பனின் பிணம் மறைக்கப் பட்டால் அத்தானும் கிழவரும் தப்புவதற்கு ஒரு வேளை சாதகமாயிருக்கும்" என்று எண்ணிய பரிமளா, "இந்தப் பிணத்தை இழுத்து ஒதுப்புறமாக எறிந்து விடலாமே" என்று அம்பலத்திடம் கூறினாள்.

அம்பலமும் ஆட்சேபனை தெரிவிக்காமல் அங்குள்ள ஆழமான படுகுழியொன்றில் பிரேதத்தை இழுத்தெறிந்தார். பூமியைத் தோண்டி புதையல் எடுத்து, ஆகாயத்தை அளாவ கோட்டை கட்ட நினைத்த ஐயப்பன், பிணமாகக் குழியிலே விழுந்தான்!

வெள்ளியம்பலம் அவர்களை நோக்கி, "காதலர்காள்! புறப்படுங்க! புதையல் ரகசியம் எங்கேயிருக்கிறது என்று தெரிஞ்சாச்சி. நீங்களும் புதுத் தம்பதிகளாக ஆகிற நேரம் வந்தாச்சி! புறப்படுங்க!" என்று சந்தோஷத்தோடு அழைத்தார்.

பரிமளாவுக்கும் தனக்கும் கலியாணம் என்ற பரவசத்தோடு துக்காராம் புறப்பட்டான்—'இன்னும் எத்தகைய துன்பங்கள் தொடருமோ?' என்ற ஏக்கத்தோடு பரிமளாவும் அவர்கள் பின்னே போக வேண்டியதாயிற்று.

32

யார் கண்ணிலும் படாமல் அம்பலம், பரிமளா, துக்காராம் மூவரும் மருங்கப்பள்ளத்திற்கு இரவு வந்து சேர்ந்தார்கள். வாய்க்கால் ஓரத்திலே அமைந்துள்ள அம்பலத்தின் பங்களாவிலே ரகசியமாக இருப்பதென்ற திட்டப்படி துக்காராமும் பரிமளாவும் அங்கே வைக்கப்பட்டனர்.

வேலைக்கார ராமனின் கண்காணிப்பிலே விடப்பட்ட அவர் களுக்கு அவனது குறும்புத்தனமான் உபசாரங்கள் தலை வேதனையுண்டாக்கின. அம்பலத்தின் கட்டளைப்படி ராமன் சமையற் காரியங்களில் ஈடுபட்டு, அடுக்களையிலே பானை சட்டிகளை உருட்டவும் ஆரம்பித்தான். சரியாக பதினேரு மணிக்கு அம்பலம் உட்பட அனைவருக்கும் சரியாக வேகாத சோற்றை வடித்து விருந்துபசாரம் செய்தான். "ராமன் சமையல் எப்போதுமே 'நளபாக'ந்தான்" என்று கூறிக் கொண்டு, புளியில்லாத குழம்பை ஊற்றி அவர் களைத் திணற அடித்தான். பரிமளாவுக்கு இருக்கும் வேதனையில், வேகாத சோறு — புளியில்லாக் குழம்பு — இவைகளின் ருசிகளைப் பற்றி ஆராயவா நேரம்? அம்பலத் தின் பிடிவாதத்திற்காக உட்கார்ந்து எழுந்தாள். துக்கா ராமுக்கும் பதார்த்தங்களின் சுவை எதுவும் தெரியவில்லை. எட்டாத கனியின் சுவையை ரசிக்கப் போகிறோம் என்று நாக்கைத் தட்டிக் கொண்டிருப்பவனுக்கு ராமன் வைத்த விருந்து பெரிதாகவா தோன்றும்! அவனுக்கும் உணவு தேவையில்லாமலிருந்தது. ஆர அமர சாப்பிட அம்பலத் திற்கும் மனமில்லை. அவர் மனம் புயலால் சூழப்பட்டிருந் தது.

புதையலை எப்படியும் தனக்கு உரிமையாக்கிக்கொள்ள வேண்டுமென்ற அடங்காத ஆசையால் துடித்துக் கொண் டிருப்பவரல்லவா அவர்! தனது திட்டங்களை ஒன்றன்பின் ஒன்றாக நிறைவேற்ற வேண்டும் என்று உறுதி செய்து கொண்டார். முதலில் பரிமளா — துக்காராம் உண்மை யான காதலர்கள்தானா — என்று கண்டுபிடிக்கும் திட்டம். அதற்கு, அவர்கள் இருவரையும் தனியாக பங்களாவில் விடவேண்டும் — அதே சமயம் அவர்கள் தன்னை ஏமாற்றி விட்டுப் போய்விடாமல் காவலுமிருக்க வேண்டும். அய்யோ — ஊர்ப் பெரிய புள்ளி, பொன் மலைக்கு அதிபதி

யாக வேண்டும் என்ற பேராசைக்கு அடிமைப்பட்டதின் காரணமாக, எவ்வளவு சங்கடமான காரியங்களில் எல்லாம் ஈடுபட வேண்டியிருக்கிறது.

"எவனே தெரியவில்லை—திமிர் பிடித்த சோம்பேறிப் பயல். இவன் மாதிரி மனைர்கள் எல்லாம் என்னைக் கண்டாலே எழுபது அடி விலகி நடப்பார்கள். அப்படிப்பட்ட நான்; கேவலம் — இந்தக் கன்றுக் குட்டியிடம் பல்லைக் காட்ட வேண்டியிருக்கிறது!"—

என்று தனக்குத் தானே எண்ணிக் கொண்டு வருத்தப்படவும் தவறவில்லை வெள்ளியம்பலம்.

ஊரிலே எத்தனையோ கல்யாணங்கள் அவரது தலையிட்டால் நின்றுமிருக்கின்றன — நடந்துமிருக்கின்றன. அப்படிப்பட்டவர், யாரோ ஒரு அணைதக்கு பரிமளாவைத் திருமணம் செய்து வைக்க வலிய வலிய முயன்று வளைந்து வளைந்து கொடுக்க வேண்டியிருக்கிறது. இதுவும் அவரது வீராப்பு நிறைந்த நெஞ்சிலே எழுந்த புகைச்சல்தான்! ஆனலும் பொன் குவியல் என்ற அந்த ஆசைக் கனவு, எந்தப் புகைச்சலையும் நீடிக்க விடவில்லை.

துரையையும், பரிமளாவையும் பார்த்து, "ஜாக்கிரதையாக இருங்கள் — காலையிலே வருகிறேன். திண்ணையிலே ராமன் படுத்திருப்பான். ஏதாவது தேவையானால் சொல்லி அனுப்புங்கள்" என்று கூறிவிட்டு பங்களாவை விட்டுப் புறப்பட்டார் அம்பலம். ராமனும், ஒரு ஓட்டைப் பாயுடனும், பஞ்சு கிளம்பிய தலையணையுடனும் தன் சயனத்திற்குத் தயாரானன்.

துக்காராமுக்கோ ஆனந்தம் தாங்கவில்லை. குருடனுக்குக் கண்ணையும் திறந்து வைத்து, எதிரே பொன்னையும் கொட்டி வைத்தால் எப்படியிருக்கும்?

செவிடனுக்கு சிகிச்சை பார்த்து, கேட்கும் திறனையும் உண்டாக்கி விட்டு, செந்தமிழிலே ஒரு பாட்டையும் இசைத்துக் காட்டினால் எப்படி இருக்கும்?

அந்த நிலை பெற்றான் துக்காராம். பரிமளாவோ, தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய சோதனை மிகுந்த கட்டத்திலே நின்று கொண்டிருந்தாள். அவளது உள்ளத்தைப் புரிந்துகொள்ளும் சக்தியற்ற துக்காராம், அசடு வழிந்திட ஒரு சிரிப்பை வரவழைத்துக் காட்டினான். பரிமளா முதலில் பேசுவதா தான் முதலில் பேசுவதா என்ற பிரச்சினையிலே சில விநாடிகளைக் கழித்த துக்காராம்! தன்னைத் தைரியப்படுத்திக் கொண்டு வாயைத் திறந்தான்.

"கண்மணீ!"

பரிமளா பேசாமலிருந்தாள்.

"பரிமளா! நம்முடைய புனிதமான காதலை கடவுள் உணர்ந்து — நம் இருவரையும் எப்படி சேர்த்து வைத்து விட்டார் பார்த்தாயா?" என்று நாடக மேடை ராஜபார்ட் தோரணையிலே வசன மாரி பொழிய ஆரம்பித்தான்.

"அன்புள்ள காதலியே! ஏன் பேச மறுக்கிறாய்? வெட்கமா? உன்னுடைய வெட்கம் என் விலாவை வேலால் குத்திக் குடைகிறதே!"

இதைச் சொல்லிக்கொண்டே அவன் அவளிடம் நெருங்கினான்.

இதுவரையில் பொறுமையாக நின்று கொண்டிருந்த பரிமளா, துக்காராமை இரக்கத்தோடு பார்த்து,

"துக்காராம்!" என்றாள்.

"என்ன, துக்காராமா? கணவனைப் பெயர் சொல்லிக் கூப்பிடலாமா? பாபம்! பாபம்!!" எனக் கத்தினான் அந்தப் பைத்யக்காரன்.

"நான் சொல்வதைத் கேள்! என்னைப் போலவே நீயும் தொல்லையில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறாய். உன்னுடைய கஷ்டம் எனக்குத் தெரிகிறது. இந்த நேரத்தில் நாமிருவரும் கொஞ்சம் புத்திசாலித் தனமாக நடந்து கொள்ள வேண்டும்" என்றாள் பரிமளா.

"என்ன, என்னை மரியாதையில்லாம, நான் நீ என்று பேசுகிறாய்?"

"சொல்வதை முழுதும் கேள், துக்காராம். எனக்கு உன்னிடத்திலே கொஞ்சமும் அன்பு இல்லை — பிரியம் இல்லை — என்பது உனக்கு முன்பே தெரியுமல்லவா?"

"ஆகா! எனக்கு மயக்கம் வருகிறதே!"

"இப்படியெல்லாம் உளராதே! வெள்ளியம்பலத்திடமிருந்து தப்புவதற்காக, ஏதோ ஒரு பொய் சொல்லி வைத்தேன், உனக்கும் ஒரு சிறிய பாடம் கிடைக்கட்டும் என்று! அந்த வேடிக்கை, இப்போது இவ்வளவு வேதனையாக வளர்ந்துவிட்டது. நிச்சயமாக நம்பு; எனக்கு உன் மீது துளியும் விருப்பமில்லை!"

"அப்படியெல்லாம் சொல்லாதே பரிமளா! நான் உனக்காக உயிரை விடவும் தயாராயிருக்கிறேன். என் மனம் உன்னை நாடி, 'ஹேண்டில் பார்' இல்லாத சைக்கிள் போல ஆடிக்கொண்டே யிருக்கிறது!"

துக்காராம், பரிமளாவைத் தொட முயன்றான். பரிமளா, கோபத்தோடு 'தூரப் போ' என்று அதட்டினாள். துக்காராம் கேட்கவில்லை. கிடைத்திருக்கிற அருமையான சந்தர்ப்பத்தை நழுவவிட அவனுக்கு மனமில்லை. பரிமளாவைப் பிடித்து தன் பக்கம் இழுத்தான். பரிமளா, தன் புலங்கொண்ட மட்டும் அவன் கன்னத்திலே ஓங்கி அறைந்தாள். துக்காராம் அப்படியே அசைவற்று நின்றான்

சிறிது நேரம். அந்த அடி அவனது புத்தியை ஒரு நிலைப் படுத்திவிட்டது.

"பரிமளா! போதும்—இனியும் உன் கை வரிசையைக் காட்டாதே! என்னால் தாங்க முடியாது" என்று கூறிக் கொண்டே வேறு பக்கம் விலகிப் போய் நின்று கொண்டான். பரிமளாவுக்கு அவன் மீது பரிதாப உணர்ச்சி ஏற்பட்டது.

"இப்போதாவது நான் சொல்வதைக் கேள், துக்கா சாம்!" என்றாள்.

"என்ன சொல்லுகிறாய்? வாயால் எவ்வளவு வேண்டு மானாலும் சொல்! கையால் மட்டும் சொல்லாதே!" என் றான் பரிதாபமாக!

"நாமிருவரும் அம்பலத்திடமிருந்து விடுதலை பெற வேண்டாமா?"

"நிச்சயமாக!"

"அப்படியானால், பெயரளவுக்கு உன் காதலி என்று நீ சொல்ல வேண்டுமே தவிர, இப்படியெல்லாம் என்னிடம் தவறுக நடக்கக் கூடாது!"

"ஏன்? எதற்காக? பெயரளவுக்கு காதலி என்று சொல்லி, உனக்கு என் நன்மை செய்ய வேண்டும்? உனக் கும் எனக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று உண்மை யைக் கூறிவிட்டு, பொழுது விடிந்ததும் ஓடிப் போகிறேன் பார்!"

இதைக் கேட்டதும் பரிமளாவுக்குத் தூக்கி வாரிப் போட்டது. எங்கே, அம்பலத்திடம் காட்டிக் கொடுத்து விடுவாளே என்ற அச்சம் தலை தூக்கியது. அவன் சொல் வது சரியென்று அம்பலத்திடம் ஒப்புக் கொண்டால், துரையை சிக்க வைக்கத் தன்னை கருவியாக பயன்படுத்து வார் வெள்ளியம்பலம்—என்ற திகிலும் கூடவே பிறந்தது.

அதற்காக, துரையைக் காப்பாற்றுவதற்காக, துக்கா ராமின் இஷ்டத்துக்கு இணங்குவதா? இந்தக் கேள்வியை எண்ணிப் பார்க்கவும் இயலவில்லை பரிமளாவுக்கு!

பரிமளா, ஏதாவது சாதகமான பதில் சொல்லுவாளா என்று எதிர்பார்த்துக் கொண்டே யிருந்தான் துக்காராம். எதிர்பார்த்து, எதிர்பார்த்து, கடைசியில் தன்னையுமறியா மல் அப்படியே உட்கார்ந்தபடியே உறங்க ஆரம்பித்து விட்டான். பரிமளா, இரவு முழுதும் கண்ணயராமல் கவலைக் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தாள். தெருத் திண்ணையிலே ராமன் விடும் குறட்டை சப்தமும், வயல் களின் ஓரங்களிலேயிருந்து தவளைகள் எழுப்பும் சப்தமும் ஒன்றையொன்று வெல்ல முயன்று கொண்டிருந்தன.

இரவு முழுதும், யாருக்கும் தெரியாமல் அந்த பங்களா வைக் காவல் காத்துக் கொண்டு சுற்றிச் சுற்றி வட்ட மிட்டுக் கொண்டிருந்த அம்பலத்திற்கு, பரிமளா, துக்கா ராம் உரையாடல்களின் மூலம், உண்மை புலனாகி விட்டது. இருவரும் காதலர்கள் அல்ல; பரிமளா தன்னை ஏமாற்றி விட்டாள் — என்ற கோபம் வேறு பொங்கியெழுந்தது. துக்காராமின் மீது அவருக்கிருந்த சிறிதளவு மதிப்பும் சிதறிப் போய்விட்டது. காரியமிருக்கிறது என்பதற்காக அவனைக் கட்டியழுதார். காலையில் அவன் முகத்தில் காரி உமிழ்ந்து, "போடா! போக்கத்தவனே!" என்று துரத்தி அடிக்க வேண்டும் என்று தீர்மானம் செய்து கொண்டார்.

பொழுதும் விடிந்தது. துக்காராம் விழித்துப் பார்த் தான். எதிரே பரிமளா இருந்தாள். எதிர்பார்த்த இன்ப இரவு ஒரு கனவாகவே போய்விட்டதை யெண்ணி ஏங்கி னான். பரிமளா, அவனைப் பார்த்து "என்மீது கோபப் பட வேண்டாம் துக்காராம். ஏதோ ஆத்திரத்திலும் அவ சரத்திலும் அடித்து விட்டேன். இரண்டு நாள் தவணை கொடுங்கள். உங்கள் விருப்பத்தை நிறைவேற்ற முடியுமா

என்று யோசனை செய்கிறேன்" என்று நயமாகக் கேட்டுக் கொண்டாள்.

முரட்டுக் குரல் படைத்த வெள்ளியம்பலத்தின் வாய் ஜாலங்களிலே மயங்கிவிட்ட அந்த முட்டாள் வாலிபன், மொழியோ—தேனே என ஐயுறும் வகையில், குழலோ—குயிலோ என்று ஆராய்ந்திடும் வகையில் சொல் உதிர்த்திடும் சொக்கத் தங்கம் நிகர் சுந்தரியின் ஏமாற்று வார்த்தைகளுக்கா அடிமையாக மாட்டான்! முதலில் தயங்கினன் — பிறகு மயங்கினன் — நெருங்க மட்டும் விடவில்லை அவள்! வெற்றி பெற்று விட்டோம் என்ற அணுவளவு மகிழ்ச்சியோடு கதிரவன் வரவை எதிர்பார்த்திருந்தாள். மகளைக் காணேமே என்று மார்பிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு ஒப்பாரி வைத்திடும் மாதா, அதே ஊரிலே தான் ஒரு மூலையிலே இருக்கிறாள் — மகளோ, இங்கு சிறைப்படுத்தப் பட்டிக்கிறாள். இரவெல்லாம் கண் மூடாதிருந்த வெள்ளியம்பலமும் பங்களாவின் வாயிலிலே வந்து உட்கார்ந்து கொண்டு, சிந்தனைகளை ஓட விட்டுக் கொண்டிருந்தார்.

துக்காராமை நம்பிப் புண்ணியமில்லை; இனி துரையைத்தான் பிடிக்க வேண்டும். அது எப்படி முடியும்? அவன் எங்கே ஓடி ஒளிந்திருக்கிறானே — என்றெல்லாம் குழம்பிக்கொண்டே யிருந்தார்.

காலையிலே, பரிமளா, துக்காராம் இருவரிடமும் தன் கோபத்தைக் காட்டிக்கொள்ளவேயில்லை. இரவு நடந்தவை தனக்கு எதுவும் தெரியாது என்பது போலவே நடந்து கொண்டார். துக்காராமும் பரிமளாவின் வார்த்தையை நம்பி, அவளிடம் பழையபடியே பேசிப் பழகினன். மாலையும் வந்தது. பங்களா வாசலில் உட்கார்ந்திருந்த அம்பலத்திடம், ராமன் ஓடி வந்து, 'தாண்டவன் வருகிறார்' என்று பரபரப்புடன் கூறினன். உடனே, அம்பலம் பரி

மளாவையும், துக்காராமையும் உள்ளேயே ஜாக்கிரதையாக இருக்கச் சொல்லி விட்டு, தாண்டவனிடமிருந்து ஏதாவது புதிய சேதிகள் கிடைக்குமா என்ற ஆவலோடு வரவேற்க எழுந்தோடினர்.

"என்ன; பரிமளா அகப்பட்டாளா?" என்று அவசர அவசரமாகக் கேட்ட அம்பலத்திடம், தாண்டவன் உதட்டைப் பிதுக்கிக் கொண்டே, 'இல்லே' என்று ஈன சுரத்தில் பதில் அளித்தார்.

"போலீஸ் எல்லாம் தேடினதாகக் கேள்விப்பட்டேனே" என்றார் அம்பலம்.

"தேடினது உண்மைதான்—கையிலே அகப்பட்டாள். பிறகு எங்களையும் ஏமாற்றி விட்டு எங்கேயோ மறைந்து விட்டாள்" என்றார் தாண்டவன்.

"இது என்னய்யா வேடிக்கை? கையிலே அகப்படுவ தாவது; மறைவதாவது!".

"இது மட்டுமா வேடிக்கை? அவளைத் தேடிப் போன திலே ஒரு கொலைக் கேஸ் கிடைச்சுது போலீசுக்கு!"

"கொலைக் கேசா?" — ஆச்சரியத்தோடு கேட்டார் அம்பலம்.

"ஆமாம்—புதுப்பட்டினத்திலே பரிமளாவைப் பிடித் தோம். அவள் தன்னை யாரோ ஒருவன் கெடுக்க முயன்ற தாகவும், அப்போது ஒரு கிழவனும், ஒரு வாலிபனும் மீட்க வந்ததாகவும், அதனல் சண்டை நடப்பதாகவும் சொன்னுள். நாங்கள், அவள் சொன்ன இடத்துக்கு ஓடி னேம். அங்கு யாருமில்லை, ஒரு கை மட்டும் வெட்டப் பட்டுக் கிடந்தது. அப்போது, பரிமளா எல்லோர் கண் ணிலும் மிளகாய்ப் பொடியைத் தூவி விட்டுப் போய் விட் டாள். பிறகு விசாரித்ததில், அது துரை என்பவனின் வீடு என்று தெரிந்தது."

"உம்; அப்புறம் என்ன நடந்தது?"

"அப்புறம் என்ன? நான் போன விஷயம் நடக்கிலே! போலீசுக்கு புது கேஸ் கிடைச்சுது!"

"அந்தக் கேஸ்தான் இப்ப எதுவரையிலே இருக்குது?"

"எதுவரையிலே இருக்கு? இன்னேக்கு மத்யானம் பனிரெண்டு மணிக்கு, அந்தத் துரை என்பவனேயும், மாயாண்டிக் கிழவனேயும் போலீஸ்காரங்க கைது செய்து கொண்டு போயிருக்காங்க!"

இதைக் கேட்டதும் அம்பலத்தின் முகம் மாறி விட்டது. கொலை வழக்கில் துரையும், அந்த மாயாண்டியும் சிக்கி, தண்டிக்கப்பட்டு விட்டால், பிறகு எப்படி புதையல் ரகசியத்தைத் தெரிந்து கொள்ள முடியும்? — என்ற கேள்வி அவரது நெஞ்சைப் பிளந்தது. தாண்டவனே, அம்பலத்திற்கு ஏற்பட்டிருக்கிற மனக் குழப்பத்தை அறியாமல் அந்தக் கொலைக் கேசைப் பற்றி அளந்து கொண்டே போனர்.

கேஸ் விசாரணைக்கு வந்தால், தானும், தன் மகளுங் கூட ஒரு சாட்சியாகப் போக நேரிடுமென்றும், எப்படியும் கேசைக் கண்டுபிடித்து விடுவார்கள் என்றும் தாண்டவன் வழக்கு பற்றிய விபரங்களை விளக்கினர். அம்பலத்தின் செவியில் இவையெல்லாம் ஏறவில்லை. தாண்டவனை வீட்டுக்கு அனுப்பிவிட்டு மீண்டும் யோசனையில் ஆழ்ந்தார். "துரையும், கிழவரும் விடுதலை பெற வேண்டும். அப்போதுதான் புதையலைக் கண்டு பிடிக்கலாம். இந்த துக்காராமை, முன்பு நினைத்ததுபோல் துரத்தி விடுவதும் தவருன காரியம். இவன் பரிமளாவின் காதலன் இல்லாவிட்டாலும், புதையல் ரகசியம் தெரிந்தவன். அதுவுமன்றி, துரையை விடுவிப்பதென்றால் அவனுக்குப் பதிலாக இன்னெருவன் மீது குற்றச் சாட்டை சுமத்த வேண்டும். அதற்கு சரியான பலிக்கிடா இந்த துக்காராம் தான்! இவனை எப்படியா

வது கொலை வழக்கில் சம்பந்தப் படுத்திவிட்டால். புதையலுக்கு கூட பங்குக்கு வர மாட்டான்.''

இப்படியெல்லாம் நினைவுச் சுழல்கள் எழுந்தன.

பரிமளாவைத் தனியாகக் கூப்பிட்டு, அவளிடம், துரையும், கிழவரும் கைதாகி விட்ட செய்தியை அம்பலம் கூறினர். பரிமளாவினால் சமாளிக்க முடியவில்லை. ''அய்யோ! அத்தான்!'' என்று அலறி விட்டாள். அம்பலம், அவளிடம் இரவு நடந்தவை எல்லாம் தனக்குத் தெரியுமென்றும், துரையை விடுவிப்பதென்றால், தான் சொல்கிறபடி கேட்க வேண்டுமென்றும் கூறினர்.

''துரை விடுதலையாக வேண்டுமென்றால், துக்காராம் தூக்கு மேடைக்குப் போய் ஆகவேண்டும்'' என்றார் அம்பலம்.

''அய்யோ பாபம் — அப்பாவியாயிற்றே துக்காராம், வேண்டாம். வேறு வழி யோசனை செய்யுங்கள்'' என்றாள் பரிமளா!

''வேறு வழி கிடையாது. உன் பிரிய காதலன் உயிர் பிழைக்க ஒரே வழி — நீ என் வார்த்தைகளைக் கேட்பது தான்!'' என்று அழுத்தந் திருத்தமாகக் கூறினர் அம்பலம்.

''சரி, சொல்லுங்கள்'' என்று அவரது பேச்சைக் கேட்க ஆயத்தமானாள் பரிமளா.

33

வெள்ளியம்பலம் குரலை சரிப்படுத்திக் கொண்டு, மெதுவாகவும் நிதானமாகவும் பேச ஆரம்பித்தார். சூதான திட்டங்களை வகுக்கும் யோசனைகள் ஒன்றன்பின் ஒன்றாக

உருவாகிக் கொண்டிருந்தபடியால் எங்கே தவறி வார்த்தைகள் வந்து விடுமோ என்ற பயத்தோடு அவர் பேச்சில் நிதானத்தை அளவுக்கு மீறி கடைப்பிடித்தார்.

"பரிமளா! இதை கவனமாகக் கேள்! போலீசாருக்கு பலமான தடயம் கிடைத்து விட்டது. வெட்டப்பட்டுக் கிடந்த கையை எங்கு கண்டுபிடித்தார்களோ அந்த இடம் துரையின் வீடு என்பதால், துரை சாமான்யத்திலே மீள வழியே கிடையாது. துரையையும், மாயாண்டிக் கிழவரையும் ஜாமீனில் விடுதலை செய்து, பிறகு வழக்கிலிருந்தும் விடுதலைபெற வேண்டுமென்றால்—துக்காராமைக் காட்டிக் கொடுத்தே ஆகவேண்டும். நான் போலீசாரிடம் சென்று, துக்காராம் கொலை செய்ததை நேரில் பார்த்தேன் என்று கூறப் போகிறேன். அதற்கு நீயும் சாட்சி சொல்லியாக வேண்டும். அதை விட்டு, நீ துக்காராம் மீது அனுதாபம் காட்டினால் ஆபத்துத்தான் வந்து சேரும்" என்று பயமுறுத்தினர். பரிமளாவுக்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை. மௌனமாக நின்றாள். "அய்யோ, பாவம் துக்காராம்!" என்று மனதிற்குள்ளே வருந்தினாள். "மௌனம் சம்மதத்திற்கு அடையாளம்! நான் போய் வருகிறேன்" என்று கூறிவிட்டு, அம்பலம் புறப்பட்டார். தெருவிலே நின்ற ராமனைக் கூப்பிட்டு, "உள்ளே போய் அவர்களுக்கு வேண்டியதை கவனி; ஜாக்கிரதை" என்றும் எச்சரித்து விட்டு, போலீசாரை சந்திப்பதற்காக விரைந்தார்.

பரிமளாவின் மனமோ ஒரு நிலையில் இல்லை. துரையின் பெயரைச் சொல்லி, அம்பலத்திடம் ஆபத்தில் சிக்க வைக்கக் கூடாது என்பதற்காக துக்காராம் பெயரை உபயோகித்தாள். இப்போதோ, துக்காராமை இந்த பயங்கர சதித் திட்டத்திலிருந்து எப்படி விடுவிப்பது என்று புரியாமல் திகைத்தாள். பள்ளிக்குச் செல்லும்போது பட்டுக்

கோட்டை தெருவிலே ஒரு நாள் துக்காராம் பரிமளாவிடம் அநாகரீக முறையிலே நடந்து கொண்டது உண்மைதான். அன்று முதல் அவன் மீது பரிமளாவுக்கு ஆத்திரம் ஏற் பட்டதும் ஆச்சரியமில்லைதான். அந்த ஆத்திரம் நாள் தோறும் வளர்வதற்குத் துக்காராமின் சேட்டைகள் கார ணமாயிருந்தன என்பதையும் மறுக்க இயலாதுதான். ஏதோ அந்த ஆத்திரத்திலே, தானும் தன் காதலனும் தப்புவதற்காக அவனைக் காட்டிக் கொடுத்து விட்டாள். இப்போது அவன் மரண முகப்பிலே நிற்கிறான். அவனை அவள் விடுவித்தாக வேண்டும். அவனை விடுவிப்பதென் றால், தன் அத்தானை பற்றிய கவலையை மறக்க வேண்டும்.

கவலையை என்ன; அத்தானையே மறந்து தீர வேண் டிய நிலைமை வந்தாலும் வரலாம். பரிமளாவின் நெஞ்சம் குழப்பக் காடாயிற்று. துக்காராமின் மீது அவளுக்கு அனுதாபமும், அன்பும் உதயமாக அந்தக் குழப்பம் காரணமாகவும் ஆயிற்று. அவன் அசடு வழிய, அவளைப் பார்த்து சிரிக்கும் போதெல்லாம், அவனது தலைக்கு மேலே தொங்கிக் கொண்டிருக்கும் தூக்குக் கயிறை நினைத்துக் கொண்டு அவள் வேதனைப்பட ஆரம்பித்தாள்.

"பரிமளா!" என்று பல்லை இளித்துக் கொண்டு அவன் கூப்பிடும்போதுகூட, முதல் நாள் இரவு போல அவள் சிடுசிடு வென்று விழாமல், சாதாரணமாக, 'என்?' என்று கேட்க ஆரம்பித்தாள். பரிமளாவின் பணிவையும், குழைவையும் கண்ட துக்காராமுக்கு மீண்டும் நம்பிக்கை நட்சத்திரம் தோன்றத் துவங்கியது. பொழுது விடிந்ததும் துக்காராமை ஏமாற்றுவதற்காக அவள் சொன்னாளே; "இரண்டு நாள் தவணை கொடுங்கள்; உங்கள் விருப்பத்தை நிறைவேற்ற முடியுமா—என்று யோசிக்கிறேன்" என்ப தாக; அந்தத் தவணையை இன்றைக்கே முடித்து விடுவாள் போலிருக்கிறது என்று எண்ணி அவன் அகமகிழ்ந்தான்

அவன் கேட்டதற்கெல்லாம் பரிமளா, படபடப்பின்றி பதில் கூறினாள். அவளை மகிழ்ச்சியில் கூத்தாடிக் கொண்டிருந்தான். மாலை போட்டுக்கொண்டு நிற்கும் பலிக் கடாவைப் பார்ப்பது போல அவனை அவள் பார்த்தாள்.

அவர்களை விட்டுவிட்டு அவசரமாகப் புறப்பட்ட வெள்ளியம்பலம் பராஹூரணி போலீஸ் ஸ்டேஷனை நோக்கிப் பயணமானார்.

பராஹூரணி போலீஸ் ஸ்டேஷனில்தான் துரையும், மாயாண்டிக் கிழவரும் 'லாக் அப்'பில் வைக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் மீது போலீசார், 'சார்ஜ் ஷீட்' பதிவு செய்வதற்கு முன்பாகவே வெள்ளியம்பலம் அங்கு போய்ச் சேர்ந்தார். பராஹூரணி சப் இன்ஸ்பெக்டருக்கு வெள்ளியம்பலத்தை முன்பே தெரியுமாதலால், வரவேற்று உபசரித்து "என்ன விசேஷம்?" என்று கேட்டார். "விசேஷமில்லாமல் வருவேனா" என்ற பீடிகையுடன் அம்பலம் ஆரம்பித்தார்.

"ஒரு கொலை கேஸ் விஷயமாக உங்களிடம் அவசரமாகப் பேச வந்தேன்" என்று அம்பலம் கூறியதும், சப்-இன்ஸ்பெக்டர், பரபரப்புடன் அதை கவனித்தார். துரையும், மாயாண்டியும் 'லாக் அப்'பில் இருப்பது தனக்குத் தெரியாது போலவே அம்பலம் நடந்து கொண்டார்.

"புதுப்பட்டினத்திலே துரை என்பவனுடைய வீட்டுக்கு போயிருந்தேன் ஒரு காரியமாக. அப்போது ஒரு பெண் ஓடிவந்து வீட்டுக்குள்ளே புகுந்தாள். அவள் அலறிக்கொண்டு ஓடி வந்ததிலேயிருந்து, ஏதோ பெரிய ஆபத்து என்று நினைத்தேன். அவள் பின்னாலேயே ஒரு வாலிபன் ஓடி வந்தான். அவன் கையிலே பளபளப்பான ஒரு கத்தி இருந்தது. அதைக் கண்டதும், நானும் துரையும் வெளியே வந்துவிட்டோம். "ஐயோ என்னைக் காப்

பாத்துங்க!" என்று அந்தப் பெண் கத்தினாள். "சத்தம் போடாதே" என்று அவளையும் அதட்டிவிட்டு, எங்களை யும் பார்த்து, "உள்ளே வந்தால் உயிர் போகும்!" என்று மிரட்டினான். என்ன செய்வதென்று தெரியாமல் நாங்கள் விழித்தோம். "துக்காராம்! துக்காராம்! என்னை விட்டு விடு!" என்று அந்தப் பெண் கூச்சல் போட்டதிலே யிருந்து, அவன் பெயர் துக்காராம் என்றும், "பரிமளா! சத்தம் போடாதே!" என்று அவன் எச்சரிக்கை செய்த திலேயிருந்து, அவள் பெயர் பரிமளா என்றும் புரிந்து கொண்டோம். அப்போது தாடி வைத்த முரட்டுச் சாமி யார் ஒருவர் அங்கு ஓடி வந்தார். அவர் எங்களைப் பார்த்து, "அய்யா! இங்கே ஒரு பெண்ணை, ஒரு துஷ்டன் தூக்கிக் கொண்டு வந்தானு?" என்று பரபரப்போடு கேட்டார். நாங்கள், 'ஆமாம்' என்று உள்ளே கை காட்டினோம். "அட பாவிகளே! அதை வேடிக்கையா பார்க்கிறீர்கள்?" என்று சாமியார் எங்களைத் திட்டிவிட்டு உள்ளே ஓடினார். நாங்களும் உள்ளே ஓடினோம். அவருக்கும், அந்த துக்கா ராமுக்கும் கை கலப்பு ஏற்பட்டது. அந்த சமயத்தில் பரி மளா, அதை விட்டு வெளியே ஓடிவிட்டாள்."

சப் இன்ஸ்பெக்டர் பெருமூச்சுடன், "ஆமாம்; அப் போதுதான் நாங்கள் அவளை தெருவில் பார்த்தோம்" என்றார்.

"முழுதும் கேளுங்கள்" என்று மீண்டும் தொடர்ந் தார் அம்பலம்.

"பரிமளா ஓடிவிட்ட பிறகும், சாமியாருக்கும் துக்கா ராமுக்கும் சண்டை ஓயவில்லை. திடீரென்று சாமியார் கொல்லைப் பக்கம் ஓடினார். துக்காராம் அவரைத் தொடர்ந்துசென்று, அரிவாளால் அவரது கையை வெட்டி னான்—கை துண்டாகிக் கீழே விழுந்து துடித்தது! அதைப் பார்த்து பயந்த துரை, வீட்டை விட்டு எங்கேயோ ஓடி

விட்டான். அவ்வளவு பயங்கொள்ளி அவன். நான் தைரிய மாகச் சென்று துக்காராமை இழுத்தெறிந்தேன். அவன் கையிலிருந்த கத்தியை ஓங்கினன்; நான் சமாளித்துக் கொண்டேன். அந்த சமயத்தில் கை வெட்டுண்ட சாமியார் ஓட்டம் பிடித்தார்.

அவரைத் தொடர்ந்து அந்த இருட்டிலே துக்கா ராம் ஓடினன். நானும் என்ன நடக்கிறது என்று பார்க்கப் பின்னாலேயே ஓடினேன். அவர்கள் ஓடிய வழி தவறி விட்டது. வேறு வழியில் நடந்து சென்ற நான், அங்கே பரிமளா ஓடி வருவதைக் கண்டேன். அவள் விபரமெல் லாம் சொன்னாள். அவள் எங்கள் ஊர் தாண்டவனின் மகள் என்று அப்போதுதான் புரிந்து கொண்டேன். வீட் டிலே தூங்கிக் கொண்டிருந்த அவளுக்கு துக்காராம் மயக்க மருந்து கொடுத்து தூக்கி வந்ததாகவும், அவளைத் தன் இஷ்டத்துக்கு இணங்க வைக்க முயன்றதாகவும், அவளும் அவனிடமிருந்து தப்புவதற்கு தந்திரமாக நடந்து கொண்டதாகவும், கடைசியில் புதுப்பட்டினம் வழியாக இருவரும் செல்லும்போது ஒரு சாமியார் சந்தேகப்பட்டு தன்னை மீட்க வந்ததாகவும், துக்காராம் — சாமியார் இரு வரும் சச்சரவு செய்து கொண்டிருக்கும்போது அவள் திடீ ரென்று வீட்டுக்குள் நுழைந்ததாகவும் கூறினாள். பிறகு இருவரும் பேசிக்கொண்டே ஆற்றங்கரைப் பக்கமாக நடந்து வந்தோம். "ஐயோ! ஐயோ!" என்ற சப்தம் கேட் டது. இருவரும் ஒளிந்திருந்து பார்த்தோம். கையிழந்து தவிக்கும் சாமியாரை துக்காராம் பெரிய கம்பு ஒன்றினால் அடித்துக் கொண்டிருந்தான். நான் அருகே ஓடலாமென்று நினைத்தேன். பரிமளா தடுத்துவிட்டாள். அடிபட்ட சாமி யார் பிணமாக விழுந்தார். "பயலே! தொலைந்து போ! நான் ஒரு பெண்ணை அழைத்து வந்தால் உனக்கென்ன? நாயே!" என்று துக்காராம் சாமியாரை உதைத்து படுகுழியொன்

றில் தள்ளினான். அதையும், நானும் பரிமளாவும் கவனித்தோம். பிறகு, துக்காராம் அவசரமாக அதைவிட்டு நகர்ந்தான். நான் பரிமளாவிடம் "**நீ வீட்டுக்குப் போ; ஜாக்கிரதையாக!**" என்று கூறிவிட்டு அவனைத் தொடர்ந்தேன். பொழுது விடிந்தது. அவன் மருங்கப்பள்ளம் பக்கமே வந்து கொண்டிருந்தான்.

மீண்டும் அவனைத் தேடி வந்திருக்கிறான் போலிருக்கிறது! — இதுதான் சமயமென்று அவனைப் பிடித்தேன். திமிறினான். விடவில்லை. துணைக்கு சில ஆட்கள் ஓடி வந்தனர். அவனைக் கொண்டுபோய் என் வீட்டில் அடைத்து வைத்திருக்கிறேன். இப்போது வந்தால் நீங்கள் அந்தக் கொலைகாரனை கைது செய்யலாம். என் வீட்டிலே தானிருக்கிறான்" என்று கூறி முடித்தார், அம்பலம். சப் இன்ஸ்பெக்டரால் இந்தச் செய்திகளையும், விபரங்களையும் நம்பாமல் இருக்க முடியவில்லை.

"அப்படியா விஷயம்! நான் அந்த துரை மீதும் மாயாண்டி என்பவர் மீதும் சந்தேகப்பட்டு அவர்களைப் பிடித்து வைத்திருக்கிறேனே!" என்று தன்னை நொந்து கொண்டார் சப் இன்ஸ்பெக்டர்!

"ஐயோ! அவர்களையா? அட பாபமே!" என்று ஏதுமறியாதவர் போல எழுந்து குதித்தார் அம்பலம்.

"ஆமாம்; கையைக் கண்டுபிடித்த நாங்கள், கேசைக் கண்டுபிடிக்க முயன்றோம். இன்று மத்தியானம்தான் துரையையும், மாயாண்டியையும் கைது செய்தோம்."

"எங்கே கைது செய்தீர்கள்?"

"அவர்கள் வீட்டிலேதான்!"

"அவர்கள் என்ன சொன்னார்கள்?"

"எதுவும் கூறவில்லை; மௌனம் சாதிக்கிறார்கள். நானும் எதுவும் கட்டாயப்படுத்திக் கேட்கவில்லை. 'லாக்

அப்'பில் தானிருக்கிறார்கள். இன்னும் 'சார்ஜ் ஷீட்'டே போடவில்லை!"

"அய்யோ, அப்படியானால் அவர்களை விட்டு விடுங்கள்! அவர்களை விடுதலை செய்துவிட்டு என்னோடு வாருங்கள்! உண்மையான கொலைகாரனை இப்போதே ஒப்புவிக்கிறேன்."

"ஆல் ரைட்! இப்போதே விடுவிக்கிறேன்"

துரையும், மாயாண்டிக் கிழவரும் விடுதலை செய்யப்பட்டார்கள். வெள்ளியம்பலம், துரையை முன்பே தெரிந்தவர்போல, "என்ன தம்பீ! இப்படி மாட்டிக் கொண்டாய்? நான் வரலேன்னு அவ்வளவுதான்!" என்றார்.

துரை, எதுவும் பதில் சொல்லாமலே நின்றான். "என்னையா, மாயாண்டி! நீருமா சிக்கிவிட்டீர்; அட பாபமே!" என்றார் வெள்ளியம்பலம், கிழவரை நோக்கி! கிழவரும் தலை குனிந்தவாறு எதையோ சிந்தித்துக் கொண்டு நின்றார். வெள்ளியம்பலம், துரையையும் கிழவரையும் தனியே அழைத்துப் போய், துரையிடம், "எல்லாம் பிறகு பேசிக் கொள்வோம்—முதலில் நீங்கள் இதை விட்டுப் போங்கள்! இந்தக் கேசில் நீ சாட்சியாக வரவேண்டியிருக்கும்; அவ்வளவுதான்! பரிமளா ஒரு பத்திரமான இடத்திலே வைக்கப் பட்டிருக்கிறாள். நாளை இரவு பனிரெண்டு மணிக்கு நீ மலேராவுக்கு வா! அங்கே பரிமளாவை உன்னிடம் ஒப்படைக்கிறேன்!" என்று கூறி அவர்களை அனுப்பிவிட்டு, சப் இன்ஸ்பெக்டரிடம் வந்து, "புறப்படலாம் சார்!" என்றார். சப் இன்ஸ்பெக்டர், போலீஸ் ஜவான்கள் இரண்டு மூன்று பேரை அழைத்துக்கொண்டு அம்பலத்துடன் புறப்பட்டார்.

* * * *

துக்காராம் போலீஸ் கையில் சிக்கப் போகிறானே என்ற ஏக்கத்தோடு பரிமளா உட்கார்ந்திருந்தாள். துக்காராமை விடுவிக்க வழியே கிடையாதா என்று எண்ணமிட்டாள். அவளது இளம் இதயத்திலே புயல் வேகமாக வீசத் தொடங்கியது. சிறையிலே கிடக்கும் அத்தான்! சிலந்தி வலையிலே சிக்கியிருக்கும் அப்பாவி துக்காராம்! இவர்கள் இருவரையும் விடுவிக்க வழி என்ன? கேள்விகள் வேதனைக் கணைகளாக மாறித் துளைத்தன. இப்படி ஒரு நெருக்கடியும் சோதனையும் மிகுந்த கட்டம் எந்தப் பெண்ணுக்கும் ஏற்பட்டிருக்க முடியாது என்று தனக்குள்ளே அழுதாள்.

"எவனே ஒருவன்; ஏனோதானோவென்று வாழ்ந்து கொண்டிருக்கும் இளிச்சவாயன்! அவனுக்காக, தன்னை உயிரினும் மேலாக நினைக்கும் அத்தான பலி கொடுப்பதா? எத்தனை எத்தனை இன்பக் கனவுகள் — எத்தனை எத்தனை எதிர்காலத் திட்டங்கள் — அத்தனையும் அழிந்து போவதா?" — கேள்வி கிளம்பியது — பரிமளா மௌனமாக அழுதாள்.

"அத்தானுவது, உயிரைத் துரும்பென மதிப்பவர்! இந்த அப்பாவியோ உயிரைக் கரும்பென எண்ணிக் கிடப்பவனுயிற்றே! அவன் சாகவேண்டிய அளவுக்கு அப்படியென்ன தவறு செய்து விட்டான்? அவனைக் காட்டிக் கொடுப்பதால் அவளுக்கு என்ன லாபம்? காதலன் கிடைப்பான் — காதலில் வெல்வாள்! ஒரு அப்பாவியின் உயிரைக் காப்பாற்ற காதலைத் தான் தியாகம் செய்யக் கூடாதா?" — மீண்டும் கேள்வி துளைத்தது!

"அப்படியே துக்காராமைக் காட்டிக் கொடுத்து துரையைக் காப்பாற்றி விட்டாலும், துரைக்கு வெள்ளியம்பலத்தால் என்ன ஆபத்து காத்திருக்கிறதோ; யார் கண்டது?" — குழப்பம் பொங்கி யெழுந்தது!

"சரியான சாட்சிகளின்றி அத்தானின்மீது குற்றம் நிரூபிக்கப்படாமல் கூட போகலாம்! அப்படி சாட்சியம் இருந்தாலும் அவருக்கு சிறை வாழ்வுதான் கிடைக்கும் — சில ஆண்டுகளுக்குப் பிறகு அவரைச் சேர வழியிருக்கிறது! ஆனல் துக்காராம் சிக்கினல், அவன் வாழ்வே துண்டிக்கப்பட்டு விடுமே!"

பரிமளா தத்தளித்தாள் — கதியற்றவனைக் காப்பாற்றுவதா? காதலித் தியாகம் செய்வதா? அல்லது காதலனுக்கு துரோகம் செய்வதா?

இந்த மூன்றில் ஒன்றை அவள் விரைவிலே முடிவு கட்டியாக வேண்டும். கடைசியில் காதலித் தியாகம் செய்வது என்ற முடிவுக்கே வந்து சேர்ந்தாள்.

34

துக்காராமோ, பரிமளாவிடமிருந்து எப்போது வரம் கிடைக்கும் என்று எதிர்பார்த்துத் தவமிருந்தான். வெகு நேரம் வரையில் மௌனமாகவே மனப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பரிமளா, உறுதியான முடிவோடு துக்காராமை அணுகினுள். அவளுக்குத் தெரியாது, போலீசார் துக்காராமைக் கைது செய்ய வந்துகொண்டிருக்கிறார்கள் என்பது! ஆனலும் நிச்சயமாக வருவார்கள்; துக்காராமைப் பிடித்துச் செல்வார்கள் என்பதை அவள் தெரிந்து கொண்டாள். ஆகவே, மெதுவாக "துக்காராம்!" என்று அழைத்தாள். அவளுடைய அழைப்பிலே முன்னைவிட அதிகமாக அனுதாபம் கலந்திருந்தது. அவனே அந்த அனுதாபத்தை அன்பின் உச்சம் என்று கருதி விட்டான். ஆஸ்பத்திரியிலேயிருக்கும் நோயாளிகளுக்கு நர்சுப் பெண்கள் உதவி செய்யும்போதும், அவனை அனுதாபத்தோடு

தொட்டுத் தூக்கிடும் போதும், "காதலில்லா விட்டால் அவள் கரம் நம்மீது படுமா?" என்று ஒரு சில நோயாளிகள் எண்ணித் திருப்தி அடைவார்களாம். மேற்கொண்டு முயற்சிகளிலும் ஈடுபடுவார்களாம்.

அந்த நோயாளி நிலையிலே இருந்தான் துக்காராம். அதனால்தான் பரிமளாவின் அனுதாபக் குரலே அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஏதோ காதல் என்பது, ஒரு ஆணும் பெண்ணும் "கண்ணே! மணியே!" என்று பேசுவது, கட்டித் தழுவுவது, கலகலவென சிரிப்பது — இதுபோன்ற நிகழ்ச்சிகளோடு முடிந்துவிடும் கதையென்று மட்டுமே அவன் நினைத்திருந்தான். அந்தக் கதையை ரசிக்க டிக்கெட் கிடைக்காதா என்று ஏங்கிக் கொண்டிருந்தான்.

'துக்காராம்' என்ற அழைப்பிலேயே மனதைப் பறி கொடுத்த அவனை, பற்களெல்லாம் தெரியும்படியாக "ஏன் பரிமளா?" என்று கேட்டான். அவன் கண் இமைகள் அசையாமல், அவளது இதழ் இன்னும் அசையுமா என்று எதிர்பார்த்து நின்றன. காதலித் தியாகம் செய்யப் போகிறோம்; ஒரு கதியற்றவனை விடுவிக்கப் போகிறோம்—என்ற மனத் திருப்தியோடு பரிமளா அவனை நோக்கினாள். "துக்காராம்! உனக்காக நான் எவ்வளவு சங்கடப் படுகிறேன் தெரியுமா?" என்றாள் பேச்சுக்குப் பீடிகையாக!

"நானும் அப்படித்தான் தவிக்கிறேன்!" என்று நாக் குழறி நின்றான் அவன்.

"உன்னுடைய உயிருக்கு இன்னும் சில மணி நேரங்களில் ஆபத்து வரப் போகிறது!" — இதைக் கேட்டதும், அவன் நடுங்கினான்.

"என்ன சொல்லுகிறாய் பரிமளா?" தடுமாறினான் அவன்.

"கொடிய வழக்கு! கொலை கேஸ்! அதிலே நீ சிக்கிக் கொண்டாய்!"

"என்ன? என்ன?"

"ஆமாம்! வெள்ளியம்பலம் இப்போது போலீசாரோடு வரப் போகிறார். உன்னைப் போலீசாரிடம் பிடித்து ஒப்ப டைக்கப் போகிறார்."

"அய்யோ! எனக்கு ஒண்ணும் புரியலியே!"

"கவனமாகக் கேள்.....ஆற்றங்கரையிலே கை யிழந்த ஒரு பிணம் — ஞாபகமிருக்கிறதா?"

"ஆமாம் — ஆமாம்!"

"அந்தப் பிணம் விழக் காரணம் நீதான் என்று அம் பலம் உன்னைக் காட்டிக் கொடுக்கப் போயிருக்கிறார். நீ கொலை செய்ததை அவரே நேரில் பார்த்ததாகவும் சாட்சி யம் கூறப் போகிறார் — உன் தலை தப்புமா இனிமேல்?"

"தப்பாது! தப்பாது!! பரிமளா! ஏன் என் மீது இப்படி திடீர்னு ஒரு அபாண்டத்தைச் சுமத்தப் போறீரு?"

"அதெல்லாம் சொல்ல நேரமில்லை. சொல்லத் தேவை யுமில்லை. எப்படியோ, உன் மீது கொலைக் கேஸ் ஜோடிக் கப்பட்டு விட்டது!"

"பரிமளா! கொலைக் கேசுன்னு தூக்கு தண்டனை யல்லவா கொடுப்பாங்க?"

"இல்லை; இல்லை — பல்லக்கில் வச்சு பவனி வரு வாங்க!.....துக்காராம்! நீ தப்புவதற்கு ஒரே வழிதானிருக் கிறது!"

"என்ன வழி?"

"எப்படியாவது நீ இங்கிருந்து ஓடிவிட வேண்டும்!"

துக்காராம் பலமாக யோசிக்கத் தொடங்கினான். அவன் கண் எதிரே விலங்கு — சிறைச் சாலை — தூக்கு மேடை — எல்லாம் வரிசை வரிசையாக வர ஆரம்பித்தன.

ஓடிப் போவது — ஓடிப் போவது — என்று உச்சரித் துக் கொண்டே நின்றான். சிந்தனைக்கும் நடுக்கத்திற்கும் இடையே சிலந்தி வலை போலத் துடித்துக் கொண்டிருந்த அவன், திடீரென்று சிரிக்க ஆரம்பித்தான். "அய்யோ பாவம்; பைத்யம் பிடித்துவிட்டது போலும்!" என நினைத்து அதிர்ச்சி அடைந்தாள் பரிமளா. பைத்யமில்லை என்பது அவன் பேச ஆரம்பித்த பிறகே தெரிந்தது. பரிமளா ஏதோ சாக்குப் போக்குச் சொல்லி, தன்னை பய முறுத்தி வெளியே துரத்திவிட முயலுகிறாள் என்று அவன் எண்ணிக் கொண்டான்.

"ஓகோ! உன்னை விட்டு ஓடிவிடுவேன் என்று இப்படி பயமுறுத்துறியா? அதான் நடக்காது என்னிடம்!" என்று சிரித்துக் கொண்டே கத்தினான்.

அவளுக்கு எப்படியிருக்கும்? கிணற்றிலே விழுந்த வனை தூக்கி விட்டவனைப் பார்த்து உயிர் பிழைத்தவன், "ஓகோகோ! உன் கிணறுதான இது! அதுதானே பார்த் தேன் — கிணறு அசுத்தமாகி விடுமே பிணம் கிடந்தால் — என்று பயந்து என்னைத் தூக்கி விட்டாயா?" என்று கேட்டால், துணை புரிந்தவனுக்கு எப்படியிருக்கும்? அந்த நிலையிலே பரிமளா இருந்தாள். என்னமோ; அவன் வெளியே ஓடாவிட்டால், அவனுக்கு அவள் இணங்கி விடு வாள் என்றும், அதற்காகவே தான் அங்கேயே இருக்க வேண்டுமென்றும் முடிவு செய்து கொண்டான். கொலைக் கேஸ், தூக்குத் தண்டனை — இதையெல்லாம் பரிமளா கூறும்போது உண்மையாகவே பயந்தான். ஓடிவிட வேண் டும் என்று அவள் யோசனை கூறிய பிறகுதான் "எப்படி ஓடுவது?" என்று சிந்திப்பதற்குப் பதிலாக "ஏன் ஓடச்

சொல்லுகிறாய்?" என்று கோணல் வழியிலே கேள்வி போட ஆரம்பித்தான்.

"துக்காராம்! உண்மையாகவே சொல்லுகிறேன் — உயிருக்கு ஆபத்து வரப் போகிறது — ஓடி விடு!" என்று பரிமளா மீண்டும் கெஞ்சினாள்.

"நீயும் வா! இருவரும் ஓடி விடுவோம்!" என்று தந்திரமாகக் கூப்பிட்டான் அவன். துக்காராமின் உயிரைக் காப்பாற்றுவதற்காக அவளும் அவனோடு ஓடி விடலாம். ஆனால், அத்தானைக் காப்பாற்றுவதற்கு, அவள் அங்கே இருந்து ஆகவேண்டுமே என எண்ணி மீண்டும் துக்காராமை வலியுறுத்தினாள், "நீ முதலில் ஓடிவிடு! பிறகு நான் வருகிறேன்" என்று கூறி. அவனை கேட்பான்? அவன் தான் பரிமளா சூழ்ச்சி செய்கிறாள் என்று முடிவு கட்டி வைத்திருந்தானே; அவன் எப்படி ஓடுவான்? காப்பாற்ற வந்தவள் மீது கேலிக் கணை பொழிந்தான். 'செத்தால் சாகிறேன் போ!' என்று சிரித்தான்.

அவனது போக்கு அவளுக்கு ஆத்திரத்தை உண்டு பண்ணியது என்றாலும், அவனை நோக்கி எதிர்பாராமல் வரும் சாவை நினைத்து அவள் சங்கடப்பட்டாள். அதற்கு தானே காரணமாகவும் ஒரு விதத்தில் அமைந்து விட்டதை யெண்ணி யெண்ணி மனம் புழுங்கினாள். எவ்வளவு தான் எடுத்துச் சொன்னாலும் அவன் தன் பேச்சை நம்பமாட்டான் என்று திண்ணமாகத் தெரிந்த பிறகு அவனை விட்டு ஒதுங்கி வேறு பக்கம் போய் உட்கார்ந்து கொண்டாள். "நல்ல வேளை, இவள் பேச்சில் மயங்காமல் போனேம். இவள் சொன்னதை நம்பியிருந்தால் என்ன ஆவது? இவள் எனக்குக் கிடைக்காமல் போய்விடுவாளே!" என ஆறுதல் மொழி கூறிக்கொண்டு துக்காராம் கம்பீரமாக வீட்டுக்குள்ளே உலவினான். "அம்பலம் வந்ததும் அவரிடம் சொல்லி, பரிமளா திருமணத்தை

முடித்துவிட வேண்டும். அப்படி முடித்துவிட்டால்தான் பரிமளா சொன்ன பேச்சு கேட்பாள். அம்பலம், என்னையும் பரிமளாவையும் காதலர் என்றே எண்ணியிருக்கிறார். பரிமளாவும் என்னைக் காதலிக்கவில்லை யென்று உண்மையைச் சொல்ல முடியாது. சொன்னால் அம்பலம் பரிமளாவை ஆபத்துக்கு ஆளாக்குவார்; இதுதான் சமயம்; அம்பலம் வந்ததும் திருமணம்!" என தனக்குள் பேசிக் கொண்டான். அவனுக்கு என்ன தெரியும்; அம்பலம் அவனுக்கு "மாமியார் வீட்டு" அழைப்பு கொண்டு வருகிறார் என்பது!

கதவு தட்டப்படும் சப்தம் கேட்டது. பரிமளா திடுக்கிட்டெழுந்தாள். சுவற்றின் ஒரு மூலையிலுள்ள சிறிய ஓட்டை வழியாக வெளியே பார்த்தாள். அம்பலம், சப்-இன்ஸ்பெக்டர், ஜவான்கள் நின்று கொண்டிருந்தார்கள். புரிந்து கொண்டாள், துக்காராமுக்கு அழைப்பு வந்து விட்டது என்பதை! போனால் போகிறான்; சொன்னேனும்; கேட்கவில்லை; இவன் போனால் அத்தான் விடுதலை நிச்சயம்—என்று எண்ணி மகிழ முடியவில்லை அவளால்! ஏது மறியாத அந்த வாலிபனுக்கு இவ்வளவு பயங்கரமான தண்டனை கிடைப்பதா? இதை அவளால் சமாளிக்கவே முடியவில்லை.

துக்காராம் கதவைத் திறக்கப் போனான். தாழ்ப்பாளில் அவன் கை படுவதற்கு முன்பு, பரிமளா ஓடிப்போய் அவன் கையைப் பிடித்துக் கொண்டாள். அப்போதுகூட அவளது அழகான கையின் மென்மையான ஸ்பரிசத்தால் ஏற்பட்ட இன்பத்தை நினைத்தே பெருமூச்சு விட்டான் அந்த இளிச்சவாயன்.

"முட்டாளே! இதோ பார், யார் வந்திருக்கிறார்கள் என்று!" — பரிமளா அவனை சுவற்றின் இடுக்கு வழியாக வெளியே பார்க்கச் செய்தாள். துக்காராம் தெளிவு பெற்

ருன். பரிமளா சொன்னது உண்மையாகத்தானிருக்க வேண்டும் என்று புரிந்து கொண்டான்.

"சொன்னதை நம்ப மறுத்தாயே! இப்போது என்ன சொல்லுகிருய்? கொலைக் கேஸ் — விலங்கு வெளியிலே நிற்கிறது; விளங்குகிறதா இப்போதாவது?" — பரிமளா பரிதாபத்தோடும், கோபத்தோடும் கேட்டாள். துக்காராம் பேசாமல் நின்ருன். பேச முடியவில்லை. பரிமளா, அவனிடத்திலே மளமள வென்று பேச ஆரம்பித்தாள்.

"பரிதாபத்திற்குரிய வாலிபனே! பயப்படாதே! இப்போதும் குடி முழுகி விடவில்லை. நானே உன்னைக் காப்பாற்றுகிறேன். கதவைத் திறக்காதே! அம்பலம் கதவை உடைத்துக் கொண்டு வர துணிய மாட்டார். ஏனெனில் நான் இருப்பது போலீசாருக்குத் தெரிந்து விடும் என்று பயப்படுவார்.

என்னை அவர் இங்கு வைத்திருக்கும் காரணம் என்ன தெரியுமா? நீ நினைத்துக் கொண்டிருக்கிருய்; உனக்குத் திருமணம் செய்வதற்காக என்று! எனக்கும் உனக்கும் திருமணம் செய்து வைத்துப் பார்க்க அம்பலத்திற்கு என்ன அவ்வளவு அக்கரை வந்தது? என்னை வைத்து என் காதலர் துரையைப் பிடிப்பதற்காக நடத்தப்படும் சதி நாடகம் இது! துக்காராம்! என்னை மன்னித்து விடு! உனக்கு ஏற்பட்ட இவ்வளவு தொல்லைகளுக்கும் நான்தான் காரணம்! துரை என் அன்பர்! என் உயிர்! அவருக்கு அம்பலத்தால் வரும் ஆபத்தைத் தவிர்ப்பதற்காகவே, உன்னைக் காட்டிக் கொடுத்தேன். ஆனல், உனக்கோ பெரிய ஆபத்து காத்து நிற்கிறது இப்போது! இதிலிருந்து மீள வேண்டும் நீ!"

— என்று துடி துடிப்போடு பேசினுள் பரிமளா. வெளியே கதவைத் தட்டிக்கொண்டேயிருந்தார் அம்பலம்.

ராமனும், "அய்யா! அய்யா!!" என்று உரக்க சப்தம் போட்டுக்கொண்டே யிருந்தான்.

பரிமளா உண்மையிலேயே தன்னைக் காப்பாற்ற முயன் றிருக்கிறாள் என்பதைத் துக்காராம் உணர்ந்து கொண் டான். 'பரிமளா' என்றான் மெதுவாக! — கண்ணீர் பெருகி விட்டது அவனுக்கு! அவளும் அழுது விட்டாள். தன்னால் வெறுக்கப்பட்ட ஒருவன்; அவனுக்காக அவள் கண்ணீர் விட்டாள்.

"இப்போது நாமிருவருமே சிக்கிக் கொண்டோமே!" என்றான் அவன்.

"இல்லை! இல்லை! உன்னை சிக்க வைப்பதாக உத் தேசமில்லை! — உன்னைக் காப்பாற்ற முடிவு கட்டியிருக் கிறேன்."

"எப்படி பரிமளா?"

"சொல்வதைக் கேள்! இப்போது வீட்டுக்குத் தீ வைக்கப் போகிறேன். வீடு எரியும். ஊர் கூடும். அந்த சமயத்தில் எரியும் வீட்டுக்குள்ளேயிருந்து நீ ஓடி விட வேண்டும். இருட்டில் யாரும் உன்னைக் காண முடியாது!"

"நீ?....."

"நான் என் அத்தானைக் காப்பாற்றியாக வேண்டும்!"

"எரியும் வீட்டுக்குள்ளே யிருந்தா?"

"இல்லை; நானும் வெளியே ஓடுவேன்! ஆனால் உன் னோடு வர மாட்டேன். ஊராரும், போலீசாரும் கூடியிருப் பார்கள். என் அப்பாவும் அம்மாவுங்கூட இருப்பார்கள். அவர்களுக்கு நேரே சென்று, போலீசாரிடம், கொலைக் குற்றத்தை நானே செய்தேன் என்று கூறுவேன். என் அத்தான் துரையை சிறையிலிருந்து விடுவிக்குமாறு வேண்டுவேன்."

"நம்புவார்களா?"

"நம்பாவிட்டால் போகட்டும்; குழப்பமாவது ஏற்படு மல்லவா? எப்படியோ நீ தப்பி விடுவாய். அது ஒரு திருப்தி எனக்கு! அடுத்தபடியாக, அத்தானை விடுவிக்க வும் முடியும் என்ற நம்பிக்கை யிருக்கிறது எனக்கு! எப் படி என்று கேட்காதே! எனக்குத் தெரியும் அத்தானை விடுவிக்க வழி! போலீசாருக்கு எதிரிலேயே அம்பலத் தைக் குற்றவாளியாக்க என்னல் முடியும்!"

"நீயும் குற்றவாளியென்று ஒப்புக் கொள்ளா விட் டால்.....என்ன?"

"என் அத்தானை விடுவிக்க அதைத் தவிர வேறு வழி கிடையாதே துக்காராம்! உன்னைக் காட்டிக் கொடுப்பதா? காதலருக்குத் துரோகம் செய்வதா? காதலைத் தியாகம் செய்வதா? இப்படி மூன்று வழி யோசித்தேன். மூன்று வது வழியே சரியென்று பட்டது!"

"அப்படியானல்....."

"இதோ வீட்டைக்கொளுத்துகிறேன். நீ ஓடுவதற்குத் தயாராகிக் கொள்!" என்று தீப்பெட்டியைக் கையிலே எடுத்துக் கொண்டாள் பரிமளா!

துக்காராம் அப்படியே நின்று கொண்டிருந்தான். தெருக்கதவு வேகமாகத் தட்டப்பட்டது. ராமனின் கூச்ச லும் அதிகமாயிற்று. "துக்காராம்! துக்காராம்!!" என்று அம்பலம் கத்தினர். பரிமளா, உள்ளிருந்தபடியே "இங்கே, துக்காராம் இல்லே!" என்று பதில் கொடுத்தாள். அம்ப லத்துக்கு தூக்கி வாரிப் போட்டது.

"இது என்ன பெண் குரல்?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

"அவன் பெரிய வேஷக்காரப் பயல்! பெண்ணைப் போல பேசி ஏமாற்றுகிறான்" என்றார் அம்பலம்.

உள்ளே, பரிமளா ஒரு தீக்குச்சியைக் கிழித்து ஒரு துணியிலே வைத்தாள். அந்தத் துணியை எடுத்து கூரைப் பக்கம் போடுவதற்குக் கொண்டு போனாள். அசையாமல் நின்றிருந்த துக்காராம் ஓடிப் போய், அவள் கையைப் பிடித்துக் கொண்டான். பரிமளா "ஏன்?" என்று அதட்டினாள்.

"பரிமளா! — என்னை மன்னித்து விடு! — உன்னை மிகச் சாதாரணமாக நினைத்து கேவலமாகவெல்லாம் விளையாடி விட்டேன்" என்று அழுதான் துக்காராம்.

அவளும், அவன் கையைப் பிடித்தவாறு அழுதாள். ஒருவர் கையை ஒருவர் பிடித்திருப்பதிலே இப்போது அவர்கள் எந்தவிதமான தவறுன அர்த்தமும் கொள்ளவில்லை. சகோதரப் பாசத்தோடு இருவரும் நெருங்கி நின்றார்கள். கண்ணீர் விட்டார்கள்.

"சரி! நேரமாகிறது — வீட்டைக் கொளுத்துகிறேன். நீ ஓடத் தயாராயிரு!" என்று மீண்டும் கூறிவிட்டு, பரிமளா எரியும் துணியுடன் திரும்பினாள். துக்காராம் அவளை அப்படியே இழுத்து கையை இறுகப் பிடித்தான். அவள் கையிலுள்ள தீயை கீழே விழச் செய்தான். அவளைப் பரபரவென்று அங்குள்ள அடுக்களை அறைக்குள்ளே தள்ளி விட்டான். பரிமளா எதுவும் தோன்றாது திகைத்தாள். அடுக்களைக் கதவை வெளியே தாளிட்டான். மளமளவென்று ஓடி வந்து தெருக் கதவைத் திறந்தான். போலீசாரின் காலில் விழுந்து, "அய்யா, நான் தான் குற்றவாளி! — துரையை விடுவித்து விடுங்கள்!" என்று கூறி ஓவென அழுதான். போலீசார் அவன் கையில் விலங்கு மாட்டி அழைத்துச் சென்றனர்.

35

எந்த விதமான கலக்கமுமின்றி அவர்கள் பின்னே துக்காராம் நடந்தான். உலகத்தில் யாரும் செய்திட எண்ணவும் முடியாத அற்புத காரியமொன்றை சாதித்துவிட்டகர்வத்தோடு அவன் போய்க் கொண்டிருந்தான். அத்தகைய ஒரு பெருந் தியாகச் செயலைப் பாராட்டுவதற்காகவே அரசாங்கத்தார் அவன் கரங்களில் வெள்ளித் தோடா அணிவித்து வீதி வழியே பவனி நடத்திச் செல்வதாகவும் அவன் கருதினன். துக்காராம் போன்ற வாலிபர்களது உள்ளங்களில் இத்துணை மாறுதல் ஏற்படுவது வியப்புக்குரியதுதான். உலக வழக்குகளிலே சில விதி விலக்குகள் தோன்றும்போதுதான் ஒரு சிலர் மட்டுமே நினைவுக்குரியவர்களாகிறார்கள், எத்தனையோ கோடி பிறந்து மடியும் இந்த ஜகத்தில்!

சரியாகவோ தவறுகவோ அவளிடத்தில் அவன் ஒரு மாறுத பாசத்தை வைத்து விட்டான். அம்பலம் காட்டிய மாயையிலே பல தோல்லைகளையும் அனுபவித்தான். அவனுக்கும் உயிர் தப்ப வேண்டுமென்ற ஆசைகள் பல தடவைகள் ஏற்பட்டதுண்டு. ஆனாலும், அவனது பிரேமையின் வடிவமாக எதிரே நிற்கும் பரிமளா, தன்னை வெறுக்கிறாள்; அதே நேரத்தில் தன் உயிருக்காக வேண்டி அவளையே தியாகம் செய்து கொள்ளத் தயாராகி நிற்கிறாள் — என்பதை அவனால் அதிக நேரம் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவனது இதயத்திலே தொங்கிக் கொண்டிருந்த இரக்க சுபாவத்தை உசுப்பிவிடக் கூடிய நிகழ்ச்சியாக மாறி விட்டது அது.

வெறும் ஆவல் — வெறி — தாகம் என்பவைகள் எல்லாம் பின்னுக்குத் தள்ளப்பட்டு, தியாக உணர்ச்சி தலை தூக்கி நிளம்பி விட்டது. அவனை ஆட்டி வைத்த 'மிருகம்'

பதுங்கி விட்டது. துக்காராம் மனிதனை எழுந்து நின்றான். அந்த மனிதனின் "கடைசி யாத்திரை இதுதானா?" என்று கேட்பது போன்ற விழிகளோடு, அடுக்களைக்குள்ளே முடங்கிக் கிடந்தாள் பரிமளா. கதவின் வெளித் தாழ்ப்பாள் திறக்கப் பட்டது; அம்பலம் உள்ளே வந்தார். அவளது இருதயத்து உதடுகள் பொல பொலவென்று "சாபங்"களை உதிர்த்துக் கொண்டேயிருந்தன எனபதற்கு அடையாளமாக அவள் கண்களிலே நீர் முத்துக்கள் உருண்டு கொண்டிருந்தன. அம்பலம் சந்தேகத்தோடும், சிறிது படபடப்போடும் கேட்டார்: "ஏனம்மா! அந்தப் பயலின் வெறிக்கு பலியாகி விட்டாயா?" என்று!

"இல்லே! பலியானது துக்காராம் தான்! என் காதல் வாழ்வுக்காக தன் வாழ்வைப் பலி கொடுத்தவர் துக்காராம் தான்! உங்கள் ஆசை மாளிகையின் அஸ்திவாரத்தைப் பலப்படுத்துவதற்காக தன் இளமைக் கனவுகளை அழித்துக் கொண்டவர் அவரே தான்!" என்று அழுதாள் பரிமளா.

"என்ன உளருகிறாய்? அவன் உன்னை உள்ளே போட்டு அடைக்கக் காரணமென்ன?"

"பெரிய வீட்டில் நீங்கள் என்னை அடைத்திருக்கிறீர்கள் — என்னை வைத்து லாபம் பெற! அவர் என்னை இந்த அடுக்களையில் அடைத்துப் போட்டார் — என்னைக் காப்பாற்ற!"

"புரியும்படி சொல்!"

"துக்காராம் — தியாகி! தியாகி!! புரிகிறதா இப்போதாவது?"

அந்த மாதிரி வார்த்தைகளையே கேட்டறியாதவர் அவர். ஆகவே பரிமளாவின் உணர்ச்சி மிகுந்த சொற்களில் பொதிந்து கிடக்கும் ஒரு வாலிபனின் வாழ்க்கைக்

காவியத்தை அவரால் உணர முடியவில்லை..... "உன்னை நான் அடைத்து வைத்திருக்கிறேன் என்று தானே கவலைப் படுகிறாய் பரிமளா? ஏன் இவ்வளவு சிரமங்களை ஏற்றுக் கொண்டு திரிகிறேன் என்பது உனக்குத் தெரியுமா? எனக்கென்ன அக்கறை வந்தது? எதற்காக துரையை விடுவிக்க நான் இவ்வளவு கஷ்டப்பட வேண்டும்? யோசித்துப் பார் கொஞ்சம்!" என்று சாகசமாகப் பேசினர் அவர்.

"யோசித்தேன்! ஏன் கஷ்டப் படுகிறீர்கள் என்றும் தெரிந்து கொண்டேன்! தியாகம்! இது ஒரு வகை தியாகம்!" என்றாள் அவள், அழுகையை அடக்கிக் கொண்டே!

"இன்றோடு உன் கஷ்டமெல்லாம் தீர்ந்து விடும், பரிமளா!"

"கொன்று விடப் போகிறீர்களா?"

"கொல்வதா?"

"இல்லை; புதையலுக்குப் பலி, கிலி ஏதாவது வேண்டுமோ என்று கேட்டேன்!"

"பைத்யம்! பைத்யம்!! அதல்ல நான் சொல்வது. இன்று உன் காதலன் துரையோடு உன்னை அனுப்பி வைக்கப் போகிறேன். என்ன திகைக்கிறாய்? துரையும், மாயாண்டியும் விடுதலையாகி விட்டார்கள் தெரியுமா?"

அவர் எதிர்பார்த்த அளவுக்கு பரிமளா ஆனந்தக் கூத்தாடவில்லை — இந்த சேதி கேட்டு! ஏனெனில் துக்காராமின் முடிவும், இனிமேல் அம்பலத்தின் ஆட்ட பாட்டங்கள் எப்படியிருக்குமோ என்ற நிலையும், அவளைக் குழப்பத்திலே ஆழ்த்தியிருந்தன.

"பயப்படாதே பரிமளா! நாளை துரை இங்கு வருவான். நீயும் அவனும் யார் கண்ணிலும் படாமல் இந்த

ஊரை விட்டு வெளியேறி விடலாம். கண்ணுக்கும் காதுக்கு மெட்டாத தூரத்திலே நீயும் துரையும் காதல் வாழ்க்கை நடத்த நானே எல்லா ஏற்பாடுகளும் செய்து தரப் போகிறேன்" என்று கூறிவிட்டு அவள் முகத்தையே பார்த்தார். தங்களின் காதல் வாழ்விலே அவருக்கு அக்கறையில்லாவிட்டாலும், ஏதோ ஒரு சதியை நிறைவேற்றிக் கொள்ள துரையை இங்கு அழைத்து வருவார் என்பதை மட்டும் நிச்சயமாக கம்பிளுள் பரிமளா. மருங்கப்பள்ளத்து சிவன் கோயிலுக்கருகே இருக்கிற புதையல் தன் வாழ்வுக்குப் பூகம்பமாக வந்து சேர்ந்ததே யென்று ஏங்கினாள் பரிமளா. நாளை இரவு துரை வந்து விட்டால், எப்படியும் இந்த முரடரிடமிருந்து தப்புவதற்கு ஒரு வழி செய்ய வேண்டுமென்ற முடிவோடு பரிமளா சுருண்டு படுத்துக் கொண்டாள்.

* * * *

பரிமளாவை சந்திக்க முடியுமா? அம்பலம் சொன்னது உண்மையாக இருக்குமா?—என்ற சந்தேகத்தோடு, துரையும் மாயாண்டியும் புதுப்பட்டினம் போய்ச் சேர்ந்தார்கள். போனதும் போகாததுமாக, மாயாண்டி புதையல் ரகசியத்தை மறைத்து வைத்திருந்த இடத்திற்கு ஓடினார். அவர் வைத்தபடியே இருந்த அந்த ரகசியத்தை எடுத்து மடியில் கட்டிக் கொண்டார். துரை திரும்பிவிட்ட சேதி கேட்டு அவன் நண்பர்கள் எல்லாம் ஓடி வந்தனர். மறுநாள் இரவு எப்போது வரும்—எப்போது பரிமளாவை சந்திக்கலாம்—என்ற ஆவலோடு மணித் துளிகளை விரட்டிக்கொண்டிருந்தான் துரை. மாயாண்டிக்கு மாத்திரம் அம்பலத்தின் பேச்சிலே அவ்வளவாக நம்பிக்கையில்லை. தங்களை விடுவிக்க வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது என்பதும் அவர்களுக்குப் புரியவில்லை. எதற்கும் — அம்பலம் குறிப்பிட்ட மணிராவுக்கு, துரை பத்து நண்பர்களுடன் போவ

தென்று தீர்மானிக்கப்பட்டது. அம்பலத்திலுல் ஏதா வது ஆபத்து நேருமானுல் அதிலிருந்து தப்புவதற்காகவே அந்த ஏற்பாடு. மாயாண்டிக் கிழவர் மருங்கப்பள்ளம் சென்று, அங்கே பரிமளா இருக்கிருளா? — என்ற விப ரத்தை அறிந்து வர வேண்டுமென்றும், அதற்கு அவரே தகுதியானவர் என்றும் தீர்மானம் நிறைவேறியது.

எதிர்பார்த்திருந்த நேரமும் வந்து விட்டது. மாயாண்டி, மருங்கப்பள்ளம் நோக்கிப் பயணமானுர். துரை யும் அவனது நண்பர்களும் மனேராவுக்குப் புறப்பட்டார் கள். மருங்கப்பள்ளம் போன்ற கிராமங்கள் மாயாண்டிக் கிழவருக்கு மிகவும் பழக்கமான இடங்கள். கிராமத்தார் அனைவருமே அவரிடத்திலே அனுதாபத்தோடு பேசிக் கொண்டிருப்பார்கள். அத்தகைய அனுதாபம் தான் போகிற வேலைக்குப் பயன்படும் என்று நம்பித்தான் மாயாண்டி அந்த ஊருக்குக் கிளம்பினர். முதலில், அவர் தாண்டவன் வீட்டுக்குள் நுழைந்தார். அங்கே தாண்ட வனின் மனைவி சோக முகத்தோடு உட்கார்ந்து கொண் டிருந்தாள். தாண்டவனும் ஆத்திரமும் வருத்தமும் ஒன்றையொன்று முந்திட வீட்டுத் திண்ணையிலே அமர்ந் திருந்தார். மாயாண்டிக் கிழவர், "என்ன தாண்டவம் — சுகந்தானு?" என்று கேட்டபடி அங்கேயே உட்கார்ந்தார். சிறைக்குப் போன மாயாண்டி, இவ்வளவு சீக்கிரம் எப்படித் திரும்ப முடிந்தது என்ற வியப்போடு, தாண்டவன், "ஜெயி லிலேயிருந்து எப்பய்யா வந்தீர்?" என்று கேட்டார். "போனதும் வந்து விட்டேன். அதிருக்கட்டும்; உமது மகள் அகப்பட்டு விட்டாளா?" என்ற கேள்வியைப் போட் டார் மாயாண்டி. அதற்குத் தாண்டவன் பதில் சொல்வ தற்குப் பதிலாக, பரிமளாவின் தாயாரே ஒப்பாரி மூலம் நிலைமையை விளக்கி விட்டாள், அவள் வந்து சேரவில்லை யென்று! சிறிது நேரம் அங்கே பேசிக் கொண்டிருந்து

விட்டு, பரிமளாவைப் பற்றி எந்த விதமான புலனும் கிடைக்காத காரணத்தால் விடை பெற்றுக் கொண்டு கிளம்பினர் மாயாண்டி.

இரவும் வந்து விட்டது. மாயாண்டி, மெதுவாக வெள்ளியம்பலத்தின் வீட்டு வழியே சென்றார். அம்பலம் வீட்டில் இல்லையென்று தெரிந்து கொண்டார். அவரது வாய்க்கால் ஓரப் பங்களாவில் இருப்பாரோ என்று சிலரை விசாரித்தார். "அங்கும் இருக்க நியாயமில்லை. ஏனெனில் அந்த பங்களா இரண்டு நாளாய்ப் பூட்டிக் கிடக்கிறது" என்று ஒருவர் பதில் சொன்னர். இன்னொருவர், "அந்த வீட்டிலே ஒரு கொலைகாரன் அடைபட்டிருந்ததாகவும், அவனை நேற்றுப் போலீசார் கைது செய்தார்கள்" என்றும் தகவல் கொடுத்தார். மாயாண்டிக்கு அந்த பங்களாவைப் பற்றி சந்தேகம் ஏற்பட்டது. அதை நோக்கி நடந்தார். வேலைக்கார ராமன் பங்களாவின் வாசலிலே உட்கார்ந்திருந்தான். அவன் மாயாண்டி வருவதைப் பார்த்து, "வாங்க தாத்தா" என்று எழுந்தோடி வரவேற்றான். "வெள்ளியம்பலம் எங்கேப்பா?" என்று கேட்டுக் கொண்டே அந்த வீட்டின் ஓட்டுத் திண்ணையிலே உட்கார்ந்து கொண்டார் மாயாண்டி.

"அவரு..... அவரு..... எங்கேயோ போனிருங்க!" என்று மழுப்பினன் அவன்.

"கதவு பூட்டியிருக்கிறது; உள்ளே விளக்கு எரிகிறதே தயப்பா!" என்று மாயாண்டி ராமனிடம் கேட்டார்.

"லட்சுமி களை யிருக்கணும்னு விளக்கு எரியுதுங்க" என்று சமாளித்தான் ராமன். மாயாண்டி, ராமனை அன்போடு அழைத்து, "ராமா! கொஞ்சம் பொடி வேணும்! வாங்கிட்டு வர்றியா?" என்று அவனை அனுப்ப வழி பார்த்தார்.

"பொடி என்கிட்டே இருக்கு தாத்தர்; இந்தாங்க!" என்று டப்பாவை அவரிடம் கொடுத்தான். பொடி போடும் பழக்கமில்லாத அவர், பொடியைப் போட்டுக்கொண்டு தும்மத் துவங்கினர். ராமனை எப்படியாவது வெளியே அனுப்பி விட்டால் உள்ளேயிருப்பவர்களைப் பற்றி ஏதாவது உளவு கண்டு பிடிக்கலாம் என்று மாயாண்டி துடித்தார். "ராமா, சுருட்டு இருக்கா உன்கிட்டே?" என்றார். "இதோ!" என்று எடுத்து நீட்டினான். அதையும் புகைக்க வேண்டிய சிரமம் ஏற்பட்டது. மாயாண்டியும், ராமனும் பேசிக் கொண்டிருப்பதை உள்ளேயிருந்து பரிமளாவினால் நன்றாகக் கேட்க முடிந்தது. மாயாண்டிக் கிழவரின் குரல் தானே என்ற சந்தேகத்தோடு, அவள் சுவரின் இடுக்கு வழியே வெளியே பார்த்தாள். அவரேதான் என்று மகிழ்ந்தாள். தான் உள்ளே யிருப்பதை எப்படித் தெரியப்படுத்துவது என்று தெரியாமல் தவித்தாள். வேண்டுமென்றே தனக்கு ஏதோ தேவையிருப்பது போல, உள்ளிருந்து, "ராமா! ராமா! அது யாரு ராமா?" என்று உரக்கக் கேட்டாள். மாயாண்டிக்கு விஷயம் புரிந்து விட்டது. ராமன் நடுங்கி விட்டான். "என்னப்பா பெண் குரல்." என்று மாயாண்டி கேட்டார்.

"எனக்கு அப்பவே தெரியும்; இந்த வீட்ல மோகினிப் பிசாசு இருக்குதுன்னு சொல்லிகிட்டே இருக்கேன்! அய்யா கேக்கிறாரா?" என்று நடுங்குவது போல நடித்தான் ராமன்.

மாயாண்டியும், பிசாசுக்குப் பயப்படுவது போல, "அப்பாடி! பிசாசுன்னு நமக்கு ஆகாதப்பா! — நான் வர்றேன்!" என்று வேகமாக நடக்க ஆரம்பித்தார்.

ராமன் வீட்டுக்குள்ளே திரும்பி, "இந்தாம்மா! சத்தம் போடாம இரு!" என்று கூறிவிட்டுத் தன் படுக்கையைத்

தின்னையிலே விரித்துக் கொண்டான். மணி ஓடிக்கொண் டேயிருந்தது.

நடு நிசி. பரிமளாவுக்குத் தூக்கம் வரவில்லை. எப்படித் தூக்கம் வரும்? கண்ணுக்குத் தெரிந்த உதவியும் கை விட்டுப் போய் விட்டதேயென்று கவலையில் ஆழ்ந்தாள் அவள். நேரம் ஆக ஆக அவளுக்கு பயம் அதிகமாயிற்று. எப்படியாவது அந்த வீட்டை விட்டுத் தப்பிவிட வேண்டு மென்று முடிவு செய்து விட்டாள். அம்பலம் சொன்னபடி துரை வருவது சந்தேகந்தான் என்று நினைத்து விட்டாள். தான் எப்படியும் வெளியேற வேண்டும். தன்னைத் தடுப்ப தற்கு துக்காராமும் கிடையாது. ராமன் மட்டுமே இருக் கிறான். அதுவும் வெளியிலே தூங்குகிறான். ஆகையால் தப்பித்துச் செல்ல இதுதான் தக்க சமயம் என்று புறப் பட்டாள். கூரையைப் பிரித்துக் கொண்டு வெளியே குதிக்க முடியுமா? — முடியாது. அதற்கான வசதிகள் இல்லை. நிண்ட யோசனைக்குப் பிறகு, மூலையிலே கிடந்த ஒரு கடப்பாரையை எடுத்தாள். கொஞ்சங் கொஞ்சமாக, மண் சுவற்றைப் பெயர்க்க ஆரம்பித்தாள். 'விடுதலை; விடு தலை!' என்ற ஆர்வத்தோடு அவள் அந்தக் காரியத்திலே நடுக்கமின்றி ஈடுபட்டாள். எப்படியும் அங்கிருந்து ஓடித் தன் அத்தானைக் காண வேண்டுமென்று முயன்றாள் பரி மளா. அவள் அத்தானை அவளைக் காண்பதற்காக நண் பர்களோடு, மறைவுக்கு வந்து சேர்ந்தான்.

நண்பர் கூட்டத்தின் மீது டார்ச் லைட்டின் ஒளி பட் டது. துரையுள்பட அனைவரும் திடுக்கிட்டனர். "வா துரை! வந்துட்டியா? எம்ப்பா இவ்வளவு துணையோ வர்ரே?" என்று சிரித்துக் கொண்டே கேட்டார், எதிரே நின்ற அம்பலம்.

"இருட்டுக் காலமல்லவா?.....திருடர் பயம் அதிகமா யிருக்கிறதே!" என்றான் துரை.

"மடியிலே கனமிருந்தால் தானே வழியிலே பயம்! சரி..... வா! வா!....." என்று அவனை அழைத்துக் கொண்டு மனோராவின் அடித்தளத்துப் பக்கம் சென்றார். நண்பர்களும் அவன் கூடச் சென்றார்கள்.

"பரிமளா எங்கே?" என்று ஆவலாகக் கேட்டான் துரை.

"உப்பரிகையிலே இருக்கிறாள். உன் வரவுக்காக காத்திருக்கிறாள்" என்று கூறினர் அவர்.

அனைவரும் மனோராவுக்குள் நுழைந்தனர். அந்த மனோராவின் ஒவ்வொரு உப்பரிகைக்கும் படிகள் உண்டல்லவா?.....அந்தப் படிகள் வழியே ஏறி முதல் உப்பரிகையை அடைந்தனர். முதல் உப்பரிகையிலிருந்து அதற்கு மேல் உப்பரிகைக்கு ஏற, துரை முதலில் முயன்றான். ஆனல் அவனது நண்பர்கள், "நீ கடைசியில் ஏறலாம்" என்று கூறிவிட்டு அவர்கள் முதலில் படிகளைக் கடந்து, இரண்டாம் உப்பரிகையை அடைந்தனர். துரையும், இன்னொரு நண்பனும், அம்பலமும் முதல் உப்பரிகையில் இருந்தனர். துரையும் படியேற முயற்சித்தான், அவ்வளவுதான்; அம்பலம், தன் கையிலேயுள்ள டார்ச் லைட்டால் தலையில் ஓங்கி அடித்தார். அவன், 'அய்யோ' என்று சப்தம் போடுவதற்குள், ஐம்பதுக்கு மேற்பட்ட மூரடர்கள் முதல் உப்பரிகைக்குள் நுழைந்து விட்டனர். இரண்டாம் உப்பரிகையில் இருக்கும் நண்பர்கள் யாரும் கீழே இறங்க முடியாமல் தடுக்கப் பட்டனர். கீழேயிருந்த துரையின் ஒரே ஒரு நண்பனும் பலத்த காயத்திற்கு ஆளாகி மரணாவஸ்தையோடு கீழே விழுந்தான். துரை மூரடர்களால் கட்டித் தூக்கப்பட்டு, வெளியே கொண்டு வரப்பட்டான். உப்பரிகையில் சிக்கிக்கொண்ட நண்பர்கள், மேலேயிருந்து கீழே குதித்து, துரையைக் காக்க முயன்றனர். முடியவில்லை. விடுபட முடியாதபடி அவர்

கள் உப்பரிகையிலே சிக்கி விட்டதாலும், அவர்களைக் கீழே இறங்க விடாமல் முரடர்கள் தடுத்து நின்றதாலும், துரை வெள்ளியம்பலத்தின் கையிலே சிக்கி விட்டான்.

அங்கே, தன்னை விடுவித்துக் கொள்ள பரிமளா முயலுகிறாள். இங்கே துரையும் சிக்கிக் கொண்டான். இந்தச் செய்தியை அவளுக்குச் சொல்ல யார் இருக்கிறார்கள்? அவளோ, மிகவும் கஷ்டப்பட்டு, சுவற்றை இடித்துக் கொண்டிருந்தாள். சப்தமும் கேட்கக் கூடாது. சுவற்றிலும் துளை ஏற்பட வேண்டும். இந்தக் கடினமான காரியத்தை அவள் மன தைரியத்தோடு செய்து இறுதியில் வெற்றியும் பெற்றாள்.

சுவற்றிலே அவள் நுழையும் அளவுக்கு துவாரம் ஏற்பட்டு விட்டது. நுழையவும் முயற்சித்தாள். தெருவிலேயிருந்து ராமனின் குரல் கேட்டது.

"யார்ரா இது? கன்னம் வைக்கிறது?" என்று அதட்டினான். ஓடிப் போய், தெரு வாசல் இருக்கும் வழியாகவனித்தாள். நாய் ஒன்று அவன் கன்னத்திலே தன் முகத்தை வைத்து படுத்திருக்கிறது. ராமன் மீண்டும் கத்தினான்.

"யார்ரா இது — கன்னத்தில கன்னம் வைக்கிறது?" என்று கேட்டு விட்டு, நாயைத் தள்ளி விட்டு, புரண்டு படுத்துக் கொண்டான்.

பரிமளா மீண்டும் தைரியம் பெற்றாள். சுவற்றிலே தான் உண்டாக்கிய துவாரத்தின் வழியாக படுத்தபடியே வெளியே எட்டிப் பார்த்தாள். யாருமில்லை. நகர்ந்து நகர்ந்து வெளியே வந்து விட்டாள். "அப்பாடா!" என்று பெருமூச்சு விட்டாள். யாரோ, அவளது தோளைப் பிடித்துக் கொண்டார்கள். "அகப்பட்டுக் கொண்டோம்!"

என்ற ஏக்கத்தோடு, பரிமளா அப்படியே குப்புற விழுந் தாள்.

"பரிமளா" என்று ஈன சுரத்திலே அழைப்பு வந்தது.

"யார்? மாயாண்டிக் கிழவரா?"

ஆம்! அவரேதான் — என்று பரிமளா மகிழ்ந்தாள்.

"புறப்படு! புறப்படு!!" என்று அவரும் அவசரப் படுத்தினர். இருவரும் எதுவும் பேசாமல் நடந்து கொண்டேயிருந்தார்கள். மருங்கப்பள்ளம் கிராமத்தைத் தாண்டி வெகு தூரம் நடந்து விட்டார்கள்.

எதிரே ஒரு பெரிய வண்டி வந்து கொண்டிருந்தது. அதைப் பார்த்ததும் இருவரும் பதுங்கிக் கொண்டார்கள். வண்டி அவர்களைக் கடந்து சென்றது. அந்த வண்டியிலே தான், கை கால் கட்டப்பட்ட துரையும், அம்பலமும் இருக் கிறார்கள் என்பது அவர்களுக்கு எப்படித் தெரியும்?

36

"இந்த வழியாக எங்கே போகிறோம்?" என்று கிழவரைப் பரிமளா கேட்டாள். "மதுரை பக்கம் போய் விட்டு, புதுப்பட்டினம் போகிறோம்" என்றார் அவர். "அவர் எப்படியிருக்கிறார்? எங்கே யிருக்கிறார்?" என்று அவளால் கேட்காமலிருக்க முடியுமா? கேட்டாள். "புதுப் பட்டினத்திலேதான்" என்று கிழவரும் பதில் சொன்னார். பதில் சொன்னரே தவிர, அவர் உள்ளம் ஒரே குழப்பமாக இருந்தது. அம்பலத்தின் சூழ்ச்சியால் துரைக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று அவர் கருதினர்.

மதுரைவிலே துரையிடம் பரிமளாவை ஒப்படைப்ப தாகச் சொன்னது பொய் என்பது, பரிமளா பங்களாவிலே

இருந்ததால் புலனாகிவிட்டது. பரிமளா பெயரைச் சொல்லி துரையை ஏமாற்றவே அம்பலம் திட்டம் தீட்டியிருக்க வேண்டுமென்று தீர்மானித்தார் கிழவர். இந்தச் செய்தியைப் பரிமளாவிடம் சொல்லி, அவளைப் பயமுறுத்த விரும்பவில்லை அவர். அதனால் சிந்தனையில் ஆழ்ந்தவாறு மெள்ளமாக நடந்து கொண்டிருந்தார். பரிமளாவும் அவரைத் தொடர்ந்தபடி யிருந்தாள்.

புதுப்பட்டினம் போனதும், கிழவரிடமும் அத்தானிடமும் அம்பலத்தின் செய்கைகள் அத்தனையும் ஒன்று விடாமல் சொல்லி, அவருக்குச் சரியான தண்டனை கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று மனதுக்குள் முடிவு கட்டிக் கொண்டாள். அதோடு அப்பாவி துக்காராமையும் விடுவிக்க வழி கண்டுபிடிக்க வேண்டுமென்று உறுதி கொண்டாள். இப்போதே துக்காராமைப் பற்றி மாயாண்டிக் கிழவரிடம் சொல்லிவிட அவளுக்கு ஆசை தான்! — ஆனால், அவரது மௌனத்தையும் சிந்தனையையும் அவள் கலைக்க விரும்ப வில்லை. அவரிடத்திலே அவள் வைத்திருந்த மதிப்பின் காரணமாக அவர் பின்னாலேயே போய்க் கொண்டிருந்தாள். புதுப்பட்டினம் போனதும், முதல் வேலை துக்காராமை விடுவிப்பது தான் — என்று அவள் நெஞ்சுக்கு அவளே சொல்லிக் கொண்டு இருண்ட பாதையிலே கிழவரோடு சென்றாள். நீண்ட நேர மௌனத்திற்குப் பிறகு, கிழவர் அவளைப் பார்த்து, "ஏன் பரிமளா! நீயும் துரையும் முதலில் எங்கே — எப்படி சந்தித்தீர்கள்?" என்று கேள்வி யொன்றை வீசினார். அந்தக் கேள்வி அவருக்கு அத்தனை அவசியமில்லை யென்பது அவளது பதிலை எதிர்பார்க்காமல் அவர் முன்னேக்கி நடந்து கொண்டிருந்ததிலிருந்தே நன்றாகத் தெரிந்தது. பரிமளா அந்தக் கேள்வியை அப்போது எதிர்பார்க்கவில்லை. அதனால் பதில் சொல்லத் தயங்கியவாறு சென்றாள். "ஓகோ,

சொல்ல வெட்கமாயிருக்கா?" என்று கேட்டுக் கொண்டே கிழவரும் நடந்தார்.

வெட்கமாகத்தானிருந்தது அவளுக்கு! ஒரு இளம் பெண்ணைப் பார்த்து, எதிர்பாராத நிலையிலே ஒரு கிழவர் இது போன்ற காதல் சம்பந்தப்பட்ட கேள்வியை ஏவுவ தென்றுல் வெட்கமாக இருக்காதா என்ன? வேதனையை யும் விலக்கிடக் கூடிய வெட்கம் சூழ்ந்தது அவளை! அந்த வெட்கம், அவள் நெஞ்சிலே பழைய நிகழ்ச்சிகளைக் கொண்டு வந்து நிறுத்தியது. கிழவரின் விணவுக்கு விடை கிடைக்க வில்லையே தவிர, அந்த வேல் விழியாளின் இரு தயத் திரையிலே அந்த இன்ப நினைவு நிழலாடத் தொடங்கி விட்டது.

* * * *

பட்டுக்கோட்டைப் பள்ளியிலே அன்று ஆண்டு விழா. புதிதாக வந்திருந்த தலைமை ஆசிரியர் என்றுமில்லாத புதுமையாக அன்று பெரியதோர் விழாவுக்கு ஏற்பாடு செய்து விட்டார். மாணவர்களாகிய எங்களுக் கெல்லாம் தாங்க முடியாத உற்சாகம். காலை முதல் மாலை வரை படிப்பு, படிப்பு என்று இருந்த எங்கள் வாழ்க்கையிலே அந்த ஆண்டு விழாச் செய்தி ஒரு நல்ல மாற்றத்தைத் தருவதாக அமைந்தது. புதிய தலைமை ஆசிரியர் புரட்சிக் கருத்துகளுக்கு மதிப்பளிக்கக் கூடியவர். பழைய எண்ணங் கள் — பாசி பிடித்த நம்பிக்கைகள் — அவருக்கு அறவே பிடிக்காது! அதனல் அந்த ஆண்டு விழாவையும் புதுமை யான வழியிலே நடத்திக் காட்ட ஆர்வம் கொண்டார். காலையிலே மாணவ மாணவிகளின் அணிவகுப்பு! — மாலை யிலே மாறு வேடப் போட்டிகள் — விளையாட்டுப் போட்டி கள்—பரிசளிப்பு விழாக்கள்—இரவு நாடகம்! நாடகத்தை மாணவர்களே நடிப்பதற்கு பயிற்சி பெற போதிய அவகாச மில்லாததால் வேறு ஒரு நாடகக் குழுவினரை நாடகத்

துக்கு ஏற்பாடு செய்திருந்தார். வருவோர் போவோரைக் கவனிக்கவும், கூட்டத்தினரை சரியானபடி சமாளிக்கவும், மாணவர் தொண்டர் படையொன்று நிறுவப்பட்டிருந்தது. மாணவிகள் தொண்டர் படையிலே நானும் ஒருத்தி.

இரவு நாடகம் ஆரம்பமாயிற்று. தொண்டர் படைச் சேவகியாக வேலை பார்க்கும் எனது கவனமெல்லாம் நாடகத்திலேயே இருந்தது. நாடகத்தின் பெயர் 'நூர் ஜஹான்'. நூர்ஜஹானாக ஒரு அழகி நடித்தாள். ஆகா, அவள் நடிப்பை எப்படித்தான் வர்ணிக்க முடியும்!

"சரித்திரத்திலே வரும் நூர்ஜஹான்தானே இவள் — இல்லை, இவள் அவளை விட அழகானவள்" என்று வியந்தனர் மாணவர். தன் கணவன் ஷேர்கான் கொல்லப் பட்ட போது அந்த அழகிக்கு ஏற்பட்ட சோகப் பெரு வெள்ளமும், அவன் கொல்லப்பட காரணமாயிருந்த தன் அழகை நினைத்து அவள் சிந்திய கண்ணீரும்—அப்பப்பா! இப்போது நினைத்தாலும் மெய் சிலிர்க்கிறது! ஆட்ட பாட்டங்களிலே — ஆனந்த லாகிரியிலே வாழ்வை விரட்ட கங்கணம் கட்டிக் கொண்ட காவலன் ஜஹாங்கீரின் கட்டிலறை மோகினியாக அவள் மாறும் கட்டம்—அதன் பிறகு நாடாளும் அவள் திறமை — எல்லாமே அற்புதம்! அற்புதம்! சரித்திரத்தில் மட்டுமல்ல; நாடகத்திலேகூட!—பூ ஏந்திய அந்தப் பூங்கோதையாக நடித்த அழகிக்கு அன்று அளவில்லாத பாராட்டுகள்! இடையிடையே சபாஷ் கரகோஷம்! ஆண்டு விழா வெற்றிக் கட்டத்தை எட்டிப் பிடிப்பது அங்குள்ள சில பொறுமைக்காரர்களுக்குப் பிடிக்கவில்லை. "புதிதாக வந்த தலைமை ஆசிரியர் ஏதேதோ செய்கிறார்— எத்தனையோ புராண நாடகமிருக்க — இந்த சரித்திர நாடகந்தானு கிடைத்தது" — எனச் சிறியவர்கள் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து நின்றார்கள். அவர்களின் தீய முடிவுப்படி நாடகம் நடக்கும்போதே பந்தலுக்குத் தீ மூட்டப்

பட்டுவிட்டது! மக்கள் சிதறியோடினர். நல்ல வேளை, நாடகம் நடந்த இடத்திற்கும், பள்ளிக் கட்டிடத்திற்கும் கொஞ்ச தூரம். அதனால், தீ பள்ளிக்கூடத்திலே எட்ட வில்லை. கயவர்கள் ஏற்பாடு செய்திருந்த காலிகளின் குழப்பம் ஆரம்பமாயிற்று. நடிகர்கள் மூலைக்கொருவராகப் பறந்தனர். நான் தொண்டர் படை சேவகி ஆயிற்றே — அங்குமிங்கும் ஓடி அவசர உதவிகள் செய்ய முற்பட்டேன். அப்போது நாடகத்திலே நூர்ஜஹான் வேஷம் போட்ட பெண்மணி தன்னந் தனியாக ஓடிக் கொண்டிருந்தாள். "அய்யோ, தனியாக ஓடுகிறாளே" என்று நானும் துணைக்கு ஓடினேன். அவளை அழைத்துக் கொண்டு பள்ளிக்கூடப் பக்கம் போனேன். அதற்குள் பந்தலில் கலகம் அதிக மாகி, போலீசாரின் தடியடிப் பிரயோகம் துவக்கப்பட்டு விட்டது. ஒரு புறத்திலே தீ! மறு புறத்திலே கலகம்! நானும், அந்த அழகியும் பள்ளியிலே ஒரு வகுப்பறைக்குள் போய் நுழைந்து கொண்டோம். கலகக்காரர்களிடமிருந்து அந்த நடிகையை தப்புவிக்க வேண்டுமென்று நான் பெரி தும் கஷ்டப்பட்டேன். வகுப்பறைக்குள் நுழைந்து கத வைத் தாளிட்டுக் கொண்டோம்.

'நூர்ஜஹான்' என்னைப் பார்த்துக் கேட்டாள்: "மிக வும் நல்லவளாயிருக்கிறாயே; நீ இந்த ஊர் தானே?" என்று!

"மருங்கப்பள்ளம் என் சொந்த ஊர்" எனக் கூறி என் விபரங்களை அவளிடம் சொன்னேன். அவள், என் பெயரையும், என் அப்பா பெயரையும் இரண்டு மூன்று தடவை திருப்பித் திருப்பிக் கேட்டாள். வெளியிலே கல கம் ஓய்ந்து விட்டதாகத் தெரிந்தது. தீயும் அணைந்து விட்டது. அழகி, "வெளியே போகலாமா?" என்று கேட் டாள். அதற்கு நான், "இந்த வகுப்பறைகள் சில, தொண் டர் படையின் பொறுப்பிலேதான் விடப்பட்டிருக்கின்றன; அதனால் இங்கேயே இரவைக் கழித்து விட்டு காலையில்

போகலாம்" என்று சொன்னேன். அவளும் சம்மதித்தாள். நான் அவளோடு பேச்சுக் கொடுக்க ஆரம்பித்தேன். அவளது நடிப்பை அவளுக்கு நேராகவே புகழ எனக்கு நல்ல வாய்ப்பு ஏற்பட்டது. "அசல் நூர்ஜஹான் போலவே இருக்கிறாய்" என்றேன்.

"அப்படியா?" என்று அவள் புன்னகை புரிந்தாள். ஒருவருக்கொருவர் வேடிக்கையாகப் பேசிக்கொண்டே யிருந்தோம்.

"நூர்ஜஹான் வேடத்திற்காகவே நீ பிறந்திருக்கிறாய்!" என்றேன்.

அதற்கு அவள், "ஏது! என்னை நீ புகழ்வதைப் பார்த்தால், நீ ஜஹாங்கீராகப் பிறந்திருக்கக் கூடாதா என்று ஏங்குவாய் போலிருக்கிறதே!" என்று குறும்பு பேசினாள்.

"நிச்சயமாக அப்படித்தான் நினைக்கிறேன்" என்றேன் நான்! அவளுக்கும் எனக்கும் அந்த ஒரு இரவிலே, ஒரு சில மணி நேரங்களிலே நல்ல நட்பு ஏற்பட்டு விட்டது.

அவள் கேட்டாள்; அதை இப்போது நினைத்தாலும் எனக்கு வெட்கமாக இருக்கிறது. "நான் ஜஹாங்கீராகவும், நீ நூர்ஜஹானாகவும் இருந்தால் எப்படியிருக்கும்?" என்று!

"நான் அவ்வளவு அழகா?" என்றேன் நாணத்தோடு!

"ஆமாம்!" என்று தலையசைத்தாள் அவள். பிறகு இருவரும் இரண்டு பலகைகளிலே படுத்து உறங்க ஆரம்பித்தோம்.

* * * *

விடியற்காலே! சேவலின் குரல் கேட்டு விழித்தேன். நூர்ஜஹான் தூங்கிக் கொண்டிருந்தாள். அவளை எழுப்புவதற்காகப் போனேன். நல்ல தூக்கம் அவளுக்கு!

வேடிக்கை செய்யவேண்டும் போலிருந்தது எனக்கு! அவளது நீண்ட ஜடையை பலகையின் காலிலே முடிந்துவிட்டு தூரத்தில் உட்கார்ந்து கொண்டு அவளை எழுப்பினேன். அவள் எழுவாள்; ஜடை, தடை செய்யும்; சிரிக்கலாம் — என்று எதிர்பார்த்தேன். எழுப்பினேன்; எழுந்தாள். ஜடை தடை செய்யவில்லை! ஆனல் ஜடைக்கும் அவள் தலைக்கும் சம்பந்தமில்லை யென்பது தெரிந்தது. அழகான சுருள் கிராப்போடு நூர்ஜஹான் எழுந்தாள். நூர்ஜஹான் வேஷம் போட்டது நடிகை அல்ல; நடிகர்! ஆம். என் உள்ளமெனும் நாடக சாலையிலே என்றென்றும் கூத்தாடும் நடிகர்! என் அழகு துரை!

முதலில் கோபித்தேன் — ஆனல் என்ன காரணமோ; அந்தக் கோபம் நீடிக்கவில்லை. பெண் வேட துரையிடம் உள்ளத்தைப் பறிகொடுத்தேன் — உறவாடினேன் — ஆண் என்று தெரிந்த பிறகு, அந்த உறவை ஒடித்துக் கொள்ள இயலாமலே போய் விட்டது. அந்த ஒரு நாள் விநோத சந்திப்பு — தினம் தினம் தித்திக்கும் சந்திப்புகளாயிற்று!

துரை, என்னுடையவரானர்! நான் அவருடையவளானேன்!

இதைத்தான் பரிமளா, கிழவரிடம் பதிலாக சொல்லியிருக்க வேண்டும்! ஆனல் சொல்லவில்லை! எப்படிச் சொல்வாள்? அதனல் மௌனமாக இருந்தாள். இருவரும் மேஜரா பக்கம் வந்து விட்டார்கள். கிழவர், துரையைப் பற்றிய செய்தி அறியத் துடித்தார். மேஜராவின் அருகாமையிலே சென்றார். அங்கே ஏழெட்டு மனிதர்கள் பூமியிலே உருண்டு கொண்டிருப்பதை இருவரும் கண்டார்கள். கிழவர் ஓடிப்போய் கவனித்தார். அனைவரும் துரையின் நண்பர்கள் தான்! கை கால்கள் கட்டப்பட்டு கீழே உருட்டி விடப்பட்டிருந்தார்கள். கிழவர் திகைத்தார்! —

"துரை எங்கே?" என அலறினர்—யாரும் பதில் சொல்லவில்லை! — அவர்கள் வாய்களும் கட்டப்பட்டிருந்தன.

37

எல்லோரின் கட்டுகளையும் கிழவர் அவிழ்த்து விட்டார். அவர்களும் பெருமூச்சோடு எழுந்தார்கள். ஓரிருவர் பலத்த காயத்தோடு வருந்திக் கொண்டிருந்தார்கள். "துரை எங்கே?" என்று கிழவர் மீண்டும் கேட்டார் ஆவலாக! துரை வெள்ளியம்பலத்தின் கையிலே சிக்கிவிட்ட செய்தியைச் சொன்னார்கள். பரிமளாவுக்கு புதிய கவலை வந்து சேர்ந்தது. கிழவரும் அதிர்ச்சி அடைந்தார். பரிமளா, வெள்ளியம்பலம் — துரையை எதற்காகக் கொண்டு சென்றிருக்க வேண்டும் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொண்டாள். புதையலைப்பற்றி துரையிடம் ரகசியம் சேகரிப்பதற்கான ஏற்பாடு என்பது அவளுக்கு நன்றாக விளங்கி விட்டது. அவள், மாயாண்டிக் கிழவரிடம் வெள்ளியம்பலத்தின் சூழ்ச்சித் திட்டங்கள் அத்தனையும் விரிவாகக் கூறத் தொடங்கினாள். தன்னை மனோராவுக்குத் தூக்கி வந்தது முதல், ஆற்றங்கரையிலே மீண்டும் சந்தித்து, வாய்க்கால் ஓரத்து பங்களாவில் ஒளித்து வைத்திருந்தது வரை — துக்காராம் சிக்கிய பரிதாபம் உள்ளிட்ட எல்லாக் கொடிய சம்பவங்களையும் கிழவரிடம் பரிமளா வர்ணித்தாள்.

கிழவர், வெள்ளியம்பலத்தின் காட்டு ராஜா தர்பார்களைக் கேள்விப்பட்டிருக்கிறார் என்றாலும், இவ்வளவு பெரும் சூழ்ச்சிகள் புரிவதில் வல்லவன் என்று அவர் கேளவிப்பட்டதில்லை. அதனால் பரிமளா சொன்ன நிகழ்ச்சிகளை ஆச்சரியத்தோடு கேட்டார். நிகழ்ச்சிகளை விவரித்த பரிமளா, இடையிடையே துக்காராமை எப்படியும் நாம்

விடுவித்தாக வேண்டும் என்பதையும் வலியுறுத்திக் கூறி டத் தவறவில்லை. "முதலில் துரையை விடுவிக்க வேண் டும். பிறகுதான் துக்காராம் விஷயம் கவனிக்கப்படும்" என்று கிழவர் பதில் கூறிவிட்டு, கடற்கரை மணற் பரப் பில் ஆழ்ந்த யோசனையோடு உலவத் தொடங்கினர். கட லிலும், அவர் உள்ளத்திலும் அலைகள் போட்டி போட்டுக் கொண்டு ஓலமிட்டன. தான் செல்லும் பாதையிலே எப்படியெப்படி யெல்லாம் சந்தர்ப்பங்களை சந்திக்க வேண் டியதாகிவிட்டது என்கிற எண்ணத்தின் அடையாளமாகத் தான் போலும், அவ்வளவு ஆழமான பெருமூச்சு கிளம்பி யது அவருக்கு!

பரிமளாவும் திசை தெரியாத கலம் போல கடல் மண லில் அமர்ந்திருந்தாள். துரையின் நண்பர்களில் ஒருவ னை **ஆனந்தன்** என்பவன் மட்டும் அங்கே நிலவிய மௌனத்தைக் கலைக்க விரும்பினன்.

"இங்கேயே உட்கார்ந்திருந்தால் என்ன நடக்கும்? மேலே ஆக வேண்டியதைப் பார்க்கலாம்!" என்று ஆரம் பித்தான் அவன்.

கிழவரும், "ஆமாம்; அதுதான் சரி — ஆனந்தா! நீ போய் ஒரு தோணி கொண்டு வா! அனைவரும் புதுப்பட்டி னம் போகலாம்" என்றார்.

"புதுப்பட்டினமா? அப்படியானால் அத்தானின் கதி?" என்று ஆயாசத்தோடு வினவினாள் பரிமளா. அவள் கண் களிலே கிளம்பிய நீரூற்றை யாரும் கவனிக்க இயலவில்லை. நேரம் அப்படி!

"கேள் பரிமளா! இங்கேயே இருந்து துரையை மீட்ப தென்றால் முடிகிற காரியமா? எல்லோரும் புதுப்பட்டினம் போவோம். நமது ஆனந்தன் வீட்டில் நீ தங்கிக் கொள். துரையின் வீட்டுக்கு நீ வரக் கூடாது. ஒரு சமயம் துப்பு

விசாரிக்க வரும் போலீசார் கண்ணில் பட்டு விடுவாய். பிறகு தாண்டவன் வந்து விடுவான். அதனல் ஆனந்தன் வீடுதான் பொருத்தமானது. துரையை விடுவிப்பது எப்படி என்பது பற்றி நான் ஒரு முடிவுக்கு வந்திருக் கிறேன். அதை விபரமாகக் காலையில் சொல்லுகிறேன். இப்போது நாமெல்லாம் இங்கிருந்து புறப்படுவதே நல் லது!" என்று கிழவர் கூறவே, ஆனந்தன், தோணி ஏற் பாடு செய்யக் கிளம்பினன்.

* * * *

துரையை விடுவிக்க கிழவரும், பரிமளாவும், நண்பர் களும் இங்கே யோசித்துக் கொண்டிருந்த அதே நேரத்தில் தான், வெள்ளியம்பலம், பரிமளா ஓடிவிட்ட செய்தியை அறிந்து துடித்துப் போனர். வேலைக்கார ராமனுக்கு சரியான 'பூசை' நடைபெற்றது. வண்டியிலே கட்டுண்டு கிடக்கும் துரையை வாய்க்கால் ஓர பங்களாவிலே அடைத்து வைப்பது ஆபத்து என்று அம்பலம் புரிந்து கொண்டார். வெளியேறிவிட்ட பரிமளா, ஒருவேளை பங் களா ரகசியத்தை வெளியிட்டு விடக் கூடும் என்று பயந் தார். அதனல், துரையை தனது வீட்டிலேயே அடைத்து வைக்க முடிவு செய்து, வண்டியை வீட்டுக்கு ஓட்டச் செய் தார்.

மருங்கப்பள்ளம் கிராமத்திலே வெள்ளியம்பலத்தின் வீடுதான் பெரிய வீடு. இரண்டு மூன்று கட்டுக்கள் உள்ள அந்த வீட்டிலே துரை ஒரு கைதி போல அழைத்துச் செல்லப்பட்டான். இரண்டாம் கட்டிலேயுள்ள ஒரு பெரிய அறை திறக்கப்பட்டது. அதற்குள்ளே துரை தள்ளப் பட்டான். ஆட்கள் அனைவரும் அம்பலத்தை வணங்கி விட்டு அதைவிட்டு அகன்றார்கள். அம்பலம் ஒரு அசட்டுச் சிரிப்புடன் கனைத்துக்கொண்டு துரையின் எதிரே போனர்.

துரை, ஆத்திரத்தை அடக்க முடியாமல் அவரைப் பார்த்து, "இந்த அநியாயமெல்லாம் எதற்காக? ஏன் என்னை இப்படி சித்ரவதை செய்கிறீர்கள்?" என்று கேட்டான். அதற்கு வெள்ளியம்பலம் சிரித்துக்கொண்டே, "எல்லாம் காரியமாகத்தான்! தூங்கு இப்போது! காலையில் பேசிக் கொள்வோம்" என்று அதைவிட்டு நகர ஆரம்பித்தார்.

"இல்லை. இப்போதே சொல்லுங்கள்! ஏன் இந்தக் கொடுமை? என் பரிமளா எங்கே?" என்று ஆவலைக் கொட்டினான் துரை.

"பரிமளா பத்திரமாக இருக்கிறாள். பையா! பரிமளாவை நீ பார்க்க வேண்டுமானால் — ஒரு சிறிய நிபந்தனை இருக்கிறது!"

"என்ன நிபந்தனை?"

"அந்த ரகசியத்தை என்னிடம் தரவேண்டும்!"

"எந்த ரகசியத்தை?"

"புதையல் ரகசியத்தை!"

"ஆ.....!"

"சாமியாரிடமிருந்து நீயும் மாயாண்டியும் அபகரித்தீர்களே; அந்தப் புதையல் ரகசியத்தை என்னிடம் தந்தால் நீயும் பரிமளாவும விடுதலை பெறலாம்."

"பொய்! சாமியாரிடம் புதையல் ரகசியம் அபகரித்தோமா? இல்லவே இல்லை!"

"மறைக்காதே! மண்டை நொறுங்கும்!" என்று கூறியபடி துரையின் தலையிலே ஓங்கி அறைந்தார் அம்பலம். கட்டப்பட்டு நிற்கும் துரைக்கு அதைப் பொறுக்க முடியவில்லை. தன்னுடைய கால்களால் அம்பலத்தை எட்டி உதைத்தான். அம்பலம் சீறும் புலியானார். 'பளார்!

பளார்!' என்று பல முறை அவன் கன்னத்திலே பலங் கொண்ட மட்டும் அறைந்தார். அவரது முரட்டுக் கரத் திலே திருக்கைவால் சாட்டையும் ஏறிவிட்டது. அதை ஓங்கியபடியே துரையை அதட்டிக் கேட்டார்: "புதையல் ரகசியம் தரப் போகிறாயா இல்லையா?" என்று!

அவனே எதுவும் பேசாமல் நின்றுகொண்டிருந்தான்.

"பதில் சொல்லடா மடையா!" என்ற பயங்கரக் குர லும், திருக்கைவால் அடியும் மாறி மாறி ஒலிக்கத் தொடங் கின. துரை, "அம்மா! அப்பா!" என்று அலறத் தொடங் கினான். "அய்யோ! என்னிடமில்லை புதையல் ரகசியம்!" என்று ஓலமிட்டான். அவனது சட்டை கிழிந்து தொங்கி யது. உடம்பெல்லாம் ரத்தக் கோடுகள். நெற்றியிலே தோல் கிழிந்து ரத்தம் முகமெல்லாம் வழிந்து கொண் டிருந்தது!

"பிறகு யாரிடம் இருக்கிறது? அந்தக் கிழப் பயல் மாயாண்டியிடமா? சொல்! உண்மையைச் சொல்!" என்று கத்தினர் வெள்ளியம்பலம். அவனை, அடி தாங்காது "அம்மா; அப்பா" என முணகிக் கொண்டிருந்தானே தவிர, அவர் கேள்விக்குப் பதில் சொல்லத் தயாராயில்லை. "சொல்லுகிறாயா — இல்லையா?" என்று அவன் தலை முடியைப் பிடித்துக் குலுக்கினர். அவன் கழுத்தை அமுக் கிக் கொல்வதாகப் பயமுறுத்தினர். அவன் எதற்கும் அசையவில்லை.

புதையல் ரகசியம் எப்படிப்பட்டது என்பதை அவன் உணருவான். அது தன் தந்தை குமாரவடிவின் சொத்து. அவர், அது எப்படிப் பயன்பட வேண்டும் என்று விரும்பி னர் என்பதை மாயாண்டி மூலம் கேள்விப்பட்டிருக்கிறான். ஆகவே, தந்தையின் இறுதி மூச்சு நிற்கும்போது எழுந்த கோரிக்கையை அவன் நிறைவேற்றிட வேண்டுமென்று

உறுதி கொண்டிருந்தான். அதனல் உயிர் போவதைப் பற்றிகூட அவன் கவலேப்படாமல் இருந்தான். புதையல், அம்பலம் போன்ற அக்கிரமக்காரர்களின் கையில் சிக்கிட லாகாது என்று அவன் தீர்மானித்தான்.

"விரலுக்கு விரல் நகக் கண்களிலே ஊசியேற்றி விஷ யத்தைக் கிரகிக்கிறேன். விடியட்டும்!" என்று உறுமினர் அம்பலம்!

"மலடியின் வயிற்றைக் கீறுவதால் குழந்தை வந்து விடுமோ?" என்று துரை எளனம் செய்தான், வலியையும் பொறுத்துக்கொண்டு!

அடிகளாலும், உதைகளாலும் தான் எவ்வளவு பயங் கரமான மனிதன் என்பதை துரைக்கு உணர்த்திவிட் டோம் என்று கருதிய அம்பலம், சிறிது சமாதானமாக, "இதைக் கேளடா தம்பி! நீ மட்டும் அந்த ரகசியத்தைச் சொன்னல், உனக்கு வேண செளகரியம் செய்வேன் — கேட்டதெல்லாம் கொடுப்பேன்" என்று உரைத்துவிட்டு அவன் முகத்தைப் பார்த்தார்.

"மாணிக்கத் தொட்டில் செய்திருக்கிறேன்; அதற்காக வாவது ஒரு பிள்ளே பெறு — என்று மலடியைப் பார்த்து எந்த மடையனும் கேட்க மாட்டான்" என்று மீண்டும் கேலி பேசினன்; காயங்களிலே ஒழுகும் ரத்தத்தைத் துடைக்கவும் கை எடுக்க முடியாத அந்தக் காளே!

அந்தக் கேலிக்குப் பதிலாக திருக்கைவாலின் ஒலி தான் கிளம்பியது. அடித்தார், அடித்தார், அவன் சுருண்டு விழும் வரையில் அடித்தார். ஆவேசம் வந்தவர் போலக் குதித்தார்.

"உண்மையைச் சொல்லாவிட்டால் உயிர் போகும்! இந்த வீட்டுக் கொல்லேப் புறத்திலேயே உன் பிரேதத்திற்குக் குழி வெட்டப்படும்! ஜாக்கிரதை!" என்று

கூச்சலிட்டார்! கதவை ஓங்கிச் சாத்தி வெளியே பூட்டிக் கொண்டு போய்விட்டார். துரையோ முனகவும் சக்தி யற்றவனாகத் தரையிலே கிடந்து துடித்தான்.

*　　*　　*　　*

பொழுது விடியத் தொடங்கியது. வலியின் வேதனை பொறுக்க மாட்டாமல் தரையிலே நெளிந்துகொண்டிருந்த துரை, களைப்புற்றுக் கண்ணயர்ந்தான். கட்டுண்ட கைகளோடு புரண்டு படுக்கவும் முடியாமல், இம்சைப்பட்ட அவனுக்கு தூக்கம்தான் சரியாக வருமா, என்ன? விழித்துக் கொண்டான். ஆனாலும் கண்களைத் திறக்கவில்லை. இமைக் கதவை மூடியவாறு சிந்தனையிலாழ்ந்தான். "தான் யார்? எங்கே பிறந்தோம்? எங்கே வளர்ந்தோம்? எப்படியெல்லாம் வாழ்க்கைச் சகடம் சுழன்றது! கடைசியில் இப்படியும் ஒரு கஷ்டம் வந்துவிட்டதே; ஏன்?" — இந்தக் கேள்விக்கு அவனால் விடை காணவே முடியவில்லை. உடலிலே ரத்தம் கசிகிறது! உள்ளத்திலும் அப்படித்தான்!

உலகத்தையே மறந்து தன்னைப்பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தான். அவனது சிந்தனையைக் கலைப்பது போல அந்த அறையின் ஜன்னல் பக்கம் ஒரு சிறு ஓசை கேட்டது. கண்களைத் திறந்து பார்த்தான். பொழுது சரியாக விடியவில்லை. ஜன்னல் பக்கம் யாரோ நிற்பது தெரிந்தது. ஆம்; அது ஒரு பெண்ணின் உருவம்தான்! கருக்கல் நேரம்! யாரென்று கண்டுபிடிக்க முடியவில்லை!

"யாரது? பரிமளாவா?" என்று கேட்டான் ஆவலாக! அவள் பேசவில்லை; அப்படியே நின்றுகொண்டிருந்தாள். துரை மெதுவாக எழுந்து ஜன்னல் பக்கம் நகர்ந்தான்.

———

38

இளமை சுமந்து ஒரு எழிலாள் நின்று கொண்டிருந்தாள். அவளது முகத்திலே அமைதியின் சாயல் இல்லை. ஏதோ ஒன்றை எதிர்நோக்கும் ஏக்கம் கலந்த ஆவலின் ரேகைகள் படர்ந்திருந்தன. அவளது கண்கள் சிவப்பேறியிருந்தன. இரவெல்லாம் தூங்காமலிருந்திருக்கவேண்டும் அவள். அதோடு, ஆழ்ந்த சிந்தனையிலும் அவள் ஈடுபட்டிருந்திருக்க வேண்டும். அவள் என் அங்கு வந்து நிற்கிறாள்? தன்னை வேடிக்கை பார்க்க வந்திருக்கிறாளா? — என்ற ஆத்திரம் நிறைந்த கேள்விகள் துரையின் நெஞ்சத்தைத் துளைத்தெடுத்தன.

"யாரம்மா நீ?" என்று கேட்டான், சினத்தையும் சிற்றத்தையும் விழுங்கிக்கொண்டு!

"இந்த வீடுதான்!" என்று மெதுவாகப் பதில் கூறினாள் அவள்.

"வெள்ளியம்பலத்திற்கு நீ.....?" என்று இழுத்தாற் போல் கேட்டான் துரை.

"நீங்கள்தான் சொல்லுங்களேன்; அவருக்கு நான் என்ன வேண்டுமென்று!" — இது அவள்.

"ம" என்று மீண்டும் பேச்சை இழுத்தான்.

"ம" சரிதான்! அடுத்த எழுத்து என்னவென்று சொல்லுங்கள்; பார்க்கலாம்" என்றாள் அவள்.

"க" என்றான்.

"இல்லை — "கா" என்றாள்.

"ம" — "கா" — துரைக்கு சந்தேகம் வந்துவிட்டது.

"ஆமாம் — ம—கா—ரா—ணி" என்று முத்தாய்ப்பு வைத்து ஒரு பெருமூச்சும் விட்டாள் அவள்!

"மகாராணி என்றுல் பெயரா?—அல்லது...?" என்று ஐயத்தை வளர்த்துக் காட்டினன் அவன்.

"பெயரல்ல! மகாராணியேதான்! இரண்டாம் தாரம்!" என்று விளக்கினள். துரை, மௌனமாக இருந்தான்.

"ஏன் மௌனமாக இருக்கிறீர்கள்? பெயர் என்ன என்று கேட்கவில்லையே; ஏன்?" என்று அவள் பேச்சைத் தொடர ஆரம்பித்தாள்.

துரை, ஒரு அசட்டுப் புன்னகையை மட்டும் பதிலாகத் தந்துவிட்டு சும்மாயிருந்தான்.

"பாவம்—உங்களைப் பார்க்கும்போது பரிதாபமாயிருக்கிறது. எங்கே, இப்படி கையை நீட்டுங்கள்—அவிழ்த்து விடுகிறேன்" என்று, அவள் தன் கைகளை ஜன்னலுக்கு உட்பக்கமாக நீட்டினுள். துரையும் தன் கைகளை அவள் பக்கமாக நீட்ட, அவள் அவனது கட்டுகளை அவிழ்த்து விட்டாள். வெகு நேரமாகக் கட்டப்பட்டு வலியெடுத்துப் போயிருந்த கைகளை உதறிக்கொண்டு துரை சிறிது மன நிம்மதி பெற்றுன்.

அந்த நிம்மதி, ஒரு விநாடிகூட நீடிக்க முடியவில்லை. அம்பலத்தின் திட்டங்கள் எப்படியெப்படி இருக்குமோ, என்ற அச்சம் அவனை முற்றுகையிட்டுக் குழப்பியது.

அவனது மனம் எங்கேயோ சுற்றி அலைகிறது என் பதைப் புரிந்துகொண்ட அவள், அவனைப் பார்த்து, "உங்களுக்கு ஏன் இப்படி ஏற்பட்டது?" என்று கவலையோடு கேட்டாள்.

"என்னம்மா, என்னைக் கேக்கிறே?.....உன் புருஷன் சொல்லாமலா இருந்திருப்பார்....."

"அவர் என்னிடம் சொல்லவில்லையே!"

"ஒருவேளை.....இளம் பெண்ணிடம் இரகசியம் சொல்லக் கூடாது என்று இருந்திருப்பார்!"

"நான் என்ன இளம் பெண்ணு? நீங்கள் அப்படியா நினைக்கிறீங்க?"

"நினைக்கிறதா?.....பார்த்தாலே தெரியுதே; அதனால் தான் சொன்னேன்."

"பார்த்தாலே என் பருவம் தெரிகிறதா? பருவம் மட்டுந்தான் தெரிகிறதா? பருவத்தின் துடிப்புகளும் தெரி கிறதா?"

அவளது பேச்சின் போக்கு, துரைக்கு பயத்தை உண்டாக்கி விட்டது. வெள்ளியம்பலத்தின் தந்திரங்களில் இதுவும் ஒன்று போலும் என எண்ணிவிட்டான். ரச வல்லியை அனுப்பி, அவள் மூலமாக புதையல் ரகசியத் தைப் பெற திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறதாக்கும் என எண்ணினான்.

"அம்மா.....கொஞ்சம் நான் தனியாக இருக்க விரும்பு கிறேன். நீ போய்ட்டு வாம்மா!" என்று அறையின் வேறு மூலைக்குத் திரும்பினன் துரை.

"என்ன; அம்மா, அம்மா என்று கூப்பிடுகிறீர்கள்..... என் பெயர் மேனகா!"

"இருக்கட்டும், அதனால் என்ன?—" என்று துரை அவள் கண்ணில் படாதபடி வேறு பக்கம் சென்றான். அவ ளும் அதைவிட்டுப் போய்விட்டாள். துரையின் உள்ளத் திலே தீர்க்க முடியாத குழப்பங்கள் ஒன்றன்பின் ஒன்றாக உருவெடுத்தன. "யார் இவள்? இவள் ஏன் என் கட்டு களை அவிழ்த்துவிட வேண்டும்?..... அம்பலத்திற்கு மனைவியாக வாய்த்தவள் என் மீது அனுதாபங் காட்ட வேண்டிய காரணம் என்ன? இதுவும் சூழ்ச்சிதானா? அல் லது காலத்தால் சூறையாடப்படும் இளமைக்கு இரை தேடக் காத்திருந்து, இதுதான் சமயம் என முடிவு கட்டிக் கொண்டாளா?"—பசியின் வேதனைகூட தெரியவில்லை;

அவ்வளவு பெரிய புதிராக வந்து சேர்ந்தாள் மேனகா, அவனுக்கு!

ஜன்னல் பக்கம் நிழலாட்டம் இல்லையென்பதைத் தெரிந்து, அவள் போய்விட்டாள் என்று புரிந்துகொண்டு அங்கே வந்து நின்றான் துரை. வெள்ளியம்பலம், வீட்டுத் திண்ணைப் பக்கத்திலே யாரோ ஆட்களோடு உரக்கப் பேசிக்கொண்டிருப்பது அவன் காதில் விழுந்தது. என்ன பேசுகிறார் என்று கவனித்தான். புரியவில்லை. அப்போது அவசர அவசரமாக மேனகா ஜன்னலண்டை வந்தாள். தன் கையிலுள்ள ஒரு பொட்டலத்தை ஜன்னலுக்குள் போட்டுவிட்டு "பத்திரம் — பத்திரம்!" என்று கூறிவிட்டு மறைந்து விட்டாள்.

வியப்பில் சிக்குண்ட துரை, அதை எடுத்துப் பிரித்தான். இட்லிகள்! பெருமூச்சு விட்டுக்கொண்டே அவைகளை சாப்பிட ஆரம்பித்தான். மீண்டும் வந்தாள். ஒரு சிறு குவளையில் தண்ணீரை ஜன்னல் கம்பிகளின் இடுக்கு வழியே உளளே வைத்துவிட்டுப் போய்விட்டாள்.

துரை விழித்தான். எப்படியோ எண்ண அலைகளின் மோதுதலுக்கிடையே காலை உணவை ஒருவாறு முடித்துக் கொண்டு, களைப்போடு கீழே படுத்தான். கதவு திறக்கும் ஒலி கேட்டது. துரை, ஆவலோடு எழுந்தான். கதவு திறக்கப்பட்டது. வேலைக்கார ராமனும், ஒரு முரடனும் வந்தார்கள் உள்ளே!

"அய்யா உத்திரவு — பல் துலக்குவதற்காக பத்து நிமிஷம் வெளியே வரலாம்!" என்றான் ராமன்.

"பல் துலக்கத் தேவையில்லை!" என்று கூறினான் துரை.

"அதெல்லாம் முடியாது — துலக்கித்தான் தீரவேண்டும்" என்று கட்டளையிட்டான் ராமன்.

துரையும் அவனோடு வெளியே வந்தான். தோட்டத்துப் பக்கம் சிறையிலே வார்டர்கள் நிற்பதுபோல முரடர்கள் கையிலே கம்புடன் சுற்றி நின்றுகொண்டிருந்தார்கள். வார்டர்களின் பாதுகாப்பின் கீழே, கொலைக் குற்றக் கைதிகள், தங்களது கடன்களை முடித்துக்கொள்வது போலவே, துரையும் முடித்துக்கொண்டான்.

ஒரு சிறிய கிராமம் — இங்கே இப்படி ஒரு காட்டு ராஜாவின் தர்பார் நடக்கிறது — என்று தனக்குத்தானே நினைத்து நெருப்பாக மாறி நின்றான் துரை.

மீண்டும், துரை பூட்டப்பட்டான். சிறைக் கைதிகளுக்குத் தருவது போலவே, ஒரு குவளை கஞ்சியை ஜன்னல் வழியாக வைத்துவிட்டு ராமன் நடையைக் கட்டினான். துரை, அந்தக் கஞ்சியை கையில் எடுத்துப் பார்த்து தனக்குள்ளாக சிரித்துக்கொண்டான். அப்போது அவள் கை உள்ளே நுழைந்தது. ஒரு பீங்கான் கோப்பை! — அவள் மறைந்துவிட்டாள். சூடான டீ! — துரை, அந்தத் தேநீரை சுவைத்தான். அவன் பட்ட வேதனைகளுக்கு அந்த சூடான தேநீர் மட்டும்தான் ஆறுதல் வழங்கியது. சூடான தேநீர்! சுவையாக இருந்தது; ஆனால் அந்த சூட்சமம் புரியவில்லையே அவனுக்கு! யோசித்தான்; யோசித்தான்; முடிவுகாண முடியவில்லை. அப்போது அவள் வந்தாள். பீங்கான் கோப்பை, குவளை முதலியவை ஜன்னல் பக்கம் இருந்தன. அவைகளை எடுத்துக்கொண்டு அவனையும் ஒரு முறை கூர்மையாகப் பார்த்துவிட்டு மள மள வென்று போய்விட்டாள்.

அவளுக்கு எதிரே அம்பலம் வந்தார். "என்ன மேனகா!" என்று கேட்டுக்கொண்டே, அவளோடு திரும்பி

அவரும் தொடர்ந்தார். அங்குள்ள ஒரு மேடையிலே குவளைகளை வைத்துவிட்டு, அவள் அவரது தோள்களைத் தழுவினுள். அவர் அவள் கைகளை தன் முரட்டுக் கரங்களால் அமுக்கினர்.

"அய்யோ! அய்யோ!" என்று அலறி அவள் கைகளை விடுவித்துக்கொண்டாள்.

"அப்பாடா! சிவந்துவிட்டது போங்கள்!" என்று சிணுங்கினுள்.

"சீ! போ நாயே! — இதுக்கு அழுதுகிட்டு!" என்று முதுகில் ஒரு தட்டுத் தட்டினர். அவளோ வில்லாக வளைந்தாள், அந்த அடியிலிருந்து தப்புவதற்காக. — "சூ! என்ன இது முரட்டுத்தனம்!" என்று ஊடல் புரிந்தாள்.

"அடக் கழுதை! என்ன பிசுவு பண்ணுதுடா இந்த நாயி!" என்று கொஞ்சிக்கொண்டே அவள் கன்னத்தைத் கிள்ளினர் அம்பலம்.

"அய்யோ, கையோட சதையை எடுத்துடாதிங்க!" என்று கத்தினுள் அவள்.

"பெரிய கொய்யாப்பழமாக்கும் கிள்ளினு சதை வர?" என்று கிண்டல் செய்தார் அவர்!

அவள் ஒரு ஆழமான மூச்சு விட்டு நின்ருள். அந்தப் பெருமூச்சிலேதான் எத்தனை எத்தனை எண்ணங்கள்!

அவள், அம்பலத்திற்கு மனைவியாகி மூன்று வருடங்கள் முடியப் போகின்றன.

"மேனகாவுக்கு என்னடி; எவனுவது இந்திரன் கிடைக்காமலா இருப்பான்?" — இப்படி ஊரார் பேசிக் கொண்டிருக்கும்போது அவளும் உள்ளுக்குள் மகிழ்வாள். திருத்துரைப்பூண்டி அவள் சொந்த ஊர். நடுத்தரமான குடும்பத்தைச் சேர்ந்தவள். நாலுபேரைப் போல நமது

பெண்ணும் படிக்க வேண்டுமென்று அவள் பெற்றோர் ஆசைப்பட்டனர். அவளும் படித்தாள். படிப்பும் முடிந்தது. மாப்பிள்ளை தேடும் படலம் ஆரம்பமாயிற்று. மருங்கப்பள்ளம் கிராமத்திலே சொந்தக்கார மாப்பிள்ளை ஒருவன்; அவனும் படித்தவன். அவனைக் கல்யாணம் செய்து கொள்வதிலே மேனகாவுக்கும்கூட ஆசைதான்.

திருமணம் நிச்சயமாயிற்று. மருங்கப்பள்ளத்திலே மாப்பிள்ளை வீட்டிலே திருமணம். முதல் நாள் பெண் அழைப்பு. காலையிலே திருமணம். இரவு பெண் வீட்டாருக்கும், மாப்பிள்ளை வீட்டாருக்கும் பெரிய தகராறு! போடுவதாக வாக்களித்த நகைகளை மாப்பிள்ளை வீட்டார் போடவில்லை. அதன் காரணமாக மேனகாவின் தந்தை சச்சரவை வளர்க்க ஆரம்பித்தார். பேச்சு முற்றி, இரு தரப்பாருக்கும் கை கலக்கிற நிலைமை ஏற்பட்டு விட்டது. மேனகாவின் தந்தை ஆத்திரக்காரர். மாப்பிள்ளையின் தந்தையை அடித்துவிட்டார். தந்தை தாக்கப்பட்டதை மாப்பிள்ளையால் சகிக்க முடியவில்லை. மாமனர்மீது பாய்ந்துவிட்டான். மாமனரும் மாப்பிள்ளையென்று பார்க்காமல் அவன் கழுத்தை நெறித்துக் கொன்றுவிட்டார். கொலை விழுந்த பிறகு கலகம் அடங்கிவிட்டது.....

வெள்ளியம்பலம் அந்த நேரத்தில் குறுக்கிட்டார். மேனகாவின் தகப்பனரை தூக்கு மேடையிலிருந்து காப்பாற்றுவதாயிருந்தால், தனக்கு மேனகாவைத் திருமணம் செய்துவைக்க வேண்டுமென்று நிபந்தனை விதித்தார். கொலை செய்யும் வரையிலே, தனக்காகக் காத்திருக்கும் தூக்கு மேடையைப்பற்றி நினைத்துப் பார்க்காத மேனகாவின் தந்தை, இப்போது அஞ்சி நடுங்க ஆரம்பித்தார்! அப்பாவைக் காப்பாற்றித் தீரவேண்டிய பொறுப்பு, தன் தலையில் விழுந்துவிட்டதை மேனகா உணர்ந்தாள். வெள்ளியம்பலம் — மேனகா விவாகம் உடனடியாக நிச்சயிக்கப்

பட்டது. மாப்பிள்ளை இறந்தது கொலையல்ல; தற்கொலை யென்று பஞ்சாயத்தார் முடிவு செய்தனர். மாப்பிள்ளை வீட் டாரும் வெள்ளியம்பலத்தின் பயமுறுத்தலுக்கு அடங்கி ஒடுங்கிப் புழுங்கிக் கிடந்தார்கள்.

மேனகா, அம்பலத்தின் மனைவியாளுள். அதுமுதல் 'கழுதை', 'நாய்' என்ற காதல் வர்ணனைகளை அவள் காது கள் கேட்கத் தவறவில்லை. அவள் பள்ளியிலே படித்திருக் கிருள், தமிழ் இலக்கியங்கள்! 'நிலவே! தேனே! மலரே! மணியே! அன்பே! உயிரே! அருமருந்தே!'— இப்படியெல் லாம் காதல் யாழை மீட்டும் காதலர்களை சந்தித்திருக்கி ருள், காவிய ஏடுகளில்!

ஏட்டில் கண்ட எழிலோவியம் — வீட்டு வாழ்விலும் காணலாம் என அவள் கட்டிய கோட்டைகள் ஏராளம்!

ஆனல், சந்தர்ப்பம் ரோஜா மலரை இரும்புக் கரங்க ளில் ஒப்புவித்து விட்டது! செந்தாமரைக் குளத்திலே காட்டெருமை விளையாடும் சூழ்நிலை எப்படியோ திடீரென அமைந்து விட்டது!

மேனகா, திருமணமான சில மாதம் வரையில் — தங் தைக்காக தான் செய்த தியாகத்தை எண்ணி பெருமைப் பட்டாள். பிறகோ, அவளது மென்மை நிறைந்த பருவத் தின் படையெடுப்பு பலமாகி விட்டது.

முதுமையும் முரட்டுத்தனமும் கொண்ட முள்வேலிக் குள்ளே, எங்கோ ஒரு மூலையில் பறிப்பாரின்றி வாடும் முல்லைக் கொடியாக அவள் கிடந்தாள். நாய்; கழுதை; — வாடி; போடி — இப்படி வார்த்தைகளைக் கேட்பதையே அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. தென்றலே விரும்பினுள் — நானும் காற்றுத்தானே; என்று புயல் அடித்துக் கொண்டிருக்கிறது அவள் வாழ்விலே!

இந்த நிலையிலேதான் துரை கொண்டுவரப்பட்டான். அம்பலம், புதையலைத் தேடி என்னவெல்லாமோ செய்கிறார் என்பது அவளுக்கு நன்றாகத் தெரியும். அவருக்கு அந்த புதையல் கிடைப்பதற்கு முன் — தான் தேடி வாடிய புதையல் தனக்குக் கிடைத்து விட்டதாக அவள் கருதினாள்.

"கன்னம் என்ன கொய்யாப் பழமோ?" என்று கேட்கும் வெள்ளியம்பலத்தின் வரட்டுக் குரலுக்கும், "தித்திக்கும் தேன் கரும்பே! கொய்யாக் கன்னம் கொடு!...கோவை இதழ் தந்திடு — கோமளமே! நான் பதிலுக்கு பத்தாயிரம் முத்தாரம் தந்திடுகிறேன்!" என்று தழுவிடும் வாலிபத்தின் முழக்கத்திற்கும் இடையே உள்ள வேறுபாட்டை மேனகா எண்ணி யெண்ணி ஏங்கிய காலத்திற்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டதாக அவள் உறுதி கொண்டாள்.

"துரை, ஆணழகன்! அவன் என் விடுதலைக்கு சம்மதித்தால், நான் அவன் விடுதலைக்கு சம்மதிப்பேன்" என்று யார் காதிலும் விழாமல் மெதுவாக — ஏனசுரத்தில் கூறிக் கொண்டாள்.

வெள்ளியம்பலம், துரை அடைபட்டிருக்கும் அறைக்கு வந்தார். ஜன்னல் பக்கம் நின்று அவனைப் பார்த்தார்.

"என்னப்பா! உண்மையைச் சொல்லப் போகிறாயா; இல்லையா? என்ன முடிவு செய்திருக்கிறாய்?" என்று கம்பீரத் தொனியிலே கேட்டார்.

"முடிவு செய்துவிட்டேன் — சாவதற்கு!" என்றான் துரை!

"யமனே வந்து, கணக்கு நோட்டைக் காட்டி, உன்னைக் கூப்பிட்டாலும் — நான் அனுப்ப மாட்டேன்; மார்க்கண்டேயனைக் காப்பாற்றிய பரமசிவனைப் போல நான் உன்னைக் காப்பாற்றுவேன்; ஏன் தெரியுமா? புதையல் எனக்குக் கிடைத்த பிறகுதான் உன் புதையல் கடைபெற

வேண்டும். இந்த பார் துரை! நான் சொல்வதைக் கேள்; அந்த ரகசியத்தை என்னிடம் சொல்லிவிடு; அது எங்கே யிருக்கிறது என்று காட்டிவிடு! இருவருமே பங்கு போட்டுக் கொள்வோம்!" என்று சமாதானம் பேசினர் அவர். துரை மௌனமாக நின்றான். அப்போது தெருவிலே குடு குடுப்பைக்காரனின் குரல் கேட்டது.

"இந்த ஊட்டு அய்யாவுக்கு நல்லகாலம் பொறக்குது! — பெரிய அதிர்ஷ்டம் வரப்போகுது! அதிர்ஷ்டம் வரப்போகுது! திடீர்னு அதிர்ஷ்டம் வரப்போகுது!"

அம்பலம், அந்த வார்த்தைகளை ஆவலோடு கேட்டார். துரையை விட்டகன்று, தெருப்பக்கம் போனர்.

"ராத்திரிகூட, விடியக்காலையில சொன்னுன் சாயபு!..... சுடுகாட்ல உதயமானதை சொன்னுன். அய்யாவைப் பாரு! மகா ராஜா மாதிரியிருக்காரு! அய்யாவுக்கு திடீர்னு அடிக்கப்போவுது அதிர்ஷ்டம் — அய்யா ஒரு காரியத்துக்காக கஷ்டப்படுராரு — அதை ஒருத்தன் தட்டிக்கிட்டு போகப் பார்க்கிறுன் — நடக்காது அது! அய்யாவுக்கு நல்லகாலம் பொறக்குது! ஐஸ்வர்யம் வருது! அய்யா கட்டுற ஒரு கிழிஞ்ச துணி — அம்மா தூக்கிப்போட்ட ஒரு பழைய சீலை — ஏதாச்சும் கேக்கிறுன் சாயபு!..... நல்லகாலம் பொறக்குது! குடு! குடு! குடு! குடு! கொடு! கொடு! கொடு! கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிச்சுக்கிட்டு — பூமியைப் பொளந்துகிட்டு கொடுக்கப் போவுது அய்யாவுக்கு!"

அம்பலத்திற்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. குடு குடுப்பைக்காரனை உள்ளே வருமாறு கூப்பிட்டார்.

39

குடுகுடுப்பைக்காரன் சிரித்த முகத்தோடு உள்ளே வந்து அம்பலம் குறிப்பிட்ட இடத்திலே உட்கார்ந்து கொண்டான்.

"ஏய், குடுகுடுப்பாண்டி — என்ன நல்லகாலம் வருதுன்னு சொல்றே? கொஞ்சம் விபரமாச் சொல்லேன்!"

"நானு சொல்றேன்? சத்தி மாகாளி—பகவதி சொல்ரா! அய்யாவுக்கு அஷ்ட ஐஸ்வர்யமும் ..... கிடைக்கும். அய்யாவுக்கு கெடுதி நினைச்சவன் 'அய்யோ'ன்னு போருன். 'அய்யோ'ன்னு போருன்."

"ஏய், சத்தம் போடாதேப்பா! கேக்கிறத்துக்கு பதில் சொல்லு!... அய்யா, ஒரு காரியத்துக்காக கஷ்டப்படுரா ருன்னு சொன்னியே; அது என்ன காரியம்? சொல்லு பார்ப்போம்!"

"விடியக் காலையிலே கூடச் சொன்னேன் — அய்யா மெனக்கெடும் காரியம் காயா பழமான்னு அய்யா கவலைப் படுராரு — கவலைப்பட வேண்டியதில்லை — பூமியைப் பொறுத்த விஷயம் — அதுக்காகத்தான் அய்யா சிரமப் படுராரு. சிரமமில்லாம ஜெயமாகப் போகுது! காரியம் ஜெயமாகப் போகுது!"

"ஜெயம் இருக்கட்டும்; காரியத்துப் பேரைச் சொல்லேன். பூமியைப் பொறுத்த விஷயம்னு என்ன?"

"பகவதி, சுருக்கமாத்தான் சொல்லுவா! அவ்வளவு விபரமா சொல்ல மாட்டா! பூமியைப் பொறுத்த விஷயம் — மண்ணைப் பொறுத்த விஷயம்!"

"அப்படின்னு; நிலம் வாங்குவேனு?"

"ஆமாம் — வயல் வாங்குவர்ர் அய்யா — பொன் வயல் வாங்குவாரு! சந்தோஷமா வாங்குவாரு!—சாயபுக்கு ஒரு கிழிஞ்ச துணி, பாவாடை, ஏதாவது கொடுங்கிருன். மகராசா மாதிரி யிருக்காரு!"

"பொன் வயல் வாங்குவேனு? ஏய்...வாங்குவேனு? கிடைக்குமா? அதைச் சொல்லு!"

"கிடைக்கும்னு சொல்ரா, பகவதி! விடியக் காலேகூட சொன்னேன், இந்த வீட்டுக்கு 'லக்ஷ்மி' வரப்போருன்னு!"

"பூமியிலேயிருந்து என்னப்பா கிடைக்கும்? புதையலா?"

"பொன்னைப் பொறுத்த விஷயந்தான் கிடைக்கும்னு சொல்ரா பகவதி! அதுவும் சீக்கிரம் கிடைக்கும்னு சொல்ரா!"

"அப்படியா?"

"அய்யா ஒரு இடத்திலே நம்பிக்கை வச்சு அலையிராரு! — அந்த இடத்திலே அய்யாவுக்கு ஜெயமாகாது! அய்யாவுக்கு ஜெயமாகப் போற எடம் வேறன்னு சொல்ரு பகவதி!"

"எந்த இடம்? எந்த இடம்?"

"அய்யா முயற்சி பண்ற காரியத்துக்கு, இன்னொரு மூதேவி மனுஷன் முயற்சி பண்ணப் போருன். சரியான சமயத்திலே அவன் மாட்டப் போருன்!"

"மாட்டப் போருனு? மாட்டிகிட்டான்!"

"அய்யா சொல்ற மனுஷனல்ல—சாயபு சொல்ற மனுஷன் — சாகிற வயசு உள்ள சண்டாளன்! அவன் அய்யோன்னு போகப் போருன், அம்மா பகவதி சொல்ரு! விடியக்காலேகூட சாயபு சொன்னுன்—ஒரு கிழிஞ்ச துணி பாவாடை உங்கத் தங்கக் கையாலே, இந்தான்னு முகத்தில் வீசுங்க, மவராஜா — நல்லகாலம் பொறக்குது!"

"சாகிற வயது உள்ளவன் எனக்கு துரோகம் நினைக்கிருனு? — இந்தாப்பா சாயபு! கொஞ்சம் நிதானமா யோசனை பண்ணி சொல்லு! யார் அவன்?"

குடுகுடுப்பைக்காரன் சிறிது யோசனை செய்துவிட்டு பிறகு அம்பலத்தின் முகத்தைப் பார்த்து மளமளவென்று பேச ஆரம்பித்தான்.

"யோசிச்சான் சாயபு! பகவதி சொல்ரா, ஒரு வய சான மனுஷன் — வஞ்சக மனுஷன் — அவனுகிட்டத் தான் இருக்கு அய்யா தேடி அலையிற சொத்துன்னு! தோண்டி எடுக்கப்போறான் — ஆனை, அது அவன் கை யில் கிடைக்காமல், அய்யா கையில்தான் கிடைக்கும்னு பகவதி சொல்ரா!"

"இந்தா சாயபு — விபரமாகச் சொல்றேனே: இந்த ஊர்ல புதையல் இருக்குன்னு எல்லோரும் தேடி அலையி ருங்க. எனக்குக்கூட கொஞ்சம் அதில் சபலந்தான். அது எனக்கு நிச்சயம் கிடைக்குமான்னு உன் பகவதியைக் கேட்டுப் பாரு!"

"கேட்டான் — கேட்டுட்டான். அய்யாவுக்கு பூமி தோண்டுற மந்திரம் தெரியிலே; தவிக்கிராருன்னு பகவதி சொல்ரா! அய்யா அதைப்பத்தி கவலைப்பட வேண்டிய தில்லேங்கிறான் சாயபு! இன்னிக்கோ, நாளைக்கோ, நடு ராத்திரியிலே — அய்யாவோட சொத்தை அபகரிக்கப் போறான் அந்த மூதேவி மனுஷன்!"

"ஆ! அப்படியா?"

"ஆமாங்கிறு பகவதி!"

"அய்யோ"

"ஆனை — அவன் அபகரிக்கிற நேரத்திலே அய்யாக் கிட்ட சிக்கப் போறான்னும் சொல்ரு பகவதி!"

"இன்னைக்கோ, நாளைக்கோ?...உண்மையாகவா?... புதையல் எடுக்கத் திட்டம் போட்டு விட்டார்களா?"

"ஆமாம்—இரண்டு பேரு சேர்ந்து எடுக்கிறதா முடிவு பண்ணினுங்கன்னு சொல்ரு பகவதி! அதுக்குள்ள ஒருத் தன் கண்காணாம போயிட்டானும்—ஒருத்தன் மட்டும் எடுக் கப்போறானும்! பகவதி சொல்ரு — அய்யாவுக்கு அதிர்ஷ்

டம் அடிக்குது! ஒரு கிழிஞ்ச துணி — பழசு, பட்டு, பாவாடை — உங்களோட தங்கக் கையாலே சாயபுக்கு கொடுக்கணுங்கிறான்."

குடுகுடுப்பாண்டியின் இந்த வார்த்தைகள், அம்பலத்திற்கு புதிய தெம்பை உண்டாக்கின. அவன் சொல்வது மாயாண்டியைத் தானிருக்கும். மாயாண்டிக் கிழவன்தான் புதையலை எடுக்க முயற்சி பண்ணப் போகிறான். அந்த சமயம் பார்த்து அவனைப் பிடித்துவிட வேண்டும் என்று மனதுக்குள்ளே முடிவு செய்துகொண்டார்.

குடுகுடுப்பைக்காரன் மேலும் தொடர்ந்தான்:

"அய்யா நினைக்கிராரு; சாயபு சொல்றது சரியா இருக்குமான்னு! அய்யாவுக்கு ரெண்டே எதிரிதான் இருக்கான்! ஒருத்தன் ஜெயில்ல கிடக்கான்! ஒருத்தன் இன்னைக்கோ நாளைக்கோ சாவப் போறான்!"

"யாருப்பா சாகப் போறா?"

"அய்யா மனசு அப்பட்டமா தெரியுது! முதல் எழுத்து மாவன்னு உள்ள மனுஷன். அந்தப் பேர்வழியை அய்யா தொலைக்கப் போராரு! ஆன ஒண்ணு அய்யாவுக்கு சொல்லி வைக்கிறான் சாயபு; அந்த வயசான மனுஷனை கொன்னு காரியம் ஜெயமா முடியாது! ஜெயமா முடியாது! ஜெயில்ல இருக்கிறவனையும் கொல்லக் கூடாதுங்கிறு பகவதி!"

"ஜெயில்ல யாரு இருக்கா?" என்று சந்தேகத்தோடு கேட்டார் அம்பலம்.

"ஜெயில்னு ஜெயிலே அல்ல! — அய்யாவுக்குக் கீழே அடங்கிக் கிடக்கிறான். அவனை விடக்கூடாதுங்கிறு பகவதி! விட்டா காரியம் கெட்டுடும்!"

"குடுகுடுப்பாண்டி! நீ மகா மேதாவியாயிருக்கிறே..... மகா கெட்டிக்காரன்! என் மனசிலே உள்ளதையெல்லாம்

அப்படியே புட்டுப் புட்டு சொல்லிவிட்டாயே. ஆனை ஒண்ணு; உனக்குத்தான் மந்திர தந்திரம், மாயம், வசியம் எல்லா வேலையும் தெரியுமே — அதைக்கொண்டு ஒரு காரியம் செய்யேன் பார்ப்போம்!"

"அய்யா சொன்ன அட்டி ஏதுங்கிறன் சாயபு! ஒரு கிழிஞ்ச புடவை — கிழிஞ்ச வேட்டி — உடைஞ்ச செம்பு தவலை — ஓட்டை உடைசல் பாத்திரம் போதுங்கிறன். தங்கக் கையால....."

"சரி — சரி — வேணுங்கிறது தர்ரேன். நான் சொல்ற ஆளை இங்கேதான் அடைச்சு வச்சிருக்கேன். அவனுகிட்ட வசிய மருந்து வேலை செய்து, எப்படியாவது அவனுகிட்டயிருந்து பெரிய உண்மையை நீ கிரகிக்கணும்!"

"அப்படியே சாயபு செய்வான். சந்தேகம் வேண்டாங்கிறு பகவதி. சுடுகாட்டு எலும்பு — இதோ இருக்கு! அய்யா, கவலைப்படவேண்டாம். கர்ப்பஸ்த்ரீயோட மணிக்கட்டு எலும்பு இது! கல்லையும் கரைக்கலாம் — கடலையும் வற்ற வைக்கலாம் என்கிறுள் பகவதி!"

"சரி — அப்படியானால் வா! வசியத்தை ஆரம்பி! ரகசியத்தை வாங்கித் தா! வா! வா!"

"ஆகூம்! சாயபு அப்படி வரமாட்டான். அந்தப் பாவியிருக்குற இடத்திலே சாயபுவையும் கொண்டுபோயி அடைச்சுபோட்டது மாதிரி போடனுங்கிறுள் மலையாள பகவதி! அவனுடை சாயபுவும் ஒரு கைதி மாதிரி கிடப்பான் — வசிய வேலை நடக்குப். ரகசியத்தைக் கக்கி விடுவான்."

"ஆ! சபாஷ்! அப்படியே செய்கிறேன்!" என்று குடுகுடுப்பைக்காரனை அழைத்துக்கொண்டு, அம்பலம் உள்ளே கிளம்பினர். அம்பலமும், குடுகுடுப்பாண்டியும் பேசிக்கொண்டிருக்கும்போது, இதுதான் சமயமென்று, மேனகா

துரை பூட்டப்பட்டுள்ள அறையின் ஜன்னல் பக்கமாக தன் முகத்தைக் காட்ட ஆரம்பித்தாள்.

துரையோ, அவளைக் கவனிக்காதது போல கண்ணை மூடிக்கொண்டு தூங்கும் பாவனையில் படுத்திருந்தான்.

"என்ன தூக்கமா?"

பதில் இல்லை.

"சாப்பிட்ட களைப்பாக்கும்!"

அதற்கும் பதில் இல்லை.

துரையின் மீது ஒரு சிறு கல் விழுந்தது. விழித்துப் பார்த்தான். திரும்பி வேறு பக்கம் படுத்துக்கொண்டான்.

மேனகாவுக்கு நிற்க இயலவில்லை. கூண்டிலே இருப்பது துரையல்ல; தானே இருப்பதாக அவள் கற்பனை செய்துகொண்டாள். துரைக்கு ஏற்பட்டுள்ள வேதனையில் தன்னோடு பேசுவது போன்ற இன்ப நிகழ்ச்சிகளை அனுபவிக்கும் எண்ணம் பிறக்கவில்லை போலும் என அவள் கருதினாள். அணை போட்டுத் தடுத்து வைத்திருந்த புது வெள்ளம் பொங்கியெழுந்து, அணையைப் பிளந்தெறியத் துவங்கிவிட்டது. அதன் எடுத்துக்காட்டாகத்தான் மேனகாவின் கண்களிலே புரட்சி வர்ணம் தோன்றியது.

"இப்படி வாருங்களேன் — ஒரு சேதி" என்றாள் மேனகா!

அவன் வரவில்லை. அந்த சமயம் அம்பலமும், குடு குடுப்பாண்டியும் அங்கே வருவதைக் கண்டு, மேனகா மறைந்துவிட்டாள்.

அம்பலம் அறையின் கதவைத் திறந்து குடுகுடுப் பாண்டியை உள்ளே தள்ளுவதுபோல தள்ளிவிட்டார். அவனும், "அய்யா! அய்யா! சாமி, சாமி! என்னே விட்டுடுங்க மகராஜா!" என்று கத்தியபடி உள்ளே விழுந்தான்.

அம்பலம், குடுகுடுப்பாண்டி ஆகிய இருவரின் நடிப்பையும் உணர முடியாமல் துரை விழித்தான்.

"இரண்டு பயல்களும் இங்கேயே கிடக்கட்டும்!" என்று உறுமிக்கொண்டு அறையைப் பூட்டிக்கொண்டு நகர்ந்தார், அம்பலம்!

தூரத்திலிருந்தே இதைக் கவனித்த மேனகாவுக்கு கவலை தாங்க முடியவில்லை. கோபமும் பிறந்துவிட்டது! துரையோடு, தான் தனித்துப்பேசி, தன் காதலை வெளியிட முடியாமல், யாரோ ஒரு குடுகுடுப்பைக்காரனைக் கொண்டு வந்து வைத்துவிட்டாரேயென்று அவள் குமுறினாள்.

துரை, குடுகுடுப்பாண்டியின் முகத்தை உற்றுப் பார்த்தான். எங்கேயோ பார்த்த முகத்தைப் போல இருந்ததோ என்னவோ; அவனையே வெறிக்கப் பார்த்தான். குடுகுடுப்பாண்டி, துரையிடம் எதுவுமே பேசாமல், அறையில் ஒரு மூலையிலே போய் உட்கார்ந்துகொண்டான்.

துரை, அவனைப் பார்த்து, "நீ யார்?" என்றான்.

அதற்கு பதில் சொல்லாமல், அவன், 'குடுகுடு'வென குடுகுடுப்பையை ஆட்டிக் காட்டினான்.

"யாரப்பா?" என்றான் துரை, சிறிது ஆத்திரமாக!

"நான் மலையாள பகவதி!" என்றான் குடுகுடுப்பாண்டி!

மேனகா, ஜன்னல் பக்கமாக ஒருமுறை வந்து பார்த்துவிட்டு, துரையின்மீது விழியை வீசிவிட்டு அகன்றாள். மேனகா வந்து போனதை, குடுகுடுப்பாண்டி கவனித்தான். அவன் கவனிப்பதை துரையும் கவனித்தான்.

40

அவனைடு அவள் தாராளமாகப் பேச முடியாதபடி, தான் ஒரு தடையாக வந்து சேர்ந்துவிட்டோம் என்று மலையாள பகவதி கருதினன் போலும்! அதனல் என்ன நடக்கிறது என்று பார்ப்பதற்காக கண்களை மூடிக் கொண்டு தூங்குவதுபோல் பாசாங்கு செய்தான்.

சிறிது நேரம் சென்றதும், அறையில் உலவிக்கொண் டிருந்த துரையும் ஜன்னல் பக்கம் போய் நின்று, ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். தூங்குவதுபோல் நடித்துக்கொண்டிருந்த குடுகுடுப்பைக்காரன் மெதுவாக இமைகளைத் திறந்து பார்த்து அறையில் நடப்பவைகளை ஆவலாகக் கவனித்துக்கொண்டிருந்தான்.

மேனகா ஜன்னல் பக்கம் வந்துவிட்டாள். எதிர்பாராத விதமாக துரையும் அவள் கண்களில் அகப்பட்டுக் கொண்டு அசைவற்று நின்றுவிட்டான். மேனகாவின் கையிலே ஒரு மாதுளம் பழம் இருந்தது. அவள் அதை துரையிடம் நீட்டி, "இந்த மாதுளம்பழத்தை சாப்பிடுங்கள்" என்ருள்.

"பரவாயில்லை — வேண்டாம்!" என்று துரை அலட் சியமாக விடையளித்தான்.

"ஏன், மாதுளை பிடிக்காதா?" — மேனகாவின் விரக தாபம் நிறைந்த இந்த கேள்விக்குத் துரையினல் பதில் கூற முடியவில்லை. ரத்தினத்தின் ஒளி காட்டும் அந்த எழில் மாதுளையைக் கையிலேந்தி நிற்கும் அவளது கன் னங்களை இரண்டு மாதுளைகள்! என்ன செய்வது — அவ னுக்குத்தான் அந்த மாதுளை தேவையில்லையே! அதனல் அவளையும் அந்த அழகுமிழுங் கனியையும் ஒப்பிட்டுப் பார்க்கும் கவிஞனுக அவன் மாறவில்லை.

மேனகா, அவனது இளமை துள்ளும் முகத்தைப் பார்த்தவாறு பளிங்குச் சிலைபோல நின்றாள். பிறகு, கையிலேயுள்ள கனியை உடைத்தாள். கண்ணகி காற் சிலம்பை உடைத்தபோது மாணிக்கப் பரல்கள் சிதறியது போல; மாதுளையிலேயிருந்து பவள விதைகள் சிதறின. அவைகளைத் தன் கரத்திலேந்தி அவன் முகத்துக்கு நேரே காட்டினாள்.

அவனோ, வேண்டாமென்பதற்கு அடையாளமாக தலையை அசைத்து நின்றான்.

"தயவு செய்து சாப்பிடுங்கள் — எனக்காக!" என்று கெஞ்சு மொழி உதிர்த்தாள், அவனிடமிருந்து கொஞ்சு மொழி எதிர்பார்த்து!

"என்னம்மா இது; பெரிய வம்பாயிருக்கிறது! இந்த அறையிலே தனியே கிடந்து வாடுவதைவிட பெரிய அவஸ்தையாக இருக்கிறதே உன்னால்! ஏன் இப்படிச் செய்கிறாய்?" என்று சிறிது ஆத்திரமாகப் பேசினான் துரை.

"உஸ்! மெள்ளப் பேசுங்கள் — குடுகுடுப்பைக்காரன் இருக்கிறான்" என்று தன் வாயைப் பொத்திக் காட்டினாள் அவள்.

"அவன் தூங்குகிறான். அதிருக்கட்டும் — நீயோ, திருமணமானவள். இப்படித் தவறுக நடந்துகொள்ளலாமா?" — துரை, உரிமையோடு கேட்டான் அவளிடம்.

அவளும் இதுதான் சமயமென்று தனது கண்ணீர்ப் புராணத்தை ஆரம்பித்தாள்:

"திருமணமானவள்தான்! அதை மறுக்கவில்லை. ஆனால், பெண்களின் வாழ்வு, திருமணம் என்ற ஒரு சடங்கோடு முடிந்து விடுகிறதா?"

"அதெப்படி முடியும்? திருமணம், பெண்கள் வாழ்வில் ஒரு பருவத் திருப்பம்! அதற்குப் பிறகுதானே நல்ல குடும்பமெனும் பல்கலைக் கழகத்திற்கு அவர்கள் ஆசிரியர் களாகிறார்கள்!"

"அழகாகத்தான் பேசுகிறீர்கள்! ஆனால், பெண்கள் சமுதாயத்தைப்பற்றி பிரசங்கம் புரிகிறவர்களுக்கு தனிப் பட்ட ஒரு பெண்ணின் சங்கடங்கள் புரியாது போலும்! இல்லையா?"

"புரியாமல் என்ன? புலியின் பசிக்கு ஆடுகளைத்தான் கொடுக்க முடியும், சர்க்கஸ்காரனால்! அதைவிட்டு தானே இரையாக முடியுமா?"

"நீங்கள் குறிப்பிடும் ஆடுகள்.....?"

"அறிவுரைகள்!"

"ஏட்டுச் சர்க்கரை இனிக்காதே!"

"நான் தரும் சர்க்கரை நாவுக்கல்ல தாயே — இருதயத் துக்கு!"

"தாயா?"

"ஆமாம் — தாய்க் குலம் தானே பெண்கள் குலம்!"

"ம் — புலியென்கிறீர்கள் என்னை! அய்யா சர்க்கஸ் காரரே! நான் புலியல்ல — இன்ப வானில் பறக்க சிற கடிக்கும் புறு! தாயல்ல வாலிபரே நான்! தாலியென்னும் லைசென்ஸ் கட்டப்பட்ட நாய்! திருமணமாகி விட்டது — தியவழி கூடாது என ஆடுகளை அவிழ்த்து விடுவீர் கள்....."

"என்ன, ஆடுகளையா?"

"ஆமாம்; அறிவுரைகளை! இந்த அறிவுரைகளையெல் லாம் படிக்காதவள் அல்ல நான். படித்திருக்கிறேன்;

பள்ளியிலே மட்டுமல்ல—பருமனை புத்தகங்களிலே கூட! அந்தப் படிப்புக்கு பருவத்தின் துடிப்பை அடக்கும் சக்தி இல்லை என்பதை ஆதாரபூர்வமாக நூல் வடிவிலே தரக் கூடிய அனுபவங்களையும் படித்துக்கொண்டு வருகிறேன் இப்போது! இளைஞரே! என்னைப் பாருங்கள்! இந்த மாதுளை முத்துபோல சத்து நிறைந்த யுவதி! சந்தன வில்லை சகதியிலே கிடக்கலாமா? கிடந்தால் அதைப் பார்த்துக்கொண்டுதான் போவீர்களா?"

"பிறகென்ன? சகதியிலேயிருந்து அதை எடுத்துப் பூசிக்கொள்ள முடியுமா?"

"மன்னிக்கவும் — சந்தன வில்லை சரியான உதாரணமில்லை! நான் குப்பையிலே வீசி எறியப்பட்ட கோமேதகம்! இதையாவது ஒத்துக் கொள்கிறீர்களா?"

"ஒத்துக்கொள்கிறேன். ஆனால், இந்த கோமேதகத்தை எடுக்க குப்பையைக் கிளற விரும்பவில்லை!"

"காரணம்?"

"கோமேதகம் எனக்குச் சொந்தமில்லை!"

"ஓகோ! அப்படியானால் சுய உடமையில்தான் அக்கரை காட்டுவீர்களா?"

"இந்த மாதிரி விஷயங்களில் பொது உடமை கூடாதம்மா!"

"பதில் கூறி நேரத்தைப் பாழாக்காதீர்கள்! இந்தப் பாவிக்கு ஒரு முடிவு சொல்லுங்கள்!"

"என்ன முடிவை என்னிடமிருந்து எதிர்பார்க்கிறாய்?"

"ஒரு பெண் ஒரு ஆணிடம் எதை எதிர்பார்ப்பாள்?"

"மேனகா!....." துரையினால் பேச இயலவில்லை. அவளது பரிதாபமான நிலையை அவனால் உணர முடிந்தது. ஒரு படித்த பெண், பட்டிக்காட்டு குட்டி ராஜாவிடம்

அகப்பட்டுக்கொண்டு அலைமோதுகிறாள் என்பதைக் கண்டு உள்ளபடியே அவன் வருந்தினான். அவளது உள்ளத்திலே உலகத்தின் ஒளிமயமான பகுதிகளில் உலவ வேண்டுமென்ற ஆசைக் கனல் கொழுந்து விடுவதை, அவளது கண்களின் மூலம் அறிய முடிந்தது. வெறும் உணர்ச்சிக் கூடாக இல்லாமல், உயிர் எண்ணங்கள் குலுங்கும் மலர்க் காடாக வாழ்வு அமைய வேண்டுமென்றுதான் அவள் துடித்துக் கிடந்தாள். அந்தத் துடிப்பை கண்களிலே வழியும் நீர்த்துளிகள் துல்லியமாக அவனுக்குக் காட்டின. மேனகா, மீண்டும் பேசினாள்:

"என்னைப்பற்றி எப்படி வேண்டுமானாலும் நினைத்துக் கொள்ளுங்கள். நான் உங்களிடம் சொல்ல வேண்டியவைகளைச் சொல்லிவிடுகிறேன். நீங்களே யோசித்துப் பாருங்கள், நான் அவருக்கு பொருத்தமான மனைவிதானு? இல்லை, இல்லை—அவர் எனக்குப் பொருத்தமான புருஷர் தானு:"

"இந்தக் கேள்வி, ஓமகுண்டத்திற்கு முன்பு உட்கார்ந்தாயே; அதற்கு முன்பே கிளம்பியிருக்கவேண்டும் — உன் நெஞ்சில்!"

மேனகா பேசாமல் நின்றாள். தன் தந்தைக்காக தியாகம் செய்யவேண்டிய கட்டம், அதற்கு அவள் பலியானாள் — இப்படி ஒரு வசிகரத் தென்றலை காணிக்கையாக கேட்காமலே, வெள்ளியம்பலம் கருணை காட்டியிருக்க முடியும்; ஆனால் அப்படிக் காட்டியிருந்தால் அவர் வெள்ளியம்பலமாக இருந்திருக்க முடியாது!

கன்னங்களில் உருண்டோடும் கண்ணீர்த் துளிகளைத் துடைத்துக்கொண்டே, அவள், அவனைப் பார்த்து, "நீங்கள் என்னை ஏற்றுக்கொள்வதாயிருந்தால், நாம் இருவருமே இங்கிருந்து தப்பிவிட என்னால் வழி செய்ய முடி

யும்" என்று அழுத்தந் திருத்தமாகச் சொல்லிக்கொண்டே அவன் முகத்தைப் பார்த்தாள்.

துரையின் முகத்திலே எந்தவிதமான திடீர் மாறுதலும் ஏற்படவில்லை. மூலையில் தூங்குவதுபோல் கிடந்த மலையாள பகவதியின் முகத்திலே மட்டும் திடீர் மாறுதல் தோன்றியது.

"ஆகா! அருமையான நிபந்தனை அம்மா போடுருங்க — அதான் சரி! அதான் சரி!" என்று கத்திக்கொண்டே அவன் ஜன்னலண்டை ஓடிவந்து, துரைக்கு அருகே நின்றான்.

அவன் எழுந்ததைக் கண்ட மேனகா, அதைவிட்டு நகர ஆரம்பித்தாள். உடனே, மலையாள பகவதி அவளைக் கூப்பிட்டு, "நில்லுங்கம்மா — சின்னம்மா வாயாலே, நமக்கு விடுதலேன்னு சொல்லியாச்சு! நல்லகாலம் பொறக்குது — நல்லகாலம் பொறக்குது! அம்மா கேக்கிறத்துக்கு — அப்பன் தலையை ஆட்டவேண்டியதுதான் பாக்கி!" என்று அவன் பேசிக்கொண்டேயிருந்தான்.

"ஏய், பகவதி! நில்லப்பா!" என்று அதட்டினன் துரை.

"அதெல்லாம் அப்பன் பூச்சாண்டி காட்டக் கூடாது! மலையாள பகவதி — சக்கம்மா — காளியாயி — சொல்லு நமக்கு ஒரு பெண்ணுலே விடுதலே இருக்குன்னு! அம்மா பகவதி சொன்னு பொய்க்காது! அப்படினே, நீ இந்த சின்னம்மா கேக்கிறத்தை தர்றேன்னு சொல்லு! சீக்கிரம் சொல்லு!"

— குடுகுடுப்பைக்காரன், தனது விடுதலைக்காக வேண்டி, தன் பக்கம் பேசுவது மேனகாவுக்கு ஒரு ஆறுதலாக இருந்தது.

"அய்யா பகவதீ! நீ சொல்லய்யா! இவரோட மனசை இளகும்படிச் செய்யய்யா!" என்று அவனைக் கேட்டுக் கொண்டாள் மேனகா!

மலையாள பகவதியும், மேனகாவைக்காக துரையிடம் பலமான சிபார்சுகளை வாரி இறைத்தான். மேனகாவின் ரூபலாவண்யங்களை அங்கம் அங்கமாக வர்ணிக்கத் தொடங்கிவிட்டான். பெண் பாவம், பொல்லாது! — என்றும் பயமுறுத்தினான்.

"ஆமாம் — அதனால்தான் என்னை நம்பிய பெண்ணுக்கு துரோகம் செய்யப் பயப்படுகிறேன்" என்று பதில் தந்தான் துரை.

மலையாள பகவதி புன்னகை காட்டி நின்றான். மேனகாவும், முடிவுக்காக நின்றாள்.

கடைசியாக குடுகுடுப்பைக்காரன் மேனகாவிடம், "சின்னம்மாவைக்கு, இந்த அப்பன் மாப்பிள்ளையாக ஒத்துக்கலேன்னு — சாயபு பார்த்து சரியான ஜோடி சேர்க்கிறான் — சரியான ஜோடி சேர்க்கிறான்!" என்று உறுதியாகச் சொன்னான்.

அது கேட்டதும் அவளும், "சாயபு! எப்படியோ எனக்கு இங்கிருந்து விடுதலையானால் போதும்! இந்த முரடன் கையிலேயிருந்து தப்பி, யாரும் காணாத சீமைக்குப் போய்விட வேண்டும்" என்று தயவாகக் கேட்டுக் கொண்டாள்.

"நல்லகாலம் பொறக்குது! நமக்கு விடுதலை பொறக்குது!" என்று கத்தினான் பகவதி.

அந்த சமயம் வெள்ளியம்பலம் வரும் ஓசை கேட்டு, மேனகா ஓடிவிட்டாள். வெள்ளியம்பலம் அறைக் கதவைத் திறந்து மலையாள பகவதியை வெளியே அழைத்துக் கொண்டு போனார்.

அம்பலத்திடம், பகவதி, இன்னும் வசியம் முடியவில்லையென்றும், அடைபட்டிருக்கும் ஆளிடமிருந்து ரகசியம் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும், அன்றிரவு கிழவன் ஒருவன் புதையல் தோண்டப் போவது மட்டும் உண்மையென்று சக்கம்மா காளி சொன்னதாகச் சொல்லுகிறான்.

அப்படியானால், அன்றிரவு சிவன் கோயில் பக்கம் ஆட்கள் சகிதம் போகவேண்டுமென்று அம்பலம் முடிவு செய்துகொண்டு குடுகுடுப்பைக்காரனை மீண்டும் அறைக்குள் போட்டுப் பூட்டிவிட்டுப் புறப்பட்டார்.

41

சூரியன் தனது கடமையை முடித்துவிட்டு களைப் பாறுவதற்கு மேற்றிசையில் மறைந்துவிட்டான் என்று கூற முடியாது — சுற்றிக்கொண்டிருக்கும் உலகத்தின் ஒரு பகுதி சூரியனுடைய பார்வையை விட்டு வேறு பக்கம் திரும்பிக்கொண்டது. அதனல் இருள் வந்தது.

அந்தப் பகுதியிலே ஒரு அணுதான் மருங்கப்பள்ளம். இருள் மூடிக் கிடக்கும் அந்தச் சிற்றூரில் மக்கள் நடமாட்டம் வழக்கம்போல குறைந்துவிட்டது. சிவன் கோயிலின் எதிரிலே அமைந்துள்ள ஏரி போன்ற அந்தத் தாமரைக் குளம், தனது எழிலை யாருக்கும் காட்ட முடியாமல் தவித்துக்கொண்டிருந்தது. வானத்து விளக்கும் இன்னும் ஏற்றப்படவில்லை. அப்படி ஏற்றப்பட்டாலும் அதை மறைப்பதற்காகவே கங்கணம் கட்டிக்கொண்டு மேகங்கள் எல்லாம் அணிவகுத்து நின்றன. தாமரைக் குளத்திலே குதித்துக் கிளம்பி மீண்டும் தண்ணீரில் விழும் கெண்டை மீன்கள் உண்டாக்கும் ஓசையையும், தவளைகளின் 'கித்'

தையும், தாமரைக் குளத்தை நோக்கி நிற்கும் சிவன் கோயி லின் குள்ளக் கோபுரத்துப் பொந்துகளிலே 'குடுகுடு' வென்று ஒலியெழுப்பி காதல் புரியும் புறுக்களின் சப்தத் தையும் தவிர, வேறு எதையும் கேட்க முடியவில்லை.

கோயிலுக்கு எதிரேயுள்ள தெருவின் பக்கமாக ஒரு மனிதன் நடந்து வருவது தெரிந்தது. அந்த மனிதன் வேறு யாருமல்ல; மாயாண்டிக் கிழவரேதான்! கோயிலை நோக்கி வேகமாக நடந்து வந்தார். அவரது கையிலே ஒரு மண்வெட்டி இருந்தது.

குளத்துப் படித் துறையிலே இறங்கி முகம் கை கால் களை கழுவிக்கொண்டார். கோயிலுக்கு எதிரேயுள்ள திண்ணை போன்ற மேடையில் அமர்ந்து சுற்று முற்றும் பார்த்தார். பின்னர், இருண்ட ஆகாயத்தை நோக்கியபடி சிந்தனையில் ஆழ்ந்தார். அவரது முகத்திலே கலக்கமும், எதையோ எதிர்பார்க்கும் ஆவலும் நிரம்பியிருந்ததை கோயில் வாசலில் 'மினுக், மினுக்'கென்று எரிந்துகொண் டிருந்த விளக்கு ஒன்று விளம்பரப்படுத்திக் கொண்டிருந் தது.

சிந்தனையில் ஆழ்ந்திருந்த அவரது கவனத்தை அந்த இருட்டில் திடீரென்று கிளம்பிய ஒரு இருமல் சப்தம் கவர்ந்தது. சுற்றுமுற்றும் பார்த்தார். அங்குமிங்கும் நடந்தார். யாரும் தென்படவில்லை. அவரது ஒவ்வொரு அசைவையும் கவனித்துக்கொண்டு சுமார் முப்பது ஆட் களும், வெள்ளியம்பலமும் கோபுரத்து மேலே உட்கார்ந் திருந்தார்கள். அவர்களிலே ஒருவன்தான் திடீரென்று இருமிவிட்டு, வெள்ளியம்பலத்தின் முரட்டுக் கையால் தன் தலையை வீங்க வைத்துக்கொண்டான்.

மாயாண்டி, குளக்கரைப் பக்கமாக நடந்தார். கோபு ரத்தை அண்ணாந்து பார்க்காமல், வேறு பக்கம் பார்ப்பது போலப் பார்த்தார்.

வெள்ளியம்பலமும் ஆட்களும் அசையாமல் மூச்சைப் பிடித்துக்கொண்டு கோபுரத்துப் பொம்மைகள் போல நின்றார்கள். மாயாண்டி மீண்டும் கோயில் வாசல் பக்கமாக வந்து உள்ளே நுழைந்தார். மூல விக்கிரகத்திற்கு எதிரேயுள்ள நந்தி மண்டபத்தினருகே வந்து நின்றார். அங்கிருந்து கீழ் மூலையில் உள்ள சனீஸ்வரன் மண்டபத்தை உற்று நோக்கினர். உரக்கப் பாட ஆரம்பித்தார்.

"எழுவானுக்கும் தொழுவானுக்கும் இடையிலே — காக்கை மூக்கு நிழலிலே — கள்வர் புகும் வழியிலே — கண்டாலும் கம்மாளர் கண்ணிலே.....!"

— இந்தப் பாட்டை வெகு உருக்கமாகப் பாடினர். சனீஸ்வரன் அமர்ந்திருக்கும் காக்கை வாகனத்தை ஒரு முறை பார்த்தார். அதற்குள் அம்பலமும், அவரது ஆட்களும் கோபுரத்தின் வேறு பக்கத்திற்கு வந்து மாயாண்டியின் செய்கைகளை கூர்மையாக கவனிக்கத் தொடங்கினர்கள். மாயாண்டி, தன்னிடமுள்ள மண்வெட்டியால் நந்தி மண்டபத்திற்கு முன்பாக மண்ணைத் தோண்ட ஆரம்பித்தார்.

அம்பலம், ஆர்வத்தோடு அதைப் பார்த்துக் கொண்டேயிருந்தார். மாயாண்டி வெட்டிக்கொண்டேயிருந்தார். "எழுவானுக்கும் தொழுவானுக்கும்....." என்ற பாடலை அவர் வாய் முணுமுணுத்துக்கொண்டேயிருந்தது! ஆழமான குழி தோண்டப்பட்டுவிட்டது.

மாயாண்டி, தன் மடியிலேயிருந்து ஒரு செப்புத் தகட்டை எடுத்தார். அதை அந்தக் குழியின் ஓரத்தில் வைத்தார். ஆவேசம் வந்தவர் போல 'எழுவான் தொழுவான்' பாட்டை உச்சரித்துக்கொண்டு குதித்தாட ஆரம்பித்தார். மீண்டும் மண்வெட்டியை ஓங்கினர். ஆக்ரோஷமாக பூமியைத் தோண்டினர். 'டங்' என்று ஒரு சப்தம்!

"ஆகா! கண்டேன் — கண்டேன்!" என்று மண்வெட்டியைக் கீழே போட்டுவிட்டு கையினாலேயே மண்ணைத் தள்ள ஆரம்பித்தார். ஒரு சிறு தவலை போன்ற பாத்திரம் — அதை எடுத்தார். குப்புறக் கொட்டினார்.

மேலே கோபுரத்திலிருந்த அம்பலம் அதை மிக ஆவலோடு பார்த்தார். தவலையிலிருந்து எதுவும் கீழே விழவில்லை என்பதைக் கண்ட மாயாண்டி, தீக்குச்சியின் உதவியால் தவலையைப் பரிசோதித்தார். அதற்குள்ளே சுருட்டப்பட்ட ஒரு தகடு இருந்தது. அதை பரபரப்போடு எடுத்துப் படித்தார். மீண்டும் தீக்குச்சியின் உதவியால் தகட்டை உற்று நோக்கினர். "ஆகா! அப்படியா சங்கதி? நான் அதிர்ஷ்டக்காரன்! ஜெயம்! ஜெயம்!!" என்று கூவினார். தோண்டிய குழியை மீண்டும் மண்ணைப் போட்டு மூடிவிட்டு, தவலை, தகடுகள், மண்வெட்டி ஆகியவைகளுடன் கோயிலைவிட்டு வெளியேறினர்.

அம்பலம் கோஷ்டியினர் கோபுரத்திலிருந்து இறங்கினார்கள். கிழவரைத் தொடர்ந்தார்கள். கிழவர், தன் பின்னால் யாராவது வருகிறார்களா என்று ஜாடையாகத் திரும்பிப் பார்த்துவிட்டு, கோயிலின் பின்புறமாக நடந்தார். அங்கே ஒரு தேவதையின் சிலை — பயங்கரமான உருவம் — மாடம் போன்ற அமைப்புள்ள மண்டபம் — எதிரிலே ஒரு மாமரம்! அந்த மாமரத்தடிக்கு மாயாண்டி சென்றார்.

"தங்கம் புதைக்கப்பட்ட இடம் இதுதான்! எழுபது கோடி பசும் பொன்னுக்கு இங்கேதான் ஆதாரம் இருக்கிறது! மறைந்து கிடக்கும் பொன் மணியே! இந்த ஏழை மனிதனை வாழ்விக்க வந்த வழிகாட்டியே! உன்னைக் காணவேண்டிய காலம் வந்துவிட்டது! என் வாழ்வில் களிப்பு வந்துவிட்டது — இனி கவலை தொலைந்தது" என்று பூமியைப் பார்த்து கூத்தாடினர். கோயிலுக்குள்ளே எடுத்த தகட்டை கையிலே வைத்துக்கொண்டு,

தீக்குச்சியின் உதவியோடு, ஏதேதோ திசைகளைக் குறித்துக்கொண்டார். தன் கால்களால் தரையை அளந்தார்.

கிழக்கிலே பத்து அடி — வடக்கிலே பத்து அடி அளந்துகொண்டார். மண்வெட்டியைத் தூக்கி வீராவேசமாக, வெற்றிச் சிரிப்போடு பூமியை நோக்கி ஓங்கினர். ஓங்கிய மண்வெட்டி பூமியில் விழுவதற்குள் வெள்ளியம் பலம் ஓடிவந்து மாயாண்டியைப் பிடித்துக்கொண்டார். அம்பலத்தின் ஆட்கள் மாயாண்டியைச் சூழ்ந்துகொண்டார்கள். மாயாண்டி திகைத்து நின்றுவிட்டார்.

"ஆகா! என்ன இது? நான் ஒரு பயங்கரமான கனவு காண்கிறேனு? நான் இப்போது எங்கே இருக்கிறேன்? சொப்பன லோகத்தில்தானு? வேறெங்கே இவ்வளவு பெரிய கொடுமையான வேதனைக்கு ஆளாக முடியும்? அய்யோ! தூக்கத்திலிருந்து நான் விழித்துக்கொள்ளமாட்டேனு?" என்று கத்தினர் மாயாண்டி.

"என்ன உளருகிறுய் — கிழவா! எங்கே வந்தாய்? என்ன வேலை செய்கிறுய்?" என்று அதட்டினர் அம்பலம்.

"நான் எங்கே வந்தால் யாருக்கென்ன? நான் ஒரு பைத்தியக்காரன்! நான் எங்கேயும் வருவேன்!"

"பைத்தியக்காரனுக்கு கோயிலிலே என்ன வேலை?"

"பைத்தியக்காரனுக்கு வேறு எங்கேதான் வேலை?"

"பைத்தியக்காரனுக்கு மண்வெட்டி எதற்காக? கையிலே இது என்ன தகடு?"

"அய்யோ, என்னை விட்டுவிடு—நான் போகிறேன்."

"கிழவா! வீணை சாகாதே! நீ எங்கு வந்திருக்கிறுய் — என்ன செய்கிறுய் என்பது எனக்கு நன்றுகத் தெரியும். புதையல் எடுக்க வந்திருக்கிறுய்; உண்மைதானே?"

"என்ன — புதையலா?"

"ஆச்சரியப்படுகிறுயா? அடி வாங்கி சாகாதே—உண்மையைச் சொன்னுல் உயிர் பிழைப்பாய்! இல்லே; அதோ அந்த தாமரைக் குளத்திலே உன் பிணம் மிதக்கும்! ஜாக்கிரதை!"

"அப்பாடா! அவ்வளவு பெரிய தண்டனையா? அம்பலம்; அப்படியெல்லாம் ஒன்றும் செய்துவிடாதே! இன்னும் ஒரு முப்பது நாற்பது வருஷமாவது ஆனந்தமாக வாழ நான் ஆசைப்படுகிறேன்."

"அப்படியானுல் கக்கு உண்மையை! புதையல் எடுக்கத்தானே வந்தாய்?"

"ஆமாம்!"

"கொடு இப்படி அந்தத் தகட்டை!"

மாயாண்டி, தன் கையிலுள்ள தகடுகளை அம்பலத்திடம் கொடுத்துவிட்டு நடுங்கியபடி பேச ஆரம்பித்தார்:

"அம்பலம்! கொஞ்சப் பொருளல்ல; எழுபது கோடி பசும்பொன் இருக்கிறது! முழுவதும் வைத்து என்னுலும் நிர்வகிக்க முடியாது. நாம், ஆளுக்குப் பாதி எடுத்துக் கொள்வோம். எனக்கு நீ உயிரும், பாதிப் பொன்னும் கொடுத்தால் போதும். எல்லா ரகசியங்களையும் சொல்லி விடுகிறேன். அந்தத் துரையென்று ஒரு பயல். அவன் எனக்குத் துணைக்கு வருகிறேன் என்றுன். ஆள் போன இடமே தெரியவில்லே; அயோக்கிய இளைஞன்! இதோ, இந்தத் தகடு இருக்கிறதே; இதுதான் புதையலைக் கண்டு பிடிக்கும் முதல் வாயிற்படி! இதன் உதவியைக் கொண்டுதான் இந்த இரண்டாவது தகட்டை கோயிலுக்குள்ளே எடுத்தேன். இதில் கண்டுள்ள குறிப்பின்படி, இப்போது இந்த இடத்தைத் தோண்டவேண்டும். இங்கே புதையல் கிடைத்தாலும் கிடைக்கலாம். அந்தத் தகடு நிச்சயமாக, எழுபது கோடி பசும்பொன்னை நமக்குக் காட்டிவிடும்."

"அப்படியா! இதோ, இங்கே வெட்டச் சொல்லு கிறேன்! டேய்; ஆரம்பமாகட்டும்" என்று அம்பலம் ஆட்களுக்குக் கட்டளையிட்டார்.

ஆட்களின் அதிதிவிர சுறுசுறுப்பால் வெகு வேக மாக அந்த இடத்திலே பூமி குடையப்பட்டது. அம்பலமும், மாயாண்டியும் ஏதாவது சப்தம் வருகிறதா என்று கவ னித்துக்கொண்டே நின்றனர்.

"டணர்" என்று ஒரு பெரிய ஒலி கிளம்பிற்று. ஆட் கள் மண்ணை அள்ளிவிட்டு குழிக்குள்ளேயிருந்து ஒரு பெரிய பெட்டியைத் தூக்கினர்கள். பழைமையடைந்து போன ஒரு பித்தளைப் பெட்டி! அதை அம்பலம் திறந் தார். திறக்க முடியவில்லை. கோடரி ஒன்றினல் அதை உடைத்தார். அந்தப் பெட்டிக்குள்ளே இன்னெரு சிறிய பெட்டியிருந்தது. அதையும் திறந்தார். அதற்குள்ளே ஒரு தகடுச் சுருள் காணப்பட்டது. அதை அம்பலம் பிரித்தார். மாயாண்டி படித்தார்.

"இங்கிருந்து நூறு கெஜ தூரத்திலே வெட்டு — எழுபது கோடி பசும்பொன் கிட்டும்!" என்று பெரிய எழுத்துக்களில் எழுதப்பட்டிருந்தது. சிறிய எழுத்துக்களில், வெட்ட வேண்டிய இடத்திற்கான எல்லைக் குறிப்புகள் எழுதப்பட் டிருந்தன. திசையையும், அளவையும் காட்டுகிற கோடு கள் வரையப்பட்டிருந்தன.

"என்ன செய்யலாம்?" என்று அம்பலம் கேட்டார்.

"இது இன்று இரவுக்குள் யோசித்து முடிவு செய்கிற விஷயமல்ல; நாளைக்கு முயற்சிப்போம" என்று மாயாண்டி பதில் கூறினர்.

"நீர் எங்கும் ஓடிவிட்டால்?" என்று சந்தேகத்தோடு அம்பலம் கேட்டார்.

"எப்படி ஓடுவது? இந்தத் தகடுகளை எல்லாம் விட்டு விட்டு ஓடுவேனே? அம்பலம் என்னை ஏமாற்றுமல் இருந்தால் அது போதும் ஆண்டவனே!" என்று மாயாண்டி பெருமூச்சு விட்டார்.

"சரி, வீட்டுக்குப் போவோம்" என்று அனைவரும் அதைவிட்டுப் புறப்பட்டார்கள்.

42

அவர்கள் வீடு திரும்புவதவற்குள்ளாக கிடைத்த அந்த நேரத்தைப் பயன்படுத்திக்கொள்ள மேனகா எவ்வளவோ முயன்றாள். முடியவில்லை. மேனகாவின் முயற்சி வெற்றி பெறுகிறதா என்று பார்ப்பதற்காகவே மலையாள பகவதி குறட்டை விட்டுத் தூங்குவதுபோல நடித்தான். ஜன்னலண்டை நின்று துரையை அழைத்து அழைத்து அலுத்துப் போனாள் மேனகா. என்ன இருந்தாலும் இவனை ஜெயிக்காமல் விடுவதில்லை — என்ற முடிவோடு மேனகா தன் படுக்கையறைக்குப்போய் கட்டிலிலே தொப்பென்று விழுந்தாள். துரையும் தூங்காமல் புரண்டுகொண்டேயிருந்தான். சுவரோரத்தில் உருண்டுகிடந்த மலையாள பகவதியின் குறட்டை சப்தம் வேறு அவனுக்கு இடையூறாக இருந்தது. மலையாள பகவதி குறட்டை விடுவதோடு நிற்கவில்லை; புரளவும் ஆரம்பித்தான். பாவம்; அவனுக்கு கலகலப்பாக புரண்டு தூங்குவதற்கு நீளமான தாழ்வாரமே வேண்டும் போலும்! இப்படியும் அப்படியும் புரளாமல் ஒரே திக்கில் உருண்டு வந்துகொண்டேயிருந்தான். 'நல்ல காலம் பொறக்குது' என்ற அவனது குடுகுடுப்பைப் பல்லவியையும் தூக்கத்திலே புலம்பிக்கொண்டு புரண்டான்.

துரை, அவன் புரளுவதற்கு இடங் கொடுத்துவிட்டு, சுவரோரமாக ஒதுங்கிப் படுத்துக் கொண்டான். சிறிது

நேரத்திற்கெல்லாம் அவனது கண்களை அசதி அணைத்துக் கொண்டது. தூக்கத்தின் முதல் வாயிற் படியிலே நுழைந்துவிட்டான். அவனது கன்னத்திலே எச்சில் பட்டதுபோல் ஒரு உணர்ச்சி — தூக்கக் கலக்கத்தோடு கன்னத்தைத் தடவிப் பார்த்தான். கன்னம் லேசாக ஈரமாகியிருந்தது. திரும்பிப் பார்த்தான். அவனுக்கு அருகாமையிலே, பகவதி குறட்டைவிட்டுக் கொண்டிருந்தான்.

"அடப்பாவி! உனக்கு இந்த வீடே போதாது போலிருக்கே" என்று முணு முணுத்துக் கொண்டே, துரை இன்னொரு பக்கம் போய்ப் படுத்தான். மீண்டும் தூங்க ஆரம்பித்தான். கன்னத்திலே ஏதோ விழுந்தது போலிருந்தது. ஆம்; அரைத் தூக்கத்திலே ஒரு சிறு கனவு! இரண்டு ரோஜாப் பூக்கள் கன்னத்தில் விழுந்ததுபோல இருந்தது. அவைகளை எடுக்க கன்னத்தில் கை வைத்துப் பார்த்தான். பூக்கள் இல்லை. கன்னம் ஈரமாக இருந்தது. மேலே கூரையைப் பார்த்தான். ஏதாவது பல்லி, கில்லி என்று சந்தேகத்தோடு திரும்பினன். அருகே புரண்டு கிடந்தான், மலையாள பகவதி.

துரைக்குச் சிரிப்பும் ஆத்திரமும் பொங்கியது. "என்னடா இது மிருகம் மாதிரி புரளுகிறாய்?" என்று அதட்டிக் கொண்டே பகவதியை பலங்கொண்ட மட்டும் தள்ளிவிட்டான். பகவதியோ, தூக்க போதையோடு, ஏதோ புலம்பியவாறு வேறு பக்கம் உருண்டான். துரை, கண்களை இறுக மூடிக்கொண்டு தூங்குவதற்கு ஆயத்தம் செய்தான். பகவதி அருகே புரண்டு வருவது தெரிந்தது. அசையாமல் இருந்து கவனித்தான். புரண்டுவந்த பகவதி மெதுவாக எழுந்து ஜன்னல் கதவுகளை சாத்தினன். துரைக்கு சந்தேகம் பிறந்தது. என்ன நடக்குமோ என்று ஆவலோடு எதிர்பார்த்தான். பகவதி தன் இடுப்பிலே மறைத்து வைத்திருந்த ஒரு பளபளப்பான கத்தியை

எடுத்து தரையிலே வைத்தான். துரைக்கு நடுக்கம் அதிகமாயிற்று. கத்தியைக் கைப்பற்றிவிடலாமா என்று யோசித்தான். தன் உயிருக்கு பகவதியினால் ஆபத்து விளையப் போகிறது என முடிவு செய்து கொண்டான்.

பகவதி, அம்பலத்தின் ஏற்பாடாக இருக்கவேண்டும். — அல்லது, தன்னை ஒழித்துவிடக் கங்கணம் கட்டி வந்திருக்கும் பாதகனை இருக்கவேண்டும். இதயத்திலே புயல் தாக்கிற்று. இன்னும் ஒருவிடி தாமதித்தாலும் இறப்பது நிச்சயம் — இதை நினைத்தான் துரை. நினைவின் இடையிலேயே தரையில் கிடந்த கத்தியின்மீது பாய்ந்தான். அதைத் தன் கையிலே எடுத்துக் கொண்டு பகவதியின் முன்பு வீராவேசமாக நின்றான்.

பகவதியோ அசட்டுச் சிரிப்பை வீசிவிட்டு, "இப்போது என்னை என்ன செய்வதாக உத்தேசம்?" என்று கேட்டான்.

"என்னைக் கொல்ல வந்த உன்னை, இறப்புலகம் அனுப்பப் போகிறேன்."

"அப்படியா? அவ்வளவு பெரிய புலியா? எங்கே — கத்தி என் நெஞ்சிலே பாயட்டும் பார்ப்போம்" என்று பகவதி ஆவேசமாகக் கூறிவிட்டு நின்றான். துரையும் கத்தியை ஓங்கியபடி அசையாது நின்றான்.

"உம் — நடக்கட்டும். என் தாமதம்?" என்று கேட்டபடி, பகவதி தன் தாடி மீசைகளை அகற்றினான். உடனே துரை கத்தியை கீழே போட்டுவிட்டு, பகவதியைக் கட்டிக் கொண்டான். "கண்ணே — பரிமளா!" என்று சொன்னதை தெரியாது.

ஆனால் அத்தனை முறையும் அவளிடமிருந்து முத்தங்களைப் பிரதி பலனைகப் பெற்றான். தூங்கும் பொழுது கன்

னத்தை ஈரமாக்கியது யார் என்றும் தெரிந்துவிட்டது அவனுக்கு!

தாங்கள் சிக்கியிருக்கிற இடம் — எதிர்பார்த்து நிற்கிற ஆபத்துக்கள் — இவைகளை யெல்லாம் சில நிமிஷ நேரம் மறந்தார்கள். மீண்டும் நினைவுகள் படிந்த உலகிற்குத் திரும்பிவந்தார்கள்.

அம்பலமும், ஆட்களும் வந்துவிட்ட ஒலி கேட்டது. இருவரும் தனித்தனியே பிரிந்து, ஜன்னலைத் திறந்து விட்டு, ஆளுக்கொரு மூலையிலே தூங்குவதுபோல படுத்துக் கொண்டார்கள்.

அம்பலம் டார்ச் விளக்கை அடித்துப் பார்த்தார். இருவரும் தூங்கிக்கொண்டிருந்தார்கள். பகவதி வேடத்திலேயிருக்கும் பரிமளா மட்டும் தூக்கம் கெட்டுவிட்டது போல விழித்துப் பார்த்தாள். அம்பலம் ஜன்னலண்டை நின்று ஜாடையாக அழைத்தார். பகவதியும் அவரிடம் வந்தான். அவன் அம்பலத்தைப் பார்த்து, "என்ன சாயபு சொன்னது சரிதானு?" என்று கேட்டான்.

"ரொம்ப சரி! ரொம்ப சரி! ஆனை சாயபு! நீ இந்த துரையை விட்டுடக் கூடாது! என்ன, இவனுகிட்டயும் ஏதாவது விஷயம் இருக்கும். என்ன, ஏதாவது முயற்சி பண்ணினையா?"

"பண்ணிகிட்டுத்தான் இருக்கேன். புதையல் கிடைச்சாலும் அதை வச்சு நிர்வகிக்கிற ரகசியம் இவனுகிட்டதான் இருக்குண்ணு பகவதி சொல்ரா! இவன், சாமான்ய ஆளில்லே. நிஜத்தை கக்க மாட்டேங்கிறான். நாலு நாளைக்குள்ளே எப்படியும் இவனுகிட்ட இருக்கிற ரகசியத்தை சாயபு வாங்கித் தர்ரான். அய்யா, நம்பளை மறந்திடக் கூடாது. ஒரு பழைய துணி—பழைய சேலை—வேட்டி..."

"ஏய் சாயடி! அதெல்லாம் நிறையத் தர்ரேன். நீ காரியத்தை ஜெயமா முடி!"

இதைச் சொல்லிவிட்டு அம்பலம் அதைவிட்டு நகர்ந்தார். துரை, பரிமளாவை நெருங்கினான். அவள் மீண்டும் ஜன்னல் கதவுகளை சாத்தினாள். அம்பலம், படுக்கையறையிலே சுருண்டு கிடக்கும் மேனகாவின் கன்னத்தைத் தன் முரட்டு விரல்களால் கிள்ளி, அவளை எழுப்பிவிட்டார்.

அவளிடத்திலே, புதையல் கிடைப்பதற்கான அறிகுறிகள் தென்பட்டுவிட்டதைக் கூறி மகிழ்ந்தார். சரியான படி மாயாண்டிக் கிழவன் சிக்கிக்கொண்டான். துரையிடம் புதையல் சம்பந்தமாக மிச்சமிருக்கிற ரகசியங்களையும் குடுகுடுப்பை பகவதி கிரகித்துக் கொடுத்துவிடுவான். புதையல் அகப்பட்டதும், மாயாண்டிதான் முதல் பலி! இரண்டாவது பலி, துரை! மூன்றுவது பலி, மலையாள பகவதி!

இவர்கள் மூவரையும் உயிரோடு விடக்கூடாது! ஏனென்றால் இவர்கள் மூவருக்கும் புதையல் பற்றிய ரகசியங்கள் தெரியும். நம்மைக் காட்டிக்கொடுத்து விடுவார்கள். நல்லவேளை, அந்தப் பயல் துக்காராமை சிறையில் பூட்டிவிட்டார்கள். ஒருவேளை அவன் விடுதலையாகி வந்தாலும் அவனையும் விடக்கூடாது! எப்படியும் நாலு கொலை தவிர்க்க முடியாததாகி விட்டது!

அம்பலத்தின் பயங்கரமான திட்டங்களைக் கேட்பதற்கே மேனகா பயந்தாள். "நாலு உயிர்களைப போக்கி விட்டு, நாம் மட்டும் வாழவேண்டுமா? இப்படி ஒரு பயங்கர ஆசை எற்படுவது நியாயமா? தேன் எடுப்பதற்காக ஆயிரக் கணக்கான தேன் பூச்சிகளைக் கொல்லுவார்கள். நீங்களோ, புதையல் எடுப்பதற்காக மனிதர்களைப் பிணமாக்குகிறேன் என்கிறீர்கள்! அந்த மனிதப் பூச்சிகள் உங்களுக்கு என்ன தீங்கு செய்தன?" — இப்படியெல்லாம்

கேட்கவேண்டும் போலிருந்தது அவளுக்கு! ஆனல் கேட்கவில்லை! கேட்டால் அவளும் அந்தப் பிண வரிசையிலே இடம் பெற நேரிட்டாலும் அதில் ஆச்சரியமில்லை! மேனகா, மனம் புழுங்கியவாறு அம்பலத்தின் அகன்ற மார்பிலே சாய்ந்திருந்தாள். கரடு முரடான மலைப் பாறையிலே தாமரை மலர் ஒன்று கிடப்பதுபோல காட்சியளித்தது அவள் முகம். அறையிலே பூட்டப்பட்டிருக்கும் துரையின் அழகான மேனியை நினைவுக் கரங்களால் தழுவியபடி, அவள் அம்பலத்தின்மீது சாய்ந்து கிடந்தாள். அவளது கண்ணீரை, ஆனந்தக் கண்ணீராக எண்ணிக் கொண்டு, தனது 'நீக்ரோ உதடு'களால் அவளது கன்னத்தைத் தடவிக் கொடுத்தார், அம்பலம்!

"நாளைக்குப் பொழுது விடிந்தால், என்னென்ன நடக்குமோ?" என்ற எண்ணங்களை மேய விட்டுக்கொண்டு, அம்பலத்து வீட்டுத் திண்ணையிலே காவல்காரர்கள் புடைசூழ படுத்திருந்தார் மாயாண்டி! பொழுது விடிந்தது. தகட்டுச் சுருளிலே குறிப்பிட்டிருந்த திசை நோக்கி, அம்பலமும், மாயாண்டியும் சென்றார்கள். அந்தக் குறிப்பு, அவர்களை அங்குள்ள பள்ளிக்கூடத்து வாசலிலே கொண்டுபோய் நிறுத்தியது. தகட்டிலே குறிப்பிட்ட இடத்தை கோடுபோட்டுக் குறித்துக்கொண்டார்கள்.

"இங்கே வெட்டினல், ஊராருக்குத் தெரிந்துவிடுமே" என்று அம்பலம் சந்தேகப்பட்டார்.

"பள்ளிக்கூடத்தின் தண்ணீர் வசதிக்காக கிணறு வெட்டப் போகிறோம் — என்று சொல்லிவிட்டு, நமது காரியத்தை முடித்துக் கொள்ளலாம்" என்று மாயாண்டி யோசனை கூறினர்.

"பேஷான யோசனை! அப்படியே செய்வோம்!" என்று அம்பலமும் தலையசைத்தார்.

"பள்ளி மாணவர்களுக்காக, அம்பலம் கிணறு வெட்டப்போகிறார். தர்ம காரியத்தில் ஈடுபட்டுவிட்டார்" என்று ஊரார் பேச ஆரம்பித்தனர். ஆட்கள் கூடினர். அகலமும் ஆழமுமான கிணறு தோண்டப்பட்டது. ஒரே நாளில் கிணறு! மறுநாள் கல்வைத்துக் கட்ட ஆரம்பிக்க வேண்டும். தோண்டத் தோண்ட தண்ணீர் ஊறுகிறதே தவிர, புதையலுக்கு அடையாளம் எதுவுமில்லையே என்று அம்பலம் அங்கலாய்த்துக்கொண்டார். "இன்று இதோடு இருக்கட்டும். இரவு வருவோம், யாருக்கும் தெரியாமல் பரிசோதனை செய்வோம்" என்று மாயாண்டி ஆலோசனை வழங்கினர். ஊர்மக்கள் எல்லாம் படைதிரண்டு வந்து, தர்ம காரியமாக வெட்டப்படும் கிணற்றைப் பார்த்து மகிழ்ந்தார்கள். அம்பலத்தின் கைங்கர்யத்தையும் பாராட்டினர்கள். அம்பலமும், மாயாண்டியும் ஒருவருக்கொருவர் பார்த்துக்கொண்டு ஜாடையாக சிரித்தனர். அந்த சிரிப்பின் அர்த்தம், ஊர் மக்களுக்கு எப்படித் தெரியும்?

இரவு எப்போது வரும் என்று காத்திருந்த அம்பலம், மாயாண்டியுடன் பள்ளிக்கூடப் பக்கம் புறப்பட்டார். அவர் எப்போது வீட்டைவிட்டு வெளியே போவார் என்று எதிர் பார்த்திருந்த மேனகாவும், துரையிருக்கும் அறையின் ஜன்னலண்டை வந்து சேர்ந்தாள். துரை, மேனகாவை வரவேற்றான். அது அவளுக்கே ஆச்சரியமாக இருந்தது. கடுகடுப்பாக இருக்கும் அவனது முகம் மாறியிருப்பதை மேனகா உணர்ந்து மகிழ்ந்தாள். தான் ஜெயித்துவிட்ட தாகக் கருதி கர்வமடைந்தாள். அப்போது மலையாள பகவதியும் ஜன்னலண்டை வந்து சேர்ந்தான், "நல்லகாலம் பிறக்குது!" என்று கூவியபடி!

"சின்னம்மா! நீ ஜெயிச்சுட்டே! சாயபு வாக்கு பலிச்சுது! அய்யாவுக்கு உன் மேல இஷ்டம் வந்தாச்சு! சாயபு விடுவாரு அய்யாவை!" என்று அளந்தான் பகவதி.

மேனகா, "உண்மையாகவா?" என்று கேட்டாள்.

துரை, "ஆமாம்" என்று தலையசைத்தான். மேனகா வுக்கு உற்சாகம் தாங்க முடியவில்லை.

"இன்றிரவே நாமிருவரும் வெளியேறி விடுவோமா?" என்று கேட்டாள்.

"நிச்சயமாக — என்னையும் சேர்த்து அழைச்சிகிட்டுப் போங்க சின்னம்மா, உங்க குழந்தை குட்டிகளுக்கு புண்ய முண்டு!" என்று கெஞ்சும் தோரணையில் பேசினாள் பகவதி வேடப் பரிமளா!

"ஆகா, என் வாழ்வில் புதிய திருப்பம் வந்தது! பூரிப்பு வந்தது! விடுதலை, விடுதலை! மலையாள பகவதி, நீ வாழ்க! இருங்கள்; அவர் வரட்டும்; அவரிடமிருந்து சாவியைக் கைப்பற்றி, நாமெல்லாம் ஓடிவிடுவோம். நானும் பயணத்திற்கானவைகளைத் தயார் செய்கிறேன். ஏராளமான நகை நட்டு பணமெல்லாம் இருக்கிறது. அதையெல்லாம் எடுத்து இப்போதே மறைத்து வைக்கிறேன்" என்று தாங்காத சந்தோஷத்தோடு கூறிவிட்டு, மேனகா குதித்துக்கொண்டு ஓடினாள். இங்கு பரிமளாவின் கன்னம் ஈரமானது!

43

தண்ணீர் எவ்வளவு ஊறியிருக்குமோ — தன் முயற்சிக்குத் தடையாக ஆகிவிடுமோ — என்றெல்லாம் கிணற்றைப் பற்றிய ஆராய்ச்சியில் இறங்கிய அம்பலம், மாயாண்டியுடன் பள்ளிக்கூட வாசலுக்கு வந்து சேர்ந்தார். ஆவலோடு கிணற்றை எட்டிப் பார்த்தார்.

கிணற்றிலே ஊறியிருக்கும் கலங்கிய தண்ணீரிலே அவரால் எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை. கடைசியாக

மாயாண்டி கிணற்றில் இறங்கிப் பார்ப்பதாக முடிவாயிற்று. அவரது இடுப்பிலே ஒரு கயிறு கட்டப்பட்டு அது மேலேயுள்ள ஒரு மரத் துண்டில் முடிந்து வைக்கப்பட்டது. அம்பலத்தின் உதவியோடு மாயாண்டி கிணற்றுக்குள் இறங்கினர். மேலிருந்தவாறு அம்பலம், மாயாண்டியின் ஒவ்வொரு அசைவையும் பரபரப்போடு கவனித்துக்கொண்டிருந்தார்.

சிறிது நேரத்திற்கெல்லாம் மாயாண்டி, "வெற்றி! வெற்றி!" என்று கத்தினர்.

அம்பலம், "ஆகா! அப்படியா!" என்று கிணற்றுக்கு மேலே கூத்தாடினர்.

மாயாண்டி, கிணற்றிலே இரும்புச் சங்கிலி பிணைக்கப்பட்ட ஒரு பெட்டியிருப்பதாகக் கத்தினர். உடனே அம்பலம் அதைத் தூக்குவதற்குத் தானும் இறங்க ஆரம்பித்தார்.

உடனே மாயாண்டி, "வேண்டாம் — வேண்டாம்! சிறிய பெட்டிதான் — நானே எடுத்து வருகிறேன்" என்று கூவினர்.

"இதோ இன்னொரு கயிறு அனுப்புகிறேன்—அதிலே கட்டிவிடு! நான் பெட்டியை மேலே இழுத்து விடுகிறேன்" என்றார் அம்பலம்.

அதற்கு மாயாண்டிக் கிழவர் சிரித்துக்கொண்டே, "என் — பெட்டியைக் கயிறு மூலம் எடுத்துக்கொண்டு, என்னைக் கிணற்றுக்குள் வைத்து மூடிவிடலாமென்று உத்தேசமோ? முடியாது; முடியாது; நானே எடுத்து வருகிறேன்!" என்று கிண்டல் செய்தார்.

"அடக் கிழவா! உமது பங்கு உமக்குத் தரப்படும் அய்யா! பயப்படாதீர்!" என்று அம்பலம் தாங்கமுடியாத

மகிழ்ச்சியோடு குதித்தார். கிழவரும் பெட்டியுடன் கிணற்றுக்கு மேலே வந்து சேர்ந்தார்.

இரும்பாலான கனமான சிறிய பேழை; மெலிந்த சங்கிலியால் இணைக்கப்பட்டிருந்தது. மிகவும் கஷ்டப்பட்டு அம்பலம் அதைத் திறந்தார். அதற்குள்ளேயும் ஒரு பளபளப்பான தகடு இருப்பதைத்தான் அவர்கள் கண்டார்கள். மாயாண்டிக் கிழவர், "சரிதான் போ!" என்று அலுத்துக்கொண்டு உதட்டைப் பிதுக்கினர். "புதையலைத் தேடினு ஒரே தகடா கிடைக்குதே" என்று அவர் முணுமுணுத்தார்.

அதைக்கண்ட அம்பலம் "அதற்குள் அசந்துவிடலாமா? முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்! அதிருக்கட்டும்; இதைப் படிக்கலாம்" என்று தகட்டை மாயாண்டியின் கையிலே கொடுத்தார்.

கிழவரும் அந்த எழுத்துக்களைப் படிப்பதற்கு மிகவும் கஷ்டப்பட்டு, கடைசியிலே ஒருவாறு படிக்க ஆரம்பித்தார். அதிலேயிருந்த வாசகம் இதுதான்:

"புதையல் இங்கே இருக்கிறது. திருமணமான தம்பதிகளை திருமண தினத்தன்றே கொலை செய்து, அந்த ரத்தத்தை இந்த இடத்தில் தெளித்தால், புதையல் வெடித்துக் கிளம்பும்."

இதைப் படித்து முடித்ததும், மாயாண்டிக் கிழவர் "அய்யோ — என்ன அக்கிரமம்! தம்பதிகளைக் கொலை செய்ய வேண்டுமா? அப்படிப்பட்ட புதையல் நமக்கு வேண்டவே வேண்டாம்!" என்று அலறினர்.

"கல்யாணமான உடனே கொலை செய்வதற்குத் தகுந்தபடி தம்பதிகள் எங்கே அய்யா கிடைப்பார்கள்?" என்று அங்கலாய்த்துக்கொண்டார், அம்பலம்.

அதைக் கேட்ட கிழவர், "ஓகோ! பலிக்கு ஆட்களைத் தேடவே ஆரம்பித்து விட்டீரா? வெள்ளியம்பலம்! சொல்

வதைக் கேளும். இவ்வளவு கொடுமையான காரியத்தைச் செய்து இந்தப் புதையலே எடுக்கவேண்டாம். நம் பேராசைக்காக யாரோ இரு பருவ மலர்கள் தங்கள் உயிரை இழப்பதா? கொடுமை! கொடுமை! எனக்குப் புதையலும் வேண்டாம் — ஒண்ணும் வேண்டாம்" என்று உறுதியாக உரைத்தார்.

"நீ ஒரு கோழைக் கிழவனய்யா! கொலை என்றால் இப்படிப் பயப்படுகிறீரே! கோடீஸ்வரனே ஆகப் போகிறோம் — இதையெல்லாம் நினைத்துப் பயந்தால் காரியம் நடக்குமா?" என்று அம்பலம் எரியம் கூற ஆரம்பித்தார்.

கிழவர் கடைசி வரையில் உறுதியாக நின்று மறுத்துப் பார்த்தார். முடியவில்லை. அம்பலத்தின் தீர்மானத்திற்கு இணங்கித் தீரவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

"எங்கே போய் புதிய தம்பதிகளைக் கல்யாண மேடையிலேயே கண்டுபிடித்துக்கொண்டு வருவது!" என்ற யோசனையோடு அம்பலம் குழம்பிக்கொண்டிருந்தார். இருவரும் வீடு நோக்கித் திரும்பினர்கள்.

* * * *

அம்பலம் அறைக்குள் நுழைவதைக் கண்ட மேனகா, அயர்ந்து தூங்குவதைப்போல் பாசாங்கு செய்தாள். அம்பலமும் அவளை எழுப்பும் எண்ணமின்றி, புதையலிலேயே தன் மனம் முழுதும் அலைய விட்டுக்கொண்டே படுத்தார். சாவிக் கொத்தை எங்கே வைக்கிறார் என்பதை மட்டும் மேனகா கவனமாகப் பார்த்துக்கொண்டாள்.

திருமணத் தம்பதிகள் — திருமணத் தம்பதிகள் — இந்த வார்த்தைகளையே அம்பலத்தின் வாய் மெதுவாக முணுமுணுத்துக் கொண்டிருந்தது. திடீரென அவருக்கு ஒரு யோசனை தோன்றியது.

"துரை நம்மிடந்தானே இருக்கிறான். அவனுக்குத் திருமணம் செய்துவைத்து காரியத்தை முடித்துவிட்டால் என்ன?" — இப்படி நினைவுச் சுழல்!

"திருமணம் என்றால் ஒரு பெண்ணும் வேண்டுமே — அதற்கு எங்கே போவது? அப்படியே இருந்தாலும் மாப்பிள்ளை, பெண் — சம்மதங்கள் இருந்தால்தானே திருமணத்தை சுமுகமாக முடித்து, காரியத்தையும் சுலபமாக நிறைவேற்றிக் கொள்ளலாம்?" — இப்படிக் கேள்விச் சரங்கள்!

"அய்யோ — அந்தப் பரிமளா ஓடாமல் இருந்தாலும் இப்போது அவளுக்கும் துரைக்கும் திருமணத்தை நடத்தி நம் எண்ணத்தை ஈடேற்றிக் கொள்ளலாமே!" — இப்படியெல்லாம் சிந்தனைப் புயல்கள்!

வெள்ளியம்பலம் குழப்பத்தின் எல்லை வரையில் போய்ச் சேர்ந்தார். தூங்குவதற்குக் கண்ணை மூடினால் — திருமணம் நடப்பது போலவும், அந்தத் தம்பதிகள் முதல் இரவு சந்திப்புக்கு முன்பே கொலை செய்யப்படுவது போலவும், அவர்களது இரத்தத்தை கிணற்றில் தெளிப்பது போலவும், கிணறு வெடித்து தவலை தவலையாக — பாளம் பாளமாக — தங்கக் கட்டிகள் சிதறுவது போலவும், காட்சிகள் அடுக்கடுக்காய் நகரத் தொடங்கின. சாவிக் கொத்துக்காகக் காத்திருந்த மேனகாவும், அம்பலம் சிறிது அயர்ந்திருக்கும் சமயமாகப் பார்த்து, அதைக் களவாடிக் கொண்டு அறையைவிட்டு பூனைபோல் வெளியேறினாள்.

*　　*　　*　　*

தங்கள் அறையின் கதவு திறக்கப்படுவதை அறிந்த துரையும், மலையாள பகவதியும் ஒருவரைவிட்டு ஒருவர் விலகித் தயாராக நின்றுகொண்டிருந்தனர். கதவு திறக்கப்பட்டது. மேனகா, கையிலே ஒரு அழகிய சிறு பெட்டி

யுடன் உள்ளே வந்து, "ம் — சீக்கிரம் சீக்கிரம்!" என்று துரையிடம் அவசரப்படுத்தினள். துரையும் அவள் பின்னே மெதுவாக நடக்க ஆரம்பித்தான். மலையாள பகவதியும் அவர்களோடு புறப்பட்டான். கொல்லைக் கதவைத் திறந்துகொண்டு மூவரும் கொல்லைப்புறம் வந்துசேர்ந்தார்கள். மூவரும் ஆழ்ந்த பெருமூச்சுக்களால் தங்கள் இதய ஆசைகளைக் காட்டிக்கொண்டனர். கொடூரம் நிறைந்த சிறைச் சாலையில் ஆயுள் தண்டனை பெற்ற கைதியாக அடைபட்டிருந்த மேனகா, தனக்குக் கிடைக்க இருக்கிற விடுதலையை நினைத்துத்தானே என்னவோ, சுவாசப்பைகளின் ஆழத்திலிருந்து, அவ்வளவு நீளமான பெருமூச்சை வெளிப்படுத்தினள். கொல்லைப்புறத்துச் சுவரைத் தாண்டியாகவேண்டும். தனக்குத்தான் நன்றாக வழி தெரியுமென்றும், தானே முதலில் சுவற்றில் ஏறி வழி காட்டுவதாகவும் கூறினள், மேனகா. துரையோ, தானும், அதன் பிறகு மலையாள பகவதியும், கடைசியாக மேனகாவும் சுவரைத் தாண்டவேண்டுமென்று திட்டம் வகுத்தான்.

அந்தத் திட்டப்படி முதலும் இரண்டாவதுமாக சுவரேறிக் குதிக்கும் துரையும், மலையாள பகவதியும், மேனகாவைத் தங்கள் பின்னே வரவொட்டாமல் தடுத்து ஓடிவிடலாம். மேனகாவையும் ஒரு தவறிலேயிருந்து காப்பாற்றலாம். திட்டப்படியே சுவற்றில் முதலில் துரை ஏறினான். வீட்டுக்குள்ளே ஏதோ சப்தம் கேட்டது போலிருந்தது. மலையாள பகவதி கொல்லைப் பக்கமுள்ள ஒரு புதரில் நன்றாக மறைந்துகொண்டாள். மேனகா, துரை சுவற்றில் ஏறுவதற்கு உதவி செய்துகொண்டிருந்தாள். துரை பாதிச் சுவர் ஏறிவிட்டான். கொல்லைவாசல் பக்கமிருந்து "அடேய்!" என்ற அம்பலத்தின் குரல் கேட்டது. மேனகா திரும்பினள் திடுக்கிட்டு!

அம்பலம் துரையை நோக்கி ஒரு பளபளப்பான கத்தியை ஆவேசத்தோடு வீசினர். துரையின் முதுகுப் புறம் வீசிய அந்தக் கத்தியை மேனகா பாய்ந்து தடுத் தாள். கத்தி, மேனகாவின் நெஞ்சிலே பாய்ந்து தொத்திக் கொண்டது. மேனகா, அலறியபடி கீழே விழுந்தாள். தூங்கிக்கொண்டிருந்த காவற்காரர்கள் விழித்துக்கொண் டனர்.

அம்பலம், மேனகா விழுந்த இடத்திற்கு ஓடிவந்தார். துரையையும் காவற்காரர்கள் பிடித்துக்கொண்டார்கள். நிலைமையின் நெருக்கடியை உணர்ந்துகொண்ட மலையாள பகவதி, புதரிலிருந்து மெதுவாக நழுவி, வீட்டுக்குள்ளே ஓடி, துரை அடைபட்டிருந்த அறையிலே படுத்துக் கொண்டு தூங்குவதுபோல் நடிக்க ஆரம்பித்தாள். அவள் இருதயத் துடிப்புகளை அவளால் அடக்கவே இயலவில்லை. இன்னும் என்ன நடக்குமோ என்ற அச்சம் அவளைக் கப் பிக்கொண்டது. துரையை இழுத்துவந்து அறைக்குள்ளே தள்ளினர்கள். "குடுகுடுப்பைக்காரன் இருக்கிறானா?" என்று கேட்டபடி அம்பலம் உள்ளே பார்த்தார். அவன் தான் அயர்ந்து கொரட்டை விட்டுத் தூங்குகிறானே!

"சரி! குடுகுடுப்பைக்காரனை இவனோடு வைக்காதே! அவனை வேறு அறையில் போடு! துரையை இந்த அறை யிலேயே போடு!" என்று ஜெயிலர், வார்டர்களுக்கு உத் தரவிடுவது போல, அம்பலம் தன் ஆட்களுக்கு கட்டளை யிட்டார்.

துரை அந்த அறையிலே பூட்டப்பட்டான். குடுகுடுப் பைக்காரனை தூக்கத்தோடு எழுந்து நடக்கவைத்து வேறு அறைக்குக் கொண்டுபோனார்கள். அவன் அதிக தூக்கத் தில் தள்ளாடுவதுபோல, விழுந்தும் எழுந்தும் அவர்க ளோடு போனான். அவனும் ஒரு அறையில் அடைக்கப் பட்டான்.

ரத்தக் குளத்திலே நீந்துவதுபோல மேனகா கிடந்தாள். அவளைத் தூக்கி படுக்கையிலே கிடத்தினர்கள். உயிர் ஊசலாடிக்கொண்டிருந்தது. வாழ்க்கையிலே புதுமை காண நினைத்த அந்த எழில் மலர், கருகும் நிலையிலே காணப்பட்டது. நெஞ்சிலேயிருந்து பெருகும் உதிரத்தை, அவள் கண்களிலேயிருந்து பெருகும் கண்ணீர் தோற்கடித்தது. அவளைச் சூழ்ந்து அம்பலமும் ஆட்களும் நின்றுகொண்டிருந்தார்கள். வாழ்விலே மாற்றம் — இருட்டிலேயிருந்து ஒளியுலகிற்கு விடுதலை — இவைகளை விரும்பினாள் மேனகா! ஆனால் விடுதலை வேறு ரூபத்திலே வருவதற்குக் காத்திருந்தது.

44

எப்படியும் மேனகா இறந்துவிடுவாள்; அப்படி இறந்துவிட்டால், அவள் கத்தி பாய்ந்து செத்தாள் என்பது ஊரிலே பரவிவிடும். பரவிவிடுமேயானால், தான் போலீசில் சிக்கிவிட நேரிடும் — என்று அம்பலம் அச்சங் கொண்டார். அதன் காரணமாக முன் எச்சரிக்கையாகவே போலீசுக்குத் தகவல் கொடுத்துவிட வேண்டுமென்று முடிவு கட்டினர். வேலைக்கார ராமனை அழைத்து, போராணி போலீஸ் ஸ்டேஷனுக்கு ஓடிப்போய், மேனகா குத்தப்பட்ட செய்தியை சப் இன்ஸ்பெக்டரிடம் தெரிவித்து வருமாறு அனுப்பினர்.

ராமன், அவரிடம் — "மேனகாவை யார் குத்தியது என்று கேட்டால் என்ன பதில் சொல்வது?" என்று சந்தேகம் கிளப்பினான்.

அம்பலம் சிறிது நேரம் யோசித்தார். "என்னடா என்னைக் கேட்கிறாய்? முட்டாளே! உனக்குத் தெரியாதா?

அந்தக் குடுகுடுப்பைக்காரன்தானே அவளைக் கொலை செய்ய முயன்றான்! என்னிடம் வந்து கேட்கிறாயே; போலீஸ் ஸ்டேஷனில் சொல்! கொலை செய்ய முயற்சித்த குடுகுடுப் பாண்டியை இங்கே பிடித்து வைத்திருப்பதாகவும் தெரி வித்து வா!"

அம்பலம் இதைச் சொன்னதும் ராமன் விழித்தான். அவனுக்குத் தெரியும்; அம்பலம்தான் மேனகாவை மரண்ப் படுக்கையில் கிடத்தியிருக்கிறார் என்பது! அய்யோ, பாவம்; அந்தக் குடுகுடுப்பைக்காரன் சிக்கிக்கொண்டானே — என்ற வருத்தத்துடன் எஜமானன் உத்திரவை நிறை வேற்ற அவன் பராஹரணியை நோக்கி ஓடினான்.

நாடியம் மடாலயத்தைத் தாண்டிச் செல்லும்போது மடாலயத்துப் பின்புறமிருந்து, "ராமா!" என்று ஒரு குரல் கேட்கவே, திரும்பிப் பார்த்தான். ஒரு பெண் நின்று கொண்டிருந்தாள். கை காட்டி ராமனை அருகே வருமாறு அழைத்தாள். அவனும் எதுவும் புரியாமல் அவளிடம் வந்தான். அழகான வெள்ளைச் சேலை அணிந்து — நீல கிறத் துணியினால் தலையின் பாதி பாகத்தை மூடிக் கொண்டு — முகத்தையும் மூக்குக்குக் கீழே கருப்பு சல்லாத் துணியால் மறைத்துக்கொண்டிருந்த அந்தப் பெண்ணின் நெளி நெளியான கூந்தல், குதிரைக் குஞ்சம்போல சுருட்டி விடப்பட்டு தொங்கிக்கொண்டிருந்தது. அவளது நெற்றி யும் கண்களும் மட்டுமே தெளிவாகத் தெரிந்தன. கண் களிலேகூட கண்ணாடி அணிந்திருந்தாள் அவள்.

"என்ன ராமா, சௌக்கியமா?" என்று கேட்டுக் கொண்டே அவளும் அவனிடம் நெருங்கி வந்தாள்.

ராமன், நாணிக் கோணி நின்று, "யார் நீங்க? என்னை எப்படித் தெரியும்?" என்று கேட்டுக்கொண்டே குழைந் தான்.

"எனக்கு உன்னை நன்றாகத் தெரியுமே — நீதானே வெள்ளியம்பலத்தின் வேலைக்காரன்?" என்று கேட்டுக் கொண்டே அவள் சிரித்தாள்.

"ஆமாம்; நானேதான்! அடேடே! நீங்க யாரம்மா?"

"என்னது; என்னை அம்மான்னு கூப்பிடுறே! என்னைப் பார்த்தா ஒரு இளம் பெண்ணைத் தெரியிலியா?"

"தெரியுது; தெரியுது. ஆமாம், நீங்க யாரு? என்னை எப்படித் தெரியும்?"

"என் பெயர் **ஷோக்சுந்தரி!** சிலோன் தேசத்தைச் சேர்ந்தவள். நீ அம்பலத்தோடு புதுப்பட்டினம் சந்தைக்கு வரும்போது அடிக்கடி பார்த்திருக்கிறேன். ஆனால் நீ என்னைப் பார்த்ததில்லை. நீ அழகாக நடந்து அன்னம் போல அம்பலத்தோடு போவாய்; நான் ஒதுங்கி நின்று ஓரக் கண்ணால் பார்த்து ஏங்குவேன்!"

"ஏங்குவீங்களா? ஏன்?"

"இது புரியவில்லையா? ஒரு ஆணிடம் ஒரு பெண், இதைவிடப் பச்சையாக எப்படி விஷயத்தை வெளியிட முடியும்?"

"ஓகோகோ; புரிகிறது! ஷோக்சுந்தரி! நீ என்னை....." என்று ராமன் வார்த்தையை இழுத்தான், வலிப்பு வந்தவன் போல!

"ஆமாம் ராஜா! நான் உன்னைக் காதல் செய்கிறேன்" என்று அவள் பதில் கூறி நின்றாள்.

ராமன் அயர்ந்து போய்விட்டான். மெய்மறந்து நின்றான். "என்னை நீ காதலிக்கிறாயா?" என்று அலறினான். அவனையே அவனால் நம்ப முடியவில்லை. அவளோ, அவனைப் பார்த்துக்கொண்டே, "கண்ணாளா! என் கண்ணைக் கேளு; அது சொல்லும்! என் இருதயத்தைக் கேளு; அது சொல்லும்! எங்கே, மனம் திறந்து சம்மதங்கொடு! நாமிரு

வரும் சுகமும் சந்தோஷமும் போல வாழலாமா? சொல்லு கண்ணு!"—இப்படி விரகதாபத்தை வெளியிட ஆரம்பித்து விட்டாள் ஷோக்சுந்தரி!

"இது என்ன ஒரே ஆச்சரியமாயிருக்கு! சொப்பனம் காணுகிறேனே?" — ராமன் கண்களைக் கசக்கியபடி ஷோக் சுந்தரியை ஏற இறங்கப் பார்த்தான். வலிய வந்த அதிர்ஷ் டத்தை எண்ணி எண்ணி மகிழ்ந்தான். "ஆகா! எனக் காக ஒரு பெண்மணி இவ்வளவு நாட்களாகத் தவமிருந் திருக்கிறாளே!" என்று தன்னைப்பற்றித் தானே புகழ்ந் துகொண்டான். அவளது கரங்களை மெதுவாகப் பற்றினான்.

அவளும் அவனை அன்போடு பார்த்து, நாணிக் கோணி நின்றாள். "சத்தியம் செய்து கொடுங்கள்; திரு மணம் செய்துகொள்வதாக!" என்று கட்டாயப்படுத்தி னாள்.

"ஆயிரம் சத்தியம் செய்து கொடுக்கிறேன்!" என்று அவளது கையிலே அடித்துக் கொடுத்தான் ராமன்.

"அப்பாடா! என் ஜன்மம் சாபல்யம் அடைந்தது" என்று பெருமூச்சு விட்டாள். அவளோடு அந்த மடத் தடியிலேயே இருக்க வேண்டும்போல் தோன்றியது ராம னுக்கு!

ஆனாலும் எஜமானனின் கட்டளையை அவனால் மறக்க முடியவில்லை. அவளிடம் விடை பெற்றுக்கொள்வதற்குத் தயாராய்த் தயங்கினான். அவளோ ராமனிடம் பேச்சுக் கொடுத்துக்கொண்டேயிருந்தாள். "பரிமளா எங்கேயிருக் கிறாள்?" என்று அவள் கேட்டதும், ராமனுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"அடேடே! அதுகூட உனக்குத் தெரியுமா? எப்படித் தெரியும்?" என்று அதிர்ச்சியோடு கேட்டான் அவன்.

"எனக்கு உன்னைப்பற்றி விசாரிப்பதேதான் வேலை. அப்படி விசாரிக்கும்போது, பரிமளா என்ற ஒரு பெண்ணை, உங்க எஜமானன் அடைத்து வைத்திருப்பதாக கேள்விப் பட்டேன் கண்ணுளா!" என்று செல்லமாகச் சிணுங்கிக் கொண்டே பேசினாள்.

"அந்தப் பரிமளா ஒரு நாள் என்னையும் ஏமாற்றிவிட்டு ஓடிவிட்டாள். இப்போது அந்தத் துரையைக் கொண்டு வந்து அடைத்து வைத்திருக்கிறேரும்". என்று வீரப் பிர தாபத்தோடு செய்தியை வெளியிட்டுக்கொண்டே அவ ளது கன்னத்தைக் கிள்ளுவதற்காக முயன்றான். அவள் நல்ல உயரமாக இருந்ததாலும், ராமன் சரியான குள்ள மானபடியாலும் அவனுக்கு அவள் கன்னம் எட்டவில்லை. உதவிக்கு ஒரு கல்மீது ஏறிக்கொண்டான்.

துரை அடைபட்டிருப்பதைக் கேள்வியுற்ற ஷோக் சுந்தரியின் முகம் மாறிற்று. அந்தத் திடீர் மாறுதலை ராமன் கவனிக்கவில்லை. அவன்தான் காதல் போதையில் கட்டுண்டு தவிக்கிறானே; பாபம்! துரை எப்படி அடை பட்டான்; எதற்காக அடைபட்டான்? — என்பவைகளை எல்லாம் அவள் ராமனைக் கிண்டிக் கிண்டிக் கேட்டாள். புதிய போதையில் ஆழ்ந்து கிடந்த அவன், காரணங்கள் எதுவும் சரியாகத் தெரியாது என்று உளறியதோடு, மேனகாவை அம்பலம் வெட்டிவிட்டு, அந்தப் பழியை ஒரு குடுகுடுப்பைக்காரன் மீது போடப் போவதையும், அதற் காகவே தான் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போவதையும் அவளிடம் கூறினான். ஷோக்சுந்தரி, ராமனின் மடியில் சாய்ந்தபடியே அவனிடமிருந்து துரை பற்றியும்—மேனகா, குடுகுடுப்பைக்காரன் பற்றியும் ஓரளவு விஷயங்களைத் தெரிந்துகொண்டாள்.

ராமனை, அவள் யார்? திடீரென்று தன்மீது பிரியங் காட்டக் காரணம் என்ன? — என்பவைகளைப்பற்றிய

ஆராய்ச்சியில் ஈடுபட நேரமின்றி ஒடிந்து கிடந்தான். வலு விலே கிடைத்த வாய்ப்பை இழக்க அந்த வாலிபனுக்கு மனமில்லையென்றாலுங்கூட, எஜமானனின் கட்டளைப்படி போலீஸ் ஸ்டேஷனுக்குப் போக நேரமாகிவிட்டதை உணர்ந்து அவளிடம் விடை கேட்டான்.

அவளோ ஊடல் புரிந்து நின்றாள். "நீங்கள் பிரிகிறீர்கள். எனக்கு அழுகை தாங்க முடியவில்லை" என்று கூறிக்கொண்டே, அவள் தன் கண்ணாடியைக் கழற்றி, அதைக் கைக்குட்டையால் துடைத்து மீண்டும் அணிந்து கொண்டாள். நாளைய தினம் அவசியம் சந்திப்பதாகச் சொல்லிவிட்டு பிரியாமல் பிரிந்தான் ராமன். அவன் போகும் வரையில் நின்று பார்த்துக்கொண்டிருந்துவிட்டு, ஷோக்சுந்தரி நாடியத்திலிருந்து மருங்கப்பள்ளம் செல்லும் மார்க்கமாக நடக்க ஆரம்பித்தாள்.

"துரையை அடைத்துவிட்டான் துரோகிப் பயல்! துரையை விடுவித்தே தீருவேன்" என்று அவளது வாய் முணுமுணுத்தபடியிருந்தது. கால்கள் அம்பலத்தின் வீடு நோக்கிப் பறந்தன.

*　　*　　*　　*

மேனகாவின் சாவை ஒவ்வொரு விநாடியும் எதிர்பார்த்துக்கொண்டிருந்த அம்பலம், வெளிப்புற திண்ணையிலே உட்கார்ந்திருந்தார். அவருக்கெதிரே ஷோக்சுந்தரி போய் நின்றாள். அவர் கேட்பதற்கு முன்பாகவே அவள் தன்னைத் தானே அறிமுகப் படுத்திக்கொண்டாள். சிலோனிலிருந்து வந்துள்ள அணைதையென்றும், பெரிய தர்ம தாதாவாகிய வெள்ளியம்பலம் ஏதாவது உதவி செய்வார் என்று எதிர் பார்ப்பதாகவும் அவள் பணிவோடு கூறினாள். "நீங்கள் தான் இருண்டுபோன என் வாழ்வுக்கு ஒளி தர வேண்டும்" என்று மன்றாடினாள்.

அவளது வரலாறு முழுவதையும் கேட்ட அம்பலம், கடைசியாக, ஏதோ சிந்தித்தவராக, "உனக்குக் கல்யாணம் ஆகிவிட்டதா?" என்று கேட்டார்.

"இதுவரையில் இல்லை. நீங்களே செய்துகொண்டாலும் சரி!" என்று சொல்லிவிட்டு, அவள் அவரைப் பார்த்து வெட்கப்பட்டு தலைகுனிந்து நின்றாள். பூமியைக் கால் விரலால் பிராண்டியபடி!

ஷோக்சுந்தரி திருமணம்மாகாதவள் என்று கேட்ட மாத்திரத்தில் அம்பலத்திற்கு ஆனந்தம் ஏற்பட்டது. புதையல் எடுக்க எல்லாக் காரியங்களும் கைகூடி வருகின்றன என்று பூரிப்படைந்தார். மேனகாவின் சாவைத் தவிர்க்கவே முடியாது. எப்படியும் செத்துவிடுவாள். கொலைக் குற்றத்தை சுமக்க குடுகுடுப்பைக்காரன் இருக்கிறான். இதோ, ஒரு ஷோக்சுந்தரி கிடைத்துவிட்டாள். இவளைத் துரைக்குத் திருமணம் செய்வித்து புதையலுக்குத் தேவையான பலியைக் கொடுத்துவிடலாம். நெடுநாளைய கனவும் பலித்துவிடும். பிறகு மாயாண்டிக் கிழவன் ஒருவன்தான் பாக்கி! அவனையும் புதையல் கிடைத்த பிறகு சமாதி செய்துவிட்டால் எல்லாத் தங்கங்களுக்கும் நானே ராஜாவாகி விடுவேன் — இப்படியெல்லாம் ஆசைக் கோட்டைகளும், ரதி மாளிகைகளும் உருவாயின அம்பலத்தின் மூளையில்! ஷோக்சுந்தரியிடம் தந்திரமாகப் பேசி, அவளையும் அறையிலே போட்டுப் பூட்டிவிட்டால், இன்னும் ஓரிரு நாட்களில் திருமணத்தை நடத்தி, எல்லாவற்றையும் முடித்துவிடலாம் என்று கருதினர்.

"நீ பத்திரமாக இங்கேயே இரு! பாதுகாப்பாக உன்னை ஒரு அறையில் வைத்திருக்கிறேன். சில நாட்களுக்குள் உனக்கு ஒரு நல்ல மாப்பிள்ளையைத் திருமணம் செய்வித்து, உனக்குத் தேவையான வசதிகளைச் செய்கிறேன். உன்னைப் போலத் திக்கற்றவர்களுக்கு உபகாரம் செய்வது

தானம்மா என் வேலை!" என்று அவளிடத்திலே உபசார மொழிகள் பேசினர்.

ஷோக்சுந்தரியும் அம்பலத்திற்கு நன்றி கூறி நின்றாள். அவளை அழைத்துக்கொண்டு அம்பலம் வீட்டுக்குள்ளே போய், "இங்கே ஒரு அறையில் உன்னை பத்திரமாக வைக்கப் போகிறேன். எதற்கும் பயப்படாதே!" என்று கூறி விட்டு, துரையின் அறையைத் திறக்கப் போனர். பிறகு என்னவோ நினைத்துக்கொண்டு, அந்த அறையைத் திறக்காமல், ஷோக்சுந்தரியை மலையாள பகவதியிருக்கும் அறையிலே விட்டு கதவைப் பூட்டிக்கொண்டார். ஷோக்சுந்தரிக்கு எதுவும் புரியவில்லை. விழித்தாள். "அறையைப் பூட்டுவதற்காகப் பயப்படாதே! உனக்கு நல்லகாலம் வரப் போகிறது" என்று சமாதானம் சொல்லியபடி அம்பலம் அதைவிட்டு அகன்றார்.

ஷோக்சுந்தரியைக் கண்ட குடுகுடுப்பாண்டி, நீண்ட தொரு பெருமூச்சுடன் வேறிடம் போய் உட்கார்ந்துகொண்டான். ஷோக்சுந்தரியும் குடுகுடுப்பாண்டியை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, இன்னொரு பக்கம் போய் ஜன்னலண்டை அமர்ந்துகொண்டாள். அய்யோ, பாவம் — இந்தக் குடுகுடுப்பாண்டிக்குத்தான் ஆபத்து வரப்போகிறது! பொய்க் குற்றம் சாட்டி போலீசில் ஒப்புவிக்கப் போகிறார் அம்பலம் — என்று எண்ணியவாறு ஜன்னல் கம்பிகளைத் தடவிக் கொண்டிருந்தாள் ஷோக்!

புதையலுக்கு காவு தயாராகிவிட்டது என்ற களிப்புடன் அம்பலம், மாயாண்டிக் கிழவரிடம் ஓடோடி வந்து தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டார்.

"கிழவரே! நாம் தேடி அலையும் திரவியம், தேடாமல் வரும் அதிர்ஷ்டத்தால் நிண்ணமாகக் கிடைக்கப் போகிறது!" என்று கூவினர்.

போலீஸ் ஸ்டேஷனிலிருந்து திரும்பிய ராமன், செய்தி சொல்ல வந்து — அவர் மாயாண்டியிடம் பேசிக்கொண்டிருப்பதை ஒளிந்திருந்து கேட்க ஆரம்பித்தான்.

"ஷோக்சுந்தரி என்று ஒரு பெண் அகப்பட்டாள். கன்னி கழியாதவள். அவளுக்குத் திருமணம் செய்வித்து சௌகரியங்கள் செய்வதாக வாக்களித்து பூட்டி வைத்திருக்கிறேன், எங்கும் ஓடிவிடாமல்! தகட்டில் இருக்கிறபடி அவளுக்கு ஒரு மாப்பிள்ளை தேடி திருமணம் செய்வித்து, உடனே கொலை செய்து நமது பலியை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும்."

அதைக் கேட்ட மாயாண்டி, "மாப்பிள்ளைக்கு யாரைப் பிடிப்பது?" என்று கேட்டார்.

"ஓகோ, கிழவரே! இதுவரையில் நான் சொல்லவில்லையல்லவா? துரை ஓடிப் போனான் என்றீரே; அவனை நான் தான் அடைத்து வைத்திருக்கிறேன்."

"அப்படியா?"

"ஆமாம். புதையல் ரகசியம் அவனுக்கும் தெரியுமல்லவா? அதனால்தான் அவனைப் பிடித்துப் போட்டிருக்கிறேன். இப்போது அது நல்லதாகவே போய்விட்டது."

"ஆமாம்! உண்மைதான் அம்பலம்! துரையைத் தீர்த்துக்கட்டி விட்டால், புதையலை நாம் இருவருமே பங்கு போட்டுக் கொள்ளலாம். ஆனால் ஒன்று; அந்தப் பயல் துரை, பரிமளாவைத்தானே திருமணம் செய்து கொள்வேன் என்பான்."

"அவள்தான் கிடைக்கவில்லையே, என்ன செய்வது? துரைக்கும் ஷோக்சுந்தரிக்கும் கட்டாயக் கல்யாணம் செய்து, காவு கொடுக்க வேண்டியதுதான்."

அம்பலத்தின் முடிவைக் கேட்டு கிழுவர் மௌனமாக இருந்தார். அம்பலத்தின் பேச்சைக் கேட்ட ராமன், தவியாய்த் தவித்தான். துடித்தான். துவண்டான். ஷோக் சுந்தரி அம்பலத்திடம் அகப்பட்டுக்கொண்டதையும், அவளை பலியிடப் போவதையும் கேட்டு கண்ணீர் விட்டான். அம்பலத்தின்மீது அவனுக்கு அடங்காத கோபம் பிறந்தது. கோபத்தை அவரிடம் காட்டி என்ன செய்வதென்று வருந்தினன். தனது அருமைக் காதலிக்கு இவ்வளவு அவசரமாக ஆபத்து வந்துவிட்டதே யென்று அழுதான்.

எதையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் அம்பலத்திடம் வந்து, போலீஸ் ஸ்டேஷனில் சப் இன்ஸ்பெக்டர் இல்லை என்றும், வந்ததும் உடனே வருவார்கள் என்றும் கூறிவிட்டுத் துக்கம் தொண்டையை அடைக்க அதை விட்டு நகர்ந்தான். வீட்டின் ஒரு மூலையிலே உட்கார்ந்து கொண்டு திடீர்க் காதலியை நினைத்து தேம்பித் தேம்பி அழுதான். 'கோ'வெனக் கத்தினன். அவளைப் பூட்டியிருக்கும் அறையின் பக்கமாக சோகநடை போட்டுப் போனன்.

ஷோக், ஜன்னலண்டை உட்கார்ந்திருந்தாள். அவளிடத்திலே சென்று இவ்வளவு ஆபத்தான செய்தியை எப்படி வெளியிடுவது என்று யோசித்தான். அவளிடம் செல்ல மனமின்றி, மெதுவாக இன்னொரு ஜன்னல் பக்கம் வந்தான். அங்கே குடுகுடுப்பைக்காரன் உட்கார்ந்திருப்பதைப் பார்த்தான். அவன் மூலமாகத் தன் காதலியிடம் வரப்போகும் ஆபத்தை அறிவிக்கலாமென்று தீர்மானித்துக்கொண்டான். குடுகுடுப்பைக்காரனிடம் நெருங்கி, "ஏ, பகவதி சாயபு! எனக்கு ஒரு உபகாரம் பண்ணுவாயா?" என்று கெஞ்சினன்.

பகவதி வேடத்திலிருக்கும் பரிமளாவும், ராமனுல் ஏதாவது உதவி ஏற்படலாம் என்று எண்ணியவளாய், "என்ன வேண்டும்?" என்று ராமனைக் கேட்டாள்.

ராமன் கண் கலங்கியபடி பேசினன்: "அதோ உட் கார்ந்திருக்கிறாளே; ஷோக்சுந்தரி — அவள் என்னுடைய பிரிய சிநேகிதி! நானும் அவளும் உசிருக்கு உசிரு! அவளுக்கு என் எஜமானனுல் பெரிய ஆபத்து வரப் போவுது! அதாவது, துரை என்கிறவனுக்கும் இவளுக்கும் கல்யாணம் செய்துவைத்து, இரண்டு பேரையும் உடனே கொலை செய்து பலி கொடுத்து புதையல் எடுக்கப் போகிறாராம். அந்த ஆபத்திலேயிருந்து என் காதலி ஷோக்சுந்தரியைக் காப்பாத்தணும். இந்த விஷயத்தை நீயே அவளுகிட்ட சொல்லிவிடுகிறுயா பகவதி?" என்று கெஞ்சினன் ராமன்.

அந்த வார்த்தைகளைக் கேட்ட பகவதிக்கு நெஞ்சு நடுக்கமெடுத்தது. தன் காதலன் துரை, இனிமேல் தப்ப முடியாது என்பதை அறிந்து அனலிடை மெழுகாக உருகிற்று அவள் உள்ளம். துரையோடு சேர்ந்து தானும் சாக விரும்பினுள்.

ராமனிடம் ஆறுதல் கூறி அனுப்பிவிட்டு, ஒரு மூலையிலே விழுந்து கண்ணீர் வடித்தாள். குடுகுடுப்பைக்காரன் அழுவதை ஷோக்சுந்தரி கவலையோடு கவனித்தாள். அம்பலத்தின் மனைவியைக் குத்திவிட்ட குற்றத்திற்குக் குடுகுடுப்பைக்காரன் ஆளாக வேண்டுமே, அதற்காக அழுகிறுன் போலும் — எனக் கருதினுள் ஷோக்சுந்தரி!

துரையோடு தானும் பலி கொடுக்கப்படவேண்டும் என்கிற ஆசையாவது நிறைவேறினுல் போதும் — என்று தனக்குள்ளே புலம்பிக்கொண்டாள் பரிமளா! எங்கிருந்தோ வந்த ஷோக்சுந்தரிக்குக் கிடைக்கும் பாக்கியம் தனக்குக் கிடைக்கக் கூடாதா என்று ஏங்கினுள். அதே சமயம் அவளுக்கு ஷோக்சுந்தரியின் மீதும் அனுதாபமும் பரிவும்

ஏற்பட்டது. எதுவுமறியாத ஒரு அசட்டுப் பெண், ஆசைக்கார காண்டாமிருகத்தின் கையால் சாகவேண்டியிருக்கிறதேயென்று வருந்தினாள். ராமன் சொன்ன விஷயத்தை அவளிடம் ஜாடையாகவாவது சொல்லிவிடலாம் என்று கருதி அவள் பக்கம் போனாள்.

"என்னப்பா சாயபு! ஏன் வருத்தமாயிருக்கிறாய்?" என்று கேட்டாள் ஷோக்!

அதற்குப் பரிமளா பதில் சொல்லாமல், "சாயபு உனக்கு ஒரு ஜோஸ்யம் சொல்லப் போறான்; ஜோஸ்யம் சொல்லப் போறான்" என்றாள் பரிமளா.

"என்ன ஜோஸ்யம்?" என்றாள் ஷோக்.

"உனக்கு ராமன்னு ஒரு நாயகன் இருக்கான்."

"ஓகோ, சரிதான்! அதிருக்கட்டும் சாயபு! நீ பெரிய ஜோஸ்யம் சொல்றவன்கிறியே—நான் ஒண்ணு கேக்கிறேன் பதில் சொல்லு! நான் ஆணா? பெண்ணா? சொல்லு பார்ப்போம்!" என்று கேட்டாள் சுந்தரி.

"இது தெரியாதா? நீ ஒரு பெண் பிள்ளைன்னு பகிரங்கமாத் தெரியுதே!" என்று குடுகுடுப்பைக்காரன் நையாண்டி செய்தான்.

"பெண்ணா நான் — அதான் இல்லே" என்று சிரித்தபடி மூக்காட்டை விலக்கினாள் ஷோக்சுந்தரி. மளமளவென்று உடையைக் கழற்றினாள். பரிமளா திகைத்தாள்.

45

பரிமளாவின் திகைப்பை அதிகப்படுத்துவது போல ஷோக்சுந்தரி திடீரென மறைந்துவிட்டாள். அவள் நின்ற இடத்திலே ஆண் உடையிலே துக்காராம் நின்று

கொண்டிருந்தான். வழக்கமான அவனது கோமாளித் தனத்தின் அடையாளமாக, குடுகுடுப்பைக்காரனின் ஜோஸ்யத்தையும், திறமையையும் கிண்டல் செய்வதற்காக ஷோக்சுந்தரி வேடத்தைக் கலைத்துவிட்டான் என்றாலும், பரிமளாவினால் அதையெல்லாம் ரசிக்க முடியவில்லை.

"யார்? துக்காராமா?" என்று படபடப்போடு கேட்டு விட்டாள். "என் பெயர் உனக்கு எப்படித் தெரியும்?" என்று குடுகுடுப்பைக்காரனைப் பார்த்து, துக்காராம் முறைத்தான்.

"தெரியும் — உன்னைத் தெரியாமல் இருக்குமா? உன் பெயரால் வந்த வினைதானே இவ்வளவும்!" என்று பரிமளா தனக்குத்தானே சலித்துக்கொண்டாள். எதிரே நிற்பது யார் என்று உணர முடியாத நிலையில் இருந்த துக்காராம் — சிறிது அஞ்சியவனாய், "ஒருவேளை, நீ துப்பறியும் இலாக்காவோ?" என்று சந்தேகத்தோடு கேட்டான். "இல்லை!" என்று பரிமளாவும் தனது வேடத்தைக் கலைத்தாள்.

அண்ணன் தங்கை என்ற அழியாத பாசத்தோடு ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டே நின்றனர். துக்காராமின் கண்களிலேயிருந்து நீர் தாரை தாரையாக வடிந்தது. பரிமளாவின் கண்களோ நீர்வீழ்ச்சிகளாயின. விவரிக்க முடியாத மௌனத்தின் விளிம்பிலே இருவரும் நின்றுகொண்டு, வேதனைகளை விழிகளால் தெரிவித்துக்கொண்டிருந்தார்கள். பரிமளாவின் இதழ்கள் மெதுவாக அசைந்தன.

"துக்காராம்! இங்கே எப்படி வந்தாய்?"

"ஜெயிலிலேயிருந்து தப்பி வந்தேன்."

"அய்யோ — அது பெரிய குற்றமாயிற்றே!"

"இருக்கட்டுமே — முதல் குற்றம் விசாரிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டால் மரண தண்டனைதான் அநேக மாகக் கிடைக்கும். ஜெயிலிலேயிருந்து தப்பிய குற்றத் திற்கு என்ன தண்டனை கொடுக்க முடியும்? எனக்கு நிச்ச யமாய்த் தெரியும்; எந்த நீதிபதியானாலும் சரி — இரண்டு மரண தண்டனை ஒருத்தனுக்குக் கொடுக்க முடியாது! அத னல் எனக்குக் கவலையே இல்லை!"

"நீ ஜெயிலிலேயிருந்து எதற்காகத் தப்பவேண்டும்?"

"ஜெயில்ல இருக்கிறவன் தப்ப நினைக்கிறது அதிசயம் ஒண்ணுமில்லியே! ஆனப் பரிமளா, நான் தப்பிச்சது உயிர்மேல் உள்ள ஆசையால் அல்ல! உன்னை ஒரு தடவை சாகிறத்துக்குள்ளே பாத்துவிடணும்னுதான் ஆசைப்பட் டேன். அதுக்காகத்தான் ஜெயிலை விட்டு ஓடி வந்தேன். எப்படியும் சாகப் போறேன். மரண தண்டனையிலேயிருந்து மீள முடியாது! அதற்குள்ளே உன் திருமுகத்தைப் பார்க் கணும்னு நான் பட்ட பாடு கொஞ்சமல்ல சகோதரி! எவ் வளவோ ஆபத்தையெல்லாம் கடந்து தப்பித்து வந்தேன்.

அன்று நீ வீட்டுக்கு நெருப்பு வைத்து என்னை வெளி யேறும்படி யோசனை சொன்னயே; உன் பேச்சைக் கேட்கா மல், தங்கம் போன்ற உன் உடலைத் தரையிலே உருட்டி விட்டு நான் போலீஸ்காரர்களிடம் சரணாகதி அடைந்தேன் அல்லவா; அன்று முதல் ஐந்தாறு நாட்கள் போலீஸ் ஸ்டேஷனில் அடைபட்டுக் கிடந்தேன். அந்த நாட்களிலே ஏதோ ஒரு பெரிய தியாகம் செய்துவிட்ட உணர்ச்சி மட் டுமே எனக்கு இருந்தது. ஏனென்றால், நான் மட்டுமே அந்த ஸ்டேஷனில் தனியாக இருந்தேன். பிறகு அங்கி ருந்து பெரிய ஜெயிலுக்கு மாற்றினார்கள். ரிமாண்ட் என்ற பெயரிலே என்னைப் பூட்டி வைத்தார்கள். பெரிய ஜெயி லில் பெரிய ஆட்கள் எல்லாம் இருந்தார்கள். சைக்கிள் ரிப்பேர் செய்கிற துக்காராம் மாத்திரம் அல்ல; சைக்கி

ளையே உற்பத்தி செய்கிற முதலாளிகள் சிலர்கூட மோசடி கேசிலே சம்பந்தப்பட்டு உள்ளே இருந்தார்கள். ஜெயில் என்றால் என் மனசிலே இருந்த பயம் போய்விட்டது. ஜெயிலிலே மனிதனை வாட்டக்கூடிய ஒரே ஒரு சங்கடம் தனிமைதான். ஆனால் எனக்கு அந்தத் தனிமைதான் சந்தோஷம் தந்தது. வெளியிலே இருந்தாலும் இதே தனிமைதான் எனக்குக் கிடைத்திருக்கும்.

நீ எனக்கு இல்லையென்று முடிவாகிவிட்ட பிறகு கோடீஸ்வரன் குமாரி வந்தாலும், ரவிவர்மா பிக்சர் மாதிரி ஒரு ரதியே வந்தாலும் ஜோடியாக வாழ நினைப்பேனா நான்! என்னுடைய லெப் லட்சியமே பரிமளாதான்! அவள் எனக்குத் தங்கையாகிவிட்டாள். அதற்குப் பிறகு எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் எனக்கு சகோதரியாகத்தான் தெரிகிறது. அதனால் ஜெயிலின் தனிமை எனக்கு ரொம்ப உற்சாகமூட்டியது.

என் மீது பதிவான கேஸ் சம்பந்தமான முழு ஜோடிப்பு வேலைகளும் முடிவாகவில்லையாம். அதனால் கோர்ட்டுக்குப் போகவேண்டிய வேலை இன்னும் வரவில்லை. என்னுடைய வழக்கைப்பற்றி விசாரித்த கைதி நண்பர்களும், வார்டர்களும், நிச்சயமாக எனக்கு மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை கிடைக்கும் என்று தீர்ப்பு சொல்லிவிட்டார்கள்.

நான் வெட்டிக் கொன்றதற்கு யாரும் நேரில் பார்த்த சாட்சி கிடையாதேயென்று ஒருவனிடம் வாதாடிப் பார்த்தேன், ஜெயிலில்!

சாட்சிகள் என்றால் என்ன அர்த்தம் என்பதை அவன் எனக்குப் புரியும்படியாகச் சொன்னான். அதெல்லாம் எதற்கு வீண் கதை!

தனிமையை அனுபவித்துக் கொண்டிருந்த என் நெஞ்சிலே மரண தண்டனையைப் பற்றிய எண்ணங்கள் கொஞ்சங் கொஞ்சமாக எட்டிப் பார்க்க ஆரம்பித்தன. நான் ரிமாண்டில் இருக்கும் காலத்திலேயே மூன்று நான்கு பேரை விடியற்காலையில் தூக்கு போட்டுத் தண்டனையை நிறைவேற்றினார்கள். அவர்களைத் தூக்கு மேடைக்கு அழைத்துப் போகும்போது அவர்கள் போட்ட சப்தம் என்னைக் கலங்க அடித்தது.

"அய்யோ!.....இன்னங் கொஞ்ச நாழிக்கெல்லாம் உலகம் மறைந்து போய்டுமே! எதையுமே பார்க்க முடியாதே!" என்று ஒருத்தன் கத்தினன்.

"அம்மா — என் தங்கச்சி!..... உங்க அண்ணனை கொல்லப் போறுங்க.....அய்யோ, சாகறத்துக்கு முன்னே ஒரு தடவை என் தங்கையைப் பாக்க முடியாதா?"

இப்படிக் கத்திக்கொண்டே போனான் இன்னொருத்தன். தங்கச்சி என்ற அந்த வார்த்தை என் உள்ளத்தைப் பிளந்துவிட்டது. பரிமளா!.....உன்னை ஒருமுறை பார்க்க வேண்டுமென்ற ஆசையை அந்த வார்த்தைதான் தூண்டி விட்டது. கோர்ட்டு — வழக்கு — தீர்ப்பு — தூக்கு — இப்படியெல்லாம் எண்ணிக்கொண்டிருந்த என் இருதயத்திலே உன்னை ஒரு முறை பார்த்துவிட வேண்டும் என்ற தீராத ஆசை முளைவிடத் தொடங்கிவிட்டது. எப்படியும் சாகத்தான் போகிறோம். அதோடு தப்பி ஓடியதற்கும் சேர்த்துத் தண்டனை தரட்டுமே என்று முடிவு செய்தேன். பயம் ஒழிந்தது.

கொடுமையான வயிற்று வலி என்று பாசாங்கு செய்து கீழே விழுந்து புரண்டேன். டாக்டர்களால் சீக்கிரம் கண்டு பிடிக்க முடியாத வியாதி அதுதான்!

நான் பள்ளிக்கூடத்திலே படிக்கும்போது சின்னப் பிள்ளையிலே அப்பா அம்மாவை ஏமாற்றி பள்ளிக்கூடம் போகாமல் இருக்க அந்த முறையைத்தான் கையாளுவேன். ஜுரம் என்றால் உடம்பைத் தொட்டுப் பார்த்துப் புரிந்து கொள்வார்கள். தலைவலிக்குக் கூட நரம்பு புடைத்திருக் கிறதா என்று பார்ப்பார்கள். பொய் வயிற்று வலியை சீக்கிரம் கண்டுபிடிக்கவே முடியாது. என் தந்திரம் ஜெயித் தது.

என்னை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போனார்கள். சிகிச் சைகள் நடந்தன. போலீஸ் காவலும் பலமாகத்தான் இருந்தது, படுக்கையைச் சுற்றி! இரண்டு மூன்று நாள் கண் விழிப்பு — அவர்கள் என் படுக்கை அருகே உட் கார்ந்து தூங்கிக்கொண்டிருந்தார்கள். இதுதான் சமயம் என்று புறப்பட்டேன். தப்பிவிட்டேன். உன்னை எப்படி யாவது பார்த்துவிட வேண்டுமென்று தவித்தேன். போலீ சார் என்னை விரட்டுகிறார்கள் என்பதும் தெரிந்துவிட்டது. ஷொக்சுந்தரியாக மாறினேன்.

உன்னை ஊரெல்லாம் தேடினேன். உன் காதலன் துரை, இங்கு சிக்கியிருப்பதை மட்டும் தெரிந்துகொண் டேன். உன்னைப் பார்க்கவே முடியாது என்று தீர்மானித்த பிறகு, உன் ஆசைக் காதலனுக்காவது ஏதாவது உதவி செய்ய முடியுமா என்று இங்கு வந்தேன்! வந்த இடத் திலே, நான் தேடி அலைந்த தெய்வத்தை தரிசனம் செய்து விட்டேன்”

—என்று கூறி, அவளது கரங்களை எடுத்துத் தன் கண்களிலே ஒத்திக்கொண்டான் துக்காராம். அந்த நிகழ்ச்சியிலே களங்கம் அணுவும் தலைகாட்டவில்லை. தூய்மை, கொடிவிட்டுப் படர்ந்து கிடந்தது.

“துக்காராம்! யாரோ ஒரு ஆசைக்காரப் பிசாசின் அகண்ட வயிற்றை நிரப்புவதற்காக நாமெல்லாம் நமது

வாழ்க்கையை பாலைவனமாக்கித் தீரவேண்டிய நிலைக்கு ஆளாகிவிட்டோம்"

—என்று பரிமளா. விம்மியழுதாள். ஆனல் அவளது நெஞ்சிலே புதுப் புது திட்டங்களும், புயல் வேக நினைவுகளும் சுழன்றபடி யிருந்தன.

புதையலுக்காக பறிகொடுக்கப்படும் துரையோடு தானும் தலைகொடுக்கலாம் என்ற திருப்தி உதயமாயிற்று அவளுக்கு! எப்படி? துக்காராமைக் குடுகுடுப்பைக்காரனாக மாற்றிவிட்டால் அவனுக்கு விடுதலை கிடைத்து விடும். குடுகுடுப்பைக்காரன் மீதும் அம்பலத்தின் அக்கிரமக் கண்கள் வீழ்ந்திருக்கின்றன என்பது அந்த அபாக்கியவதிக்குத் தெரியாது! துக்காராம், தன் பொருட்டு செய்த தியாகத்தை மனதில்வைத்துக்கொண்டு அதற்கு பிரதி உபகாரமாக அவனைக் குடுகுடுப்பை வேடத்திலே வெளியேற்றிவிடத் தீர்மானித்தாள் அவள். குடுகுடுப்பைக்காரன் வேடம் போட்டுக்கொள்ள துக்காராமும் சம்மதித்து விட்டான். பரிமளா, சொல்லாவிட்டாலுங்கூட குடுகுடுப்பைக்காரன் பரிமளாதான் என்று தெரிந்த பிறகு அவனே அந்த வேடத்தைப் போட்டுக் கொள்ளத்தான நினைத்தான்.

அவனுக்குத் தெரியும்; குடுகுடுப்பையாக மாறினல், இன்னெரு கொலே வழக்கு தன்மீது விழும் என்று! அப்படித் தெரிந்தும் ஒத்துக்கொண்டான். காரணம்? பரிமளா, பகவதியாக இருந்தால் அவள்மீது "மனைகாகுத்தப்பட்ட குற்றம்" சுமத்தப்பட்டுவிடும். அதிலிருந்து அவளைக் காப்பாற்ற வேண்டியது. தன்னுடைய கடமையென்று முடிவு செய்தான் துக்காராம். ஆகவே, பகவதியைக் காட்டிக் கொடுக்க அம்பலம் போட்டிருக்கும் திட்டத்தைப் பற்றியும் துக்காராம் அவளிடம் அதிகமாக விவரிக்க

வில்லை. அவன் ஷோக்சுந்தரி வேடத்திலே இருந்தால், பலி கொடுக்கப்பட்டிருப்பான் என்ற பயங்கர சதித் திட்டத்தையும், பரிமளா அவனிடம் வெளியிடவில்லை. வெளியிட்டிருந்தால், துக்காராம், பரிமளாவின் வேடத்தைக் கலைக்கவும், தான் குடுகுடுப்பாண்டி வேடம் அணிந்து கொள்ளவும் சம்மதித்திருக்க மாட்டான். ஷோக்சுந்தரியாகவே இருந்திருப்பான். பரிமளாவின் திட்டப்படி துக்காராம் மலையாள பகவதியாக மாறிவிட்டான். பரிமளா, பரிமளாவாகவே இருந்தாள். அத்தான் துணையோடு சேர்ந்து உயிர்விடப் போகிறோமேயென்ற மன ஆறுதல் அவளுக்குப் புதிய உற்சாகத்தைத் தந்தது.

கல்யாணமாகாத பெண்ணை இருந்தால் பலியாகித் தீர வேண்டும் என்ற நிலைமை அம்பலத்தின் திட்டத்திலே இருக்கிறதுஎன்பதைத் துக்காராம் உணரவில்லை. உணர்ந்திருந்தால் அவன் பரிமளாவின் பகவதி வேடத்தைக் கலைத்தேயிருக்க மாட்டான்.

அவளுக்கு உபகாரம் செய்வதாக நினைத்துக் கொண்டு, உயிர் போகும் காரியத்துக்கு அவளைத் தயார் படுத்தினான், அவனையறியாமலே! அவளும் அவனை விடுவிப்பதாக எண்ணிக்கொண்டு, மூலை வழக்கிலே இரண்டாவது முறையும் அவன் சிக்குவதற்கு எப்படியோ தன்னையுறியாமல் காரணமாகிவிட்டாள்.

இருவரையும் விழுங்கி ஏப்பமிடக் காத்திருப்பது போல் அம்பலம், மேனகாவின் படுக்கையின் பக்கம் உட்கார்ந்திருந்தார். மேனகாவின் உயிர் சிறிது சிறிதாகப் பிரிந்து கொண்டிருந்தது. முழுவதுமே போய், உடலை நில்லிட்டுப் போகும் கோரத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார் அம்பலம். எதிர்காலத்தைப்பற்றி இன்பக்

கனவு கண்ட நேரத்திலே தனக்குத்தானே ஆயிரம் திட்டங்களைப் பற்றி பேசிக்கொண்டிருந்த மேனகா, ஒரு வார்த்தையும் பேச முடியாதவளாகிவிட்டாள். பேச்சு அடங்கியது — கடைசி மூச்சும் காற்றோடு கலந்தது.

மேனகா போய்விட்டாள். பருவ மலராக, பளிங்குச் சிலையாகக் காட்சி அளித்த அவளை, இனி மண்தான் முத்தமிடும்!

மேனகா கண்ணை மூடிவிட்டதைப் பார்த்ததும் அம்பலம் அழுதார். ஆம், அழுது அவள் மீது ஆசையிருக்கிறது என்பதைக் காட்டிக்கொண்டார். அம்பலத்தின் பஞ்சணையிலே, அவர் படைத்த பிணம் கிடந்தது. ராமனிடம் சொல்லி அனுப்பியபடி போலீசாரும் வந்தார்கள். மேனகாவின் கொலை பற்றிய விபரங்களைத் தந்தார் அம்பலம். கொலைகாரன் எங்கேயிருக்கிறான் இப்போது என்று போலீசார் தேடத் தொடங்கினர்கள்.

உடனே அம்பலம், தன்னுடைய ஆட்களைப் பார்த்து, "என் கண்மணியைக் கொன்ற அந்த பாதகனை இழுத்து வாங்கடா!" என்று கூவினர். போலீசாருக்கு நேரே மேனகாவின் பிணத்திற்கான ஒப்பாரியை சுருதி பிசகாது இசைத்துக்கொண்டே யிருந்தார். முரடர்கள் கதவைத் திறப்பதைப் புரிந்துகொண்ட பரிமளா, அறையின் ஒரு மூலையிலே பதுங்கிக் கொண்டாள். துக்காராம் அவளிடம் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டான். அவனுக்குத் தெரியும், தான் மறுபடியும் சிறைச் சாலைக்குப் போகிறோமென்பது!

பரிமளாவோ, அவனைத் தனது திறமையால் விடுவித்து விட்டதாகக் கருதி சந்தோஷத்தோடு விடை கொடுத்து அனுப்பினாள். அப்போது அவள் சிந்திய

ஆனந்தக் கண்ணீரை, அவன் என்னமோ, சோகக் கண்ணீராகத்தான் கருதினான்.

வெளியே வந்த குடுகுடுப்பைக்காரனை சப்இன்ஸ்பெக்டர் ஏற இறங்கப் பார்த்தார். அம்பலம், தனக்கிருந்த அவசரத்தில் குடுகுடுப்பைக்கார வேடம் இன்னொரு கை மாறிவிட்டது என்கிற உண்மையைக்கூட புரிந்துகொள்ளவில்லை. துக்காராம் கையில் விலங்கு மாட்டப்பட்டது.

அவன், தன்னுடைய பரிமளாவைக்காக இரண்டாவது தடவையும் தியாகம் செய்கிறோம் என்கிற உறுதியோடும், உற்சாகத்தோடும் போலீசாரின் பின்னே போய்கொண்டிருந்தான்.

பரிமளாவோ, துக்காராம் போலீசிடம் ஒப்படைக்கப்பட்ட விபரம் தெரியாமல் ஆனந்தப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தாள். இப்போது அவளது நினைவெல்லாம் தானும் தன் அத்தானும் எப்போது சேர்ந்து சாகடிக்கப் படப் போகிறோம் என்பதைப் பற்றித்தான்.

அம்பலமும், மேனகாவின் பிணத்தை எரித்துச் சாம்பலாக்கிவிட்டு துரையின் கல்யாணத்திற்கான ஏற்பாடுகளைக் கவனிக்க முனைந்தார். கல்யாணத்தை சீக்கிரம் முடித்தால்தானே காவு கொடுத்து புனிதயலை விரைவில் எடுக்க முடியும் என்று துடித்தார் அவர். துரையின்மீது மேனகா விஷயமாக அவருக்கேற்பட்ட ஆத்திரம் அவனை விரைவில் பலிகொடுத்துப் பழிவாங்கி விடவேண்டுமென்ற அவசரத்திற்குக் கொண்டுவந்து விட்டது.

46

குடுகுடுப்பைக்காரனை சிறைக்கு அழைத்துப்போய் விட்டார்கள் என்பதைக் கேள்விப்பட்ட சாமன், ஷோக்சுங்

தரி எந்த நிலைமையில் இருக்கிறாள் என்று பார்ப்பதற் காகத் தவித்துக் கொண்டிருந்தான். அம்பலம், ஏதோ யோசனையில் ஈடுபட்டவாறு வீடு முழுவதையும் அளந்து கொண்டிருந்தால், அவனுல் நினைத்ததை உடனே செய்ய முடியவில்லை.

அம்பலம் ராமனைப் பார்த்து, "டேய் — அந்த அறை யிலே இருக்கிற பெண்ணுக்கு ஏதாவது பலகாரம் கொண்டுபோய்க் கொடுடா!" என்று கூறிவிட்டுத் தின் ணைப் பக்கம் போனதுதான் தாமதம்; ராமன் தாவிப் பாய்ந்து பலகாரத் தட்டைத் தூக்கிக்கொண்டான். பலி கொடுக்கப்படும் ஆட்டுக் குட்டிக்கு ஆகாரம் கொடுப்பது போலத்தான் நமது காதலிக்கும் — அம்பலம், பலகாரம் கொடுக்கச் சொல்லுகிறார் என்று தனக்குத்தானே சொல் லிக் கொண்டான். ஷோக்சுந்தரிக்கு வரப்போகும் ஆபத்தை அந்தக் குடுகுடுப்பைக்காரன் சொல்லியிருப் பானு? அதைக்கேட்டு ஷோக்சுந்தரி என்ன ஆனுளோ? — என்றெல்லாம் பிரலாபித்தான். "அய்யோ! என் காதலி எதற்காக இங்கே வந்து சிக்கவேண்டும்? என்னைப் பார்க்கவேண்டும் என்கிற ஆசையிலே அவள் இங்கே வரலாமா? அப்பத்தானே பார்த்துட்டுப் போனேன்; அதுக்குள்ளே அவளுக்குத் தாங்கவில்லையா? இங்கே வந்து இப்படி மாட்டிக்கொண்டாளே!" — என்றெல்லாம் ஒப்பாரி வைத்தபடி, பலகாரத் தட்டுடன் புறப்பட்டான்.

தின்னைப் பக்கம் போன அம்பலம் எதிரே வந்து, அவனிடம் அந்த அறையின் சாவியைக் கொடுத்து, "ஏய் ராமா! அறையைத் திறந்து அவளுக்கு வேண்டியதைச் செய். ஆள் புதுசு! அடைத்து வைத்திருப்பதாக நினைத்து அதிர்ச்சி அடைந்துவிடப் போகிறாள்! பிறகு காரியம் கெட்டு விடும். அடைத்து வைத்திருப்பது அவ

ருக்குத் தெரியாது போலவே நடந்துகொள்ள வேண்டும்" என்று கூறிவிட்டு, மீண்டும் வாயிற் பக்கம் போனார். அவரது மண்டையிலே யோசனைகளும், திட்டங்களும் பீறிட்டுக் கொண்டிருந்தன.

ராமன், அறையின் சாவியைப் பார்த்து குதூகலம் அடைந்தான். தன் காதலியின் அருகே சென்று பேசுவதற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டதேயென்று மகிழ்ந்தான். சாவி தன்னுடைய கையில் இருப்பதால், எப்படியாவது ஷோக் சுந்தரியை இரவோடு இரவாக வெளியே அனுப்பி விடலாமென்றும் திட்டம் தீட்டிக் கொண்டான். அம்பலம், தன் விஷயத்தில் ஏமாந்துவிட்டார் என்று ஆனந்தப் பெருமூச்சு விட்டான்.

ஒரு கையில் சாவி — ஒரு கையில் பலகாரம் — உள்ளமெல்லாம் காதலியின் நினைவுச்சுமை — இவைகளைத் தூக்கியவாறு ராமன் அறைப் பக்கம் ஓடினான்.

அவசர அவசரமாகக் கதவைத் திறந்தான். "கண்ணே!" என்ற அழைப்போடு உள்ளே பார்த்தான்.

ஷோக்சுந்தரியின் ஆடையையும் நகைகளையும் அணிந்து கொண்டு அங்கே பரிமளா நின்று கொண்டிருந்தாள். ராமன் பரிமளாவை அடையாளம் கண்டு பிடித்துவிட்டான். ஆனாலும் குழப்பத்திலே சிக்கித் தவித்தான். தன் காதலி உடுத்தியிருந்த உடையேதான்! அவள் போட்டிருந்த நகைகளேதான்! ஆனால், முகம் மட்டும் எப்படி மாறிவிட்டது! ஒருவேளை காதல் மோகத்திலே முகத்தை சரியாகப் பார்க்காமல் போய்விட்டோமா? — என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான்.

பரிமளா, ராமனைக் கண்டதும் திடுக்கிட்டாள். ஆனாலும் சமாளித்துக்கொண்டு, "என்ன ராமா? என்ன விசேஷம்"? என்று கேட்டாள்.

"நான் என்ன சொப்பனம் காணுகிறேனு?" என்றபடி கையிலேயிருந்த பலகாரத் தட்டை மெய்மறந்து கீழே போட்டுவிட்டு மரம்போல நின்றான் ராமன். அவனுக்கு சுயநினைவு வர சில நிமிஷங்கள் பிடித்தன.

"ஷோக்சுந்தரியைத் தேடிக்கொண்டு வந்தாயா?" — இந்தக் கேள்வியைப் பரிமளா கேட்டதும், "ஆமாம்; என் காதலி எங்கே." என்று அலறினான் ராமன்.

"ஷோக்சுந்தரியைக் காப்பாற்ற வேண்டுமென்று மலையாள பகவதியிடம் மன்றாடினாய் அல்லவா?"

"ஆமாம், அது எப்படித் தெரியும்?" என்று ஆச்சரியத்தில் மூழ்கினான் அவன். ஷோக்சுந்தரி எங்கே போனாள்? பரிமளா, எப்படி இங்கே வந்தாள்? — இந்தக் கேள்விகளுக்கு அவனால் பதில் காண முடியவில்லை. அவனது சிறிய மண்டை, இவ்வளவு பெரிய குழப்பத்தைத் தாங்கிக் கொள்ளும் சக்தி பெற்றதாயில்லை.

"என் காதலி எங்கே? எங்கே?" என்று ஆவல் கதும்பக் கேட்டுக் கொண்டேயிருந்தான்.

"அவளை விடுவிடுத்து விட்டேன். உன் காதலி தப்பி விட்டாள்!" என்று பரிமளா அவனைத் தேற்றினாள்.

"எப்படித் தப்பினாள்?" அதை அறியத் துடித்தான் ராமன்.

பரிமளா, அவனிடம் முழு விபரமும் சொல்லவேண்டியதாயிற்று, அதற்கான பீடிகையை அவள் போட்டாள். "ராமா! உன் காதலியை நான் தான் காப்பாற்றினேன்.

நானில்லாவிட்டால் உன் காதலி உயிர் தப்பியிருக்க முடியாது. அதனால், நீ எனக்கு ஒரு உபகாரம் செய்யவேண்டும். பெரிய உபகாரம் ஒன்றுமில்லை. நான் சொல்லும் ரகசியம் எதையும் நீ வெளியிடக் கூடாது!"

ராமனும் 'சரி' யென்று ஆமோதித்து விட்டு, தன் காதலி தப்பியது எப்படி என்பதை அறியத் துடித்து நின்றான்.

பரிமளா, குடுகுடுப்பைக்காரனை வந்தது தானே என்றும், தன் துரையை விடுவிப்பதற்காக அப்படி வந்ததாகவும், வந்த இடத்தில் ஷோக்சுந்தரியை விடுவிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்றும், அதற்காக அவளுக்கு குடுகுடுப்பைக்காரன் வேஷம் போட்டு வெளியே அனுப்பிவிட்டதாகவும், ராமனிடம் கூறினாள்.

ஷோக்சுந்தரி, குடுகுடுப்பாண்டி வேஷத்தில் வெளியேறிய செய்தி கேட்டதும், ராமன் தீயை மிதித்தது போலக் குதித்தான். "அய்யோ! பகவதி வேஷத்தில் போனது என் கண்மணிதானே? ஆகா, மோசம் வந்ததே!" என்று புலம்பினான்.

பரிமளாவுக்கு ஒன்றும் புரியவில்லை. ராமனைத் தேற்றி விபரம் கேட்டாள். மேனகாவைக் கொன்ற குற்றத்தைக் குடுகுடுப்பையின் மீது சுமத்தி, தான் தப்பித்துக்கொள்ள அம்பலம் முயற்சி செய்து அதிலே வெற்றி பெற்று விட்டார். அதற்கு ஷோக்சுந்தரி பலியாகி விட்டாள் — என்ற விபரத்தை ராமன் வெளியிட்டு விம்மி விம்மி அழுதான்.

"குடுகுடுப்பைக்காரன் மீது குற்றம் சாட்டப்போவது ஷோக்சுந்தரிக்கு முன்பே தெரியுமா!" என்று பரிமளா, ராமனிடம் வினவினாள்.

"தெரியும்! தெரியும்! நான் தான் அவளிடம் சொன் னேன்!" என்று ராமன் கதறினன்.

பரிமளாவுக்கு விஷயம் புரிந்து விட்டது. துக்காராம், தன்னை விடுவிப்பதற்காகவே மீண்டும் தியாகம் செய்ய முனவந்திருக்கிறான் எனபது விளங்கி விட்டது. ராமனி டம், ஷோக்சுந்தரிதான் துக்காராம் என்பதை விளக்க அவள் விரும்பவில்லை. சிறையிலேயிருந்து தப்பிய துக்கா ராம், ஷோக்சுந்தரியாக மாறி, குடுகுடுப்பைக்காரனை மீண்டும் சிறை சென்றுவிட்ட சம்பவம் பரிமளாவின் உள் ளத்தைக் கலக்கியது.

ராமனை, தன் காதலி சிறைக்குள் அடைபட்டு விட் டாளே என்று தவித்தான். பரிமளா அவனைச் சமாதானம் செய்தாள்.

"ராமா! உனக்காகத்தான் உன் காதலியின் உயிரைக் காப்பாற்ற நினைத்தேன். துரையோடு சேர்ந்து நான் சாகி றேன்; அவள் சாகக் கூடாது என்றுதான் அவளை வெளி யேற்ற முயற்சித்தேன். நீ அழுது புலம்புகிறாயே என்று தான், அவளுக்கு பகவதி வேஷத்தைப் போட்டேன். பக வதியின் மீது இப்படியொரு குற்றச்சாட்டு விழப் போகி றது என்று எனக்குத் தெரியவே தெரியாது! தெரிந் திருந்தால் செய்திருக்க மாட்டேன். ராமா! நான் வேண்டு மென்று உன் காதலியை காட்டிக் கொடுத்ததாக நினைக் கிறாயா? அப்படி நான் நினைத்திருந்தால் அவளை சாவி லிருந்து மீட்டிருப்பேனா? அவளுக்குப் பதிலாக நான் சாக நினைப்பேனா? யோசித்துப் பார், ராமா; எனக்குத் தெரி யாமலே இப்படி ஆகிவிட்டது!" என்று பரிமளா அழுதாள்.

"உன் காதலியைக் காட்டிக் கொடுப்பேனா?" என்று அவள் கேட்டாளே தவிர, "அய்யோ, என சகோதரன்

துக்காராமைக் காட்டிக் கொடுத்துவிட்டேனே!" என்று உள்ளுக்குள்ளே குமுறினாள். துக்காராமின் தியாக உள்ளம் அவளைக் கண்ணீர்க் கடலில் ஆழ்த்தியது. அவன் சென்ற திக்குநோக்கி மானசீகமாகத் தெண்டனிட்டு வணங்கினாள்; வாழ்த்தினாள். அவனே மனிதன்! அவனே மனிதன்! — என்று அவள் இருதயத்தின் உதடுகள் உச்சரித்துக்கொண்டே யிருந்தன.

பரிமளாவின் வார்த்தையை ராமன் நம்பினான். அவளுக்காக அனுதாபம் காட்டினான். அம்பலத்தின் மீது அவனுக்கு ஏற்பட்டிருந்த வெறுப்பு, பரிமளாவின் வார்த்தைகளால் அதிகமாகவே வளர்ந்தது. அதோடு தன் காதலியை சிறையில் போடவும் அம்பலந்தான் காரணம் என்கிறபோது ராமனின் ஆத்திரம் அளவுகடந்தது. "எப்படியும் என் காதலியை நான் விடுவித்தே தீருவேன். என் காதலி குற்றவாளி அல்ல; அம்பலந்தான் கொலைகாரன்—என்று துணியைப் போட்டுத் தாண்டுவேன். சத்தியம் செய்வேன்! கூடனே வைத்து அணைப்பேன்!" — இப்படியெல்லாம் கூறி — ராமன் தகதகவென ஆடினான், தாங்காத ஆத்திரத்தோடு!

பரிமளா, அவனது ஆத்திரத்தை சிறிது தணித்து, அம்பலத்திடம் தன்னைப்பற்றி ஒரு பொய் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொண்டாள்.

"பொய் என்ன பிரமாதம்! இன்றிரவு இங்கிருந்தே விடுவித்து விடுகிறேன் — பயப்பட வேண்டாம்!" என்று கையிலேயுள்ள அறைச் சாவியைக் காட்டினான்.

"நான் விடுதலை பெற விரும்பவில்லை. என் துரையோடு சேர்ந்து சாவதையே விரும்புகிறேன். ராமா! என்னை விடுவிக்க விரும்பாதே! நான் அவரோடு போகிறேன்! உன் காதலியை மட்டும் எப்படியாவது விடுவித்து

வீடு! இன்னொரு விஷயம், ராமா! நீ அம்பலத்திடம் ஒரு பொய் சொல்ல வேண்டும் என்றேனே, அது என்ன தெரியுமா? ஷோக்சுந்தரி என்று நாம் நினைத்திருப்பது பரிமளா தான் என்று அவரிடம் கூறி, அவரை நம்பவைக்கவேண்டும். புரிகிறதா? ஷோக்சுந்தரி வேடத்தில் பரிமளாதான் வந்திருக்கிறாள் என்று அம்பலத்திடம் அழுத்தந் திருத்தமாகச் சொல்லிவிடு! சொல்லுகிறாயா ராமா?"

பரிமளா, ராமனிடம் கெஞ்சினாள். ராமனும், "அப்படியே சொல்லுகிறேன்" என்று தலையசைத்தான்.

"நீ அவரிடம் அப்படிச் சொன்னால்தான் நல்லது. இல்லாவிட்டால் உன் காதலிக்கு ஆபத்து வரும். ஷோக்சுந்தரி எங்கே என்று தேட ஆரம்பித்ததால், நான் உண்மையைச் சொல்லித் தீரவேண்டி வரும் — இல்லையா?" என்று மீண்டும் பரிமளா தந்திரமாகப் பேசினாள்.

ராமனும், பரிமளா சொன்னபடியே சொல்வதாகக் கூறிவிட்டு, அதை விட்டு நகர்ந்தான். அம்பலத்தோடு பழகிக் கெட்டுப் போயிருந்த அவனது இருதயத்தைப் பரிமளாவின் கண்ணீரும், காதலியின் நினைவும் மாற்றியமைத்தன. காதலியை எப்படி மீட்பது? அம்பலத்தை எப்படிக் காட்டிக் கொடுப்பது? — இந்த யோசனைகளோடு ராமன் அம்பலத்திடம் ஓடிவந்தான்.

ராமனின் ஓட்டத்தைக் கண்டு, அம்பலம்—"என்னடா விஷயம்?" என்று பரபரப்போடு கேட்டான்.

"அறையிலே இருப்பது—பரிமளா! பரிமளா!" என்று கத்தினான் அவன்.

"என்ன? பரிமளாவா?" — அம்பலம் திடுக்கிட்டான்.

"ஆமாம்! ஆமாம்!"

"உளராதே முட்டாள்! ஷோக் சுந்தரியல்லவா இருக்கிறாள்! பரிமளா, இங்கே எங்கு வந்தாள்?"

"அதுதான் தப்பு! நீங்கள் முகத்தை சரியாகப் பார்க்கவில்லை. பரிமளாவேதான்! துரையை விடுவிப்பதற்காக தந்திரமாக ஷோக்சுந்தரி போல வந்திருக்கிறாள்."

ராமன் வலியுறுத்திச் சொன்னதும், அம்பலத்திற்கும் குழப்பம் ஏற்பட்டது. ஒருவேளை அவசரத்தில் நாம் தான் ஏமாந்து விட்டோமோ என்று சந்தேகப்பட்டார். ராமனையும் அழைத்துக்கொண்டு அறைப் பக்கம் ஓடி வந்தார். ஆம்; பரிமளாதான் இருக்கிறாள்! முகத்தை நன்றாக உற்றுப் பார்த்தார். அவள், முகத்தை மறைத்துக்கொள்ள முயன்றாள். அம்பலத்திற்கு சந்தேகம் வலுத்தது. "முகத்தை மறைக்காதே! என்னைப் பார்" என்று கத்தினார், காட்டெருமை போல! திடுக்கிட்டு நடுங்கியவளைப் போல, பரிமளா முகத்தை மறைக்காமல் நின்றாள்.

பரிமளாவேதான்! அம்பலத்திற்கு சந்தேகம் நீங்கியது. ராமனைத் தட்டிக் கொடுத்தார். தான் சொன்னபடியே ராமன் செய்துவிட்டான் என்று பரிமளாவும் திருப்தி அடைந்தாள். அம்பலம், சாகச வலை விரிக்க ஆரம்பித்தார்.

"பரிமளா! நீ ஏன் இப்படி மாறுவேடம் போட்டுக் கொண்டு ஷோக்சுந்தரி — கீக்சுந்தரி என்றெல்லாம் பொய் சொல்ல வேண்டும்! உன் விஷயத்திலும், துரை விஷயத்திலும் என் மனம் மாறிவிட்டது என்பது உனக்குத் தெரியாதா? உங்களுக்கு கொடுத்த கஷ்டங்களுக்குப் பிராயச்சித்தமாகத் தானே, உங்கள் இருவருக்கும் கல்யாணம் செய்து வைக்க அலைந்து கொண்டிருக்கிறேன். பரவாயில்லை; காரியம் கைகூடப் போகிறது; நீயும் உன் காதல்

னும் இனிமேல் சந்தோஷமாக வாழவேண்டிய காலம்வந்து விட்டது. கடவுள், எப்படியோ உன்னை இங்கு அழைத்து வந்துவிட்டார். உன்னை நினைத்து ஏங்குகிற துரைக்கும் இனிமேல் கவலை கிடையாது; உங்கள் இருவரையும் விரைவில் தம்பதிகளாக்கப் போகிறேன். கவலைப்படாமல் இரு!" என்று கூறிவிட்டு அம்பலம், அறைக் கதவைப் பூட்டி சாவியை எடுத்துக்கொண்டு புறப்பட்டார்.

*　　*　　*　　*

அன்று மாலையில், ஊர்ப் பொது மண்டபத்தில் அம்பலத்தின் தலைமையிலே ஊர் மக்கள் கூட்டப்பட்டார்கள். அம்பலம், மாயாண்டி இருவரும் காதுக்குள் ஏதோ பேசிக் கொண்டார்கள். கூட்டத்தில் தாண்டவனும் இருந்தார். திடீரென்று எல்லோரையும் வரவழைத்த காரணம் தெரியாமல், ஊர் மக்கள் விழித்துக் கொண்டிருந்தார்கள்.

அம்பலம் ஊர் மக்களைக் கூட்டிய காரணத்தை விளக்க ஆரம்பித்தார். "தாண்டவனுடைய மகள் பரிமளாவும், துரை என்ற வாலிபனும் காதலர்கள். அந்தக் காதலைத் தாண்டவன் அனுமதிக்காத காரணத்தால், பரிமளா ஊரைவிட்டே ஓடிவிட்டாள். அவள் ஊரிலே இருந்தால், தாண்டவன் அவளை வெட்டிக் கொலை செய்திருப்பார். ஊரைவிட்டு ஓடிய பரிமளாவையும், துரையையும் நான் நேற்றைய தினம் பிடித்து நம் வீட்டில் வைத்திருக்கிறேன். அவர்கள் இருவரும் கலியாணம் செய்துகொள்ள விரும்புகிறார்கள். நானும் அவர்கள் திருமணம் செய்துகொள்வதை விரும்புகிறேன். தாண்டவனுடைய அபிப்பிராயம் தேவை" — என்று அம்பலம் கூறியதும், தாண்டவன் கோபாவேசமாக எழுந்து, "முடியாது! முடியாது!! அவர்கள் இருவரும் எங்கே? என்னிடம் காட்டுங்கள்! அந்த

நாய்களை, துண்டு துண்டாக நறுக்கி எறிகிறேன்" என்று கர்ச்சித்தார்.

அம்பலம் தாண்டவனிடம் நெருங்கி வந்து, "தாண்டவா! என்ன இது, இன்னுமா உமது ஆத்திரம் அடங்கவில்லை? பரிமளா நீர் பெற்ற ஒரே மகள் என்பதை மறந்து விட்டீரா? அவளது விருப்பம்போல் காதலித்தவனையே—" — அவர் இதைச் சொல்லி முடிக்கவில்லை; அதற்குள் தாண்டவன் இடைமறித்து, "முடியவே முடியாது! இது என்ன நியாயம்? நீங்களே சொல்லுங்கள்; அவள் விரும்பு கிறாள் என்பதற்காக எங்கிருந்தோ ஓடிவந்த ஒரு நாடோடிப் பயலுக்கா அவளைக் கொடுப்பேன்? தாண்டவன் செத்தாலும் சாவான்; அந்தத் தடியனுக்கு மாமனாராக மாட்டவே மாட்டான்!" — தாண்டிக் குதித்ததில் தாண்டவனின் குடுமிகூட அவிழ்ந்துவிட்டது.

அம்பலமும் விட்டுக் கொடுப்பவராக இல்லை. கைக்கு எட்டிய தூரத்தில் கிட்டிவிட்ட புதையலை கேவலம், தாண்டவனின் கோபத்தால் மட்டுமே இழந்துவிட சம்மதிக்குமா அவரது காதுக்கு கிடந்த நெஞ்சு? "என்னய்யா இது! இன்னும் உலகம் தெரியாத பத்தாம் பசலியாய் இருக்கிறீரே! இது என்ன, உனக்கும் அஞ்சலைக்கும் கல்யாணம் நடந்த காலம் என்று நினைத்துக் கொண்டீர்? யோசித்துப் பாருமய்யா; பரிமளாவைத் துரைக்குக் கொடுக்கத்தான் வேண்டும். இல்லாவிட்டால், அவளை மரக் கிளையிலோ— ஆற்று வெள்ளத்திலோ — பிணமாகத்தான் காண்பீர், தெரியுமா? எதோ சின்னஞ் சிறிசு — அதோட ஆசையைக் கெடுக்காதீர். ஆமாம்; சொல்லிவிடடேன்" என்றார் அம்பலம், எங்கேயோ தெருக்கூத்தில் கேட்டு ரசித்த வசனத்தை மறக்காமல்.

தாண்டவன் பேசாமல் நின்றார்.

"கோபத்தால் காதலே எதுவுமே செய்ய முடியாதய்யா! கதை தெரியுமா உமக்கு? லண்டன் சீமையிலே லலாங்கிற ஒருத்தன், கயஸ்ன்னு ஒருத்தியை காதலிச்சாணும். உன்னைப் போல ஒரு முன்கோபக்கார அப்பன் தடுத்தாணும். கடைசியிலே என்ன நடந்தது தெரியுமா? ரெண்டு பேரும் கடல்ல விழுந்து செத்துட்டாங்களாம்..... அந்த மாதிரி நிலைமை பரிமளா விஷயத்திலும் ஏற்பட அனுமதிக்க மாட்டேன்; ஆமாம்!" —இப்படி ஏதோ கதை அளந்தார் அம்பலம்.

காட்டு ராஜா காதல் சுவை பேசினர். மாயாண்டியும் அதை ஆமோதித்தார். வாயைப் பிளந்துகொண்டு உட்கார்ந்திருந்த கிராமத்து மக்களும் 'ச்சூ' கொட்டினர்கள். அம்பலத்தின பேச்சை மறுத்தறியாதவர்கள் அவர்கள். ஆகவே, "கல்யாணம் செய்வதுதான் சரி" என்றார்கள். ஆனல், எதிர்பார்த்தபடி தாண்டவன் சிறிதும் இணங்கவில்லை. துரையையும் பரிமளாவையும் துண்டாடிவிட்டுத் தான் மறு வேலை என்று மார் தட்டினர்.

"காதலைத் தடுக்க நீ யார்? நான் அவர்களுக்குத் திருமணம் செய்தே தீருவேன்!" என்று முழங்கினர், அம்பலம்.

தாண்டவன், அம்பலத்தை எதிர்த்துப் பேச முடியாமல் கூட்டத்தைவிட்டு வெளியேறினர்.

அம்பலம், ஊர் மக்களிடம், துரை, பரிமளா இருவரின் தூய காதலைப் பற்றி விளக்கி, அவர்கள் திருமணத்திற்கு எல்லோரும் ஒத்துழைக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். அந்த ஆட்டு மந்தையும் தலையசைத்தது.

அதோடு, தாண்டவனுல், துரைக்கும் பரிமளாவுக்கும் ஏதாவது ஆபத்து நேருமென்றும், அவர்களை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ள வேண்டுமென்றும் ஊர் மக்களை எச்சரித்தார்.

கூட்டம் கலைந்தது. அம்பலம், மாயாண்டியிடம் — திருமணத்தை உடனே நடத்தி விடலாமென்றும், இரவே அவர்களைக் கொலை செய்து காவு கொடுத்து, அந்தக் கொலைக் குற்றத்தைத் தாண்டவன் மீது போட்டுவிடலாமென்றும், அதற்காகத்தான் ஊர் மக்களைக் கூட்டி தாண்டவனுடைய அதிருப்தியை வெளிப்படுத்தியதாகவும் கூறினர்.

மாயாண்டிக் கிழவரும், அம்பலத்தின் யோசனையைப் பாராட்டி மகிழ்ச்சி தெரிவித்தார்.

47

"ஊரிலே ஒரு பெரிய புள்ளி — கோபக்கார மனிதர் — கொலை செய்யவும் தயங்காத சூரன் — இப்படியெல்லாம் அம்பலத்தைப்பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், அம்பலம் ஒரு பெரிய ராஜ தந்திரி என்பது இப்போதுதான் புரிகிறது எனக்கு!" என்று மாயாண்டி புன்சிரிப்போடு கூறினர். அந்தப் பாராட்டு அம்பலத்தின் நஞ்சுக்கனத்தை இன்னும் சிறிது அதிகமாக்கியது.

"புதையல் ரகசியத்தை அந்த துரைப் பயலிடம் முழுவதும் சொல்லியிருந்தால், விழலுக்கு நீர் இறைத்தது போல் போயிருக்கும்; குப்பை மேட்டில் வைரத்தை வீசி எறிந்ததுபோல் ஆகியிருக்கும். நல்லவேளை, எந்த இடத்திற்கு அந்த ரகசியம் வரவேண்டுமோ; அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தது. நாம் இருவரும், கடவுள் கிருபையால் ஒன்று சேராமல் போயிருந்தால், புதையலை இவ்வளவு புத்திசாலித்தனத்தோடு எடுப்பதற்கு எப்படி முடியும்?"

மாயாண்டி அம்பலத்தை அளவுக்கு மீறி பெருமைப்படுத்திக்கொண்டே யிருந்தார். அம்பலம் அந்த முகஸ்

துதியிலே மயங்கியே விட்டார் என்றாலும், மாயாண்டிக்குத் தரவேண்டிய பங்கையும் தராமல் ஏமாற்றுவதற்கு என்ன வழி இருக்கிறது என்று யோசிக்கத் துவங்கினர். அவரிடமிருக்கிற ஒரே ஒரு வழி — ஆளையே அழித்து விடுவதுதான்! சரி; காரியம் முடியட்டும்; பிறகு இந்தக் கருவேப்பிலையைக் கசக்கி எறிவோம் — என்று முடிவு செய்துகொண்டு, பரிமளா — துரை இருவரின் திருமணத்திற்கான ஏற்பாடுகளைக் கவனிக்க ஆரம்பித்தார்.

பெரிய பந்தல் போடுவதற்கான ஆட்கள் வந்து கூடி விட்டார்கள். எல்லோருக்கும் ஆடம்பரமான சாப்பாடு போட வேண்டுமென்ற திட்டப்படி அறுசுவை உண்டி தயாரிக்கும் சமையற்காரர்கள் வரவழைக்கப்பட்டுவிட்டார்கள். ஊரெல்லாம் வெள்ளியம்பலம் வீட்டுக் கல்யாணத்தைப் பற்றியே பேச்சாக இருந்தது. தாண்டவன் கோபாவேசமாக இருந்தாலும், கூண்டுக்குள் புலி போலத்தான் கிடக்க நேரிட்டது. வெளிப்படையாக வெள்ளியம்பலத்தை எதிர்த்து எதுவும் செய்யும் தைரியம் இல்லை. உயிர்மீது ஆசையுள்ள யாரும் அம்பலத்தை எதிர்க்கக் கூடாது என்பதுதானே ஊராருக்குத் தெரிந்த பாடம். அதனால், அம்பலம் செய்யும் தவறுகளைக்கூடப் புகழ்ந்து பேசும் தாய்பட்டைகள் அதிகமாகிக்கொண்டே யிருந்தனர். இந்த நிலையில் தாண்டவன் என்ன செய்ய இயலும்? அதுவும், அம்பலம் செய்வதோ ஒரு நல்ல காரியம். காதல் திருமணம் நடத்தி வைக்கிறார். இதைப்போய் ஒரு தகப்பன் முட்டாள்தனமாக எதிர்க்கிறானே — என்றுதான் மக்கள் கேலி பேசினர்கள்.

பரிமளாவின் தாயாருக்கு மட்டும், எப்படியாவது மகளும், மருமகனும் மணவறையில் இருப்பதைப் பார்த்து ஆனந்தப்பட வேண்டுமென்ற ஆவல் அலை மோதியது.

என்ன இருந்தாலும் தாயல்லவா? ஒரே மகள்! உயிர் போலப் பாதுகாத்தாள் அவளை! காணுமலே போய்விட்டாள் என்று கண்ணீருங் கம்பலையுமாக இருந்த சமயம்; இருக்கிறாள் என்ற சேதியே இன்பத் தேனுகை வந்து பாய்ந்தது அவள் இருதயத்திலே! அப்படிப்பட்ட ஆசை மகளின் வாழ்க்கையிலே ஒரு திருநாள் — அந்தத் திருநாளை ஆசை தீரக் காணவேண்டுமென்ற அவா, அன்னைக்கு இருக்காதா என்ன? அதுபற்றித் தாண்டவனிடம் வாதாடிப் பார்த்து தோல்வி கண்டாள் அவள். எப்படியும், திருமண சமயத்திலாவது ஓடிப் போய் பார்த்து விட்டு வந்து விடவேண்டுமென்று திட்டம் தீட்டிக் கொண்டிருந்தாள் அவள்.

திருமண தினமும் வந்து விட்டது. துணைக்குக் கல்யாணம் என்று கேள்விப்பட்டு அவனது நண்பர்களும் வந்து சேர்ந்தனர். ஆனந்தனின் தலைமையிலே! அவர்களையெல்லாம் அம்பலம் உபசரித்து, தங்க வைத்தார். மாயாண்டிக் கிழவரோ — ஆனந்தனோடு பேசவும் இல்லை; பார்க்கவும் விரும்பவில்லை.

ஆனந்தன், கிழவரைப் பார்த்து, "என்ன தாத்தா; சௌக்கியமா?" என்று கேட்டான்.

அதைக்கேட்ட மாயாண்டி, "யாரப்பா? உன்னை எனக்குத் தெரியலியே!" என்று கூறிவிட்டுப் போய்விட்டார்.

உடனே, ஆனந்தன், அம்பலத்திடம் திரும்பி, "பார்த்தீங்களா! கிழவருக்கு என்னைத் தெரியிலேங்கிறாரு! பெரிய இடத்துக்கு வந்தாலே கண்ணு தெரியாது போலிருக்கு. இருக்கட்டும் — இருக்கட்டும்; இந்தக் கிழவனை பிறகு விசாரித்துக் கொள்கிறேன்" என்று உறுமினான்.

மாயாண்டி, அம்பலத்தைத் தனியே அழைத்துப் போய் "இந்தப் பசங்கள் எல்லாம் துரையோட தோழர்

கள்! இவர்களை ஜாக்கிரதையாக கவனித்துக் கொள்ள வேண்டும். இவர்களால் ஏதாவது ஆபத்து வந்தாலும் வரலாம்!" என்று எச்சரிக்கை செய்தார். அம்பலமும், ஆனந்தன் கோஷ்டியாரைக் கண்காணித்துக்கொள்ள ஒரு மூரடனை நியமித்து விட்டுத் தன் காரியங்களைக் கவனிக்கத் தொடங்கினர்.

வெளியூர்களிலேயிருந்தும் வெள்ளியம்பலம் வீட்டுக் கல்யாணம் விசாரிக்க மக்கள் திரளாகக் கூடினர்கள். மருங்கப்பள்ளத்திலே — தாண்டவன் வீட்டைத் தவிர, மற்ற யாருடைய வீட்டிலும் சமையலே கிடையாது. எல்லோருக்குந்தான் கல்யாண வீட்டிலே விருந்தாயிற்றே!

காலையிலே திருமணம் — மாலையிலே ஊர்வலம் — இரவு சோபன முகூர்த்தம் — அதோடு, திருமணத்தை முன்னிட்டு, தெருக்கூத்து! ஊர் ஜனங்கள் எல்லாம் தெருக் கூத்திலேயிருந்து ரசித்துக்கொண்டிருக்கும்போது இங்கே தம்பதிகள் கொலு! ரத்தத்தைக் கிணற்றிலே தெளித்தல்! புனைதயல் வெடித்துக் கிளம்புதல்! — இப்படித் திருமண நிகழ்ச்சிகளைத் திட்ட வட்டமாக அமைத்துக் கொண்டார் அம்பலம்.

அதன்படி அதிகாலையிலே சாஸ்திரீய முறைப்படி திருமணச் சடங்குகள் ஆரம்பமாயின. புரோகிதரின் மந்திரங்கள் ஒலித்தன. மேள தாளங்கள், பாண்டு வாத்தியங்கள் முழங்கின. பரிமளா, மணக் கோலத்தோடு அழைத்து வரப்பட்டாள். இன்றிரவு பிணக் கோலமாகப் போகிறோம் என்ற நினைவோடு அவளும் வந்து மனையில் அமர்ந்தாள். தங்கச் சங்கிலிகள் கழுத்திலே மின்னிக்கொண்டிருந்தன. கல் இழைத்த ஒட்டியாணம் பூட்டப்பட்டிருந்தது. நாகர்— திருஉருவப்பூ — முதலிய தலையலங்கார ஆபரணங்கள் அணிவிக்கப் பட்டிருந்தன. அழகுக்கு அழகு செய்தது

போன்ற நிலையில் அவள் உட்கார்ந்திருந்தாள். அவளது கண் எதிரே — தானும், தனது அத்தான் துரையும் துண்டாடப்படுவது போன்ற காட்சிதான் தெரிந்துகொண்டிருந்தது.

சிறிது நேரத்திற்கெல்லாம் துரையும் சாமளும் அழைத்து வரப்பட்டான். விலை உயர்ந்த பட்டாடைகள் உடுத்தி மாப்பிள்ளைக் கோலத்திலே, அவன் பரிமளாவின் பக்கத்திலே அமர்ந்தான். மணமக்கள், மணவறையில் வந்து உட்காருவதை தூரத்தில் இருந்து பார்த்த மாயாண்டிக் கிழவர், அவர்கள் கண்ணில் படாமலே ஒதுங்கிக் கொண்டார்.

துரையும், பரிமளாவும் ஒருவரையொருவர் திகில் நிறைந்த கண்களோடு பார்த்துக் கொண்டனர். வரப் போகும் ஆபத்து, அத்தானுக்குத் தெரியுமோ என்னமோ என்று கலங்கிக் கொண்டிருந்தாள் அவள். ஏதோ ஒரு மர்மச் சுழலில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறோம்; பயங்கரமான விளைவை அனுபவித்துத்தான் தீரவேண்டும் போலும் — என்ற திடமான நம்பிக்கையிலே யிருந்தான் துரை. திருமணப்பந்தலிலேகூட இருவரும் தப்பிவிடலாம்; ஊரார் அறிய! — ஆனால் அவர்களைச்சுற்றியார் இருக்கிறார்கள்? முரட்டு மீசையும், மிரட்டும்கண்களும் கொண்டோர் — பளபளப்பான கத்திகளோடு அல்லவா நின்று கொண்டிருக்கிறார்கள்! ஏன் இப்படி ஒரு படை நிற்கிறது என்று யார் கேட்பது? அப்படி யாராவது கேட்டாலும், தாண்டவனல் தம்பதிகளுக்கு ஏதாவது ஆபத்து நேரக் கூடும்; அதைத் தடுப்பதற்காக — என்று பதில் சொல்லிவிட்டுப் போகிறார் அம்பலம்! சுற்றிலும் வெறி நாய்கள் போல முரடர்கள் — எதிரிலே தவளைகள் போல மந்திரமோலிக்கும் புரோகிதக் கூட்டம் — வேடிக்கை பார்க்க ஊரார் — காதல் திருமணத்திலே அம்பலத்திற்குள்ள அக்கறை பற்றிப்

பேசிடும் பலர் — இவர்களுக்கிடையே — பரிமளாவும் — துரையும்!

"கெட்டி மேளம்! கெட்டி மேளம்!" என்று அய்யர்கள் அலற — மங்சள் தோய்ந்த அரிசியை ஊரார் மணமக்கள் தலையில் கொட்ட — பரிமளாவின் கழுத்திலே துரை தாலியையக் கட்டினான். தாலி — தானம் — தர்ப்பாசூரனின் தவ ஓச் சப்தம்—எதுவுமே பிடிக்காத துரை, எதுவுமே செய்ய முடியாத நிலையில் ஒரு யந்திரப் பொம்மைக்கு விசை முடுக்கி விட்டதைப் போல, அம்பலத்தின் இஷ்டப்படியெல்லாம் நடந்தான். இரவு சாகப்போகிற நமக்கு எந்தக் கல்யாணமாக இருந்தால் என்ன — என்று பரிமளாவின் இதயம் அங்கலாய்த்துக் கொண்டிருந்தது.

திருமண வைபவத்தை, பந்தல் கீற்றின் இடுக்கின் வழியாக இரு கண்கள் பார்த்துக்கொண்டிருந்தன. பரிமளாவின் தாய்தான் அது! அவளது கண்களிலே புதிய ஒளியே பிறந்தது. "பொருத்தமான ஜோடிதான்" என்று அவளையறியாமலே சொல்லிக்கொண்டாள். அந்தத் தாய், உள்ளத்திலேயிருந்து பொங்கி எழுந்த நல்வாழ்த்துக்களை அப்படியே கொட்டி விட்டு, வீடு நோக்கி ஒளிந்து ஒளிந்து ஓடினாள்.

விருந்து முதலிய வைபவங்கள் தொடர்ந்தன. முன் இரவிலே—மணமக்களின் ஊர்வலம். ஒரு பழைய காரிலே மணமக்கள் அமர்த்தப்பட்டு, அதை முரடர்கள் தள்ளிக் கொண்டு ஊர்வலம் நடத்தினர்கள். அப்போதுகூட பரிமளாவும் — துரையும் ஒருவரையொருவர் கவலையோடு பார்த்துக்கொள்ள முடிந்ததே தவிர, பேசுவதற்கு வாய்ப்பில்லாமலே போய்விட்டது. தான் பிறந்து — வளர்ந்த ஊரைக் கடைசி முறையாகப் பார்க்கிறோம் என்ற எண்

ணத்தோடு, அவள் ஊரைச் சுற்றி பார்வையை செலுத்தி னாள்.

இளைஞன் துரையை அணைதக்கோலத்திலே — அவள் முதன் முதலாக சந்தித்துப் பேசிய இடம் — அதைப் பார்த்தாள், காரில் இருந்தபடியே! கண்ணீர்ப் பெருக் கெடுத்தது; அவள் குதித்து விளையாடிய தாமரைக் குளம் — காதலனைத் தழுவிக் கிடந்த கோயிலின் பக்கம் — எல் லாமே அவள் இருதயத்தின் கனத்தை அதிகப்படுத்தின. துரை, அடிக்கடி பரிமளாவைப் பார்ப்பதோடு — தங்களைச் சுற்றி வரும் முரடர்களையும் பார்த்துக் கொண்டான். தப்பி யோடுவதற்கு ஏதாவது மார்க்கமிருக்கிறதா எனபதே அவன் யோசனை!

துரையின் நண்பர்கள் ஆனந்தன் முதலியோர் ஊர் வலத்திலே கலந்து கொண்டிருந்தார்கள். அவர்களைக் கண்காணித்தபடி ஒரு முரடனும் வந்துகொண்டிருந்தான். தெருக் கூத்திற்கான ஏற்பாடுகளைக் கவனிக்க ராமன் பறந்து விட்டான்.

ஊர்வலம் முடிவுற்றது. இரவு—மீன் விருந்து! அதன் பிறகு, தெருக் கூத்து! ஊரே அங்கு திரண்டு விட்டது.

துரையும், பரிமளாவும் சோபன அறைக்குத் தனித் தனியே அனுப்பப் பட்டனர். துரையைக் கண்ட பரிமளா, அவன் மீது பாய்ந்து தழுவிக் கொண்டு, "அத்தான்! அத் தான்!" என்று தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள். துரையின் கண்களிலும் நீர் கலங்கியது.

48

ஏராளமான மக்கள் கூட்டத்திற் கிடையிலே தெருக் கூத்து ஆரம்பமாகியது. ஊர்ப் பெரிய மனிதர் என்ற முறையில் வெள்ளியம்பலம் தனியாக ஒரு சாய்வு நாற்காலி

யில் படுத்துக்கொண்டே தெருக்கூத்தை ரசித்துக்கொண் டிருந்தார். மகாபாரதம் — போர்க்கள நிகழ்ச்சிகளைப் பின் னணியாக வைத்து அபிமன்யு வதைப் படலம் என்ற கதையை நடத்திக் காண்பித்தார்கள். பாரதப் போர் ஆரம்பிப்பதற்கு முன்பு களப்பலி என்று ஒரு பலிகொடுக்க வேண்டும்; அதற்கு யாரைத் தேர்ந்தெடுக்கலாம் என்று யோசனை செய்து, கடைசியில் பீமனுடைய மகன் அரவ்வான் என்ற பெரும் வீரனைக் களப்பலி கொடுக்கிற கட்டம் — மக்கள் ஒரே ஆர்வத்தோடு ரசித்துக் கொண்டிருந்தனர். அம்பலத்திற்கு அங்கே புத்தி செல்லுமா; என்ன! அவரு டைய நினைவு எப்போது மணி பனிரெண்டாகும் — தம்பதி களின் தலையை நறுக்கலாம் — ரத்தத்தைக் கிணற்றிலே எப்படித் தெளிக்கலாம் — என்பவைகளைப் பற்றியே சுழன்று கொண்டிருந்தது.

பக்கத்திலே பயபக்தி மரியாதையோடு உட்கார்ந் திருந்த ராமனைக் கூப்பிட்டு, காதிலே ரகசியம் ஏதோ பேசி னர். அதற்கு அவன் பதில் சொல்லும்போது கொஞ்சம் பலமாகவே, "அதெல்லாம் வீட்டைச் சுற்றி காவல் இருக் குங்க—எங்கேயும் ஓட முடியாது!" என்று கத்தினன்.

அம்பலம், அவன் காதைப் பிடித்துத் திருகி, "சத் தம் போடாதே" என்று எச்சரித்து விட்டு, மீண்டும் ஏதோ அவன் காதுக்குள்ளே சொல்லி, அவனை அங் கிருந்து அனுப்பிவைத்தார். ராமனும் தெருக் கூத்தை விட்டுப் பிரிய மனமில்லாமல் பிரிந்தான்.

தெருக் கூத்திலே அரவான் களப்பலிக்கான ஆயத் தங்கள் நடக்கும் கட்டம் ஆரம்பமாகிறது. பாரத யுத்தம் நடந்தால் தான் பூமி பாரம் குறையும் — பூமாதேவிக்கு தலைவலி கொஞ்சம் நீங்கும் — பூமாதேவியின் தலைக் கனத் தைக் குறைப்பதற்காகவே பாரத யுத்தத்தை ஏற்பாடு

செய்து — பச்சைக் குழந்தைகள், பருவ மங்கைகள், பழம் நிகர் பெற்றோர்கள், அனைவரையும் விட்டு அவர்கள் வீட்டுப் போர் வீரர்கள் மாண்டு மடியும்படி செய்யப் போகிறேன் — என்பதாக கிருஷ்ண வேடதாரி, வசனமும் பாட்டும் கலந்து திரௌபதியிடம் தனியாகப் பாடிக் கொண்டிருந்தான். பாட்டு முடிந்ததும் அடுத்தக் காட்சியாக அரவானை இழுத்து வந்து அவன் தலையை வெட்டி களப்பலி கொடுத்தார்கள் பாண்டவர்கள்.

அந்தச் சமயத்திலே தெருக்கூத்து பார்த்துக்கொண்டிருந்த மக்களிடத்திலே பெரும் பரபரப்பு ஏற்பட்டது. அம்பலம் திடுக்கிட்டு எழுந்தார். "இதோ நானும் களப்பலி கொடுத்து விட்டேன்! களப்பலி கொடுத்து விட்டேன்!" என்று பயங்கரச் சிறிப்பு சிறித்துக்கொண்டு, கோரமான முகத்துடனும், கையிலே ஒரு ரத்தம் படிந்த அரிவாளுடனும் தாண்டவன் கூத்தாடிக் கொண்டு வந்தார். அவரது ஆத்திரக் கூத்தைக் கண்டு அஞ்சி நடுங்கிய மக்கள் அவரெதிரே நிற்காமல் ஒதுங்கி நின்றனர். தாண்டவன் அம்பலத்திற்கு நேராகப் போனார். அம்பலத்திற்கும் பயம் தான். ஆனாலும் சமாளித்துக் கொண்டு, அசையாமல் நின்றார். தாண்டவன் மீண்டும் கத்தினார் — "ஹ ஹஹ! அடே அம்பலம்!.....என்னை யாரும் ஒன்றும் செய்யமுடியாது!.....இதோ பார், பட்டாக் கத்தி! பாரடா பார் — இதிலே படிந்திருக்கும் ரத்தத்தைப் பார்!..... இது யாருடைய ரத்தம் தெரியுமா? தாண்டவனை அலட்சியப் படுத்தி — தான்றோன்றித் தனமாக நடத்தினையே திருமணம்; அந்தத் தம்பதிகளின் ரத்தம்!..... தகப்பனுக்கு இஷ்டமில்லாமல், என்னமோ நீதான் பெற்ற தகப்பன் மாதிரி, என் பெண்ணுக்கு ஒரு அணைதப் பயலைக் கட்டி வைத்தாயே; அந்தப் பயலின் பச்சை ரத்தமும், என் பசுங் கிளியின் பாசரத்தமும் படிந்த கத்தியடா இது!...

பார்! பாவி பார்!..... பரம பாதகா — ஊர்க் குடியைக் கெடுக்கும் சண்டாளா! உன்னை எதிர்க்க யாருமில்லை என்ற தைரியத்திலேதானே, பெற்றவர்களைத் துரும்பாக மதித்து — பெண்ணுக்கு மாப்பிள்ளை தேடினாய்; இதோ, உன்னை எதிர்த்து ஜெயித்து விட்டேன் — மாதா பிதா இருவரையும் அலட்சியப் படுத்திய அந்த மானங் கெட்ட பெண்ணையும் பழி வாங்கி விட்டேன் — காலையிலே கல்யாணம்!..... இரவிலே மரணம்! ஹஹஹஹ ..... வெள்ளியம் பலம்! தாண்டவன் தைரியத்தைப் பார்த்தாயா? போய்ப் பார்! உன் ஆசீர்வாதமும் — பாதுகாப்பும் பெற்ற அபாக்யவதியும், அற்பப் பயலும் சவமாகப் படுத்திருக்கும் காட்சியைப் போய்ப் பார்! போடா போ ....."

தாண்டவனை, யாராலும் நிறுத்த முடியவில்லை. யாராலும் தடுக்க முடியவில்லை. வெறி கொண்டவனைப்போல ஆடினார்.

வெள்ளியம்பலம் காதலர்களைப் பலி கொடுக்க கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். இப்போதே காரியமே முடிந்துவிட்டது என்று கேட்டு களிப்படையாமல் இருப்பாரா? ஆனலும் மனதில் எழுந்த மகிழ்ச்சியை வெளியே காட்டிக் கொள்ளாமல், "அடப் பாவி! ஆசைக் காதலர்களைக் கொன்று விட்டாயா? எனக்கு அப்போதே தெரியும் — அதற்காகத் தானே காலை முதல் அவர்களுக்குக் காவல் போட்டு வைத்திருந்தேன்..." என்று அங்கலாய்த்துக் கொண்டார். தெருக் கூத்திலே தொடர்ச்சி இல்லை — ஊரார் திகைத்து நின்றனர் — தாண்டவமே னெய்யருக் கேற்றபடி தாண்டவமாடிக் கொண்டிருந்தார். என்ன செய்வதென்று யோசித்துக் கொண்டிருந்தவரின் கண்ணிலே சாமன் பட்டான். உடனே அம்பலம் ஊர்மக்களைத் தூண்டி விட்டு, தாண்டவனைப் பிடித்து நிறுத்து

மாறு கூறினர். அம்பலமும் தாண்டவனை எதிர்த்தார். ஊரார் சூழ்ந்துவிட்ட காரணத்தால் தாண்டவன் அடங்கி, கையிலேயுள்ள கத்தியை எறிந்துவிட்டு நின்றார். இதுதான் சமயமென்று ஊரார் தாண்டவனைக் கட்டிப் போட்டார்கள்.

விஷயம் தெரிந்த தாண்டவனின் மனைவி அஞ்சலை ஓடோடி வந்தாள். கட்டுண்டு கிடக்கும் தாண்டவன் மீது விழுந்து, "அடப் பாவி! என் மகளை அநியாயமாகக் கொன்று விட்டாயே!" என்று அலறினாள்; மயங்கி விழுந்தாள்.

இதுதான் சமயமென்று, அம்பலம்; ராமன் வந்த பக்கமாக நழுவினார் ராமன், கையிலே ஒரு பாத்திரத்துடன் வந்து கொண்டிருந்தான். பாத்திரத்தைப் பிடித்திருந்த அவன் கரங்கள் நடுங்கிக் கொண்டிருந்தன. அம்பலம் அவனிடம் ஓடிவந்து "ராமா! என்ன இது?" என்று பரபரப்போடு கேட்டார்.

ராமன், குரல் நடுங்கியவாறு, "எஜமான்! நமக்கு முன்னாடியே, தாண்டவன் காரியத்தை முடித்து விட்டான்" என்றான்.

"அது தெரியுமடா எனக்கு — இருவரும் செத்தே விட்டார்களா?" என்றார் அம்பலம்.

"துண்டாடிவிட்டான் எஜமான், துண்டாடிவிட்டான்" — என்று கண்ணீர் வடித்தான் ராமன்,

"சபாஷ்! ..... இது என்ன?" என்று பாத்திரத்தைப் பார்த்தார்.

"இது அவர்கள் இருவருடைய ரத்தம் -- அய்யோ! இரண்டு பேர் கழுத்திலே இருந்தும் நீர் ஊற்று மாதிரி

ரத்தம் குபுகுபுன்னு கொட்டுதுங்க! பாக்க சகிக்கலீங்க!... கட்டில் அறையிலே ஒருத்தரோட ஒருத்தர் சந்தோஷமாக முத்தம் கொடுத்துக்கொள்ளும்போது, இரண்டு பேர் தலையையும் பனங்காய் மாதிரி சீவிட்டான் பாபிப் பயல்!"

"அதிருக்கட்டுமடா! இதை ஏன் இங்கு எடுத்துக் கொண்டு வந்தாய்?"

"மாயாண்டிக் கிழவர்தான் சொன்னார், அதன்படி எடுத்து வந்தேன். கொஞ்ச நேரமானால் ரத்தம் உறைந்து விடும் பிறகு தெளிக்க முடியாது! இப்போதே உங்களையும் அழைச்சிகிட்டு கிணற்றங் கரைக்கு வரும்படி அவர் தான் சொன்னார். அவர், ஆட்களையெல்லாம் அழைத்துக் கொண்டு, புதையல் எடுப்பதற்குத் தோதா அங்கேயிருப்பதாகவும் சொன்னார், எஜமான்."

"அப்படியா? வா போவோம்!" என்று ராமனுடன் அம்பலம், கிணற்றடி நோக்கிப் புறப்பட்டார்.

ரத்தக் கிண்ணத்துடன் ராமன், தடுங்கியவாறு அவர் பின்னே போய்க் கொண்டிருந்தான். கிணற்றடியிலே ராமன் சொன்னவாறு, அம்பலத்தின் ஆட்கள் நின்று கொண்டிருந்தார்கள். அம்பலம் அவர்களைப் பார்த்து, "மாயாண்டி எங்கே?" என்று கேட்டார்.

"இதோ வந்துவிட்டேன். ஜெயம்! ஜெயம்!" என்று மகிழ்ச்சியோடு கத்தியபடி மாயாண்டி அங்கு வந்து, அம்பலத்தின் அருகாமையிலே நின்றார்.

"பார்த்தீரா கிழவரே! நாம் செய்ய வேண்டிய காரியத்தை அந்தத் தாண்டவனே செய்துவிட்டான்!" என்று சிரித்தார் அம்பலம்.

"ஆமாம்!" என்று தலையசைத்தவாறு, மாயாண்டி ராமனின் கையிலேயிருந்த பாத்திரத்தைப் பார்த்தார். அவரது முகத்திலே மாறுதல்!

அதைக் கவனித்த அம்பலம், "என்னய்யா; உம் இருதயத்தில் இரக்கம் வந்து புகுந்துகொண்டதோ, இந்த ராமன் பயலைப் போல!" என்று சிரித்தபடி கேட்டார் அம்பலம். "இல்லே; இல்லே! என்ன இருந்தாலும், என்னோடு சிறிது நாளாவது பழகியிருக்கிறான்—பாவம்! இந்தத்துரை!" என்றவாறு, மாயாண்டி கண்களைத் துடைத்துக்கொண்டார். அவர் தேகம் ஏனோ பதறியது!

"உலகத்திலே எந்தக் காதலருக்கும் ஏற்படமுடியாத முடிவு இது! அம்பிகாபதி அமராவதி கூட இப்படிச் செத்ததாகக் கதை இல்லே. இருவரின் ரத்தமும், ஒரே பாத்திரத்தில்! உண்மைக் காதலர்களுக்கு இது பூரிப்பான முடிவு! இந்த மாதிரி ஒரு புண்யம் நமக்குக் கிடைக்கப் போவதால் தான், இவர்களைக் கொலே செய்த பாவத்திலிருந்து நமக்கு விடுதலே கிடைக்குமென நம்புகிறேன்"—கிழவர் கலங்கியவாறு இப்படிப் பேசினர்.

"கொலே பண்ணிய பாவம் நமக்கு ஏனய்யா வருகிறது? அதுதான் தாண்டவனைச் சேரப் போகிறதே!" என்று கேலி பேசிவிட்டு "ஆகவேண்டிய காரியத்தைப் பார்ப்போம்" என்று அவசரப் படுத்தினர் அம்பலம்.

"ஆகவேண்டியதென்ன, தெளிக்கவேண்டியதுதான்" என்று, ராமனிடமுள்ள பாத்திரத்தை வாங்கி, அம்பலத்திடம் கொடுத்தார் மாயாண்டி.

அம்பலம், தன் ஆட்களைப் பார்த்து "டேய்!—இதை நான் கிணற்றிலே தெளித்ததும், படீர் என புதையல் வெடித்துக் கிளம்பும்—எல்லாப் பசங்களும் ஜாக்கிரதையா இருங்கள்!" என்று கூறியவாறு, பாத்திரத்திலுள்ள ரத்தத்தை அள்ளி கிணற்றிலே தெளித்தார்.

அவர் எதிர்பார்த்தபடி திடீரென எதுவும் வெடித்துக் கிளம்பவில்லே. பாத்திரத்திலுள்ளது முழுவதையும்

கிணற்றிலே ஊற்றினர். எதிரொலி எதுவுமில்லை. மாயாண்டியைப் பார்த்தார். அவசரப் படாதீர்கள். என்பது போல் மாயாண்டி தலையை அசைத்தார். அம்பலம் மெதுவாக—ஆவலுடன் கிணற்றுக்குள்ளே எட்டிப் பார்த்தார். தகதகவென ஏதோ மின்னிக் கொண்டிருந்தது. அம்பலத்தின் கண்கள் விரிந்தன. எல்லோரையும் பார்க்கச் சொன்னர். 'டார்ச்' விளக்கை கிணற்றுக்குள்ளே அடித்தனர் பளபளவென மின்னும் பெரிய பெட்டிதான் அது. எல்லோரும் ஆவலோடு கிணற்றுக்குள்ளே பார்த்தபடி இருந்தனர்.

"என்ன செய்யலாம் மாயாண்டி?" எனக் கேட்டார் அம்பலம்.

"இப்போதுதான் நாம் எதிர்பார்த்தது புறப்பட ஆரம்பித்திருக்கிறது — இதை எடுத்தால் அடுத்தது வரும் என நினைக்கிறேன்" என்றார் மாயாண்டி மகிழ்ச்சியுடன்!

அம்பலம், ஆட்களுக்குக் கட்டளையிட்டார். நாலைந்து பேர் கிணற்றுக்குள்ளே இறங்கினர். இறங்கியவர்கள் "வெள்ளிப் பெட்டி! வெள்ளிப் பெட்டி!" எனக் கத்தினர்கள். அம்பலமும், மற்றவர்களும், கண்ணை இமைக்காமல், திறந்த வாய் மூடாமல், கிணற்றுக்குள்ளே பார்த்துக் கொண்டே யிருந்தனர். பெட்டியை மெதுவாகத் தூக்கி, மேலேயிருந்து அனுப்பப்பட்ட கயிற்றிலே கட்டி விட்டார்கள். அம்பலமும் மற்றவர்களும் பெட்டியை கிணற்றங் கரையிலே வைத்தனர். அம்பலம், தாங்காத ஆர்வத்தோடு, பெட்டியைத் தடவிப் பார்த்தார். ஆட்கள் கூறியபடி அது வெள்ளிப் பெட்டியல்ல — ஈயமாக இருக்கவேண்டும். அல்லது வேறு ஏதாவது உலோகமாக இருக்க வேண்டும். அதைப் பற்றியெல்லாம் அவர் கவலைப்படவே

யில்லை. உள்ளேயிருப்பது பற்றித்தான் அவருக்குக் கவலை யெல்லாம். பெட்டியைக் கஷ்டப்பட்டுத் திறந்தார். உள்ளே இன்னொரு பெட்டி இருந்தது. அதைத் திறந்தார். அதற் குள்ளே இன்னொரு பெட்டியும் — "இதையும் திற — புதையல் காண்பாய்!" என்ற எழுத்துக்களும் காணப்பட் டன. அம்பலத்தின் ஆனந்தத்திற்கு எல்லையில்லை. அவ சர அவசரமாக மூன்றுவது பெட்டியையும் திறந்தார். அதிலே ஒரு வேலைப்பாடமைந்த ஓலையிருந்தது, அந்த ஓலையை எடுத்துப் பார்த்தார். அம்பலத்தின் முகம் திடீ ரென மாறியது! பாத்திரத்திலே மிச்சம் ஒட்டிக்கொண் டிருந்த ரத்தத்தின் சிகப்பையும் தோற்கடிக்கிற விதத் திலே அவரது முகமும், கண்களும் சிவந்தன. ஓலையிலே காணப்பட்ட எழுத்துக்களை திரும்பவும் படித்தார்; கண் களைக் கசக்கிக்கொண்டு! அதிலே இருந்த வாசகம் இது தான்!

"மனிதனே! பொன்னைத் தேடி அலையாதே! முத லில் உன் மனதையே பொன்னாக்கிக் கொள்!"

அம்பலத்தினுல் அங்குநிற்கவே முடியவில்லை! "எங்கே அந்த மாயாண்டிக் கிழவன்? என்னை ஏமாற்றி விட்டான்! உடனே அவனைக் கொல்லுங்கள்!" என்று கத்தினார் அம்பலம்.

எல்லோருமே "மாயாண்டி எங்கே?" என்று பார்த் தனர். மாயாண்டி, அங்கே இல்லை; எங்கேயோ போய் விட்டார். போய்விட்டாரா; அல்லது அவரும் அம்பலத் தோடு சேர்ந்து ஏமாந்து போய்—இனி நின்றால் கொன்று விடுவார்கள் என்ற பயத்தில் ஓடி விட்டாரா? — இப்படி ஒரு கேள்வி அங்கிருந்தவர்கள் உள்ளங்களிலே எழுந்தது.

49

மாயாண்டியைக் காணவில்லை யென்றதும் அம்பலம் தன் ஆட்களுடன் வீடு நோக்கி விரைந்தார். வீட்டின் பக்கமிருந்து ஜுவாலை தெரிவதைக் கண்டு திடுக்கிட்டார். "அது என்ன ஜுவாலை" என்று அவர் கேட்பதற்குள், யாரோ இருவர் அவர் எதிரே ஓடிவந்து, "எஜமான்! எஜமான்!! நம்ப வீட்டைக் கொளுத்திவிட்டார்கள்!" என்று அலறினார்கள். அம்பலம் ஆத்திரத்தோடு ஓட ஆரம்பித்தார். மூரடர்களும் கூடவே ஓடினர்கள். ராமனுக்கு மாத்திரம் இந்தச் சேதி அவ்வளவு பரபரப்பை அளிக்கவில்லை. தலையை ஆட்டிக்கொண்டு சற்று மெதுவாகவே நடந்தான் அவன்.

வெள்ளியம்பலம் வீதி முனையில் இருந்தபடி வீட்டை அண்ணாந்து பார்த்தார். தேர் எரிவதுபோல் வீடு எரிந்து கொண்டிருந்தது. மேகங்களைத் தொடுவதற்கு தீ நாக்குகள் முயற்சித்துக் கொண்டிருந்தன. அம்பலம் அப்படியே அசைவற்று நின்றார். ஊர் மக்கள் அனைவரும், தெருக் கூத்தை எப்படி ரசித்துக் கொண்டிருந்தார்களோ, அது போலவே தீ எரிவதையும் ரசித்துக்கொண்டு நின்றார்கள். கட்டப்பட்டு நிற்கும் காண்டவனின் குரல் மட்டும் ஆவேசமாக ஒலித்தது.

"எரியட்டும் — மாப்பிள்ளையும் பெண்ணும் மங்களகரமாக எரிந்து சாம்பலாகட்டும்! நான் வெட்டிப் போட்ட இரண்டு பிணங்களுக்கும் வெள்ளியம்பலம் வீடுதான் சரியான சுடுகாடு! — மருங்கப்பள்ளத்து மக்களே! காளைக் காலையிலே எல்லோரும் தயாராக வந்து விடுங்கள் — இந்த மயானத்திலேதான் மாப்பிள்ளை பெண்ணின் ஆத்மா சாந்தி அடைய பால் தெளிக்க வேண்டும். புரோகிதர்கள் யாராவது இருந்தால் — இன்று முதல் பதினைந்தும் நான்

காலையிலே வந்து விடுங்கள்! கருமாதிக்கு தட்சணை தரப்படும்! கொத்தனர்களே! நீங்களும் கேளுங்கள் — நெருப்பிலே சாம்பலாகப் போன காதலர்களுக்கு இங்கேதான் நினைவு மண்டபம் எழுப்ப வேண்டும் — இப்போதே அதற்கான கூலியை அம்பலத்திடம் பேசிக்கொள்ளுங்கள்! ..... ஹஹஹ .....ஹே அம்பலம்! என்னை எதிர்த்தா என் மகனுக்குக் கல்யாணம் செய்கிறாய் — முடிந்ததா உன்னால்? ... அதோ பார் — ஆனந்தமாக எரிகிறது உன் வீடு!"

தாண்டவன் பேச்சைக் கேட்டுக்கொண்டிருக்க அம்பலத்தால் முடியுமா? தீயினும் கொடிய வார்த்தைகளாக அல்லவா அவை இருந்தன! அவரது பலங்கொண்ட மட்டும் தாண்டவனை அறைந்தார். கன்னத்திலே அறை விழுந்ததும், தாண்டவனின் கட்டுக்களும் தெரித்தன. அம்பலத்தின்மீது பாய்ந்தார். இருவரும் தெருவிலே உருண்டனர். தாண்டவனை முரடர்கள் சூழ்ந்து கொண்டு தாக்கினர்.

தாண்டவனிடமிருந்து விடுபட்ட அம்பலம், ஊர் மக்கள் மீது சீறி விழுந்தார். வீட்டை அணைப்பதற்கு யாரும் முன்வராமல் வேடிக்கைப் பார்ப்பதாக அவர் எண்ணினார்.

"இந்த ஊர் பசங்கள் அத்தனை பேரையும் விரட்டுங்கள்!" என்று ஆட்களுக்குக் கட்டளை யிட்டார். முரடர்களும் ஊர்மக்கள் மீது பாய்ந்தனர். அம்பலத்திற்கு என்ன செய்வது, என்ன சொல்வது என்றே புரியவில்லை. "மாயாண்டியை யாருடைய வீட்டிலே ஒளித்து வைத்திருக்கிறீர்கள் — மரியாதையாகச் சொல்லி விடுங்கள்!" என்று வாட்டுக் கூச்சல் போட்டார்.

யாரிடமிருந்தும் பதில் வரவில்லை அவருக்கு, மாயாண்டி தன்னை ஏமாற்றிவிட்ட கோபம் வேறு — வீடு

ளரிந்த சோகம் வேறு — தாண்டவன் தன்னை எதிர்த்து வெற்றிபெற்று விட்டானே என்ற அவமானம் வேறு — இவ்வளவுக்கும் மேலாக அந்தப் பிணங்களையும் காண முடியாத காரணத்தால் ஏற்பட்ட குழப்பம் வேறு — எல்லாம் சேர்ந்து, அவர் எல்லா வீடுகளையும் சோதனை போட்டு மாயாண்டிக் கிழவனைக் கண்டு பிடிக்குமாறு உத்திரவு போட்டார். மூரடர்களுக்குக் கேட்கவா வேண்டும்! வீடுகளை முற்றுகையிட்டனர். சட்டிப் பானைகள் வெளியே வீசப்பட்டன. கூரைகள் பிய்த்தெறியப்பட்டன. குழந்தைகள் தூக்கி எறியப்பட்டனர். பெண்கள் இழிவாக நடத்தப்பட்டனர். கிராமமே அல்லோலகல்லோலப் பட்டது. வயதானவர்கள், வாலிபர்கள் என்று பாராது எல்லோரையும் பந்தாடிப் பரவசப் பட்டனர் அம்பலத்தின் ஆட்கள்!

அம்பலத்தின் ஆட்களை எதிர்க்கும் திராணியற்று மூலைக்கொருவராக ஓடினர் மக்கள். இதுதான் சமயமென்று கண்ட காலிகள் தாங்கள் கண் வீசி வைத்திருந்த கன்னிப் பெண்களின் கற்பைச் சூறையாடிக் களித்தனர். மருங்கப்பள்ளம் பிணக் காடாக மாறவேண்டும் என்ற நோக்கத்தோடு அம்பலம் தன் ஆட்களைத் தட்டிக் கொடுத்தார். தனக்குத் தாண்டவனால் ஏற்பட்ட அவமானத்தைப் பற்றிப் பேசுவதற்கு மருங்கப்பள்ளத்திலே யாரும் மிச்சமிருக்கக் கூடாது என்பது அவரது எண்ணம்.

மூரடர்களின் படை தாண்டவனின் வீட்டிலேயும் நுழைந்தது. அவர்களை வீட்டுக்குள்ளே நுழைய விடாமல் தாண்டவன் தடுத்தார். அவரது தலையிலும், கைகால்களிலும் சரியான காயங்கள் ஏற்படவே தாண்டவன் ஓடி விடுவதைத் தவிர வேறு வழியில்லாமற் போயிற்று!

தாண்டவன் ஓடியதும் — அந்தத் தடியர்களை அஞ்சலி எதிர்த்தாள், தன் கண்ணீரால்! அவர்களுக்குக் கண

னீரின் மதிப்பு தெரியாதே — அதனல் அஞ்சலையைத் தூர எறிந்துவிட்டு வீட்டுக்குள்ளே நுழைந்தனர், மாயாண்டியைத் தேடுவதற்கு! வீடெங்கிலும் சூறையாடினர் — மாயாண்டி காணப்படவில்லை. பலகையால் செய்யப்பட்ட சதுரமான குதிர் ஒன்று இருந்தது. அதிலே முரடர்களின் கோடரிகள் பாய்ந்தன. குதிர் பிளக்கப்பட்டது. அதற்குள்ளேயிருந்து "ஆ!" என்ற பெண்ணின் குரல் கேட்டது. அனைவரும் திடுக்கிட்டனர். கோடரியினல் காயம் பட்ட பரிமளாவை அணைத்தபடி துரை, வெளியே வந்தான். முரடர்கள் சற்று நேரம் திகைத்தனர். துரை, அவர்களை எதிர்க்கத் தொடங்கினன். அவனுடைய கமடு வீச்சுக்கு முன்னே நிற்க மாட்டாமல் முரடர்கள் ஓடினர்கள்.

அவர்களைத் துரத்தியபடி துரையும் ஓடி வந்தான். ஓடிய முரடர்கள், துணைக்கு ஆட்களை அழைத்தார்கள். துரைக்கும், அவர்களுக்கும் கடுமையான சண்டை — அவர்களிடமிருந்து விடுபட்ட துரை, ஓடிக் கொண்டிருக்கும் ஊர் மக்களைத் தடுத்து நிறுத்தி, "கோழைகளே! என் ஓடுகிறீர்கள்? மெள்ளியம்பலம் என்ன, இந்த ஊருக்கு ராஜாவா? வெட்கமில்லையா உங்களுக்கு? உங்களது இரும்புக் கரங்கள், அந்த இருதயமற்றவனின் முகத்துக்கு நேரே உயரட்டும்! — அவனை எதிர்க்க யாரும் அஞ்சாதீர்கள்! எனக்கும் பரிமளாவுக்கும் அவன் நடத்திய திருமணம் — நல்ல எண்ணத்தோடு நடத்தப்பட்டதல்ல — புதையலை எடுப்பதற்கு புதுமணத் தம்பதிகளின் ரத்தம் வேண்டும் அவனுக்கு! அதனல்தான் அவ்வளவு அக்கரையோடு அவன் அந்த விவாகத்தை நடத்தினன். எங்களைக் கொன்றுவிட்டு அந்தப்பழியைத் தாண்டவன் மீது போடவும் திட்டம் தயாரித்தான் — மாயாண்டிக் கிழவரின் தந்திரமான திட்டங்களால் — தாண்டவனின் உள்ளம் மாற்றப்

பட்டு, நாங்களும் தப்பிவேனும் — தப்பிவிட்ட எங்களையும், தவறு எதுவும் செய்யாத உங்களையும் — தாக்குமாறு கட்டளையிட்டு காட்டுராஜா தர்பார் நடத்தும், அந்தக் கயவனை எதிர்த்து முஷ்டியை உயர்த்துங்கள்! உம்—மருங்கப்பள்ளத்து மக்கள் மானமில்லாதவர்கள் என்ற பட்டம் பெறுதீர்கள்! கோழைகளாய் — மோழைகளாய்த் திரிய எண்ணுதீர்கள்; உங்களுக்குத் துணையாக நான் இருக்கிறேன் — அதோ, என் நண்பன் ஆனந்தனும் மற்றவர்களும் வருகிறார்கள். அவர்கள் மிகவும் தைரியசாலிகள்! அம்பலத்தின் வீட்டிலேயிருந்து எங்களை மீட்ட அசகாயசூரர்கள்! அவர்களும் நம்மோடு சேர்ந்து கொள்வார்கள்! உம் — ஓடாதீர்கள் — எதிர்த்து நில்லுங்கள்!" என்று வீராவேசத்தோடு பேசினான்.

அதற்குள் ஆனந்தன் கோஷ்டியாரும் அங்கு வந்து சேர்ந்தார்கள். அவர்கள் அனைவரும் நிற்குமிடம் நோக்கி முரடர் படையும் பாய்ந்து வந்தது. இப்போது ஊர் மக்கள் துரையின் தலைமையிலே முரடர்களை எதிர்க்கத் துணிந்தார்கள். மருங்கப்பள்ளம் போர்க்களம் போலக் காட்சியளித்தது. அம்பலமும் அந்தக் களத்திற்கு வந்து சேர்ந்தார். துரை உயிரோடு இருப்பதைக் கண்டு அவர் ஆச்சரியத்தில் முழுகினர்.

"என்னைப் பார்த்து மட்டும் ஆச்சரியப்படாதே அம்பலம்! அதோ பார் என் பரிமளாவை" என்று சுட்டிக் காட்டி, அவளை எடுத்து அணைத்துக் கொண்டான் துரை.

பரிமளாவின் தலையிலே, கோடரி காயத்திலுல் ரத்தம் வழிந்தபடியிருந்தது.

"என்ன திகைக்கிறாய் தியவனே! நீ கட்டிய கோட்டையெல்லாம் பொடிப் பொடியாகிவிட்டது! தாண்டவனைக்

கொலைகாரராக நிறுத்தி விட்டு, எங்கள் குருதியைத் தெளித்துப் புதையலைக் கொள்ளை அடிக்கத் திட்டம் போட்டாயே; அந்தத் திட்டம் தீயிலே கருகி விட்டதடா பாவி! திருமணம் — தெருக் கூத்து — சோபன முகூர்த்தம் — நடுநிசியிலே பலி! பாதகா, பலி — பலிக்காமல் போய் விட்டதடா! காதல் வெற்றி பெற்று விட்டது! நேர்மை ஜெயித்து விட்டது! மாயாண்டிக் கிழவரின் தந்திரங்கள் வாலை மாலை சூடிவிட்டன! என்னுடைய நண்பர்கள், வெட்டி வா என்றுரைத்தால் கட்டி வரும் வீரர்கள். அந்தக் கடமையின் சிகரங்கள் — நினைத்த காரியத்தைச் செய்து முடித்து விட்டார்கள்! புதையலா வேண்டும் உனக்குப் புதையல்! உனக்குப் புத்தி வரட்டும் என்றுதானே, மாயாண்டிக் கிழவர் — மனைதப் பொன்னாக்கிக் கொள்ளும் மந்திரத்தைப் புதையலாகக் கொடுத்தார்! வரவில்லையே; ஏன்? புதையல், இருதயமுள்ளவனுக்குக் கிடைக்க வேண்டுமடா! உன்னைப் போல காலியான உள்ளத்திலே இருக்கக் கூடியது அல்ல அது என்பதை இப்போதாவது உணர்ந்து கொள்!"

துரை பேசிக்கொண்டே போனான். அம்பலம் தன் ஆட்களுக்கு ஜாடை காட்டினர். அவர்கள் அவன் மீது தாவினர். மீண்டும் ரகளை! அப்போது ஒரு ரேக்ளா வண்டியிலே மாயாண்டிக் கிழவர் அந்தப் பக்கமாக வந்தார். வந்தவர், தான் வருவதை அந்தக் கூட்டத்தார் உணர வேண்டுமென்பதற்காக உரக்கக் கனைத்தார்.

அவரை அம்பலம் பார்த்து விட்டார் "அதோ அந்தக் கிழவனைப் பிடியுங்கள்!" என்று கத்தினர் அம்பலம். ஆட்கள் கிழவர் பக்கம் ஓடினர். கிழவர், ரேக்ளாவை வேகமாக ஓட்டினர். துரையிடமிருந்து முரடர்களைப் பிரிக்க வேண்டுமென்பதற்காகவே அவர் அப்படிச் செய்தார் என்று அம்பலத்திற்குத் தெரியாது.

ரேக்ளாவைத் துரத்திக் கொண்டு அம்பலமும், ஆட்களும் ஓடினர். அம்பலம் இன்னொரு ரேக்ளாவில் ஏறிக் கொண்டு, கையிலே ஒரு கத்தியுடன் மாயாண்டியின் ரேக்ளாவைத் துரத்தினர். ஓடிக்கொண்டிருந்த மாயாண்டியின் ரேக்ளாவில், யாருமறியாமல் தாண்டவனும் ஏறிக் கொண்டார்.

எப்படியும் மாயாண்டியைப் பிடித்துவிட வேண்டுமென்ற ஆத்திரத்திலே அம்பலம் தன் ரேக்ளாவை முடுக்கி விட்டார். முரடர்களை எதிர்த்து, அவர்களை முழுவதும் விரட்ட முடியாமல் திணறிக் கொண்டிருந்த துரை, மாயாண்டியை அம்பலம் துரத்திக்கொண்டு போவதை அறிந்தான். ஆனந்தனிடம் ஏதோ காதிலே சொல்லிவிட்டு பரிமளாவை அணைத்தபடி வேறு பக்கம் ஓடினான். அங்கு தயாராக இருந்த ரேக்ளாவிலே அவனும் பரிமளாவும் ஏறிக் கொண்டார்கள். அவனிடம் ஆனந்தன் ஓடிவந்து, "கரையில் படகு தயாராக இருக்கிறது. அதில் ஏறிக் கொண்டு தப்பி விடுங்கள். நான் போலீசாரை சந்திக்கப் போகிறேன்." என்று கூறினான். சரியென்று தலையசைத்து விட்டு, துரை பரிமளாவுடன் ரேக்ளா வண்டியில் புறப்பட்டான்.

மாயாண்டியும், தாண்டவனும் சென்ற ரேக்ளா, மதுரை நோக்கிப் பறந்து கொண்டிருந்தது. அம்பலமும் அதைத் தொடர்ந்து வண்டியை முடுக்கி விட்டார். அதே திக்கில் துரையும், பரிமளாவும் ரேக்ளாவில் வெகு வேகமாகப் போய்க் கொண்டிருந்தனர்.

50

கிழக்கு வெளுக்க ஆரம்பித்துவிட்டது. மதுரைக்கு அருகே கரையை நினைத்துக்கொண்டிருக்கும் கடல்

அலைகளின் பக்கம் மாயாண்டிக் கிழவரின் ரேக்ளா வந்து நின்றது. தாண்டவனும் அவரும் பரபரப்போடு கீழே இறங்கினர்கள். கரையோரத்திலே ஒரு சிறு படகு ஆள் யாருமின்றி நின்று கொண்டிருந்தது. மாயாண்டி, அந்தப் படகிடம் ஓடினர். ஒருக் கணம் யோசித்தார். பிறகு அதில் ஏறி உட்கார்ந்து கொண்டார். அந்தச் சிறிய படகுக்கேற்ற துடுப்பும் அதிலேயே இருந்தது.

"தாண்டவா! இது துரை, பரிமளாவுக்காக காத்திருக்கும் படகு! பாவாயில்லை — அவர்கள் எப்படியும் ஆனந்தன் உதவியால் தப்பி விடுவார்கள். இப்போது அவசரமான காரியம் என் உயிர் பாதுகாக்கப்பட வேண்டியதுதான்! சரி; நான் புதுப்பட்டினம் போகிறேன் — பரிமளா, துரை ஜாக்கிரதை!" என்று கூறியவாறு மாயாண்டி படகைச் செலுத்த ஆரம்பித்தார்.

கரையிலே நின்று கொண்டிருந்த தாண்டவனின் காதில் ரேக்ளா வண்டி வரும் சப்தம் கேட்கவே, அவர் மாயாண்டியை நோக்கி, "சிக்கிரம்! சிக்கிரம்!!" என்று எச்சரித்தார். மாயாண்டியும் படகை வேகமாகச் செலுத்தத் தொடங்கினர்.

தூரத்தில் அம்பலத்தின் வண்டி வருவது கண்ட தாண்டவன், ரேக்ளாவை இழுத்து மறைவாக நிறுத்தி விட்டு, தானும் ஒரு இடத்தில் மறைந்து கொண்டார்.

படகிலே செல்லும் மாயாண்டி, அம்பலத்திடமிருந்து தப்பிவிட்டோம் என்ற பெருமூச்சோடு, தன் மடியை அவிழ்த்துப் பார்த்தார். பல நாட்களாக அவர் பத்திரப் படுத்தி வைத்திருக்கும் 'புதையல் ரகசியத்தை' மகிழ்ச்சியோடு கண்களிலே ஒத்திக் கொண்டார்.

"நீ தப்பிவிட்டாய்! போராளைசக் காரனிடமிருந்து நீ மட்டுமல்ல; துரை, பரிமளா இருவரும் தப்பிவிட்டார்கள்! எல்லாமே உன் சக்திதான்! உன்னை நல்ல காரியத்துக்குப் பயன்படுத்தக் கூடிய நல்லவர்கள் பலர் எனக்குக் கிடைத்துவிட்டார்கள். உன் மூலம் புதைந்து கிடக்கும் தங்கப் பாளங்களை எடுப்பேன் — வரண்டு கிடக்கும் குடும்பங்களிலே வளம் உண்டாக்குவேன். என்னுடைய இலட்சியக் கனவு ஈடேறும் காலம் வந்துவிட்டது" என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டார் கிழவர். படகில் இருந்தபடியே மணலாவை அண்ணாந்து நோக்கினர்.

அந்த மணலாவின் உச்சியிலே நின்றுகொண்டு ஒரு நாள், ஆகாயத்தில் மேயும் மேக மந்தைகளை நோக்கி, "மேகங்களே! உங்கள் சாவுக் கண்ணீர் மாநிலத்தை வாழவைக்கவும் உதவுகிறது. சில சமயம் அழிக்கவும் உதவுகிறது. ஆனாலும் உங்கள் சாவுக் கண்ணீர் வாழ்க! அதுபோல என் சாவுக் கண்ணீர் யாரையும் வாழவைக்காதா?" என்று அவர் ஏக்கக் குரல் கிளப்பினர். அப்போதெல்லாம், எப்படியாவது அந்தப் புதையல் ரகசியத்துடன் வெளி நாட்டுக்கு ஓடிவிடவேண்டும் என்ற சூழ்நிலை இருந்தது. கொடியோன், சுயநலக்காரன், போராளை பிடித்தவன் — அனைவருமே புதையல் ரகசியம் அறியத் துடித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய கையிலே அது சிக்கி விட்டால், தன்னுடைய லட்சியம் நிறைவேறாது என்று மாயாண்டிக்கு பயம். அதனால் அது யாருடைய கையிலும் கிடைக்க வேண்டாம்; தான் சாவதற்குள் தன்னுடைய லட்சியம் பலிக்க ஏதாவது வழி கிடைக்குமா என்று காத்திருக்கலாம்; அதுவரை புதையல் ரகசியத்தைக் காப்பாற்றி வைத்திருக்க இந்த நாடு வசதியில்லை, என்கின்ற தீர்மானங்களோடுதான் அவர் கள்ளத் தோணி மார்க்கமாக இலங்கை செல்ல ஆயத்தமானார்.

அதற்குள்தான் இத்தனை புயல்கள் மாறி மாறி அடித்துவிட்டன. அனைதையெல்லாம் நினைத்துக்கொண்டு, புதுப்பட்டினம் நோக்கி படகை செலுத்திக்கொண்டிருந்த கிழவரின் கண்களிலே கரையோரத்திலே அம்பலத்தின் சேக்ளா வந்து நிற்பது தெரிந்தது.

அம்பலம் கோபாவேசமாக வந்து இறங்கியதைக் கண்ட தாண்டவன், நன்றுகப் பதுங்கிக் கொண்டார். அம்பலத்தின் கையிலேயிருந்த பளபளப்பான கத்தி வேறு தாண்டவனைப் பயமுறுத்தியது. அம்பலம், மாயாண்டிக் கிழவனைக் கூவி அழைத்து, "நில்! நில்!" என்று கத்தினார். கிழவரின் படகும் அதிக தூரம் போகாத காரணத்தால், அம்பலத்தின் கூச்சல் அவர் காதிலே விழுந்து கொண்டுதானிருந்தது. அம்பலம் கடலிலே இறங்கி, கிழவரின் படகு நோக்கி நடக்க ஆரம்பித்தார். கிழவருக்கு அச்சம் பிறந்தது. அம்பலம், கடந்தே தன் படகிடம் வந்து விட முடியுமா என்று யோசித்தார். கையிலேயிருந்த துடுப்பை கடலுக்குள் சங்குத்தாக செலுத்திப் பார்த்தார். ஏறத்தாழ ஒரு ஆள் உயரத்துக்குக் குறைவான ஆழத்திலேதான் அவர் படகு போய்க் கொண்டிருந்தது எனபதை உணர்ந்து திடுக்கிட்டார். அம்பலம், கடலில் நடந்து வருகிறோம் என்பதையே மறந்துவிட்டு கிழவரை நோக்கி வந்து கொண்டிருந்தார், எரியும் கண்களோடு!

கிழவர், சக்தி முழுதும் பிரயோகித்து படகை செலுத்தினார். மார்பளவு தண்ணீரில் நடந்து கொண்டிருந்த அம்பலம், மாயாண்டி கைக் கெட்டாத தூரத்திற்குப் போய்விட்டார் என்பதை உணர்ந்தார். இனியும் நடந்தால் மூழுகி விடுவோம் என்பது தெரிந்து விட்டது.

மாயாண்டியும், படகை இப்படியும் அப்படியுமாக செலுத்தி அம்பலத்திற்கு அகப்படாதவாறு போக்குக்

காட்டினுரே தவிர, அம்பலத்திடமிருந்து விடுபட்டு அதிக தூரம் போய்விட முடியவில்லை. அம்பலம், கிழவரைப் பார்த்து, "மரியாதையாகத் திரும்பி விடு!" என்று கத்தினர்.

"உன் மிரட்டல்களுக்கு நான் பயப்பட மாட்டேன். அம்பலம்! நீ ஆடிய ஆட்டமெல்லாம் போதும்! இனிமேலாவது அறிவோடு நடந்துகொள்! காட்டுராஜா தர்பார் கள் அதிக நாள் நீடிப்பதில்லை! நான் உன்னை ஏமாற்றி விட்டேன் என்றுதானே இவ்வளவு ஆத்திரப் படுகிறாய்— நானு உன்னை ஏமாற்றினேன்? இல்லையப்பா இல்லை! நீயே தான் ஏமாந்தாய்! அந்த ஏமாற்றத்திலும் உன்னை அறியா மல் சில நல்ல காரியங்கள் செய்திருக்கிறாய் — என்ன திகைக்கிறாய்? நாமாவது, நல்ல காரியம் செய்வதாவது, என்று ஆச்சரியப் படுகிறாயா? பள்ளிக்கூடத்திற்குப் பக் கத்திலே புதையலுக்காக நீ தோண்டிய கிணறு ஊர் மக்க ளுக்குப் பயன்படுமல்லவா?" என்று சிரித்தார் கிழவர்.

இதைக் கேட்டதும் அம்பலம், வெகுண்டு—"கிணறு! அதை நாசமாக்கி விடுகிறேன்!" என்று உறுமி னர்.

"அம்பலம்! கிணற்றைப் பாழாக்கி விடுவாய்—ஆனால் நீ செய்திருக்கிற மற்றொரு நல்ல காரியத்தை மறுபடியும் நீயே நாசமாக்க முடியாது! பரிமளாவுக்கும் துரைக்கும் திருமணம் செய்து வைத்தாயே; அதைத்தான் சொல்லு கிறேன். காரியம் சாதிப்பதற்காக வேண்டி நல்லவர்கள், சில சமயங்களில் தீய வழியில் பிரவேசிப்பதுண்டு.

அதுபோல, தீயவர்களும் நல்ல காரியங்கள் செய்து தீரவேண்டிய நெருக்கடிக்கு ஆளாவது உண்டு! அதே நிலைமையில் நீயும் மிகச் சிறந்த நல்ல காரியத்தைச் செய்து முடித்திருக்கிறாய். கருத்தொருமித்த இரு காதலர்களை

இணைத்து வைத்து அவர்களைத் தம்பதிகளாக்குவதுதான் ரூல் சாதாரணமா? நீ செய்திருக்கிற 'பாபங்'கள் அனைத்துக்கும் பரிகாரம் தேடுகிற 'புண்ய' காரியமல்லவா அது!" என்று சொல்லிவிட்டுக் கிழவர் சிரித்தார். சிரித்துக் கொண்டே படகையும் செலுத்தினர்.

"காதலர்கள்! திருமணம்! நல்ல காரியம்! ஏ கிழவா! அவர்கள் கதியை நாளைக்குப் பார்!" என்று ஓங்காரக் கூச்சலிட்டார் அம்பலம்.

"வீணை கத்தாதே! வருகிறேன்!" என்று கூறிவிட்டு படகை வேகமாக செலுத்த முனைந்தார் கிழவர். அவருக்குத் திகில் அடங்கவில்லை தான் படகில் இருக்கிறோம். அம்பலம் தண்ணீரில் இருக்கிறார் என்ற ஒரே ஒரு தைரியத்தில் மட்டுமே அவரால் துடுப்பை அசைக்க முடிந்தது.

அம்பலம், கிழவர் போகும் திக்கையே பார்த்துக் கொண்டிருந்தார். ஆளைக் கையோடு பிடிக்க முடியாது என்பதைத் தெரிந்துகொண்ட அம்பலம், கையிலுள்ள கத்தியை எடுத்தார். ஆத்திரமனைத்தையும் ஒன்று சேர்த்து, மாயாண்டியை நோக்கிக் கத்தியை வீசினார். மாயாண்டிக் கிழவரின் விலாப்புறத்திலே கத்தி வேகமாகப் பாய்ந்தது 'ஆ' என அலறிய மாயாண்டி, படகில் இருந்த புதையல் ரகசியத்தைக் கையிலே எடுத்துக் கொண்டார். துடுப்பு கடலிலே விழுந்தது. விலாப்புறத்திலே பாய்ந்த கத்தியோடு மாயாண்டி அப்படியே கடலிலே சாய்ந்தார். புதையல் ரகசியத்தைப் பிடித்திருந்த — கை, படகிற்கு வெளியே தொங்கிக் கொண்டிருந்தது.

"துரை! பரிமளா! துரை! பரிமளா!" என்று அவரது உதடுகள் முணுமுணுத்தன. அலையிலே படகு ஆடிற்று. மாயாண்டியின் பிரக்ஞை தவறிற்று. கண்கள் மூடிக் கொண்டன. இலட்சியக் கனவுகளுக்கு அஸ்திவாரம்

போட்டுக் கொடுத்த இருதயம், தன் வேலையை நிறுத்திக் கொண்டது. ஆகாயத்தை நோக்கி அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கும் தலை, தாழ்ந்தது. மாயாண்டி பிணமானர். அதை அறிவிப்பதுபோல் அவர் பத்திரமாகக் கட்டிக் காத்த புதையல் ரகசியம், அவர் கையை விட்டு நழுவி, கடலுக்கடியிலே போய்ச்சேர்ந்தது. சாகிற நேரத்திலே கூட, அம்பலத்தின் விஷயத்திலே அவர் ஜாக்கிரதையாக இருந்து புதையல் ரகசியம் அம்பலம் கையிலே கிடைத்துவிடாமல் கடலின் மடியிலே அனுப்பச் சேர்ப்பித்து விட்டார்.

படகிலே மாயாண்டி பிணமாகச் சாய்ந்த காட்சியை அம்பலம் தீக் கண்களோடு பார்த்துக்கொண்டு நின்றார். தாண்டவன், கிழவரின் சாவைப் பார்த்துங்கூட, எதுவும் செய்ய முடியாமல் கண் கலங்கியபடி நின்று கொண்டிருந்தார். கம்பீரமாக நின்று கொண்டிருந்த மனோராவின் உச்சியிலேயிருந்து கிழவரின் குரல் எதிரொலிப்பது போல் தெரிந்தது.

"ஓ! ஆகாயத்தில் மேயும் மேக மந்தைகளே! உங்கள் வாழ்நாள் சதமென்று எண்ணியிருக்கிறீர்களா? குளிர்ந்த காற்றுதான் உங்கள் எமன் என்பதை மறந்து விடாதீர்கள். மேகங்களே! உங்கள் சாவுக் கண்ணீர், மாநிலத்தை வாழ வைக்கவும் உதவுகிறது; சில சமயம் அழிக்கவும் உதவுகிறது. ஆனாலும், உங்கள் சாவுக் கண்ணீர் வாழ்க! அதுபோல என் சாவுக் கண்ணீர், யாரையும் வாழ வைக்காதா என ஏங்குகிறேன். மேகப் பிராணிகளே! உங்கள் சாவுக் கண்ணீரின் சக்தியை இந்த ஏழை மனிதன் சாவுக் கண்ணீருக்குத் தாருங்கள் — உம் — சிக்கிரம்! அந்தக் குளிர் காற்று வீசுவதற்குள்! உடனே! உடனே!"

கிழவரின் பிணத்தின்மீது குளிர் காற்றுத்தான் வீசிக் கொண்டிருந்தது. ஆனால் அவரது ஆசைப் பொக்கிஷம்,

சாவுக் கண்ணீரால் நனைந்து, கடல் தண்ணீருக்குள் அமிழ்ந்து விட்டது. அவரது பெருந் தூக்கத்திற்கு துணை புரிவது போல் கடல் மாதா, அலைக் கரங்களால், அந்தப் படகுத் தொட்டிலை அசைத்துக் கொண்டிருந்தான்.

"மாயாண்டி தொலைந்தான்" என்ற களிப்போடு, அம்பலம், கரை நோக்கித் திரும்பினர். துரையும், பரிமளாவும் சேக்ளாவில் வந்து கொண்டிருந்தார்கள். அவர்களிடம் தாண்டவன் ஓடினர்.

அம்பலத்தின் உள்ளத்திலே பழி வாங்கும் உணர்ச்சி குமுறி யெழுந்தது. "அகப்பட்டீர்களா!" என்று கத்திக் கொண்டே, கரை நோக்கி நடந்தார். துரையிடம் ஓடிவந்த தாண்டவன், "மாயாண்டியைக் கொன்று விட்டான்!" என்று கத்தினர். துரையும் பரிமளாவும், "அய்யோ!" என அலறித் துடித்தனர்.

அம்பலம், அவர்களை நோக்கி வேகமாக நடந்தார். மூவரும், கரையில் நின்றபடி அம்பலம் வருவதைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

மூவருக்கும் பின்னல் நாலைந்து சேக்ளா வண்டிகள் வந்து நின்றன. அவைகளிலேயிருந்து சுமார் இருபது முரடர்கள் இறங்கினர்கள். அவர்கள் இம்மூவரையும் முற்றுகையிட்டது போல சுற்றிக் கொண்டார்கள். அம்பலம், ஆனந்தப் பரவசத்தோடு, "விடாதே! விடாதே!" என கத்திக் கொண்டே, கடல் நீரில் நடந்து வந்து கொண்டிருந்தார். "கடைசியாக அனைவருமே சிக்கி விட்டோம்" — என்று கண் கலங்கியபடி கூறினர் தாண்டவன். திடீரென அனைவரின் கவனத்தையும் கவரும் வித்தில், கார் வரும் ஒலி கேட்டது. கார் வெகு வேகமாக வந்து கரையோரத்திலே நின்றது. அதிலேயிருந்து பத்துக்கு மேற்பட்ட

போலீசாரும், அதிகாரிகளும் இறங்கி வந்தனர். ஆனந்தனும் அவர்களோடு வந்தான். ராமனும் இருந்தான். போலீசாரைக் கண்ட முரடர்கள் சிதறி ஓடினர்கள். ஆகாயத்தை நோக்கி வேட்டுச் சப்தம் கிளம்பியது. முரடர்கள் அனைவரும் சரணாகதி அடைந்தார்கள். கரை நோக்கி நடந்து வந்த அம்பலம் மீண்டும் கடல் நோக்கி நடக்க ஆரம்பித்தார். போலீசார் அவரைச் சூழ்ந்து வளைத்துப் பிடித்து விட முயன்றார்கள்.

"வெள்ளியம்பலம்! வாரும்! வாரும்!" என்று ஆசை வார்த்தை கூறி அழைத்துப் பார்த்தார்கள். அம்பலம் கேட்கவில்லை. கடல் நோக்கி நடந்து கொண்டேயிருந்தார்.

அவரை விட்டுடுங்க — எங்க எஜமானுக்கு நீந்தத் தெரியாது — எப்படியும் திரும்பிடுவாரு!" என்று கேலியாகக் கத்தினான் வேலைக்கார ராமன்.

அம்பலம் திரும்பாதது கண்ட போலீசார், அவரைக் கரைக்கு அழைத்து வர வேண்டுமென்ற நோக்கத்தோடு பின்தொடர்ந்தனர் வேகமாக! அம்பலமோ அவர்களை விட வேகமாகக் கடல் நோக்கி நடந்தார். போலீசாரிடம் சிக்குவதைக் காட்டிலும் கடலில் மறைந்து விடுவதை மேலாகக் கருதினர் போலும். அம்பலத்தின் முழு உடலையும் கடல் மறைத்துக் கொண்டது. அவரைத் தேடும் முயற்சியிலே போலீசார் ஈடுபட்டனர். உயிரற்ற மாயாண்டியை ஊஞ்சலாட்டிக் கொண்டிருக்கும் படகைக் கரைக்குக் கொண்டு வந்தனர். அமைதி தவழும் கிழவரின் முகத்திலே முகத்தைப் பொருத்திக் கொண்டு துரையும் பரிமளாவும் அழுதனர். கிழவரின் மடியிலேயிருந்து ஒரு காகிதச் சுருளை

போலீஸ் அதிகாரி எடுத்தார். அதை அங்கேயே படித்தார்.

51

மாயாண்டியின் எழுத்துக்கள்தான் அவைகள், "அன்புள்ள துரைக்கு" என்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது கடிதம்.

"அன்புள்ள துரைக்கு இதய வாழ்த்து. நான் ஈடுபட்டிருக்கும் காரியங்களால், நாமிருவரும் இனிமேல் சந்திக்கவே முடியாமற் போய்விடுமோ என்ற சந்தேகம் ஏற்பட்டுவிட்டது எனக்கு. அதனால்தான் உன் கையிலோ அல்லது யாராவது நல்லவர் கையிலோ கிடைக்காதா என்ற ஆவலுடன் இந்தக் கடிதம் எழுதுகிறேன்.

இந்தக் கடிதத்தை நீ படிக்கும் நிலைமை ஏற்பட்டால் அப்போது நான் இறந்து போயிருப்பேன் என்றுதான் பொருள். ஒருவேளை, நீ என் பிணத்தின் அருகாமையிலே நின்றுகொண்டு கூட இதைப் படிக்க நேரிடலாம். அனைத்தையும் வெறுத்து விட்ட துறவி போல என் பயணத்தை ஆரம்பித்தேன். நீயும் பரிமளாவும் குறுக்கே வந்தீர்கள். புதையல் ரகசியத்தைக் காப்பாற்ற வேண்டும் என்கிற பொறுப்போடு, உங்கள் இருவரையும் காப்பாற்ற வேண்டும் என்கிற பொறுப்பும் வந்து சேர்ந்தது எனக்கு. இதைப் பொறுப்பு என்று சொன்னால்கூட அவ்வளவாகப் பொருந்தாது. பாசம் என்று சொல்ல வேண்டும் மகனே, பாசம் என்று சொல்லவேண்டும். நீ வியப்படைவதையும், உன் கூரிய விழிகள் விரிவடைவதையும் என்னால் காண முடியவில்லை தம்பி! நான்தான் உன் தந்தை குமாரவடிவு.

சொந்த நாட்டில் பிழைக்க வழியில்லாமல் கடல் கடந்து வயிறு கழுவச் சென்ற குமாரவடிவு நானேதான்.

குமாரவடிவு, கோயிலில் நுணைழந்து சிலைகளைப் பெயர்க் கும்போது பாம்பு கடித்து இறந்து விட்டான் என்று உன் னிடம் சொல்லியிருந்தேன். இல்லை, மகனே — இல்லை! குமாரவடிவு அப்போது சாகவில்லை. சிறையிலிருந்து வெளிவந்த குமாரவடிவு சிலைகளைப் பெயர்க்கும் தொழில் நடத்தி ஜீவனம் நடத்தி வந்தான்.

குமாரவடிவு என்ற பெயரோடு அல்ல; மாயாண்டி என்ற பெயரோடு! அப்படிப் பெயர்க்கும் போதுதான் ஒரு நாள் மருங்கப்பள்ளம் கோயிலிலே என் கையில் புதையல் ரகசியம் சிக்கியது. பாம்பு கடித்தது என்று சொன் னேனே; அது உண்மையிலேயே உருவத்தில் பாம்பல்ல என்றாலும் — பண்பிலே பாம்பாகத்தான் வந்து சேர்ந்தது. புதையல் ரகசியம் என்னிடம் வந்த பிறகு என் வாழ்விலே திருப்பம் ஏற்பட்டது. பாம்பை மடியிலே கட்டிக்கொண் டிருப்பது போல அந்த ரகசியத்தைக் கட்டிக் கொண்டு ஊர் சுற்ற ஆரம்பித்தேன். மருத்துவனைப் போல, சாமி யாரைப் போல மக்களிடையே நடமாடினேன். எப்படியோ என் பிழைப்பு நடைபெற்றது.

எத்தனையோ கோடி தங்க நாணயங்களுக்கு நான் சொந்தக்காரன். ஆனாலும், அவைகளைக் கண்ணால் பார்க் கவும் நான் விரும்பவில்லை. ஒருவித தமான திகவிட்டல் ஏற் பட்டு விட்டது. சிலைகளைப் பெயர்த்து அதன் கீழேயுள்ள நாணயங்களையும், கற்களையும் திருடி அதன் மூலம் வாழ்க் கையை நகர்த்தியிருக்கிறேன். ஆனால், எனக்காகக் கோடிக் கணக்கில் குவிந்து கிடக்கும் பொன்மணிகளை ஏறெடுத்தும் பார்த்தேனில்லை. அது ஏன் என்றுதான்

உன்னிடம் முன்பே சொல்லியிருக்கிறேனே துரை! மறு படியும் பழைய கதையை ஞாபகப்படுத்துவானேன்.

அப்படி ஞாபகப்படுத்தினால், மண்ணைக்கடியிலே புதைந்து கிடக்கும் தங்கப் பாளங்களும், வைரக் கற்களுமா ஞாபகத்திற்கு வருகின்றன? தங்கம் நிகர் தங்கமும், என் தாயும்; என்னருமை வள்ளியம்மாளும் அல்லவா எடுக்க முடியாத புதையலாக மண்ணுக்குள் மங்கிக் கிடக்கிறார்கள். அதையெல்லாம் நினைத்து அழுவதற்கு நேரமில்லை தம்பி, உன்னைப் பார்த்தேனே; அதுவே போதும்; புதையல் கிடைத்தது போல!

உன்னையும், பரிமளாவையும் சந்திப்பதற்கு முன்பு, காதல் என்ற மூன்றெழுத்து வார்த்தையைப் பற்றி நான் போட்டிருந்த கணக்கே வேறு. நீ தான் என் டைரி முழு வதும் படித்து என்னைப் பற்றித் தெரிந்து கொண்டிருக்கி றாயே. மகனே! அந்த டைரிகளில் எதாவது மிச்சம் மீதி இருந்தால் அதன் கடைசிப் பக்கத்திலே எழுதி வை.

"காதல் என்பது ஒரு மயானபூமி என்று என்-தந்தை எண்ணியிருந்தார். ஆனால், அங்கே சில சமயங்களில் மலர்ச் செடிகளும் முளைப்பதுண்டு என்ற முடிவுக்கு அவர் வந்தார்"

இதுபோல எழுதி வை மகனே! காதலைப் பற்றிய என் அபிப்பிராயம் முழுவதும் மாறி விட்டது என்று நீயோ, பரிமளாவோ கருதிவிட வேண்டாம். முட்களே நிறைந்த செடியில் ரோஜா இருப்பது போல ஒரு சில துரைகளும், ஒரு சில பரிமளாக்களும் இருக்கலாம். இதுதான் நான் இறுதியாகப் போட்ட புள்ளி. இந்தத் தொகை ஒருவேளை கூட்டவும் நேரிடலாம். அதற்காக சந்தோஷப்பட மறுக் கவா போகிறார்கள் என்னைப் போன்றவர்கள்!

வெள்ளியம்பலம் போன்ற காட்டானைகள் திரியும் நாட்டில் உன்னையும் பரிமளாவையும் போன்ற மான் குட்டிகள் நிம்மதியாக வாழ்வது கஷ்டந்தான். ஆனால் துரை, நீயும் உன் காதலியும் இத்தனை இடையூறுகளையும் தாங்கிக் கொண்டு காதல் சாம்ராஜ்யத்தைக் காப்பாற்ற கம்பீரமாக நின்றீர்களே; அதை நான் பாராட்டுகிறேன். அதே சமயத்தில் காதலுக்காக நெஞ்சிலே ஒதுக்கியிருக்கும் இடத்தில் ஒரு பாதியை மக்களுக்குப் பணி செய்வதற்காக ஒதுக்குவது நல்லது. நான், அந்தக் காரியத்தில் இறங்குவதற்கு இளமையிலேயே சக்தியற்றுப் போய்விட்டேன். இலங்கை என்னைக் கசக்கிப் பிழிந்து விட்டது. தேயிலைச் சீமைக்கு என் தேகத்தை தேய்த்துக் கொடுத்து விட்டேன். பிற்பகுதியும் சிறையிலே சிதைந்தது. இறுதிப் பகுதியிலே சிறிது முயன்றேன். அதற்குள் சுயநலம் குறுக்கிட்டு விட்டது. மகனையும், மருமகளையும் காபபாற்ற வேண்டிய சுயநலம்! அதனால்தான் உனனிடம் ஒப்புவிக்கிறேன் அந்த வேலையை!

எத்தனையோ தியாகச் செம்மல்கள், வீடு, வாசல், மாடு, மனைகளை விட்டு நாடு, நாடு என்று பாடிக் கிளம்புவார்கள். அவர்களின் அணிவகுப்பிலே நீயும் ஒருவனைத் திகழ வேண்டும் துரை! பரிமளாவை விட்டுப்போக வேண்டாம். அவளையும் அழைத்துப்போ! நாட்டிலே செய்வதற்குக் காரியங்களா இல்லை! நூற்றுக்கணக்கான வெள்ளியம்பலங்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் பாடங் கற்பிக்கவேண்டும்.

ஊரிலே பெரிய மனிதர்களாக நடந்துகொண்டு ஊதாரித்தனமாக வாழ்க்கை நடத்தும் அம்பலங்களை ஒழித்துக் கட்டுவதே உத்தமர்களின் வேலையாக இருக்க வேண்டும். அப்பப்பா; சாதாரண வசதிகள் படைத்த இந்த அம்ப

லமே இப்படிக் காட்டுராஜா தர்பார் நடத்தினால் பெரும் தனம் படைத்த சிமான்கள் எனப்படுவோர் எப்படி யெப்படி மக்களை ஆட்டிப் படைக்க மாட்டார்கள்!

அம்பலம் செய்திருக்கிற கொலைகள் ஒன்று இரண்டா? போலீசாரின் கண்களிலே பொடி தூவி விட்டு, கொடி கட்டி வாழும் கொடியவனல்லவா இந்த அம்பலம், துரை! உன்னைக் காப்பாற்ற வேண்டும் என்ற சுயநல ஆசையிலே என்னையறியாமலே பொதுநலத் தொண்டு ஒன்றும் செய்திருப்பதாக நான் கருதுகிறேன். இந்தக் கடிதம் எழுதும் போது, அம்பலத்தின் முடிவு என்ன என்பது எனக்குத் தெரியாது. ஆனால் போலீசாரின் கையிலே அவன் சிக்கித் தீரவேண்டிய நிலைமைகளை உருவாக்கி வைத்திருக்கிறேன். புதையலை அபகரிக்க நாக்கைத் தட்டிக்கொண்டு வந்த ஐயப்பனின் கையை நான் வெட்டி எறிந்தேன் என்பது தான் உனக்குத் தெரியும்.

ஆனால், அம்பலத்தின் சூழ்ச்சியால் நீயும் நானும் விடுதலை அடைந்தோம். எனக்குப் பதிலாக துக்காராமைப் பிடித்துக் கொடுத்தான் அம்பலம். அவனுக்கு அப்போது நீயும் நானும் தேவைப்பட்டோம். அந்தத் தேவைக்குத் துக்காராம் பலியாவான்..... அந்தோ பரிதாபம்— சிறைச் சாலையிலே வாடும் துக்காராமை எப்படியாவது விடுதலை செய்ய வழிபார்! இதோ இந்தக் கடிதமே நல்ல சாட்சி.

ஐயப்பனின் கையை நான்தான் வெட்டினேன் என் கிறபோது துக்காராமைத் தண்டிக்க நியாயமில்லை அல்லவா? முன்பே அந்தக் குற்றத்தை நான் ஒப்புக்கொண் டிருப்பேன். அப்படி ஒப்புக்கொண்டு சிறை புகுந்திருப் பேனேயானால் நீயும் பரிமளாவும் என்ன கதி ஆகியிருப் பீர்களோ, யார் கண்டது?

நான் வெளியில் இருந்ததால் தான் வெள்ளியம்பலத்தையே ஏமாற்றி, அவன் செலவிலேயே உனக்கும் பரிமளாவுக்கும் திருமணம் நடத்த முடிந்தது. தம்பி, அதற்காக நான் எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறேன் தெரியுமா? போலித் தகடுகளும், போலிப் பெட்டிகளும் தயார் செய்தேன். அவைகளின் மூலம் வெள்ளியம்பலத்தை ஏமாற்றினேன்.

கடைசியாக ரத்தம் வேண்டும் என்றேன். அதன் மூலம் உங்கள் திருமணத்திற்கு ஏற்பாடு செய்தேன். என் ஏற்பாடுகள் திடீர் திடீர் என்று மாறுகிற அளவுக்கு சம்பவங்கள் நிகழ்ந்தன என்றாலும், அந்தச் சம்பவங்களையெல்லாம் நமக்குச் சாதகமாகவே ஆக்கிக் கொண்டேன். அம்பலத்து வீட்டு வேலைக்காரி ராமனை கைக்குள் போட்டுக் கொண்டேன். அவன் தான் சொன்னான்; மேனகாவை அம்பலத்தான் கொன்றான் என்று! அவன் மூலம் தான் அறிந்தேன்; மேனகா கொலை விஷயமாக ஒரு குடுகுடுப்பைக்காரன் கைது செய்யப்பட்டிருக்கிறான் என்பதையும்! குடுகுடுப்பைக்காரன் என்றதும் முதலில் பயந்தேன் பரிமளாதான் அகப்பட்டுக் கொண்டாளோ என்று! பிறகு தெரிந்தது. சேரக்சுந்தரி என்ற பெண் என்று!

துணை! முடியுமானால் அந்த சேரக்சுந்தரியை விடுதலை செய்து ராமனை மகிழ்ச்சிப்படுத்து! அதேபோல துக்கா சாமின் விடுதலையால் பரிமளா மீதுள்ள பழியும் நீங்கும். அந்த இருவரின் விடுதலையையும் அக்கரையோடு கவனி. இன்னும் என்ன எழுத இருக்கிறது மகனே!

உங்கள் வாழ்க்கையிலே தாண்டவனின் குறுக்கீடு இருக்குமோ என்று சந்தேகப்படத் தேவையில்லை. தாண்டவன் நமக்கு மிகவும் வேண்டிய உறவினர். நான் தான் குமாரவடிவு என்ற உண்மையைச் சொல்லி, என் மகனுக்கு

நான் பெண் கேட்டதும், அவர் அளவற்ற மகிழ்ச்சியில் ஆழ்ந்தார். அதன் பிறகுதான் அவரும் அம்பலத்தை எதிர்க்கத் துணிந்தார். இவ்வூரும் ஆட்டுரத்தத்தை கத்தியில் பூசிக்கொண்டு அவர் ஆடிய ஆட்டமிருக்கிறதே, அதை நீ பார்த்திருக்க மாட்டாய்..... அவருக்கு என் நன்றியைச் சொல்லு!

ராமனை மறந்து விடாதே — அந்தக் குள்ளப் பையன் நல்ல சமயத்தில் எனக்கு உதவிகள் செய்தான்.

மேனகா கொலை சம்பந்தமாக வழக்கு நடைபெற்றுல் அவன் நேரில் கண்ட சாட்சியாக விசாரிக்கப்படத் தகுதியுள்ளவன். இன்னொன்று சொல்ல மறந்துவிடப் போகிறேன். உனக்கு வாய்த்திருக்கிற நண்பர்கள் இருக்கிறார்களே; அவ்வளவு பேரும் மணிகளப்பா மணிகள்! தோழமைக் குன்றங்கள்! அடடா அந்த ஆனந்தன் பட்டிருக்கிற பாடு கொஞ்சமா? அம்பலத்தின் வீட்டிற்கு நெருப்பு வைத்தேன். நீங்கள் உள்ளேயிருக்கிறீர்கள், சோபன அறையில்! உங்களை வெளியேற்றும் நோக்கத்துடன் தான் வீட்டுக்குத் தீ மூட்டப் பட்டது. அந்தச் சமயத்தில் கதவுகள் உள்ளே தாள் போடப்பட்டன. அம்பலத்தின் ஆட்களால்! சிறிது தாமதித்தால் நீயும் பரிமளாவும் சாம்பலாகி விடுவீர்கள். அப்போது உன் தோழன் ஆனந்தன் வீட்டுக்குள்ளே குதித்திருக்கிறான் பார்; அடடா..... அந்த நல்லவனுக்கு என் வாழ்த்துக்களை குவித்திடு.

கடிதத்தை நீட்டிக்கொண்டே போவேன் — இன்னும் எவ்வளவோ சொல்ல வேண்டியிருக்கிறது உனக்கு! சாகாமல் நேரில் சந்தித்தால் நிறைய பேசலாமே என்ற நம்பிக்கை வேறு தலை நீட்டுகிறது. அப்படி சந்தித்தால் நான் உன் தந்தை என்பதைக் கூற மிகவும் விட்கப்பட்டிருப்பேன், கஷ்டப்பட்டிருப்பேன்.

உன் கண் எதிரே நான் சாக நேரிட்டால் என் மடியி லுள்ள புதையல் ரகசியத்தை உன்னிடம் தந்திட முடியும். இல்லாவிட்டால் அதுவும் நானும் மறைந்து விட்டதாகத் தான் அர்த்தம்.

தம்பீ, நான் எழுதியிருப்பவைகளையெல்லாம் மறந்து விடாதே, நான் வருகிறேன். விடைபெற்றுப் போய்விட்ட பிறகு மீண்டும் விடைபெற்று என்ன பிரயோஜனம். இப் போதுதான் கருதுகிறேன்; மோட்சம், நரகம் என்றெல் லாம் மூட்டாள்கள் கதறுகிறார்களே; அவை இருக்கக் கூடாதா என்று! அப்படி அவை இருந்தால், அங்கிருந்த படியே என் "அந்தராத்மா" உன்னைப் பார்த்து மகிழ்ந் துகொண்டிருக்குமல்லவா? பரவாயில்லை—சாவதற்குள் உன் னைப் பார்த்து, உனக்காக சில நன்மைகள் செய்வதற்கு இந்தப் பாவிப் பயன்பட்டேனே; அது போதும்!

அன்பு மகனே! என் அருமை மருமகளுக்கு என் வாழ்த்துக்களைச் சொல்லு! என் பிணம் உன் கண்ணிலே அகப்பட்டால், தங்கத்திற்குப் பக்கத்திலே புதைத்து விடு!"

அன்புள்ள தந்தை,
குமாரவடிவு.

துரையும், பரிமளாவும் கிழவரின் சவத்தின் மீது விழுந்து புரண்டு அழுதனர்.

துரை, "அப்பா! அப்பா!" என்று கதறினான்.

கிழவரோ, தன் வேலைகளையெல்லாம் முடித்துக் கொண்டு களைப்புற்றுத் தூங்குகிறவர் போலக் காணப் பட்டார்.

அம்பலத்தைத் தேடிய போலீசார் வெறுங் கையோடு திரும்பினர்.

மருங்கப்பள்ளம் மக்கள் அனைவரும், துரையையும் பரிமளாவையும் மகிழ்ச்சி ஆரவாரத்தோடு வரவேற்றனர். கிழவரின் கல்லறையும், தங்கத்தின் நினைவுச் சின்னமும் அருகருகே அமைக்கப் பட்டன. மாயாண்டியின் கடிதப் படி, சிறையில் இருக்கும் குடுகுடுப்பைக்காரன் ஷோக் சுந்தரிதான் என்று போலீசார் சோதனை செய்யவே, தப்பி ஓடிய துக்காராம் என்று தெரிகிறது. மேனகாவின் கொலை வழக்கில் துக்காராம் சிக்க மாட்டான். ஐயப்பன் கொலை வழக்கிலும் அவன் சம்பந்தமில்லை. சிறையிலிருந்து ஓடிய குற்றத்திற்காக மட்டும் ஐந்தாறு மாதம் தண்டனை கிடைக்கும் என்று சட்டம் தெரிந்தவர்கள் பேசிக்கொண்டார்கள். பரிமளா அதுகேட்டு சந்தோஷப் பெருமூச்சு விட்டாள்.

அந்த மகிழ்ச்சிச் செய்தியோடு, அவளும், துரையும் மனோரா நோக்கிப் பறந்தார்கள், காதல் கீதம் பாட!

மனோரா கடற்கரைப் பகுதிகளிலே அவர்கள் வானம் பாடிகள் போலத் திரிந்தார்கள். இன்ப கீதம் இசைத்துக் கொண்டிருந்த அவர்கள் முன்னே கடல் அலைகளால் மோதுண்டு ஒரு உருவம் ஆடிக்கொண்டிருந்தது. அருகே சென்று பார்த்தார்கள். வெள்ளியம்பலத்தின் மூச்சற்ற உடல்தான் அது!

துரை, அம்பலத்தின் பிணத்தை உற்றுப் பார்த்தான். பிணத்தின் கை இறுக மூடியிருந்தது. கவ்விடப் பட்டு கையைத் திறந்து பார்த்தான். கைக்குள்ளே புனைதயல் ரகசியம் இருந்தது. துரை அதை ஆச்சரியத்தோடு பார்த்தான்.

பரிமளா, "ஆகா! புனைதயல் ரகசியமா?" என்று குதித்தாள். துரை, "ஆமாம்" என்று சொல்லிக் கொண்டே, அதை, கடலில் வீசி எறிந்தான்.

"அய்யோ! புதையலே வீசி விட்டீர்களே!" என்று திடுக்கிட்டாள் பரிமளா!

"போனல் போகிறது! பேசும் புதையல் நீ இருக்கும் போது பெரும் பகை வளர்க்கும் அந்தப் புதையல் எதற் காக?" என்று அவளை அணைத்தவாறு போலீஸ் ஸ்டேஷ னுக்குப் புறப்பட்டான், வெள்ளியம்பலம் திரும்பி வந்த செய்தியைச் சொல்ல!



அன்பு அச்சகம்,

பொறையார்.